வெளியீடு : 5-3-2024 Issued: 5-3-2024

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

திங்கட்கிழமை, ஏப்ரல் 17, 2023—தொகுதி 66

Monday the 17th April 2023—Volume 66

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

17–4–2023

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
Governor and Council of Ministers	xi-xv
பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxviii
1. வினாக்கள்-விடைகள்—	
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	1-55
(ஆ) குறுகிய கால வினா	55-60, 140-141, 214-215
(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 8 முதல் 11 வரை)	257-606
2. தகவல் கோரல்—	
முல்லை பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு லண்டனில் நிறுவப்பட்டுள்ள சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி	60-63, 215-216
திரு. எடப்பாடி K. பழனிசாமி	61-62
மாண்புமிகு திரு. துரைமுருகன்	63
மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்	215-216

	பக்கங்கள்
3. கவன ஈர்ப்பு—	63-78
(அ) போரூர் இரயில்வே மேம்பாலப் பணிகளை துரிதப்படுத்துதல்	63-69
திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி	63-65, 67-68
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	63-64, 66-69
(ஆ) கோயில் நிலங்களில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குதல் மற்றும் கொரோனா காலத்தில் செலுத்த வேண்டிய குத்தகை தொகையை இரத்து செய்தல்	69-78
திரு. வி.பி. நாகைமாலி	70, 73-77
*மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு	70-73, 75-78
4. அறிக்கைகள் அளித்தல்—	78-80
(அ) மதிப்பீட்டுக் குழு	78-79
(ஆ) பொதுக் கணக்குக் குழு	79
(இ) பொது நிறுவனங்கள் குழு	79
(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு	79
(உ) அரசு உறுதிமொழிக் குழு	80
5. அறிவிப்பு—	
இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)	80
6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—	
இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2023	80-81
மாண்புமிகு திரு. பி. மூர்த்தி	80-81
திரு. வி.பி. நாகைமாலி	81

		பக்கங்கள்
7.	**மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி*	
	(அ) கோரிக்கை எண் 52 — மாற்றுத் திறனாளிகள் நலத் துறை *(ஆ) கோரிக்கை எண் 45 — சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை*	82-214, 217-248
	**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்*	82, 100, 120,138-140, 217-247
	**திரு. ஆ. அருண்மொழிதேவன்*	92, 110, 121-137,
	திரு. வி.ஜி. இராஜேந்திரன்	141-158
	திரு. வி.வி. ராஜன் செல்லப்பா	140-141
	மாண்புமிகு திரு. துரைமுருகன்	142
	**திரு. கே.ஏ. செங்கோட்டையன்*	145
	திரு. டி.கே.ஜி. நீலமேகம்	158-169
	திரு. துரை. சந்திரசேகர்	169-174
	**டாக்டர் வை. முத்துராஜா*	174-184
	**திரு. ம. பிரபாகரன்*	184-195
	**திரு. மா. செந்தில்குமார்*	195-214
8.	**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**	248-256
9.	**இணைப்புகள்**	257-795

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	முதலமைச்சர்	.. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்*
2.	நீர்வளத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*
3.	நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்*
4.	ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்*
5.	உயர் கல்வித் துறை அமைச்சர்	.. **மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

6.	**பொதுப் பணித் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*
7.	**வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*
8.	**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை*
9.	**தொழில் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்*
10.	**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்** *இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்*
11.	**சட்டத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

12. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி

13. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:**

கூட்டுறவுத் துறை

14. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

15. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்

16. சமூக நலன் — மகளிர் உரிமைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

17. மீன்வளம் — மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு

18. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்*
19. சுற்றுலாத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
20. உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு*
21. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு,மதுவிலக்கு,ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*
22. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்*
23. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு*
24. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*

25. **போக்குவரத்துத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
26. **இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*
27. **நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*
28. **பால்வளத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
29. **சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃபு வாரியம்*
30. **பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*
31. **சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்*

32. தொழிலாளர் நலன் — திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்*
34. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *வனம்*
35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	..	**The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	..	**The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Rural Development**	..	**The Hon. Thiru I. Periyasamy:** Rural Development, Panchayats and Panchayat Union
5.	**Minister for Higher Education**	..	**The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	..	**The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7. **Minister for Agriculture and Farmer's Welfare**	..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8. **Minister for Revenue and Disaster Management**	..	**The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9. **Minister for Industries**	..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10. **Minister for Youth Welfare and Sports Development**	..	**The Hon. Thiru Udhayanidhi Stalin** Youth Welfare and Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness
11. **Minister for Law**	..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
12. **Minister for Housing and Urban Development**	..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development

13. **Minister for Co–operation**	..	**The Hon. Thiru KR. Periakaruppan:** Co–operation
14. **Minister for Micro, Small and Medium Enterprises**	..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
15. **Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
16. **Minister for Social Welfare & Women Empowerment**	..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
17. **Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
18. **Minister for Backward Classes Welfare**	..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

19.	**Minister for Tourism**	..	**The Hon. Thiru K. Ramachandran:** Tourism and Tourism Development Corporation
20.	**Minister for Food and Civil Supplies**	..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
21.	**Minister for Electricity, Prohibition & Excise**	..	**The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
22.	**Minister for Handlooms and Textiles**	..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Boodhan and Gramadhan
23.	**Minister for Health and Family Welfare**	..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
24.	**Minister for Commercial Taxes and Registration**	..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
25.	**Minister for Transport**	..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
26.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments and CMDA

27.	**Minister for Finance and Human Resources Management**	..	**The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits and Statistics
28.	**Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
29.	**Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	..	**The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
30.	**Minister for School Education**	..	**The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
31.	**Minister for Environment and Climate Change**	..	**The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control and Ex–Servicemen
32.	**Minister for Labour Welfare and Skill Development**	..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
33.	**Minister for Information Technology and Digital Services**	..	**The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology and Digital Services
34.	**Minister for Forests**	..	**The Hon. Dr. M. Mathiventhan:** Forests
35.	**Minister for Adi Dravidar Welfare**	..	**The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

\# *11–1–2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல்.	சிறப்புச் செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	கூடுதல் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

மாற்றுப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்

திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) மாற்றுப் பணியில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்
திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி.	.. தலைமை நிருபர்
திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	.. சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	.. வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	.. சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	.. கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	.. பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	.. பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	.. மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	.. பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	.. ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	.. குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	.. வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	.. வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	.. உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	.. சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	.. கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	.. புவனகிரி
18.	அருள், திரு. இரா.	.. சேலம் (மேற்கு)
19.	அர்ஜுனன், திரு. பொ.	.. திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
22.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, முனைவர்	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி

28. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
29. இராமச்சந்திரன், திரு. ட்டி. .. தளி
30. இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R. .. அருப்புக்கோட்டை
31. இராஜா, திரு. S.R. .. தாம்பரம்
32. இராஜேந்திரன், திரு. இரா. .. சேலம் (வடக்கு)
33. இராஜேந்திரன், திரு. வி.ஜி. .. திருவள்ளூர்
34. இலட்சுமணன், டாக்டர் இரா. .. விழுப்புரம்
35. இளங்கோ, திரு. ரா. .. அரவக்குறிச்சி
36. இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச. .. ஈரோடு (கிழக்கு)
37. இனிகோ இருதயராஜ், முனைவர் த. .. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
38. ஈஸ்வரப்பன், திரு. J.L. .. ஆற்காடு
39. ஈஸ்வரன், திரு. ஈ.ஆர். .. திருச்செங்கோடு
40. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. .. உடுமலைப்பேட்டை
41. உதயகுமார், திரு. ஆர்.பி. .. திருமங்கலம்
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உதயநிதி ஸ்டாலின், திரு. .. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
44. ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ. .. ஸ்ரீவைகுண்டம்
45. எடப்பாடி K. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
46. எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
47. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. .. காஞ்சிபுரம்
48. எழிலன், டாக்டர் நா. .. ஆயிரம் விளக்கு
49. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு. .. இராயபுரம்
50. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
51. கடம்பூர் ராஜூ, திரு. .. கோவில்பட்டி
52. கணபதி, திரு. க. .. மதுரவாயல்
53. கணேசன், திரு. சி.வி. .. திட்டக்குடி (தனி)
54. கணேஷ், திரு. ஆர். .. உதகமண்டலம்
55. கண்ணன், திரு. க.சொ.க. .. ஜெயங்கொண்டம்

56. கதிரவன், திரு. சீ. .. மண்ணச்சநல்லூர்
57. கந்தசாமி, திரு. V.P. .. சூலூர்
58. கயல்விழி செல்வராஜ், திருமதி என். .. தாராபுரம் (தனி)
59. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்
60. கருணாநிதி, திரு. ஜெ. .. தியாகராய நகர்
61. கருப்பணன், திரு. K.C. .. பவானி
62. கருமாணிக்கம், திரு. இராம. .. திருவாடனை
63. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு. .. இராமநாதபுரம்
64. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை
65. காந்தி, திரு. எம்.ஆர். .. நாகர்கோவில்
66. காந்திராஜன், திரு. எஸ். .. வேடசந்தூர்
67. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
68. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்
69. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்
70. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (தனி)
71. கிருஷ்ணசாமி, திரு. ஆ. .. பூந்தமல்லி (தனி)
72. கிருஷ்ணமுரளி, திரு. செ. .. கடையநல்லூர்
73. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
74. கோவிந்தசாமி, திரு. ஆ. .. பாப்பிரெட்டிப்பட்டி
75. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ. .. கும்மிடிப்பூண்டி
76. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (தனி)
78. சங்கர், திரு. கே.பி. .. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி. .. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S. .. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை. .. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S. .. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே. .. அரூர் (தனி)

86. சரவணக்குமார், திரு. கே.எஸ்.	.. பெரியகுளம் (தனி)
87. சரவணன், திரு. பெ.சு.தி.	.. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி.	.. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ.	.. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு.	.. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம.	.. காட்டுமன்னார் கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க.	.. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	.. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு.ச.	.. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ்.	.. குன்னம்
96. சின்னதுரை, திரு. மா.	.. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு.	.. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	.. விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ்.	.. மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ.	.. சங்கரி
101. சுந்தர், திரு. க.	.. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா.	.. சைதாப்பேட்டை
103. செங்கோட்டையன், திரு. கே.ஏ.	.. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு.	.. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி.	.. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ.	.. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா.	.. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி.	.. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V.	.. கரூர்
110. செல்லூர் கே. ராஜூ திரு.	.. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு.	.. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க.	.. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K.	.. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி.	.. திருவிடைமருதூர் (தனி)
115. சேகர், திரு. R.D.	.. பெரம்பூர்

116. சேகர், திரு. S. .. பரமத்தி–வேலூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. .. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ். .. ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ. .. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M. .. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ. .. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. .. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந. .. முசிறி
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. தேவராஜி, திரு. க. .. ஜோலார்பேட்டை
133. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (தனி)
134. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
135. நந்தகுமார், திரு. A.P. .. அணைக்கட்டு
136. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
137. நல்லதம்பி, திரு. அ. .. கெங்கவல்லி (தனி)
138. நல்லதம்பி, திரு. A. .. திருப்பத்தூர்
139. நாகைமாலி, திரு. வி.பி. .. கீழ்வேளூர் (தனி)
140. நாசர், திரு. சா.மு. .. ஆவடி
141. நிவேதா எம். முருகன், திரு. .. பூம்புகார்
142. நீலமேகம், திரு. டி.கே.ஜி. .. தஞ்சாவூர்
143. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
144. பண்ணாரி, திரு. அ. .. பவானிசாகர் (தனி)
145. பரந்தாமன், திரு. இ. .. எழும்பூர் (தனி)
146. பழனி நாடார், திரு. S. .. தென்காசி

147. பழனியாண்டி, திரு. மொ.	.. ஸ்ரீரங்கம்
148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை (மத்தி)
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
151. பன்னீர்செல்வம், திரு. மு.	.. சீர்காழி (தனி)
152. பாண்டியன், திரு. K.A.	.. சிதம்பரம்
153. பாபு, திரு. மு.	.. செய்யூர் (தனி)
154. பாலசுப்ரமணியன், திரு. ஈ.	.. சேலம் (தெற்கு)
155. பாலாஜி, திரு. S.S.	.. திருப்போரூர்
156. பால் மனோஜ் பாண்டியன், திரு.	.. ஆலங்குளம்
157. பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
158. பிரகாஷ், திரு. ஒய்.	.. ஓசூர்
159. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி.	.. விருகம்பாக்கம்
160. பிரபாகரன், திரு. ம.	.. பெரம்பலூர் (தனி)
161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
162. புகழேந்தி, திரு. நா.	.. விக்கிரவாண்டி
163. பூண்டி கே. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
164. பூமிநாதன், திரு. மு.	.. மதுரை (தெற்கு)
165. பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	.. திருப்பத்தூர்
166. பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்
167. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	.. மேலூர்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	.. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க.	.. திருக்கோவிலூர்
170. பொன்னுசாமி, திரு. கே.	.. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171. மகாராஜன், திரு. ஆ.	.. ஆண்டிப்பட்டி
172. மகேந்திரன், திரு. சி.	.. மடத்துக்குளம்
173. மணி, திரு. ரா.	.. ஓமலூர்
174. மணி, திரு. ஜி.கே.	.. பெண்ணாகரம்
175. மணிக்கண்ணன், திரு. A.J.	.. உளுந்தூர்பேட்டை

176. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்
177. மதியழகன், திரு. தே. .. பர்கூர்
178. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)
179. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)
180. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்
181. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி
182. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
183. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)
184. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்
185. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்
187. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)
188. முத்துராஜா, டாக்டர் வை. .. புதுக்கோட்டை
189. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி
192. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)
193. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
194. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்
195. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
196. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்
197. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)
198. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி

208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்
209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. K.N. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு. .. கீழ்வைத்திணான்குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S. .. பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P. .. ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன். .. கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர். .. சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு. .. அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஒ. .. செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 4, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 17, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்தெரி வார்."

ஒருவர் செய்யும் தினையளவு நன்மையைக்கூட அதனால் பயன்பெறும் நன்றியுள்ளவர் பல்வேறு வகையில் பயன்படக்கூடிய பனையின் அளவாகக் கருதுவார்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

161—

பாதாள சாக்கடைத் திட்டம்

***15187—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, பள்ளிக்கரணை, வேளச்சேரி பிரதான சாலை, மயிலை பாலாஜி நகர் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, பள்ளிக்கரணை, வேளச்சேரி Main road, மயிலை பாலாஜி நகர் குடியிருப்புப் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டப் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் 30–6–2023–க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் ஆட்சியில் அனைவரும் சமம் என்கின்ற நிலையில் சட்டப்பேரவை நிகழ்வுகளை செவித்திறன் மாற்றுத் திறனாளிகள் புரிந்துகொள்ளும் வகையில் சைகை மொழியில் பதிவு செய்து, YouTube-ல் வெளியிடும் நிகழ்வை துவக்கி வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிக்கரணை, மயிலை பாலாஜி நகர் பகுதியில் பணிகளைத் துவக்கி வைத்து, அப்பணிகள் நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், விடுபட்ட பகுதிகளான கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, ஜல்லடையான்பேட்டை, துரைப்பாக்கம், பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை விரைந்து துவங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கந்தன்சாவடி, பெருங்குடி பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, இன்றுவரை மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படவில்லை. அதேபோல, காரப்பாக்கம் பகுதியில் 2013 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் சுமார் 12 வருடங்களாகியும் இன்றுவரை பொது மக்களினுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவராத ஒரு நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை உடனடியாக முடித்து,

2023 ஏப்ரல் 17]
பொது மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள உள்ளகரம்-புழுதிவாக்கம், கொட்டிவாக்கம், பெருங்குடி, பாலவாக்கம், மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, ஜல்லடையான்பேட்டை, நீலாங்கரை, ஒக்கியம் துரைப்பாக்கம், காரப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், உத்தண்டி, செம்மஞ்சேரி ஆகிய பகுதிகள், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளாகும். இந்தத் தொகுதி, 7,65,031 மக்கட்தொகையையும், 5,337 தெருக்களையும் கொண்டதாகும். இப்பகுதிகள் புதியதாக பெருநகர சென்னை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளானதால், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் இப்போதுதான் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே பள்ளிக்கரணையில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.52.53 கோடி மதிப்பீட்டில் 11–2–2011 அன்று துவக்கப்பட்டு, 10–2–2013–க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், சுமார் 93.13 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, ஏறத்தாழ சுமார் 10 முறை ஒப்பந்தகாலம் நீட்டிக்கப்பட்டும், 90.67 கி.மீ. நீளத்திற்கான பணிகள் மட்டுமே முடிவடைந்தன. பணிகளைத் தாமதமாக மேற்கொண்ட காரணத்தால், 21–11–2019 அன்று ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு, ரூ.39.30 கோடி மதிப்பீட்டில் புதிய ஒப்பந்தக்காரர்களுக்கு 4–9–2020 அன்று பணியாணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. நீர்வளத் துறையின் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படும்போது, ஏற்கெனவே புதியதாக பதிக்கப்பட்ட கழிவுநீர்க் குழாய்களை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. இதன்காரணமாக, பணிகள் முன்னேற்றத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டது. தற்போது, பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 4 கழிவுநீர் சேகரிப்பு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இவற்றில் கழிவுநீர் சேகரிப்பு மண்டலங்கள் 1, 2 மற்றும் 3 ஆகியவை 30–6–2023–க்குள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும். மயிலை பாலாஜி நகர், மண்டலம் 1–ல் அடங்கியுள்ளது. கழிவுநீர் சேகரிப்பு மண்டலம் 4–ல் அடங்கியுள்ள வேளச்சேரி–தாம்பரம் நெடுஞ்சாலை பகுதிக்கான*

கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கும் பணிகள் 30–9–2023–க்குள் முடிக்கப்படும். இத்திட்டம் நிறைவேறும்போது, பள்ளிக்கரணை பகுதியில் வசிக்கும் சுமார் 79,260 பொது மக்கள் பயன்பெறுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், நன்மங்கலம், மேடவாக்கம், வேங்கைவாசல், ஒட்டியம்பாக்கம், கோவிலம்பாக்கம் ஆகிய 7 ஊராட்சிகள் தாம்பரம் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ளன. தாம்பரம் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள இந்தப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கான திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்து, அதற்கான முதல் கட்டப் பணிகளை இப்போதிருந்தே துவங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

சோழிங்கநல்லூர் பகுதியில், 198, 199 ஆகிய வட்டங்களில் குடிநீர், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிந்து, வீடுகளுக்கு இணைப்பு வழங்குகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில், பத்து ஆண்டுகளுக்கு, 15 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டடங்களுக்கெல்லாம் IDC, உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கட்டணமாக மீட்டருக்கு 218 ரூபாய் வசூலிக்கப்படுகின்றது. தரை மற்றும் முதல் தளத்திற்குமேல் ஒரே ஒரு சிறிய வீடு, ஓடு போட்ட வீடாக இருந்தாலும்கூட, அதற்காக IDC கட்டணத் தொகையை வசூலிக்கின்றார்கள். இதற்காக இலட்சக்கணக்கான amount கட்ட வேண்டியிருக்கிறது. அதனால், பொது மக்கள் பாதாள சாக்கடை இணைப்பு பெறுவதற்கு தயக்கம் காட்டுகின்றார்கள். 1998 ஆம் ஆண்டிற்கு முன்பாகக் கட்டப்பட்ட கட்டடமாக இருந்தால், IDC கட்டணம் இல்லை என்றார்கள். புதிதாக சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதி என்பதால், சிறப்புச் சலுகை கொடுத்து 2022 ஆம் ஆண்டிற்குப் பிறகு புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளுக்கு மட்டும் IDC கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை துறை அதிகாரிகளுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடனும் கலந்தாலோசித்து, அதை எப்படிக் குறைக்க முடியும் என்பதைக் கண்டறிந்து, அந்தப் பணிகளைத் தொடங்குகிறோம். ஏற்கெனவே, நீங்கள் சொன்ன இடங்களிலெல்லாம், பாதாள சாக்கடைத் திட்டமாக இருந்தாலும், குடிநீர்ப் பணிகளாக இருந்தாலும், இல்லந்தோறும் இணைப்பு வழங்குகிற பணிகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து 110 MLD–லிருந்து தரப்படுகின்ற தண்ணீரைக் காட்டிலும் இப்போது புதிதாக வரப்பெறுகிற 150 MLD தண்ணீரை தாம்பரம், பல்லாவரம் வரை வழங்குகிறபோது வழியிலே இருக்கிற உங்கள் தொகுதியைச் சேர்ந்த அத்தனை பகுதிகளுக்கும் குடிநீர் இணைப்பு இல்லந்தோறும் தருகின்ற பணியைத் துவங்க இருக்கிறோம். 150 MLD கடல்நீரைக் குடிநீராக்கும் புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் இரண்டு மாத காலத்தில் துவங்க இருக்கிறார்கள். அதேநேரத்தில் குழாய்களை இணைக்கிற பணிகளும் நடைபெற்று வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பணிகளை விரைந்து முடித்து, இந்த ஆண்டுக்குள், குடிநீரும், பாதாள சாக்கடைத் திட்டமும் அந்தப் பகுதிகளில் இருக்கிற மொத்த மக்களுக்கும் கிடைக்கிற வகையில் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.*

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி, கவுண்டம்பாளையம் தொகுதியில் புதியதாக மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட காலாப்பட்டி, விளாங்குறிச்சி, சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, வெள்ளக்கடவு, துடியலூர், கவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்குப் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் விரைவிலே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 145, 148, 149, 150, 152 மற்றும் 155 ஆகிய வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர்த் திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று, இப்பொழுது முடிகிற தருவாயில் இருந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே அயப்பாக்கம், வானகரம், அடையாளம்பட்டு என்ற 3 ஊராட்சிகள் உள்ளன. அந்த 3 ஊராட்சிகளையும், சென்னை மாநகராட்சியோடு இணைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கடந்த காலத்தில் மனு கொடுத்து, அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 2006–2011 வரையிலான மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, மதுரவாயல் தொகுதி புதிதாக மாநகராட்சியோடு இணைக்கப்பட்டபோது, மதுரவாயல் தொகுதியில், உதாரணமாக காரம்பாக்கம், ஊராட்சியாக இருக்கிறபோதே, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கான ஆரம்ப கட்டப் பணிகளை அப்போதே தொடங்கிவிட்டார்கள். அதுமாதிரி, இந்த 3 ஊராட்சிகளையும் மாநகராட்சியோடு சேர்ப்பதற்கு முன்னால், ஆரம்ப கட்டப் பணிகளை இப்பொழுதே துவங்குவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர்கள்*

2023 ஏப்ரல் 17]

அனைவருக்கும் இது பதிலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நகரத்தை ஒட்டியிருக்கிற ஊராட்சிகளை நகரத்தோடு இணைக்க வேண்டுமென்று சொன்னால், அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பொறுப்பில் இருக்கிற காரணத்தால், அந்தப் பொறுப்புக் காலம் முடிகிறவரை அதை இணைப்பது என்பது இயலாது. அந்தக் காலம் முடிகிறபோது அந்தப் பகுதிகளில் எந்தெந்தப் பகுதிகளை நகரத்தோடு இணைக்க வேண்டுமென்பதை முடிவு செய்து, அவற்றை இணைக்கலாம்.

முற்பகல் 10—10

ஏற்கெனவே, கடந்த ஆண்டு மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டபோதே எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்படுமென்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கிற பகுதிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, பாதாள சாக்கடைத் திட்டமாக இருந்தாலும், கழிவறை வசதிகளாக இருந்தாலும், விளக்கு வசதிகளாக இருந்தாலும், சாலை வசதிகளாக இருந்தாலும், அனைத்துப் பணிகளும் இப்போதிருந்தே மாநகராட்சி மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் கேட்டதுபோன்று, அந்த மூன்று ஊராட்சிகளுக்கும் இப்போதே அதனைச் செய்ய முடியுமா என்பது தெரியவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, நிதியாதாரத்தைக் கருத்தில்கொண்டு, நீங்கள் சொல்கிற பணிகளை நிச்சயமாக நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சேலம் மாநகரத்தைப் பொறுத்தவரையில், நீண்ட நெடுங்காலமாக பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதிலும், குறிப்பாக அம்மாப்பேட்டை மண்டலத்திலும், கொண்டாலம்பட்டி மண்டலத்திலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்து, கழிவுநீர் மறுசுழற்சி செய்யப்படுகிறது. எனது தொகுதிக்குட்பட்ட அஸ்தம்பட்டி, சூரமங்கலம் பகுதிகளில் இன்னும் அந்தப் பணிகள்

நிறைவேறாமல் இருக்கின்றன. அந்தப் பணிகளை விரைந்து செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் எஞ்சிய பகுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 540 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்பதற்காக அந்த ஒப்பந்ததாரர்களோடு தொடர்ந்து அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒப்பந்ததாரர்கள் நீண்டகாலமாக இருக்கிற காரணத்தினால், அந்த ஒப்பந்ததாரர்களை மாற்றிவிட்டு, உடனடியாக புதிய ஒப்பந்தம் போட வேண்டுமென்று சொன்னால், கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பி, நிதியைப் பெற வேண்டும். ஏனென்று சொன்னால் செலவினம் கூடுதலாக வரும். எனவே, இருக்கிற ஒப்பந்ததாரர்களையே வைத்து, அந்தத் பணியை முடிப்பதற்காகத்தான் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்கள் சொல்கிற பகுதிகளில் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கி, உடனடியாக அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் மெதுவாகச் செயல்படுவதால், சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளன. குறிப்பாக, மேலமடை, கோமதிபுரம் போன்ற பகுதிகளில் விரைந்து பணிகளை முடிக்க வேண்டுமெனவும், செல்லூர் போன்ற பகுதிகளில் பழைய பாதாள சாக்கடையில் கழிவுநீர் பொங்கி வழிவதால், பழைய பாதாள சாக்கடைக் குழாய்களை அகற்றி விட்டு, புதியதாக பெரிய

2023 ஏப்ரல் 17]

குழாய்களைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதிக்கப்பட்ட குழாய்கள் முடிவுறும் நிலையில் இருக்கின்றன.* Sewage Treatment Plant *(*STP*) முடிவுற்று, நீரை சுத்தம் செய்து, குழாய்கள்மூலம் கொண்டு வரும் பணிகளை ஏற்கெனவே போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறோம். முன்பு அமைக்கப்பட்ட குழாய்கள் எங்கு பழுதுபட்டிருந்தாலும், அதனைச் சரி செய்து, உடனடியாக, இந்த இரண்டு மாத காலத்திற்குள்ளாகவே மதுரையில் பணிகள் நிறைவேற்றப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து கூடுதலாக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஒப்பந்தம் முடிந்த பிறகு, அந்தப் பணியும் தொடங்கப்படும். ஏற்கெனவே எந்த இடத்தில் குழாய்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தக் குழாய்களை மாற்றியமைத்து, நீர் வெளியேறாமல் தடுக்கும் பணிகளை உடனடியாக அதிகாரிகளிடம் தெரிவித்து, பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

162—

பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்

***410—திரு. கே.பி. சங்கர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டு, இராமமூர்த்தி நகரில் வசிக்கும் காட்டுநாயக்கன் வகுப்பு மக்களுக்கு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 17*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுநாயக்கன் வகுப்பு, பழங்குடியினர் வகுப்பின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. காட்டுநாயக்கன் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் தவறாக வழங்குவதைத் தவிர்க்கும் பொருட்டு, மனுதாரர்களால் வழங்கப்படும் ஆவணங்களை மிகக் கவனத்துடன் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. காட்டுநாயக்கன் சாதிச் சான்றிதழ் கோரும் இனங்களில், காட்டுநாயக்கன் சாதி என பழங்குடியினர் சான்று வழங்குவதற்குத் தேவையான ஆவணங்களை ஆதாரங்களாக மனுதாரர் சமர்ப்பிக்கும்பட்சத்தில், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத பிற இனங்களில் முறையான விசாரணை மேற்கொண்ட பிறகே, விசாரணையின் அடிப்படையில் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.*

திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கன் வகுப்பைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில், மூன்று இலட்சம் பேர் வாழ்ந்து வருகிறார்கள். அதில் திருவொற்றியூர் தொகுதி, எண்ணூர் பகுதியிலுள்ள இராமமூர்த்தி நகரில் 45 குடும்பங்கள், 85 ஆண்டுக் காலமாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறார்கள். கலைஞர் அய்யா அவர்கள் ஆட்சியில், 2006 ஆம் ஆண்டில் முதன்முதலில் பழங்குடியினர் வகுப்பிற்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆவணங்கள் இருந்தும், அந்த ஆவணங்கள் சரியில்லாதபோது, சான்றிதழ் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்தவுடன், என்னுடைய கோரிக்கையை ஏற்று, முதல்வர் அவர்கள் ஆய்வு செய்து, 25 குடும்பத்தினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கியதற்கு இந்த மாமன்றத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அட்டையாக வழங்கப்பட்ட சான்றிதழை இணையதளம்மூலம் வழங்கினால், அரசின் நலத் திட்ட உதவிகள் கிடைக்க எளிதாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர்*

2023 ஏப்ரல் 17]
அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களை அந்தப் பகுதியினுடைய RDO அவர்கள் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இவர்களுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியில் 35 குடும்பங்கள் இருக்கின்றன. அதிலே 25 பேருக்கு சாதிச் சான்றிதழ் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைவருக்கும் online-ல் apply செய்யச் சொல்லி அறிவுறுத்தியிருக்கிறோம். அதற்காக special camp போட்டு அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். வட சென்னை மாவட்டத்தில், இதுவரை ST சான்றிதழ்கள் 282 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே, காட்டுநாயக்கன் வகுப்பு மக்களில் 32 பேருக்கு சாதிச் சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காட்டுநாயக்கன் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், சான்றிதழ் வழங்குகின்ற நேரத்திலே நாம் எச்சரிக்கையாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் நிறைய migration ஆகிறார்கள். ஒரு பகுதியிலிருந்து சென்னைக்கு migration ஆகி வந்துவிடுகிறார்கள். அவ்வாறு migrate ஆகி வருகின்ற நேரத்திலே, அவர்களுடைய சான்றிதழ் சரியாக இருப்பதில்லை.*

உதாரணத்துக்கு நாம் விருதுநகரிலிருந்தோ, தேனியிலிருந்தோ migrate ஆகி வருகின்ற நேரத்தில், பூர்வீகமாக இருந்த இடத்திற்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேள்விகள் கேட்கப்பட்டு, அங்கிருந்து தகவல்கள் வந்த பிறகுதான் இவர்களுக்கு நாம் சான்றிதழ் வழங்க வேண்டியிருக்கிறது. ST சான்றிதழைப் பொறுத்தவரையில், அதை வழங்குகின்ற அதிகாரிக்கும் பிரச்சினை இருக்கிறது. பொதுவாக, விளிம்பு நிலையில் இருக்கிற அந்தச் சமுதாயம் படிக்க வேண்டுமென்கிற எண்ணம், அவர்கள் முன்னேற வேண்டுமென்கிற எண்ணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு நாம் சான்றிதழ்கள் வழங்குகிறோம். சான்றிதழ்கள் வழங்கிய பிறகு அவர்கள் படித்து, மத்திய அரசாங்கத்திற்கோ அல்லது மாநில அரசாங்கத்திற்கோ வேலைக்குப் போகின்ற நேரத்தில், அந்தச்

சான்றிதழை சரிபார்ப்பதற்கு மறுபடியும் அதே RDO office-க்கு வருகிற நேரத்தில், பல இடங்களில் தகராறு ஏற்பட்டு, வேலைக்குப் போக முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. தவறான சான்றிதழ் வழங்குகின்ற அதிகாரிமீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையும் வருகிறது.

ஆகவேதான், சான்றிதழ் வழங்குகின்ற நேரத்தில், கூடிய அளவிற்கு இரத்த சம்பந்தமான உறவுகள் இருக்கும்பட்சத்தில், சான்றிதழ் கொடுப்பதிலே எந்தவிதமான தகராறும் இருப்பதில்லை. இரத்த சம்பந்தம் இல்லாமல் சான்றிதழ் கேட்கின்ற நேரத்தில் மட்டும், அவர்களுடைய பூர்வீகம், அவர்களுடைய நடை, உடை, பாவனை, அவர்களுடைய பேச்சு எல்லாவற்றையும் சரி பார்த்துத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும், விளிம்பு நிலையிலே வாழ்கிற அனைத்து சமுதாய மக்களுக்கும் நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. எங்களுக்கும் அந்த வகையிலே உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நிச்சயமாக நடக்கும். நம்முடைய RDO அவர்களும், நம்முடைய திரு. கே.பி. சங்கர், MLA அவர்களைச் சந்தித்து பேசியிருக்கிறார்கள். விரைவிலே special camp போட்டு மீதமுள்ளவர்களுக்கும் சான்றிதழ் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.

திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அந்தத் துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் வாழக்கூடிய அனைத்து உயிரினங்களும் இயற்கையை ஒட்டி வாழக்கூடியவை. ஆனால், இயற்கையை எதிர்த்து வாழக்கூடிய ஒரே இனம், மீனவர் இனம். கண்ணீரோடு வாழும் வாழ்க்கை மீனவர்களின் வாழ்க்கை. மீனவர்களுக்கு நல வாரியம் அமைத்துத் தந்தது ஐயா கலைஞர் அவர்களின் அரசு; மீனவர்களின் விசைப் படகுகளுக்கு டீசல் மானியம் வழங்கியது ஐயா கலைஞர் அவர்களின் அரசு; மீன்பிடி தடைக் காலங்களில், முதன்முதலாக நாட்டிலேயே நிவாரணம் வழங்கியது ஐயா

2023 ஏப்ரல் 17]
கலைஞர் அவர்களின் அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் வீடு கட்டும் திட்டத்தை வழங்கியது ஐயா கலைஞர் அவர்களின் அரசு; சுனாமியால் விசைப் படகுகள் பாதிக்கப்பட்டபோது மக்களுக்கு வங்கிக் கடனை இரத்து செய்தது, ஐயா கலைஞர் அவர்களின் அரசு. பல நலத் திட்டங்களை வழங்கி, மீனவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் வாழ்வில் வசந்தத்தை உருவாக்கித் தந்தது ஐயா கலைஞருடைய அரசு. அதே நம்பிக்கையில்தான், நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கன்னியாகுமரி மாவட்டம், . . . (மணியடிக்கப்பெற்றது) நீரோடி கிராமம் முதல் வடக்கே திருவள்ளூர் மாவட்டம், ஊனங்குப்பம் கிராமம் வரை கடல் சார்ந்த 13 மாவட்டங்களில், 18 சட்டமன்றத் தொகுதிகளில் மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணிக்கு வாக்களித்து, வெற்றி வாய்ப்பை பெற்றுத் தந்த அந்த மீனவர்களை பழங்குடியினத்தவர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறு, ஒட்டுமொத்த மீனவ மக்களின் பிரதிநிதியான, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாதம் பணிந்து தங்களின் வாயிலாக கோரிக்கையை வைக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பழங்குடியினர் இன மக்களாகச் சேர்க்க வேண்டுமென்றால், அது மாநில அரசாங்கத்தின் முடிவு மட்டுமல்ல, மத்திய அரசாங்கமும் சேர்ந்து செய்ய வேண்டியிருக்கின்றது. நீங்கள் சொல்வதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் நீங்கள் சொன்ன கோரிக்கையை செய்ய முடியுமென்றால், அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

முற்பகல் 10—20

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆப்பரக்குடி பகுதியில் ஆதியன் என்ற*

பழங்குடியின மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் இந்த மாநிலம் முழுவதும் வசிக்கிறார்கள். திருவாரூர் மாவட்டத்தில், நன்னிலம் பகுதியில் வசிக்கிறார்கள். நாகப்பட்டினம் மாவட்டத்திலும் வசிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பழங்குடியினர் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆப்பரக்குடி பகுதியில் வசிக்கின்ற ஆதியன் இன மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். உரிய ஆய்வு நடத்தி, அவர்களுக்கும் பழங்குடியினர் சான்று வழங்க அரசு முன்வருமா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியை நான் உள்வாங்கியிருக்கிறேன். உடனடியாக அந்தப் பகுதியில் இருக்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் சொல்லி, அது சரியாக இருக்கும் என்று சொன்னால், உகந்த நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மற்றும் திருவண்ணாமலை தொகுதிக்குட்பட்ட திருவண்ணாமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருக்கின்ற மலைக்குறவன் மக்களுக்கு ஏற்கெனவே பழங்குடியினர் சான்று வழங்கப்பட்டு வந்தது. இப்போது அந்தச் சான்று வழங்கப்படாததால் அவர்களுடைய கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரம் பாதிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், அங்கே வசிக்கின்ற குரும்பர் மற்றும் லம்பாடியர் இன மக்களுக்கும் சான்று வழங்குவதற்கான அனைத்து ஆய்வுகளும் முடிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு இன்னும் பழங்குடியினர் சான்று வழங்கப்படாமல் இருக்கிறது. இந்தச் சமூக நீதி ஆட்சியில் வழங்காவிட்டால், வேறு எந்த ஆட்சியில் கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, அவர்களுக்கு பழங்குடியினர் சான்று வழங்க அரசு முன்வருமா

2023 ஏப்ரல் 17]
என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சமுதாய மக்களும்* ST certificate *வாங்குவதில் அக்கறையாக இருக்கிறார்கள். சான்றிதழ் பெறுவதைப் பொறுத்தவரையில், பொதுவாக, நாயக்கர்கள், காட்டுநாய்க்கர் என்று சான்று வாங்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அந்தந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வேறு ஏதாவது விஷயத்திற்காகக் கேட்டால்கூட நாம் வருத்தப்படலாம். ஆனால், படிப்பதற்கு, இட ஒதுக்கீட்டிலே அவர்களுக்குத் தகுதியான இடம் கிடைக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் வாழ்க்கையில் போராடுகிறார்கள். அவ்வாறு அவர்கள் போராடுகிற நேரத்தில், அவர்களுக்குத் தகுதியான சான்றிதழ் வழங்க வேண்டுமென்று நினைக்கிறோம். ஒருவருக்குக் கிடைப்பது இன்னொருவருடைய வளர்ச்சிக்கு இடைஞ்சலாக இருந்துவிடக் கூடாது, தொந்தரவாக இருக்கக் கூடாது என்று கருதி, முடிந்தவரையில் எச்சரிக்கையோடு கொடுக்கிறோம். அப்படி, சான்றிதழ் கேட்பவர்களுக்கு இரத்த சம்பந்தமான உறவுகள் இருக்கும் என்று சொன்னால் நிச்சயமாக, அவர்களுக்கு நாங்கள் சான்று வழங்குவோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

163—

ஏற்றுமதி தொழில் பயிற்சி மையம்

***1249—திரு. சபா. இராசேந்திரன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 17

நெய்வேலி தொகுதியில் ஏற்றுமதி தொழில் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நெய்வேலி தொகுதியில் ஏற்றுமதி தொழில் பயிற்சி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி மற்றும் பண்ருட்டி தொகுதி உள்ளிட்ட பகுதிகளில் மட்டும் வருடத்திற்கு ரூ.2,400 கோடிக்குமேல் முந்திரி ஏற்றுமதி செய்யப்படுகிறது. முந்திரி ஏற்றுமதி என்பது நாட்டிற்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தருவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதிகளில் இருக்கின்ற கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருகின்ற ஒரு தொழில். இந்தத் தொழிலை மேலும் பெருக்குவதற்கும், அதேபோல வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும் நிறைய வாய்ப்புகள் உள்ளன. எனவே, இந்தத் தொழிலில் ஈடுபடுகின்ற இளைஞர்களுக்கும், விவசாயிகளுக்கும் வழிகாட்டுதல்* agency *என்று சொல்லக்கூடிய வழிகாட்டு நிறுவனங்கள் இல்லை. எனவேதான், இந்தப் பகுதிக்கு ஓர் ஏற்றுமதி தொழில் பயிற்சி மையத்தைக் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, இந்தப் பகுதிக்கு ஓர் ஏற்றுமதி தொழில் பயிற்சி மையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான காரணத்தைச் சொல்லிவிடுகிறேன். நேர்மையான இறக்குமதியாளர்களைக் கண்டறியவும், மோசடி நிறுவனங்களை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். உங்களுக்கு இன்னொரு கேள்விக்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு*

2023 ஏப்ரல் 17]
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்களுக்கு ஏற்றுமதி குறித்த அனைத்து வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகளை வழங்கிட, கடலூர் மாவட்டத்திலுள்ள மாவட்ட தொழில் மையம் உட்பட 38 மாவட்ட தொழில் மையங்களிலும் மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள் இப்போது தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஏற்றுமதி மையங்களைத் திறம்படக் கையாள்வதில் மாவட்ட தொழில் மையங்களில் பணியாற்றும் உதவி பொறியாளர்கள் மற்றும் வர்த்தக மேம்பாட்டு அலுவலர்களுக்கு இந்திய ஏற்றுமதி அமைப்பின் கூட்டமைப்பான* FIEO *வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்துடன் இணைந்து பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.*

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு மாவட்டத்திலும் உற்பத்தி செய்யப்படும் பிரத்யேகமான பொருட்கள் கண்டறியப்பட்டு, அவற்றை ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்கும்பொருட்டு, முதற்கட்டமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓசூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய 4 இடங்களில் ரூ.16 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்றுமதி மையம் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதர மாவட்டங்களில் தேவையின் அடிப்படையில் ஏற்றுமதி மையங்கள் அமைத்திட அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இளைஞர்களின் கனவுகளை முன்கூட்டியே தெரிந்து வைத்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், வளம் இங்கிருக்கிறது, வாய்ப்புகள் வெளிநாட்டில் இருக்கின்றன என்பதையும் அறிந்த முதல்வர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் ஏற்றுமதி ஊக்குவிப்பு*

மையம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்து, இந்த மையத்தோடு சேர்ந்து, இந்தப் பயிற்சி மையத்தையும் நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, MSME துறையிலும் இதுபோன்ற ஏற்றுமதி தொழிலிலே ஈடுபடுகின்ற இளைஞர்களை ஊக்குவிக்கின்ற வகையில், ஏதாவது சுயதொழில் செய்வதற்கு அவர்களுக்குக் கடன் வசதித் திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

இந்தத் துறை சம்பந்தப்பட்ட இன்னொரு கோரிக்கையும் இந்தத் தொகுதியில் இருக்கிறது. Tamil Nadu Agricultural Marketing Societyமூலம் முந்திரிக்கு விதிக்கப்படும் cess வரி விதிப்பில் “Cashew in all forms” என்றிருப்பதை, உள்ளூரில் விளையும் முந்திரிக்கு மட்டும் விதிக்கப்படும் என்று ஏற்கெனவே அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஏற்றுமதியாளர்களுக்குப் பயன்படும் இந்தச் சட்டமுன்வடிவை இந்தக் கூட்டத் தொடரிலே நிறைவேற்றித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டு அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தொடங்க முன்வரும் தனியார் தொழில் முனைவோர்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்கி, தொழில் தொடங்குவதற்கு அனைத்து உதவிகளையும் நம்முடைய அரசு செய்துகொண்டு இருக்கிறது. குறிப்பாக, நெய்வேலி தொகுதியைப் பொறுத்தமட்டில், இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படும் 3 சுயவேலைவாய்ப்பு திட்டங்களின்கீழ், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த இரண்டு ஆண்டுகளில் 56 நபர்களுக்கு 2 கோடியே 47 இலட்சம் ரூபாய் மானியத்துடன், 7 கோடியே 65 இலட்சம் ரூபாய் கடனுதவியும், முதலீட்டு மானியத்தின்கீழ் 27 நிறுவனங்களுக்கு 1 கோடியே 19 இலட்சம் ரூபாய் மானியமும் வழங்கப்பட்டு, நெய்வேலி தொகுதியில் மட்டும் பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 17]

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 501 நபர்களுக்கு 11 கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியத்துடன் 37 கோடியே 3 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கியும், முதலீட்டு மானியத்தின்கீழ் 18 நிறுவனங்களுக்கு ரூபாய் 82 கோடியே 5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டும், இன்றைக்கு கடலூர் மாவட்டத்திலே பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆக, தொழில் தொடங்க யார் வந்தாலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை நம்முடைய அரசு செய்து தரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். Cess *வரியைப் பற்றிச் சொன்னார்கள். அது எங்களுடைய துறை இல்லை. அது வேளாண்மைத் துறை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

164—

கால்நடை மருத்துவமனை

***5335—திரு. அ.செ. வில்வநாதன்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அகரம் ஊராட்சி, அகரம்சேரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அகரம் ஊராட்சி, அகரம்சேரியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[*2023 ஏப்ரல் 17*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். எனது ஆம்பூர் தொகுதியில் உள்ள மாதனூர், வடசேரி, அகரம்சேரி ஆகிய கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியினை தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆம்பூர் தொகுதியில், 11 கால்நடை மருந்தகங்கள் மற்றும் ஒரு கால்நடை கிளை நிலையம் உள்ளதால், சுமார் 50,000 கால்நடைகள் சிகிச்சை பெற்று வருகின்றன. அவை உயர் சிகிச்சை பெறுவதற்காக, கேட்டதை எல்லாம் கொடுக்கும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் எனது தொகுதியில் கால்நடை மருந்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வரையறைகளின்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனை துவங்க இயலாது. முதலில் அந்தப் பகுதியில் மூவாயிரம் கால்நடை அலகுகள் இருக்கும்பட்சத்தில், கால்நடை கிளை நிலையம் துவங்கப்படும். அந்தக் கிளை நிலையங்களில் தினமும் 30 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சை வழங்கும் நிலையில், அந்தப் பகுதியில் 5,000 கால்நடை அலகுகள் இருந்தால் அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அவ்வாறு தரமுயர்த்தப்படும் கால்நடை மருந்தகத்தில் தினமும் 40 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சை வழங்கும்பட்சத்தில், அந்த மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள ஆம்பூர்*

2023 ஏப்ரல் 17]

தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அகரம் ஊராட்சி, அகரம்சேரியில் 1,761 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. மேலும், அகரம்சேரியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குருவராஜபாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கே.வி. செட்டிக்குப்பத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் இயங்கி வருகின்றன.

முற்பகல் 10–30

எனவே, அரசின் வரையறைகளின்படி, அகரம்சேரியில் 3,000 கால்நடை அலகுகள் இல்லாததாலும், 3 கிலோ மீட்டர் தொலைவில் குருவராஜபாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருவதாலும் அகரம்சேரியில் கால்நடை கிளை நிலையம் புதிதாக அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கோமாரி நோய், சினை ஊசி, கருவூட்டுதல் போன்ற நோய்களால் கால்நடைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் ஆங்காங்கே அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடை முகாம்கள் நடத்தி சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேலும், அந்த நோய்கள் பரவி பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, கால்நடை மருந்தகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், எனது தொகுதியில் கதவாலம் கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான 1 ஏக்கர் இடம் சர்வே எண் 129-ல் உள்ளது. இங்கு புதியதாக கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நாயக்கனேரி, வெங்கிலி ஊராட்சிகள் மலைக் கிராமப் பகுதிகளாகும். கால்நடைகளை சிகிச்சைக்குக் கொண்டு வர வேண்டுமென்றால், சுமார் 17 கி.மீ. தூரம் வரவேண்டியுள்ளது. அங்கு கால்நடை கிளை நிலையங்கள் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கரும்பூர், வடசேரி, மாதனூர், கீழ்முருங்கை, விண்ணமங்கலம், குருவராஜபாளையம், ஆசனாம்பட்டு ஆகிய கால்நடை மருந்தகங்களில் சுற்றுச்சுவர் இல்லாததால் தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்கவும், சமூக விரோதிகள், சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும், இந்தக் கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையங்கள் இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து, தேவைப்படும் மருத்துவ மற்றும் இதர சேவைகளை கால்நடைகள் வளர்க்கப்படும் இடங்களில் வழங்கும் விதமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 245 கால்நடை மருத்துவ ஊர்திகளை வழங்கியுள்ளார்கள். அந்தவகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதிகளுக்கும் மருத்துவ சேவை அளிக்கின்ற வகையில் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவைகள் பயன்படுத்தப்படும்.*

அதுபோல, கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச்சுவர் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயே சுற்றுச்சுவரைக் கட்டிக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், கண்ணனூர்பாளையம், கிளியனூர்பட்டி, மீனாட்சிபட்டி, வேலாயுதம்பாளையம், கோதூர்பட்டி, அய்யம்பாளையம்,*

2023 ஏப்ரல் 17]

பொன்னுசங்கம்பட்டி, மேலகொத்தம்பட்டி, தேவரப்பம்பட்டி, கள்ளிக்குடி ஆகிய கிராமங்களில் பசுக்கள் 2,553-ம், எருமைகள் 249-ம், செம்மறி ஆடுகள் 3,662-ம், வெள்ளாடுகள் 4,313-ம், கோழிகள் 4,849-ம் ஆக மொத்தம் 15,626 இனங்கள் இருப்பதால், என்னுடைய தொகுதியான துறையூரிலிருந்து முசிறி தொகுதியிலுள்ள தா. பேட்டைக்கு 13 கி.மீ. தூரம் சென்றுதான் சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால், இந்தக் கிராமங்களுக்கு மையப் பகுதியாக இருக்கக்கூடிய கிளியனூர்பட்டி பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருவதற்காக ஏற்கெனவே கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை கிளை நிலையத்தை கிளியனூர்பட்டியில் அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு ஊர்களை குறிப்பிட்டு, அந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கைகளையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லி, அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், எங்களுடைய துறையின்மூலம் ஆய்வு செய்து, அதுபோன்ற நிகழ்வு இருக்குமானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்றாற்போல், அந்த ஊர்களில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள கால்நடை மருந்தகம், பன்முக கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கால்நடை மருந்தகம் எங்களுடைய வரன்முறைக்குட்பட்டிருக்குமானால் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கான நடவடிக்கைகள் நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

165—

ஆன்மிக சுற்றுலாத் தலம்

***11676—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆன்மிக சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள முருகனின்

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]
ஏழாவது படைவீடான மருதமலையில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. அந்தக் கோயில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலும், மருதமலைப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆன்மிக சுற்றுலாத் தலமாக மேம்படுத்த தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, வனத் துறை மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் தடையின்மைச் சான்று மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில், விரிவான திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துரு பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப, பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களையும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். கோயம்புத்தூர் வடக்கு தொகுதிக்குட்பட்ட மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆன்மிக சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆன்மிக சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்து நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அந்தக் கோயில் நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதைச் சுற்றியுள்ள பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அந்தப் பகுதிக்கு வனத் துறையிடமிருந்து தடையின்மைச் சான்று எங்களுக்குக் கிடைக்க வேண்டும். தடையின்மைச் சான்று கிடைக்கப் பெற்றவுடன், அதை*

சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரன்முறைக்குட்படுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துருவை எங்களுக்கு அனுப்பினால் நிச்சயமாக, அதுபற்றி ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வடக்கு தொகுதிக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அருள்மிகு மருதமலை முருகன், மருதாசலமூர்த்தியாகப் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயிலைச் சுற்றியுள்ள இடங்கள் வனத் துறைக்கும், அறநிலையத் துறைக்கும் சொந்தமானது என்று சொல்கிறார். அதற்கு அருகிலே சோமையம்பாளையம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அதற்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலங்கள் அதிகமாக உள்ளன. அந்த இடத்தில் சுற்றுலாத் தலம் அமைத்தால், பக்தகோடி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இத்திருக்கோயில் ஏழாவது படைவீடாக ஆன்மிக பக்தர்களால் போற்றப்படுவதால், தமிழகம் மட்டுமல்லாமல் அருகிலுள்ள மாநில மக்களும் இங்கு வருகிறார்கள். பாரதியார் பல்கலைக்கழகம், விவசாயப் பல்கலைக்கழகம், சட்டக் கல்லூரி, கோவை Engineering கல்லூரி போன்ற கல்லூரிகளும் இங்கு அமைந்துள்ளதால், மாணவச் செல்வங்களுக்கும் பயனுள்ளதாக அமையும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரு துறைகளின் கருத்துகளைப் பெற்று, ஆன்மிக சுற்றுலாத் தலமாக அமைத்துத்தர முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தேவைகளின் அடிப்படையில், பல்வேறு வசதிகளை ஏற்படுத்தித் தருகின்றது. தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2021 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா

2023 ஏப்ரல் 17]

மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், Tourism Destination Development Scheme *வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொடர்புடைய துறையின் வாயிலாக, அதாவது அந்த இடம் யாருடைய* control-*ல் இருக்கிறதோ, அந்தத் துறையின் மூலமாக சுற்றுலா வசதிகளை மேம்படுத்த உரிய கருத்துரு மற்றும் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் எங்கள் துறைக்கு அனுப்பப்படுமாயின், அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் தற்போது புகழ்பெற்ற தலமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மாநிலங்களிலிருந்து பல இலட்சக்கணக்கான மக்கள் தினசரி பெரிய அளவில் அங்கு வருகைதந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தெலங்கானா மாநிலத்திலிருந்தும், ஹைதராபாத் போன்ற பகுதிகளிலிருந்தும் வருகிறவர்களுக்கு நம்முடைய அரசு பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தர முன்வருமா என்றும், சுற்றுலாத் தலங்களில் திருவண்ணாமலை கோயிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சுற்றுலாப் பேருந்துகள் திருவண்ணாமலை வழியாக வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒரு முக்கியமான சுற்றுலாத் தலம். அங்கு மிகப் பெரிய கோயில் உள்ளது. நிறைய பேர் வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்து வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, நிச்சயமாகத் தேவைப்படுமாயின், சம்பந்தப்பட்ட*

துறைகளுடன் கலந்தாலோசித்து, அரசு பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

166—

மருத்துவமனையைத் தரமுயர்த்துதல்

***88711—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டை அரசு மருத்துவமனையை பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட குரோம்பேட்டை அரசு வட்ட மருத்துவமனை, 213 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, குடும்ப நலம், அறுவை சிகிச்சைக்குப்பின் கவனிப்பு, தலைக்காய சிகிச்சை, விபத்து மற்றும் அறுவை சிகிச்சை, முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம், பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை, விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்புப் பிரிவு போன்ற பிரிவுகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், இரத்த வங்கி, Dialysis machine, Ventilator, ஆய்வகப் பரிசோதனைகள், X-ray, USG, ECG, CT scan மற்றும் போதுமான மருத்துவக் கருவிகளும் இந்த மருத்துவமனையில் இருக்கின்றன.

2023 ஏப்ரல் 17]

இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில், அப்பகுதி மக்கள் தொடர்ந்து வைத்த கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு எண் 1-ன்படி அந்த மருத்துவமனையை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்திட வேண்டுமென்கின்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்த வகையில், 400 படுக்கைகளுடன், 2 இலட்சத்து 27 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடனான கட்டடத்தை 100 கோடி ரூபாய் மதிப்பில் கட்டும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இந்த கட்டடப் பணிகள் முடிவடைந்தவுடன், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியிருப்பதைப்போல, அனைத்து சிறப்பு வசதிகளுடனும்கூடிய ஒரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக அது இயங்கவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை 1972 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. 52 ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் தாயுள்ளத்தோடு புதிய மருத்துவமனைப் பணிகளை தொடங்கி வைத்திருக்கிறார்கள். தற்போது அங்கேயிருக்கின்ற அந்த மருத்துவமனையில் ஒவ்வோராண்டும் மழைக்காலத்தில் 4 அடி அளவிற்கு தண்ணீர் தேங்கி நிற்கும். அந்தத் தண்ணீரை வெளியேற்றுவதற்கு சிரமப்படுவார்கள். அந்த வகையில், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களும், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும் அடிக்கடி அந்த மருத்துவமனையைப் பார்வையிட்டு, தற்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 100 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். ஆகவே,*

தொகுதி மக்களின் சார்பாக நான் அவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே மருத்துவமனை இருக்கிற கட்டடம் 4½ ஏக்கர் பரப்பளவில் இருக்கிறது. அந்த இடத்திலேயே புதிய மருத்துவமனையை உருவாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற அந்த பழைய மருத்துவமனை என்பது, சாலையோரத்திலிருந்து சற்று தாழ்வான பகுதியில் இருப்பதால்தான், மழைக்காலங்களில் அடிக்கடி பெரும் பாதிப்புக்குள்ளாகிறது. எனவேதான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பக்கத்தில் இருக்கிற ஒரு மிகப் பெரிய மைதானத்தில் புதிய மருத்துவமனை கட்டும் பணிகள் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற அந்த மருத்துவமனையிலும்கூட, தற்போது கூடுதல் வசதிகளாக 6 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாய்-சேய் நலக் கட்டடம் ஒன்றும், 1¼ கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வக சேவை கட்டடம் ஒன்றும் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, நிச்சயம், அந்த மருத்துவமனை அனைத்து வசதிகளுடனும்கூடிய சிறப்பு மருத்துவமனையாக மிக விரைவில் இயங்கவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

முற்பகல் 10—45

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூர் பகுதி நகராட்சியாக இருந்தது. அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 1961 ஆம் ஆண்டு திரு. காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திறக்கப்பட்டது. அங்கு பிரசவத்திற்கு,

2023 ஏப்ரல் 17]

3 படுக்கை வசதிகள் கொண்ட அறைகள்தான் உள்ளன. அது போதுமானதாக இல்லை. அந்தக் கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டுவதற்கு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கருத்துரு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், திருநீர்மலை பகுதியில் புறநோயாளிகளெல்லாம் வருவதற்காக புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட ரூ.1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அனகாபுத்தூர் மற்றும் திருநீர்மலைப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரமுயர்த்தப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே கீழ்க்கட்டளை பகுதியில் ஒரு பிரசவ வார்டு மற்றும் பிரசவத்திற்குப்பின் கவனிப்பு வார்டு ஆகியவை ரூ.40 இலட்சம் செலவில் கட்டப்பட்டு திறக்கும் தருவாயில் இருந்துகொண்டிருக்கின்றன. அதேபோல, அதே தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில், குறிப்பாக, தாம்பரம் அரசு மருத்துவமனையில் ரூபாய் ஒன்றே கால் கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஒருங்கிணைந்த ஆய்வகமும், ரூ.1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் ஜமீன் பல்லாவரத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடமும், அதேபோல் பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளும், பழைய பல்லாவரம், கீழ்க்கட்டளை பகுதிகளில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நல வாழ்வு மையமும், ஜமீன் பல்லாவரத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய நலவாழ்வு மையமும், பம்மல் பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய நல வாழ்வு மையமும், அரிதாசபுரம் பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய துணை சுகாதார நிலையமும், ஜமீன் ராயப்பேட்டை பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நகர்ப்புற நல வாழ்வு மையமும் ஆக 10 மருத்துவக் கட்டடங்கள் ரூ.11 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் அந்தத் தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு*

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, ஓட்டேரி பகுதியில் 75 ஆண்டுக் காலம் பழமையான அரசு திருவெற்றீஸ்வர் நெஞ்சக நோய் மருத்துவமனை இருக்கிறது. மிகவும் பழுதடைந்து காணப்படுகின்ற அந்த மருத்துவமனைக் கட்டடத்திற்கு மாற்றாக, படுக்கை வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் ஒன்றினைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தீவிர வழிகாட்டுதலின்படி, 2025-க்குள் காசநோய் இல்லா தமிழகம் என்கின்ற இலக்கினை (மேசையைத் தட்டும் ஒலி) அடைகிற வகையில், காசநோய்க்கான சிறப்பு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, ஓட்டேரி பகுதியில் உள்ள நெஞ்சக மருத்துவமனையில் புதிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை தந்து அடுத்து வருகிற நிதிநிலை அறிக்கையில் அதுசம்பந்தமான அறிவிப்புகள் வெளியிடப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி அவர்கள்.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பவானிசாகர் தொகுதி, தாளவாடி மலைப் பகுதியில் உள்ள மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்*

2023 ஏப்ரல் 17]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலோ அல்லது துணை சுகாதார நிலையங்களிலோ பிரேத பரிசோதனைக் கூடம் அமைக்கப்படுவதில்லை. வட்ட மருத்துவமனைகளில் மட்டுமே பிரேத பரிசோதனைக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, அவர் கோரியிருக்கிற இடத்தை ஆய்வு செய்து, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்படும் என்று இந்த மாமன்றத்திலே சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு, அதற்காக 22 ஏக்கர் நிலம் மாதவரத்தில் ஆர்ஜிதப்படுத்தப்பட்டது. அது நம்முடைய மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதாக அறிகிறேன். எப்போது, அதற்கான தீர்வு ஏற்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,தமிழ்நாட்டில் பாரம்பரிய வைத்திய முறையான சித்த மருத்துவத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்கிட வேண்டுமென்று, கருத்துருவை ஏற்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதன்படி, இங்கிருந்து சட்ட மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டு, மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி

வைக்கப்பட்டது. கடந்த 4 மாதங்களுக்கு முன்னால் மேதகு ஆளுநர் அவர்களிடத்திலிருந்து ஒரு clarification கேட்கப்பட்டு, அதற்கும் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான அலுவலகம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் இயங்கிக்கொண்டிருக்கின்ற சித்த மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்படுவதற்கு தயார் நிலையில் இருந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 10—50

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதைப்போல, மாதவரம் பகுதியிலிருக்கிற பால்பண்ணையில் 25 ஏக்கர் நிலம் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலமாற்றம் செய்யப்பட்டு, தயார் நிலையில் இருக்கிறது. மேதகு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் மாதவரத்தில் உடனடியாகத் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குளச்சல் அரசு மருத்துவமனை 100 ஆண்டுகளைக் கடந்தது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர், என்னுடைய வேண்டுதலை ஏற்று, குளச்சல் அரசு மருத்துவமனையை வந்து பார்வையிட்டார்கள். அங்கு அடிப்படை வசதிகளே இல்லை. கடலோரப் பகுதியான அங்கு, குறிப்பாக, கேன்சர் நோய் அதிகமாக இருக்கிறது. பல்வேறு வகைகளில் அங்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. அனைத்துத் தரப்பு மருத்துவத்தையும் நாங்கள் விரும்புகிறோம். சுமார் 400 முதல் 600 வரை புறநோயாளிகள் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனைக்குச் செல்ல வேண்டும் அல்லது நாகர்கோவில் அரசு மருத்துவமனைக்குச்*

2023 ஏப்ரல் 17]

செல்ல வேண்டும். Distance *மிகவும் அதிகமாக உள்ளது. இந்த மருத்துவமனை தரமுயர்த்தப்பட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் ஊருக்கு என்ன வேண்டும்? அந்தக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *அனைத்து மருத்துவ வசதிகளும், அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் கொண்ட ஒரு மருத்துவமனையாக அதனைத் தரமுயர்த்தித் தருவீர்களா என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், குளச்சல் பகுதியிலிருக்கிற மருத்துமனையைத் தரமுயர்த்துவது குறித்துக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, அவரும், நானும் அந்த மருத்துவமனையை ஆய்வு செய்திருக்கிறோம். அந்த மருத்துவமனைக்குத் தேவையான கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புற்றுநோய் சம்பந்தமாகக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் ஏற்பாட்டின்படி, நாகர்கோவிலில் இருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய்க்கான ஒரு சிறப்பு தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகப் பொதுச் செயலாளர் ஐயா அவர்களை வணங்கி, ஸ்ரீசோபகிருது வருட இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2023 ஏப்ரல் 17

தாரமங்கலம் பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களுடைய 10 கோரிக்கைகளில் ஒரு கோரிக்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், தாரமங்கலம் பகுதியானது நகராட்சிப் பகுதியாகும். அதுமட்டுமல்லாமல், தாரமங்கலத்தைச் சுற்றியுள்ள ஊராட்சிகளில் உள்ள மக்களும் . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படுமா? அதுதானே கேள்வி? துணைக் கேள்வியையெல்லாம் அப்படித்தான் கேட்க வேண்டும். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் தற்போது போதுமான கட்டமைப்பு வசதிகளுடன் இயங்கி வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற மருந்துகளாகக் கருதப்பட்ட நாய்க்கடி மருந்து, பாம்புக்கடி மருந்து ஆகியவை அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தரப்பட்டு, மிகச் சிறப்பாக பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களுக்கு நன்றி. என்னுடைய மானாமதுரை தொகுதிக்குட்பட்ட மானாமதுரை வட்டம், ராஜகம்பீரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்கள் இருந்தபோது, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தார்கள். கடந்த 10 ஆண்டுகளாக அந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது. ஐயா*

2023 ஏப்ரல் 17]
கலைஞர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். அந்தப் பகுதி சிறுபான்மையினர் அதிகம் வசிக்கின்ற பகுதியாகும். அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ராஜகம்பீரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று ராஜதந்திரத்தோடு ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்; கடந்த 7, 8 ஆண்டுகளுக்குப் பிறகு, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, தற்போது அரசாணை வெளியிடப்பட்டு, 25 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீண்டும் தேவையானவற்றை கேட்டுப் பெறுகின்ற நிலையில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அப்படிக் கிடைக்கப்பெறும்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

167—

சார்நிலைக் கருவூலம்

***82623—திரு. செ. கிருஷ்ணமுரளி:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—55

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக கருவூலக் கணக்கு ஆணையரகத்திடமிருந்து கருத்துரு வரப்பெற்று, அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், கருவூலக் கணக்குத் துறையின் மறுசீரமைப்பிற்குப் பிறகு, கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி, கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக ஒரு கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அம்மாவின் கடந்தகால ஆட்சியில் மூன்று தாலுகாக்களைப் பிரித்து, தனி தாலுகாவாக 40 ஆண்டுக் கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அறிவிக்கப்பட்ட அந்தத் தாலுகாவில் இரண்டு நகராட்சிகள், மூன்று பேரூராட்சிகள், 25 கிராம ஊராட்சிகள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலனையில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். வெகு விரைவாக சார்நிலைக் கருவூல அலுவலகத்தை அமைத்துத் தந்து, அந்த மக்களுக்குப் பயனுள்ளதாக அமைய வழிவகை செய்து தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சீர்திருத்தங்களை ஏற்கெனவே செய்த பிறகும் இன்னும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளன. உதாரணத்திற்கு, நாளை மறுநாள், நிதித் துறை மானியக் கோரிக்கையை இங்கே சமர்ப்பிக்கும்போது, பல அறிவிப்புகள் இன்னும் வரவிருக்கின்றன. எந்த அளவிற்கு* Automation, Online, Mobile App *எல்லாவற்றிலும் அரசை நேரடியாக மக்களும், பல அலுவலர்களும் அவர்களுடைய பணிகளை நேரில் வராமல் செய்துகொள்ள முடியும் என்பதற்காக ஏற்கெனவே அறிவித்ததற்குமேல் இன்னும் சில மாற்றங்களைச் செய்து வருகிறோம். எனவே, அந்தப் புதிய* Model*-ஐ உருவாக்கிய பிறகு, எங்கெல்லாம் கூடுதலாக இருக்கிறது, எங்கெல்லாம் குறைவாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள்.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை தாலுகா அலுவலகத்திலுள்ள இந்தக் கருவூலமானது 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே கூடுதல், எங்கே குறைவு என்று கண்டறிந்து* overall *மறுசீரமைப்பு செய்யவிருக்கிறோம். உதாரணத்திற்கு ஒரு* payment process *செய்வதற்கு பழைய காலத்தில் இருந்த* model*–ல் 9 தனி நபர்கள்* approval *கொடுக்கிறார்கள். தற்போது* online *ஆன பிறகு இவற்றையெல்லாம்*

திருத்த வேண்டும். எனவே, அந்த மொத்த model–யும் திருத்தும்போது, எங்கெல்லாம் குறைவாக இருக்கிறதோ, உறுதியாக அது பணியாளர்கள் எண்ணிக்கையாக இருக்கட்டும் அல்லது கட்டடமாக இருக்கட்டும், எவையெல்லாம் குறைவாக இருக்கிறதோ, கருவூலம் சரியாகச் செயல்படுவதற்கு என்னென்ன தேவையோ, அவை அனைத்தையும் இந்த அரசாங்கம் செய்து தரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில், தேன்கனிக்கோட்டை தாலுகாவிலிருந்து அஞ்சட்டி தாலுகாவை புதிதாக பிரித்த பிறகு, அங்கே சார்நிலைக் கருவூலம் இல்லை. 120–க்கும் மேற்பட்ட மலை கிராமங்களைச் சார்ந்த பொது மக்கள் தேன்கனிக்கோட்டை சார்நிலைக் கருவூலத்திற்கு வர வேண்டியிருக்கிறது. ஆகவே, புதிதாகப் பிரிக்கப்பட்ட அஞ்சட்டி தாலுகாவிற்குப் புதியதாக சார்நிலைக் கருவூலம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கருத்து மீண்டும் மீண்டும் வருவதால், நான் சில கருத்துகளை இங்கே கூற விரும்புகிறேன். ஏற்கெனவே பல ஆண்டுகளாக கடனிலும், நிதிப் பற்றாக்குறையிலும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையிலும் அரசு இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கையிலிருக்கிற நிதியை வைத்து, முதல் முக்கியத்துவம் நாம் கொடுக்க வேண்டியது, குளங்கள், ஏரிகள் தூர்வாருவது; குடி தண்ணீர்த் திட்டங்கள் உருவாக்குவது; சாலைகள் அமைப்பது; பாலங்கள் அமைப்பது; அதற்கடுத்தபடியாக மக்களிடம் நேரடியாகச் சென்று சேரவேண்டிய நிதி. அது வேறு எந்தவகையிலும், வேறு யாரும் கொடுக்க மாட்டார்கள். ஆனால். அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய ஒரு service–ஓ,

2023 ஏப்ரல் 17]

பணியோ அல்லது அரசுக்குச் செலுத்த வேண்டிய ஒரு நிதியோ, இதனை மிகச் சுலபமாக, மிக எளிமையாக online*-ல் செய்வதற்கு அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன.*

தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே கூடுதல் Internet penetration, Smartphone penetration *வைத்திருக்கிறது. அனைத்து மக்களும்* online*-ல் செய்ய முடியாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காகவேதான் யாருக்கெல்லாம் முடியவில்லையோ, அவர்களுக்கெல்லாம் வீடுகளுக்குச் சென்று செய்கிறோம்.* Pension*-க்கு,* Registration*-க்கு, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி போன்று எல்லா நிதித் துறை செயல்களையும், ஒன்று,* online *அல்லது நேரடியாகச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். அதற்கும்மேல் எங்கெல்லாம் தேவையோ, உறுதியாகச் செய்து கொடுக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

168—

பால் குளிரூட்டும் நிலையம்

***3106—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் பால் பண்ணையும், தலைஞாயிறு பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[*2023 ஏப்ரல் 17*

(அ) மற்றும் (ஆ) தற்போது வேதாரண்யம் தொகுதியில் பால் பண்ணை அமைக்க வாய்ப்புகள் இல்லை. எனினும், புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திட, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தலைஞாயிறு பேரூராட்சியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது ஏதுமில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வேதாரண்யம் பகுதி டெல்டா மாவட்டத்தில் இருந்தாலும்கூட, அது முற்றிலும் புஞ்சை நிலமாகவே இருக்கிறது; மானாவாரி, மழை பார்த்த பூமி. எனவே, அங்கேயிருக்கின்ற ஆண்கள், பெண்கள் என அனைவரும் வேலை காரணமாக வருமானம் ஈட்டுவதற்காகப் புலம்பெயர்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அங்கே பால் பண்ணை அமைப்பதும், சிறு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை அமைத்துத் தர வேண்டியதும் அவசியம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி, தஞ்சாவூரில், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பால் பண்ணை இயங்கி வருகிறது. எனினும், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி திருவாரூரில் புதிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் பண்ணை அமைக்க சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதால், தற்போது வேதாரண்யம் தொகுதியில் பால் பண்ணை அமைக்க வாய்ப்புகள் இல்லை. வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே 11 பால்*

2023 ஏப்ரல் 17]

உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டு, நாளொன்றுக்கு 800 லிட்டர் பால் உற்பத்தி செய்து, தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. வேதாரண்யம் பகுதியில் புதிய சங்கம் அமைத்துத் தரக் கோரி விண்ணப்பம் அளிக்கும்பட்சத்தில், புதிய பால் பண்ணை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*மேலும், தலைஞாயிறு பேரூராட்சி அருகில் பிரதாமராமபுரம் என்ற இடத்தில் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதாமராமபுரம் தொகுப்பு பால் குளிரூட்டும் மையம்–*BMC *அமைக்கப்பட்டு, அதன்மூலம் வேதாரண்யம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் சங்கங்களில் தினசரி கொள்முதல் செய்யப்படும் சுமார் 800 லிட்டர் பாலானது குளிரூட்டப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, தற்போது தலைஞாயிறு பகுதியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க தேவை எழவில்லை. அங்கு பால் கொள்முதல் மேலும் அதிகரிக்கும்பட்சத்தில், தேவையின் அடிப்படையில், தலைஞாயிறு பேரூராட்சியில் தொகுப்பு பால் குளிரூட்டும் மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, தற்போதைய நிலையில் தலைஞாயிறு பேரூராட்சியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன பிரச்சினை என்றால், பாக்கெட்டுகளில் வருகின்ற பாலைத்தான் டீக்கடையாக இருந்தாலும், ஓட்டல்களாக இருந்தாலும் பெரிதும் விரும்பி வாங்குகிறார்கள். வீட்டில் கறந்து கொண்டு வந்து கொடுக்கும் பாலை டீக்கடைகளிலோ அல்லது ஓட்டல்களிலோ வாங்குவது என்பது முற்றிலுமாகவே இல்லை என்றுகூட சொல்லலாம். தனியார் வீடுகளிலே மட்டும்தான் கறந்த பாலை வாங்குகிறார்கள். இப்படி ஒரு பிரச்சினை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, வாய்ப்பு இருக்கின்ற அனைத்து*

இடங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இருக்கின்ற 9,354 சங்கங்களை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் அதற்கான பெருமுயற்சி எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, ஆங்காங்கு இருக்கின்ற ஒன்றியங்கள், நகரங்கள், அனைத்திலும் புது சங்கங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, மிக விரைவில் சங்கங்கள் உருவாக்கி, அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

169—

கிளை நூலகம்

***62251—திரு. T.M. தமிழ்செல்வம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், நொச்சிப்பட்டி ஊராட்சியில் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

2023 ஏப்ரல் 17]

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், நொச்சிப்பட்டி ஊராட்சியில் 4–12–2016 முதல் ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகிறது. பொது மக்களின் பயன்பாடு, உறுப்பினர்களின் எண்ணிக்கை, புரவலர்களின் எண்ணிக்கை, நூல் இரவல் மற்றும் சராசரியாக ஒரு நாளைக்கு வரும் வாசகர்களின் எண்ணிக்கை ஆகிய காரணிகளின் அடிப்படையில், ஊர்ப்புற நூலகமானது, கிளை நூலகமாகத் தரமுயர்த்தப்படும். மாண்புமிகு ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள நொச்சிப்பட்டி ஊராட்சியிலுள்ள நூலகத்தில், நூலகத்தின் பயன்பாடு மற்றும் வாசகர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எதிர்வரும் காலத்தில், மேற்சொன்ன காரணிகளை அந்நூலகம் நிறைவு செய்யும்பட்சத்தில், தகுந்த கருத்துருக்கள் பெறப்பட்டு, ஊர்ப்புற நூலகமானது கிளை நூலகமாகத் தரமுயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.M. *தமிழ்செல்வம் அவர்கள்.*

திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி, நொச்சிப்பட்டி ஊராட்சியில் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா என கேட்டுக்கொள்கிறேன். எஃகூர் கிராமத்தில் பழுதடைந்த நிலையிலுள்ள நூலகத்தைச் சீர்செய்யவும் மற்றும் பெரியதளபாடி ஆதி திராவிடர் காலனிக்கு புதிய நூலகம் கட்டித் தரவும் அரசு முன்வருமா எனக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளை நூலகம் அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்த நூலகத்தில் 4,256 நூல்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், சராசரியாக வாசகர்களுடைய வருகை என்பது, ஒரு நாளைக்கு 20 பேர்தான். சராசரியாக நூல் இரவல் வாங்குவோர் 5 பேர்தான். ஒரு நாளைய சராசரி நூல்களினுடைய பயன்பாடு 10–தான் என்று சொல்லும்போது, மக்களின் வாசிப்பு விழிப்புணர்வு குறைவாக உள்ளது. நம்முடைய*

மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களால் வாசிப்பு equipment-க்கு என்று கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைச் சார்ந்திருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராகிய நீங்களும் வாசிப்பு விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், பகுதி நூலகம் என கிட்டத்தட்ட 14 நூலகங்கள் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. என்னுடைய துறையில், இப்போது நம்முடைய பொது நூலகத்தின் சார்பாக கிட்டத்தட்ட ஒவ்வொரு கிளை நூலகத்திற்கும் 600 புத்தகங்களை வழங்குகின்ற அந்தப் பணிகளில் எங்களை நாங்கள் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம். இது ஊர்ப்புற நூலகமாக இருந்தாலும் பரவாயில்லை; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்காக, அதற்கென்று தனியாக ஆயிரம் புத்தகங்களை நாங்கள் வழங்குகின்றோம். அதைத் தரமுயர்த்துவதற்கான அனைத்துப் பணிகளையும் எங்களால் முடிந்தவரையில் நாங்கள் செய்கின்றோம். ஆனால், உறுப்பினர்களைச் சேர்க்கின்ற அந்த பணியிலே, வாசகர்களாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியைச் சார்ந்திருக்கின்ற ஊராட்சி மன்றத்தினுடைய தலைவராக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி நீங்கள் அனைவரும் எடுத்துக் கூறி, வாசிப்பு விழிப்புணர்வைக் கொண்டுவரும்பட்சத்தில், கண்டிப்பாக அந்த நூலகம் தரமுயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடங்கள் பற்றி கேட்டிருக்கிறீர்கள். பொதுவாக, நூலகம் சொந்தக் கட்டடத்தில், அரசுக் கட்டடத்தில் செயல்பட்டால், அங்கே இருக்கின்ற District Library Officers மூலமாக, ஆணைக் குழுவின் மூலம் பராமரிப்பிற்காக ஒதுக்கப்படுகின்ற நிதியின் அடிப்படையில், அந்தக் கட்டடமெல்லாம் சீரமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம் அவர்கள்.

2023 ஏப்ரல் 17]

திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை கூறிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உப்பாரப்பட்டி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளி கடந்த சில ஆண்டுகளாக 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று வருகிறது. எனவே, உப்பாரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா என்பதனை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு, அரசு பள்ளியில் சேரும் மாணவர்களுடைய எண்ணிக்கை என்பது, அதிகரித்துக்கொண்டேதான் இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய கொளத்தூர் தொகுதியில் அரசுப் பள்ளியில் அடுத்த கல்வியாண்டில் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்கிற விழிப்புணர்வு பிரச்சாரத்தை நானும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களும் இன்றைக்கு தொடங்கி வைத்துவிட்டுத்தான், நேரடியாக இங்கே வந்திருக்கிறோம். மாணவர் சேர்க்கை,* enrolment ratio *அதிகமாக அதிகமாக, தரமுயர்த்தப்படுமா என்கிற கேள்விகளும் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதுபோல், என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றனவோ, அவற்றிற்குத் தகுந்தாற்போல் நாம் கலந்தாலோசித்து, தேவைப்படுகிறபட்சத்தில், அது கண்டிப்பாக தரமுயர்த்தப்படும். ஏனென்றால், ஏற்கெனவே இருக்கிற* school*-ஐ பிரித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களும், மாண்புமிகு திரு. செஞ்சி* K.S. *மஸ்தான் போன்றவர்களெல்லாம் கோரிக்கை வைத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். நிதிநிலைமைக்கேற்ப, உள்ளபடியே மேல்நிலைப் பள்ளிகளுக்கு 8 கிலோ மீட்டருக்குள்ளும், உயர் நிலைப் பள்ளிகளுக்கு, 5 கிலோ மீட்டருக்குள்ளும் அடுத்த பள்ளியோ அல்லது அரசு*

உதவிபெறும் பள்ளியோ இல்லையென்கிறபட்சத்தில், கண்டிப்பாக அது தரமுயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முற்பகல் 11–10

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்தில் முன்பு வாடகைக் கட்டடத்தில் நூலகம் செயல்பட்டு வந்தது. இப்போது அரசு மேல்நிலைப் பள்ளியில் நூலகம் செயல்பட்டு வருகிறது. அங்கு குறிப்பாக மாலை நேரத்தில் மக்கள் செல்வதற்கு வசதியில்லாத ஒரு சூழல் இருக்கிறது. எனவே, பாபநாசத்தில் சொந்த இடத்தில் நூலகம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக வினவ விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்தக் கட்டடங்கள் அமைப்பதற்கான விதிமுறைகள் குறித்து ஏற்கெனவே நான் சட்டமன்றத்தில் பல முறை பேசியிருக்கின்றேன். புதியதாக ஒரு நூலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 5 சென்ட் இடம் நூலக ஆணைக் குழுவிற்கு அந்த ஊர் மக்களால் வழங்கப்பட வேண்டுமென்று ஒரு விதி உள்ளது. அப்படி வழங்குகின்றபட்சத்தில், அந்த மாவட்ட நிதிநிலைமைக்கு ஏற்ப அல்லது நிதிநிலைமை கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கிறது,* special grant *ஆக செய்யுங்கள் என்று சொன்னால், நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதையும் செய்கின்ற பணியில் எங்களை நாங்கள் ஈடுபடுத்திக்கொள்வோம்.*

குறிப்பாக, இந்த அரசாங்கம், நூலகம் மற்றும் நூலக வாசிப்பிற்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் தருகிறது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. தற்போது இருக்கின்ற அண்ணா நூற்றாண்டு நூலகத்தை கிளாரி கிளிண்டன் அவர்கள் பார்வையிட்டு பாராட்டிவிட்டுச் சென்றார்கள். தற்போது மாண்புமிகு டெல்லி முதலமைச்சர் அவர்கள் வந்தபோது,

2023 ஏப்ரல் 17]

visitor's note-ல் "It's a pleasure to visit this library. Such huge collection of books and manuscripts so well managed and kept. It's not just Tamil Nadu's pride but India's pride. Keep it up" *என்று எழுதிவிட்டு போயிருக்கிறார்கள். நிச்சயம், அது நூலகமாக இருந்தாலும் சரி, வாசிப்பாக இருந்தாலும் சரி அதை அதிகப்படுத்துகின்ற, அதை ஊக்கப்படுத்துகின்ற ஓர் அரசாங்கமாகத்தான் நமது அரசாங்கம் இருக்கிறது. குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருக்கு பரிசாக வந்த கிட்டத்தட்ட 1,350 நூல்களை முதல்கட்டமாக பொது நூலகத்திற்கு என்று வழங்கியிருக்கிறார்கள். அதற்கும் இந்த மன்றத்தின் மூலமாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புத்தகங்களை வழங்கும்போதுகூட அவர் சொன்னது, 'இதில் அரசியல் கலக்காமல் இருக்க வேண்டும். நல்ல புத்தகங்களாக இவை இருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். நல்ல புத்தகம் என்று சொல்லும்போது புரட்டி, புரட்டி படிப்பது நல்ல புத்தகம் இல்லை. படிக்க, படிக்க நம்மை புரட்டிப் போடுவதுதான் நல்ல புத்தகம் என்று சொல்கின்ற அளவிற்கான நல்ல புத்தகங்களை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்த நூலகக் கட்டடத்தைப் பொறுத்தவரையில், நிதிநிலைமைக்கேற்ப, அது சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், பேரளம் பேரூராட்சியில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய கிளை நூலகத்தையும், உ.வே.சா. அவர்களின் பிறந்த மண்ணான உத்தமதானபுரத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய கிளை நூலகத்தையும் முழுநேர நூலகங்களாக அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு*

நூலகமும் தரம் உயர்த்தப்படுகின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற விதிமுறைகளின்படி, புரவலர்கள் எத்தனை பேர் பணம் கட்டியிருக்கிறார்கள்; எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்; அங்கே இருக்கும் மக்களின் பயன்பாடு எந்தளவுக்கு இருக்கிறது; எத்தனை புத்தகங்களை இரவல் வாங்கியிருக்கிறார்கள்; ஒரு நாளைக்கு எவ்வளவு பயன்பாடு உள்ளது என்பதை பொறுத்துதான் நூலகம் தரமுயர்த்தப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக, 1,000 பேர் மக்கள்தொகை இருக்கின்ற இடத்தில் எங்கெங்கெல்லாம் நூலகம் இல்லையோ, அங்கெல்லாம் பகுதிநேர நூலகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். அதைச் செய்து கொண்டிருக்கின்றோம். தேவைப்படுமெனில், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட நூலகத்தைத் தரமுயர்த்தும் பணிக்கு மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளைக் கொண்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகம் வாசிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் அடிப்படையில், இந்த அரசு, நூலகங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறது என்பதை நாம் அனைவருமே அறிவோம். இப்போது நவீன காலம். முதல்கட்டமாக, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு digital library கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா; இரண்டாம் கட்டமாக, அனைத்து ஊராட்சிகளிலும் digital library; உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுமோ அது எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 17]

முதற்கட்டமாக 500 libraries*-ல் ஏற்கெனவே நாம்* Digital Library *ஆரம்பித்து வைத்துள்ளோம். சமீபத்தில் ஜனவரி மாதத்தில் அசோக் நகரில்கூட நாங்கள் ஆரம்பித்து வைத்துள்ளோம். ஏற்கெனவே இதுகுறித்து பதில் அளிக்கும்போது, அடுத்தடுத்த கட்டடங்களுக்குச் செல்லும்போது, ஒவ்வொரு* digital library*-லும்* wi-fi *கொடுப்பதாக இருந்தாலும் சரி,* digital library *ஆக மாற்றுகின்ற அந்தப் பணியாக இருந்தாலும் சரி, நாங்கள் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களை, பல சட்டமன்ற உறுப்பினர்கள் வெறும் சட்டமன்ற அலுவலகமாக மட்டுமல்லாமல், நூலகமாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது அவரவர்களின்* discretion*. அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.* Digital Library *ஆக மாற்றப்படுமா என்ற கேள்வியைப் பொறுத்தவரையில், அது நிதிநிலைமை சம்பந்தப்பட்டது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு.* R. *ராதாகிருஷ்ணன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

சாலையைச் சீரமைத்தல்

***78004—திரு. R. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, மணக்கொல்லை முதல் இருப்பு வரையிலான வனச் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.*

கடலூர் வனக் கோட்டம், விருத்தாசலம் சரகம், இருப்பு-மணக்கொல்லை சாலை 1.5 கி.மீ. வரை சேமக்கோட்டை காப்புக்காட்டிற்குட்பட்ட பகுதியில் வருகிறது. இச்சாலை வட்டார வளர்ச்சி அலுவலர், கம்மாபுரத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இச்சாலை, 1980 ஆம் வருடத்திற்கு முன்பு அமைக்கப்பட்டிருந்தால், அதற்கான ஆவணங்களுடன் அனுமதிகோரும்பட்சத்தில் அரசு விதிகளின்படி பரிசீலனை செய்து, பழுதடைந்த சாலையைச் சீரமைக்க அனுமதி வழங்கப்படும். மேற்படி சாலையைச் சீரமைக்க கூடுதலாக வன நிலம் தேவைப்பட்டால், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி, காப்புக் காட்டில் பணி மேற்கொள்வதற்கு அரசின் முன் அனுமதி விண்ணப்பத்தினை PARIVESH இணையதளத்தில் விண்ணப்பிக்க கம்மாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வட்டார வளர்ச்சி அலுவலர், கம்மாபுரம் அவர்கள் விண்ணப்பிக்கும்பட்சத்தில், பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை முழுவதுமாகவே, பயன்படுத்தமுடியாத நிலையில் இருக்கிறது. இந்தச் சாலை 3 கிலோ மீட்டர் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்தச் சாலை, முழுவதுமாகவே நடமாட முடியாத நிலையில் இருப்பதால் வனத் துறையின் அனுமதியோடு சீரமைக்க வேண்டும். அதேபோல, கடலூர் முதல் சேலம் வரை செல்லும் சாலையில், கோட்டேரி முதல் வீரட்டிக்குப்பம் வரையிலான ஒரு கிலோ மீட்டர் சாலை மட்டும் மூன்றே முக்கால் மீட்டர் சாலையாக இருக்கிறது. இரண்டு பக்கங்களிலும் 7 மீட்டர் சாலையாக இருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் மட்டும் குறுகிய சாலையாக இருப்பதால், சாலையில் நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. அதையும் வனத் துறையின் அனுமதியோடு, விரிவுபடுத்தித் தர வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னமாதிரி, அதற்கு விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் விண்ணப்பித்ததற்குப் பிறகு, 1980–க்கு முன்பு இருந்த சாலையா அல்லது பின்பு இருந்த சாலையா என்பதை நாங்கள் ஆய்வு செய்வோம். 1980–க்கு முன்பு இருந்தச் சாலையாக இருந்தால், நாங்கள்* NOC *கொடுக்க வேண்டும். பின்பு இருந்த சாலையாக இருந்தால்,* PARIVESH portal*–ல்* apply *செய்ததற்குப் பிறகு, அதற்கான ஆவணங்களை நீங்கள் கொடுத்தீர்கள் என்றால், வனத் துறையின்மூலம் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* R. *ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டேரி சாலைக்கு ஆவணங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, இருப்பு ஊராட்சியில் அரசியம்மன்கோயில் முதல் செட்டித்தாங்குப்பம் வரை மற்ற சாலைகளெல்லாம் போட்டிருக்கிறார்கள். 600 மீட்டர் சாலை மட்டும் வனத் துறையால் போடப்படாமல் இருக்கிறது. அதேமாதிரி, முதனை ஊராட்சியில் விருத்தகிரிகுப்பத்தில் 800 மீட்டருக்கு சாலை அதே நிலையில் இருக்கிறது. இருப்பு ஊராட்சியில், நெய்வேலியை இணைக்கின்ற சாலை, வனத் துறைப் பகுதியில் போடப்படாமல் இருக்கிறது. அந்தச் சாலைகளையும் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, யார்* user agency *என்றால், அந்தச் சாலையைப் பொறுத்தவரையில், வட்டார வளர்ச்சி அலுவலர்–*BDO*தான்* user agency. *அவர்கள் ஏற்கெனவே கொடுத்திருக்கிறார்கள். ஆனால், சில விவரங்கள் போதவில்லை. அந்தச் சாலையின் நீளம், அகலம், சாலையின் வரைபடம், கம்மாபுரம் கிராமத்தில் எல்லைகளைக் குறிக்கும் வரைபடம்*

மற்றும் இச்சாலை, 1980 ஆம் வருடத்திற்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளதா போன்ற விவரங்கள் சரியாக இல்லை. அதையெல்லாம் சரிபார்த்து, மீண்டும் நீங்கள் apply செய்தீர்கள் என்றால், நாங்கள் பரிசீலிக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்று இதுநாள் வரை போடப்படாமல் இருந்த என்னுடைய அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட முத்துக்குமரன் மலையிலிருந்து பீஞ்சமந்தை வரையிலான சாலைக்கு, இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதி வழங்கி, வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், மலைவாழ் மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பீஞ்சமந்தை முதல் ஜார்தான்கொல்லை வரை மற்றும் ஜார்தான்கொல்லை முதல் பாலாம்பட்டு வரை, இரண்டு ஊராட்சிகளை இணைக்கக்கூடிய வகையிலே சாலையை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே பதில்தான். வனத் துறையில் எந்தச் சாலையாக இருந்தாலும், 1980-க்கு முன்பு இருந்தால், அது forest record-ல் இருந்தால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும். அப்படி இல்லாதபட்சத்தில், நீங்கள் PARIVESH portal-ல் ஆவணங்களைச் சமர்ப்பித்து, apply செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி V. அமலு அவர்கள்.

2023 ஏப்ரல் 17]

திருமதி V. அமலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட, குண்டலப்பள்ளி ஊராட்சியில், ரங்கன்பேட்டை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, வனத் துறைப் பகுதியில் சுமார் 3 கிலோ மீட்டர் அளவில் பாதை அமைத்துத்தர அனுமதி தருவார்களா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அதே பதில்தான். அந்தச் சாலையை ஏற்கெனவே record–ல் இருக்கின்ற சாலையா என்று பார்த்துவிட்டு, நீங்கள் apply செய்யுங்கள். அதற்குத் தேவையான documents–ஐ submit செய்தால், நாங்கள் அதை பரிசீலிக்கின்றோம்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா. வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

1—

விருதுகள்

***95739—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திரைப்படக் கலைஞர்கள் மற்றும் சின்னத் திரை கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் அரசால் வழங்கப்பட்டு வரும் விருதுகள் குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு, திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

[2023 ஏப்ரல் 17

இன்று நம்முடைய கொங்கு மண்டலத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக, சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, சிவன் மலைக்கும், சென்னி மலைக்கும் இடையில் இருந்த தீரன் சின்னமலை அவர்களுடைய பிறந்த நாள். தீரன் சின்னமலை அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் வருகை தந்து, அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தியதற்காக துறையின் சார்பிலும், கொங்கு மண்டல மக்களின் சார்பிலும், ஏன்? தமிழக மக்களின் சார்பிலும் முதலில் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு கேள்விக்கான விடையளிக்கிறேன்.

முற்பகல் 11–20

தமிழ்நாடு திரைப்பட விருதுகள், சின்னத் திரை விருதுகள் மற்றும் எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு வழங்கப்படும் விருதுகளைப் பொறுத்தவரையில், 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரை வழங்கப்படாமல் இருந்தன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுடைய உத்தரவின்பேரில், கடந்த செப்டம்பர் 4 ஆம் தேதி, ஏறத்தாழ 314 விருதாளர்களுக்கு சுமார் ரூ.4 கோடி மதிப்பில் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்களை நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு வழங்கினோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் கலாச்சாரம், தமிழர் பண்பாடு ஆகியவற்றை உலகறியச் செய்வதற்கு ஊடகமாக விளங்கக்கூடியவை தமிழ்த் திரைப்படங்கள் என்பதை உணர்ந்து, 1968 ஆம் ஆண்டு முதல் திரைப்படக் கலைஞர்களுக்காக வழங்கப்பட்டு வருகிற விருதுகள்,

2023 ஏப்ரல் 17]
பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகத்தான் இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தேன்.

தற்போது 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் வழங்கப்படவேண்டிய திரைப்படம் மற்றும் சின்னத் திரைக்கான விருதுகள் வழங்கப்பட வேண்டுமென்பதற்காகவும் இவ்வினாவை எழுப்பியிருக்கிறேன். இந்த நாட்டில் சமூக சீர்திருத்த, பகுத்தறிவுச் சிந்தனையை, மண்ணுக்கான சிந்தனையை விதைத்திட்டவர்கள் பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர். அவர்கள் வழி வந்திருக்கக்கூடிய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இலட்சிய நடிகர் S.S.R., கலைவாணர் N.S.K. உள்ளிட்ட பல கலைஞர்கள் வழங்கிட்ட பல உன்னதப் படைப்புகளின் விளைவாகத்தான் திரைப்படங்கள் தமிழ்நாட்டு மக்களோடும், தமிழக அரசியலோடும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அவ்வாறு வழங்கப்படும் திரைப்பட விருதுகள், சின்னத் திரைக்கும் வழங்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. இனிவருங்காலங்களில் சின்னத் திரையோடு நின்றுவிடாமல், அதை குறும்படங்களுக்கும் வழங்கக்கூடியதாய் மாற்றிட வேண்டும். ஏனென்று சொன்னால், சமூக சீர்திருத்த சிந்தனைகள், சுற்றுச்சூழல், சமூகம் சார்ந்த குறும்படங்கள் நிறைய வருகின்றன. அவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, அவற்றுக்கும் விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

சின்னத் திரை என்று சொல்கிற நேரத்தில், இரண்டு கருத்துகளை நான் சொல்லிட வேண்டும். ஆன்மிகத்தில் புரட்சி செய்த மகான் என்று சொல்லக்கூடிய இராமானுஜருக்கான மிகப் பெரிய சின்னத் திரை தொடரினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதியதன் விளைவாக, (மேசையைத் தட்டும் ஒலி) இராமானுஜர் அவதரித்த 1,000–வது ஆண்டை உலகறியச் செய்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். சமூகத்தில் சமூக சீர்திருத்த சிந்தனைகொண்ட ஓர் இளைஞன் பொதுத் தொண்டை எப்படி ஆற்றிட வேண்டும் என்பதை குறிஞ்சி மலர் என்ற தொடரின் மூலமாக நடித்து ஒரு சமூக சீர்திருத்தத் தொண்டன் பணியாற்றுவதற்கான அடையாளத்தை உலகத்திற்கு வழங்கியவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மணியடிக்கப்பெற்றது)

எனவே, சின்னத் திரையின் பங்களிப்பு அவசியமான ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி குறுகிய கால வினா. அதற்கேற்ற வகையில் சின்னத் திரைக்கு, சின்னக் கேள்வியாகக் கேட்டு, முடியுங்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: குறுகிய நேரத்தில் கேட்கப்பட்ட கேள்விதான். அதற்காக short ஆக என்றில்லை. எனவே, சின்னத் திரைக்கு வழங்குவதைப்போல, சமூக சீர்திருத்தச் சிந்தனையோடு குறும்படங்கள் வருவதைக் கருத்தில்கொண்டு, அவற்றுக்கும் விருதுகள் வழங்கிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, திரையுலக விருதுகளாக இருந்தாலும் சரி, சின்னத் திரை விருதுகளாக இருந்தாலும் சரி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு வழங்கப்படும் விருதுகளாக இருந்தாலும் சரி, 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரைக்கான விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 2015 ஆம் ஆண்டுக்கான விருதுகளுக்குத் தனியாக அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கோப்பு நிதித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு விரைவில் நிச்சயமாக அனுமதி கிடைக்கும். அந்த அனுமதி வரப்பெற்றவுடன், அந்த விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன. 2016 முதல் 2022 ஆம் ஆண்டு வரைக்கான விருதுகள் வழங்குவதற்குத் தேர்வுக் குழுவை விரைவில் அமைக்க உத்தரவிடப்படவிருக்கிறது. அதற்காக உத்தரவிடப்பட்ட பிறகு, அந்த விருதுகளும் நிச்சயமாக வழங்கப்படும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அனைத்து ஆலோசனைகளையும் ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, நிதிநிலைமைக்கேற்ப நிச்சயமாக, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினாவின்போது, ஒரு கேள்வி கேட்பதற்குத்தானே வாய்ப்பு வழங்கப்படும்? சரி, சுருக்கமாக துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

2023 ஏப்ரல் 17]

முற்பகல் 11–25

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்காக வாதிடுவதற்கு வழக்கறிஞர் இல்லாமல் வாதிட முடியும் என்பதனை கலைஞரின் வசனத்தால் 'குணசேகரன், பராசக்தி'யில் நிரூபித்திருக்கிறார். எந்தப் பக்கம் புரட்டினாலும் பாடம், பகுத்தறிவு, திறனாய்ந்த அரசியல் என்ற உன்னத வசனத்தை எழுதி, இந்த நாட்டைத் திரும்பிப் பார்க்க வைத்தவர், கலைஞர். "அண்ணா, அண்ணா உங்களைத்தான் இந்த நாடு நம்பியிருக்கிறது" என்ற வசனத்தின்மூலம் அண்ணா அவர்களை * திரைப்படங்களில் அறிமுகம் செய்வதற்கான வசனத்தை வழங்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இப்படிப்பட்ட எண்ணற்ற வசனங்களை எழுதியதோடு மட்டுமல்ல, தூக்கு மேடை, உதயசூரியன், காகிதப் பூ, மணிமகுடம் போன்ற சமூக சீர்திருத்த நாடகங்களையும் இந்த நாட்டிற்கு வழங்கியிருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா, இந்த ஆண்டு வருகிறது. என்னைப் பொறுத்தவரையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரில் 'வித்தகர் விருது' என்ற விருது, இன்று திரைப்படத் துறையினருக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட, வருகின்ற காலங்களில், வாழ்நாள் சாதனையாளர்களாக இருக்கக்கூடிய கலைஞர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அது, திரைப்படக் கலைஞர்களுக்கு மட்டுமல்ல; சின்னத் திரைக் கலைஞர்கள், குறும்படக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள் என்று அனைத்து கலைகளிலும், வாழ்நாள் சாதனையாளர்கள் யார் என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விருது என்ற விருதினை அறிமுகம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களின் நினைவாக, கலைத் துறையில்*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது*

'வித்தகர் விருது' வழங்கப்பட்டது. அந்த விருதினைப் பெற்றவர், திரு. ஆரூர்தாஸ் அவர்கள். திரு. ஆரூர்தாஸ் அவர்கள் கிட்டத்தட்ட 1,000 திரைப்படங்களுக்கும் மேலாக பல்வகைகளிலும் கதை வசனங்களைத் தீட்டியவர். அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளாகிய 3-6-2022 அன்று அவருடைய இல்லத்திற்கே நேரடியாக வருகைபுரிந்து, துறையின் சார்பாக அந்த விருதினை வழங்கினார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டும் கலைத் துறை 'வித்தகர் விருது' வழங்கப்படும். மேலும், ஒவ்வோராண்டும் இதுபோன்று தொடர்ந்து வழங்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 8 முதல் 11 வரை) @

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

முல்லை பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு லண்டனில் நிறுவப்பட்டுள்ள சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) ஒரு* second. *உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், 10-45 மணிக்கு என்னிடம் வந்து,* Zero hour*-ல் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து* raise *செய்யப்போவதாக என்னிடம் கூறினார்கள். அதிலும் எந்தப் பொருள் குறித்து என்பதைக்கூட என்னிடம் சொல்லவில்லை.*

@ *257 முதல் 606 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 17] [பேரவைத் தலைவர்]

ஏதோ மலையிலிருந்து இறங்கிவந்தோம். வரும் வழியில் தேனி மாவட்டத்தைப் பற்றி ஒரு பொருள் என்று மட்டும் கூறினார்கள். தயவுசெய்து நீங்கள் காலை 10-00 மணியளவில்தான் 9-50 மணிக்கு மேலாகத்தான் யார் பேசப் போகிறார்கள் என்ற பட்டியலை என்னிடம் கொடுத்தீர்கள். அப்போது நீங்கள் சொல்லியிருந்தாலும்கூட வசதியாக இருந்திருக்கும். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், அதுதான் மரபு. நான் தவறுதலாக சொல்லவில்லை, Zero hour*-ல் கேட்கக் கூடாது என்றோ, எழுந்திருக்கக் கூடாது என்றோ நான்சொல்லவில்லை. சொல்வதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதை நீங்கள் முன்கூட்டியே சொன்னால்தான் சரியானதாக இருக்கும். எந்தக் கேள்விக்கும் ஒரு பதில் இருந்தால்தான், அதற்கு பொருத்தமானதாக இருக்குமேயொழிய, வேறல்ல, கேள்வி மட்டும் இருந்தால், அது சரியானதாக இருக்குமா என்று உங்களுக்கே தெரியும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நீண்ட அனுபவம் உள்ளவர்கள்தான். இனிவரும்காலங்களில் அதைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஐந்து மாவட்டங்களுடைய மக்களின் தாகத்தைத் தீர்த்து, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியது முல்லைப் பெரியாறு அணை. தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்களின் வறட்சியைப் போக்கி, சுமார் 2,50,000 ஏக்கர் பாசன வசதி ஏற்படுத்தி, 10 மாவட்டங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்தது, முல்லைப் பெரியாறு அணை.* Colonel John Pennycuick *என்பவர், அந்த அணையை தன்னுடைய சொந்த செலவில் தன்னுடைய சொத்துகளையும், தன்னுடைய மனைவியின் நகைகளையும் விற்று, கடும் போராட்டத்திற்கிடையில் கட்டி முடித்தார்.*

தென்மாவட்ட மக்களின் மனதினில் நீங்காத இடம் பெற்ற Colonel John Pennycuick*-க்கு பெருமை சேர்க்கும் விதமாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அரசின் சார்பாக அவருக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டது. இந்த அரசு* Colonel John Pennycuick

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 ஏப்ரல் 17

அவர்களுக்கு London மாநகரில் மார்பளவு சிலை திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் அந்தச் சிலையைத் திறந்து வைத்தார்கள். தற்போது Colonel John Pennycuick அவர்களின் சிலை கருப்புத் துணியால் மூடப்பட்டிருப்பதாகவும் சிலை சேதமடைந்திருப்பதாகவும், தென் தமிழக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்த Colonel John Pennycuick அவர்களுடைய சிலை அவமானப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11–30

இந்நிலையில், சிலை அமைப்பதற்கான ஒருங்கிணைப்பாளர் திரு. பீரொலி என்பவர் தனது பேட்டியில், "தமிழ்நாடு அரசாங்கம் எங்களையும், கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களது குடும்பத்தினரையும் தொடர்புகொண்டு, லண்டன் மாநகரில் உள்ள Camberley Park-ல் மார்பளவு சிலை வைக்க வேண்டுமென்றும், ஒரு சிறப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்காக அட்லான்ஸ் என்ற நிறுவனத்திடம் தமிழக அரசு தொடர்புகொண்டு, ரூ.26 இலட்சம் வழங்கியதாகவும், மொத்தம் 92 இலட்சம் ரூபாய் செலவானதாகவும், இதில் 20 இலட்சம் ரூபாய் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களது குடும்பத்தினர் வழங்கியதாகவும், மீதமுள்ள ரூ.46 இலட்சம் தொகையினை அட்லான்ஸ் நிறுவனத்திற்குக் கொடுக்காத காரணத்தினால், அந்நிறுவனம் கொடுத்த புகாரின்பேரில், லண்டன் மாநகர கவுன்சிலில் உள்ள சிலை அகற்றப்படும் என்றும், தற்போது கறுப்புத் துணியால் மூடி சீல் வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்." உண்மை நிலை என்னவென்று தெரிவிக்க வேண்டுமென்றும், மூடிய சிலையினை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், சிலை சேதமடைந்திருந்தால் அதனை உடனடியாகச் சரிசெய்ய வேண்டுமென்றும், தொடர்ந்து சிலை பராமரிப்பிற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்றும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன செய்தி பற்றி அரசு விவரங்களை அறிந்து—ஏனென்றால் திடீரென்று பேசியிருக்கிறார்கள்—விவரங்களை அறிந்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, இந்த சபைக்கு அறிவிக்க வேண்டியதை முறையாக அறிவிக்கும்.*

3. கவன ஈர்ப்பு

(அ) போளூர் இரயில்வே மேம்பாலப் பணிகளை துரிதப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூரில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை துரிதப்படுத்துதல்' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

போளூர் சட்டமன்றத் தொகுதியில் கடலூர்–சித்தூர் சாலையில் கி.மீ. 141/4–ல் இரயில்வே கி.மீ. 99/100–200–ல் உள்ள

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 17

கடவு எண் 80–க்குப் பதிலாக போளூர்–ஆரணி இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது, இரயில்வே திட்டப் பணிகள் 2014–2015–ல் பணப் பகிர்மான அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டன. நிலஎடுப்புப் பயன்பாட்டு சாதனங்கள் மாற்றியமைத்தல் மற்றும் ஆய்வுப் பணி நாள் 29–10–2013–ல் ரூ.523.44 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டுமானப் பணிக்காக 20–3–2018–ல் ரூ.27.87 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, 75% பணிகள் முடிவுற்றுள்ளன. தற்போது, வேலூர் பக்கம் அணுகு சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலஎடுப்புப் பணியில் திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான பிரேரணை ரூ.7.585 கோடி மதிப்பீட்டில் அங்கீகாரம் பெறும்பொருட்டு, பரிசீலனையில் உள்ளது. நிலஎடுப்புப் பணிகள் இறுதிக் கட்ட நிலையில் உள்ளதால், இரயில்வே பகுதிக்கு ஒப்பந்தம் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரயில்வே பகுதியில் கட்டுமானப் பணி மற்றும் நெடுஞ்சாலைப் பணிகளை டிசம்பர் 2023–க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, சட்டமன்றத்தினுடைய சந்நிதானத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் (மேசையைத் தட்டும் ஒலி) பிரதான எதிர்க்கட்சித் தலைவராக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒற்றைத் தலைமையாக, நிரந்தரப் பொதுச் செயலாளராக, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனமெல்லாம் மகுடம் தரித்திருக்கிற ஏழைகளின் இருதய மூர்த்தியாக, கம்பீரத்தின் அடையாளமாக (மணியடிக்கப்பெற்றது) அமர்ந்திருக்கிற எங்களின் மாட்சிமை மிகுந்த முன்னாள் முதலமைச்சர், எங்கள் நெஞ்சமெல்லாம்

நிறைந்திருக்கின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்க, 2018 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் அரசாணை வெளியிடப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, tender விடப்பட்டு, பணிகள் நடைபெற்றன. மாநில நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பாலப் பணிகள் அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்திலேயே 80 சதவிகிதம் முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால், இரயில்வே பகுதியில் கட்டுமானப் பணிகள் இன்னும் துவக்கப்படவில்லை. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதே கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்துப் பேசிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 6 மாத காலத்திற்குள்ளாக, நிலஎடுப்புப் பணிகள் முடிவுற்று, பாலம் முழுமையாகக் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்தார். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதே அரசின் சார்பில் நிலஎடுப்புப் பணிகளுக்காக 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி இருக்கிறது. முடியுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: நிலஎடுப்புப் பணிகளுக்காக வருவாய்த் துறை 7.58 கோடி ரூபாய் வேண்டுமென கோரியுள்ள நிலையில், மாநில அரசு கடந்த மாதம் 4.1 கோடி ரூபாய் மட்டுமே வருவாய்த் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இந்த அரசு மீதியுள்ள தொகையான ரூ.3.46 கோடியை வருவாய்த் துறைக்கு உடனடியாக ஒதுக்கீடு செய்து தந்தால்தான், நிலஎடுப்புப் பணிகள் முழுமையாக நிறைவு பெற்று, இந்தப் பணி துரிதமாக முடியும். போளூர் நகர மக்கள் இந்த இரயில்வே மேம்பாலப் பணியினால் 4 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வருகின்ற சூழ்நிலையில் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, திருத்திய நிர்வாக அனுமதியை Revised Administrative Sanction (RAS) உடனடியாக இந்த அரசு வழங்கி, இவர்களின் சிரமங்களை, துயரங்களை நீக்கும் வகையில், போளூர் இரயில்வே மேம்பாலப் பணிகளைத் துரிதமாக முடித்துத் தர வேண்டுமென்று அரசை வலியுறுத்தி அமர்கிறேன்.

[2023 ஏப்ரல் 17

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், கடலூர்–சித்தூர் சாலையிலுள்ள கடவு எண் 80–க்கு பதிலாகப் போளூர்–ஆரணி இடையே இருக்கிற இரயில்வே பாலம் குறித்துத்தான் இங்கே அரசின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். நிலஎடுப்புப் பயன்பாட்டு சாதனங்கள் மற்றும் மாற்றியமைத்தல் போன்ற பணிகளுக்காக 2013–ல் 5.23 கோடி ரூபாய் அப்போது நிதி ஒதுக்கப்பட்டது. பாலம் கட்டும் பணிகளுக்காக அப்போது அவர் குறிப்பிட்டதைப்போல, மார்ச் 2018–ல் 27.87 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. பொதுவாக நிலஎடுப்புப் பணிகள் முழுமையாக முடிவுற்ற பின்னர் பாலப் பணிகளுக்கு டெண்டர் விடப்படுமேயானால், அப்பணிகளை விரைந்து முடிக்க இயலும். ஒரேநேரத்தில் அது ஒப்படைக்கப்படும். ஆனால், நிலஎடுப்புப் பணிக்கென்று பணத்தை ஒதுக்கிவிட்டு, உடனே டெண்டர் விடப்பட்டு, நிலம் எடுக்காத காரணத்தினால்தான் இந்த தாமதம் ஏற்படுகிறது. நான், நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இதனை ஆய்வு செய்தபோது, தமிழ்நாட்டில் பல இடங்களில் நிலஎடுப்புப் பணிகள் 20 சதவீதம், 30 சதவீதம் என்ற அளவில் இருக்கும்போதே, டெண்டர் விடப்பட்ட காரணத்தினால்தான், காலதாமதம் ஏற்படுகின்றது என்பதை அறிந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* review *செய்ததன் அடிப்படையில், இனிமேல் சாலைகள் அமைப்பதாக இருந்தாலும், பாலங்கள் கட்டுவதாக இருந்தாலும், 90 சதவிகிதம் நிலஎடுப்புப் பணிகள் முடிவடைந்த பின்புதான், நீங்கள் டெண்டர் விடவேண்டுமென்று துறைக்கு அறிவுறுத்தியுள்ளார். அதன் அடிப்படையில், இப்போது, 90 சதவிகித நிலஎடுப்புப் பணிகள் நிறைவடைந்திருந்தால் மட்டுமே பாலப் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில், ஒரு பக்கம் நிலஎடுப்புப் பணிகளை அறிவித்து விட்டு, இன்னொரு பக்கம் 2018–ல் டெண்டர் விடப்பட்டதன் காரணமாக, இப்பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஏனென்றால், மாநில

2023 ஏப்ரல் 17] [திரு. எ.வ. வேலு]

நெடுஞ்சாலைகளைப் பொறுத்த அளவிற்கு இரண்டு பக்கங்களிலும் அணுகு சாலைகள் போடப்பட்டு விட்டன. மையப் பகுதியிலிருக்கிற இரயில்வே பாலங்கள் போடுவதற்கு, இரயில்வே துறைக்கு தொடர்ந்து கடிதங்கள் எழுதியதன் அடிப்படையில், அவர்களும் பாலம் அமைக்க முன்வந்தார்கள். பணியினை துவங்கும்போது, நிலஎடுப்புப் பணிகளில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக, நீதிமன்றம் வரை செல்லும் சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும், இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே, அவர்களிடம் பேசியதன் அடிப்படையில்தான்-- 75 சதவிகிதப் பணிகள் ஏற்கெனவே முடிந்துவிட்டன என்று சென்றமுறை சொன்னேன். சென்றமுறை சொன்னேனேயொழிய, நிலஎடுப்புப் பணிகளில் நீதிமன்றம் செல்லும் அளவுக்கு பிரச்சினை ஏற்பட்டுவிட்டது.

அதோடு மட்டுமல்ல, சென்ற அரசாங்கம், 2013-ல் 5.23 கோடி ரூபாய்தான் நிலஎடுப்புப் பணிகளுக்காக ஒதுக்கியது. மீண்டும், அதற்குக் கூடுதலாகப் பணம் வேண்டுமென்று வருவாய்த் துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க, RAS போடப்பட்டு, அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. குறிப்பாக, இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், இதுதொடர்பாக, இரயில்வே துறைக்கு தொடர்ந்து நாங்கள் கடிதம் எழுதியதன் அடிப்படையில், அவர்களும் பணியைத் துவக்குவதற்காக இந்த மாத இறுதிக்குள் டெண்டர் விடுவதாக எங்களுக்குப் பதிலளித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், நிலப் பிரச்சினையும் ஓரளவுக்கு சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டது. ஆக, டெண்டர் விடப்பட்டு இரயில்வே பாலம் அமைந்தவுடனேயே, டிசம்பர் 2023-க்குள் இந்த முழு பாலப் பணிகளும் முடிக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் 2018-ல் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட்டு, 2022-ல் உங்கள் ஆட்சியில் திறக்கப்பட்டது. மேம்பாலத்தின்கீழே உள்ள railway gate நிரந்தரமாக மூடப்பட்டுள்ள காரணத்தினால், மேம்பாலம் அருகிலுள்ள சர்வீஸ் சாலைகளை இணைக்க railway gate அருகில் பொதுமக்கள் செல்வதற்கு வசதியாக, சுரங்கப்பாதை அமைக்க

[திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2023 ஏப்ரல் 17

ஏற்கெனவே நிதியொதுக்கீடு செய்யப்பட்டும், பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. எனவே, திருவண்ணாமலை railway gate அருகில் சுரங்கப் பாதை அமைக்கும் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டும். அதேபோல், போளூர் இரயில்வே கேட் அருகில் service roads-ஐ இணைக்க ஒரு சுரங்கப் பாதை அமைக்கவும், திருவண்ணாமலை–வேலூர் சாலையை 4 வழிச் சாலையாக அமைக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டியும், திருவண்ணாமலை–வேலூர் சாலையில் போளூர் தொகுதியில் வருகின்ற எட்டிவாடி இரயில்வே மேம்பாலம் கட்ட டெண்டர் விடப்பட்டும் இன்னும் பணிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 4 paper வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். என்றைக்கு முடியும்? (குறுக்கீடு) கேள்வியை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) கேள்வி எல்லாமே இதில் வந்ததுதானே! (குறுக்கீடு) Agenda-ல் இருப்பது எல்லா விஷயங்களும் தெரியும். (குறுக்கீடு) பதில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை. எல்லாம் அவருக்குத் தெரியும். நீங்கள் கேட்டதையெல்லாம் உள்வாங்கிக் கொண்டார்கள், முடியுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: எட்டிவாடி இரயில்வே மேம்பாலம் கட்ட டெண்டர் விடப்பட்டும் இன்னும் பணிகள் துவங்கப்படவில்லை என்பதால், உடனடியாகப் பணிகளைத் தொடங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என வலியுறுத்தியும், (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிஷம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், முழுவதுமே தெரியும். (குறுக்கீடு) உங்கள் மாவட்டத்து அமைச்சர், எல்லாமே அவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற அடிப்படையில் 3 கேள்விகளை அவர் தொடர்ந்து தொடுத்திருக்கிறார். ஒன்று. திருவண்ணாமலை நகரப் பகுதியில் இருக்கிற இரயில்வே பாலம் கட்டுவது முடிவுபெற்று,

2023 ஏப்ரல் 17] [திரு. எ.வ. வேலு]

அது மக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கு சுரங்கப் பாதை அமைக்கப்படுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். சுரங்கப் பாதை அமைக்க வேண்டிய அவசியம் எழாது. காரணம், அதனை ஒட்டி-- நமது தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆட்சியில், திருவண்ணாமலைக்கு புதிதாக பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்து, அதற்கான நிதியெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலும், இரயில்வே கேட் பக்கத்திலேயே ஒரு பெரிய பேருந்து நிலையம் வர இருக்கிற காரணத்தினாலும், அங்கு சுரங்கப் பாதை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

எட்டிவாடியில் பாலம் அமைப்பதற்கு tender எல்லாம் விடப்பட்டுவிட்டது. ஆனால், இன்னும் ஏன் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று அவர் கேட்கிறார். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நிலங்களை கையகப்படுத்தாதபோது, tender விட்டால், இதுதான் நிலைமை. ஆனால், அதில் என்ன சிக்கல் என்று சொன்னால், எட்டிவாடியில் பாலம் அமைப்பதற்கு பக்கத்திலே வன இலாகாவினுடைய இடங்கள் எல்லாம் இருக்கின்றன. வன இலாகாவினுடைய இடங்களையெல்லாம் மாநில அரசாங்கம் கையகப்படுத்தாமல், tender விட்டால் இதுதான் நிலைமை. ஆனால், இதனை அறிந்து வன இலாகாவிலிருந்து இடங்களைப் பெறுவதற்காக தொடர்ந்து துறையின் சார்பாக நாங்கள் தொடர்பு கொண்டிருக்கிறோம். அவை எல்லாம் முடிந்த பிறகு, எட்டிவாடி பாலம் கட்டுவதற்கு கட்டாயம் இந்த அரசாங்கம் முயற்சி செய்யும்.

(ஆ) கோயில் நிலங்களில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குதல் மற்றும் கொரோனா காலத்தில் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையை இரத்து செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.பி. நாகைமாலி மற்றும் திரு. மா. சின்னதுரை ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

[2023 ஏப்ரல் 17

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கோயில் நிலங்களில் பல தலைமுறைகளாக வசித்து வருபவர்களுக்குப் பட்டா வழங்குதல், கொரோனா காலத்தில் செலுத்த வேண்டிய வாடகை, வணிக வாடகை, குத்தகை, விவசாயிகளின் குத்தகைத் தொகையினை இரத்து செய்தல் மற்றும் அரசாணை எண் 318–ஐ அமல்படுத்துதல்” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேஜையின் மேலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அற நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துகள் கீழ்க்கண்ட வகையில் அற நிறுவனங்களின் சொத்துகளாக அமையப் பெற்றுள்ளன:

i) முற்காலத்தில் மன்னர்களால் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் பல்வேறு காரியங்களை நிறைவேற்றுவதற்காக இனாமாகவும் மற்றும் வரிச்சலுகையுடனும் அளிக்கப்பட்டன;

ii) பிறகு செல்வந்தர்களாலும், ஆன்மிக அன்பர்களாலும் நிலங்கள் தானமாகவும் அளிக்கப்பட்டன;

iii) திருக்கோயில் அவசிய தேவைக்காக திருக்கோயில் நிர்வாகத்தால் கிரையம்மூலம் வாங்கப்பட்ட நிலங்கள்;

iv) திருக்கோயில் விழாக்காலங்களின்போது நிறைவேற்றப்பட வேண்டிய கட்டளை மற்றும் கைங்கரியங்களுக்காக எழுதி வைக்கப்பட்ட நிலங்கள்.

இவ்வாறு இனாமாகவும்/தானமாகவும் அளிக்கப்பட்ட நிலங்கள் திருக்கோயில்களில் பூஜைகள் தவறாது நடைபெறவும்,

திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறவும், இறைவன், இறைவிக்கு மலர்கள் மற்றும் மலர் மாலைகள் அணிவித்திட நந்தவனம் ஏற்படுத்திடவும், திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவளிக்கவும், தண்ணீர் பந்தல் அமைக்கவும் என பல்வேறு அறகாரியங்களுக்காக வழங்கப்பட்டன. அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது, திருக்கோயில் நிர்வாகத்தின் கடமையாகும். இதனைக் கண்காணிக்க வேண்டியது, இந்து சமய அறநிலையத் துறையின் தலையாய கடமையாகும்.

திருக்கோயிலில் உறைகின்ற இறைவன்/இறைவியின் பெயரில் நிலங்கள் முன்னோர்களால் எழுதி வைக்கப்பட்டுள்ளன. திருக்கோயிலில் உறையும் இறைவன்/இறைவி, சட்டத்தின் பார்வையில் முதிரா வயதினராக (மைனர்–Minor) கருதப்படுகிறார்கள். எனவே, திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், அக்கோயிலில் உறையும் இறைவன்/ இறைவிக்குச் சொந்தமான மைனரின் சொத்துகள் (Minor's property) ஆகும்.

மேலும், இனாமாக அளிக்கப்பட்ட நிலங்கள் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ, அதனை நிறைவேற்றும் நோக்கோடு செயல்படுவதைத் தவிர, பிற வகையில் இலவசமாக வழங்கிட இயலாது.

இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, சட்டப் பிரிவு 34 மற்றும் 41–ல் இயற்றப்பட்ட விதிகளின்கீழ், அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துகளை விற்பனை, பரிவர்த்தனை, குத்தகைக்கு விடுவது போன்றவை குறித்து வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி, அறநிறுவனங்களின் தேவை மற்றும் ஆதாயத்தின் அடிப்படையில் மட்டுமே அரசின் அனுமதி பெற்ற பின்னர், விற்பனை, பரிவர்த்தனை, குத்தகைக்கு விடுதல் போன்ற நிகழ்வுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தற்போது தனிப்பட்டவர்களுக்கோ, தனிப்பட்ட நிறுவனங்களுக்கோ திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்கள் விற்பனை செய்யப்படுவதில்லை. மேலும், பொது நலன் கருதி அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்களுக்கு மட்டுமே திருக்கோயில்கள்/அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

[திரு. பி.கே. சேகர்பாபு] [2023 ஏப்ரல் 17

கோயில் நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்கள் அதில் குடியிருக்கும் ஏழை குடும்பங்களின் நலன் கருதி, விதிமுறைகளுக்குட்பட்டு, தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த, அந்த நிலங்களை உரிய வகையில் கையகப்படுத்தி வழங்கிட அரசாணை (நிலை) எண் 318, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில முடிவு அலகு, நிமு-I(2) பிரிவு, நாள் 30-8-2019-ல் பத்தி 4(V)-ல் உத்தரவிடப்பட்டது.

மேற்கண்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அரசாணையினை எதிர்த்து மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப் பேராணை மனுக்கள் W.P.No. 27728, 32387 மற்றும் 32053/2019 வழக்கில் 22-11-2019 அன்று கீழ்க்கண்டவாறு மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தால் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது:

"Interim stay of Para 4(V) G.O.(Ms.) No. 318 dated 30-8-2019, issued by the Revenue and Disaster Management Department, in so far as temple lands are concerned, until further orders."

மேற்கண்ட நீதிப்பேராணை மனுக்கள் தொடர்பான வழக்கு விசாரணை மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

மேலும், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தால் தாமாக முன்வந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நீதிப்பேராணை 574/2015 வழக்கில் 7-6-2021 அன்று கீழ்க்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது:

"The State Government or the Commissioner of the HR & CE department, who are the Trustee/administrator of the temple lands, shall not alienate or give away the lands contrary to the wish of the donor. The lands shall always remain with the temples. The public purpose theory shall not be invoked in cases of temple lands over which the interest of the community people of the religious denomination generally rests."

இச்சூழ்நிலையில் திருக்கோயில் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான நிலங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருந்து வருபவர்களுக்கு அந்த இடத்தை சொந்தமாக்கிடவோ அல்லது விற்பனை செய்திடவோ பரிசீலித்திட கோருவது, 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் மற்றும் அதன்

2023 ஏப்ரல் 17] [திரு. பி.கே. சேகர்பாபு]

விதிமுறைகளுக்கு முரணான செயலாகிவிடும். திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இந்து சமய சார்புடையது. எனவே, இந்து சமயத்தைச் சேர்ந்த திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான நிலங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களுக்கு அதனை அவர்களுக்கே சொந்தமாக வழங்கவோ அல்லது விற்பனை செய்திடவோ சட்ட விதிமுறைகளின்படி இயலாது.

மேலும், மேற்கண்டவாறு இந்து சமய திருக்கோயில்களில், பூஜைகள், விழாக்கள் நடத்திட பல்வேறு சமய மற்றும் திருக்கோயில் சார்ந்த அறநிறுவனங்களுக்கு தானமாக அளிக்கப்பட்ட நிலங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களை அந்தந்த திருக்கோயில் வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்திக்கொள்ள பரிசீலிக்கலாமே தவிர, திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக்குவது என்பது இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்ட விதிமுறைகளுக்கும் மற்றும் திருக்கோயில் நலனுக்கும் புறம்பாக அமையும்.

மேலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருப்போர், வணிகக் கடை வாடகை, குத்தகை விவசாயிகளின் குத்தகைத் தொகை, வாடகை ஆகியவற்றை சட்ட விதிகளின்படி, நிர்ணயம் செய்வது, அந்தந்தத் திருக்கோயில் செயல் அலுவலர் அல்லது அறங்காவலர் குழு அல்லது தக்கார் ஆகியோர்களது நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கொரோனா காலத்தில் அறநிறுவனங்களுக்கு குத்தகைதாரர்கள்/வாடகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகை/வாடகைத் தொகையினை ஒட்டுமொத்தமாக, இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையரால் (Blanket Exemption) இரத்து செய்திட சட்டத்தில் வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் உன்னிப்பாக, கவனமாகப் படித்துப் பார்த்தேன். இருப்பினும், என்னுடைய கருத்துகளை, பதிவு செய்ய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடிக்கணக்கான மதிப்புள்ள கோயில் சொத்துகள் வைத்திருப்பவர்களிடமிருந்து, அந்தச் சொத்துகளை இந்து சமய அறநிலையத் துறை கையில் எடுக்க வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், பல தலைமுறைகளாக 400 சதுர அடி, 600 சதுர அடி, 1,000 சதுர அடி மனைகளில் குடியிருப்போரை அந்த மனைகளிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்வது சரியல்ல என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, இப்படி குடியிருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் மனைக்குப் பட்டா வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சி, இதைச் செய்யும் என்று மக்கள் நம்பிக் கொண்டும், எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஆகவே, இவர்களுடைய நம்பிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டுகிறேன். காலங்காலமாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி, இன்னொரு கேள்வியில் நீங்கள் விளக்கமாக கேட்கலாம். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் வரவில்லையென்றால், உங்களுக்கு இன்னொரு வாய்ப்பை நான் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்,* please. *(குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சொல்லிவிடுங்கள். அப்போது நீங்கள், இந்த ஒரு கேள்வியோடு நிறுத்திவிடுங்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி நிறுத்துவது? இன்னும் இரண்டு, மூன்று* points *உள்ளன. அதை நான் சொல்ல வேண்டுமல்லவா? நான் அதிகமாகப் பேச மாட்டேன். காலங்காலமாக 5, 6 தலைமுறைகளாக கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களை, "ஆக்கிரமிப்பாளர்கள்" என்று அரசு அழைப்பது சரியல்ல.*

2023 ஏப்ரல் 17] [திரு. வி.பி. நாகைமாலி]

அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். குடியிருப்பை உறுதி செய்திடல் வேண்டும். கொரோனா காலத்தில், மக்கள் துன்ப, துயரங்களைச் சந்தித்து பெரும் அவதிப்பட்டனர். ஆகவே, கொரோனா காலத்திற்கான வாடகையைச் செலுத்த வேண்டுமென்று அவர்களை நிர்ப்பந்திப்பதை அரசு கைவிட வேண்டுமென வேண்டுகிறேன்.

வட சென்னையின் வளர்ச்சித் திட்டத்திற்கு ரூபாய் ஆயிரம் கோடி நிதியை ஒதுக்கியிருந்த இந்த அரசு, இதையும் செய்ய வேண்டுமென சென்னை மக்கள் மிகவும் எதிர்பார்க்கிறார்கள். இது மக்களின் பாராட்டை மிகவும் பெறும் என்பதை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–45

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆக்கிரமிப்பு நிலங்களை அகற்றுகின்றபோது, துறை சார்ந்த அதிகாரிகளையும், துறையினுடைய அமைச்சர் என்கிற வகையில் என்னையும் அழைத்து ஆய்வு செய்தார். அந்த ஆய்வில், ஆக்கிரமிப்பாளர்கள் என்ற பெயரில் அகற்றுகின்றபோது, வறுமைக் கோட்டிற்குக்கீழே வசிப்பவர்களை தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக குடியிருக்கின்ற குடியிருப்புகளை விட்டு எந்தக் காரணம் கொண்டும் அகற்றக் கூடாது என்று உத்தரவிட்ட ஏழைப் பங்காளன் எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் அப்படி கூட்டாக, குழுவாக திருக்கோயில் இடங்களில் குடியேறியவர்களில் ஒருவரைக்கூட அப்புறப்படுத்தவில்லை. அதற்கு மாறாக, முறையாக அவர்களை அழைத்துப் பேசி, அந்தக் கோயில் இடங்களில் குடியிருப்பவர்கள் வாடகைதாரர்களாக வருகின்றபட்சத்தில், அவர்களை வாடகைதாரர்களாக ஏற்றுக்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அரசாணை எண் 318–ஐ அமல்படுத்த வேண்டுமென்று

[திரு. பி.கே. சேகர்பாபு] [2023 ஏப்ரல் 17

கேட்டார்கள். அரசாணை எண் 318–ஐப் பொறுத்தவரையில், 2019 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியில் பிறப்பிக்கப்பட்டது. உடனடியாக அந்த அரசாணைமீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. திருக்கோயில் இடங்களில் குடியிருப்பவர்களுக்கு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அந்த நிலங்களை நம்முடைய வாடகைதாரர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்ட அரசாணைதான் இது. உடனடியாக இதுகுறித்து நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டவுடன், 2 நீதிபதிகள் அடங்கிய Division Bench அதற்குத் தடையாணை பிறப்பித்திருக்கிறது. அந்த வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வழக்கின் இறுதித் தீர்ப்பு வந்தவுடன், தீர்ப்பின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை இந்த அரசு முறையாக எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். சுருக்கமாக, ஒரே ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தமிழ்நாடு முழுவதும் கோயில் இடங்களில் பல தலைமுறைகளாக, நீண்ட காலமாகக் குடியிருப்பவர்கள் மற்றும் விவசாய நிலங்களில் குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் சிறு கடை வைத்திருப்போருக்கு நியாயமான வாடகை மற்றும் குத்தகை நிர்ணயிக்கிறோம் என்ற பெயரில் பல மடங்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது. பயனாளிகள் கட்ட முடியாத அளவிற்கு 10 மடங்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது. பயனாளிகளின் சார்பில் அரசுக்கு பல கட்டங்களில் வாடகையைக் குறைக்க வலியுறுத்தி தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர். உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். விரைவில் முடித்துவிடுகிறேன்.

2016–ல் 2,095 சதுர அடிக்கு ரூ.4,500/– ஆக இருந்த வாடகை, தற்போது ரூ.43,875/– என்ற அளவில் உயர்த்தப்பட்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 17] [திரு. வி.பி. நாகைமாலி]

அதேபோல, 246 சதுர அடிக்கு ரூ.792/- என்ற அளவில் இருந்த வாடகைக்கு, தற்போது ரூ.7,920/-ஐ கட்டச் சொல்லி இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை notice *கொடுத்துள்ளது என்பதையும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுமட்டுமல்லாமல், அந்த வாடகையை 2016 ஆம் ஆண்டிலிருந்தே முன்தேதியிட்டுக் கட்ட வேண்டும் என்று நிர்பந்தம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 என்ற புத்தகத்தை நான் படித்துப் பார்த்தேன். அந்தப் புத்தகத்தில்,* 'prevailing market rental value'*-வின் அடிப்படையில்தான் கட்டணம் நிர்ணயிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை,* guideline value *என்கிற முறையில், கட்டணம் நிர்ணயிக்கிறது. அதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணம் என்பது ஏற்கெனவே 2011 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மனைப் பிரிவுகளாக இருந்தால், அந்த மனைப் பிரிவுகளுக்குண்டான அந்தப் பகுதியில் இருக்கின்ற* Market value*-ன்படி 0.1% வாடகையாக நிர்ணயிக்கப்பட்டது. அதே, வணிகப் பிரிவாக இருந்தால், அந்த இடத்தில் இருக்கின்ற மனைப் பிரிவுகளுக்கு 0.3% என்று அந்த* Market value*-ல் இருக்கின்ற மதிப்பை வைத்து வாடகை நிர்ணயிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்த்த வேண்டுமென்று* Fair Rent Committee *அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக 3 ஆண்டுகள், 3 ஆண்டுகள் என்று போகும்போது கிட்டத்தட்ட 4 தவணைகள் வந்துவிட்டன. தொடர்ந்து வாடகை கட்டாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு பல்வேறு வகைகளில் இருக்கின்ற செலவினங்களை ஈடு செய்வதற்கு அவர்களிடமிருந்து வாடகையை வசூலிக்க வேண்டுமென்ற நிலை வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வணிக நிறுவனங்களாக இந்து சமயம் மற்றும் அறநிலையத்*

[திரு. பி.கே. சேகர்பாபு] [2023 ஏப்ரல் 17

துறையின் கட்டடங்கள் மற்றும் நிலங்களைப் பயன்படுத்தி, அதிக அளவு பொருளாதார ரீதியாக வருமானம் பார்த்துக்கொண்டு, திருக்கோயிலுக்கு முறையாகச் செலுத்த வேண்டிய வாடகையை செலுத்தாதவர்களிடம் அழுத்தம் கொடுத்து அவர்களிடமிருந்து வாடகை வசூலிக்கப்படுகிறது.

முற்பகல் 11–50

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் நாகைமாலி அவர்கள் சொன்னதுபோல, குடியிருப்பில் இருப்பவர்களிடம் எந்தவிதமான பாரபட்சமோ, வாடகை வசூல் செய்ய வேண்டுமென்ற நோக்கமோ இல்லை. அவர்கள் செலுத்தவேண்டிய வாடகைக் கட்டணத்தைத் தெரிவித்து, அதைத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறோம். மீண்டும், மீண்டும் சொல்கிறேன், வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருப்பவர்கள், தங்களால் அதிகளவில் வாடகை கொடுத்து தனியார் இடங்களில் குடியிருக்க முடியாதவர்களுக்கு பாதுகாப்பான அரணாக இருக்கவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்களை வலியுறுத்தியதன்படி, இந்து சமய அறநிலையத் துறை செயல்படுகிறது என்பதைச் சொல்லி, இவற்றையெல்லாம் சீர்படுத்துவதற்கு ஒரு Fair Rent Committee-ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் உருவாக்கியிருக்கின்றார். அந்த Committee பல்வேறு வகைகளில் கிட்டத்தட்ட 8 மாத காலமாக, முழுவதுமாக ஆய்வு செய்துகொண்டிருக்கின்றது. வெகுவிரைவில் Fair Rent Committee முடிவின்படி இந்த வாடகை, ஏற்ற இறக்க பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

2023 ஏப்ரல் 17]

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 6 முதல் 13 வரையிலான 8 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 83 முதல் 105 வரையிலான 23 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 40 முதல் 67 வரையிலான 28 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 7–வது அறிக்கையை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

[2023 ஏப்ரல் 17

(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 34 முதல் 43 வரையிலான 10 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

5. அறிவிப்பு

இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்) (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். வரவேற்று அமர்கிறீர்களா?

திரு. வி.பி. நாகைமாலி: *இல்லை. அந்தக் கட்டணங்களெல்லாம் அதிகமாக இருக்கிறது. 20 ரூபாய் என்பது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்ப்பது என்றால், அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன், ஆதரிக்கிறேன் அல்லது விவரம் கேட்கிறேன், இந்த 3-தான்.*

திரு. வி.பி. நாகைமாலி: *இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 52 — மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 45 — சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

—

(அ) கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 350, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1768, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3412, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி. இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4040, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4887, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 6806, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 383, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

2023 ஏப்ரல் 17]

முற்பகல் 11–55

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2589, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2950, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6458, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7066, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 664, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 912, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1385, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2401, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2676, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3285, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3331, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3377, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3560, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3679, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4247, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4586, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6010, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7409, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2357, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3235, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3465, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5426, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 980, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1058, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கால் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1585, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன்.

திரு. A.P. ஜெயசங்கரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு அரசின் நலத் திட்டங்கள் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1782, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1834, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை மாதம் ரூ.2,000/– ஆக உயர்த்தி, காலதாமதமின்றி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3742, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3806, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி நாகைமாலி.

திரு. வி.பி நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை மாதம் ரூ.3,000/– ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3954, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பிற்கான தகுதித் தேர்வுகளில் அவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் சிறப்பு முன்னுரிமை அளித்து நியமனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4195, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை, மூன்று சக்கர சைக்கிள் மற்றும் மூன்று சக்கர ஸ்கூட்டர் வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதியின் அளவைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4212, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

2023 ஏப்ரல் 17]

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதிக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா 3 சக்கர வாகனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4942, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதியில் ஒரு கால் இல்லாத மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் (Scooty) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4987, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு கால் இழந்த மாற்றுத் திறனாளிகளுக்கு (Scooty) மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5072, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒற்றை கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5116, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5493, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5538, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளி மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே கல்வி கற்க இணையவழி வகுப்பறை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5854, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகையும், அவர்களின் வாரிசுகளின் படிப்புச் செலவிற்கான உதவித் தொகையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5916, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளின் உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6537, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6604, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் மூன்று சக்கர மோட்டார் வாகனம் 100% மானியத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7152, மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.P. *கந்தசாமி.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர் தொகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகையை அதிகப்படுத்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7458, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாற்றுத் திறனாளிகள் நலத் துறை அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7517, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் செயல்பட்டு வரும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தை, நிருவாக வசதிக்காக பிரித்து, இலுப்பூரை மையமாகக் கொண்டு புதிய மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை,* மாண்புமிகு *சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 173,* மாண்புமிகு *உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.*

2023 ஏப்ரல் 17]

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 343, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1769, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3407, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3516, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4870, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6764, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 382, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2556, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2935, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6422, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் *எண் 7048, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 663, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 911, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1384, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2395, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2614, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2670, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3278, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3325, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3371, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3555, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3673, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4242, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4580, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6007, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7386, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2343, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3228, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3459, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5415, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 978, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதற்குப் புதிய கட்டடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1014, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டுப்பாட்டில் உள்ள கீழ்பாதி, கா.புத்தூர், கம்மாபுரம் காலனி ஆகிய பகுதிகளில் குழந்தைகள் நல மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1255, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.*

2023 ஏப்ரல் 17]

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஆரம்பப் பள்ளிகளிலும் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1293, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விதவை பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தைத் திரும்ப வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1440, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதி, முருங்கை கிராமத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1801, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகளிர் உரிமைத் தொகை வழங்குவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1900, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு நடத்தும் அனைத்து சத்துணவு மையங்களிலும் தரமான உணவு வழங்க அரசு நிதியை கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2039, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பரமேஸ்வரமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவு மையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2126, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன்.

திரு. பொ. அர்ஜூனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் நகரில் பணிபுரியும் பெண்களுக்கு தங்கும் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2733, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டப் பணியினை தனியார்மூலம் செயல்படுத்துவதற்குப் பதிலாக சத்துணவுத் திட்டம் வாயிலாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3482, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு வழங்க இருக்கிற மகளிர் உரிமைத் தொகை

அனைவரது குடும்பங்களுக்கும் கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3735, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.*

திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள மாநகராட்சி, ஊராட்சிப் பகுதியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைமூலம் அங்கன்வாடி கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3799, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் அனைத்து பெண்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்குவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3932, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதி, புதுநகர், சோத்துப்பாளை (புதுக்கோட்டை), வடுகபட்டி, ராங்கியன்விடுதி (கறம்பக்குடி ஒன்றியம்), வெள்ளனூர் (அன்னவாசல் ஒன்றியம்) ஆகிய கிராமங்களுக்கு புதிய அங்கன்வாடி கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4176, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2023-2024 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்டுள்ள மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான தகுதி குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4970, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பஞ்சப்பள்ளி சீர்திருத்தப் பள்ளி வளர்ச்சி குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5028, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமண உதவித் தொகையுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தையும் கொண்டுவருவதோடு, பாதுகாப்பற்ற பெண்களுக்கு தங்கும் விடுதிகள், சேவை இல்லங்கள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5112, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டத்தில் காலிப் பணியிடங்களாக உள்ள அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர், உதவியாளர் போன்ற பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5487, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

2023 ஏப்ரல் 17]

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட வட்டார அலுவலகங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5721, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாழ்வாதாரம் இல்லாத முதியோர்களைக் கண்டறிந்து, வயதுக்கு ஏற்ப தொழில் செய்ய வசதிகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6149, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகள் மற்றும் தாய்மார்களைப் பாதுகாக்க அரசு திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6533, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.*

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “குடும்பத் தலைவிக்கு வழங்கும் உரிமைத் தொகையான ரூ.1,000/–ஐ அனைத்து குடும்பத் தலைவருக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6570, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.*

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியை மையமாகக் கொண்டு, புதிய சிறுவர்கள் சீர்திருத்தப் பள்ளி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6856, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழ்நாடு முழுவதும் காலியாகவுள்ள சத்துணவு மையங்களுக்கு புதிதாக அமைப்பாளர்கள் நியமிக்க வேண்டியதன்

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7452, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் உள்ள அங்கன்வாடிக் கட்டடத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7473, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் தொகுதி, பொத்தனூர் பேரூராட்சியில் புதிய அங்கன்வாடி மையம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு

வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இன்று பேசவிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்கப்படும் நேரத்தைவிட அதிகமாக எடுத்துக்கொள்ளாமல் தயவுசெய்து அதற்குள் முடிக்கவேண்டுமென்று அன்போடுகேட்டுக்கொள்கிறேன். எந்தவொரு உறுப்பினருக்கும் கொடுக்கப்படும் நேரத்திற்குகூடுதலான நேரம் நிச்சயமாக வழங்கப்படாது. முதலில் உரையாற்றவிருக்கின்ற உறுப்பினருக்கு 20 நிமிடங்களும், அதன்பின் உரையாற்றவிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தலா 10 நிமிடங்களும்

@ 607 முதல் 795 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

வழங்கப்படுகின்றன. முதலில், விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தந்த புரட்சித் தலைவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி), தொட்டில் குழந்தைத் திட்டம் தந்த புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய இருபெரும் இமயங்களாக விளங்கிய இதய தெய்வங்களின் புகழைப் போற்றி வணங்குகிறேன். ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களுடைய உயிர் மூச்சு, 8 கோடி தமிழக மக்களுடைய நல்லாட்சி, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பகுதி விவசாயிகளின் பாதுகாவலர், காவேரி காப்பாளர், இன்றைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி), நாளைய தமிழகத்தின் முதலமைச்சர், கழகத்தை காத்த மாவீரன் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.*

முதன்முதலில் 2006 ஆம் ஆண்டில் இதே சட்டமன்றத்தில் நான் சந்தித்தபோது, எப்படி இனிமையாகவும், எளிமையாகவும் எல்லோரிடத்திலும், என்னிடத்திலும் பழகினாரோ, அதேபோல எந்நிலையிலும் தன்னிலை மாறாமல் அதே இனிமையோடும், எளிமையோடும் கழகத் தலைமைக்கு விசுவாசமாக, அரசியல் நிறைகுடமாக விளங்கி வருகின்ற மாண்புமிகு அண்ணன், கழக கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு எனது அன்பான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் எனது வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மிக முக்கியமான பிரச்சினையான நான் அடிக்கடி சட்டமன்றத்திலே குறிப்பிட்டு வருகின்ற, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு நிலஎடுப்பு சம்பந்தமாக என்னுடைய தொகுதி மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். இது ஏதோ நெய்வேலி பிரச்சினை மட்டுமல்ல; கடலூர் மாவட்டத்தினுடைய

பிரச்சினை மட்டுமல்ல; இது தமிழகத்தினுடைய பிரச்சினை என்ற அடிப்படையில், அந்த மக்கள் போராடாமல் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இந்த அரசு முயல வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காலநிலை மாற்றம் குறித்த மிக முக்கியமான மதிப்பீட்டுத் தொகுப்பு அறிக்கையை ஐ.நா. சபையின் காலநிலை மாற்ற பன்னாட்டு அரசாங்கங்களின் குழு வெளியிட்டிருக்கிறது. அதன்படி, கார்பன் பயன்பாட்டைக் குறைத்து, நிலக்கரி எடுத்தல் போன்ற நடவடிக்கைகளைக் குறைக்க வேண்டுமென்று அது பரிந்துரைத்திருக்கிறது. தற்போது, ஆண்டுக்கு 59 gigaton கரியமில மாசு காற்று உருவாகிறது. இது 1990-ல் வெளியானதைவிட, 54 சதவிகிதம் அதிகம் என்று ஐ.நா. சபை கூறுகிறது. எனவே, மின் உற்பத்தியில், காற்றாலை, சூரிய ஒளி மற்றும் நீர்மூலம் மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்ற ஆலோசனையை ஐ.நா. சபை வழங்கி, அதை மத்திய அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, நில எடுப்பு என்று, மேலும், மேலும் விவசாயத்தைப் பாதிக்கின்ற அந்த நிகழ்வை ஏன் கொண்டுவர வேண்டும்?

இப்போதுகூட 3 சுரங்கங்களுக்கு மத்திய அரசாங்கத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கவன ஈர்ப்பு கொண்டு வரப்பட்டது. இன்றைக்கு அந்த மூன்று சுரங்கங்களும் மத்திய அரசால் கைவிடப்பட்டன. இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் விவசாயத்தைப் பாதுகாக்க சட்டத்தை இயற்றியதாக வரலாறு இல்லை. ஏற்கெனவே இன்னொரு உதாரணம் இருக்கிறது. அதுவும், நீதிமன்றத்திற்குட்பட்டு, இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. இன்றைக்கு தமிழகத்திலே விவசாயத்தைக் காப்பதற்கு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தைத் தந்த காரணத்தினால்தான், அந்த மூன்று சுரங்கங்களும் கைவிடப்பட்டு, அந்தப் பகுதி காப்பற்றப்பட்டதற்கு நான் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு அந்தப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் இருக்கக்கூடிய எங்களுடைய கடலூர் மாவட்டத்தில் கீரப்பாளையம், புவனகிரி, பரங்கிப்பேட்டை, குமராட்சி, காட்டுமன்னார்கோவில் ஆகிய ஐந்து ஒன்றியங்களின்

முழு பகுதிகளும் வருகின்றன. இதில் NLC நிறுவனத்தின் பிரச்சினை அதிக அளவில் இருக்கக்கூடிய, மக்கள் போராடிக் கொண்டிருக்கிற சுரங்கம்-2 பகுதியினுடைய நிலங்களெல்லாம் மேல்புவனகிரி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் பெரும்பாலும் வருகின்றன. சுரங்கம் 3-க்கு கண்டறியப்பட்டிருக்கிற நிலங்களும்கூட மேல்புவனகிரி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் வருகின்றன. எனவே, அந்தச் சட்டப்படி, அந்த இரண்டு சுரங்கங்கள் அமையவிருக்கின்ற அந்தப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தின்கீழ் வருகின்ற பகுதிகளை மாநில அரசு கண்டிப்பாக விட்டுக்கொடுக்கக் கூடாது. அங்குள்ள மக்களுடைய பிரச்சினைகளை, R&R சட்டப்படி, அனைவருக்கும் சம அளவில் இழப்பீடு, சுகாதார சீர்கேடுகளைச் சரிசெய்து, வீட்டுக்கு ஒருவருக்கு நிரந்தர வேலைவாய்ப்பை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். மக்கள்மீது காவல் துறையை வைத்து, மாவட்ட நிருவாகத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். R&R சட்டப்படி, தமிழக அரசு சட்டமன்றத்தில் அறிவித்தபடி, குழு அமைத்து, விவசாயப் பிரதிநிதிகளை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் நலனைப் பொறுத்தளவில், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தாலிக்குத் தங்கம் திட்டத்தின்கீழ், 3 இலட்சத்து 26 ஆயிரத்து 65 ஏழையெளிய பயனாளிகளுக்கு 2,595.30 கிலோ தங்கமும், ரூ.1,638.17 கோடி ரொக்கமும் வழங்கப்பட்டன என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 2011 ஆம் ஆண்டிலிருந்து தொட்டில் குழந்தைத் திட்டத்தின்மூலம் 1,186 ஆண் குழந்தைகளும், 4,359 பெண் குழந்தைகளும் மீட்கப்பட்டு, அவர்களுக்கு புது வாழ்வு அளிக்கப்பட்டது.

[திரு. ஆ. அருண்மொழிதேவன்] [2023 ஏப்ரல் 17
பிற்பகல் 12–05

குறிப்பாக, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ், 197 ஆண் குழந்தைகளும், 301 பெண் குழந்தைகளும் மீட்கப்பட்டன. 2,812 குழந்தைத் திருமணங்கள் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தடுத்து நிறுத்தப்பட்டன. மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினத்தன்று, பெண் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் அநீதியை எதிர்த்துப் போராடும் முயற்சியை பாராட்டும் வகையில் தமிழக அரசு சார்பில் விருது வழங்கப்பட்டது.

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த தினமான பிப்ரவரி 24 ஆம் தேதி மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம் 24–2–2022 அன்று கொண்டாடப்பட்டு, பவதாரணி என்ற 9 வயது சிறுமிக்கு மாநில அரசினுடைய விருதும், 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், போக்சோ சட்டத்தின்கீழ், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்காக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்றைய மானியக் கோரிக்கையில்கூட, பெண்கள் நலனைப் பற்றியும், மகளிர் பாதுகாப்புப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறோம். விருத்தாசலம் பகுதியில் 12–4–2023 அன்று நகர் மன்ற உறுப்பினராக இருக்கின்ற பள்ளியினுடைய உரிமையாளர் 6 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தார்; இந்த நிமிடம் வரை அந்தக் குழந்தை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறது. அதற்கு இந்த அரசு நிதியுதவி மற்றும் என்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ, அதனைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

பெற்றோர் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும்பொருட்டு, 32 மாவட்டங்களில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி வளாகங்களில் இயங்கும் 2,381 அங்கன்வாடி மையங்களில் L.K.G. மற்றும் U.K.G., வகுப்புகளை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 1–1–2019 அன்று தொடங்கி வைத்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2,87,120 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.7 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் சமத்துவ வளைகாப்பு கொண்டாடப்பட்டது.

முதியோர் நலனைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் நிமோனியா நோயால் பாதிக்கப்பட்ட முதியோர்களின் இறப்பினைத் தடுக்கும் நோக்கில், அரசு மானியம் பெறும் முதியோர் உதவி இல்லங்களில் உள்ள முதியோர்களுக்கு தடுப்பூசி போடும் பணி அறிமுகப்படுத்தப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. இது, முதியோர் நலத் திட்டத்தில் ஒரு மைல் கல்லாகவே இன்று வரை திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் என 50 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவை மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்மூலம் 33,33,808 பயனாளிகள் பயன்பெற்றனர். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒருங்கிணைந்த சேவை மையமானது 2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பொது இடங்களிலோ, குடும்பத்திலோ, பணிபுரியும் இடத்திலோ வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவ உதவி, காவல் துறை உதவி, சட்ட உதவி, மனநல ஆலோசனை மற்றும் குறுகிய கால தங்கும் வசதி போன்றவை சேவை மையங்கள்மூலம் வழங்கப்பட்டன. மேலும், 32 மாவட்ட ஒருங்கிணைந்த சேவை மையங்கள்மூலம் 9,966 பயனாளிகள் தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கு எண்ணற்ற நலத் திட்டங்களை நிறைவேற்றினார்கள். அவற்றில், சிலவற்றை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விழைகின்றேன். மாற்றுத் திறனாளிகளுக்கு 15,591 உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியவர்களைப் பாதுகாக்க, 23 மாவட்டங்களில் மனவளர்ச்சி குன்றியோருக்கான நவீன புதிய இல்லங்கள் அமைக்கப்பட்டன. வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது; 'அ' மற்றும் 'ஆ' பிரிவின்கீழ் பணியிடங்கள் கண்டறியப்பட்டு, 1,645 மாற்றுத் திறனாளிகள் பணி நியமனம் செய்யப்பட்டனர். ரூ.37.50 கோடி செலவில் தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட 5,000 மாற்றுத் திறனாளிகளுக்கு மின்கலத்தினால் இயங்கும் சிறப்பு நாற்காலிகள் வழங்கப்பட்டன. ரூ.3,263.90 இலட்சம் மதிப்பீட்டில் 1,94,449 மனவளர்ச்சி குன்றியவர்கள், கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள், தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கு 3,000 சிறப்பு சக்கர நாற்காலிகள் மற்றும் 3,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டன. 3,120 மாற்றுத் திறனாளிகளுக்கு மாத உணவூட்டு மானியம் ரூ.650/–லிருந்து ரூ.900/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. ரூ.3.23 கோடி செலவில் 13,541 காதொலிக் கருவிகளும், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் அருகிலுள்ள பொருட்களை எளிதில் அறிந்துகொள்ளும் வகையில், ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் 7,193 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–10

சில ஆலோசனைகளையும், கோரிக்கைகளையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு Battery Wheel Chair அரசால் வழங்கப்படுகிறது. அந்தத்

திட்டத்தை விரிவுபடுத்தி, போலியோவால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் Battery Wheel Chair வழங்க வேண்டும்.

தமிழக அரசால், மத்திய கூட்டுறவு வங்கிமூலம் ரூ.50,000/– மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லா கடனாக வழங்கப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டத்தில் பயன்பெற அரசு ஊழியர் ஒருவர் ஜாமின் கையெழுத்து போட வேண்டும் எனக் கூறப்படுவதால், இந்தத் திட்டம் முடங்கிப்போயிருக்கிறது. எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புத் தளர்வு அளித்து, வட்டியில்லா கடன் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பேருந்துகளில் நான்கில் ஒரு பகுதி கட்டணத்தைச் செலுத்தி மாற்றுத் திறனாளிகள் பயணம் செய்கிறார்கள். இவர்கள் ஓர் உதவியாளருடன் தமிழக அரசுப் பேருந்துகளில் தமிழகம் முழுவதும் கட்டணமில்லா பயணம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று, சுய தொழில் செய்து வந்த மாற்றுத் திறனாளிகள், கொரோனா பெருந்தொற்று, இயற்கை பேரிடர் காலங்களில் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியாமல் நலிவுற்றிருக்கிறார்கள். எனவே, இவர்கள் பெற்ற கடன்களை அரசு முழுவதுமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படுகிற அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் விலையில்லாமல் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மன வளர்ச்சி குன்றிய மற்றும் போலியோவால் முழுவதும் பாதிக்கப்பட்ட, கடும் ஊனமுற்ற மாற்றுத் திறனாளி குழந்தைகளை அவர்களது பெற்றோர்கள் உடனிருந்து நாள் முழுவதும் கவனிக்க வேண்டியுள்ளதால், தகுதியுள்ள தாய் அல்லது தந்தைக்கு அரசு வேலை வழங்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.

நான் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, ஒவ்வொரு நிதியாண்டும் 17 மாற்றுத் திறனாளிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்று சக்கர motor cycles–ஐ வழங்கினேன். கடந்த நிதியாண்டில் எனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 14 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர motor cycles–ஐ வழங்குவதற்காக நிதியொதுக்கியிருந்தேன். ஆனால், 3 நபர்களுக்கு மட்டுமே மாவட்ட நிர்வாகத்தால் அனுமதி வழங்கப்பட்டது. மீதமுள்ள நபர்கள் நிராகரிக்கப்பட்டனர். காரணம் கேட்கப்பட்டபோது,

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு கால்களும் ஊனமாக இருந்தால் மட்டும்தான் மூன்று சக்கர motor cycles வழங்க முடியும் என்றும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கலாம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார். அதுபற்றி எனக்குத் தெரியும் என்ற அடிப்படையில் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, எங்களுடைய கழக நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் சி.வி. சண்முகம் அவர்களிடம் என்னுடைய வேண்டுகோளை வைத்தேன். அவரும் என்னுடைய வேண்டுகோளையேற்று, அவருடைய பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த ஆண்டு 10 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர motor cycles-ஐ வழங்கிட நிதியொதுக்கியுள்ளார் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே முன்னுரையில் 'ஒரு மாற்றுத் திறனாளிகூட மன வருத்தமடையக் கூடாது; ஒரே ஒருவருக்குக்கூட நன்மை பயக்கும் என்று சொன்னால், அந்தச் செயலை உடனே செய்தாக வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். 40 சதவிகித பாதிப்பு இருந்தாலே அரசு உதவித் தொகை, நலத் திட்டங்கள் பெற தகுதியுடைவர்கள் என அரசு நிர்ணயம் செய்திருக்கின்றபோது, MLA நிதிக்கும், MP நிதிக்கும் இந்த வேறுபாடு தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கு, ஒரு கால், இரண்டு கால் என்று பாராமல், MLA நிதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் RIGHTS திட்டத்திற்கான செலவினம் குறித்து, இந்த அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் மாற்றுத் திறனாளிகள் நூற்றுக்கணக்கானவர்களுக்கும் மேற்பட்டோர் இந்தத் திட்டத்தின்கீழ் பணியமர்த்தப்பட்டு, செயல்படுத்துவதாகத் தெரிவித்தபோதிலும், எந்த மாற்றத் திறனாளியும் பயன்பெறவில்லை என்று தெரிவிக்கிறார்கள். எனவே, ஒரு விரிவான வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் மாவட்ட இணை அலுவலர், JDO என்று சொல்லப்படக்கூடிய பதவிக்கு இதுவரை நிரந்தரமாக யாரும் நியமிக்கப்படவில்லை. மற்ற துறைகளிலிருந்து மாற்றுப் பணியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நிரந்தரப் பணியாளரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தால், மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்படும் வீடுகளுக்கு முன்பணமாக ரூபாய் ஒன்றரை இலட்சம் செலுத்த வேண்டும் என்ற நடைமுறை தற்போது உள்ளது. இதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, முன்பணம் செலுத்தாமல் அவர்களுக்கு வீடு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TNPSC, TRB உள்ளிட்ட பல துறைகளில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவு காலிப் பணியிடங்கள்–backlog vacancies என்று சொல்லக்கூடிய பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. ஆகவே, தமிழகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உரிய பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப, சிறப்புத் தேர்வு நடத்தி, அதன்மூலம் அனைத்து காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்புவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். சிறப்புப் பள்ளிகளில் உள்ள காலிப் பணியிடங்கள் அனைத்தும் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். ஆசிரியர் மற்றும் இதர பணியாளர்களின் பற்றாக்குறையால் சிறப்புப் பள்ளிகள் இன்றைக்கு பல்வேறு சிரமங்களைச் சந்தித்து வருகின்றன. பார்வையற்ற மாற்றுத் திறனாளி பணியாளர்கள் அனைவருக்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்துறை ** அவர்களிடத்தில் இருக்கிறது. எனவே, சிறப்பு உயர் அதிகாரியினை நியமித்து அவர்களின்மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொல்கிறீர்கள். அதனை நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் தவறாக சொன்னீர்கள் என்று சொல்லவில்லை. ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 12–15

திரு. ஆ. அருண்மொழிதேவன்: அதேபோன்று பல்வேறு துறைகளில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொகுப்பூதியம் பெற்றுவரும் மாற்றுத் திறனாளிகளுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்ற அரசாணையின்படி ஊர்ப்புற நூலகங்களில் இரண்டு ஆண்டுகளுக்குமேல் பணி செய்தால் காலமுறை ஊதியம் தர வேண்டும். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட அந்த அரசாணையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறைப் பிரசவம் மற்றும் பல காரணங்களால் மூளை வளர்ச்சி குறைவாக உள்ளவர்களை மாற்றுத் திறனாளிகள் பட்டியலில் இணைக்க வேண்டும். இவ்வகை மாணவர்களுக்கு தேர்வுகளில் சிறப்புச் சலுகை, அதாவது கூடுதல் மதிப்பெண்கள் அளித்து, அவர்களும் மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு, ஆட்சிக்கு வந்தவுடன் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு ரூ.50,000/– திருமண உதவித்தொகையும், 4 கிராம் தாலிக்குத் தங்கமும், பன்னிரெண்டாம் வகுப்பு படித்தவர்களுக்கு ரூ.25,000/– உதவித்தொகையும், 4 கிராம் தாலிக்குத் தங்கமும் வழங்கப்பட்டது. தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்தபடி, அதனை 8 கிராம் தங்கமாகவும், ரூ.50,000/– ஆகவும் உயர்த்தி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அதைச் சிறப்போடு செயல்படுத்தி வந்தார்கள். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 3 இலட்சத்து 26 ஆயிரத்து 65 பயனாளிகளுக்கு, 2,595.30 கிலோ தங்கமும், 1,238.17 கோடி ரூபாய் ரொக்கமும் வழங்கப்பட்டது. கருணை உள்ளத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, ஒரு குண்டுமணி தங்கம்கூட வாங்குவதற்கு வழியில்லாமல் திருமணத்தை நோக்கியிருக்கின்ற ஏழையெளிய மக்களுடைய கனவைப் போக்குகின்ற வகையில் தாலிக்குத்

தங்கம் என்ற உன்னதத் திட்டத்தை இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து நிறுத்தி வைத்திருக்கின்றது. இந்தத் திட்டத்தை எந்த சாக்குபோக்கும் சொல்லாமல், ஏழையெளிய மக்கள் தொடர்ந்து பயன்பெறும்வகையில் செயல்படுத்திட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் நலன் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தால் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தில் பேறுகால நிதி உதவித்தொகை ரூ.18,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி 252–லே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், வாக்குறுதி, வாக்குறுதியாகவே இருக்கிறது. ஏற்கெனவே வழக்கமாக வழங்கப்பட்டுவந்த பேறுகால நிதி உதவித்தொகை ரூ.18,000/– தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. அதனை நிலுவை இல்லாமல் உடனே வழங்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித்தொகை, தகுதியுள்ள அனைவருக்கும் ரூ.1,000/– புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலிருந்து வழங்கப்பட்டது. தி.மு.க. தேர்தல் அறிக்கை 322–ல் முதியோர் உதவித்தொகை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்தீர்கள். அது, இன்றும் வாக்குறுதியாக இருக்கின்றது. ஆனால், தமிழகம் முழுவதும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஓய்வூதியம் பெற்றுவந்த தகுதியுடைய சுமார் 7½ இலட்சம் முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைத்துத் தரப்பினருக்கும் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. கடலூர் மாவட்டத்தில் மட்டும் நான் கேட்டறிந்த வகையில், சுமார் 25,000 நபர்களுக்கு ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, ஓய்வூதியம் பெற தகுதியுடைய அனைவருக்கும், நிறுத்தப்பட்ட அனைவருக்கும், ஓய்வூதியத் தொகையை நிலுவைத் தொகையோடு வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை அரசுப் பணியாளர்களாக பணியமர்த்தி, காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றும், குறைந்தபட்ச ஊதியமும், பணிக்கொடையும் வழங்கப்படும் என்றும் தேர்தல் அறிக்கையில்

[திரு. ஆ. அருண்மொழிதேவன்] [2023 ஏப்ரல் 17

வரிசை எண் 313–லே வாக்குறுதி அளித்தீர்கள். வாக்குறுதி இன்னமும் வாக்குறுதியாகவே இருக்கிறது. அதை எப்போது நிறைவேற்றப் போகிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

சமூக நலத் துறையில் மாவட்ட அதிகாரிகள் முதல் கடைநிலைப் பணியாளர்கள் வரை பல பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. பொறுப்பு அதிகாரிகள்தான் பணியாற்றி வருகின்றார்கள். கடலூர் மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில், 9 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்களே பணியாற்றுகின்றனர். மீதியிடங்களிலெல்லாம் பொறுப்பு அதிகாரிகள்தான் பணியாற்றி வருகின்றார்கள். ஒரு பணியாளர் இரண்டு அல்லது மூன்று இடங்களைக் கூடுதலாகப் பார்க்கும் நிலை இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ளது. உதாரணத்திற்கு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில், 4 ஒன்றியங்களில் மட்டும்தான் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் உள்ளனர். மற்ற இடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றன. இன்றைக்கு இந்தத் துறையைப் பற்றிப் பேசுகின்றபோது, நான் ஏற்கெனவே சொன்னதுபோல குழந்தைகள் நலன், மக்கள் நலன் என்று பேசுகிறோம். கடலூர் மாவட்டம், வடலூரிலே. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த குறுக்கீடும் இல்லாமல் 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். 5–4–2023 அன்று மாலை 4–00 மணியளவில் NEET தேர்வு பயத்தால் நிஷா என்ற மாணவி வடலூர் விரைவு இரயிலிலே பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார். அனிதாவுக்கு ஒரு நீதி, நிஷாவுக்கு ஒரு நீதியா என்ற அடிப்படையில் நான் மறுநாள் 6–4–2023 அன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, இன்று வரை அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுக்கப்படவில்லை. தினந்தோறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் அது எடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2022–2023 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு வரிசை எண் 14–ல், பக்கம் 221–ல் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியர்கள் கூட்டம் நடைபெறும்போது மிக முக்கிய நிகழ்வுகளின்போது செவித் திறன் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில், சைகை மொழி பெயர்ப்பாளர் வசதி செய்து தரப்படும் என்று அன்று அரசால் அறிவிக்கப்பட்டது. ஆனால், எங்களுடைய மாவட்டத்திலும், நான் விசாரித்த வகையிலே ஒரு மாவட்டத்தில்கூட குறை கேட்புக் கூட்டங்களில், இன்றைக்கு சைகை மொழி பெயர்ப்பாளர் நியமனம் குறித்த அறிவிப்பு இடம்பெறவில்லை என அறிகிறேன். அதை நிறைவேற்றித் தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

2022–2023 ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை வரிசை எண் 13, பக்கம் 20–ல் மாற்றுத் திறனாளிகள் சாலையோரங்களில் தள்ளு வண்டிக் கடைகளை நடத்த, நகர விற்பனைக் குழுவின் விதிமுறைப்படி முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொன்னீர்கள். அதுவும் வாக்குறுதியாகவே இருக்கிறது. எனவே, அதையும் நிறைவேற்றித் தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இன்றைக்கு வெயில் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், சத்துணவுத் திட்டத்தில் வழங்கப்படுகின்ற முட்டைகள் அழுகாமல் இருப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் நலனில் அக்கறையோடு அவர்களுக்குத் தங்குமிடம், உணவு மற்றும் கல்வி தந்து நலன் காக்கும் சேவை நிறுவனங்கள் அனைத்துக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், பழைய அடையாள அட்டையை மாற்றம் செய்து Smart card வழங்க

வேண்டுமென்றும், அவர்கள் சுங்கச்சாவடிகளைக் கடப்பதற்கு வாகன அனுமதி வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

பத்திரிகையாளர்களுக்கு, 1989 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் திருவான்மியூரில் குடியிருப்பதற்கு வீட்டுமனைகள் ஒதுக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு, 134 பயனாளிகளுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டு, வசித்து வருகிறார்கள். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான இரண்டாம் கட்ட குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசுக்குச் சொந்தமான இடத்தில் வீட்டுமனைகளைத் தேர்வு செய்து, குறைந்த விலைக்கு வழங்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெண்மையைப் போற்றுகின்ற வகையிலும், தாய்மையைப் பாதுகாக்கின்ற வகையிலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து பொது இடங்களிலும் தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கு வசதியாக, பாலூட்டும் தனி அறைகளை அமைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) போதும்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் அது நடைமுறையில் இருந்தது. எனவே, அதைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

அதேபோல, என்னுடைய தொகுதி சம்பந்தமான சில முக்கிய கோரிக்கைகள். மாண்புமிகு அண்ணன், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒரேயொரு கோரிக்கையை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நீங்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளாற்று நீர் கடலில் உட்புகுந்து கிட்டத்தட்ட 20 கிராமங்களில் 20 கிலோ மீட்டருக்கு மேல் நிலத்தடிநீர் பாதிக்கப்பட்டு, உப்பு நீராக மாறிவிட்டது என்று நாங்களெல்லாம்

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிலே மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்ட பிறகு தடுப்பணை கட்டுவதற்கு அறிவிப்பு செய்து, நில ஆர்ஜிதம் செய்வதற்கான அளவீடுகளெல்லாம் முடிக்கப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தயார் நிலையில் இருக்கிறது. கடலூர் மாவட்டத்தில் இது முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, அந்த 92.58 கோடி ரூபாய் மற்றும் நிலம் கையகப்படுத்துவதற்கான 33.20 கோடி ரூபாயையும் சேர்த்து இந்தத் தடுப்பணையை உடனே அமைப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள் அனைத்தையும் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

புவனகிரி தொகுதி, ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு கல்லூரியோ, பலவகை தொழில்நுட்பக் கல்லூரியோ, தொழிற்பயிற்சி நிலையமோ இல்லை. இந்தாண்டு மூன்றில் ஏதேனும் ஒன்றை அமைத்துத் தர வேண்டும்.

கீரப்பாளையம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். சேத்தியாதோப்பு பேரூராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

கம்மாபுரம் மற்றும் புவனகிரி ஊராட்சிகளில் தீயணைப்பு நிலையங்கள் அமைத்துத் தர வேண்டும்.

புவனகிரி மற்றும் கம்மாபுரம் ஊராட்சிகளுக்கு புதிய ஊராட்சி ஒன்றிய கட்டடங்கள் இந்த ஆண்டே கட்டித் தர வேண்டும்.

புவனகிரி தொகுதியில் ஒரு சார்நிலை கருவூலமும், சிறைச்சாலையும், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் அமைக்க வேண்டும்.

சாத்தப்பாடி, சொக்கங்கொல்லை ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும்.

சேத்தியாதோப்பு MRK *கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களை, விதிகளைத் தளர்த்தி, நிரந்தரப் பணியாளர்களாக பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.*

கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு அலுவலகக் கட்டடம் சேத்தியாதோப்பில் கட்ட வேண்டும்.

புவனகிரி, அருள்மிகு மீனாட்சி உடனுறை சீனிவாசப் பெருமாள் திருக்கோயில், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், கீழ்வளையமாதேவி, அருள்மிகு வான்கோடீஸ்வரர் திருக்கோயில் ஆகிய கோயில்களைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய வேண்டும்.

புவனகிரி பேரூராட்சிக்கு புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு, புவனகிரி ஆகிய பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டும். கங்கைகொண்டான் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

காவனூர், கள்ளிப்பாடி கிராமங்களுக்கு இடையே வெள்ளாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலமும், அதேபோல், கார்குடல், கார்மாங்குடி கிராமங்களுக்கு இடையே மணிமுத்தாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலமும் அமைத்துத் தர வேண்டும்.

வெள்ளாற்றின் குறுக்கே சாக்கான்குடி அருகே நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு ஏதுவாக தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

வெள்ளாறு, மணிமுத்தாறு ஆகிய ஆறுகளில் வெள்ளக்காலங்களில் ஆற்றுநீர் கிராமங்களில் உட்புகுவதைத் தடுக்க, தேவைப்படும் இடங்களில் கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

சேத்தியாதோப்பு பேரூராட்சியில் கரும்பு அரவை காலங்களில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க, தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டும்.

காவிரி டெல்டா பகுதியான வீராணம் ஏரியின் பாசன வாய்க்கால்கள் அனைத்தையும் போர்க்கால அடிப்படையில் தூர்வார வேண்டும்.

புவனகிரி தொகுதி, கம்மாபுரம், புவனகிரி, கீரப்பாளையம், ஸ்ரீமுஷ்ணம் ஆகிய 4 ஒன்றியங்களில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி, நன்றி. நீங்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவரையொட்டி இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறீர்கள். அதாவது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை பெரிதாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுத்திருப்பது போன்று Smart card போல சிறியதாக கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதுகுறித்து வெட்டுத் தீர்மானமாகவும் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு பேசியும் விட்டீர்கள். ஏற்கெனவே, அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்திருப்பது போன்று, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் கேட்டீர்கள். அதாவது, நான், விதி 55–ன்கீழ் தந்தமைக்கு இதுவரை எடுக்கவில்லை, எனக்கு எந்தப் பதிலும் வரவில்லை என்று சொன்னீர்கள். மாமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்குமே நான் சேர்த்து சொல்கிறேன். இன்றுவரை 666 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் விதி 55–ன்கீழ் தந்திருக்கின்றீர்கள். அதிலே 134 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் admit செய்யப்பட்டிருக்கின்றன. அவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதாவது, துறையின் பதிலுக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன என்று பொருள். அதிலே Agenda மூலம் இன்றுவரை 9 கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுக்கப்பட்டு, பதில்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும்,

12 கவன ஈர்ப்பு அறிவிப்புகள் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுக்கப்பட்டு, அவையிலே விவாதித்து, அவற்றுக்குப் பதில்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும், 6 கவன ஈர்ப்புகள் தகவல் கோரல் என்ற முறையில் எடுக்கப்பட்டு, அவற்றுக்கும் பதில்கள் சொல்லப்பட்டிருக்கின்றன இன்றுகூட உங்களுக்குத் தெரியும். இரண்டு கவன ஈர்ப்புகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தினந்தோறும் இரண்டு கவன ஈர்ப்புகள் எடுப்பதாக முடிவு செய்யப்பட்டு, அந்த அடிப்படையில், தினமும் Agenda*-வில் உள்ளபடி இரண்டு கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொண்டே வருகிறோம். தொடர்ந்து சில முக்கிய பிரச்சினைகள் குறித்து கேட்டாலும் அதுவும் எடுத்துக்கொள்ளப்பட்டு, பதில் சொல்லப்படுகிறது. 134 சிறப்புக் கவன ஈர்ப்புகள்* admit *செய்யப்பட்டன. அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்டதில், துறையிடமிருந்து பதில்கள் வந்ததும், விதி 55-ன்கீழ் உள்ள அனைத்துக்கும் எழுத்துப்பூர்வமான பதில்கள் கண்டிப்பாக எல்லோருக்கும் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12—25

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். அதில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்வசம் அந்தத் துறை இருப்பதனால், சந்திக்க முடியவில்லை என்பதுமாதிரி சொன்னார்கள். உண்மை என்னவென்றால், 2020-2021-ல் 660 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது நிதி ஒதுக்கீடு 1,106 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்வசம் இந்தத் துறை இருப்பதால், அதிகப்படியாக நிதி ஒதுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், உயர்மட்டக் குழுவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட எல்லா உயரதிகாரிகளும் இருந்து மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகள் கேட்கப்பட்டு, அன்புடன் அவை கவனிக்கப்பட்டு, மாற்றுத் திறனாளிகளின் நலன்,* grassroot level*-ல் அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினையை அறிந்து, திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.*

அதுபோல பார்த்தீர்களென்றால், Battery scooter. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் 8,000–க்கும் மேற்பட்ட scooters நம்முடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுபோல, சைகை மொழி பெயர்ப்பாளர்களுக்கு அரசு உத்தரவு வழங்கியது. ஆனால், சைகை மொழி பெயர்ப்பாளர் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. இன்னும், நீங்கள் பதிலுரையை கேட்டீர்களென்றால், இதற்கான பதில் நிச்சயம் உங்களுக்குக் கிடைக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, தொட்டில் குழந்தைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு நல்ல முறையில், மிகச் சிறப்பான முறையில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை 1,346 ஆண் குழந்தைகள் தொட்டில் குழந்தைத் திட்டத்தில் பயனடைந்துள்ளார்கள். 4,582 பெண் குழந்தைகள் அதில் பயனடைந்து வருகின்றார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, POCSO இழப்பீட்டு நிதி; போக்சோவினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீட்டு நிதி; 2 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்தார் திரு. எடப்பாடி பழனிசாமி என்று சொன்னீர்கள். ஆனால், அதை நிறைவேற்றவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான், செப்டம்பர் மாதம் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, நாங்கள் பொறுப்புக்கு வந்த பிறகுதான் அந்த இரண்டு கோடி ரூபாயையும் செலவழித்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக 20 கோடி ரூபாயை இடைக்கால மற்றும் இறுதி இழப்பீட்டுத் தொகையை போக்சோவினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இந்த அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்ததாக முட்டை; பள்ளிகளுக்கு வாரம் இரண்டு முறை முட்டைகளை சப்ளை செய்யச் சொல்லியிருக்கிறோம். அங்கன்வாடிக்கு வாரம் ஒரு முறை முட்டை சப்ளை செய்யச் சொல்லியிருக்கின்றோம். அதைப் பார்த்து வாங்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றோம். ஒப்பந்ததாரர்களின் சரத்துகளில் ஒன்று, முட்டை உடைந்திருந்தாலோ அல்லது

தண்ணீரில் முட்டை மிதந்தாலோ அவற்றை திருப்பி எடுத்துக்கொண்டு, பாதிக்கப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அதற்குப் பதிலாக நல்ல முட்டைகளை சத்துணவுப் பணியாளர்களிடம், அந்தப் பள்ளிக்கு வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. அது முறையாகக் கவனிக்கப்படுகிறது. அந்தப் பணியாளர்கள் முறையாகப் பணியாற்றி வருகின்றார்கள் என்பதை நான் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள் ஒரு clarification கேட்டிருக்கிறீர்கள். உறுப்பினர் பேசி முடித்துவிட்டு, விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்ன பிறகு நிச்சயம், உங்களுக்கு ஒரு கேள்வி கேட்க அனுமதி தருகிறேன். தற்போது உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுடைய clarification-க்கு அனுமதி தருகிறேன் என்று சொல்லிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் முடிந்தபிறகு தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

1. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி

(ஆ) குறுகிய கால வினா—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் நீங்கள் உட்காருங்கள். திரு. ராஜன் செல்லப்பா, நீங்கள் சொல்லுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய கால வினாவின்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. எழிலரசன் அவர்கள், அண்ணா, அண்ணா என்று ** கலைஞர் என்று சொன்னார். நாங்கள் அவரை வாழ்த்துவதிலே பெருமைப்படுகிறோம். ஆனால், அண்ணாவை **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 17]

என்ற வார்த்தையை அன்புகூர்ந்து சட்டமன்றப் பதிவேட்டிலிருந்து தவிர்க்க வேண்டும். பதிவேட்டிலிருந்து நீக்க வேண்டுமென்கிற கோரிக்கை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில் என்ன தவறு இருக்கிறது.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *அண்ணாவை ** கலைஞர் என்பதுபோல் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கலைஞரை ** அண்ணா என்று சொல்லியிருப்பார்கள். அதில் ஒன்றும் தவறில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) கலைஞரை ** அண்ணா என்று சொல்லியிருப்பார்கள். நான் அதை மாற்றிக்கொள்கிறேன். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொன்னதுபோன்று, அந்தப் பதிவைப் பார்த்தபிறகு அதற்கான விளக்கத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) பதிவைப் பார்த்த பிறகு நான் உங்களுக்கு விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொன்னது சரியென்றால் நான் அதைச் செய்கிறேன். (குறுக்கீடு) நான் இப்போதே பார்த்துவிட்டு உங்களுக்குச் சொல்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2023-2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், (குறுக்கீடு) பேரறிஞர் அண்ணா, தமிழகத்தை ஐந்து முறை ஆட்சி செய்து மக்களுக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, தமிழகத்தின் சிற்பியாய் வாழ்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி (குறுக்கீடு) என்னுடைய உரையைத் துவங்குகிறேன். மக்களுக்கான ஆட்சியாக (குறுக்கீடு)*

பிற்பகல் 12—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று அவர்களுக்கு நேரம் கொடுத்து, அது என்னவென்று கேட்டு, அதை பைசல் செய்யுங்கள். இல்லையென்றால், உட்கார வைத்துவிட்டு, இவரைப் பேசவிடுங்கள். இரண்டும் இருந்தால் என்னவென்று தெரியவில்லை. சரி. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று தெளிவாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் சொல்வது, அண்ணாவை கலைஞர் ** என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் பேசினார். அண்ணாவை கலைஞர் **அந்த ** என்ற வார்த்தையை நீங்கள் எடுத்துவிடுங்கள் என்று சொல்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதைத்தான், அப்படிப் பேசியிருந்தால், குறிப்பைப் பார்த்து, இருந்தால் எடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டார். அதோடு விட்டு விடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கான ஆட்சியாக, குறிப்பாக ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களுக்கான ஒரு ஆட்சி நடத்தவேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டு, இயங்கி வருபவர்தான் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் எல்லாம் என்ற முழக்கத்தை இலக்கணமாகக் கொண்டு, இந்திய ஒன்றியத்தையே திரும்பிப்பார்க்க வைத்து, ஈடு இணையற்ற, தனிப்பெரும் தலைவராகவும், இந்தியாவின் No.1 முதல்வராகவும் திகழ்பவரான, நமது கழகத் தலைவரும், தமிழ்நாட்டை சிறப்பாக ஆட்சி செய்து வழிநடத்தி வருபவரும், எங்களின் குடும்பத் தலைவருமான அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அவை முன்னவரும் கழக பொதுச் செயலாளருமான மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"People will forget what you said, people will forget what you did, but people will never forget how you made them feel" *என்ற* Maya Angelou *அவர்களின் வார்த்தைகளுக்கேற்ப, அவர்களின் வரிகளுக்கு உயிர் கொடுக்கும் விதமாக மாற்றுத் திறனாளிகளுக்கு இயற்கையின் அழகை ரசிப்பதற்கு, நமது மெரினா கடற்கரையில் ஒரு பாதையை அமைத்துக் கொடுத்து, அவர்கள்* wheelchair*-ல் சென்று அந்தக் கடற்கரை ஓரமாக, கடல் தண்ணீரில் காலை வைத்து ரசிப்பதற்கு அந்த உணர்வை ஏற்படுத்திய, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) நமது இளைஞரணிச் செயலாளர், வருங்கால தமிழகம், அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அவையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட நிர்வாகிகளுக்கும், என் தொகுதியைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகளுக்கும், நகர, ஒன்றிய செயலாளர்களுக்கும், கிளைக் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியின் நண்பர்கள், எனக்கு வாக்களித்த தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், எனக்கு இரண்டு முறை வாக்களித்து வெற்றிபெறச் செய்த திருவள்ளூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒன்றிரண்டை மட்டும் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். மீதியை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைந்து பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். இந்தச் சட்டமன்றத்தில் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினரும், அ.தி.மு.க.-வாக இருந்தாலும் சரி, மாற்றுக் கட்சியாக இருந்தாலும் சரி, தோழமைக் கட்சியாக இருந்தாலும், உரிமையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஏன் கேட்கிறார்கள் என்றால், இங்கே நடக்கும் என்பதனால்தான் கேட்கிறார்கள். நடக்கவில்லை என்றால் கேட்கமாட்டார்கள். கடந்த ஐந்து வருடத்தில் நாங்கள் கேட்டோமா? ஏனென்றால், அது பத்து

*வருடமாக நடக்கவில்லை. எதுவும் நடக்கவில்லை. போன 10 ஆண்டுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என்பதைப் பற்றி மட்டும் இப்போது பேச வந்திருக்கிறேன். அந்த ** அதைப்பற்றி இப்போது யாரும் பேச முடியாது. ஏனென்றால், உடனே நீங்கள் குறை சொல்லக் கூடாது என்று சொல்வீர்கள். (குறுக்கீடு) திவ்ய தேசங்களில் ஒன்றான (குறுக்கீடு) நமது வைத்திய வீரராகவர் திருக்கோயிலுக்கும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *உட்காருங்கள்,* sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: chorus *ஆக சத்தம் போட வேண்டாம். யாராவது ஒருவர்* front*-ல் வந்து சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *திவ்ய தேசங்களில் ஒன்றான ஸ்ரீவீரராகவர் திருக்கோயிலுக்கும், நமது திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வரர் ஆலயத்திற்கும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *ஒரு தங்குமிடத்தை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *நமது மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் கட்டித் தருவார்களா என. . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்னவென்று சொல்லுங்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 17]

*திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் கட்சி பற்றி அவருக்குக் கவலையில்லை. ** அவைக்குறிப்பில் இருக்கலாமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனை நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். அவையில் நாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: நாகரிகமாகத்தான் நான் பேசினேன். (குறுக்கீடு) நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அவ்வாறு பேசியிருந்தால், அதனை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். எல்லோரும் நாகரிகமாகத்தான் பேசுகிறார்கள். அனைவரும் அதன்படிதான் நடக்க வேண்டும்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் நகரத்திற்கான புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் கடந்தகால ஆட்சியில் வெறும் அறிவிப்பாகவே இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள், அதில் விரைந்து செயல்பட்டு, சுமார் ரூ.89 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 2 கிராமங்களில், அதாவது, பெரியகுப்பம் மற்றும் மேல்நல்லாத்தூர் ஆகிய பகுதிகளில் நில எடுப்புப் பணி முடிந்துவிட்டது. இன்னும் சேலை மற்றும் திருப்பாச்சூர் கிராமங்களில் நிலம் எடுக்கக்கூடிய பணி நடைபெற்று வருகிறது. மேற்கொண்டு நிதிப் பற்றாக்குறை இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வாயிலாக அந்த நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்து, திருவள்ளூர் நகரப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு இந்த அவையில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இது demand–ல் கிடையாது. என்னுடைய தொகுதிக்கு மிகவும் முக்கியமான தேவை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் mini stadium அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஏற்கெனவே Collector Office பின்புறம் மிகப் பெரிய playground, stadium இருக்கிறது. அதனை நவீனப்படுத்தி, மிகப் பெரிய stadium ஆக உருவாக்கி, சென்னைக்கு அருகிலிருக்கிற திருவள்ளூர் மாவட்டத்தில் centre of attraction என்கிற வகையில், ஒரு stadium அமைத்துத் தருமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கையில் தாயுள்ளம்கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் ரூ.32 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் நகரத்திற்கு அறிவித்து, அந்தத் திட்டத்திற்கான tender–ம் கோரப்பட்டு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான அனுமதியையும் அளித்திருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசத் தொடங்குகிறேன். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்குக் காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகள், சட்டமன்றச் செய்திகளையும், மற்ற செய்திகளையும் பார்ப்பதற்கும், செய்திகளை உடனே தெரிந்துகொள்ளும் வகையிலும், புதிய சைகை மொழி பெயர்ப்பு நிகழ்வைத் தொடங்கி வைத்துவிட்டுத்தான் இந்த அவைக்கே வந்திருக்கிறார்கள். அதற்காகவும், இந்த நேரத்தில் எல்லோருடைய சார்பாகவும், மாற்றுத் திறனாளிகள் சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மாற்றுத் திறனாளிகள் நலத் துறையைத் தன்வசம்

வைத்திருந்தார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கென நல வாரியம் ஏற்படுத்திய ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருக்கும்போது, எனக்குத் தெரிந்தவரையில் சுமார் 35, 40 ஆண்டுகளாக தன்னுடைய பிறந்த நாளன்று Little Flower Convent-க்கு தொடர்ந்து சென்று, மாலை 5-00 மணிக்கு அந்த மாணவ, மாணவிகளுடன் cake வெட்டிக் கொண்டாடுவது வழக்கம். சுமார் 40 ஆண்டுகளாகச் சென்றுகொண்டிருக்கிறார். எனக்கு 23 ஆண்டுகளாக நன்றாகத் தெரியும். ஒவ்வோர் ஆண்டும் அந்த நிகழ்வை 5-00 மணிக்கு நான் miss செய்ய மாட்டேன். அந்தப் பள்ளியில் Beno Zephine என்கிற மாணவி, 10 ஆம் வகுப்பிலும், 12 ஆம் வகுப்பிலும் நல்ல rank-ல் தேர்ச்சி பெற்றிருந்தார். அந்த மாணவிக்கு அமெரிக்காவில் நடக்கக்கூடிய சர்வதேச இளைஞர்கள் கருத்தரங்கில் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. அன்றைக்கு அதற்காக பணம் செலுத்தி, போக முடியாத சூழ்நிலையிருந்தது. அந்த மாணவியின் தந்தை இரயில்வே துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அன்றைக்குத் துணை முதல்வராக இருந்த, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனைத் தெரிந்துகொண்டு ரூ.4,75,000/- நிதியை, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அதற்காக உடனடியாக G.O. issue செய்து, அந்த மாணவியை அமெரிக்காவிற்கு அனுப்பியதோடு மட்டுமல்லாமல், அமெரிக்காவில் தன்னுடைய நண்பர் வீட்டிலேயே தங்க வைத்து, போக்குவரத்து ஏற்பாடுகளையும் செய்துகொடுத்து, அந்த மாணவிக்கு ஊக்கம் கொடுத்ததனால், இன்றைக்கு அந்த மாணவி, Beno Zephine, I.F.S., அதிகாரியாகத் தேர்ச்சி பெற்று, Malaysian Consulate-ல் High Commission of India-ல் First Secretary ஆக பணியாற்றிக்கொண்டிருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* அன்றைக்கு மாற்றுத் திறனாளிகளுக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். *(குறுக்கீடு)* நாங்களும் செய்கிறோம், அவர் செய்தாலே போதும்.

பிற்பகல் 12—40

மாற்றுத் திறனாளிகள் கடந்த ஆட்சியில் உதவித் தொகையாக ரூ.1,000/– பெற்றுக் கொண்டிருந்தார்கள். அந்த உதவித் தொகையினை ரூ.1,500/– ஆக உயர்த்திக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அவர்களுக்குத் துணையாக இருந்து உதவிபுரியக்கூடியவர்களுக்கு ரூ.2,000/–மும், பட்டப் படிப்பு பயின்றவர்களுக்கு திருமண உதவித் தொகையாக 8 கிராம் தங்கம் மற்றும் ரூ.50,000/–ஐ ரொக்கமாக வழங்கிடவும், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி செய்பவருக்கு ரூ.1,000/– உயர்த்தி வழங்கியதோடு மட்டுமல்லாமல், அவர்களின் திறனைக் கண்டுபிடிப்பதற்காக, வல்லுநர் குழுவை அமைத்து, வழிவகைகள் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மாற்றுத் திறனாளிகள் இன்றைக்கு நன்றியுணர்வோடு பார்க்கிறார்கள். நகரப் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசம் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மேலும் நன்றிவுணர்வோடு அவர்கள் பார்க்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர், கொள்கையில் இரும்பு; ஆனால், அவர் உள்ளத்தில் கரும்பு. அந்த அளவிற்கு மாற்றுத் திறனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணியடித்துக்கொண்டே இருக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு முறைதான் மணியடிக்கப்பெற்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு அளித்து 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு இருந்ததால் 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. சமூகத்தில் வெற்றி பெறக்கூடிய ஒவ்வொரு ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்று கூறுவதுண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நமது அண்ணியார். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மனைவிதான் இருப்பார்கள் என்று சொல்வார்கள்,*

2023 ஏப்ரல் 17]

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனைவிதான் இருப்பார்கள், அம்மா அவர்களும் இருப்பார்கள். சகோதரியும் இருப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மனைவிதான் இருப்பார் என்று சொல்லச் சொல்கிறார்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் எங்கள் அண்ணியார் அவர்கள் இருக்கிறார்கள், அதுபோன்றுதான். ஒவ்வொரு பெண்ணையும் ஊக்கப்படுத்துகின்ற வகையில், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மகளிருக்காக எத்தனை திட்டங்களைக் கொடுத்திருக்கிறார் என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு இளைஞரணிச் செயலாளர் அவர்களுக்கும் அவரது மனைவி, திருமதி கிருத்திகா அவர்கள், அவரை எந்த அளவிற்கு ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும், எதைச் செய்தாலும் அவர்கள் சொல்வதைத்தான் கேட்பேன் என்பதை ஒரு மேடையிலேயே சொன்னார்கள். நானும்கூட இதனை* Facebook, Youtube-*களில் பார்த்தேன். அதனால்தான் அவரும் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். மனைவி என்று சொல்லும்போது, அனைவருக்கும் ஒரு பயம், ஒரு மரியாதை, அவர்களுடைய ஊக்கம் என்பதோடு மட்டுமல்லாமல், நாம் தூக்கம் இல்லாமல் பல நாள் இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம். (குறுக்கீடுகள்) இன்றைக்கு மகளிருக்கான சிறப்புத் திட்டமாக பேருந்துகளில் இலவச பயணத் திட்டம். அதனை இலவசம் என்று சொல்லக் கூடாது. 'மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணத் திட்டம்'. தயவுசெய்து, இவரை அனுப்பாதீர்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அந்த இருக்கையில் அமர்ந்தால், நேரத்தைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவே, மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிருக்கும் இலவசம், கட்டணம் இல்லை என்று அறிவித்துவிட்டார்கள். ஆனால், இன்றைக்கு கிராமங்களில் பணிபுரியும் பெண்கள் அனைவரும், rose colour bus *வந்தாலே, 'ஸ்டாலின் பஸ் வருது'*

'ஸ்டாலின் பஸ் வருது' என்று அவற்றில் பயணம் செய்யக்கூடிய சூழ்நிலை உள்ளது. பணிபுரியும் பெண்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணம் செலுத்திச் சென்றாலும், மாதம் ஒன்றிற்கு 1,500/– ரூபாயிலிருந்து 2,000/– ரூபாய் ஆகும். ஆனால், அது இல்லாத இடங்களில் அவசரத்திற்கு share auto–களில்கூட செல்வார்கள். அவ்வாறு சென்றால் மேலும் ரூ.2,500/– range–ல் செலவாகும். ஆனால், பணிபுரியும் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/– தொகையினை உரிமைத் தொகையாக அறிவித்தவர்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாகத் தட்டுங்கள். அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செப்டம்பர் 15 ஆம் தேதியிலிருந்து அந்த உரிமைத் தொகையினை பெண்களுக்கு வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாதந்தோறும் அந்த உரிமைத் தொகையான ரூ.1,000/– நேராக அவர்களது வங்கிக் கணக்கில் சேரும். அவ்வாறு சேரும்போது அவர்கள் கையிருப்பில் pocket money போல் அதை வைத்துக்கொள்வார்கள். அந்த அளவிற்கு மகளிருக்காக, மகளிருக்கான ஆட்சியாக நடைபெற்றுக் கொண்டிருப்பதுதான் இந்த 'திராவிட மாடல்' ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து சிறிது நேரம் வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன், கஷ்டப்பட்டு உரையைத் தயார் செய்திருக்கிறேன். நீங்கள் மணியடித்துவிடாதீர்கள். மிகவும் கஷ்டப்பட்டு உரையைத் தயார் செய்துள்ளேன்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் பயில்கின்ற மாணவ, மாணவிகளுக்கு, குறிப்பாக, மேல்படிப்பிற்காக கல்லூரி செல்லக்கூடிய மாணவிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.1,000/– அளிக்கிறார்கள். புதுமைப் பெண் திட்டத்தின்மூலம் அவர்களது மேல்படிப்பிற்கு ரூ.1,000/– வழங்குவதனால், அவர்கள் கல்லூரிப் படிப்பை எளிதாக தொடரவும் தங்கள் வாழ்க்கையில் வளத்தினை ஏற்படுத்திக்கொள்ளவும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இதுபோல நிறைய திட்டங்களைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநங்கை சமூகத்தினர் பாலின மாறுபாடு காரணமாக பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்குத் திருநங்கை என்று பெயர் சூட்டி, கலைஞர் ஆட்சிக் காலத்தில் அவர்களை அந்த அளவிற்கு மரியாதையுடன் நடத்தினார்கள். 2008 ஆம் ஆண்டுதான் திருநங்கைகள் நல வாரியம் என்று ஒன்றை அமைத்தார்கள். கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர், TV–யில் செய்தியாகப் பார்த்தேன். அதற்குண்டான குழு உறுப்பினர்களை நியமித்து, அவர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் group photo எடுத்து, அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்படுகிறது என்றால், அது என்றைக்கும் இந்தத் திராவிட மாடல் ஆட்சியில்தான் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, அவர்களுக்கும் பேருந்தில் கட்டணம் இல்லை. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், 40 வயதிற்கு மேற்பட்ட திருநங்கைகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகையை 1,000/– ரூபாயிலிருந்து 1,500/– ரூபாயாக உயர்த்தியவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இளம் சிறார்களுக்கு, பள்ளிக்கு போகக்கூடிய ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி அளிக்கப்படுகிறது. ஒரு பள்ளிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் செல்கிறார்கள். ஒரு பிள்ளையிடம் 'சாப்பிட்டாயா' என்று கேட்கிறார்; இல்லையென்று அந்த மாணவன் பதில் சொல்கிறான். ஏன் காலையில் சாப்பிடவில்லையென்று கேட்டார், என்னுடைய அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லையென்று அந்த மாணவன் பதில் சொல்கிறான். மற்றொரு மாணவன் என்னுடைய அம்மா வேலைக்குச் சென்றுவிட்டார்கள் என்று சொல்கிறான். அப்படிச் சொல்லும்போது, அவருடைய கனிவான இதயம் உடனே 1 ஆம் class முதல் 5 ஆம் class வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்க தீர்மானித்து 18 இலட்சம் மாணவர்களுக்கு அத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தாய்மார்கள் தன் குழந்தைகள் school–க்குச் சென்றால் சாப்பிடும் என்று நிம்மதியுடன் இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியவர்தான், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இன்று காலையில் குழந்தைகள் என்ன

சாப்பிட்டார்கள் என்று ஒவ்வொரு school-க்கும் surprise ஆக phone செய்து கேட்கிறார். நமது இளைஞரணி செயலாளர்கூட. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *ஒரே ஒரு நிமிடம். நமது இளைஞரணி செயலாளர் திரு. உதயநிதி அவர்கள் நேரடியாக அந்தப் பள்ளிக்கே சென்று, அவர்களுடன் அமர்ந்து, உணவருந்தி அந்த மாணவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதான், கடைசியாக. . . நீங்கள் விடமாட்டீர்கள் என்று தெரியும். அதனால்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன், இன்னொரு பத்து நிமிடங்கள் கழித்துச் செல்லுங்கள் என்று. அவை முன்னவர் அவர்கள் 5 நிமிடங்கள்* time *எடுத்துக்கொண்டார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களும்* time *எடுத்துக்கொண்டார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நன்றாக* time *கொடுக்கிறீர்கள். எல்லோருமே பெண்களும் சரி, மாணவர்களும் சரி, மாணவிகளும் சரி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து ஒரு வாழ்த்துப் பாடல் பாடுகிறார்கள்.*

நூறாண்டு காலம் வாழ்க!
நோய் நொடியில்லாமல் வளர்க!
ஊராண்ட மன்னர் புகழ் போலே!
உலகாண்ட புலவர் தமிழ் போலே!
நூறாண்டு காலம் வாழ்க!
நோய் நொடியில்லாமல் வளர்க!

எல்லோருக்கும் என்னுடைய நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரத்தில் சிட்கோ தொழிற்பேட்டைக்கான சாலை அமைக்கும் பணிகளை விரைந்து நிறைவேற்றிட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சி, மணவாளநகர் பகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூர் மற்றும் சின்னம்மாபேட்டை ஊராட்சி, பூண்டி

ஒன்றியத்தின் தலைநகராக விளங்குகின்ற பூண்டி ஊராட்சி போன்ற பகுதிகளில் புறக்காவல் நிலையம் அமைத்திடவேண்டும்.

திருவாலங்காடு ஒன்றியம், கனகம்மாசத்திரம் ஊராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்திட வேண்டும். கடம்பத்தூர் ஒன்றியம், பாப்பரம்பாக்கம் மற்றும் பேரம்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிக்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய தீயணைப்பு நிலையம், மீட்புக் கருவிகள் மற்றும் கூடுதல் தீயணைப்பு வாகனங்கள் வழங்கிட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், இலட்சுமிவிலாசபுரம் ஊராட்சியில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து பாலம் அமைத்திட வேண்டும். திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம் ராமஞ்சேரி–ஈன்றபேட்டை இடையே நகரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்திட வேண்டும். பூண்டி ஒன்றியம், இராமதண்டலம் மற்றும் மெய்யூர் இடையே கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்திட வேண்டும்.

கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் ஏரியிலிருந்து செல்லும் உபரி நீர் பேரம்பாக்கம் கூவம் ஆற்றில் கலந்திட நீர்வரத்துக் கால்வாய் அமைத்திட வேண்டும்.

கடம்பத்தூர் ஒன்றியம், கேசவரம் தடுப்பணையிலிருந்து மணவாளநகர் வரை கூவம் ஆற்றினை தூர்வாரி சீரமைத்திட வேண்டும். கடம்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட பொதுப் பணித் துறை ஏரிகளை குடிமராமத்துப் பணிகள் மூலமாக தூர்வாரி வரவு கால்வாயினைச் சீரமைத்து, கரைகளைப் பலப்படுத்திட வேண்டும்.

பூண்டி ஒன்றியம், சென்றாயன்பாளையம் ஊராட்சி, மேட்டுப்பாளையம் (மதகத்தம்மன் ஏரி) கிராம புல எண் 272–ல் சுமார் 360 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரியினைத் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்திடவேண்டும். கடம்பத்தூர் ஒன்றியம், கேசவரம் அணையிலிருந்து நரசிங்கபுரம் பிளாஸ்தோட்டம் வரவு கால்வாயைத் தூர்வாரி, கூவம் ஆற்றில் இணைத்திட வேண்டும்.

திருவாலங்காடு ஒன்றியம், கூளூர் ஊராட்சி, மாவூர் ஏரியின் பழுதடைந்த மதகை அகற்றிவிட்டு புதிய மதகை அமைத்திட வேண்டும். திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகரத்தின் அருகில்

உள்ள வெங்கத்தூர், மேல்நல்லாத்தூர், ஏகாட்டூர், திருப்பாச்சூர், புல்லரம்பாக்கம், தலக்காஞ்சேரி, காக்களூர், சேலை ஆகிய ஊராட்சிப் பகுதிகளை திருவள்ளூர் நகராட்சியுடன் இணைத்திட வேண்டும்.

பழமையான திருவள்ளூர் நகராட்சி கட்டடத்தை அகற்றி புதிய அலுவலகத்திற்கான கட்டடம் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். திருவள்ளூர் நகரில் காய்கறி, மீன் மற்றும் இறைச்சி விற்பனை அங்காடிகள் நகராட்சி சார்பில் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் நகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள 60 அடி சாலையில் ஜெ.என். சாலையை இணைக்கும் பகுதி தனியார் இடமாக உள்ள காரணத்தினால் (நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில்) அவர்களுக்கு உரிய தொகையினை வழங்கிட திருவள்ளூர் நகராட்சியில் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அத்தொகையினை அரசே செலுத்திட முன்வரவேண்டும்.

திருவள்ளூர் நகராட்சி டோல்கேட், பெரும்பாக்கம், எடப்பாளையம் ஈக்காடு சாலை, வள்ளுவர்புரம், சின்ன எடப்பாளையம், இந்திரா நகர், புங்கத்தூர், காந்திபுரம், சிவம் நகர், கரிமேடு, புதிய மேட்டுத்தெரு, எம்.ஜி.ஆர். நகர், தாவுத்கான்பேட்டை, இருளர் காலனி, காந்தி நகர் ஆகிய பகுதிகளில் கழிப்பிடங்கள் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் நகராட்சி, பெரியகுப்பம் பேருந்து நிலையம் முழுவதும் புதிதாக சிமென்ட் தளம் அமைத்திட வேண்டும். திருவள்ளூர் நகரில் 14–வது வார்டு, வி.எம் நகர், 18–வது வார்டு கணபதி நகர், ராஜாஜிபுரம், 23–வது வார்டு, எம்.ஜி.ஆர். நகர், பாரதியார் நகர் வழியாக சிமென்ட் கான்கிரீட் மழைநீர் வடிகால் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் 1–வது வார்டு, கோகினூர் அவென்யு, நேதாஜி சாலை, பெரும்பாக்கம் பஜார் வீதி, வடக்கு ராஜ வீதி, ஈக்காடு சாலை வழியாக மழைநீர் வடிகால் 4–வது வார்டில் உள்ள கழிவுநீர் வெளியேற்றும் நிலையம் வரை செல்லுமாறு அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் முதல் வெள்ளியூர் வரை சுமார் 17 கி.மீ. தூரம் சாலையின் ஓரத்தில் புதிய இரும்புக் குழாய்கள் பதித்து குடிநீர்த் தேவையைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மா பேட்டை கிராமத்தில் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் நகரில் தனியார் பள்ளிகளுக்கு நிகராக ஆங்கில வழியில் கல்வி கற்க அரசு மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும். திருவள்ளூர் நகரில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், அரசு வேளாண் கல்லூரி மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றை அமைக்க வேண்டும். திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் வரதராஜ நகர்-மணவாள நகர் இடையே உள்ள கூவம் ஆற்றின் குறுக்கே புதிய இணைப்புப் பாலம் அமைத்திட வேண்டும்.

திருவாலங்காடு ஒன்றியம், புகழ்பெற்ற திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயிலின் நுழைவு வாயில் முகப்பினை நாராயணபுரம் கூட்டுச்சாலையில் அமைத்திட வேண்டும். கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் மற்றும் கடம்பத்தூரில் உழவர் சந்தை அமைத்திட வேண்டும்.

திருவாலங்காடு ஒன்றியம், கனகம்மாசத்திரம் மற்றும் திருவாலங்காட்டில் உழவர் சந்தை அமைத்திட வேண்டும். பூண்டி ஒன்றியத்தில் செயல்பட்டுவரும் கொழுந்தலூர் விதைப்பண்ணையைத் தரம் உயர்த்தி மாதிரி விதைப்பண்ணை அமைத்திடவும், விவசாயிகள் பயன்பெறும் வகையில் உரங்கள் மற்றும் விதைகளை தனியாருக்கு நிகராக மானிய விலையில் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கடம்பத்தூர் ஒன்றியம் மற்றும் திருவாலங்காடு ஒன்றியத்தில் மாம்பழச்சாறு தொழிற்சாலை அமைத்திட வேண்டும். திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு ஊராட்சியில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை நவீன கூட்டுறவு சர்க்கரை ஆலையாகத் தரம் உயர்த்திட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வாகனங்களை நிறுத்திட

வாகன நிறுத்தம், நகலகம் (Xerox Shop), ஆவின் பாலகம் மற்றும் உணவகம் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு, சின்னம்மாபேட்டை, கடம்பத்தூர், பூண்டி ஆகிய பகுதிகளில் அரசு புறம்போக்கு நிலங்களில் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் அமைத்திட வேண்டும். திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகரில் பெரும்பாக்கம், புங்கத்தூர், வள்ளுவர்புரம், எம்.ஜி.ஆர். நகர் மற்றும் வரதராஜ நகர் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகர், அதிகத்தூர் ஊராட்சி, நரிக்குறவர்கள் வாழும் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு அமைத்திட வேண்டும். திருவள்ளூர் தொகுதியில் கால்நடை பராமரிப்புக்காக "108 அவசர ஊர்தி சேவை" போல் "நடமாடும் அவசர ஊர்தி" சேவை ஏற்படுத்திட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள திருவாலங்காடு கிராமத்திலிருந்து பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஆன்மிக சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல பேருந்துகளும், ஆந்திர மாநிலம், திருப்பதிக்குச் செல்ல பேருந்துகளை இயக்கும்வண்ணம், பேருந்து நிலையம் அமைத்திட வேண்டும். சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் பேருந்துகளை திருவாலங்காடு வழியாக இயக்கிட வேண்டும்.

கடம்பத்தூர் ஒன்றியம், கொப்பூர் வழியாக திருவள்ளூரிலிருந்து காஞ்சிபுரம் வரை 160பி வழித்தட பேருந்தை மீண்டும் இயக்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் முதல் திருத்தணி வரை திருவாலங்காடு வழியாக போக்குவரத்து வழித்தட வசதி செய்திட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதியில் கடந்த காலங்களில் குக்கிராமங்களுக்கு இயக்கி வந்த பழைய வழித்தடங்களான 93, 212சி, 97எச், 86-ல் மீண்டும் பேருந்து இயக்கிட வேண்டும். திருவள்ளூர் தொகுதி, கனகம்மாசத்திரம் முதல் திருவள்ளூர் வரை திருவாலங்காடு வழியாக பேருந்து இயக்கிட வேண்டும்.

[திரு. வி.ஜி. இராஜேந்திரன்]

திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் தேரடி முதல் திருவள்ளூர் இரயிலடி வரை பூங்கா நகர், என்.ஜி.ஓ. காலனி வழியாக பேருந்துகளை இயக்கிட வேண்டும். திருவள்ளூர் முதல் திருப்பதி வரை குளிர்சாதன பேருந்துகளை இயக்கிட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், நெல்வேலி முதல் மேட்டுப்பாளையம் சாலையில், சாலையின் இருபுறமும் உள்ள முட்புதர்களை அகற்றிட வேண்டும். பூண்டி-இராமஞ்சேரி சாலையின் இருபுறமும் உள்ள முட்புதர்களை அகற்றி, சாலையை அகலப்படுத்த வேண்டும். பூண்டி ஒன்றியம், பூண்டியில் வன உயிரியல் பூங்கா அமைக்க வேண்டும்.

திருவாலங்காடு ஒன்றியம், பழையனூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும். கடம்பத்தூர் ஒன்றியம், மப்பேடு ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும். பூண்டி ஒன்றியம், பாண்டூர் ஊராட்சி, கனகவல்லிபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்க நிலத்திற்கான மதிப்பீட்டுத் தொகையான ரூ.13.00 கோடியை வழங்கி, திட்டப் பணிகள் விரைந்து நடைபெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை, மணவூர், வீரராகவபுரம், பாகசாலை ஆகிய கிராமங்களில் உள்ள துணை சுகாதார நிலையங்களில் செவிலியர்களை பணியமர்த்திட வேண்டும். திருவாலங்காடு ஒன்றியம், கனகம்மாசத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 40 படுக்கைகள் கொண்ட வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும்.

கடம்பத்தூர் ஒன்றியம், பாப்பரம்பாக்கம் ஊராட்சி, ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். பூண்டி ஒன்றியம், பூண்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை 40 படுக்கைகள் கொண்ட வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, பூண்டி, கடம்பத்தூர், திருவாலங்காடு ஒன்றியம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில், மாணவ, மாணவியர்களுக்கு தரமான உணவு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கிட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, பூண்டி, கீழச்சேரி, பன்னூர், கொப்பூர், மணவாளநகர் மாணவர்கள் தங்கும் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு கிராமம், அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி, இலவச குளியலறை மற்றும் திருமண மண்டபம், மதில் சுவர் மற்றும் நடைப்பயிற்சி தளம் அமைக்க வேண்டும்.

திருவள்ளூர், ஸ்ரீவைத்ய வீரராகவர் சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்குமிடம், திருமண மண்டபம் அமைக்க வேண்டும். பூண்டி ஒன்றியம், பூண்டி ஊராட்சி, ஸ்ரீதேவி கருமாரியம்மன் திருக்கோயில் நிர்வாகத்தின்கீழ் உள்ள ஊண்டீஸ்வரர் மின்னொளியம்மன் திருக்கோயிலுக்கு புதிதாக திருக்குளம், சுற்றுச்சுவர், திருக்கோயில் கோபுரத்திற்கு முன்பு நுழைவாயில், பூண்டி–நெய்வேலி கூட்டுச் சாலையில் முகப்பு நுழைவாயில் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும். கடம்பத்தூர், பூண்டி, திருவாலங்காடு ஒன்றியங்களில் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்து அரசால் அறிவிக்கப்படும் ஆன்லைன் சேவைகளை கிராம மக்கள் முழுவதுமாகப் பயன்படுத்திட இளைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகள் வழங்கிட வேண்டும்.

திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் அமைந்துள்ள பகுதியை சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பூண்டி ஒன்றியம், சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தில் படகு குழாம் அமைத்திட வேண்டும். திருவள்ளூர் நகர், காக்களூர் ஏரியைத் தூர்வாரி, படகு குழாம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்ந்து கிடந்த தமிழ் சமுதாயத்தை உணர்வூட்டி, தலைநிமிரச் செய்த திராவிட தலைவர்களை வணங்குகின்றேன். ஒருமுறை, எழுத்தாளர் ஜெயகாந்தன் பேசுகிறபோது, தந்தை என்றால், ஒருவரைத்தான் குறிக்கும்;

அண்ணா என்றால், ஒருவரைத்தான் குறிக்கும்; கலைஞர் என்றால், ஒருவரைத்தான் குறிக்கும் என்று சொன்னார். அந்தத் தலைவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றப் பேரவையில், கடந்த கூட்டத்தொடரில் திராவிட மாடலுக்கு விளக்கம் சொல்லி, அது தமிழகத்தில் மாத்திரமல்ல, இந்திய ஒன்றியம் முழுவதும் பரவ வேண்டுமென்று, அகில இந்திய அளவில் சமூகநீதி போரிலே வெல்வோம் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறைகூவல் விடுத்தார்கள். கடந்த 3-4-2023 அன்று அகில இந்திய அளவில் நடந்த சமூகநீதி மாநாட்டில் திராவிட மாடலையும், அதனுடைய உணர்வுகளையும், கொள்கைகளையும், சமூக நீதியையும் இந்திய ஒன்றியம் முழுவதும் நடைமுறைப்படுத்த முடிவு செய்திருப்பது, தமிழ்நாட்டு முதல்வர் அவர்களுக்குக் கிடைத்த சிறப்பான வெற்றியாகும். அந்த வெற்றி வளர, வளர, அந்த ஒளி மிளிர, மிளிர, அந்த ஓசை ஒலிக்க, ஒலிக்க அது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெயரை ஒலித்துக் கொண்டேயிருக்கும். இந்திய ஒன்றியம் முழுவதும் அது ஒலித்துக் கொண்டேயிருக்கும். அந்த ஒலி மிகுந்த தலைவரை வணங்குகிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையினுடைய மதிப்புமிக்க முன்னவர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். இளைய சமுதாயத்தின் எழுச்சிமிக்க தலைவர், நாளைய தமிழ் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம், இன்றைய இளம் தலைவர், மாண்புமிகு அமைச்சர் திரு. உதயநிதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மரியாதைக்குரிய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும், எங்களுடைய மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய அன்புக்குரிய சகோதரர் மாண்புமிகு

அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள், "தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி, தமிழுக்கும், தமிழர்களுக்கும் பொற்காலமாகத் திகழ்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். "ஒரு சமுதாயம் உயிரோடு இருப்பதென்பது வேறு, ஒரு சமுதாயம் உயிர்ப்போடு இருப்பதென்பது வேறு. உயிரோடு இருப்பதற்கு உணவு, பாசம், செல்வம் இருந்தால் போதும். ஆனால், உயிர்ப்போடு இருப்பதற்கு உணர்வு முக்கியம். அந்த உணர்வைக் கொடுப்பது, கலைஞருடைய பொற்கால ஆட்சி" என்று அவர் சொன்னார். இந்த வரலாறெல்லாம் தெரியாதவர்கள் இன்றைக்கு தமிழகத்தில் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சைக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சோழர் கால அருங்காட்சியகம் அமைக்கப்படுமென்று அறிவித்த நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலக்கரி எடுத்து, டெல்டாவைப் பாலைவனமாக்கத் துடித்த ஒன்றிய அரசுக்கு எதிராக சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து, நிறைவேற்றி, அதைத் தடுத்து நிறுத்திய டெல்டா நாயகன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நடக்குமா? முடியுமா? முடியாது' என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் தேர்தல் காலத்திலும் சரி, நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகும் சரி, ஏன் இந்த அவையில்கூட கூக்குரல் எழுப்பி வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் சொல்கின்ற வகையில், நம்முடைய சமூக நலத் துறை சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும், உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாயை அறிவித்து, ரூ.7,000 கோடி அத்திட்டத்திற்காக ஒதுக்கியிருப்பதை, தமிழ்நாட்டிலுள்ள ஏழை, எளியவர்கள்

எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 'முடியாது' என்று சொன்னவர்கள் எல்லாம் வாயடைத்துப்போய் நிற்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையை தன் துறையாகவே, தன்வசம் வைத்து, கருணையோடு நடத்திக்கொண்டிருக்கிற நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவிக்கின்றார். அதில் அவர்கள் எல்லாம் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அந்த வகையிலே அவர்களெல்லாம், இன்றைக்கு முதல்வரை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையிலே இந்த ஆண்டு சிறப்பாகப் பணியாற்றியதற்கு தஞ்சை மாவட்டம் தேர்வாகியிருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்வதில் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகளை, நம்முடைய விளையாட்டுத் துறையின் சார்பில்,முதலமைச்சரின் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதியளித்திருப்பது, நாடு போற்றக்கூடிய நல்ல செயல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்களில் பணிபுரிகின்ற சிறப்பு ஆசிரியர்களுக்கு ஊதியம் ரூ.14,000/–லிருந்து ரூ.18,000/– ஆக உயர்த்தப்பட்டிருப்பது போற்றுதலுக்குரியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் 27 தொண்டு நிறுவனங்களில் பணிபுரிகின்ற சிறப்பு ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் வழங்கி, மாண்புமிகு தளபதியார் அரசு இன்று பெருமை பெற்றுக் கொண்டிருக்கிறது. தொண்டு நிறுவனங்களின் இல்லங்களில் தங்கியுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவு மானியத்தை ரூ.900/–லிருந்து ரூ.1,200/– ஆக கருணையுள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்தியிருப்பதை, அவர்களெல்லாம் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்கெனவே வழங்கி வந்த உதவித் தொகை ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/– ஆக உயர்த்தப்பட்டிருப்பதும், வருவாய்த் துறையின் மூலமாக சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 1,000/– ரூபாய், 1,500/– ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதும் நாடு போற்றக்கூடிய நல்ல செயலாக இன்றைக்கு பார்க்கப்படுகிறது.

[திரு. டி.கே.ஜி. நீலமேகம்] [2023 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு தற்சமயம் மோட்டாருடன்கூடிய மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த இடத்திலே நான் மாண்புமிகு முதல்வரின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, ஒரு கால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். காரணம், ஒரு கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாளடைவில் இரண்டாவது காலும் பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, அவர்கள் பேருந்தில் பயணிப்பது என்பது மிகவும் சிரமமாக உள்ளது என்பதை இந்த அவையிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12—55

அதேபோல செவித்திறன் பாதிக்கப்பட்ட 18 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுடைய தாயார்களுக்கு மோட்டாருடன் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கி உதவிட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல் ஏற்கெனவே தசை சிதைவு மற்றும் விபத்தால் முதுகுத் தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு Battery சக்கர நாற்காலி வழங்கப்பட்டு வருகிறது. இதனை விரிவுபடுத்துகின்ற வகையில் மூளை, முடக்கு வாதம் மற்றும் பிறவியிலேயே முதுகு தண்டுவடம், கை, கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு Battery ஆல் இயங்குகின்ற சக்கர நாற்காலி வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை சார்பில், பசியோடு பள்ளிக்கு வருகின்ற குழந்தைகளுக்கு, பசி போக்க பரிவான காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, பசியில்லாமல் மாணவர்களைப் படிக்க வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களை ஏழைத் தாய்மார்கள் வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். இத்திட்டத்தால், அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் சேர்க்கை அதிகமாகி இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடியில் நடைபெறுகின்ற L.K.G., U.K.G. வகுப்புகளை மேம்படுத்தி, smart வகுப்புகளைப்போல் கொண்டு வந்தால், சிறப்பாக இருக்கும் என்று நான் துறையின் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 2008 ஆம் ஆண்டு, ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அரசின் எல்லாத் துறைகளிலும் நிரந்தரம் இல்லாத ஊதியம் அடிப்படையில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றுகின்றவர்களை, நிரந்தரம் செய்ய வேண்டுமென தலைவர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அரசாணை எண் 151-ஐ பிறப்பித்தார். ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு Supreme Court-ன் ஒப்புதல் இல்லாத காரணத்தினாலும், அது கூடாது என்று Supreme Court ஓர் உத்தரவைப் பிறப்பித்த காரணத்தினாலும், அதை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது.

தமிழக முதல்வர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, தலைவர் கலைஞர் அவர்கள் எந்த உணர்வோடு அதைக் கொண்டு வந்தாரோ, அதே உணர்வோடு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தாங்கள் 2008-ல் தலைவர் கொண்டு வந்த அந்த அரசாணையை நடைமுறைப்படுத்துவதற்கு, சிறப்பு விதிவிலக்கு அளித்து, இரண்டு ஆண்டுகளுக்குமேல் பணியாற்றுகின்ற, ஒப்பந்தத்தில் பணியாற்றுகின்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் தஞ்சையில் போட்டியிட்டார். அப்போது அவரை எதிர்த்து நின்றவர், மிகப் பெரிய செல்வாக்குமிக்க செல்வச் சீமான் திரு. பரிசுத்த நாடார் அவர்கள். அவரை எதிர்த்துப் போட்டியிட்டு, அன்றைக்கு மிகப் பெரிய வெற்றியை தமிழகத்தில் பெற்றுக் காட்டியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். இது தஞ்சையிலே தலைவர் கலைஞர் அவர்களின் வரலாற்றில் பதியப்பட்ட பொன்னேடு.

அதைப்போல 1958 ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற S.M.T. Bus போராட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களே தலைமையேற்று நடத்தியதால் திருச்சி சிறையில் பல நாட்கள் அடைப்பட்டுக் கிடந்தார். அந்தப் போராட்டத்தில் என்னுடைய தந்தையாரும், தலைவரோடு கலந்துகொண்டு சிறை சென்றார் என்பதை இந்த அவையில் பதிவு செய்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அந்த வரலாற்றுத் தலைவனுக்கு, 100 ஆண்டு போற்றிப் புகழ்கின்ற அந்தத் தலைவனுக்கு, தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரில் நினைவு வளைவு அமைத்துத்தர வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே தஞ்சையிலுள்ள Victoria Arch பழுதடைந்து இருப்பதால், அது அப்புறப்படுத்தப்பட்டது. அந்த இடத்தில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவு வளைவு வைக்க அனுமதியளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கையாக ஒருசில கோரிக்கைளை மட்டும் பதிவு செய்து, மற்றவற்றை உங்களிடத்தில் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருவாய்த் துறையில் மிக முக்கியமான ஒரு கோரிக்கை; அதாவது, நில உச்சவரம்புச் சட்டம் 1961 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இரண்டாவதாக, ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டம்; அதேபோல, தமிழ்நாடு எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் என 3 வகைகளில் கொண்டு வரப்பட்ட சட்டங்களின்கீழ், பல்வேறு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான நிலங்களை தமிழகத்தில் எடுத்து, அவற்றை அனாதீனம் என்று அரசு அறிவித்து, அந்த நிலங்கள் அப்பட்டியலில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, என்னுடைய தொகுதியில் நீலகிரி தெற்கு, நாஞ்சிக்கோட்டை, புளியந்தோப்பு, புதுப்பட்டினம், கடகடப்பை, வல்லம், அல்லி அக்ரஹாரம், ஆவுசாகிப் தோட்டம், வலம்புரி மற்றும் நகரப் பகுதிகளில் ராஜராஜன் நகர், காமராஜர் நகர், காத்தூன் பீவி நகர், சித்ரா நகர் போன்ற இன்னும்

பல்வேறு பகுதிகளில் அனாதீனம் என்ற நிலங்கள் இருக்கின்ற காரணத்தினால், அங்கு வீடுகள் கட்டப்பட்டு பல்வேறு நிலைகளில் தலைமுறை தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை எனவே, அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மற்ற கோரிக்கைகளெல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும். நேரமாகிவிட்டது. உரையை முடியுங்கள்.

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கோரிக்கைகளையும் தங்களிடம் அளிக்கிறேன். அவற்றை தாங்கள் அந்தந்தத் துறைக்கு அனுப்பி, நிறைவேற்றித் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து இந்த அவையில் பல்வேறு மானியக் கோரிக்கைகளின்மீது உரையாற்றக்கூடிய அருமையான வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், என் உயிரினும் மேலான எங்கள் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

தஞ்சாவூர் தொகுதியில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வடிவமைக்கப்பட்ட அலுவலகத்தில், தேவைக்கேற்ப குடோன் வசதி, நெல் தூற்றவும், உலர வைக்கும் களம் ஆகியவற்றை லாரி போக்குவரத்திற்கு இடையூறு அமைக்க வேண்டும். வாடகைக் கட்டடங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் தொகுதியில், விவசாய வர்த்தக மையம், Agriculture trade centre அமைத்துத் தர வேண்டும். வேளாண் பல்கலைக்கழகம், வேளாண் ஆராய்ச்சி மையம், வேளாண் விதை உற்பத்தி மையம் ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டும். விவசாயப் பொறியியல் துறைமூலம் வழங்கப்படும் பல்வேறு உழவு இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

தஞ்சாவூர் வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழுதடைந்துள்ளதால், அதே இடத்தில் புதிதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டித் தர வேண்டுகிறேன்

நகர்ப்புற (Town settlement Register) TSLR கடந்த ஆட்சியில் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டதில் உள்ள தவறுகள் அரசாணை எண் 612/2021-ன்மூலம் சரி செய்யப்பட்டதில், தஞ்சாவூர் நகரப் பகுதியில் உள்ள நகர TSLR பதிவேட்டில் உள்ள தவறான விவரங்கள் இன்றளவும் முறையே முழுமையாக சரி செய்யப்படாமல் உள்ளன. இதில் இன்றளவும் தவறுகள் உள்ள நிலையில், அரசாணை எண் 612-ன்படி, அதனை மீண்டும் ஒப்பிட்டு, உடன் சரி செய்து தர வேண்டும். பின்னர், ஆன்லைனில் வழங்கப்படும் TSLR நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். நகரப் பகுதிகளில் உள்ள TSLR (Town settlement Register) முழு புல பட்டா மாற்றத்தினை நகர நில அளவர்களிடமிருந்து பிரித்து, அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடம் வழங்க வேண்டும்.

தஞ்சாவூர் தொகுதிக்குட்பட்ட பள்ளி அக்ரஹாரம், ஆவுசாகிப் தோட்டம் மற்றும் வலம்புரி யூனிட் ஆகிய கிராமங்களுக்கு கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் நாஞ்சிக்கோட்டை சரக வருவாய் அலுவலருக்கு, பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடத்தை அந்த சரகத்திற்குட்பட்ட பகுதியிலேயே புதிதாகக் கட்டித் தர வேண்டும்.

பெரிய வருவாய் கிராமங்களான புதுப்பட்டினம், நீலகிரி தெற்கு தோட்டம், நாஞ்சிக்கோட்டை, பிள்ளையார்பட்டி கிராமங்களை இரண்டாகப் பிரித்து, தனித்தனி கிராம நிர்வாக அலுவலரை நியமித்திட வேண்டும்.

தஞ்சை நகரப் பகுதியில் மொத்தமாக உள்ள 9 வார்டுகளை தலா 3 ஆகப் பிரித்து, 3 வார்டுகளுக்கு ஒரு வட்டாட்சியர் என நியமிக்க வேண்டும். நில அளவை குழுவினரை, தனித்தனியாக நகர்ப்புற நிலவரி திட்டப் பணியினை மேற்கொண்டு, ஓராண்டுக்குள் அந்தப் பணிகளை முடிக்குமாறு வலியுறுத்தி, மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் முழுமையாக இத்திட்டம் சென்றடைய வேண்டும்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டும்.

தஞ்சாவூர், அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சைக்கான மருத்துவ வசதியை விரிவுபடுத்தித் தர வேண்டும் மற்றும் குழந்தைகள், பச்சிளம் குழந்தைகளுக்கு அதிநவீன சிகிச்சை வழங்கும் விதமாக மருத்துவ வசதி அமைத்துத் தர வேண்டும். மேலும், மருத்துவமனை சாலையில் நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் சாலையைக் கடக்க சிரமப்படுவதால், மருத்துவமனைக்கு எதிரே சுரங்கப் பாதை அமைத்து, பழைய பேருந்து நிலையத்தோடு இணைக்க வேண்டும். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைத்து புதிய பல் மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும்.

தஞ்சாவூர் வடக்கு வாசல் மற்றும் அண்ணா நகர், 48-வது வட்டப் பகுதியில் மகப்பேறு மையம் அமைக்க வேண்டும். தஞ்சாவூர் கலைஞர் கருணாநிதி சாலையில் அமைந்துள்ள பழைய நீதிமன்ற வளாகத்தினுள் புதிய சட்டக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். தஞ்சாவூர் தொகுதியில் தலைவர் கலைஞர் பெயரில் கிராமிய கல்வி நிறுவனம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர் தொகுதிக்குட்பட்ட மாரியம்மன் கோயில் பகுதியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக ஆறு வகுப்பறைகள் அமைத்துத் தர வேண்டும். இப்பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறை மற்றும் சத்துணவுப் பொருள்களுக்குப் பாதுகாப்புக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

தஞ்சாவூர் சாந்தப்பிள்ளை கேட் மேரிஸ்கார்னர் இரயில்வே மேம்பாலத்தைச் சீர்செய்து, போக்குவரத்திற்கேற்ப முறைப்படுத்தி கட்டித் தர வேண்டும்.

தஞ்சாவூர், வல்லம் பேரூராட்சி, அருள்மிகு கௌரி அம்மன் திருக்கோயிலுக்கு ராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு செய்து தர வேண்டும். தஞ்சை, புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் அருகில் அரசு சார்பில் பக்தர்கள் தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டும். தஞ்சாவூர், பெரிய கோயில் வாகன நிறுத்துமிடத்திலிருந்து கோயில் வளாகத்தின் அருகில் செல்ல தானியங்கி நகரும் படிக்கட்டுடன்கூடிய நடைமேடை மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சை நகரப் பகுதிகளில் சொந்தக் கட்டடத்துடன்கூடிய கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகங்கள் அமைக்க

வேண்டும். பூம்புகார் கைவினைப் பொருள்கள் விற்பனை மையத்தை தஞ்சை பெரிய கோயில் வளாகத்தில் (புதிய கிளை) அமைத்துத் தர வேண்டும். ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ், தஞ்சாவூர் நகரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வீடுகளாக வழங்கிட வேண்டும்.

தஞ்சாவூர் தொகுதி, தஞ்சாவூர் நகரப் பகுதியில் ஆட்டக்காரத் தெரு, வண்டிக்காரத் தெரு புதுப்பட்டினம், மகர்நோம்புச்சாவடி, ஜெயலட்சுமி நகர், மாயம்மன்கோவில் ரோடு, பெரியசாலை ரோடு, சின்ன ஆஸ்பத்திரி தொல்காப்பியர் சதுக்கம், ஜோதிநகர் பட்டுக்கோட்டை பிரிவு சாலைப் பகுதிகளில் நிலவும் மின்னழுத்தக் குறைபாட்டைச் சரி செய்ய ஆட்டக்காரத் தெருவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் புதிதாக 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். நீலகிரி தெற்கு தோட்டம், பிள்ளையார்பட்டி, நாஞ்சிக்கோட்டை, புன்னைநல்லூர் ஊராட்சிகளுக்குட்பட்ட நகர் விரிவாக்கப் பகுதிகளில் நிலவும் மின்னழுத்தக் குறைபாட்டை சரி செய்ய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் புதிதாக மின்மாற்றிகள் அமைத்துத் தர வேண்டும்.

புதிய பேருந்து நிலையம் அருகில் 33/11 KV துணை மின் நிலையம் ஒன்று அமைத்திட வேண்டும். மன்னர் சரபோஜி கல்லூரி அருகில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் “60X40” என்ற அளவில் இடம் இருந்தால், துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

தஞ்சாவூர், கரந்தை பகுதியைக் கடக்கும் வடவாறு ஆற்றில் மேலவெளி முதல் கடகடப்பை வரை பக்கவாட்டுச் சுவர்கள் எழுப்பி, வடவாறில் கழிவுநீர் கலக்காமல் செய்ய வேண்டும். வடவாற்றிலிருந்து பிரியும் ஐவேலி வாய்க்காலைத் தூர்வாரி, பக்கவாட்டுச் சுவர் எழுப்பி, சீர் செய்து தர வேண்டும்.

தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் மனநலக் காப்பகங்களில் பணிபுரியும் சமூகப் பணியாளர்கள், செவிலியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். பார்வை மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூகப்

பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1,500/– வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்குக் கூடுதலாக உதவித் தொகை வழங்க வேண்டும்.

மூன்று ஆண்டுகளுக்குமுன் அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கிய ஸ்மார்ட் போனை மாற்றி நவீன வசதிகளுடன்கூடிய புதிய ஸ்மார்ட் போன் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை வணங்குகிறேன். இந்திய ஜனநாயகத்தின் பாதுகாப்பாகவும், அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரே அடையாளமாகவும் இருக்கக்கூடிய தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களைப் போற்றி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன் என்றால் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரைத் தவிர்த்து நாம் பேச முடியாது. சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றை நிலைநிறுத்த வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு இந்த 4 தலைவர்களும் இந்தத் தமிழ் சமுதாயத்திற்கு ஏற்படுத்திய ஓர் இயக்கமாக மாறியதுதான் இன்றைய திராவிட மாடல் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்குள் நுழைந்த ஓர் ஆதிக்க சமூகம்தான் பெண்களுக்கான கல்வியை மறுத்தது; பெண்களை அடிமைப்படுத்தியது; கல்வி என்பது அனைவருக்கும் எட்டாக் கனியாக மாறியது. இதை எதிர்த்துதான் தலைவர்கள் போராடினார்கள். ஆனால், தமிழ் இலக்கியங்களை நாம் எடுத்துக்கொண்டால், அநீதி இழைத்தால், அறம் தவறினால், அது ஆணாக இருந்தாலும், ஆண்டவனாக இருந்தாலும், அரசனாக இருந்தாலும், கணவனாக இருந்தாலும்கூட அவர்களை எதிர்த்துப் போராட வேண்டுமென்று மக்களுக்கு, பெண்களுக்கு, குறிப்பாக அன்றைய காலகட்டங்களில் அதில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைய திராவிட மாடல்

ஆட்சியைப் பற்றி நீதிமன்றங்கள் திராவிட மாடல் ஆட்சி என்றால் என்ன என்று கேட்கின்றன. பிற்போக்கு சிந்தனைகளைப் புறந்தள்ளி, முற்போக்கு சிந்தனைகளுக்கு இடமளித்து, ஆட்சி செய்கின்ற ஓர் அரசுதான், திராவிட மாடல் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கச் செம்மல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுய மரியாதை இயக்கத்திலிருந்து வந்த ஒரே காரணத்திற்காக, பெண்கள் சுயமாக முன்னேற வேண்டும், பெண்கள் முன்னேறினால்தான் நாடு முன்னேறும் என்ற உயரிய கருத்தோடு 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதுதான் மகளிர் சுய உதவிக் குழுக்கள். அதன் பிறகு, பெண்களுக்கு குடும்ப சொத்தில் சம உரிமை வழங்கப்பட்டது. இந்தியாவிற்கே முதல் மாநிலமாக, number one முதலமைச்சராகத் திகழ்வதற்குக் காரணம் என்னவென்றால், இந்தியாவிலேயே யாரும் சிந்திக்காத ஒன்றை, குடும்ப சொத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்ற வகையில், 1989-ல் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு இயற்றிய அந்தச் சட்டம் 2005-ல் இந்தியா முழுவதிலும் செயல்படுத்தப்பட்டதுதான்.அதைப்போலவே, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெண்கள் பெயரில்தான் வழங்கப்பட்டன. அது ஒரு மாபெரும் சாதனை.

பிற்பகல் 1-05

இலவச பட்டப் படிப்பு என்பது, 1989 ஆம் ஆண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம். அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து தலைவர் வழிவந்த மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட புதுமைப் பெண் திட்டத்தின்மூலம் அரசு பள்ளியில் பயின்று உயர் கல்விக்குச் செல்கின்ற மாணவிகளுக்கு ரூ.1,000/- மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

நாங்கள் மாணவர்களாக மாநிலக் கல்லூரியில் படிக்கும்போது ஒரு விஷயத்தைச் சொல்வார்கள். நம்முடைய முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டமன்ற அலுவல்களை முடித்துக்கொண்டு வீட்டிற்குச் செல்லும்போது, ராணிமேரி கல்லூரியில் ஒரு பேருந்து நிற்கிறது. சுற்றிலும் மகளிர் நிற்கிறார்கள். அங்கே 2 காவலர்கள் நிற்கிறார்கள். தலைவர் எம்.ஜி.ஆர். அது என்ன என்று அவர்களிடம் விசாரிக்கச் சொல்லி கேட்கிறார். தலைவர் அவர்களே, பேருந்தில் ஏறும்போது ஒரு மாணவி தவறி விழுந்து அவருக்கு அடிபட்டுவிட்டது

என்று சொல்கிறார்கள். உடனே தலைவர் பேருந்து ஏன் வெளியே நிற்க வேண்டும்? நாளை முதல் அந்தப் பேருந்து, கல்லூரி வளாகத்திற்குள் சென்று பெண்களை ஏற்றி வரவேண்டுமென்று அந்த இடத்திலேயே உத்தரவிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் பெண்கள் மீதான அக்கறை.

அதுபோலத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெண்கள் கல்வியில் இடைநிற்றல் கூடாது; அதுவும் பட்டப் படிப்பு படிக்கின்ற பெண்கள் எந்தக் காரணத்திற்காகவும் படிப்பை நிறுத்தக் கூடாது என்ற உயரிய நோக்கத்தில் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பட்டப் படிப்பு என்னும்போது, இதெல்லாம் வரலாறு.

*இன்னொரு வரலாறும் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறது. பட்டப் படிப்பு படிக்கின்ற பெண்களை உயர்த்துகின்ற இந்த வேளையில், அதே பட்டப் படிப்பு படித்த பெண்களை ** வரலாறும் தமிழகத்தில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)*

திரு. துரை. சந்திரசேகர்: *இன்னும் ஒரு மகத்தான திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்/ மாணவியர்களுக்கு காலை உணவை அளிக்கின்றார்கள். இதில் ஓர் அறிவியல் உண்மை இருக்கிறது. என்னவென்றால், காலையில் சாப்பிடாமல் செல்கின்ற குழந்தைகளுக்கு பசி வருவதால் அந்த வயதில் அவர்களுடைய மூளை சுறுசுறுப்பாகச் செயல்படாது. பள்ளியில் அவர்கள் பயில வேண்டுமென்றால், பசியோடு இருக்கக் கூடாது என்பது காமராஜருடைய தத்துவம். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருமையாகப் புரிந்துகொண்டு மக்கள்மீதும், மாணவர்கள்மீதும் கொண்டுள்ள அக்கறையால் அறிவியல்பூர்வமாக சிந்தித்து, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பொருளாதார சமநிலை. ஒரு மனிதனை இன்னொரு மனிதன் மதிக்க வேண்டும். ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாது என்பதை உணர்த்துகின்ற ஒரு மாடல்தான், திராவிட மாடல் ஆட்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசிடம் 3 கோரிக்கைகளை வைத்து, நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். சமூக நீதி, பெண்கள் முன்னேற்றம் இத்தனையும் அடங்கிய இந்த மாடல் ஆட்சியில் ஓர் ஆலோசனையாக நான் சொல்வது என்னவென்றால், மாறி வருகின்ற வாழ்வியல் மாற்றங்கள், உணவு பழக்கவழக்கங்களால் பெரும்பான்மையான பெண்களுக்கு கருத்தரித்தல் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. இது, இன்னும் அதிகமாகிக் கொண்டுதான் போகும். கருத்தரிக்கும் சிகிச்சைகளுக்காக பெண்கள் தனியார்மயமாக்கப்பட்ட கருத்தரிப்பு மையங்களுக்குச் சென்று, குறைந்தது 5 இலட்சம் ரூபாய் முதல் 10 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்கிறார்கள். இந்த அரசு இதைக் கவனத்தில்கொண்டு, 5 இலட்சம் ரூபாய், 10 இலட்சம் ரூபாயைச் செலவு செய்ய முடியாத பெண்கள், குழந்தை பாக்கியம் பெறுவதற்கு அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று இந்த சிகிச்சையை மேற்கொள்ள வழிவகை வேண்டும். தமிழ்நாடு முழுவதும் இந்தச் சிகிச்சையை அரசு மருத்துவமனைகளில் கண்டிப்பாக நீங்கள் துவங்க வேண்டும் என்பதை அரசுக்கு உரிமையாக நான் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், தரமான மருத்துவம் பெறுவது ஒரு தனி மனிதனின் உரிமை. அந்த மருத்துவத்தை மக்களுக்கு இலவசமாகக் கொடுப்பது, ஓர் அரசின் கடமை. ஆகவே, தமிழகம் முழுவதுமுள்ள மருத்துவமனைகளில் கருத்தரிப்பு மையத்தை நீங்கள் தொடங்க வேண்டும். ஏழையெளிய தாய்மார்கள் மத்தியில் அது நல்ல வரவேற்பைப் பெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மற்றொன்று. ஊட்டச்சத்து குறைபாடுள்ள கர்ப்பிணிப் பெண்கள், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாத்தல். 100 குழந்தைகள் பிறந்தால், அவற்றில் 13 குழந்தைகள் இறந்துதான் பிறக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஊட்டச்சத்தை உறுதிப்படுத்துவோம் என்ற திட்டத்தைத் தொடங்கினாலும்கூட, அதன் அளவு குறைந்துள்ளது. எனவே,

அதை முழுமையாக இந்த அரசால் மட்டுமே நிவர்த்தி செய்ய முடியும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகத்தான ஒரு திட்டமாக அருமை அன்னை திருமதி சோனியா காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டு, டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் செயல்படுத்தப்பட்ட திட்டம், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம். (மணியடிக்கப்பெற்றது) ஏழையெளிய மக்கள் கையில், அரசு பணம் 200 ரூபாய் போய்ச் சேர வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில் கொண்டுவரப்பட்டது இந்தத் திட்டம். இதற்கான நிதியை தற்போது மத்திய அரசு குறைத்துக்கொண்டே வருகிறது. அதைப் புரிந்துகொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 100 நாட்கள் வேலையை 150 நாட்களாக கொடுப்பேன் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை விரைந்து செயல்படுத்த வேண்டும் அல்லது அறிவிக்கப்பட்ட 100 நாட்களுக்காவது மக்களுக்கு வேலையை வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சமையல் எரிவாயு விலையை எடுத்துக்கொண்டால், 1,000/- ரூபாயைத் தாண்டி போய்க்கொண்டிருக்கிறது. கண்ணீரோடு தாய்மார்கள் என்ன செய்வதென்றுயோசித்தபோது,அவர்களின் கண்ணீரைத்துடைக்கும் விதமாக, இலவசம் கிடையாது, உங்களுக்கு உரிமைத் தொகையாக மாதம் ரூ.1,000/- வழங்குகிறேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தது, அவர்களது கண்ணீரைத் துடைக்கின்ற ஒரு சிறப்பான திட்டமாகத்தான் பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், சமையல் எரிவாயு விலை தற்போது சுமார் ரூ.1,118/- ஆக இருக்கிறது. இன்னும் ஏறிக்கொண்டேதான் இருக்கும். தமிழகத்திலே அந்த நிலை மாற வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு, பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டுமென்று அருமையாகச் சிந்தித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிர் உரிமைத் தொகையை அறிவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் இவ்வளவு பெரிய தொகையை அரசு செலவு செய்வதென்றால், கஷ்டமாகத்தான் இருக்கும், அறிவிப்பார்களோ, மாட்டார்களோ என்று நாங்களெல்லாம்கூட சிந்தித்தோம். அப்படி எல்லோருமே சிந்தித்த வேளையில், திட்டத்தைச் சிறப்பாக அறிவித்து இன்று மக்கள் மனதில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனக்கு இந்த வாய்ப்பை அளித்த பொன்னேரி தொகுதி வாக்காளர்களுக்கும், எங்களுடைய CLP தலைவர் அவர்களுக்கும், எங்கள் கட்சிக் கொறடா திருமதி S. விஜயதரணி அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

***டாக்டர் வை. முத்துராஜா:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதிப் போராளி தந்தை பெரியார் அவர்களையும், அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களையும் இந்த அவையில் வணங்குகிறேன்.*

உதயசூரியனாய் ஓய்வில்லாமல் உழைத்தவர்; தமிழ்நாட்டின் வளர்ச்சியாகத் திகழ்ந்தவர்; தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் வாழ்ந்தவர்; என்றும் தமிழ் மக்களின் நினைவில் வாழும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடம் நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் புகழ் தலைவரின் புனைப்பெயரோ உழைப்பு! எதிரிகளின் புருவங்களும் விரிகின்ற வியப்பு! இன்முகத்தால் ஓடிப்போனது துயரம்! நீங்கள், இந்தியாவே நிமிர்ந்து பார்க்கும் உயரம்! (மேசையைத் தட்டும் ஒலி) நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் நம் தமிழ்நாடு வளர்ந்துள்ளது. தங்கள் நாட்காட்டியில் வெற்றிகளே குவிந்துள்ளன. எங்கள் விழிகளின் வெளிச்சமே! எங்கள் விடியலின் ஒளி வடிவமே! உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞரின் கலை வாரிசே! எங்கள் முதல்வரின் கழக வாரிசே! அரசியலில் நீங்கள் தொடங்கிய இடமோ, கழக இளைஞர் அணி; அதன்மூலம் சிறப்புப் பெற்றது சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி. (மேசையைத் தட்டும் ஒலி) தங்களை அமைச்சராக்கி, எங்களின் தற்காலிக தாகம் தீர்த்தது கழகம். மாமன்னனாய் உங்களைக் கொண்டாட காத்திருக்கிறது

இந்த உலகம். கழகத்தின் இளவரசரே! தமிழகத்தின் இளம் அமைச்சரே! (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் கருவறையில் இருக்கும்போதே மிசா எனும் கொடுமையான சட்டத்தைத் கேட்டு அரசியல் பாடம் கற்றவரே! எங்களின் இதயத் துடிப்பே உங்களை வணங்குகின்றேன்.

இந்த அவையில் நடுவராக இருந்து எங்களை வழிநடத்தும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, எனது மாவட்ட அமைச்சர்களான மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களே, அரசு தலைமைக் கொறடா அவர்களே, கூட்டணிக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்மீது நம்பிக்கை வைத்து, எனக்கு வாக்களித்து இந்தப் பெருமைமிகு பேரவைக்கு என்னை அனுப்பி வைத்த உயிரினும் மேலான எனது புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், என் வெற்றிக்காக அயராது உழைத்த தொகுதி கழக நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் துவங்குகிறேன்.

புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் மூடிக்கிடந்த முத்துலட்சுமி அம்மையார் மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்த ஆணை வழங்கியதற்கும், புதுக்கோட்டை மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையை தற்காலிகமாகத் தீர்த்து வைக்க 73 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முத்துலட்சுமி அம்மையார் மருத்துவமனையை மேம்படுத்தும் விதமாக, 100 படுக்கைகள் கொண்ட தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியும், புதுக்கோட்டை குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், விரைவில் புதுக்கோட்டைக்கு என்று தனி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, புதுக்கோட்டை மக்களின் தாகம் தணிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

[டாக்டர் வை. முத்துராஜா] [2023 ஏப்ரல் 17
பிற்பகல் 1–15

பல ஆண்டுக் காலமாக புதுக்கோட்டை, திருவப்பூர் இரயில்வே கேட் பகுதியில் நிலவி வந்த போக்குவரத்து நெரிசலைத் தீர்க்கும் வகையில், மேம்பாலம் அமைப்பதற்கு ரூ.32 கோடி ஒதுக்கீடு செய்து, நிலஎடுப்புப் பணி துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை கழக அரசு அறிவித்தது. அதற்கு தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நில எடுப்புப் பணியின்போது, அப்பகுதி மக்களின் வீடுகளுக்கும், வியாபாரிகளின் கடைகளுக்கும், பெருமளவு இழப்பு ஏற்படாமல் பணியினை மேற்கொள்ள வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளிப் படிப்பை முடித்து, உயர் கல்வி தொடரும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, புதுக்கோட்டை நகரப் பகுதியில், அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரி, அரசு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அரசின் நிதிநிலைமைக்கேற்ப, வரும் ஆண்டுகளில் அமைத்துத் தரும்படி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தியாவிலேயே தொழில் துறையில் சிறந்து விளங்கும் மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டில் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக புதுக்கோட்டை திகழ்கிறது. அந்த நிலையை மாற்றி, தொழில் துறையில் புதுக்கோட்டையை முன்னேற்றும் வகையில், SIPCOT பகுதியினை மேம்படுத்தி, தொழில் வளர்ச்சியோடு சேர்த்து எனது மாவட்ட இளைஞர்களின் வேலைவாய்ப்பினை உறுதிசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் அவர்களுக்கு முழு உருவச் சிலையை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேரமின்மை காரணமாக என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை இந்த அவையில் தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன். அதனை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவேற்றம் செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

'பால்நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து' என்றார், மாணிக்கவாசகர். அந்தப் பரிவுஉணர்ச்சியின் உச்சம்தான், பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம். 'கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்; கல்வியுடைய பெண்கள் திருந்திய கழனி' என்றார் புரட்சிக் கவிஞர். அரசுப் பள்ளிகளில் படித்து உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம் என்பது, இந்தியாவின் எந்த மாநிலமும் எண்ணிக்கூட பார்க்காத ஏற்றமிகு திட்டம் அல்லவா!

பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே...!

என்றார் பாரதிதாசன்.

ஆணாதிக்கச் சமூகத்தில், தங்கள் தேவைகளை எவர் உதவியும் இல்லாமல் நிறைவு செய்துகொள்ள, பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்க, இதோ செப்டம்பர் 15 ஆம் தேதி, அண்ணா பிறந்த நாளில், குடும்பத் தலைவிக்கு மாதம் ஆயிரம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) உரிமைத் தொகை வழங்கும் மகத்தான திட்டத்தை அறிவித்துள்ளார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?

என்ற பாவேந்தர் வினாவுக்கு, இதோ அந்த நாள், எங்கள் தலைவர், மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் ஆட்சி செலுத்தும் இந்த நாள்தான் என்று உரக்க சொல்லத் தோன்றுகிறது.

சமூக நலத் துறை மற்றும் மகளிர் உரிமைத் துறையில் கழக அரசின் சாதனைகள் எண்ணற்றவை. வழக்கமாக, பெண்களுக்கு பிறந்த வீட்டிலிருந்து சீதனங்களை வழங்குவார்கள்.

ஆனால், பிறந்த வீட்டில் வழங்குவதைவிட அதிகமான சீதனங்களை (மேசையைத் தட்டும் ஒலி) தகப்பன் ஸ்தானத்தில் இருந்து தமிழ்நாட்டு பெண்களுக்கு வழங்குகிறார்கள் நம் சிறப்புக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மகப்பேறு காலத்தில் பெண்களை மகிழ்விக்க கர்ப்பிணிப் பெண்களுக்கு சமத்துவ வளைகாப்பு என மகத்தான திட்டத்தைச் செயல்படுத்தி, கருவில் இருக்கும் குழந்தைகளையே மகிழ்விக்கிறார் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

திருநங்கைகளின் நலனில் அக்கறை கொண்ட நமது கழக அரசில், திருநங்கைகள் நல வாரியம் மூலமாக மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் வழங்கி, அவர்களும் இன்றைய சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு ஓர் அங்கீகாரம் அளித்து சமத்துவம் காக்கிறார் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பெண்களின் முன்னேற்றத்தை திராவிடத்திற்கு முன், திராவிடத்திற்குப் பின் என்றே பிரிக்கலாம். வரலாற்றை சற்று பார்த்தால், இந்தச் சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ஏராளம். அதையெல்லாம் மாற்ற திராவிட இயக்கங்கள் மேற்கொண்ட விழிப்புணர்வு பிரச்சாரங்களும், போராட்டங்களுமே இன்று பெண்கள் இல்லாத துறையே இல்லை என்ற அளவுக்கு மாறியுள்ளது. மேலும், அகில இந்திய அளவிலும், உலகின் அறிஞர் பெருமக்களிடையேயும், தமிழ்நாட்டு பெண்களுக்கு பெரும் மதிப்பையும், பாராட்டுதலையும் பெற்றுத் தந்துள்ளது நம் திராவிட இயக்கங்கள்.

இந்தத் தமிழ்ச் சமூகம் குறுகிய காலகட்டத்தில் இவ்வளவு வளர்ச்சியை எட்டி இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு. இந்த இட ஒதுக்கீட்டை தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு வெவ்வேறு காலகட்டங்களில் ஆட்சியாளர்களிடமும், ஆதிக்க வர்க்கங்களிடமும் போராடி இவற்றை தமிழகத்திற்கு உறுதி செய்தது திராவிட இயக்கங்கள். ஆனால், தற்போது பாசிச அரசு பொருளாதார ரீதியில் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்து, இட ஒதுக்கீட்டின் நோக்கத்தையே சீர்குலைக்க நினைக்கின்றனர். அவர்களுக்கு ஒன்றை நான் நினைவூட்ட விரும்புகின்றேன். ஆட்சியில் இருப்பது அடிமை அரசு அல்ல; சமூக நீதிக் காவலர்

முத்தமிழறிஞரின் மகன் என்பது நினைவில் இருக்கட்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவ மேற்படிப்பில் அகில இந்திய அளவில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உறுதி செய்து கொடுத்தவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். பாசிசவாதிகளே, இட ஒதுக்கீட்டில் உங்களின் கணக்கு ஒருபோதும் பலிக்காது. 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவின்பொழுது தலைவர் கலைஞர் அவர்கள் 'நாற்பதும் நமதே, நாளையும் நமதே' என்று கூறினார். அதே நிலைதான் இன்றும்; வரவிருக்கும் "நாற்பதும் எங்கள் தளபதியே, நாளைய நாடும் எங்களது தளபதியே". (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்களின் கழக ஆட்சியைப் பற்றி மக்கள் என்னிடம் கூறிய கருத்துகளை இங்கே நான் பதிவிட விரும்புகின்றேன். உலகமே முடங்கிக் கிடந்த கொரோனா காலகட்டத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த இக்கட்டான காலத்திலும் 'மக்களைத் தேடி மருத்துவம்', 'இல்லம் தேடிக் கல்வி', 'கலைஞரின் வருமுன் காப்போம்' போன்ற திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். தலைவர் ஒரு பக்கம் இருக்க, சேப்பாக்கம் தொகுதியில் தனது கால் தடங்கள் படாத இடமே இல்லை என்று கூறும் அளவிற்கு, தொகுதி முழுவதும் வீடு வீடாகச் சென்று, மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார் நமது மாண்புமிகு சின்னவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

இதையெல்லாம் பார்த்த நான், நாமும் ஒரு திராவிட வளர்ப்புதான் என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் சின்னவர் அவர்களின் வழிகாட்டுதலோடு, எனக்கு நானே இல்லம் தேடி MLA என்ற ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு, ஒவ்வொரு ஊராட்சியாக ஒதுக்கி, மக்களை அவர்களது இல்லத்திற்கே சென்று அவர்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்ய வேண்டும் என்று முடிவு செய்து, கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் தொடங்கி இந்நாள் வரை 18 ஊராட்சிகளிலுள்ள ஏறத்தாழ 12,000 குடும்பங்களில் மக்களைச் சந்தித்து, அவர்களிடம் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்துள்ளேன். நான் சென்று மக்களைச்

சந்திக்கும் இடமெல்லாம் தொலைநோக்கு என்ற சொல்லுக்கு உருவமாக, பெண்களின் வளர்ச்சிக்காகச் செயல்படும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களை பெண்கள் மனம் குளிர்ந்து வாழ்த்தி வணங்குகின்றனர்.

ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டுக் கிடந்த மாற்றுத் திறனாளர், மற்றவர்க்கு நிகராக மதிக்கத்தக்கவர்களாக எழுந்து நடக்க உதவும் ஊன்றுகோலாகவும், சமூகத்தில் அவர்கள் உயர்ந்திட உந்து சக்தி வழங்கிய தூண்டுகோலாகவும், தாயின் தயாள குணமும், தந்தையின் கருணை மனமும் நிதியாக அமையப் பெற்ற தலைவராகத் திகழ்கிறார் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதனால்தான், சமூகத்தில் அலட்சியப்படுத்தப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வாரியம்கண்ட தந்தையின் வழி, அவர்களின் வாழ்வின் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும் நிதிகளை வாரி வழங்குவதுடன், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளர் குடும்பத்தினர் உயர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முதல்வராக நம் தலைவர் திகழ்கின்றார்.

மாற்றுத் திறனாளிகளின் நலனை தாய்மையோடு அணுகும் நம் அரசில், விழிகளுக்கு விழியாக, செவிகளுக்கு செவியாக, கைகளாக, கால்களாக, இதயமாகவே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை காட்டுகின்றார்கள். ஊனம் என்ற சொல்லையே ஊனமாக்கி உதறித் தள்ளி, 'மாற்றுத்திறன் கொண்டோர்' எனும் புதிய வார்த்தைகளால் புத்தொளி பாய்ச்சி, நம்பிக்கையூட்டிய அரசு, நம் அரசு. இப்படி எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்து, மாற்றுத் திறனாளிகளின் காவலன் தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் மிகச் சிறப்பாக இந்தத் துறையைக் கண்காணித்து வருகிறார் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில், விளையாட்டு வீரர்களின் விடியல் நாயகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு சின்னவர் அவர்களின் ஏற்பாட்டில் ஒரு சர்வதேச மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியை தமிழ்நாட்டில் நடத்தி அவர்களை கௌரவிக்கும்படி இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாற்றுத் திறனாளிகளில் இரண்டு கால் முற்றிலும் பாதிப்படைந்தவர்களுக்கு மட்டுமே சட்டமன்ற

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒரு கால் பாதிப்படைந்தவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டும் மூன்று சக்கர வாகனம் வழங்க விதிமுறை உள்ளது. ஆகவே, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வருடத்திற்கு 10 மூன்று சக்கர வாகனங்கள் கொடுக்க அனுமதி கொடுத்தால், குறுகிய காலகட்டத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள ஒரு கால் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் தேசிய அடையாள அட்டை மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையை நமது கழக அரசு வழங்கினால், மனநலம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் குடும்பத்தினருக்கு மிகவும் பேருதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு அலுவலகங்களுக்கு பணிக்கு வரும் பெண் ஊழியர்கள் தங்கள் குழந்தைகளைப் பராமரிக்க சிரமப்படுகிறார்கள். எங்கேயாவது உறவினர்கள் வீட்டிலோ அல்லது குழந்தைகள் காப்பகங்களிலோ விட்டுவிட்டு வருகின்றார்கள். இந்தச் சிரமங்களைப் போக்கும்விதமாக, நம் தமிழ்நாடு அரசு, அரசு அலுவலகங்களில் குழந்தைகளைப் பராமரிக்கும் அறை ஒன்றை ஒதுக்குமாறு இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

சமூகத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் திருக்கோயில்களில் முடி இறக்கும் தொழில் செய்யும் சமூகத்தினருக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், அறநிலையத் துறையின்கீழ் செயல்படும் திருக்கோயில்களில் முடி இறக்கும் தொழில் செய்யும் பணியை அரசுப் பணியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மகளிர் சுய உதவிக் குழு மூலமாக தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்காக அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் தனியாக அவர்களுக்கென்றே கடைகள் ஒதுக்கப்பட வேண்டுமென்று இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு பதிவு பெற்று செயல்பட்டுவரும் தொண்டு நிறுவனங்களைக் கண்காணித்து, மூன்று வருடங்களுக்கு மேலாக சிறப்பாகச் செயல்பட்டுவரும் தொண்டு நிறுவனங்களுக்கு அவர்களின் தேவைக்கு ஏற்ப, கட்டட வசதிகளை அரசு செய்து தர வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

யாசகர்கள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க அரசு பல திட்டங்களை வகுத்திருந்தாலும், இன்றளவும் கோயில் வாசலிலும், பல இடங்களிலும் யாசகர்களை பார்க்க முடிகின்றது. ஆகையால், அந்த நிலைமாற, மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சமூக நலத் துறை அதிகாரிகளின்மூலம் ஆய்வு மேற்கொண்டு, அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். ஆய்வின்போது யாசகர்கள் இருப்பதைக் கண்டறிந்தால், அவர்களை அரசு அல்லது தனியார் தொண்டு நிறுவனங்களில் சேர்த்து, அதற்கான ஆவணங்களை அரசுக்கு சமர்ப்பிக்க ஆணை வழங்கிட வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் அங்கன்வாடிக் கட்டடங்களை மேம்படுத்தி, குழந்தைகளுக்கு ஏற்றவாறு அறிவுசார் வண்ணங்களைத் தீட்டி, ஸ்மார்ட் கிளாஸ் (Smart Class) முறையில் தரமுயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தச் சமூகத்தில் சமூக நீதி, சமத்துவம், மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வுக்காக இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்திய திராவிடத்தை, எதிர்வரும் சந்ததியினரும் உணரும்வண்ணம், எங்கெல்லாம் அரசுக் கட்டடங்களில் “தமிழ் வாழ்க” என்ற தலைவர் கலைஞர் அவர்களால் தமிழுக்குப் பெருமை சேர்க்கப்பட்ட பதாகைகள் இருக்கின்றதோ, அதனுடன் சேர்த்து “தமிழ் வாழ்க, திராவிடம் வெல்க” என்று அமைக்க வேண்டும் என்று எனது கடைசி கோரிக்கையை வைத்து, திராவிடத்தால் வாழ்ந்தோம்! திராவிடத்தால் வாழ்கின்றோம்!

திராவிடத்தால் வாழ்வோம்! என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொண்டு, வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு! வெல்க திராவிடம்! என்று கூறி, எனது உரையை முடிக்கின்றேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதிக் கோரிக்கைகளை கொடுத்துவிடுகிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

புதுக்கோட்டை நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான பழுதடைந்துள்ள குடியிருப்புக் கட்டடங்களை அகற்றிவிட்டு, புதிதாக குடியிருப்புக் கட்டடங்கள் அமைத்துத் தர வேண்டும். புதுக்கோட்டை நகராட்சி, பூங்கா நகர், வார்டு எண் 36–ல், வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் புதிதாக குடியிருப்புக் கட்டடங்கள் அமைத்துத் தர வேண்டும். புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கல்லூரி வரை பறக்கும் மேம்பாலம் அமைத்துத்தர வேண்டும். புதுக்கோட்டையிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலை மற்றும் புதுக்கோட்டையிலிருந்து விராலிமலை, பொன்னமராவதி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வழியில் கட்டியாவயல் சந்திப்பில் புதிய மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும்.

புதுக்கோட்டை–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் புதிய வழித்தடம் ஒன்று அமைத்துத்தர வேண்டும். புதுக்கோட்டை ஒன்றியம், முள்ளூர் ஊராட்சிலிருந்து கேப்பரை வரை புறவழிச் சாலை அமைத்துத்தர வேண்டும். புதுக்கோட்டை ஒன்றியம், புத்தாம்பூர் ஊராட்சிக்குட்பட்ட ராயகுளத்தினைத் தூர்வாரி, மேம்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்களூர் ஊராட்சி, பெருங்களூர் கிராமத்தில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான செருவாக்குளத்தைத் தூர்வாரி மேம்பாடு செய்ய வேண்டும். புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் ஊராட்சியில் 1 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்துத்தர வேண்டும்.

கறம்பக்குடி ஒன்றியம், கரு. தெற்குத் தெருவிலிருந்து சொக்காந்தெரு புல்லான்விடுதி இணைப்பு சாலை (2 கி.மீ.) மிகவும் பழுதடைந்துள்ளது. ஆகவே, அந்தச் சாலையைச்

சீரமைத்துக் கொடுக்க வேண்டும். கறம்பக்குடி ஒன்றியம், சூரக்காடு பகுதியிலிருந்து மங்கான்கொல்லைப்பட்டி மழையூர் இணைப்புச் சாலையை (4 கி.மீ.) மேம்பாடு செய்து, புதிதாக தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும்.

கறம்பக்குடி ஒன்றியம், மழையூர் அல்லது வெட்டன்விடுதியில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் வாசனை திரவிய கம்பெனி அமைத்துத் தர வேண்டும். கறம்பக்குடி ஒன்றியம், வானகண்காடு ஊராட்சி, வானகண்காடு கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள்.

***திரு. ம. பிரபாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். திராவிட சித்தாந்த சிற்பி பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். திராவிட சித்தாந்தத்தை இரத்தத்திலே கொண்ட தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். திராவிட மாடலுக்கு அடித்தளமிட்ட நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

பிற்பகல் 1–25

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பேர் சொல்லும் அளவிற்கு திராவிட சித்தாந்தம் கொடுத்த அதிகார பேனாவைக் கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு, மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, உள்ளாட்சி பதவிகளிலே மகளிருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு, மகளிருக்கு உரிமைத் தொகை, இல்லம் தேடிக் கல்வி, இல்லம் தேடி மருத்துவம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், கள ஆய்வில் முதலமைச்சர், காலை சிற்றுண்டி திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை வழங்கிய நம்முடைய திராவிட மாடல் முதல்வர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி, இந்த உரையைத் துவக்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைக்கும் இந்திய ஒன்றியத்தை சர்வாதிகார நாடாக மாற்ற முடியாதளவிற்கு சட்டங்களை இயற்றி வைத்த,

இந்தியாவின் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களை இந்த அவையில் வணங்கி மகிழ்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் திராவிட நாயகர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தளபதியாய், ஆதிக்க சக்தியை அதன் களத்திலேயே நின்று சவால் விட்டு போராடிக்கொண்டிருக்கும் எங்களது மண்ணின் மைந்தர், மேனாள் அமைச்சர் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஆ. ராசா அவர்களை வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 5–5–2022 அன்று இதே அவையில் எனது கன்னிப்பேச்சில் நமது சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு உதயநிதி அவர்களுக்கு 'காலம் கனிந்துவிட்டது அதற்கு நமது முதல்வர் மனம் கனிய வேண்டும்' என்று நான் அவையில் பேசியதை நினைவுகூர்ந்து இன்று பலரும் வாழ்த்தும்வண்ணமாக அவர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பதவியேற்று, சிறப்பாகப் பலரும் பாராட்டத்தக்க வகையில் செயலாற்றி வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் அவர் பாணியில் சொல்ல வேண்டுமென்றால், நின்று விளையாடி, four, sixer என கலக்குகிறார்.

மாண்புமிகு அமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களது உன்னதமான உழைப்பு, பொது மக்களிடம் அவரது கனிவான அணுகுமுறை, அவர் செயலாற்றும் பாங்கு, ஓரிரு துறைகளோடு நின்றுவிடக் கூடாது. அதையும் தாண்டி, நமது No.1 முதல்வரின் தலைமையின்கீழ் அனைத்துத் துறைகளிலும் அவரது உழைப்பு, சீரிய சிந்தனை, மகளிர் உயர்வு குறித்த தொலைநோக்குத் திட்டம் ஆகியவை குறித்த பணிகளை, மாண்புமிகு முதல்வரின் துணைநின்று மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய ஒன்றியத்திலேயே முன்மாதிரியாக விளங்கிக் கொண்டிருக்கும் நமது போக்குவரத்துத் துறையை, அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறுகின்ற வகையில் ஒவ்வொரு நாளும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி நவீனப்படுத்திக் கொண்டிருக்கும் நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்கு

எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் நமது நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கம். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கு வணக்கம் மற்றும் அனைத்துத் துறை அமைச்சர்களுக்கும், அனைத்து சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்னை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மக்கள் பிரதிநிதியாகத் தொடர்ந்து வலிமையாகச் செயல்பட ஒத்துழைத்துக் கொண்டிருக்கும் எனது தொகுதி மக்களுக்கும், மாவட்ட மக்களுக்கும் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும், எனது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய ஒன்றியத்துக்கே முன்மாதிரியாக விளங்கிக் கொண்டிருக்கும் நமது திராவிட மாடல் ஆட்சியில் எனது பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் தைவான் நாட்டின் Phoenix *நிறுவனம் மற்றும்* Kothari *நிறுவனம் இணைந்து எங்கள் பகுதி இளைஞர்கள் மற்றும் பெண்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையில், புதிய காலணி* SIPCOT *தொழிற்பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டி, எனது சட்டமன்றத் தொகுதிக்கு நேரில் வந்து தொடங்கி வைத்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும் இந்த அவையில் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எங்களது பெரம்பலூர் நகரப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பெரம்பலூர் நகராட்சிக்கென்று தனி காவிரி–கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தந்து, பெரம்பலூர் நகராட்சியைத் தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தியும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்தை புதியதாக மாற்றியமைக்க நிதியையும் ஒதுக்கி, எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும்,

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தடுப்பணைகளை அமைக்க 8 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள தேவையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து புதியதாக மேட்டுப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அனுமதி மற்றும் கட்டடம் கட்ட நிதி ரூ.25 இலட்சம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. பெரியகருப்பன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் எனது தொகுதியில் பள்ளிக் கல்வித் துறை கட்டடங்கள் கட்ட 10 கோடியே 70 இலட்சம் ரூபாயும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கட்டடங்கள் கட்ட ரூபாய் 5 கோடியே 14 இலட்சமும், நீதித் துறை கட்டடங்கள் கட்ட ரூபாய் 5 கோடியே 60 இலட்சமும், கால்நடை பராமரிப்புத் துறை கட்டடங்கள் கட்ட ரூபாய் 40 இலட்சமும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை கட்டடங்கள் கட்ட ரூபாய் 7 கோடியே 46 இலட்சமும், காரை புதை படிவ புவியியல் துறை கட்டடம் கட்ட ரூபாய் 7 கோடியே 80 இலட்சமும் நிதி வழங்கி உதவிபுரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாற்றுத் திறனாளிகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் என்னைப் பேசுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு

சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர், சட்டமன்றப் பேரவை கொறடா மாண்புமிகு அண்ணன் முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலாளர், சட்டமன்றப் பேரவை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. மனித நேயம் கொண்ட மகத்தான தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், உடலால் ஊனமுற்றவர்களை சொல்லால் ஊனப்படுத்தக் கூடாது என்ற உணர்வோடு, மாற்றுத் திறனாளி என்ற வார்த்தையை உருவாக்கி உற்சாகப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு அரசு வேலைகளில் 4 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் ஒளியேற்றினார்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதநேயம் கொண்ட மகத்தான தலைவர் கலைஞர் அவர்களின் வழிவந்த நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனித வரலாற்றிலேயே இல்லாத வகையில், மாற்றுத் திறனாளிகளில் நடக்க முடியாதவர்கள்கூட அனைத்து மக்களைப்போல அலைகடலின் பேரிரைச்சலை அருகிலிருந்து கேட்க, நுரை ததும்பும் கடல் நீர் அவர்களது காலில் பட ஏதுவாக, மெரினா கடற்கரையில் புதிய மர நடைபாதையை உருவாக்கி, அவர்களது மனதை உற்சாகப்படுத்தினார். தேவை யாருக்கு என்பதை தேடித் தேடிக் கண்டுபிடித்து, மாற்றுத் திறனாளிகளில் செவித்திறன் குறைபாடு உள்ளவர்களும் உயர் கல்வி பயில வேண்டுமென நிதியொதுக்கீடு செய்து கல்வி பயில ஏற்பாடு செய்தார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண நிதியுதவித் திட்டம் அறிவித்ததோடு மட்டுமல்லாமல், அந்த நிதியைப் பத்திரமாக அல்லாமல், முழுமையாக பணமாகக் கிடைக்கச் செய்தார். அதேபோன்று, மாற்றுத் திறனாளிகளில் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கென சிறப்பு இல்லங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், சாலையோரங்களில் தள்ளுவண்டிக் கடை அமைக்கவும், அவர்களுக்கு நிதியுதவி வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளார். இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார்

சைக்கிளை ஏற்கெனவே பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு, நீண்ட காலம் பயன்படுத்தியதற்குப் பிறகு, பழுதான வண்டிகளுக்கு மாற்றாக, புதிய மோட்டார் சைக்கிள்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழையெளிய, வாழ்வதற்கு இடமில்லாத மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் வீடு கட்ட நிதி வழங்கும் திட்டங்கள் மனிதநேய மாண்பின் உச்சமாக நமது முதல்வர் அவர்களால் வழங்கப்படுபவை, மாற்றுத் திறனாளிகள் அனைவராலும் போற்றப்படும் திட்டங்களாகும்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை. தந்தை பெரியாரின் திராவிட சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்திய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொடக்க காலத்தில் பெண்கள் பள்ளிக் கல்வி பயில வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதன் பிறகு, அதன் நீட்சியாக கல்லூரி படித்தவர்களுக்கென்று புதிய திட்டமும் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வந்தது. அதன்மூலம் பெண்களைப் படிக்க வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கி, இன்றைக்கு இந்தியாவிலேயே பெண்கள் அதிகம் படித்து, அனைத்துத் துறைகளிலும் கோலோச்சுகின்ற மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் காலத்திற்குத் தகுந்தாற்போல, தேவைக்குத் தகுந்தபடி மாற்ற வேண்டும். அதேபோல, டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திருமண நிதியுதவித் திட்டம் இன்றைக்கு நவீனப்படுத்தப்பட்டு, பள்ளிக் கல்வி முடித்து, அரசு கல்லூரியில் சேர்கின்ற அனைத்து மாணவிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற புரட்சிகரமான புதுமைப் பெண் திட்டத்தை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் சமூகமே இன்று பூரிப்போடு வாழ்த்துகிறது.

பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணத்தை அறிவித்து, பெண்களுடைய வாழ்வில் மிகப் பெரிய பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வந்ததை இன்று இந்தியாவே திரும்பிப் பார்க்கிறது. தமிழ் சமூகத்தின் மேல் அக்கறையும்,

ஆதரவும் கொண்ட நம் தமிழக முதல்வர் அவர்கள், இந்த அரசு அனைவருக்குமான அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையில், சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள விதவைகள், ஆதரவற்ற விதவைகள், முதிர் கன்னிகள் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வர, கைம்பெண்கள் நல வாரியம் அமைத்ததை சான்றோர்கள் அனைவரும் பாராட்டுகின்றனர்.

அதேநேரத்தில், விளிம்புநிலை பெண்களில், யாராலும் கண்டுகொள்ளப்படாத முதிர் கன்னிகளை அரசு கண்டறிந்து, அவர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்கி, தொழில் தொடங்க முதலீட்டுக் கடன் வழங்கி, அவர்கள் வாழ்விலும் ஒளியேற்ற வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த அவையின்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தையற் குழுக்களில் உள்ள பெண்களுக்கு உயர் தொழில்நுட்ப தையல் இயந்திரம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட இருப்பதாக அறிந்து, அதனைப் பாராட்டி மகிழ்வதோடு நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், அந்த இயந்திரம் பெறுகின்ற அனைத்து தையற் குழு உறுப்பினர்களுக்கும் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கி, அவர்களை ஒருங்கிணைத்து தையல் தொழில் கூட்டமைப்பை உருவாக்கி, அவர்கள் வாழ்வில் பொருளாதார விடியல் ஏற்பட வழிவகை செய்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் அனைத்து குடும்பங்களிலும் உள்ள குடும்பத் தலைவிகளின் உழைப்பை அங்கீகரிக்கும்வகையில், அவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை வருகின்ற செப்டம்பர் மாதம் முதல் வழங்கவிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களை பெண்கள் சமூகமே கொண்டாடி மகிழ்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட மாற்று பாலினத்தவர்களை அனைவரும் அன்போடு ஏற்றுக்கொள்கின்ற வகையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களை திருநங்கை என்று அழைக்க வேண்டுமென உத்தரவிட்டதோடு, அவர்களுக்கான நல வாரியம் அமைத்து, அரசு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு கிடைக்க உத்தரவிட்டு, திருநங்கைகளையும் மனித சமூகம் திரும்பிப் பார்க்க

வைத்தார். அதனுடைய நீட்சியாக நம்முடைய முதல்வர் அவர்கள் இன்று ஆர்வமுள்ள திருநங்கைகளுக்கு தொழில் தொடங்க பல்வேறு துறைகள் மூலமாக பயிற்சியும், முதலீட்டுக் கடனாக ரூ.50,000/– வழங்கவும் உத்தரவிட்டுள்ளதை திருநங்கைகள் சமூகம் நன்றியோடு திரும்பிப் பார்க்கிறது. அதேநேரத்தில், அவ்வாறு திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெறுகின்ற திருநங்கைகளுக்கு தொழில்முனைவோர் பயிற்சி வழங்கி, புதிய தொழில் தொடங்க மேலும் நிதி வழங்கி, அவர்களை புதிய தொழில்முனைவோராக மாற்றி, பொது சமூகத்தின் முழு அங்கீகாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் இன்று திருநங்கைகள் படிக்கவும், தொழில் தொடங்கவும் தங்களுக்கான வாழ்வாதாரத்தை அமைத்துக்கொள்ளவும் வேண்டுமென்ற விழிப்புணர்வு பெற்று வருகின்றனர். விரும்புகின்ற திருநங்கைகளுக்கான தனியார் வேலைவாய்ப்பு முகாம்களை தமிழகமெங்கும் மண்டல அளவிலும், மாநில அளவிலும் நடத்திட வேண்டுமென இந்தநேரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த அவைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது கோரிக்கைகளில் ஒரு சில கோரிக்கைகளை மட்டும் படித்துவிடுகிறேன். மீதியுள்ள கோரிக்கைகளை நான் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை, நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனவும், அதனை சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களுக்கு அனுப்பி நிறைவேற்றித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் சம பரப்பளவு மற்றும் சம அளவில் மக்கள்தொகையைக் கொண்ட மாவட்டங்களாகும். அரியலூர் மாவட்டத்தில் 18 காவல் நிலையங்கள் உள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தில் 8 காவல் நிலையங்கள் மட்டுமே உள்ளன. இதன் காரணமாக பெரம்பலூர் மாவட்டத்தில் காவலர்கள், காவல் அலுவலர்களின்

எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்படும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைச் சீர்செய்ய, மாவட்டம் முழுவதும் உள்ள திருடர்கள் மற்றும் திருட்டு பிரச்சினைகளைத் தடுக்க, பெரம்பலூர் நகர்ப்புற பகுதிக்கென தனிக் காவல் நிலையம், பெரம்பலூர் வட்டத்தில் அம்மாபாளையம், வேப்பந்தட்டை வட்டத்தில் வேப்பந்தட்டை மற்றும் வி. களத்தூர், குன்னம் வட்டத்தில் அகரம்சீகூர் அல்லது வேப்பூர் ஆகிய இடங்களில் கூடுதலாக புதிய காவல் நிலையங்களை அமைத்து, மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம் முழுமைக்கும் ஒரே ஒரு வருவாய்க் கோட்டம் உள்ளது. இந்த மாவட்டம் குறைவான நிலப்பரப்பையும், குறைவான மக்கள் தொகையையும் கொண்டிருந்தாலும், இங்கு வாழும் மக்களில் 34 சதவிகிதம் பேர் வறியவர்களாக வாழ்கிறார்கள். எனவே, அங்கு ஏற்படும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைக் களையவும், இளம் வயது தற்கொலைகளை விசாரிக்கவும், அதிகமான நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளை விசாரிக்கவும், மூத்த குடிமக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்க்கவும், நரிக்குறவர், பிற சாதி மற்றும் பொதுவான சான்றிதழ்களை ஒரே கோட்டாட்சியரால் வழங்கவும், நிர்வாகம் செய்ய முடியாத காரணத்தினால் இங்கு வருவாய் மற்றும் இதர தினசரி நிர்வாகப் பணிகள் தேங்கி, மாவட்ட வளர்ச்சிப் பணிகள் முடங்கிப்போய் கிடக்கின்றன. எனவே, பின்தங்கிய இந்த மாவட்டத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, விதிகளைத் தளர்த்தி, சிறப்பு அனுமதி வழங்கி, எங்களது மாவட்டத்திற்கு இரண்டு கோட்டாட்சியர்களை நியமனம் செய்து அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்துவரும் பெரம்பலூர் நகரத்தில் அனைத்துப் பேருந்துகளும் வந்து செல்லும் வகையில், தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் புதிய நவீன ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) நன்றி சொல்கிறமாதிரி சொன்னீர்கள். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளெல்லாம் என்னிடம் வந்து

கொண்டிருக்கிறது என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகள் அனைத்தையும் என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிடுங்கள்.

திரு. ம. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தக் கோரிக்கைகளையெல்லாம் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாபெரும் அவையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியானது இரண்டரை தாலுகாக்களைக் கொண்ட தொகுதி. இதில் 121 ஊராட்சிகளும், சுமார் 200 கிராமங்களும் அடங்கியுள்ளன. இதில் ஏராளமான கிராமங்கள் இன்றும் வளர்ச்சியடையாமல் உள்ளன. எனவே, அனைத்து கிராமங்களும் முன்னேறுகின்ற வகையில் இந்த தாலுகாக்களை மூன்று தாலுகாக்களாகப் பிரித்து, வாலிகண்டபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா மற்றும் யூனியன் அமைக்க வேண்டும்.

பெரம்பலூர் நகரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்று வட்டச் சாலைகளில் மீதமுள்ள பகுதிகளில் துறையூர் ரோடு–திருச்சி ரோடு வரை, திருச்சி ரோடு–அரியலூர் ரோடு, அரியலூர் ரோடு முதல் GST ரோடு வரை சுற்று வட்டச் சாலை அமைக்க நிதி மற்றும் நிர்வாக அனுமதி வழங்க வேண்டும்

பெரம்பலூர் நகரத்தின் மையப் பகுதியில் புராதனமான கால்நடை மருந்தகத்தை பன்முக கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். நடமாடும் கால்நடை மருத்துவமனையே இல்லாத பெரம்பலூர் மாவட்டத்திற்கு புதிய நடமாடும் கால்நடை மருத்துவமனை வழங்க வேண்டும்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, பெரம்பலூர் நகரத்தில் 1969-ல் கட்டப்பட்ட 50 ஆண்டுகள் பழமையான தீயணைப்பு நிலையமானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அதை நவீனப்படுத்தி புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

பெரம்பலூர்-உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்படுகிறவர்களுக்கு உடனடியாக உயிர்காக்கும் சிகிச்சை கிடைக்க, பெரம்பலூர் தொகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய 30 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சை மருத்துவமனையை அமைக்க வேண்டும்.

நெரிசல் மிகுந்த பெரம்பலூர்-ஆத்தூர் நெடுஞ்சாலையை நான்குவழிச் சாலையாக மாற்ற அனுமதி மற்றும் நிதி ஒதுக்க வேண்டும். பெரம்பலூர், ஆலத்தூர் வட்டத் தலைமை அலுவலகங்கள் இரூர் ஊராட்சியில் அமைந்துள்ளன. எனவே, இரூரில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்ல வசதியாக பேருந்து நிறுத்தம் மற்றும் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், T.களத்தூர் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும். பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சி அரசு மேல்நிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, மலையாளப்பட்டி, பச்சைமலையில் உற்பத்தியாகின்ற பெருமளவு நீர் வீணாகக் கடலில் கலப்பதால், அந்தப் பகுதியில் சுமார் 15 ஊராட்சிகள் பயன்படுகின்ற வகையில், சின்னமுட்லு என்ற இடத்தில் மிகப் பெரிய நீர்த்தேக்கத்தை சின்னமுட்லு அணைக்கட்டு திட்டம் என்ற பெயரில் அமைத்துத் தர வேண்டும்.

வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்ட பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டை பகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் 60 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இதை முழுமையாகப் பயன்படுத்தவும், அந்தப் பகுதி விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் வாழ்வு செழிக்கவும், அங்கு புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், பசும்பலூர்-வெள்ளுவாடி சாலையிலும், பசும்பலூர் இளங்காளியம்மன் கோவில்–அண்ணாநகர் செல்லும் சாலையிலும் இரண்டு பாலங்கள் அமைக்க வேண்டும்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியம், பசும்பலூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அனுமதி மற்றும் கட்டடம் கட்ட நிதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

***திரு. மா. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற சாமானியனையும் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகுபார்க்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் (மேசையைத் தட்டும் ஒலி) மாபெரும் மக்கள் இயக்கத்தினுடைய நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்ணினத்தின் பெருமைமிகு அடையாளமாகவும், பெண்களின் நம்பிக்கை ஒளிக்கீற்றாகவும், ஒன்றரை கோடி தொண்டர்களைக் கொண்ட இந்த இயக்கத்தை இராணுவக் கட்டுப்பாட்டோடு வழிநடத்தி, தமிழகத்தில் கூட்டணி அமைத்தால்தான் ஆட்சிக் கட்டிலில் அமர முடியும் என்கிற தமிழக அரசியல் சரித்திரத்தை சுக்குநூறாக்கி, மக்கள் நலம் பேணும் நல்ல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் பேராதரவோடு மீண்டும் அரியணையில் அமரலாம் என்கிற இலக்கணத்தை உருவாக்கி, தமிழக அரசியல் வரலாற்றில் 234 தொகுதிகளிலும் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட்டு, வெற்றிபெறச் செய்த ஆற்றல்மிகு ஆளுமை நிறைந்த தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயிலும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைகளின் பங்காளனாய், சாமானிய மக்களின் சாதனைத் தலைவனாக, ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் ஒட்டுமொத்தத் தேர்வாக கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட கழகப் பணியாற்றி வழிநடத்திக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற

[திரு. மா. செந்தில்குமார்] [*2023 ஏப்ரல் 17*

எதிர்க்கட்சித் தலைவர், நாளைய தமிழகத்தின் முதல்வர், கழகத்தின் விடிவெள்ளி அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொங்கு மண்டலம், கோவையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அசைக்க முடியாத சக்தியாகக் கட்டி, இன்று சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா மாண்புமிகு அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களை வணங்குகிறேன்.

கழகத்திற்கு சோதனை வந்தபோதெல்லாம், அண்ணன் எடப்பாடியார் அவர்களின் போர்ப்படைத் தளபதியாக விளங்கி, கழகத்தைக் காத்துவரும் மாநிலங்களவை உறுப்பினர், எங்கள் அருமை அண்ணன், விழுப்புரம் மாவட்ட கழகச் செயலாளர் திரு. சி.வி. சண்முகம் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்மீது எனக்கே நம்பிக்கை இல்லாதபோது, எனக்கு தந்தையாகவும், அண்ணனாகவும், தோழனாகவும் இருந்து வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற எனது மாவட்டக் கழகச் செயலாளர், அருமை அண்ணன், உளுந்தூர்பேட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்களை வணங்குகிறேன். சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை வணங்குகிறேன். என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்த, அர்ப்பணிப்போடு கடமையாற்றிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சியின் தோழர்களுக்கும், எனது கள்ளக்குறிச்சி தொகுதி மக்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றி மலர்களையும் அவர்களின் பாதங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் சரிபாதியாக, சக்தியின் பிறப்பிடமாக, எனக்குத் தாயாக, என்னில் பாதியாக ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால்

ஒரு பெண் இருக்கிறார் என்கிற அடையாளங்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற பெருமைமிகு தாய்மார்களின் நலன் காக்கும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் எனது கருத்துகளை இந்த அவையில் பதிவு செய்ய எனக்குக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் குறிப்பாக மகளிருக்கு, எண்ணற்ற பல நலத் திட்டங்களை அர்ப்பணித்தவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மகளிர் வாழ்வில் மேம்படவும், மேம்பாடு அடையவும், மகளிர் கல்வியில் மேம்பாடு அடையவும் மாண்புமிகு அம்மா அவர்கள் 12 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக 25 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் 4 கிராம் தங்கமும் அதேபோன்று பட்டம்/பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கமும், 8 கிராம் தங்கமும் வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) பல ஏழைக் குடும்பங்களைக் காத்திட்டவர் எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பான ஆட்சி தந்த எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இந்த மாபெரும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி, ஏழைக் குடும்பங்களைக் காத்திட்ட அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை மெய்ப்பித்துக் காட்டினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின்மூலம் ரூ.1,000/- நிதியுதவி வழங்கி வருகின்றது. ஆனால், கல்வி வளர்ச்சியடைய வேண்டுமென்ற நோக்கத்தில் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் கல்வி பயின்ற அனைத்து மாணவிகளுக்கும் அறிவித்த தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து

செயல்படுத்திட வேண்டுமென்று கனிவோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் வாக்கினை உறுதிப்படுத்தும் வகையில், ஏழைக் குடும்பங்களுக்கும் அன்னமிடும் அன்னபூரணியாக மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் அனைத்து நகரங்களிலும் மலிவு விலையில் தரமான உணவு அளித்திட வேண்டுமென திட்டமிட்டு, அனைத்து நகரங்களிலும் அம்மா உணவகங்களை அமைத்தார்கள். இத்திட்டத்தின்மூலம் ஒரு ரூபாயில் இட்லி முதல் அதிகப்படியாக 10 ரூபாய்க்கு உணவுகளை சாமானிய மக்கள் வயிறு நிறைய சாப்பிடும் அளவுக்கு உணவளிக்கும் 'அம்மா உணவகம்' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இத்திட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்தி ஏழையெளியவர்களைக் காத்திட்டவர், எங்கள் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள்.

அதேபோன்று, அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் தங்கள் அறிவினை மேம்படுத்திக்கொள்ளும்பொருட்டும், தொழில்நுட்பக் கல்வி அறிவை பெற்றிட வேண்டுமென்கிற உயரிய நோக்கத்தோடும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் காட்டி, சாதனை படைத்தவர் எங்கள் கழகப் பொதுச் செயலாளர் அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் முன்னேற்றத்திற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பாக மகளிருக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு திறன் வளர் பயிற்சி அளித்து அவர்கள் தொழில் தொடங்க கடனுதவி மற்றும் ஆலோசனைகள் வழங்கி அவர்களுக்குத் தேவையான உதவிகளும்

வழங்கப்படுகின்றன. சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்துவரும் நலிவுற்ற பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவியாகவும், பொருளாதாரம் ஈட்டவும் இத்திட்டம் பெரும் உதவியாக அமையும். தமிழகம் முழுவதுமுள்ள 18 மாவட்டங்களில் அரசுப் பணியில் உள்ள மகளிருக்கென தமிழகம் முழுவதும் 21 விடுதிகள் அமைந்துள்ளன. ஆனால், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வெளியூரிலிருந்து வந்து பணிபுரியும் அரசுப் பணியாளர்கள். . .(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தயவுசெய்து அவரவர் இருக்கையில் அமருங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: தங்குவதற்கு இடமின்றி பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கள்ளக்குறிச்சியில் பணிபுரியும் மகளிருக்கு விடுதி ஒன்றை கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அமைத்துத் தருமாறு தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் 3 மாவட்டங்களில் பெண் குழந்தைகள் பிறப்பு சதவிகிதம் மிகவும் குறைவாகவுள்ளது. இதில் கள்ளக்குறிச்சி மாவட்டமும் ஒன்றாகும். எனவே, மத்திய அரசின் பெண் குழந்தைககளைக் காப்போம்; கற்பிப்போம் திட்டத்தின்மூலம் எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனிக் குழுவை உருவாக்கி பெண் குழந்தைகளின் பிறப்பு சதவிகிதத்தை அதிகரித்துத் தந்திடுமாறு இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

மூன்றாம் பாலினத்தவரின் தினமான ஏப்ரல் 15, கடந்த மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பொற்கால ஆட்சியில், சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மூன்றாம் பாலினத்தவருக்கு ஆண்டுதோறும் மாநில அளவில் ஒரு இலட்சம் ரூபாய் காசோலை மற்றும் விருதுகள் வழங்கி கௌரவப்படுத்திய அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. அதேபோன்று மூன்றாம் பாலினத்தவருக்கு, சுயதொழில் செய்திட கடனுதவி, 20 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்தவர் எங்கள் பொதுச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். தற்போது ரூ.50 ஆயிரத்தினை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தித் தந்திடுமாறு, இந்த அவையின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மா. செந்தில்குமார்] [2023 ஏப்ரல் 17

வீடுகளின்றி தவிக்கும் மூன்றாம் பாலினத்தவர்களுக்குப் பட்டா வழங்கி, பசுமை வீடுகள் திட்டத்தின்மூலம் வீடுகள் வழங்கிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக, பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, தமிழ்நாடு மகளிர் ஆணையம் 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்துப் பொருட்களும், பேறுகால நிதி உதவியும் வழங்கிய அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.

அதேபோன்று, பெண் சிசு வதையினைத் தவிர்க்கும் நோக்கில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பத்திற்கு, 50 ஆயிரம் ரூபாயும், இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும் வழங்கி பெண் குலத்தினை காக்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திகழ்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, ஆண் குழந்தைகள் இல்லாமல், பெண் குழந்தைகள் மட்டும் இருக்கின்ற அத்தனை குடும்பங்களுக்கும் நிதி உதவி வழங்க வேண்டுமென்று இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வெளியில் செல்லும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தயக்கமின்றி பாலூட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலும் தாய்மார்களுக்கென தனியே பாலூட்டும் அறை அமைத்துத் தந்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த அவையில் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் குழந்தை பிறந்தால் தூக்கி எறியும் என்ற நிலையைப் போக்கிட, மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு, தொட்டில் குழந்தைத் திட்டம் என்கின்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனை மேலும் மேம்படுத்திடும் வகையில் பிறந்த குழந்தைகளைப் பராமரித்திட தேவையான பொருட்களை வாங்க வசதி இல்லாமல் தவித்து வந்த, ஏழை குழந்தைகளின் துயரினைப் போக்குகின்றவகையில் உயரிய சிந்தனையோடு,

பிறந்த குழந்தைகளுக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள துண்டு, மேலாடை, மெத்தை, கொசுவலை என்று 16 வகை பரிசுப் பொருட்கள் அடங்கிய குழந்தை நல பரிசுப் பெட்டகத்தை விலையில்லாமல் வழங்கி, (மணியடிக்கப்பெற்றது) ஏழைக் குடும்பத்தில் இன்பத்தினைக் கண்டவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள், தம்பி.

திரு. மா. செந்தில்குமார்: இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டியவர், எங்கள் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் குடும்பங்களின் உணவிற்கு இட்லி, தோசை மாவு அரைக்கின்ற மிக்சி, கிரைண்டர் வழங்கும் திட்டங்களை அறிவித்தார். பெண், சமூகத்தில் அச்சமின்றி, வெளியே நடமாட வேண்டும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற செயல்களை தடுத்து நிறுத்தும் வகையில் அனைத்துப் பகுதிகளிலும் மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, பெண் கமாண்டோ பிரிவினை உருவாக்கித் தந்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை மகிழ்ச்சியோடு, இந்த நேரத்தில் பதிவிட விரும்புகிறேன். (மணியடிக்கபெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமே! நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு பகுதி மக்களின்மீது அக்கறையுள்ள அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விளங்கியது. கடந்த 1992 ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டமாக இருந்ததை கடலூர் மாவட்டமாக மாண்புமிகு அம்மா அவர்கள் பிரித்துத் தந்தார்கள். இதனையடுத்து கல்வராயன் மலை, சின்ன சேலம், சங்கராபுரம் பகுதிகளிலுள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கள்ளக்குறிச்சி என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும்; கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டமாக உருவாக்கித்தர வேண்டுமென்கின்ற கோரிக்கையின்பேரில், இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற, அப்போதைய முதல்வராக இருந்த மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள், உடனடியாகப் பரிசீலனை

செய்து, கள்ளக்குறிச்சியை புதிய மாவட்டமாக அறிவித்து, புதிய மாவட்டம் உருவாக்கித் தந்ததோடு மட்டுமல்லாமல், மாவட்டத்தை உருவாக்கிய 8 மாத காலத்தில், மாவட்ட மருத்துவக் கல்லூரி அமைத்து, அதற்கு நிதியும் ஒதுக்கித் தந்து, தற்போது மிக பிரமாண்டமாகக் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிக்கு தற்போது போதிய போக்குவரத்து வசதி இல்லாமல் பொது மக்கள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: பொது மக்கள் நலன் கருதி, கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்தில் இருந்து, மருத்துவக் கல்லூரிக்குப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கோள்கிறேன்.

பிற்பகல் 1–50

மேலும், புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டம், பெரும்பான்மையாக கிராமப் பகுதிகளைக் கொண்ட மாவட்டம் ஆகும். குறிப்பாக உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர், மணலூர்பேட்டை, ரிஷிவந்தியம் ஆகிய பகுதிகளிலிருந்து மாவட்டத் தலைநகரான கள்ளக்குறிச்சிக்கு வந்து செல்ல, போதிய போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் சிரமப்படுகின்றனர். எனவே, மேற்கண்ட பகுதிகளுக்குப் புதிய பேருந்து வசதி ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டம், தலைவாசலில் உலகத் தரம் வாய்ந்த பிரமிக்க வைக்கும் கால்நடை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட்டது. இதில் மிகவும் பயனடையும் மாவட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டம் என்பதால், அதனை விரைந்து முடிக்க அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளான. . .

2023 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. மா. செந்தில்குமார்: *கடந்த ஆறு மாத காலமாக காய்கறி வாங்குவதற்கு நிதி வழங்கப்படவில்லையென்று சத்துணவுப் பணியாளர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும். உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கள்ளக்குறிச்சி வெளிவட்டச் சாலை உடனடியாக அமைக்கப்பட வேண்டும். மக்கள்தொகை அதிகமாக இருக்கிற காரணத்தினால், நாளுக்குநாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அதனால், கள்ளக்குறிச்சி நகருக்கு வெளிவட்டச் சாலை உடனடியாக அமைத்துத் தரவேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகரின் நெருக்கடியைக் கருத்தில்கொண்டு, புறநகர் பேருந்து நிலையம் உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

அதுபோல், தோல் பதனிடும் தொழிற்பேட்டை வரவிருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் தொழிற்பேட்டை உளுந்தூர்பேட்டையில் அமைக்கப்படவிருப்பதாகவும், கள்ளக்குறிச்சி ஆட்டுப் பண்ணை அருகே அமைக்கப்படவிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. தோல் பதனிடும் தொழிற்பேட்டை நம்முடைய பகுதிக்கு வந்தால், அந்தப் பகுதி, நெல், கரும்பு அதிகம் விளைவிக்கின்ற விவசாயிகள் அதிகமுள்ள பகுதியாக இருப்பதால், விவசாயம் பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அதனால், விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. மா. செந்தில்குமார்: இதனைக் கருத்தில்கொண்டு, ஒரு வேளை, தோல் பதனிடும் தொழிற்பேட்டை அமைத்தால், அங்கிருக்கிற மக்களின் அச்சத்தைப் போக்குகின்ற வகையில் அறிவிப்பை வெளியிட வேண்டும். இல்லையென்றால், தோல் தொழிற்பேட்டை அங்கு அமைவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. மா. செந்தில்குமார்: என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தலைநகர் கள்ளக்குறிச்சி நகராட்சியின் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும், குற்ற சம்பங்கள் அதிகரிக்கும் காரணத்தினாலும் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தினை இரண்டாகப் பிரித்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி காவல் ஆய்வாளர், போக்குவரத்து ஆய்வாளர், குற்றப் பிரிவு ஆய்வாளர், தனிப்பிரிவு ஆய்வாளர் ஆகியோருக்கு புதிய குடியிருப்பு அலுவலகம் கட்டித் தரவேண்டும்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் சின்னசேலம் ஒன்றியம்–உலகியநல்லூர், கள்ளக்குறிச்சி ஒன்றியம்–வானவரெட்டி, தியாகதுருகம் ஒன்றியம்–சித்தாத்தூர் ஆகிய ஊராட்சிகளில் புறக் காவல் நிலையம் அமைத்திட வேண்டும்.

கீழக்குப்பம் காவல் நிலையத்திற்கு புதிய காவலர் குடியிருப்பு கட்ட வேண்டும். தியாகதுருகம் ஒன்றியம், வரஞ்சரம் கிராமத்தில் புதிய தீயணைப்பு நிலையம் வேண்டும்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் பெருவங்கூர் கிராமத்தில் துணை மின்நிலையம் அமைத்திட வேண்டும்.

கோமுகி நதியின் குறுக்கே வரஞ்சரம் பகுதியில் ஒரு அணைக்கட்டு அமைத்திட வேண்டும். மணிமுக்தா நதியின் குறுக்கே வீரசோழபுரம் பகுதியில் ஒரு அணைக்கட்டு அமைத்திட வேண்டும்.

மயூரா நதியில் நயினார்பாளையம் பகுதியில் ஒரு அணைக்கட்டு அமைக்க வேண்டும். கோமுகி நதி-மணிமுக்தா அணையை தூர்வாரி ஆழப்படுத்தவேண்டும்.

கோமுகி அணை மற்றும் மணிமுக்தா அணையிலிருந்து விவசாயத்திற்கு வெளியேறும் கிளை வாய்க்கால்களைத் தூர்வாரி ஆழப்படுத்தி அதிலுள்ள அணைக்கட்டுகளை மராமத்து செய்ய வேண்டும்.

விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரமாக சுமார் 315 ஏரிகள் அமைந்துள்ளன. 30-க்கும் மேற்பட்ட ஏரிகள் தூர்வாரப்பட்டு 10-க்கும் மேற்பட்ட அணைக்கட்டுகள் மாநில அரசின் நிதியில் சரிசெய்யப்பட்டன. மீதம் உள்ள ஏரிகளைத் தூர்வார அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கீழ்க்காணும் 5 புதிய தடுப்பணைகள் உடனடியாகக் கட்டப்படவேண்டும்:

வரஞ்சரம் கிராமத்தில் கோமுகி நதியின் குறுக்கே தடுப்பணை-ரூ.12.2 கோடி

வீரசோழபுரம் கிராமத்தில் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே தடுப்பணை ரூ.6 கோடி

கூகையூர் கிராமத்தில் அருகே வசிஷ்டா ஆற்றின் குறுக்கே தடுப்பணை-ரூ.5.84 கோடி

பசுங்கயாமங்கலம் கிராமத்தில் கோமுகி நதியின் குறுக்கே தடுப்பணை

நைனார்பாளையம் கிராமத்தில் மணிமுக்தா நதியின் குறுக்கே தடுப்பணை-ரூ.3.16 கோடி

மேலும், எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் முக்கிய அணையாக உள்ள கோமுகி அணையைத் தூர்வாரி பலப்படுத்திட வேண்டும்.

பெத்தானூர்–அம்மகளத்தூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையை அகலப்படுத்த வேண்டும். சின்னசேலம்–சிறுவத்தூர் சாலையினை அகலப்படுத்த வேண்டும். இந்திலி–சிறுவத்தூர்–புக்கிரவாரி–ஈரியூர் செல்லும் சாலையினை அகலப்படுத்த வேண்டும். வி.பி. அகரம்–கல்லாநத்தம்–மேல்நாரியப்பனூர்–வி.கூட்ரோடு சாலையினை அகலப்படுத்த வேண்டும்.

கள்ளக்குறிச்சி–கூத்தக்குடி சாலையினை நான்கு வழிச் சாலையாக மாற்றித் தந்திட வேண்டும்.

துருகம்–அடரி சாலையில் விருகாவூர்–கோமுகி நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

துருகம்–அடரி சாலை காப்புக்காட்டில் சுமார் 1.5 கி.மீ தூரம் வரை வனத் துறைக்குச் சொந்தமான சாலையினை அகலப்படுத்த வேண்டும்.

விளம்பாவூர்–வானவரெட்டி செல்லும் வனத் துறைக்குச் சொந்தமான சாலையினை அகலப்படுத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி நகரப் பகுதியில் சுற்றுவட்டச் சாலை அமைத்திட வேண்டும்.

சின்னசேலம்–சிறுவத்தூர் சாலையில் மயூரா நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

இந்திலி–செம்பாக்குறிச்சி சாலையில் சிறுமங்கலம்–பெருமங்கலம் இடையே மயூரா நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

விளம்பாவூர்–வானவரெட்டி செல்லும் சாலையில் வானவரெட்டி ஏரி கரையின்மீது உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி–தென்கீரனூர்–மலைக்கோட்டாலம்–கனங்கூர்–பொறசகுறிச்சி செல்லும் சாலையினை அகலப்படுத்தி புனரமைத்தல் வேண்டும்.

கள்ளக்குறிச்சி–தேசிய நெடுஞ்சாலை–தச்சூர்–விளம்பாவூர்–காட்டனந்தல்–தென்தொரசலூர்–புக்கிரவாரி சாலையினை அகலப்படுத்த வேண்டும்.

கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி வருவாய் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து கிழக்கு, மேற்கு என இரண்டு வருவாய் அலுவலகங்கள் உருவாக்கிட வேண்டும்.

இந்திலி குறுவட்ட வருவாய் கிராமங்களான கனியாமூர்–ராயர்பாளையம்–பெத்தானூர்–ஈசாந்தை ஆகிய வருவாய் கிராமங்களை சின்னசேலம் குறுவட்டத்துடன் இணைத்திட வேண்டும்.

உலகியநல்லூர் வருவாய் கிராமத்தினை நயினார்பாளையம் குறுவட்டத்துடன் இணைத்திட வேண்டும்.

வருவாய் குழு அமைத்து கள்ளக்குறிச்சி தொகுதியிலுள்ள இந்திலி குறுவட்டம், சின்னசேலம் குறுவட்டம், நயினார்பாளையம் குறுவட்டம், நாகலூர் குறுவட்டம், தியாகதுருகம் குறுவட்டம், கள்ளக்குறிச்சி குறுவட்டம், ஆகியவற்றினை ஆய்வு செய்து, அதன் அறிக்கையின் பேரில் அந்தந்த குறுவட்டத்திற்கு அருகிலுள்ள வருவாய் கிராமங்களை அந்தந்த குறுவட்டத்துடன் இணைத்திட வேண்டும்.

கொங்கராபாளையம், புதுஉச்சிமேடு ஆகிய கிராமங்களுக்கு தனித்தனியே கிராம நிர்வாக அலுவலர்களை நியமித்தல் வேண்டும். அம்மகளத்தூர், கருங்குழி ஆகிய கிராமங்களுக்கு தனித்தனியே கிராம நிர்வாக அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

உலகியநல்லூர், அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலினைப் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்திட வேண்டும். தென்பொன்பரப்பி சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்திட வேண்டும்.

வரஞ்சரம் சிவன்கோயில், சித்தலூர் பெரியநாயகி அம்மன் கோயில் தியாகதுருகம் மலைக்கோயில், கள்ளக்குறிச்சி சிவன் கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்திட வேண்டும்.

நல்லாத்தூர் மாரியம்மன் கோயிலைப் புனரமைத்து, சுற்றுச் சுவர் கட்டி கும்பாபிஷேகம் நடத்திட வேண்டும். கள்ளக்குறிச்சி சிவன் கோயிலுக்குத் திருத்தேர் செய்யப்பட வேண்டும்.

சின்னசேலம் ஒன்றியம், ஈசாந்தை ஊராட்சியை பிரித்து, நாட்டார்மங்கலத்தை புதிய ஊராட்சியாகவும், அனுமனந்தல் ஊராட்சியைப் பிரித்து கீழக்குப்பம் புதிய ஊராட்சியாகவும், கூகையூர் ஊராட்சியைப் பிரித்து விரபயங்கரம் புதிய ஊராட்சியாகவும், வி.அலம்பளம் ஊராட்சியைப் பிரித்து வி. கிருஷ்ணாபுரம் புதிய ஊராட்சியாகவும், ராயப்பனூர் ஊராட்சியைப் பிரித்து செல்லியாம்பாளையம் புதிய ஊராட்சியாகவும், ஏலவடி ஊராட்சியைப் பிரித்து பூசப்பாடி புதிய ஊராட்சியாகவும் அறிவித்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம், காட்டனந்தல் ஊராட்சியைப் பிரித்து லட்சியம் புதிய ஊராட்சியாகவும், பெருமங்கலம் ஊராட்சியைப் பிரித்து கீழ்நாரியப்பனூர் புதிய ஊராட்சியாகவும், சிறுவங்கூர் ஊராட்சியைப் பிரித்து ரோடுமாமந்தூர் புதிய ஊராட்சியாகவும், சித்தரி ஊராட்சியைப் பிரித்து சாத்தனூர் புதிய ஊராட்சியாகவும் அறிவித்திட வேண்டும்.

தியாகதுருகம் ஒன்றியம், முடியனூர் ஊராட்சியைப் பிரித்து பூசப்பாடி புதிய ஊராட்சியாகவும், தியாகை ஊராட்சியைப் பிரித்து சிறுவல் புதிய ஊராட்சியாகவும், உச்சிமேடு ஊராட்சியைப் பிரித்து புதுஉச்சிமேடு புதிய ஊராட்சியாகவும் அறிவிக்க வேண்டும்.

சித்தலூர்–பானையங்கால் உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும். உலகியநல்லூர்–வரதப்பனூர் மயூரா நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி–கருணாபுரம்–சிறுவங்கூர் செல்லும் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும். ஏ. கனியாமூர்–பெத்தானூர் சாலையில் உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

மட்டிகைகுறிச்சி–நல்லாத்தூர் செல்லும் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும். வேளாக்குறிச்சி–நாகலூர் செல்லும் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

கூத்தக்குடி-நின்னையூர் சாலையை தார்ச் சாலையாகத் தரம் உயர்த்தி, மணிமுக்தா நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும். அம்மகளத்தூர்-செம்பாக்குறிச்சி செல்லும் விவசாயிகள் பயன்படுத்தும் வயல் வெளிச் சாலையினை தார்ச் சாலையாகத் தரம் உயர்த்த வேண்டும்.

விரபயங்கரம்-வி.மாமந்தூர் தார்ச் சாலையைப் புனரமைக்க வேண்டும். புக்கிரவாரி-சாத்தனூர் செல்லும் சாலையைப் புனரமைக்க வேண்டும். கீழ்நாரியப்பனூர்-ஒகையூர் செல்லும் சாலையினைப் புனரமைக்க வேண்டும். சிறுமங்கலம்-கீழ்நாரியப்பனூர் செல்லும் சாலையைப் புனரமைக்க வேண்டும்.

தியாகதுருகம்-உதயமாம்பட்டு-தாரணபுரி-அந்தியூர்-குன்னியூர் செல்லும் சாலையைப் புதுப்பித்துத் தந்திட வேண்டும். சித்தலூர் ஸ்ரீ பெரியநாயகி அம்மன் கோயிலிலிருந்து சித்தலூர் செல்லும் சாலையைப் புதுப்பித்துத் தந்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி பேருந்து நிலையம்-கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி சென்று வர பேருந்து வசதி ஏற்படுத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி-கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி-ஈரோடு, கள்ளக்குறிச்சி-பழனி, கள்ளக்குறிச்சி-கும்பகோணம், கள்ளக்குறிச்சி-வேளாங்கண்ணி, கள்ளக்குறிச்சி-சென்னை (ஏசி பேருந்து), கள்ளக்குறிச்சி-விளம்பார், வானவரெட்டி, புக்கிவாரி, ஈரியூர், மாங்குளம், மங்களூர், தொழுதூர் வழியாக திட்டக்குடி, சின்னசேலம்-ஈசாந்தை, ஈரியூர், மாங்குளம், வேப்பூர் வழியாக விருதாச்சலம் வரை செல்ல புதிய தடம் அமைக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சியை தனி மாவட்டமாக அறிவித்ததால், கள்ளக்குறிச்சிக்கு வந்து செல்ல மாவட்டத்தின் கடைநிலைப் பகுதியான உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள சேந்தநாடு, சேந்தமங்கலம், களமருதூர், பெரியசெவலை, திருக்கோவிலூர், ரிஷிவந்தியம் தொகுதியில் மணலூர்பேட்டை, மேலந்தல், காங்கியனூர், ரிஷிவந்தியம் ஆகிய கிராமப் பகுதிகளிலிருந்து பேருந்து வசதி ஏற்படுத்திட வேண்டும்.

சின்னசேலம் ஒன்றியம், நயினார்பாளையம் ஊராட்சியிலிருந்து சுமார் 5,000 லிட்டர் பால் நாள்தோறும் அனுப்பப்படுகிறது. சுமார் 8,000-த்திற்கும் அதிகமான மாடுகள்,

மற்றும் சுமார் 10,000-த்திற்கும் அதிகமான ஆடுகள் உள்ளன. எனவே, நயினார்பாளையம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை துவங்கிட வேண்டும்.

குடியநல்லூர், கொட்டையூர் கிராமத்தில் உள்ள கிளை கால்நடை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தந்திட வேண்டும்.

அம்மகளத்தூர் கிராமத்தில் உள்ள கிளை கால்நடை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தந்திட வேண்டும். மேல்நாரியப்பனூர், மலைக்கோட்டாலம் ஆகிய கிராமங்களில் புதிய கால்நடை கிளை மருத்துவமனை துவக்கிட வேண்டும்.

கள்ளக்குறிச்சியில் கால்நடை மண்டல இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் அலுவலகம் உருவாக்கிட வேண்டும். கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குநர் அலுவலகம் உருவாக்கிட வேண்டும்.

உதவி இயக்குநர், புலனாய்வுத் துறை அலுவலகம் அமைத்திட வேண்டும்,

கள்ளக்குறிச்சியில் உள்ள கால்நடை உதவி இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.

கருந்தலாக்குறிச்சி, செம்பாக்குறிச்சி, கருங்குழி, ஈரியூர் கீழ்நாரியப்பனூர், ஒகையூர், ஈய்யனூர், வேளாக்குறிச்சி, வரஞ்சரம், வேங்கைவாடி, சித்தாத்தூர், கூத்தக்குடி, சித்தேரி, சாத்தனூர், மலைக்கோட்டாலம், வானவரெட்டி, விளம்பாவூர் ஆகிய கிராமப் பகுதிகளில் உள்ள காடுகளைச் சுற்றி மின் வேலி அமைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள அனைத்து ஏரிகளிலும் கருவேல மரங்களை அகற்றிட வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைநகரமாக கள்ளக்குறிச்சி செயல்படுவதாலும், மக்கள் தொகை அதிகமாக இருப்பதாலும், போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதாலும், கள்ளக்குறிச்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிறுவங்கூர், பெருவங்கூர், நீலமங்கலம், தென்கீரனூர், க. மாமனந்தல், தச்சூர், பொற்படாக்குறிச்சி மற்றும் சின்னசேலம் ஒன்றியத்தைச் சார்ந்த உலகங்காத்தான்,

காரனூர், சடையம்பட்டு ஆகிய கிராமங்களை கள்ளக்குறிச்சி நகராட்சியுடன் இணைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வரவேண்டும்.

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கச்சிராபாளையம் சாலை மற்றும் தியாகதுருகம் சாலையில் புதிய கழிவுநீர் கால்வாய் அமைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி-விளாந்தாங்கல் ரோட்டில் கே.ஐ.ஜெ நகரில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சியில் விரிவுபடுத்தப்பட்ட வினாயகர் நகர், எம்.ஆர்.என் நகர் பகுதிகளில் கழிவுநீர் வாய்க்கால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்துத் தந்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி மந்தைவெளியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி, சித்தேரிகரை அருகே திறந்தவெளிக் கிணறு அமைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி நகராட்சி கடைவீதி, சிவன் கோவில் தெரு, கெஜபுத்திர தெரு, பெருமாள் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சிமெண்ட் சாலையைப் புனரமைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்ட நூலகத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டும். கள்ளக்குறிச்சி மாவட்ட நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டும்.

கள்ளக்குறிச்சி அரசு கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்ட வேண்டும்.

கள்ளக்குறிச்சி அரசு கல்லூரியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்ட வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செல்போன் சிக்னல் மற்றும் இணையவழி சேவை கிடைத்திட, தகுந்த தொலைத்தொடர்பு கிடைத்திட ஆவன செய்திட வேண்டும்.

D.N.B. என்கிற Diplomate of National board என்கிற உயர் மருத்துவ படிப்பினை பல அரசுத் தலைமை மருத்துவமனைகள் வழங்கிக் கொண்டிருக்கும்வேளையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு உடனடியாக ஏற்படுத்தித் தந்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சமையலர், முடிதிருத்துவோர், துணி துவைப்போர் போன்ற அடிப்படை பணி ஆட்களை நியமனம் செய்திட வேண்டும்.

7.5% இட ஒதுக்கீட்டில் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்படும் மருத்துவம் சார்ந்த புத்தகம் வழங்கிட வேண்டும். மேலும், மருத்துவ மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கிட வேண்டும்.

கள்ளக்குறிச்சி நகரப் பகுதியில் இயங்கும் 108 அவசர ஊர்திகளின் எண்ணிக்கையை உயர்த்தி, காத்திருப்பு நேரத்தினை குறைத்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் வராமல் உள்ளது. அதனை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

NICU–ன்கீழ் குழந்தைகளைக்கொண்டு செல்லும் ஆம்புலன்ஸ் கள்ளக்குறிச்சியில் ஒன்று மட்டுமே உள்ளது. இதன் எண்ணிக்கையை உயர்த்தித் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு குப்பைக் கிடங்கு அமைத்துத் தரவேண்டும்.

தியாகதுருகம் மேம்படுத்தப்பட்ட அரசு சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தந்திட வேண்டும்.

தியாகதுருகம் மேம்படுத்தப்பட்ட அரசு சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் கட்டடம் வேண்டும்.

கூத்தக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் கட்டடம், சுற்றுச்சுவர் மற்றும் மகப்பேறு, குழந்தைகள் நல கட்டடம் அமைத்திட வேண்டும்.

அம்மகளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் கட்டடம், சுற்றுச்சுவர் மற்றும் மகப்பேறு, குழந்தைகள் நல கட்டடம் அமைத்திட வேண்டும். மருத்துவர், செவிலியர் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

ஈய்யனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புற நோயாளிகள் கட்டடம், சுற்றுச்சுவர் மற்றும் மகப்பேறு, குழந்தைகள் நல கட்டடம் அமைத்திட வேண்டும்.

மேல்நாரியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புற நோயாளிகள் கட்டடம், சுற்றுச்சுவர் மற்றும் மகப்பேறு, குழந்தைகள் நல கட்டடம் அமைத்திட வேண்டும்.

நயினார்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புற நோயாளிகள் கட்டடம், சுற்றுச்சுவர் மற்றும் மகப்பேறு, குழந்தைகள் நல கட்டடம் அமைத்திட வேண்டும்.

பெத்தானூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புற நோயாளிகள் கட்டடம் மற்றும் மகப்பேறு, குழந்தைகள் நல கட்டடம் அமைத்திட வேண்டும். மருத்துவர், செவிலியர் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

முடியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புற நோயாளிகள் கட்டடம் மற்றும் மகப்பேறு, குழந்தைகள் நல கட்டடம் அமைத்திட வேண்டும். மருத்துவர், செவிலியர் கட்டடம் கட்டித் தர வேண்டும்

கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலை பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்திட வேண்டும். 1. எலவடி 2. அம்மையகரம் 3. கருந்தலாக்குறிச்சி 4. பாக்கம்பாடி 5. விளம்பார் 6. ஏமப்பேர் 7, தென்கீரனூர் 8. வானவரெட்டி 9. புக்கிரவாரி 10. தியாகை 11. பானையங்கால் 12. நின்னையூர் 13. கொங்கராபாளையம்

நிறைமதி ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டும். குடியநல்லார் ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டும்.

கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்திட வேண்டும்: 1. அம்மகளத்தூர் 2. ஈரியூர் 3. பெத்தானூர் 4, செம்பாக்குறிச்சி 5. வி.மாமந்தூர் 6. வி.அலம்பலம் 7. தோட்டபாடி 8. எரவார் 9. மாடூர் 10. காட்டனந்தல் 11. பொரசக்குறிச்சி 12. சிறுமங்கலம் 13. வீரசோழபுரம் 14. தச்சூர் காட்டு கொட்டாய் 15. பொரசக்குறிச்சி 16. பிரதிவிமங்கலம் 17. சின்னமாம்பட்டு 18. குருபீடபுரம் 19. புதுஉச்சிமேடு 20. உதயமாம்பட்டு 21. வேளாக்குறிச்சி 22. வேங்கைவாடி 23. விளக்கூர்.

கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் துவக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்திட வேண்டும்: 1. காளசமுத்திரம் 2. எலவடி 3. ஈசாந்தை 4. கனியாமூர் 5, கருங்குழி 6. பாக்கம்பாடி 7. பெத்தாசமுத்திரம் 8. ராயர்பாளையம் 9. சடையம்பட்டு 10. வீரபயங்கரம் 11. இந்திலி காலனி 12. க.மாமனந்தல் 13. கீழ்நாரியப்பனூர் 14. லட்சியம் 15.மலைக்கோட்டாலம் 16. மேலூர் 17. நீலமங்கலம் நரிக்குறவர் காலனி 18. பெருவங்கூர் 19. புக்கிரவாரி 20. தென்கீரனூர் 21. தென்தொரசலூர் 22. வினைதீர்த்தாபுரம் 23. வடதொரசலூர் கோவிந்தசாமிபுரம் 24. கொங்கராயபாளையம் 25. கூந்தலூர் 26. குரூர் 27. மகரூர் 28. நின்னையூர் 29. பானையங்கால் 30. பழைய உச்சிமேடு 31. பொறையூர் 32. சாத்தனூர் 33. உடையநாச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர் அரசு அலுவலர்களுக்கு விடுதி அமைத்துத் தந்திட வேண்டும்.

ஆசிரியர் தகுதித் தேர்வு TET பேப்பர்–2 தேர்வு எழுதிய 2,00,224 நபர்களில் 15 ஆயிரத்து 430 நபர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றனர். இது 6% மட்டுமே ஆகும். பிற மாநிலங்களில் 50%. அதாவது, 75 மதிப்பெண் எடுத்தால் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்படுகிறார்கள். எனவே, தேர்ச்சி மதிப்பெண் 75 ஆகவோ அல்லது 5 மதிப்பெண் கூடுதலாக வழங்கவோ ஆவன செய்து அரசு அறிவித்திட வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

(ஆ) குறுகிய கால வினா—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள் பேசும்போது, ‘அண்ணா, அண்ணா, அண்ணா, உங்களைத்தான் இந்த நாடு நம்பியிருக்கிறது. இந்த வசனத்தின்மூலம் அண்ணா அவர்களை ** என்று சொல்லியிருந்தார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள் பேசும்போது, அந்த வசனத்தை வழங்கியவர் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்தக் காலகட்டத்தில் ‘அண்ணா’ என்ற பெயரைக்கூட சொல்ல முடியாது என்ற நிலையிருந்தது என்பது திராவிட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 17]

இயக்கத்திலுள்ள எல்லோருக்கும் தெரியும். அந்த நேரத்தில், 'அண்ணா, அண்ணா உங்களைத்தான் இந்த நாடு நம்பியிருக்கிறது என்ற வசனத்தின்மூலம் அண்ணா என்னும் பெயரை திரைப்படங்களில் அறிமுகம் செய்தார்' என்று மாற்றிக்கொள்வதற்கு அவர் இசைவு தெரிவித்துள்ளார். 'அந்தப் பொருள்படும் வகையில்தான் பேசினேன்' என்று சொன்னார். ஆகவே, அந்தப் பொருள்படும் வகையில், அந்தக் கூற்றை மாற்றிக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

முல்லை பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு லண்டனில் நிறுவப்பட்டுள்ள சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் zero hour-ல் ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசினார். அதற்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூற விரும்புகின்றார். பதில் கூறலாம். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், பென்னிகுயிக் அவர்கள் முல்லைப் பெரியாறு அணையை தமிழகத்திற்குத் தந்து, அந்த நீரினால் பல தென் மாவட்ட விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர் என குறிப்பிட்டார். அந்த அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 15 ஆம் தேதி, அவருடைய பிறந்த நாளன்று, அதற்கான ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். 'மரியாதைக்குரிய கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள் பிறந்த ஊரில் தமிழ்நாடு அரசு சார்பாக சிலை நிறுவப்படும்' என்று அறிவித்தார்கள். அதனடிப்படையில் செய்தித் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பொதுப் பணித் துறையோடு இணைந்து, அந்தச் சிலை கற்சிலையாகச் செய்யப்பட்டு, லண்டனில் நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் 18-7-2022 அன்று அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.*

அந்த அரசாணையின்படி, அவருக்கு சிலை செய்யப்பட்டது. சிலை செய்ததற்கான செலவு, ரூ.10,65,000/–. அதனை வெளிநாட்டில் நிறுவ வேண்டுமென்பதனால், செலவு கூடுதலாகி ரூ.23,00,000/– என்ற அளவில் இருக்கிறது. இந்தத் தொகையின் அடிப்படையில் அரசாணைகள் அனுமதிக்கப்பட்டு, நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அந்தச் சிலையும் அங்கே நிறுவப்பட்டது. நிறுவப்பட்ட சிலையைத் திறப்பதற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய மாண்புமிகு அண்ணன் திரு. இ. பெரியசாமி அவர்கள் தலைமையில் இங்கிருந்து சில சட்டமன்ற உறுப்பினர்களும், எங்கள் துறையினுடைய இயக்குநர்களும் அங்கு சென்றிருந்தனர்.

பிற்பகல் 1–55

அவ்வாறு சிலையை திறப்பதற்கு முந்தைய நாளன்று அவர்கள் சென்றிருந்த நேரத்தில், மரியாதைக்குரிய இங்கிலாந்து ராணி எலிசபெத் அம்மையார் அவர்கள் மறைந்த காரணத்தினால், அந்த நிகழ்ச்சியை மிக சுருக்கமாக, எளிமையான முறையில் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக, அந்த நிகழ்ச்சி மிக எளிமையாக நடைபெற்றது. இந்தச் சிலையை அங்கே நிறுவுவதற்கு தமிழக அரசின் சார்பில் ஒரு குழு ஒருங்கிணைக்கப்பட்டது. விழாவை ஏற்பாடு செய்வதற்காக திட்டமிட்டு, அந்தக் குழு பொருளாதார செலவு சம்பந்தமாக நிதி மட்டும் கேட்டு அரசிற்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, நிச்சயமாக நிதியாதாரத்திற்கேற்ப அரசு பரிசீலிக்கும். மேலும், அந்தச் சிலை கறுப்புத் துணியால் கட்டப்பட்டுள்ளது என்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்தத் தகவல் அரசின் கவனத்திற்கு வந்தவுடனேயே, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு நாங்கள் சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்பு கொண்டு, அது அப்புறப்படுத்தப்பட்டு அகற்றப்பட்டுவிட்டது. இன்றைக்கு திறந்த சிலையாகத்தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதையே விளக்கமாக ஏற்றுக்கொள்ளுமாறு தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

2023 ஏப்ரல் 17]

7. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 52— மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 45— சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை, சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர்– இந்திய நிலப்பரப்பில் தமிழ்நாட்டை தலைநிமிர வைத்த சிற்பி, 80 ஆண்டுகளை பொதுவாழ்க்கைக்கு ஒப்படைத்த ஓய்வறியா போராளி, போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்ற சாதனை நாயகர்–ஜூன் 3–ம் நாள் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு துவங்க உள்ள காலத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். ஏழையரின் துயர்துடைக்க தமிழ்நாட்டில் பிறந்திட்டீர்! எங்களின் இதயமெல்லாம் என்றென்றும் நிறைந்திட்டீர்! தங்க மகன் எனப் போற்றித் தரணியெல்லாம் புகழ்கின்றனர்! தங்கள் மகன் என்றழைத்துத் தாய்மார்கள் பூரிக்கின்றனர்! ஈராண்டில் ஆற்றியிருக்கின்ற பணிகள் ஏராளம்! ஏராளம்! குழந்தைகளின் கல்விக்காக "காலை உணவு" திட்டம்! பெண்களின் உயர் கல்விக்காக "புதுமைப் பெண்" திட்டம்! பிறந்த குழந்தைகளின் உடல் நலனிற்காக "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டம்! மகளிர் மேம்பாட்டிற்காக, சுயமரியாதைக்காக "மகளிர் உரிமைத் தொகை" திட்டம்! என பல திட்டங்களைச் செயற்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பணியாற்றிவரும் நமது மாண்புமிகு முதலமைச்சர், திராவிட நாயகர், தளபதியார் அவர்களுக்கு எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன்,

தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையாக இருந்தாலும், மகளிர் மேம்பாட்டுத் திட்டமாக இருந்தாலும், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மக்களோடு மக்களாக இருந்து, மக்கள் பணியாற்றிவரும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், எங்களது தூத்துக்குடி பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்மாதிரியாகவும் பணியாற்றி வரும் கனிமொழி அக்கா அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அவை முன்னவர், கழகத்தின் பொதுச் செயலாளர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

தூத்துக்குடி மாவட்ட முன்னாள் தி.மு.க. செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தலைவர் கலைஞர் அவர்களின் முரட்டுப் பக்தன் எனப் பெயர் பெற்ற மறைந்த எனது தந்தையார் என். பெரியசாமி அவர்களை இத்தருணத்தில் நான் நினைவுகூர்கிறேன்.

என் உணர்வோடு கலந்துவிட்ட தூத்துக்குடி தொகுதி மக்களுக்கும், என்னோடு கழகப் பணியாற்றிவரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மானியக் கோரிக்கை மீதான பதிலுரையை நான் இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையானது, மக்கள்தொகையில்

சரிபாதியாக இருக்கும் பெண்கள், நாட்டின் எதிர்காலமாகிய குழந்தைகள், முதியோர் மற்றும் திருநங்கைகளின் உரிமைகள், நலன் மற்றும் பாதுகாப்பு குறித்த சட்டங்களையும், திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளிகளில் கள ஆய்வு மேற்கொண்டபோது, பள்ளிக் குழந்தைகள் காலையில் சாப்பிடாமல் பள்ளிக்கு வருவதை அறிந்து, பசியோடு பள்ளிக்கு குழந்தைகள் வரக்கூடிய நிலையை மாற்றிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் காலை உணவுத் திட்டம் ஆகும். அரசு தொடக்கப் பள்ளியில், அதாவது 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலையில் தரமான, சூடான, ஊட்டச்சத்துமிக்க காலை உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால், 1,54,108 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின்மூலம் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. மாணவர்களின் கற்றல் திறன் அதிகரித்துள்ளது. இடைநிற்றல் தவிர்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு ஊட்டச்சத்தும் அதிகரிக்கிறது. வரும் ஆண்டில் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

"கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்" என்று சொன்னவர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அத்தகைய கல்விச் செல்வத்தை அதாவது உயர் கல்வியை அனைத்துப் பெண்களுக்கும் வழங்கிடும் திட்டம்தான் மாண்புமிகு முதலமைச்சரின் 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்' ஆகும். தமிழ்நாட்டில் வறிய நிலையில் உள்ள ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகள் பொருளாதார சிக்கல்களின் காரணமாக 12 ஆம் வகுப்பு முடித்தவுடன் உயர் கல்வியைத் தொடர முடியாமல் போகிறது.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய மாணவிகள், உயர் கல்வியைத் தொடர்ந்திட வழிவகை செய்யும் மாண்புமிகு முதலமைச்சரின்

உன்னத திட்டம்தான் "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்" ஆகும்.

இத்திட்டத்தின்கீழ், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும், மாதம் 1,000/– ரூபாய், அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களால் 5–9–2022 அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில், பெண்கள் உயர் கல்வி படித்து முடிக்கும் வரை, அதாவது 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் வரை புதுமைப் பெண் திட்டத்தின்மூலம் பயனடையலாம். இத்திட்டத்தின்மூலம் இதுவரை 2,09,365 மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், இடைநிற்றல் காரணமாக 'கல்லூரிக் கல்வி என்பது கனவே' என்று உயர் கல்வியைத் தொடராமல் விட்ட 11,682 மாணவிகள் இத்திட்டத்தின்மூலம் இந்த ஆண்டு உயர் கல்வியில் சேர்ந்து பயனடைந்துவருவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இத்திட்டத்தின்மூலம் கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு உயர் கல்வியில் சேர்ந்த மாணவிகளின் எண்ணிக்கை 29 சதவிகிதம் அதிகரித்துள்ளதன்மூலம் மாண்புமிகு முதலமைச்சரின் நோக்கம் நிறைவேறி வருவதை நாம் கண்கூடாகக் காணமுடிகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் 7–5–2022 அன்று விதி 110–ன்கீழ் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்பின்படி, ஊட்டச்சத்து குறைபாடில்லா தமிழ்நாட்டை உருவாக்கிட இந்தியாவிலேயே முதன்மைத் திட்டமாக, "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தை 21–5–2022 அன்று நீலகிரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள். அதன்படி, அங்கன்வாடி மையத்தில் உள்ள 37 இலட்சம் குழந்தைகளின் எடை, உயரம் ஆகியவற்றை கணக்கெடுத்து அவர்களுக்கு மருத்துவ பரிசோதனையும் செய்யப்பட்டது. அதில் 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள 93,200 குழந்தைகள் கடும் ஊட்டச்சத்துக் குறைபாடுடன் இருப்பதும், 43,299 குழந்தைகளுக்கு மருத்துவ உயர் சிகிச்சை தேவைப்படுவதும் கண்டறியப்பட்டது. மருத்துவ உயர் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலம் உயர் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. கடும் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28–2–2023

அன்று சத்தான இனிப்பு உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பிறந்தது முதல் 6 மாதம் வரை உள்ள ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் 28,332 தாய்மார்களுக்கு சிறப்பு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தையும் அதே நாளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள கடும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் செறிவூட்டப்பட்ட ஊட்டச்சத்து பிஸ்கட்டுகள் வழங்கிடவும், ஒரு வயது முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த 1 முட்டை என்பதை 3 முட்டைகளாக அதிகரித்து வழங்கிடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதனை செவ்வனே இத்துறை நிறைவேற்றி வருகிறது.

மேலும், சத்துமாவின் சுவை மற்றும் ஊட்டச்சத்து நிலையினை மேலும் அதிகப்படுத்தும் நோக்கில், சத்துமாவின் கலவையினை மாற்றி அமைத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில், ஊட்டச்சத்து வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைப்படி ஜனவரி 2023 முதல் குழந்தைகளுக்கான கூடுதல் சத்து நிறைந்த சத்துமாவு BIS தரத்திலும், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கென சிறப்பு சத்துமாவு கலவையும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் BIS தரத்திலான சத்துமாவு வழங்கப்படுகிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கரு உருவான நாள் முதல் இரண்டு வயது வரையிலான 1,000 நாட்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிக முக்கிய நாட்கள் என்பதைப் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டன. மேலும், இரத்த சோகை தடுப்பு, கை கழுவுதலின் அவசியம், குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல், பெண் கல்வியை ஊக்குவித்தல், குழந்தைகள் உதவி எண் 1098, பெண்களுக்கான உதவி எண் 181, POCSO சட்டம்`, வளரிளம் பெண்களின் உளவியல்

பிரச்சினை, சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் குழந்தைகளை குழந்தை நேயத்துடன் கையாளுதல், அக்குழந்தைகளுக்கு மறுவாழ்வு பயிற்சி அளித்தல், முதியோர் பாதுகாப்பு மற்றும் நலன் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை இத்துறை நடத்தி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 27–11–2021 அன்று POCSO சட்டம் தொடர்பான சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில், POCSO சட்டம் உரிய முறையில் செயல்படுத்தப்படவும், வழக்குகளை விரைந்து முடித்திடவும், பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு இழப்பீட்டு நிதி வழங்கிடவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்கள். அதன்படி, ஒவ்வொரு துறையிலும் இதற்கென ஒரு நேர்வு அதிகாரி, Nodal Officer நியமிக்கப்பட்டுள்ளார். POCSO சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் புகார்கள்மீது உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது.

விரைவாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் தாமதமின்றி நடத்தப்படுகின்றன. 16 மாவட்டங்களில் பிரத்தியேகமாக சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 4 மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 32 மகிளா நீதிமன்றங்கள் சிறப்பு நீதிமன்றங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

பிற்பகல் 2–05

20 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

சமூகப் பாதுகாப்புத் துறையின் மூலமும், காவல் துறையின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவின் மூலமும், போக்சோ (POCSO) சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

POCSO சட்டத்தின்கீழ் தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தை இழப்பீட்டு நிதி, 2012–ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டிருந்தாலும், மாண்புமிகு தளபதியாரின்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அரசுதான் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, 08-09-2021 முதல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீட்டு நிதி வழங்கி வருகிறது. இதுவரை இரண்டாண்டுகளில் 1,328 குழந்தைகளுக்கு இடைக்கால மற்றும் இறுதி இழப்பீட்டு நிதியாக 20 கோடி ரூபாய் இந்த அரசு வழங்கியுள்ளது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சமூகப் பாதுகாப்புத் துறையும், UNICEF அமைப்பும், Tamil Nadu State Judicial Academy-யும் இணைந்து, சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் சிறுவர், சிறுமிகளை குழந்தை நேயத்துடன் கையாளுதல் குறித்த பயிற்சி, காவல் துறை அதிகாரிகளுக்கும், குழந்தை பாதுகாப்பு அலுவலர்களுக்கும், 4 மண்டலங்களில் நடத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் முன்னேற்றத்தின்மீது அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்று போட்ட முதல் கையெழுத்து, மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திற்கான உத்தரவு ஆகும். இத்திட்டம் பெண்களுக்கு சமூக, பொருளாதார சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இதில் பயணம் செய்யும் பெண்களுக்கு மாதந்தோறும் 700 ரூபாய் முதல் 1,200 ரூபாய் வரை மீதமாகிறது என்று பயனடைந்துவரும் பெண்கள் கூறுகிறார்கள். இதுவரை 259 கோடியே 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

2009-ம் ஆண்டு 40 வயதிற்கு மேற்பட்ட நலிவடைந்த திருநங்கைகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டமானது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கப்பட்டு வந்தது. கடந்த 28-02-2023 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள், திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/-த்தினை ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டு, திருநங்கைகள் பயனடைந்து வருகிறார்கள்.

கடந்த மே 2021 முதல் தற்போது வரை இத்துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் 125 பேர் 'B' பிரிவிலும், கருணை அடிப்படையில் 46 பேர் 'C' மற்றும் 'D' பிரிவிலும், அங்கன்வாடி மற்றும் சத்துணவுத்

திட்டத்தில் கருணை அடிப்படையில் 626 நபர்கள் என ஆக மொத்தம் 797 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை இந்த சபைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 18 வயது முடிவுற்ற பெண்களுக்கு முதிர்வுத் தொகை பெற்று வழங்கப்படாத நிலை இருந்து வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் தளபதியாரின் அறிவுரைப்படி, இத்துறை முதிர்வுத் தொகையினைப் பெற்று வழங்கிட சிறப்பு நடவடிக்கை எடுத்தது. அதன் விளைவாக, மே 2021 முதல் மார்ச் 2023 வரை 96,497 பெண்களுக்கு, 256 கோடியே 58 இலட்சம் ரூபாய் முதிர்வுத் தொகையாக இந்த அரசு வழங்கியுள்ளது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக சீர்திருத்தத் துறையில் அமைக்கப்பட்டுள்ள சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவானது கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வு, நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல் முறையாக, முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து வருகிறது.

சமூகப் பாதுகாப்புத் துறையால் நிர்வகிக்கப்பட்டுவரும் இளைஞர் நீதிச் சட்டம், 2015-ன்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களின் செயல்பாடுகளையும், நிர்வாகத் திறன்களையும் மேம்படுத்துவதற்காக உரிய பரிந்துரைகளை அரசிற்கு அளித்திட, ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. கே. சந்துரு அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழுவினை (One Man Committee) அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த ஒரு நபர் குழுவின் பரிந்துரையைப் பரிசீலித்து, இந்த அரசு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தும் என்பதை இந்த அவைக்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் விடுதலை, பெண் கல்வி, பெண்களுக்கு சொத்துரிமை உள்ளிட்ட பெண்களின் உரிமைக்காக முதல் குரல் கொடுத்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் எண்ணங்களையும், சிந்தனைகளையும், கருத்துகளையும் செயல்படுத்தியவர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். 1989 ஆம் ஆண்டில் பெண்களுக்கு சொத்துரிமை, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 30 சதவிகித

இட ஒதுக்கீடு, சுய உதவிக் குழுக்கள், கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறுகால உதவித்தொகை, பெண்களின் பெயரில் வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பெண்களின் நலன் மற்றும் உரிமைகளுக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியவர், கலைஞரே ஆவார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் இன்று நமது முதலமைச்சர், திராவிட நாயகர், தளபதியார் அவர்கள் பெண்களுக்கு நகரப் பேருந்தில் கட்டணமில்லா பயணம், உயர் கல்விக்கு புதுமைப் பெண் திட்டம், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் பெண்களின் பெயரில் வீடுகள் ஒதுக்கீடு, வேலைவாய்ப்பில் 40 சதவிகிதம் இட ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் இருக்கும் பிரச்சினைகள் பற்றி விரிவாகப் பேச, இதை எப்படியெல்லாம் சரி செய்ய வேண்டும் என்று அறிவுரை சொல்ல பலரும் வருவார்கள். ஆனால், அதனை களத்தில் இறங்கி சரிசெய்ய யாரும் முன்வர மாட்டார்கள் என 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாமேதை கார்ல் மார்க்ஸ் கூறியுள்ளார். குறிப்பாக, பெண்ணினம் சந்திக்கும் இன்னல்களையும், இடையூறுகளையும் பற்றி, பெண்கள் எதிர்கொள்ளும் அநீதிகளைப் பற்றி பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்; பேசி இருக்கிறார்கள்; பேசியும் வருகிறார்கள். ஆனால், அவர்கள் நினைத்ததையும், பேசியதையெல்லாம்விட பெண்களின் கவலைகளை எல்லாம் தீர்ப்பதற்கான வழி, அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதாக மட்டுமே அமையும் என சிந்தித்து, மகளிர் உரிமைத் தொகையாக ரூபாய் 1,000/- வழங்கும் திட்டத்தை வகுத்து, அதனைச் செயல்படுத்தி இருப்பவர்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் பேசும்போது, "இந்த நூற்றாண்டின் மகத்தான அறிவிப்பாக, "மகளிர் உரிமைத் தொகை" குறித்த அறிவிப்பு வெளியாகி நாடெங்கும், ஏன் உலகெங்கும் இருக்கக்கூடிய பொருளாதார வல்லுநர்கள் அனைவருடைய கவனத்தையும் அது ஈர்த்துள்ளது" என்று கூறினார். ஆம், அந்த வார்த்தைகள் முற்றிலும் உண்மை. இன்னும்கூட சொல்ல வேண்டுமென்றால், ஓர் அமைச்சராக

அல்லாமல், ஒரு சட்டமன்ற உறுப்பினராக அல்லாமல், ஒரு பெண்ணாக நான் கூற விரும்புவது, சமூகத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதில், "இந்த நூற்றாண்டிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மட்டுமே தலைசிறந்தவர்" என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய வழிகாட்டுதலில் இத்துறை பெண்கள், குழந்தைகள், முதியோர், திருநங்கைகள் உள்ளிட்டோரின் நலன், உரிமை மற்றும் பாதுகாப்பிற்காக தொடர்ந்து பணியாற்றும் என்று உறுதிகூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் நிதியாண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பிலான பின்வரும் புதிய அறிவிப்புகளை அறிவிக்கின்றேன்:

அறிவிப்புகள்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

1. 25.70 கோடி ரூபாய் செலவினத்தில் 17,312 அரசுப் பள்ளி சத்துணவு மையங்களுக்கு புதிய சமையல் உபகரணங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் 43,094 சத்துணவு மையங்களில், சமையல் உபகரணங்கள் பழுதடைந்த நிலையில் உள்ள 17,312 பள்ளி சத்துணவு மையங்களுக்கு 25.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமையல் உபகரணங்கள் வழங்கப்படும்.

2. சமூக நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் சத்துணவுத் திட்டம், உள்ளகப் புகார் குழுக்கள், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் ஆகியவற்றின் செயல்பாடுகளைத் துரிதப்படுத்தவும், கண்காணிக்கவும் 50 இலட்சம் ரூபாய் செலவினத்தில் இணையதள முகப்பு மற்றும் கைப்பேசி செயலிகள் உருவாக்கப்படும்.

சமூக நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் சத்துணவுத் திட்டம் (15.00 இலட்சம் ரூபாய்), உள்ளகப் புகார் குழு அமைத்தல் (15.00 இலட்சம் ரூபாய்), கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் (20.00 இலட்சம் ரூபாய்) ஆகியவை குறித்த தொழில்நுட்ப தகவல் பரிமாற்ற தரவுகள் சேகரித்தல், நிகழ்நேர கண்காணிப்பு போன்றவற்றிற்கு 50 இலட்சம் ரூபாய்

செலவினத்தில் இணையதள முகப்பு மற்றும் கைப்பேசி செயலிகள் உருவாக்கப்படும்.

3. சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் நவீன உயர் ரக தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ், தற்போதைய காலகட்டத்தில் உள்ள தொழில்நுட்பத்திற்கேற்ப நவீன ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஆரி வேலை மற்றும் எம்பிராய்டரி போன்றவற்றில் மக்களிடையே ஆர்வம் மிகுந்து காணப்படுவதாலும், சந்தைகளில் அதற்கான தேவையும், வேலைவாய்ப்பும் உள்ளதாலும் நவீன தையல் பயிற்சி பெற்ற பயனாளிகள் அப்பணிகளுக்காக வெளிச்சந்தைகளை அணுகாமல், தாமாகவே துரிதமாக அப்பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, நவீன உயர் ரக தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

4. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மறுசீரமைக்கப்படும்.

பெண் குழந்தைகளின் பிறப்பை வரவேற்கவும், கல்வியில் பாலின வேறுபாட்டைக் களைந்து பெண் குழந்தைகள் கல்வி பெறுவதை ஊக்கப்படுத்தவும், சிறு குடும்பமாக வாழும் பெற்றோரை ஆதரிக்கவும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. திட்டம் துவங்கப்பட்டு 30 ஆண்டுகளைக் கடந்த நிலையில், தற்போதைய சமூகப் பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப, திட்டத்தில் இருக்கும் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள சில தகுதிகளைத் தளர்த்தினால் அதிகமான பயனாளிகள் பயனடைவர். எனவே, இத்திட்டத்தில், பயனாளிகள் குறித்து இணையதளத்தில் தரவு சேகரித்தல், வருமான வரம்பை உயர்த்துதல், காப்பீட்டுத் திட்டத்தை உள்ளடக்குதல், அரசு இல்லக் குழந்தைகளை திட்டத்துடன் இணைத்தல் போன்ற சில மாற்றங்களைக் கொணர்ந்து கூடுதல் எண்ணிக்கையில் பெண் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மறுசீரமைக்கப்படும்.

5. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சியினைக் கண்காணித்து நிகழ்நேர பதிவு மேற்கொள்ள ஏதுவாக, 18,573 அங்கன்வாடி பணியாளர்களுக்கு 17.53 கோடி ரூபாய் செலவினத்தில் திறன் கைப்பேசிகள் வழங்கப்படும்.

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலையினை, தொழில்நுட்பம்மூலம் நிகழ்நேர கண்காணிப்பினை மேற்கொள்வதற்காக, பழுதடைந்த 18,573 கைபேசிகளுக்கு மாற்றாக, தலா 9,440 ரூபாய் மதிப்பில், புதிய திறன் கைப்பேசிகள் 17.53 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

6. குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் வகையில், 18,573 குழந்தைகள் மையங்களுக்கு 14.85 கோடி ரூபாய் செலவினத்தில் வளர்ச்சிக் கண்காணிப்புக் கருவிகள் வழங்கப்படும்.

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் எடை (ம) உயரத்தினைக் கண்காணித்து அவர்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மையத்திற்கும் நான்கு வகையிலான வளர்ச்சிக் கண்காணிப்புக் கருவிகள் 8,000 ரூபாய் மதிப்பில் 18,573 குழந்தைகள் மையங்களுக்கு 14.85 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

7. முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 700 குழந்தைகள் மையங்களுக்கு கற்றல் திறன்களை ஊக்கப்படுத்துவதற்கு எல்.இ.டி. தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒரு மையத்திற்கு 25,000 ரூபாய் வீதம் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 700 குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக கற்றல் திறன்களை ஊக்கப்படுத்துவதற்கு எல்.இ.டி. தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒரு மையத்திற்கு 25,000 ரூபாய் வீதம் 1.75 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 17] [திருமதி பி. கீதா ஜீவன்]

8. நீலகிரி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டாரத்தில் உள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 9,088 குழந்தைகளுக்கு ஸ்வெட்டர், தொப்பி, காலுறை, வழங்குவதோடு 608 மையங்களுக்கு தரைவிரிப்பான்கள் 80 இலட்சம் ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

குளிர் பிரதேசங்களில் அமைந்துள்ள குழந்தைகள் மையங்களில் ஏதுவான சூழலை அமைத்துத் தருவதன்மூலம் முன்பருவக் கல்வி கற்க வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டாரத்தில் அமைந்துள்ள 122 குழந்தைகள் மையங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 486 மையங்கள் என மொத்தம் 608 குழந்தைகள் மையங்களுக்கு வருகை புரியும் சுமார் 9,088 குழந்தைகளுக்கு தலா 550 ரூபாய் வீதம் இரண்டு ஸ்வெட்டர், இரண்டு தொப்பி, இரண்டு ஜோடி காலுறைகளும் மற்றும் 608 குழந்தைகள் மையங்களுக்கு 5,000 ரூபாய் வீதம் தரைவிரிப்பான்கள் ஆக மொத்தம் 80 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

9. குழந்தைகள் மையங்களில் சமையலுக்குத் தேவைப்படும் மளிகைப் பொருட்கள் மற்றும் எரிவாயு உருளைகள் அரசு மற்றும் கூட்டுறவு அமைப்புகள்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படும்.

குழந்தைகள் மையங்களில் சமையலுக்குத் தேவைப்படும் தாளிதப் பொருட்கள் மற்றும் எரிவாயு உருளைகளை தற்போது அங்கன்வாடி பணியாளர்களே வாங்கி வந்து சமையல் செய்வதால், அப்பணியாளர்களின் பெரும்பாலான நேரம் அதற்காக மட்டுமே செலவிடப்படுகிறது. இதனை தவிர்க்கும்பொருட்டு, ஒரே விலையில் தரமான மளிகைப் பொருட்கள் மற்றும் எரிவாயு உருளைகள் அரசு மற்றும் கூட்டுறவு அமைப்புகள்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து குழந்தைகள் மையங்களுக்கும் நேரடியாக விநியோகம் செய்யப்படும். இதனால், அங்கன்வாடி பணியாளர்களின் பணிச்சுமை வெகுவாகக் குறைக்கப்பட்டு, திட்டச் செயலாக்கத்தில் முழு கவனத்தைச் செலுத்தி ஊட்டச்சத்து குறைபாடில்லா தமிழ்நாட்டை உருவாக்கும் இலக்கை உறுதி செய்திடலாம்.

10. சத்துணவுத் திட்டத்தில் பயனடைந்துவரும் குழந்தைகளுக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று இனிப்புப் பொங்கல் வழங்கப்படும்.

சத்துணவுத் திட்டத்தில் பயனடைந்துவரும் குழந்தைகளுக்கு, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பிறந்த நாளன்று இனிப்புப் பொங்கல் வழங்கப்படுவதுபோல், இனிவரும் காலங்களில் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்த நாளன்றும் இனிப்புப் பொங்கல் வழங்கப்படும்.

11. பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் குறித்த தரவுகளை சேமிக்கும் இணையதளம் நிறுவுதல், நிகழ்நேர கைபேசி செயலிமூலம் ஆய்வு மற்றும் கண்காணிப்பு ஒரு கோடி ரூபாய் செலவினத்தில் மேற்கொள்ளப்படும்.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ன்படி, குழந்தைகளுக்கு வழங்கப்படும் நிறுவனம் மற்றும் நிறுவனம் சாரா பராமரிப்பு சேவைகளை திறம்பட கையாளவும், காவல் துறை, தொழிலாளர் நலத் துறை, கல்வித் துறை போன்ற பிற துறைகளின் பங்களிப்பினை உறுதி செய்யவும், இக்கட்டான சூழலில் உள்ள குழந்தைகளை இனங்கண்டு அவர்களுக்கான பின்தொடர் சேவைகளை மேற்கொள்ளவும் தரவுகளைச் சேகரித்து, சேமிக்கும் இணையதளம் மற்றும் இத்தரவுகளை ஆய்வு செய்து கண்காணிக்க உதவும் நிகழ்நேர கைபேசி செயலி ஆகியவை ஒரு கோடி ரூபாய் செலவினத்தில் உருவாக்கப்படும்.

12. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், மகளிர் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு நிபுணர்கள்/சேவை வழங்குநர்கள் வாயிலாக மன ரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு உரிய பயிற்சிகள், தேவையின் அடிப்படையில் ஒரு கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், குழந்தைத்

திருமணம், ஆட்கடத்தல்மூலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் மகளிர் காப்பகங்களில் தங்க வைக்கப்படும் பெண்கள் ஆகியோரின் எதிர்மறை எண்ணங்களை மாற்றி மனதிற்கு உகந்த சூழலை உருவாக்கி அவர்களது தனிநபர் ஆர்வத்தின் அடிப்படையில் அவர்களுக்கு மன ரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு கலை, இசை, நாடகம், யோகா, தியானம் தோட்டக்கலை போன்ற சிறப்புப் பயிற்சிகள், தேவையின் அடிப்படையில் நிபுணர்கள்/ சேவை வழங்குநர்கள் வாயிலாக 1.00 கோடி ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

13. பாலியல் குற்றங்கள் அல்லாத பிற துன்புறுத்தல்கள் மற்றும் சுரண்டலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு 50 இலட்சம் ரூபாய்க்கு நிதித் தொகுப்பு உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் பாலியல் குற்றங்கள் அல்லாத பிற துன்புறுத்தல்கள், தற்காலிக அல்லது நிரந்தர இழப்பினால் பாதிப்பிற்குள்ளாகும் குழந்தைகள், ஆட்கடத்தல், பேரிடர் காரணமான விபத்துகளால் நேரடியாக மற்றும் மறைமுகமாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உடனடி நிவாரண உதவி வழங்கும் வகையில் 50 இலட்சம் ரூபாய்க்கு ஒரு நிதித் தொகுப்பு உருவாக்கப்படும்.

14. சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்படும் 34 அரசு குழந்தைகள் இல்லங்களிலும் திறன் பலகைகள் (ஸ்மார்ட் போர்ட்) 55 இலட்சம் ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்படும் 34 குழந்தைகள் இல்லங்களில் தங்கி கல்விப் பயிலும் மாணவ/மாணவிகளின் கற்கும் ஆர்வத்தை வளர்க்கவும், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கற்கும் முறைகளை ஊக்கப்படுத்தவும், தேர்ச்சி சதவீதத்தை உயர்த்தவும், மேம்பட்ட கற்றல் அனுபவத்தை வழங்கக்கூடிய திறன் பலகைகள் (ஸ்மார்ட் போர்ட்) 55.00 இலட்சம் ரூபாய் செலவினத்தில் வழங்கப்படும்.

15. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் குழந்தைகளுக்கான போதைத் தடுப்பு மையங்கள் 1 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்.

பள்ளி இடைநிறுத்தம், குற்ற செயல்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடுதல், சமூகத்திற்கு தீங்கு விளைவித்தல் போன்ற

செயல்பாடுகளுக்கு, 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மது மற்றும் போதை பழக்கங்களே முக்கிய காரணமாக அமைகிறது. எனவே, மது மற்றும் போதை பொருட்களுக்கு அடிமையான குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்கும் வகையில் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் குழந்தைகளுக்கான போதைத் தடுப்பு மையங்கள் 1.14 கோடி ரூபாய் செலவினத்தில் அமைக்கப்படும்

16. தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறை அரசு குழந்தைகள் இல்லம் மற்றும் சென்னை மாவட்டம், இராயபுரம் சிறுவருக்கான அரசு குழந்தைகள் இல்லம் ஆகியவற்றில் தலா 7 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறையில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லத்தில் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டடங்கள் இடித்து அகற்றப்பட்ட நிலையில், அவ்வில்ல மாணவர்களின் பயன்பாட்டிற்காக 7.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்படும். அதேபோன்று சென்னை இராயபுரத்தில் உள்ள சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் உள்ள பழைய கட்டடங்கள் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு, அவ்வில்ல மாணவர்களின் பயன்பாட்டிற்காக வகுப்பறை கட்டடங்களுடன் இணைந்த புதிய கட்டடங்கள் 7.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

17. சென்னை, சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம், திருநெல்வேலி, சென்னை மற்றும் மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லங்களில், பணியாளர் குடியிருப்பு 10 கோடி ரூபாய் செலவினத்தில் கட்டப்படும்.

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் அரசினர் குழந்தைகள் இல்லம் மற்றும் கூர்நோக்கு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆண்/பெண் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், நிறுவனங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை உயர்த்திடவும், இல்ல வளாகத்தில் பணியாளர் குடியிருப்புகள் அமைவது அவசியமாகிறது. எனவே, சென்னை, சிறுமியருக்கான

அரசினர் குழந்தைகள் இல்லம் மற்றும் திருநெல்வேலி, சென்னை, மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் பணியாற்றும் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 10 கோடி ரூபாய் செலவினத்தில் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாக இந்த பதிலுரையைப் பேரவையில் பதிவு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என்ற ஒரு தனித் துறையை 2010 ஆம் ஆண்டிலேயே உருவாக்கி, அத்துறையை தன்னுடைய நேரடி கட்டுப்பாட்டில் வைத்து, ஆரம்ப கால பயிற்சி மையங்கள், மனநலம் குன்றியவர்களுக்கும், தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மாதாந்திர உதவித்தொகை, மூன்று சக்கர ஸ்கூட்டர், செவித்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கென பி.காம்., பி.சி.ஏ., வகுப்புகள், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறு தொழில் மானிய கடன்கள், திருமண உதவித் திட்டங்கள், அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக்கு மறுவாழ்வு இல்லங்கள், சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு உணவூட்டுச் செலவினம், சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதிய மானியத் தொகை, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் வழியாக பல்வேறு நிதியுதவிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை உருவாக்கிய சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.

பிற்பகல் 2–15

அவரது வழியில் இன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இத்துறையை தன்னுடைய நேரடி கண்காணிப்பில் வைத்து, மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் நேரிலேயே பெற்று, அவர்களின் தேவைகள் மற்றும் குறைகளைச் செவிமடுத்து அன்புடன் கேட்டு, அதனடிப்படையில் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்தி, மாற்றுத் திறனாளிகளின் பேரன்பையும், நன்மதிப்பினையும் ஒருசேரப் பெற்று தலைசிறந்து விளங்குகிறார்கள் என்பதை நான் இங்கு கூற விரும்புகிறேன்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு நடப்பாண்டில் ரூ.1,106 கோடியே 48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது என்பது, இத்துறை தனித் துறையாக உருவாக்கப்பட்ட நாளிலிருந்து இந்நாள் வரை, நிதியாண்டு ஒன்றிற்கு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச நிதி ஒதுக்கீடாகும்.

இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு மட்டுமல்லாது, பல்வேறு துறைகள்மூலம் மாதாந்திர உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, வீடுகள் ஒதுக்கீடு, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், கட்டணமில்லா பேருந்து பயணம், தொழில் கடன் மானியம், தடையற்ற சூழல் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலமும் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு மாற்றுத் திறனாளிகூட மன வருத்தம் அடையக் கூடாது, ஒரே ஒருவருக்கு நன்மை பயக்கும் என்றாலும்கூட அந்தச் செயலை நாம் உடனடியாகச் செய்தாக வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையோடு மாற்றுத் திறனாளிகளின் நலன், பாதுகாப்பு, வாழ்வாதாரத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, மாற்றுத் திறனாளிகள் சம உரிமைகள் பெற்று பிறருக்கு நிகரான அந்தஸ்துடன், அனைத்து நலத் திட்ட உதவிகளையும் பெற்று, சமுதாயத்தில் ஒருங்கிணைந்து வாழ இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனை அங்கீகரிக்கும் வகையில், ஒன்றிய அரசு மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமை ஏற்றத்தினை, அதாவது, empowerment, ஊக்குவிப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாகத் தேர்வு செய்து, சிறந்த மாநிலம் என்ற விருதினை வழங்கியுள்ளது.

மாற்றுத் திறனாளிகளின் மாதாந்திர உதவித் தொகையை அதிகப்படுத்திட வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு, அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்தபோதிலும், தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமான

டிசம்பர் 3 ஆம் தேதியன்று மாற்றுத் திறனாளிகளுக்கு வருவாய்த் துறைமூலம் ரூ.1,000/– என வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகையை, ரூ.1,500/– ஆக உயர்த்தி அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்மூலம் வழங்கப்பட்டு வந்த ரூ.1,500/– உதவித்தொகையையும் ரூ.2,000/–ஆக உயர்த்தினார்கள். இதன்மூலம், 6 இலட்சத்து 84 ஆயிரத்து 639 நபர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், தனியாகச் செயல்பட முடியாத, உதவி தேவைப்படும் கடும் மாற்றுத் திறனாளிகளின் பாதுகாவலர்களுக்கும் கூடுதலாக ரூ.1,000/– உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித்தொகை வேண்டி காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவருக்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு, உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உதவி உபகரணங்கள் வேண்டி காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைவருக்கும் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகள் அவரவர் தேவைக்கேற்ப, வசதிக்கேற்ப உபகரணங்களைத் தெரிவு செய்யும் முறையை கடந்த 2021–2022 ஆம் ஆண்டு முதல் இவ்வரசு அறிமுகம் செய்து, செயல்படுத்தி வருகிறது. இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் மாணவர்கள் மற்றும் பணிக்குச் செல்பவர்கள் உட்பட 8,201 நபர்களுக்கு மொத்தம் ரூ.68 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் கடனுதவியுடன் செயல்படும் உரிமைகள் (RIGHTS) திட்டத்தின் வாயிலாக மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, அவர்கள் வாழும் இருப்பிடத்திலேயே சேவைகள் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதற்கட்டமாக, 15 மாவட்டங்களில் கோட்ட அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கு 39 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் தொடங்கப்படும். நடமாடும் மறுவாழ்வு சிகிச்சை வாகனங்கள்மூலம் கிராம அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றுத் திறன் குறைபாடுகளைக் கட்டுப்படுத்தத் தேவையான மறுவாழ்வு சிகிச்சை, உதவி உபகரணங்கள் வழங்குதல், அடையாள அட்டைகள் மற்றும் மருத்துவச் சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட அரசின் சேவைகள் அனைத்தும் வழங்கப்பட உள்ளன.

வட்டார அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு சேவைகளை வழங்கிட, 150 அருகமை மையங்கள் அமைக்கப்படும். மேலும், உரிமைகள் திட்டத்தின்கீழ், புதிய செயலி உருவாக்கப்பட்டு, அதன்மூலம் மாற்றுத் திறனாளிகளின் சமூக, பொருளாதாரத் தேவைகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு, துல்லியமான தரவுதளம் உருவாக்கப்பட்டு, மின்னணு நிர்வாக முறை, (Digital Governance) மேம்படுத்தப்படும். Rights திட்டத்தைப் பற்றி கேட்டவர்கள் இப்போது அவையில் இல்லை; அவையிலிருந்து சென்றுவிட்டார்கள். இப்போதுதான் முதல் முதலாக Rights திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, சுய வேலைவாய்ப்பு, கடனுதவி மற்றும் தொழில் பயிற்சி வழங்க ரூ.29 கோடியே 53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016–ஐ முழுமையாகச் செயல்படுத்தி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. இச்சட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான விதிகளை உருவாக்கி, அதில் வலியுறுத்தப்பட்டுள்ள பல்வேறு சட்ட அமைப்புகள் மற்றும் குழுக்களை மாநில மற்றும் மாவட்ட அளவில் இந்த அரசு அமைத்துள்ளது. மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களுக்காக தொண்டு செய்யக்கூடிய நிறுவனங்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோரை அக்குழுவில் உறுப்பினர்களாகச் சேர்த்து, பல முன்னோடித் திட்டங்களை வகுத்து, அதனைச் செயல்படுத்தி, மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வுக்கு இந்த அரசு வழிவகை செய்துள்ளது. இந்த அரசின் பல்வேறு துறைகள்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் வாயிலாக சுமார் 9 இலட்சத்து 55 ஆயிரத்திற்கும் மேலான மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

பிற்பகல் 2–20

ஒன்றிய அரசின் தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மேம்பாட்டு கழகம்மூலம் ரூபாய் 51 கோடியே 81 இலட்சம் சுய வேலைவாய்ப்பிற்கான கடனுதவி 12,399 மக்களுக்குப் பெற்றுத் தந்து, அதனை உரிய முறையில் திருப்பிச் செலுத்திய மாநில

கூட்டுறவு வங்கி, “Best Channelising Agency” என்ற ஒன்றிய அரசின் அங்கீகாரத்தினைப் பெற்று, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

பொதுக் கட்டடங்களில் தடையற்ற சூழல் அமைக்கும் நிகழ்வாகவும், அதனை ஊக்கப்படுத்தும் விதமாகவும், தமிழ்நாடு அரசு, சுற்றுலாத் தலங்கள், பொழுதுபோக்கு இடங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்கள், விளையாட்டு இடங்கள் ஆகியவற்றை ரூ.6 கோடியே 22 இலட்சம் செலவில் தணிக்கை செய்து, மாற்றுத் திறனாளிகள் உபயோகப்படுத்தும் வகையில் சாய்வுதளப் பாதைகள், மின்தூக்கி வசதிகள், கழிப்பிட வசதி உள்ளிட்டவற்றை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

செவித்திறன் மாற்றுத் திறனாளிகளின் தகவல் பரிமாற்றத்திற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் நீதிமன்றங்களில், பொது நிகழ்ச்சிகள் மற்றும் குறைதீர்க்கும் கூட்டங்கள் ஆகியவற்றிலும் சைகை மொழி பெயர்ப்பாளர்கள்மூலம் தகவல் பரிமாற்றத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்றுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை சைகை மொழி பெயர்ப்பாளர்கள்மூலம் செவித்திறன் மாற்றுத் திறனாளிகளும் அறிந்துகொள்ள வகைசெய்யும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்துள்ளார்கள்.

பார்வை மாற்றுத் திறனாளிகள் மற்றும் கடுமையாக உடல் பாதிக்கப்பட்டவர்கள், பொதுத் தேர்வு எழுதவும், வேலைவாய்ப்பிற்கான நியமன தேர்வுகளிலும், உதவியாளர் நியமனம் (scribe assistance) செய்திட, உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, அந்த மாணவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு நிமித்தமான தேர்வுகள் எழுதும் முறை எளிதாக்கப்பட்டுள்ளது.

அரசு வளாகங்களில் மாற்றுத் திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்க தேவையான வாடகை மற்றும் முன்தொகை செலுத்துவதிலிருந்து விலக்களித்து, தகுதியான பயனாளிகளுக்குப் பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை, நகராட்சி நிர்வாகத் துறை ஆகிய துறைகளுடன் ஆவின் நிறுவனம் இணைந்து ஆவின்

பாலகம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை 156 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கும், வீடு ஒதுக்கீடு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கி, நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதுவரை வீட்டுமனைப் பட்டா கோரி பெறப்பட்ட 3,483 விண்ணப்பங்களில், வருவாய்த் துறைமூலம் 598 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீடு வழங்கக் கோரி பெறப்பட்ட 2,336 விண்ணப்பங்களில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் 1,131 நபர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் வழங்கிட, இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாற்றுத் திறனாளிகள் இந்தச் சமுதாயத்தில் மனித வள மேம்பாட்டிற்கு இன்றியமையாதவர்கள் என்பதனை உணர்ந்து அவர்களும் மற்றவர்களுக்கு இணையாக கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக, பொருளாதார மேம்பாடுகளை வாழ்வில் அடைய மாண்புமிகு தளபதியாரின் அரசு பெரிதும் பாடுபடுகிறது.

மாற்றுத் திறனாளிகள், உலகை “மாற்றும் திறனாளிகள்” என்று பாரெங்கும் பறைசாற்றும்வண்ணம், இத்துறை செய்துவரும் நற்பணிகள் குறித்த படங்கள் தொகுக்கப்பட்டு அனைவரின் கருத்தையும், கவனத்தையும் ஈர்க்கும் வகையில், இரு வரி மேற்கோள்களுடன் “தொலைநோக்குத் தலைமை-தொடரும் தகைமை” என்கிற பட விளக்க கையேடு இன்று மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைந்த சமுதாயத்தில் சமவாய்ப்புப் பெற்று நிகரான அந்தஸ்துடனும், சுய மரியாதையுடனும் வாழ்வதற்கேற்ற சூழலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார் எனக் கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கான புதிய அறிவிப்புகளை அறிவிக்கிறேன். அ.தி.மு.க. உறுப்பினர்களின் நிறைய கோரிக்கைகளுக்கு பதில் இந்த அறிவிப்புகளில் இருக்கிறது.

அறிவிப்புகள்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

1. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு பயனாளியின் பங்குத் தொகையினைச் செலுத்துவதற்காக வட்டியில்லா வங்கிக் கடனுதவி வழங்கும் திட்டத்தின்மூலம் 1,000 நபர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. அவற்றில் மாற்றுத் திறனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு அரசால் ஒதுக்கப்படும் வீடுகளுக்கு பயனாளியின் பங்குத் தொகையினைச் செலுத்த இயலாத மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிட வட்டியில்லா கடனுதவி கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாற்றுத் திறனாளிகளுக்கு தரை தளத்திலேயே வீடுகள் ஒதுக்கப்படும்.

இக்கடனுதவி அதிகபட்சமாக நபர் ஒருவருக்கு ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வரை ஐந்து வருட காலத்திற்கு மட்டும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும். இத்திட்டத்தில் அதற்கான வட்டித் தொகையினை கடன் வழங்கும் வங்கிக்கு அரசே செலுத்தும். மாநிலம் முழுவதும் வருடந்தோறும் 1,000 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. உயர் கல்வி பயிலும் 1,000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தலா ரூ.14,000/– மதிப்பில் நவீன வாசிக்கும் கருவி வழங்கும் வகையில் ரூ.140.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

பார்வை மாற்றுத்திறன் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரசால் பல்வேறு நவீன உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வுபகரணங்கள் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு

மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது மேல்நிலை வகுப்பு மற்றும் அதற்குமேல் அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் நவீன வாசிக்கும் கருவி தலா ரூ.14.000/- மதிப்பில் முதற்கட்டமாக, 1,000 மாணவர்களுக்கு ரூ.140.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் வெட்டுத் தீர்மானமாக கொடுத்துள்ளார்கள்.

3. ஒரு கால் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் வகையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 500 பயனாளிகளுக்கு ரூ.450.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் தற்போது இரண்டு கால்களும் பாதிப்படைந்து, கைகள் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஒரு கால் மட்டுமே பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின் பயன்பாட்டினை விரிவுபடுத்தி முதற்கட்டமாக, 500 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.450.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

4. உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஐந்து சதவிகிதம் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ஐ சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும்பொருட்டு, உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் கட்டப்படும் வணிக வளாகங்கள் வாடகைக்கு ஒதுக்கீடு செய்யப்படும்போது, அதில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனியே ஐந்து சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படும் மற்றும் மொத்த அலகுகள் இருபதுக்கு குறைவாக இருக்கும்பட்சத்தில், குறைந்தபட்சம் ஒரு அலகு ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டுவரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித்தொகையினை உயர்த்தி, கூடுதலாக ரூ.200.00 இலட்சம் செலவில் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில் சுமார் 10.11 இலட்சம் மாற்றுத் திறனாளிகள் உறுப்பினர்களாக பதிவு செய்து, பயன்பெற்று வருகின்றனர். ஆண்டுதோறும் ரூ.329.62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயனாளிகளுக்கும், அவர்களின் குடும்ப வாரிசுகளுக்கும் கல்வி உதவித்தொகை மற்றும் மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் இவ்வாரியத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியம் தொடங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவரும் உதவித்தொகையானது உயர்த்தப்படாமல், அதே தொகை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தினால் வழங்கப்படும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித்தொகைகளை உயர்த்தும் நோக்கில், கூடுதலாக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

6. செவி மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வகையில் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் வாயிலாக சைகை மொழிப் பெயர்ப்பாளர் பயிற்சி அளிக்க ரூ.15.00 இலட்சம் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும்.

*மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–ஐ முழுமையாகச் செயல்படுத்தும் வகையில் இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு தடையற்ற சூழலினை ஏற்படுத்தும்விதமாக, மாநிலம் முழுவதும் உள்ள 1.77 இலட்சம் செவி மாற்றுத் திறனாளிகளின் தகவல் பரிமாற்றத்தில் ஏற்படும் தடைகளைக் களைவதற்காக, சைகை மொழிப் பெயர்ப்பாளர்களின் எண்ணிக்கையினை உயர்த்தி, அரசால் நடத்தப்படும் கூட்டங்களில் செவி மாற்றுத் திறனாளிகளுக்கும், பிறருக்கும் இடையேயான கருத்துப் பரிமாற்றத்தினை எளிதாக்க ஏதுவாக, உரிய பயிற்சி வழங்கும்பொருட்டு, இந்திய மறுவாழ்வு குழுமத்தின் (*Rehabilitation Council of India*) அங்கீகாரம் பெற்ற, பயிற்சி நடத்த முன்வரும் ஒரு தன்னார்வ தொண்டு*

நிறுவனத்தின்மூலம் 100 நபர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7. மாற்றுத் திறனாளிகளின் சேவையில் ஈடுபட்டுள்ள அரசு நிதியுதவி பெறும் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மதிப்பூதியத்தினை உயர்த்தி வழங்குவதற்காக ரூ.534.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாநிலம் முழுவதும் செயல்பட்டுவரும் 92 ஆரம்பப் பயிற்சி மையங்கள், 56 மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள், 70 அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு இல்லங்களில் பணிபுரியும் 1,011 பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் மதிப்பூதியத்தினை உயர்த்தி வழங்குவதற்காக ரூ.534.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ், தற்போது வழங்கப்பட்டுவரும் மதிப்பூதியத்தினை சமூகப் பணியாளருக்கு ரூ.6,000/–லிருந்து ரூ.12,000/–ஆகவும், துணைச் செவிலியருக்கு ரூ.5,500/–லிருந்து ரூ.10,000/–ஆகவும், தொழிற்பயிற்றுநர் மற்றும் விடுதி காப்பாளருக்கு ரூ.4,000/–லிருந்து ரூ.10,000/–ஆகவும், இரவு காவலருக்கு ரூ.4,000/–லிருந்து ரூ.8,000/–ஆகவும், சமையலருக்கு ரூ.3,000/–லிருந்து ரூ.8,000/–ஆகவும், உதவி சமையலருக்கு ரூ.2,000/–லிருந்து ரூ.6,000/–ஆகவும், துப்புரவுப் பணியாளருக்கு ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/–ஆகவும் மற்றும் பராமரிப்பு உதவியாளருக்கு ரூ.1,000/–லிருந்து ரூ.4,500/–ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

பிற்பகல் 2–25

8. அரசு நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 326 சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறன் குழந்தைகளைப் பராமரிக்க ஏதுவாக, மாதந்தோறும் ரூ.4,500/– மதிப்பூதியத்தில் பராமரிப்பு உதவியாளர்களை நியமனம் செய்ய ரூ.176.04 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

அரசு நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளைப் பராமரிக்க மாதந்தோறும் ரூ.4,500/– தொகுப்பூதியத்தில் பராமரிப்பு

உதவியாளர்களை நியமனம் செய்யும் வகையில், 326 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்க ரூ.176.04 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

9. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்கீழ் செயல்படும் பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்து, தங்கியுள்ள 592 மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வகையில், உணவூட்டு மானியத்தினை ரூ.42/—லிருந்து ரூ.100/—ஆக உயர்த்தி, ஆண்டுக்கு ரூ.124.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்கீழ் செயல்படும் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில், தொழுநோயினால் பாதிக்கப்பட்டு, குணமடைந்து 592 மாற்றுத் திறனாளிகள் உள்ளுறையாளர்களாக பயனடைந்து வருகின்றனர். அவர்களுக்கு உணவூட்டு மானியம் நாளொன்றுக்கு ரூ.42/– வழங்கப்பட்டுவரும் நிலையில், அதனை ரூ.100/– ஆக உயர்த்தி வழங்குவதற்கு ஆண்டுக்கு ரூ.124.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

10. மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும்பொருட்டு "மீண்டும் இல்லம் (Home Again)" எனும் புதிய திட்டத்தினை முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் அறிமுகப்படுத்தி, ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இல்லங்கள் வீதம் பத்து இல்லங்கள் 40 நபர்கள் பயன்பெறும் வகையில், ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 56 மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்களில் மனநல சிகிச்சை மேற்கொண்டு குணமடைந்த மாற்றுத் திறனாளிகளை சமுதாயத்தில் ஓர் அங்கமாக ஒருங்கிணைக்க "மீண்டும் இல்லம் (Home Again)" அமைப்பது இன்றியமையாததாகும். இவ்வில்லங்களில் மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் இயல்பாக வாழ, சமுதாயத்தில் ஒருங்கிணைந்து செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முதற்கட்டமாக, மாநிலத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு தலா இரண்டு இல்லங்கள் வீதம், பத்து இல்லங்கள் 40 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நிறைய குடும்பங்கள், குணமடைந்தவர்களைக்கூட அழைத்துச் செல்ல இயலாத நிலையை இத்திட்டம் மாற்றும்.

11. மாற்றுத் திறனாளிகளுக்கு நான்கு சதவிகித இட ஒதுக்கீட்டின்கீழ், அரசுத் துறைகளில் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களை ஓராண்டிற்குள் நிரப்புவதற்கு அந்தந்தத் துறைகள்மூலம் பணியிடங்களை நிர்ணயம் செய்து, சிறப்பு ஆட்சேர்ப்பு தேர்வு நடத்தப்பட்டு பணி வாய்ப்புகள் வழங்கப்படும்.

*அரசுப் பணியிடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு நான்கு சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டின்கீழ் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களைக் கணக்கிட்டு, அப்பணியிடங்களை நிரப்பிட ஓராண்டிற்குள் சிறப்பு ஆட்சேர்ப்பு தேர்வினை (*Special Recruitment Drive*) நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின்கீழ் பணியாற்றிவரும் மாற்றுத் திறனாளிகளும் சிறப்பு ஆட்சேர்ப்பு தேர்வில் பங்கேற்கும் வகையில் அந்தந்தத் துறைகளின் விதிகளுக்குட்பட்டு, வயது வரம்பு மற்றும் தேர்வு விதிகளைத் தளர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின்கீழ் பணியாற்றிவரும் மாற்றுத் திறனாளிகள் இந்தத் தேர்வில் பங்கேற்க அவர்களுடைய வயது வரம்பு, விதி தளர்வுகள் அந்தந்த துறைகளின்மூலம் செய்யப்படும்.

12. மாற்றுத் திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி, 22,300 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.700.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத் திறனாளி மாணவர்களின் சிறப்புக் கல்வியினை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. தற்போது, வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி, ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,000/–ஐ ரூ.2,000/–ஆகவும், ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.3,000/–ஐ ரூ.6,000/– ஆகவும், ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு

ரூ.4,000/–ஐ ரூ.8,000/–ஆகவும், இளங்கலை பயிலும் மாணவர்களுக்கு ரூ.6,000/–ஐ ரூ.12,000/– ஆகவும், முதுகலை மற்றும் தொழிற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.7,000/–ஐ ரூ.14,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். 22,300 மாற்றுத் திறன் மாணவ/மாணவியர்கள் பயன்பெறும் வகையில், ரூ.700.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

13. மனநலம்சார் மற்றும் அறிவுசார் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 150 பயனாளிகள் பயன்பெறும் வகையில், நான்கு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு மூன்று இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.14.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கண்டமங்கலம் கிராமத்தில், மாவட்ட நிர்வாகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1.5 ஏக்கர் நிலத்தில், மனநலம்சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மற்றும் அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக்கான இல்லங்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென மொத்தம் 100 நபர்கள் தங்கி பயன்பெறும் வகையில், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் இரண்டு மறுவாழ்வு இல்லங்கள் ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், கண்ணியாக்குடி கிராமத்தில், மாவட்ட நிர்வாகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2.5 ஏக்கர் நிலத்தில், அரசுசாரா தன்னார்வ தொண்டு நிறுவனம்மூலம் மனநலம்சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

14. அரசு நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்கீழ், அரசின் நிதியுதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களின் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசின்

நிதியுதவியுடன் உணவூட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுணவூட்டு மானியத்தினை பெறாத 192 சிறப்புப் பள்ளிகள் மற்றும் 19 ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயின்று, தினந்தோறும் காலை வந்து மாலை வீடு திரும்பும் 10,160 குழந்தைகள் பயன்பெறும் வகையில் இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளுக்கு ஊக்கமளித்து நல்ல ஆலோசனைகளை வழங்கிவரும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்கள் திரு. த. உதயச்சந்திரன் இ.ஆ.ப., அவர்களுக்கும், ஏனைய செயலாளர்கள் டாக்டர் உமாநாத், இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப., அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர் திரு. ம. தினேஷ்குமார் அவர்களுக்கும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., அவர்களுக்கும், திருமதி வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்களுக்கும், திருமதி ரத்னா, இ.ஆ.ப., அவர்களுக்கும், சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் திரு. அமர் குஷ்வாஹா, இ.ஆ.ப., அவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசு செயலாளர் டாக்டர் இரா. ஆனந்தகுமார், இ.ஆ.ப., அவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப., அவர்களுக்கும் மற்றும் இரு துறைகளின் ஏனைய அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களது அரிய கருத்துகளை எடுத்து வைத்துள்ளீர்கள். வெட்டுத் தீர்மானமாகவும் கொடுத்துள்ளீர்கள். உங்களின் மேலான கருத்துகளையும், நல்ல ஆலோசனைகளையும் கவனத்தில்கொண்டு, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைகள் மென்மேலும் சிறப்பான முறையில் செயல்பட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத்

திரும்பப் பெற்றுக்கொண்டு, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைகளின் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,104,23,74,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,00,22,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–4–2023), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

91. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜே1)த் துறையின் 15–3–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 25–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*]

92. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பயணப்படி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பொது (நிருவாகம் I & சட்டமன்றம்)த் துறையின் 2–3–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 143–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2023 ஏப்ரல் 17]

[*1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*]

93. 2020–2021 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ்–ஆங்கிலம்)*

94. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [*2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/2016) 77(4) மற்றும் 78(2) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

95. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [*2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/2016) 77(4) மற்றும் 78(2) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

96. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [*1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

97. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [*2003 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

98. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [*2003 ஆம் ஆண்டு தேசிய*

[2023 ஏப்ரல் 17

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

99. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2003 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

100. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2003 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

205. 2020–2021 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ்–ஆங்கிலம்)

206. மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

207. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

208. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

209. மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

210. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

211. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

212. 'பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு' என்கிற சிறுநூல். (தமிழ்–ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 17]

213. 'தெப்பக்காடு யானைகள் முகாம்–மீட்பு–மறுவாழ்வு–பராமரிப்பு' என்கிற சிறுநூல். (தமிழ்)

214. 'சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்ப் பாதுகாப்பில் ஒரு பொற்காலம்' என்கிற சிறுநூல். (தமிழ்)

215. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

216. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (சிறுபான்மையினர் நலன்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

217. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) (பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

218. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) (கதர் மற்றும் கிராமத் தொழில்கள்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

219. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

[*2023 ஏப்ரல் 17*

220. வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

221. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

222. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

223. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

224. மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2021–2023)

225. மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2021–2023)

226. மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2021–2023)

227. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

228. மதிப்பீட்டுக் குழுவின் பத்தாவது அறிக்கை. (2021–2023)

229. மதிப்பீட்டுக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2021–2023)

230. மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2021–2023)

231. மதிப்பீட்டுக் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை. (2021–2023)

232. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

2023 ஏப்ரல் 17]

233. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை. *(2021–2023)*

234. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2021–2023)*

235. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஆறாவது அறிக்கை. *(2021–2023)*

236. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஏழாவது அறிக்கை. *(2021–2023)*

237. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து எட்டாவது அறிக்கை. *(2021–2023)*

238. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2021–2023)*

239. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை. *(2021–2023)*

240. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. *(2021–2023)*

241. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. *(2021–2023)*

242. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. *(2021–2023)*

243. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. *(2021–2023)*

244. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. *(2021–2023)*

245. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. *(2021–2023)*

246. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. *(2021–2023)*

247. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. *(2021–2023)*

248. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. *(2021–2023)*

[2023 ஏப்ரல் 17

249. பொதுக் கணக்குக் குழுவின் நூறாவது அறிக்கை. (2021–2023)

250. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

251. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2021–2023)

252. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2021–2023)

253. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை. (2021–2023)

254. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

255. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (2021–2023)

256. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

257. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

258. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

259. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை. (2021–2023)

260. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

261. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

262. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஏழாவது அறிக்கை. (2021–2023)

263. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து எட்டாவது அறிக்கை. (2021–2023)

264. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

2023 ஏப்ரல் 17]

265. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. *(2021–2023)*

266. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2021–2023)*

267. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. *(2021–2023)*

268. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. *(2021–2023)*

269. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. *(2021–2023)*

270. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2021–2023)*

271. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. *(2021–2023)*

272. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. *(2021–2023)*

273. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து எட்டாவது அறிக்கை. *(2021–2023)*

274. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2021–2023)*

275. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபதாவது அறிக்கை. *(2021–2023)*

276. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கை. *(2021–2023)*

277. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து இரண்டாவது அறிக்கை. *(2021–2023)*

278. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. *(2021–2023)*

279. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. *(2021–2023)*

280. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கை. *(2021–2023)*

[2023 ஏப்ரல் 17

281. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

282. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஏழாவது அறிக்கை. (2021–2023)

283. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2021–2023)

284. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2021–2023)

285. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

286. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

287. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2021–2023)

288. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (2021–2023)

289. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

290. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (2021–2023)

291. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

292. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

293. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

294. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (2023) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

295. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (2023) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

296. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (2023) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

297. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (2023) (வரிசை எண்கள் 1 முதல் 97 வரை)

———

இணைப்பு I

(60 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

(பட்டியல்கள் 8 முதல் 11 வரை)@

பட்டியல் 8

1—

காவிரி நீர்

வினா எண் 12495—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவிரி கடைமடை பகுதிகளான வேதாரண்யம் பகுதியில் காவிரி நீர் செல்லாததால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நலன் கருதி தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

காவிரியின் கடைமடை பகுதிகளான வேதாரண்யம் வட்டத்திற்குட்பட்ட தாணிகோட்டகம், வாய்மேடு, தகட்டூர், மருதூர், பஞ்சநதிகுளம், ஆயக்காரன்புலம், ஆதனூர், துளசாபுரம், உம்பளச்சேரி, பிராந்தியாங்கரை, கரியாப்பட்டினம், செட்டிப்புலம், மணக்காடு மற்றும் இதர பகுதிகளுக்குள் காவிரி நீர் முழுமையாகச் சென்று விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

2—

மரம் நடுதல்

வினா எண் 14440—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் ஆற்றங்கரையோரங்களில் மண் அரிப்பை தடுக்கும்வகையில் மரங்களை நட்டு கரைகளை பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நீர்வளத் துறையின்மூலம் கால்வாய், வாய்க்கால், ஏரிகளின் கரையோரங்களில் மண் அரிப்பை தடுக்கும்வகையில் கரையில்

@ *இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

2,000 மரக்கன்றுகள், பாசனதாரர் சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக நடப்பட்டுள்ளன. ERM திட்டத்தின்மூலம் கல்லணைக் கால்வாய், வாய்க்கால், கிளை வாய்க்கால்கள், ஏரிகளின் கரைகளில் மரங்கள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

3—

படகு இயக்குதல்

வினா எண் 17610—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முல்லை பெரியாறு அணைப் பகுதியை பார்வையிட தமிழக பொறியாளர்கள் பயன்படுத்தும் படகு 35 ஆண்டுகள் பழமையானது. விபத்து ஏற்படும்முன் தமிழக அரசு, தமிழ் அன்னை படகிற்கு விரைந்து அனுமதி பெற கேரள அரசை வற்புறுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

முல்லை பெரியாறு அணைப் பகுதியை பார்வையிட தமிழக பொறியாளர்கள் தமிழ் அன்னை படகினைப் பயன்படுத்துவதற்கு, கேரள அரசின் அனுமதியைப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது. மேலும், இது கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, படகினை இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4—

தூர்வாருதல்

வினா எண் 18741—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஊர்குடி ஊராட்சி, ஊர்குடி வாய்க்கால் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஊர்குடி வாய்க்கால், 2020-2021 ஆம் ஆண்டு திட்ட பணிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ், 9.50 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.73 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது.

5—

தூர்வாருதல்

வினா எண் 18764—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, இளவங்கார்குடி, கொடிக்கால்பாளையம், பள்ளிவாரமங்கலம் ஊராட்சி, பாசன வாய்க்காலான சுக்கனார் வாய்க்கால் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, இளவங்கார்குடி, கொடிக்கால்பாளையம், பள்ளிவாரமங்கலம் ஊராட்சி, சுக்கனார் வாய்க்கால் 4.50 கி.மீ. தூரத்திற்கு 2019-2020 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியின்கீழ் ரூ.4.73 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், குடிமராமத்து திட்டத்தின்கீழ் (2020-2021) 6.50 கி.மீ. நீளத்திற்கு ரூ.6.83 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது.

6—

தூர்வாருதல்

வினா எண் 18819—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், அரிச்சந்திரபுரம் ஊராட்சி, வெண்ணாறு பாசன வாய்க்கால் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், அரிச்சந்திரபுரம் ஊராட்சி, வெண்ணாறு பாசன வாய்க்கால், 2020-2021 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ், 1.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது.

7—

தூர்வாருதல்

வினா எண் 18825—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், திருராமேஸ்வரம் ஊராட்சி, கீழநங்கை வாய்க்கால் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், திருராமேஸ்வரம் ஊராட்சி, கீழநங்கை வாய்க்கால், 2020-2021 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ், 3.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.2.96 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 17]

8—

காவிரி நீர்

வினா எண் 21079—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூரில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு காவிரி தண்ணீர் எவ்வளவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) நிறுவனத்தின் மூலமாக எவ்வளவு தண்ணீர் எடுக்கிறார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையில் உள்ள நான்கு தனியார் நிறுவனங்களுக்கு காவிரி ஆற்றிலிருந்து ஆண்டொன்றுக்கு மொத்தம் 23538710 க.மீ. தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்நிறுவனங்கள் கடந்த ஓர் ஆண்டில் (2021-2022) 7559097 க.மீ. என்ற அளவில், தண்ணீரினை எடுத்துப் பயன்படுத்தியுள்ளனர்.

9—

தடுப்பணை

வினா எண் 26129—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் தாமிரபரணி ஆற்றில் 5 கி.மீ. கணக்கில் ஆங்காங்கே தடுப்பணைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 8 அணைக் கட்டுகள் மற்றும் 7 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், பல தடுப்பணைகள், கதவணைகள்,

புதிய நீர்த்தேக்கங்கள் மற்றும் புதிய இணைப்புக் கால்வாய்கள் அமைக்கும் திட்டங்கள் தற்போது நடைபெற்று வருவதால், அவை செயலாக்கப்படும்பட்சத்தில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிலிருந்து வெளியேறும் 12,544 மி.க.அடி வெள்ள உபரி நீரில் 8,844 மி.கன. அடி நீர் சேமிக்கப்படும். மேலும், மீதமுள்ள 3,700 மி.கன. அடி நீர் குடிநீர்த் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும். எனவே, தாமிரபரணி ஆற்றில் 5 கி.மீ. கணக்கில் ஆங்காங்கே மேற்கொண்டு தடுப்பணைகளை மேலும் கட்டுவதற்கு தொழில்நுட்பரீதியாக தேவை எழவில்லை.

10—

விழிப்புணர்வு

வினா எண் 49332—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகமெங்கும் நீர்நிலைப் பகுதிகளில் செல்பி எடுப்பதில் ஏற்படும் மனித உயிரிழப்பை தடுக்க விழிப்புணர்வு உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தமிழகமெங்கும் உள்ள நீர்நிலைகளின் ஆழமான பகுதிகளில் ஏற்படும் மனித உயிரிழப்பை தடுக்க துறை சார்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில் ஆங்காங்கே எச்சரிக்கை பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

11—

உதவி இயக்குநர் நியமனம்

வினா எண் 2503—திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டையில் வேளாண்மை உதவி இயக்குநரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2018-2019 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் பயிர் காப்பீடு திட்டம் புதிதாக கொண்டுவரப்பட்டு, பயிர் காப்பீட்டுத் திட்ட செயலாக்கத்தைக் கண்காணிக்கவும், களப்பிரச்சினைகளை உடனுக்குடன் களையவும், விவசாயிகளுக்கு விரைவாக இழப்பீடு பெற்றுத்தரும் நோக்கில் பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டபோது, சுல்தான்பேட்டை வட்டாரத்தில் சாகுபடி பரப்பளவு குறைந்த அளவில் இருந்த காரணத்தினாலும், பயிர் காப்பீடு பணியினை மேற்கொள்வதற்காகவும் பிறவற்றுடன் சுல்தான்பேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் பணியிடத்தினை, இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர் காப்பீடு) பணியிடமாக பணியிடப் பெயர்ச்சிமூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளுக்கோ, விவசாயப் பணிகளுக்கோ பாதிப்பு ஏற்படாதவண்ணம் சுல்தான்பேட்டை வட்டாரத்திற்குட்பட்ட வேளாண் பணிகள் அருகிலுள்ள சூலூர், வேளாண்மை உதவி இயக்குநரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பெரியநாயக்கன்பாளையத்திற்கென தனியே வேளாண்மை உதவி இயக்குநர் நியமனம் செய்ய அவசியம் எழவில்லை.

12—

பாசன மானியம்

வினா எண் 7760—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இரப்பர் பயிருக்கு என தனியாக சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இரப்பர் பயிருக்கு பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் 5மீ.X5மீ. இடைவெளியில் சொட்டு

நீர் பாசனம் அமைக்க எக்டர் ஒன்றுக்கு ரூ.44,103/- மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

2. 2017 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் 2022 வரை கீழ்க்காணும் மாவட்டங்களில் 102.21 எக்டர் பரப்பளவில் இரப்பர் பயிருக்கு சொட்டு நீர் பாசன அமைப்புகள் நிறுவுவதற்காக விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 66.56 எக்டர் பரப்பளவில் சொட்டு நீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன:-

வ. எண்	மாவட்டம்	பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரப்பளவு (he)	சொட்டுநீர்ப் பாசன அமைப்பு நிறுவப்பட்ட பரப்பளவு (he)
1	தருமபுரி	3.24	1.85
2	திண்டுக்கல்	1.42	0.68
3	கன்னியாகுமரி	96.28	63.53
4	நீலகிரி	0.50	0.50
5	புதுக்கோட்டை	0.77	0
	மொத்தம்	102.21	66.56

3. மேலும், குறு/சிறு விவசாயி எனில், அதிகபட்சமாக 2 எக்டர் வரை சொட்டு நீர் பாசனம் அமைத்துக்கொள்ள 100% மானியமும், பெரு விவசாயி எனில், அதிகபட்சமாக 5 எக்டர் வரை சொட்டு நீர் பாசனம் அமைத்துக்கொள்ள 75% மானியமும் வழங்கப்படுகிறது.

13—

உழவர் ஊதியக் குழு

வினா எண் 12470—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகளின் நிரந்தர வருமானத்தை உறுதிபடுத்தி ஆய்வு செய்திட உழவர் ஊதியக் குழு ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழக விவசாயிகளின் நிரந்தர வருமானத்தை உறுதிபடுத்த, தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில் உழவர் ஊதியக் குழு அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

வேளாண்மை விரிவாக்க மையம்

வினா எண் 12738—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, கீரனூரில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம், இடுபொருள் சேமிப்புக் கிடங்கு மற்றும் அலுவலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன. இவற்றில், குன்றாண்டார்கோயில், திருவரங்குளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி, திருமயம், அரிமளம், பொன்னமராவதி மற்றும் விராலிமலை ஆகிய 9 வேளாண்மை விரிவாக்க மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் உள்ள 20 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்கான விதை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், கந்தர்வக்கோட்டை மற்றும் கறம்பக்குடியில் புதியதாக ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்து, அதனை தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் கட்டிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கீரனூரில் விதை சேமிப்புக் கிடங்கு வசதியுடன்கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம் கட்டும் பணியானது ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும், கீரனூரில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

15—

சேமிப்பு கிடங்கு

வினா எண் 12762—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், வெள்ளாள விடுதி ஊராட்சியில் மாநில எண்ணெய் வித்து பண்ணை 602 ஏக்கரில் உள்ளது. தற்பொழுது ஆழ்குழாய் கிணறு 40-ல் 16 தான் இயங்குகின்றன. 24 பயன்பாட்டில் இல்லை. ஆய்வுக்கு எடுத்து முறையான நிர்வாக ஏற்பாடுகள் செய்து, சேமிப்புக் கிடங்கு, குளிரூட்டிக் கிடங்கு ஆகியவற்றை சரிசெய்து பயன்பாட்டுக்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை— உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், வெள்ளாள விடுதி ஊராட்சியில் உள்ள மாநில எண்ணெய் வித்து பண்ணையில் 40 ஆழ்குழாய்க் கிணறுகளில், 17 மட்டும் நல்ல நிலையில் செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 23 ஆழ்குழாய்க் கிணறுகள் பயன்பாட்டில் இல்லை. மேலும், கடந்த 2020-2021 ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை

2023 ஏப்ரல் 17]

வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.65 இலட்சம் நிதி செலவினத்தில் புதிதாக 3 ஆழ்குழாய்க் கிணறுகள், 2 கிணற்றுக்கான தடுப்புச்சுவர், 3 திறந்தவெளி கிணற்றை ஆழப்படுத்துதல் போன்ற பல பணிகள் செய்யப்பட்டுள்ளன. பண்ணையில் உள்ள 3 சேமிப்புக் கிடங்குகள் பயன்பாட்டில் உள்ளன. கஜா புயலால் பாதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கினை நிதி செலவின சிக்கனத்தை கருத்தில் கொண்டு சாதாரண சேமிப்புக் கிடங்காக பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

16—

விழிப்புணர்வு

வினா எண் 14361—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——*

எண்ணெய்ப் பனை சாகுபடி விவசாயத்தைக் குறித்து தேவையான விழிப்புணர்வை விவசாயிகளிடம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் எண்ணெய்ப் பனைத் திட்டம் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையால் ஏப்ரல் 2022-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் முதற்கட்டமாக, 20-8-2022 அன்று செய்தித்தாள் மற்றும் ஊடகங்களில் விளம்பரங்கள் தரப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து, சமூக வலைதளங்கள் மூலமாக தகவல்கள் பகிரப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டங்களில் துறை சார்ந்த அலுவலர்கள் மூலமாக கிராமங்களில் நடத்தப்படும் கிராமக் கூட்டங்களிலும் மற்றும் கிராம சபைக் கூட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 17

17—

இயக்குநர் நியமனம்

வினா எண் 14414—திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன் பாளையத்தில் உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் காலியாக உள்ள உதவி வேளாண் இயக்குநரை விரைவாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2018-2019 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் பயிர் காப்பீடு திட்டம் புதிதாகக் கொண்டு வரப்பட்டு, பயிர் காப்பீட்டுத் திட்ட செயலாக்கத்தைக் கண்காணிக்கவும், களப் பிரச்சினைகளை உடனுக்குடன் களையவும் விவசாயிகளுக்கு விரைவாக இழப்பீடு பெற்றுத்தரும் நோக்கில் பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டபோது, பிறவற்றுடன் பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் சாகுபடி பரப்பளவு குறைந்த அளவில் இருந்த காரணத்தினாலும், பயிர் காப்பீடு பணியினை மேற்கொள்வதற்காகவும், பெரியநாயக்கன்பாளையம், வேளாண்மை உதவி இயக்குநர் பணியிடத்தினை, திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர் காப்பீடு) பணியிடமாக பணியிடப் பெயர்ச்சிமூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கோ, விவசாயப் பணிகளுக்கோ பாதிப்பு ஏற்படாதவண்ணம் பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்திற்குட்பட்ட வேளாண் பணிகள் அருகிலுள்ள சர்கார்சாமக்குளம், வேளாண்மை உதவி இயக்குநரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பெரியநாயக்கன்பாளையத்திற்கென தனியே வேளாண்மை உதவி இயக்குநர் நியமனம் செய்ய அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 17]

18—

குறுவை தொகுப்புத் திட்டம்

வினா எண் 17601—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவிரி டெல்டா விவசாயிகளுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட டெல்டா விவசாயிகளை இத்திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

2022 ஆம் ஆண்டில், குறுவை தொகுப்புத் திட்டம் செயல்படுத்துவதற்காக ரூ.61.1295 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்கள் முழுவதும் மற்றும் கடலூர், திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களின் டெல்டா வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டது.

19—

ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலகம்

வினா எண் 22890—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வக்கோட்டையில் ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன.

இவற்றில் குன்றாண்டார்கோயில், திருவரங்குளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணல்மேல்குடி, திருமயம், அரிமளம், பொன்னமராவதி மற்றும் விராலிமலை ஆகிய 9 வேளாண்மை விரிவாக்க மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் உள்ள 20 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளின் விதை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

50 ஆண்டுகளாக செயல்பட்டுவரும் கந்தர்வக்கோட்டை வேளாண்மை விரிவாக்க மையம் தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

20—

சாகுபடி பரப்பளவு

வினா எண் 23306—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் வேளாண்மை சாகுபடி பரப்பளவை அதிகரித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கூடுதலாக அடுத்த பத்தாண்டுகளில் 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச் செய்து தற்போதுள்ள நிகர சாகுபடி பரப்பான (48.33 இலட்சம் எக்டர்) 60 விழுக்காடு என்பதை 75 விழுக்காடாக (61 இலட்சம் எக்டர்) உயர்த்துவதற்காக வேளாண்மை-உழவர் நலத் துறை பல்வேறு சீரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கடந்த 2021-2022 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் என்ற சிறப்புத் திட்டம் மாநிலத்திலுள்ள 12,524 கிராம பஞ்சாயத்துக்களின்

2023 ஏப்ரல் 17]

ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சிக்காக 5 ஆண்டுக்காலத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஐந்தில் ஒரு பங்கு கிராமப் பஞ்சாயத்துக்களை தேர்ந்தெடுத்து, அவற்றில் தரிசு நிலங்கள் அடங்கிய தொகுப்புகளை உருவாக்கி, ஆழ்துளைக் கிணறுகள்மூலம் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தப்பட்டு, பயிர் சாகுபடி ஊக்கப்படுத்தப்படுகிறது. இவை மட்டுமின்றி, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், சிறுதானிய இயக்கம், மானாவாரி மேம்பாட்டுத் திட்டம், பயறு வகை பெருக்குத் திட்டம், எண்ணெய் வித்து பெருக்குத் திட்டம் ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றின் வாயிலாக, வேளாண் பயிர்களில் 78,000 எக்டர் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் 40,000 எக்டர் பரப்பளவிலும் கூடுதலாக நிலங்களை சாகுபடியின்கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

21—

டிப்ளமோ துவங்குதல்

வினா எண் 23317—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதியில் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் ஆறு மாத டிப்ளமோ பாடப் பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் மண்டல ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது. தளிக்கு அருகே ஒசூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் தனியார் கல்லூரியான அதியமான் வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது.

[2023 ஏப்ரல் 17

திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், அத்தியேந்தலில் சிறுதானிய மகத்துவ மையமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் தனியார் கல்லூரியான அரவிந்தர் வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது.

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறையில் தோட்டக்கலைத் துறையின்கீழ் பட்டயப் படிப்பு கல்லூரி செயல்பட்டு வருகின்றது. தளி தொகுதி மாணவர்கள் இக்கல்லூரிகளைத் தேர்வு செய்து பயன்பெறலாம். மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்பேரில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூரில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை முடிவுற்று, வகுப்பு நடைபெற்று வருகின்றது.

எனவே, தளி தொகுதியில் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் ஆறு மாத டிப்ளமோ பாடப் பிரிவுகள் தொடங்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

22—

தரிசு நிலம் சாகுபடி

வினா எண் 23318—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளாள விடுதி எண்ணெய் வித்து பண்ணையில் தரிசு நிலத்தை வேளாண்மை சாகுபடிக்கு உபயோகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாள விடுதியிலுள்ள மாநில எண்ணெய் வித்துப் பண்ணையானது,

2023 ஏப்ரல் 17]

1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பண்ணையின் மொத்த பரப்பளவு 602.35 ஏக்கர் ஆகும். இப்பரப்பில் மொத்த சாகுபடி பரப்பு 222.75 ஏக்கர் ஆகும். பயன்தரும் மரங்கள், நீராதாரங்கள் மற்றும் கட்டடங்கள் 319.6 ஏக்கர் பரப்பில் உள்ளன. 2021-2022 ஆம் ஆண்டில் 60 ஏக்கர் தரிசு நிலமாக இருந்தது. இதில், 2021-2022 ராபி பருவத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (2020-2021) 20 ஏக்கர் தரிசு நிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டு கடலை, எள் மற்றும் உளுந்து ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் 40 ஏக்கர் தரிசு நிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டு, கடலை, எள், உளுந்து மற்றும் சணப்பு பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, மேலும், தரிசு நிலம் எதுவும் இல்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

23—

இயக்குநர் நியமனம்

வினா எண் 23340—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள வேளாண்மை அலுவலகத்திற்கு உதவி வேளாண் இயக்குநரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2018-2019 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் பயிர் காப்பீடு திட்டம் புதிதாகக் கொண்டு வரப்பட்டு பயிர் காப்பீட்டுத் திட்ட செயலாக்கத்தைக் கண்காணிக்கவும், களப்பிரச்சினைகளை உடனுக்குடன் களையவும், விவசாயிகளுக்கு விரைவாக இழப்பீடு பெற்றுத்தரும் நோக்கில் பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டபோது, பிறவற்றுடன் பெரியநாயக்கன்பாளையம்

[2023 ஏப்ரல் 17

வட்டாரத்தில் சாகுபடி பரப்பளவு குறைந்த அளவில் இருந்தக் காரணத்தினால், பெரியநாயக்கன்பாளையம், வேளாண்மை உதவி இயக்குநர் பணியிடத்தினை, திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர் காப்பீடு) பணியிடமாக பணியிடப் பெயர்ச்சிமூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளுக்கோ, விவசாயப் பணிகளுக்கோ பாதிப்பு ஏற்படாதவண்ணம் பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்திற்குட்பட்ட வேளாண் பணிகள் அருகிலுள்ள சர்கார்சாமக்குளம், வேளாண்மை உதவி இயக்குநரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பெரியநாயக்கன்பாளையத்திற்கென தனியே வேளாண்மை உதவி இயக்குநரை நியமனம் செய்ய அவசியம் எழவில்லை.

24—

வேளாண்மை விரிவாக்க மையம்

வினா எண் 23348—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனியை மையமாக வைத்து வேளாண்மைத் துறை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனியில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2019-2020-ன்கீழ் ரூ.40 இலட்சம் செலவில், விதை சேமிப்புக் கிடங்குடன்கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையமானது கட்டி முடிக்கப்பட்டு, 20-9-2021 முதல் பயன்பாட்டில் உள்ளது.

25—

உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

வினா எண் 26422—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) பெண்ணாகரம் தொகுதி, பேகார அள்ளி ஊராட்சியில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (நவதான்ய) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பேகாரஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் விவசாயிகளை ஒருங்கிணைத்து தமிழ் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் நபார்டு வங்கி உதவியுடன் 7-11-2020 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதன் பதிவு எண் U01110TZ2020PTC034935.

26—

வேளாண் உதவி மையம்

வினா எண் 26423—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சியில் வேளாண் உதவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும், பாப்பாரப்பட்டியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன. இவ்வேளாண்மை விரிவாக்க மையங்களில் அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, பிளியனூர் ஊராட்சி உட்பட, அனைத்து ஊராட்சிகளை சேர்ந்த விவசாயிகளும் எளிதில் வந்து இடுபொருட்களை பெறும்வகையில் 10-15 கி.மீ. தொலைவில்

அமைந்துள்ளன. ஆகவே, பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சிக்கு வேளாண்மை உதவி மையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

27—

வேளாண் உதவி மையம்

வினா எண் 26424—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சியில் வேளாண் உதவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும், பாப்பாரப்பட்டியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன. இவ்விரிவாக்க மையங்களில் பெண்ணாகரம் தொகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, பெண்ணாகரம் தொகுதியிலுள்ள பெண்ணாகரம் வட்டாரத்திற்குட்பட்ட கோடி அள்ளி ஊராட்சி உட்பட அனைத்து ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகளும் எளிதில் வந்து இடுபொருட்களை பெறும்வகையில் 10-15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சியில் தனியாக வேளாண்மை உதவி மையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

28—

வேளாண் உதவி மையம்

வினா எண் 26430—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சியில் வேளாண் உதவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும், பாப்பாரப்பட்டியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன. இவ்விரிவாக்க மையங்களில் பெண்ணாகரம் தொகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, கூத்தப்பாடி ஊராட்சி உட்பட, அனைத்து ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகளும் எளிதில் வந்து இடுபொருட்களை பெறும்வகையில் 10-15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சிக்கு தனியாக வேளாண்மை உதவி மையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

29—

வேளாண் உதவி மையம்

வினா எண் 26432—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பேகார அள்ளி ஊராட்சியில் வேளாண் உதவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலக்கோடு வட்டாரத்தில் பாலக்கோட்டை தலைமையிடமாகக்

[2023 ஏப்ரல் 17

கொண்டு ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும், மாரண்டஅள்ளி மற்றும் புலிக்கரையில் தலா ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் செயல்பட்டு வருகின்றன இவ்விரிவாக்க மையங்களில் அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, பேகார அள்ளி ஊராட்சி உட்பட, அனைத்து ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகளும் எளிதில் வந்து இடுபொருட்களை பெறும்வகையில் 10-15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, பெண்ணாகரம் தொகுதி, பேகார அள்ளி ஊராட்சியில் வேளாண்மை உதவி மையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

30—

காய்கறி உற்பத்தி

வினா எண் 48426—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி பகுதி விவசாயிகளை காய்கறிகள் பயிரிட ஊக்குவிக்கவும், காய்கறி உற்பத்தியைப் பெருக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

மன்னார்குடி வட்டாரத்தில் காய்கறி பயிர் சாகுபடியை ஊக்குவிக்கும்வகையில் 2022-2023 ஆம் ஆண்டு தோட்டக்கலைத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS), தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP), தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (NADP) ஆகிய திட்டங்களின்கீழ் 133 எக்டர் பரப்பளவிற்கு வீரிய ஒட்டு குழித்தட்டு காய்கறி நாற்றுகள், வீரிய ரக காய்கறி விதைகள் வழங்கிட இலக்கு வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 17]

31—

களைக்கொல்லி விற்பனை

வினா எண் 48931—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் தனியார் விவசாய உரக் கடைகளில் களைக்கொல்லி மருந்து கூடுதல் விலைக்கு விற்பதை தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ஆம். பூச்சி மருந்து சட்டம், 1968 மற்றும் விதிகள் 1971, விதி எண் 19-ன்படி பாட்டிலின் மேல் உள்ள விலை அட்டையில் அதிகபட்ச விற்பனை விலை (MRP) உள்ளிட்ட விவரங்கள் மேற்குறிப்பிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதிகபட்ச விற்பனை விலையினைவிட (MRP-க்கு) கூடுதலாக விற்பனை செய்தால் உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

32—

காய்கறி தோட்டம்

வினா எண் 50856—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு துறை கட்டடங்களின் மாடியில் தமிழ்நாடு தோட்டக்கலை மூலமாக காய்கறி தோட்டம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

அரசுத் துறை கட்டடங்களின் மாடியில் காய்கறி தோட்டம் அமைப்பதற்காகும் முழு செலவினத்தையும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் மேற்கொள்ளும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட

தோட்டக்கலை இணை இயக்குநர்/தோட்டக்கலை துணை இயக்குநர் மூலமாக அரசுத் துறை கட்டடங்களின் மாடியில் காய்கறித் தோட்டம் அமைத்துத் தரப்படும்.

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின்கீழ் செயல்படும் நில எழிலூட்டல் பிரிவின்மூலம் அரசுத் துறை வளாகங்களில் நில எழிலூட்டல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

33—

எலெக்ட்ரிக் வாகனம்

வினா எண் 51683—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எலெக்ட்ரிக் வாகனங்கள் வெடிக்கும் சம்பவங்கள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

மின்கலத் தொகுப்புகளில் (Battery packs) பயன்படுத்தப்படும் லித்தியம் செல்கள், சரியான விதத்தில் பயன்படுத்தப்படாதபோது தீ மற்றும் வெடிப்புக்கு ஆளாகின்றன. லித்தியம் அயன் மின்கலத் தொகுப்புகளில் ஏற்படும் இவ்வாறான தீ விபத்துதான் மின் வாகனங்கள் வெடிக்கும் சம்பவங்கள் குறித்த பொதுமக்களின் அச்சத்திற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது.

பின்வரும் காரணங்களால் லித்தியம் அயன் பேட்டரி செயலிழப்பு ஏற்படுகின்றன: (1) இயந்திரவியல் அடிப்படையிலான தவறுகள் (2) நீர், தூசி போன்றவற்றால் மாசுபடுதல் (3) அதிக அளவில் மின்னேற்று மேற்கொள்ளுதல் (Over charging) (4) அதிகப்படியான மின் வெளியேற்றம், (5) அதிக வெப்பநிலை சூழல் காரணமாக, எலக்ட்ரோலைட் ஆவியாகுதல் மற்றும் (6) மின் கசிவு (Internal Short Circuit) போன்றவைகள்.

பாதுகாப்பு நடவடிக்கைகள்

இந்திய தர நிறுவனம், விதி 156-ன் (AIS 156) மூன்றாவது திருத்தத்தில் வாடிக்கையாளர் (மற்றும்) வாகனங்கள் பாதுகாப்பை

2023 ஏப்ரல் 17]

உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, மின்கல பாதுகாப்பு நடவடிக்கைகளில் கடுமையான விதிமுறைகளை விதித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, மின் வாகன உற்பத்தி நிறுவனங்கள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளன:-

1) *தீ விபத்துக்களைத் தவிர்த்திட புதிய கடுமையான சோதனை விதிமுறைகளை செயல்படுத்துதல்.*
2) *மின்கலன் மேலாண்மைக்காக விதிமுறைகள் வகுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாடுகளை உன்னிப்பாக கவனித்தல்.*
3) *மின் வாகன உற்பத்தி நிறுவனங்கள் தாங்கள் ஏற்கெனவே விற்பனை செய்த வாகனங்களை திரும்ப பெற்று தடுப்பு சோதனைகளை மேற்கொள்ளுதல்.*

ஒன்றிய அரசு மின்கலன் ஒழுங்குமுறை விதிகளை விரைவில் செயல்படுத்த உள்ளது. அவ்வாறே மாநில அரசும் விதிகளை நடைமுறைப்படுத்திட திட்டமிட்டுள்ளது.

34—

எலக்ட்ரிக் வாகனப் பட்டறை

வினா எண் 61760—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடெங்கும் எலக்ட்ரிக் வாகனங்கள் பழுதுநீக்கும் பட்டறைகள் மற்றும் மின்னேற்றம் செய்யப் போதுமான பங்குகள் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

மின் வாகனங்கள் பழுதுநீக்கும் பட்டறைகள் மற்றும் மின்னேற்றம் செய்யும் நிலையங்களை நிறுவும் திட்டங்கள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஒன்றிய அரசைப்

பொறுத்தவரையில் FAME-II (Faster Adoption and Manufacturing of Evs) திட்டத்தின்கீழ் 256 Ev மின்னேற்று நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மின் வாகனங்கள் பழுது நீக்கும் பட்டறைகள் மற்றும் மின்னேற்றம் செய்யும் நிலையங்களை நிறுவிட தனியார் நிறுவனங்கள் முன்வருவார்களேயானால், அரசு அவர்களை ஊக்குவித்து ஆதரவுச் சேவைகளை அளிக்கும்.

மேலும், அரசு ஒரு திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கையை விரைவில் வெளியிடவுள்ளது. அக்கொள்கையின் அடிப்படையில் மாநிலத்தில் தனியார் நிறுவனங்கள் மின்னேற்று நிலையங்களை நிறுவுவது வெகுவாக ஊக்குவிக்கப்படும்.

35—

வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள்

வினா எண் 28045—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி நகர மற்றும் கிராம பகுதியில் வீடு இல்லாதவர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டவும், உசிலம்பட்டி நகர தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதிகளில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி நகரப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், பொதுமக்களிடம் போதிய கேட்பு இருக்கும்பட்சத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய

2023 ஏப்ரல் 17]

தகுந்த ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

36—

அடுக்குமாடிக் குடியிருப்பு

வினா எண் 28055—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, மயிலம் மற்றும் வல்லம் ஒன்றியங்களில் உள்ள பழங்குடியினர் மக்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, மயிலம் மற்றும் வல்லம் ஒன்றியங்களில் உள்ள பழங்குடியினர் மக்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், பொதுமக்களிடம் போதிய கேட்பு இருக்கும்பட்சத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய தகுந்த ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

வீட்டுக் கடன்

வினா எண் 28878—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின்மூலம் கிராமத்தில் வசிக்கும் ஏழையெளிய மக்களுக்கு வீட்டுக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு வீட்டு வசதித் துறையின்கீழ் செயல்பட்டுவரும் தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கம் ஏழையெளிய மக்கள் ஏற்கத்தக்க வட்டி விகிதத்தில், சொந்த நிதி மற்றும் வைப்பீடுகள் திரட்டுதல்மூலம் பெறப்படும் நிதியினைக் கொண்டு அடமானத்தின் பெயரில் உறுப்பினர்களுக்குக் கட்டுமானக் கடன்கள் வழங்குவதாகும்.

பெண்ணாகரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் நிதிநிலைமை கடந்த 12 வருட காலமாக நலிவடைந்துள்ளதால், கடன் வழங்க இயலாத சூழ்நிலையில் தற்போது உள்ளது. சங்கம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை 31-10-2022-ன்படி ரூ.132.35 இலட்சமாகும்.

மேற்கண்ட கடன் தொகையினை இணையத்திற்கு முழுவதும் திருப்பி செலுத்தித் தவணைக் கடன் இல்லாத சங்கமாக மாறிய பின்னர், அரசாணையின்படி இணையத்தின்மூலம் சங்கத்திற்குக் கடன் வழங்கப்பட்டு, பெண்ணாகரம் வட்டம் முழுவதும் உள்ள கிராம ஏழையெளிய மக்களுக்கு வீடு கட்ட கடன் வழங்க வழிவகை செய்யப்படும்.

38—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 31046—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சியில் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், பொதுமக்களிடம் போதிய கேட்பு பெறப்பட்டு, அரசு நிலங்கள் வழங்கும்பட்சத்தில் போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

39—

கூட்டுறவு வீட்டுக் கடன் சங்கம்

வினா எண் 69481—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதியில் நகர கூட்டுறவு வீட்டுக் கடன் சங்கம் புதியதாக துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) கட்டுப்பாட்டில் தற்போது 725 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில், 566 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் நகர்ப்புற மக்களின் வீட்டு வசதி தேவைகளையும், 159 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் கிராமப்புற மக்களின் வீட்டு வசதி தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றன.

பெண்ணாகரம் தொகுதியில் ஏற்கெனவே பெண்ணாகரம் நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மற்றும் பெண்ணாகரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் இயங்கி வருகின்றன.

[2023 ஏப்ரல் 17

பெண்ணாகரம் தொகுதி பாப்பாரப்பட்டி பகுதி மேற்கண்ட சங்கங்களின் விவகார எல்லைக்குட்பட்டுள்ளதால், புதியதாக ஒரு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் துவங்குவதற்குரிய அவசியம் ஏற்படவில்லை.

40—

அடுக்குமாடி கட்டடங்கள்

வினா எண் 28057—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி, சேத்தியாத்தோப்பு, கங்கைகொண்டான் ஆகிய பேரூராட்சிகளில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி, சேத்தியாத்தோப்பு மற்றும் கங்கைகொண்டான் ஆகிய 3 பேரூராட்சிகளில் வாழும் குடும்பங்கள் தனி வீடுகளை விரும்பியதன் காரணமாக இப்பேரூராட்சிகளில் வாழும் குடும்பங்களுக்கு 750 தனி வீடுகள் ரூ.23.46 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றுள் 447 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 230 வீடுகளுக்கான பணிகள் வெவ்வெறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 73 தனி வீடுகளுக்கான பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கீழே கூறப்பட்டுள்ள அரசு மானியங்களைக் கொண்டு மாவட்ட நகரங்களில் கட்டப்படுகிறது.

2023 ஏப்ரல் 17]

ஒன்றிய அரசின் மானியம்	*ரூ.1.50 இலட்சம்*
மாநில அரசின் மானியம்	*ரூ.7.00 இலட்சம்*
பயனாளிகளின் பங்களிப்புத்தொகை (சுமார்)	*ரூ.3.50 இலட்சம்*
மொத்தம் (தோராயமாக)	*ரூ.12.00 இலட்சம்*

புவனகிரி, சேத்தியாத்தோப்பு மற்றும் கங்கைகொண்டான் பேரூராட்சிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட உரிய நிலங்களுக்கு முன்நுழைவு அனுமதி மாவட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட பின், பயனாளிகளின் பங்களிப்புத் தொகை செலுத்த முன்வரும் தகுதிவாய்ந்த ஏழை குடும்பங்கள் அடங்கிய பட்டியல், மாவட்ட நிர்வாகத்தால் இறுதி செய்யப்பட்டு, இப்பேரூராட்சிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

41—

குடியிருப்புகள் சீரமைப்பு

வினா எண் 28884—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழுதடைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளைச் சீரமைக்க அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று

வருகின்றன. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் உள்ள மொத்தம் 365 திட்டப் பகுதிகளில், 1.78 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. இக்குடியிருப்புகளில் மாடிப்படிகள், பால்கனி, தரைதளம், கூரைத் தளங்களில் ஏற்படும் பழுதுகளை நீக்குதல், கூரைத் தளத்தில் ஓடுகள் பதித்தல், குடிநீர் விநியோகம், பழைய கழிவு நீரகற்றுக் குழாய்கள், கழிப்பிடப் பீங்கான்கள் போன்றவற்றை மாற்றுதல், வெளிப்புறச் சுவர் பூச்சு மற்றும் வண்ணம் பூசுதல் போன்ற பழுதுபார்ப்புப் பணிகள், மாநில அரசின் நிதி, சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன. இந்நிதியாண்டில், இப்பணிகளுக்காக ரூ.60.28 கோடி செலவிட திட்டமிடப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் இந்நிதியாண்டில் முடிவுறும்.

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்ப்புப் பணிகளை இனிவரும் காலங்களில் உரிய முறையில் நிறைவேற்றிட "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" என்ற புதிய திட்டம் பின்வரும் இலக்குகளைக் கொண்டுள்ளது:-

i. அடுக்குமாடிக் குடியிருப்புகளை சுத்தமாகவும், நேர்த்தியாகவும் பராமரித்தல்.

ii. உரிய நேரத்தில் பழுது மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ளுதல்.

iii. உரிய காலகட்டத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் புதுப்பித்தல்.

iv. குடியிருப்புதாரர்கள் கோரும் கூடுதல் உட்கட்டமைப்புகளை அமைத்தல்.

v. பொது உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல்.

vi. எழுச்சிமிகு குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்குதல்.

vii. அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பராமரிப்புப் பொறுப்பை குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு மாற்றுதல்.

2023 ஏப்ரல் 17]

viii. *குடியிருப்போர் நலச் சங்கத்திற்கு நிதி தொடர்பான அதிகாரம் அளித்தல்.*

ix. *குடியிருப்புதாரர்களுக்கும், வாரியத்திற்குமிடையே சுமூகமான ஒருங்கிணைப்பினை உருவாக்குதல்,*

x. *குறைதீர்க்கும் நெறிமுறைகளை எளிதாக்குதல்.*

தமிழகம் முழுவதும் வாரிய திட்டப் பகுதிகளில் குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மொத்தமாக 694 குடியிருப்போர் நலச் சங்கங்களை அமைக்கும் இலக்கினை அடையும் நோக்கத்துடன், இதுவரை 536 குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள், 382 குடியிருப்போர் நலச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்போர் நலச் சங்கங்களை உருவாக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

42—

குடியிருப்புகள் பயன்பாடு

வினா எண் 38378—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராயபுரம் தொகுதியில் கட்பாடா-ராம்தாஸ் நகரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை, இராயபுரம் தொகுதியில் கட்பாடா ராம்தாஸ் நகரில் உள்ள மூலக்கொத்தளம் திட்டப் பகுதியில் பகுதி-1-ன்கீழ் 648 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தூண் மற்றும் 11 அடுக்குகள் மேம்பாட்டிலும் மற்றும்

[2023 ஏப்ரல் 17

பகுதி-II-ன்கீழ் *396* அடுக்குமாடிக் குடியிருப்புகள் தூண் மற்றும் *9* அடுக்குகள் மேம்பாட்டிலும் என மொத்தம் *1,044* அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்புகளுக்கான குடிநீர் வசதி, சாலைகள், கழிவுநீரகற்று வசதி போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் *2023* ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டப் பகுதிக்கான சுற்றுச்சூழல் அனுமதி தற்போது பெறப்பட்டுள்ளது.

இத்திட்டப்பணிகளுக்கான மொத்த மதிப்பீடு மற்றும் நிதி ஆதாரங்கள் குறித்த விவரம் பின்வருமாறு:-

(ரூ.கோடியில்)

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகள்	ஒன்றிய அரசின் மானியம்	மாநில அரசின் மானியம்	பயனாளிகளின் பங்களிப்புத் தொகை	மொத்தம்
1	மூலகொத்தளம் பகுதி-I	*648*	*9.72*	*38.88*	*35.64*	*84.24*
2	மூலகொத்தளம் பகுதி-II	*396*	*5.94*	*23.76*	*24.35*	*54.05*
மொத்தம்		*1,044*	*15.66*	*62.64*	*59.99*	*138.29*

கட்டடப் பணிகள் மற்றும் இதர பணிகள் அனைத்தும் முடிவுற்ற பின்னர் மூலக்கொத்தளம் திட்டப் பகுதி குடியிருப்புகளுக்கு விருப்பமுள்ள பயனாளிகளின் தகுதிப் பட்டியல் தயார் செய்து, பயனாளிகள் பங்களிப்புத் தொகை செலுத்த சம்மதக் கடிதம் அளிக்கும் தகுதிவாய்ந்த குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் அரசு உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

2023 ஏப்ரல் 17]

43—

மீனவர்களுக்கு குடியிருப்புகள்

வினா எண் 59116—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை நொச்சிக்குப்பம் பகுதியில் கட்டப்பட்டுவரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் (ETRP) *சென்னை மயிலாப்பூர் பகுதியில் உள்ள நொச்சி நகர் திட்டப் பகுதியில் 628 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 2013 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இக்குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.*

சென்னை நொச்சிக்குப்பம் மெரினா லூப் சாலையில், பட்டினப்பாக்கம் திட்டப் பகுதியில் தற்போது அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கூடுதலாக 1,188 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்குடியிருப்புகளை மேற்காணும் திட்ட வழிகாட்டுதலின்கீழ் ஒதுக்கீடு செய்ய அரசு உரிய நேரத்தில் பரிசீலனை செய்யும்.

44—

விற்பனைப் பத்திரம்

வினா எண் 69480—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் குடியிருப்புகள் ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள விற்பனைப் பத்திரங்களை விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அடுக்குமாடிக் குடியிருப்புகள் திட்டப் பகுதிகளில் குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு வாரிய விதிகளின்படி, ஒதுக்கீடு பெற்று 5 ஆண்டுகள் நிறைவடைந்த மற்றும் வாடகை/தவணைத் தொகை/பராமரிப்புத் தொகை நிலுவையின்றி செலுத்திய குடும்பங்களுக்குக் கிரையப் பத்திரம் வழங்கப்படுகிறது.

கடந்த அக்டோபர் 2022 ஆம் ஆண்டு வரை 1,76,872 குடியிருப்புகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள், கிரையப் பத்திரம் பெறத் தகுதியான 5 ஆண்டுகள் நிறைவடைந்த குடியிருப்புகள் 1,22,273. அவற்றுள் வாரிய விதிகளின்படி நிலுவையின்றி வாடகை/தவணைத் தொகை/பராமரிப்புத் தொகை செலுத்திய 31,852 குடியிருப்புகளுக்கு கிரையப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கிரையப் பத்திரம் பெற்றுக்கொள்ளத் தகுதியான ஒதுக்கீடுதாரர்களை ஊக்குவிக்கக் கோட்ட அலுவலகங்கள் வாயிலாக 20,889 மாதிரி கிரையப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

45—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 69486—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தேசிய நெடுஞ்சாலை பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர்-சேலம் தேசிய நெடுஞ்சாலையில் பெருந்துறை பகுதி சாலையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் திருவாச்சி நேதாஜி நகர் திட்டப் பகுதியில் 204 (G+2) அடுக்குமாடிக் குடியிருப்புகள் தரைதளம் மற்றும் இரண்டடுக்கு மேம்பாட்டில் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ஒன்றிய, மாநில அரசுகளின் மானிய உதவியுடன் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

	(ரூ. கோடி)
ஒன்றிய அரசு	3.06
மாநில அரசு	14.28
பயனாளிகளின் பங்களிப்பு	0.36
மொத்தம்	17.70

அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 204 குடியிருப்புகளுக்கான பணிகள் முடிவுற்று, 155 குடியிருப்புகளுக்குப் பயனாளிகளின் பங்களிப்புத் தொகை செலுத்திய குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 49 குடியிருப்புகள் பயனாளிகளின் பங்களிப்பு செலுத்தும் குடும்பங்களுக்கு விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும்.

பெருந்துறை பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு 122 தனி வீடுகள் (BLC) பயனாளிகள் தாமாகவே வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தில் ரூ.3.93 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றுள் 109 வீடுகளுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன. 6 வீடுகளுக்கான பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் மீதமுள்ள 7 தனி வீடுகளுக்கான பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 17

46—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 76073—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தேக்கம்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கு நகர்ப் பகுதிகளில் மட்டுமே அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகிறது மற்றும் தனி வீடுகள் கட்ட மானியம் வழங்கப்படுகிறது.

மேட்டுப்பாளையம் தொகுதி, தேக்கம்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் குடியிருப்புகள் கட்ட தேர்வுசெய்யப்பட்ட இடம் மேட்டுப்பாளையம் நகராட்சியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்தப் பகுதி வனப் பகுதி எல்லைக்கு அருகில் அமைந்துள்ளதாலும், இப்பகுதிக்கு அருகில் குடியிருப்புகளும் இல்லை. மேலும், மக்கள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளான பள்ளி மற்றும் மருத்துவமனை போன்றவை தற்போது இல்லை. எனவே, இப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் குடியிருப்புகள் கட்ட இயலாத நிலை உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

47—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 76077—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலம் நகராட்சி, 10 மற்றும் 8-வது வார்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலம் நகராட்சி, 10 மற்றும் 8-வது வார்டு பகுதிகளில் ஏழைக் குடும்பங்களுக்குத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு தற்போது உகந்த காலி அரசு நிலங்கள் இல்லை.

உதகமண்டலம் நகராட்சி வார்டு எண் 8-காந்தல் பகுதி 3 மீட்டர் அகலம் கொண்ட குறுகிய பாதையுள்ள சாய்வான அமைப்பில் உள்ள பகுதியாகும். இப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு அரசால் மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், வார்டு எண் 10-பிங்கர் போஸ்டு பகுதி 3 மீட்டர் அகலம் கொண்ட குறுகிய பாதையுள்ள சாய்வான அமைப்பில் உள்ள பகுதியாகும். இப்பகுதியில் குடியிருப்புகள் கட்ட போதுமான இடவசதி இல்லை. மேலும், இவ்விடம் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்கு மிக அருகில் அமைந்துள்ளது.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் உதகமண்டலம் நகராட்சி 10 மற்றும் 8-வது வார்டுகளில் உள்ள பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

48—

மணிமண்டபம்

வினா எண் 7297—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையம் முதல் நன்செய் இடையாறு வரை ராஜவாய்க்கால் கட்டி 20 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி செய்து கொடுத்த அல்லாள நாயக்கருக்கு மணிமண்டபம் கட்டும் பணிகளை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையம் முதல் நன்செய் இடையாறு வரை ராஜவாய்க்கால் கட்டி 20 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி செய்து கொடுத்த அல்லாள இளைய நாயக்கருக்கு மணிமண்டபம் கட்டும் பணிகள் 95% முடியப்பெற்று, திறக்கும் தருவாயில் உள்ளது.

49—

கம்பிவட ஊர்தி

வினா எண் 26670—திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, தீரன் சின்னமலை உயிர் நீத்த சங்ககிரி மலைக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, தீரன் சின்னமலை உயிர் நீத்த சங்ககிரி மலைக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்யும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

திரைப்பட மானியம்

வினா எண் 28829—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 17]

(அ) தமிழில் பெயர் வைக்கப்பட்ட படங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியத்தை விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியமாக தலா ரூ.7,00,000/-(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் நாளிலிருந்து டிசம்பர் 31 ஆம் நாள் வரை தயாரித்து வெளியிடப்படும் தரமான நேரடி தமிழ்த் திரைப்படங்களுக்கு தமிழக அரசினால் அமைக்கப்படும் தேர்வுக் குழுவின்மூலம் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தமிழில் பெயர் வைக்கப்பட்ட படங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியத்தை விரைந்து வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

சத்துணவு

வினா எண் 18680—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு பள்ளிகளில் சத்துணவுடன் மூக்கடலை சுண்டல் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் அரசு/அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளி, உயர்

தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 46,70,458 பயனாளிகள், 43,190 சத்துணவு மையங்களின் வாயிலாக பயனடைந்து வருகின்றனர். மைய அரசு நெறிமுறைகளின்படி மதிய உணவுத் திட்டத்தின்கீழ் தொடக்கப் பள்ளிகளில் (1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை) பயிலும் மாணவ/மாணவியருக்கு வழங்கப்படும் உணவின் மூலமாக நாளொன்றுக்கு 450 கிலோ கலோரி சத்து மற்றும் 12 கிராம் புரதச்சத்து கிடைக்கப்பெற வேண்டும். உயர் தொடக்கப் பள்ளிகளில் (6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை) பயிலும் மாணவ/மாணவியருக்கு 700 கிலோ கலோரி சத்து மற்றும் 20 கிராம் புரதச்சத்து கிடைக்கப் பெறவேண்டும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் மாணவ, மாணவியருக்கு கலவை சாத உணவுடன் மசாலா முட்டை மற்றும் கூடுதல் ஊட்டச் சத்தாக வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் 20 கிராம் கொண்டைக்கடலை மற்றும் வியாழக் கிழமைகளில் 20 கிராம் பச்சை பயறு சுண்டல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வாரத்திற்கொருமுறை 20 கிராம் உருளைக்கிழங்கும், முட்டை உண்ண விருப்பம் இல்லாத குழந்தைகளுக்கு வாழைப்பழமும் வழங்கப்படுகிறது. இவற்றின்மூலம் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு நாளொன்றுக்கு 557 கிலோ கலோரி சத்து மற்றும் 18.92 கிராம் புரதச்சத்தும் வழங்கப்படுகிறது. உயர் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு நாளொன்றுக்கு 735 கிலோ கலோரி சத்தும், 22.77 கிராம் புரதச் சத்தும் வழங்கப்படுகிறது. ஆகவே, மைய அரசு நிர்ணயம் செய்துள்ள ஊட்டச் சத்துக்களின் அளவைக் காட்டிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் கூடுதல் ஊட்டச் சத்துக்கள் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

சத்துணவுத் திட்டத்தின்கீழ் மாணவ, மாணவியருக்கு கருப்பு கொண்டைக்கடலை/பச்சைப் பயறு ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.

52—

ஆவின் பால்

வினா எண் 46674—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

முதியோர்களுக்கு தினமும் 1 லிட்டர் ஆவின் பால் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

முதியவர்களுக்கான மக்கள்தொகையில் தமிழ்நாடு இரண்டாவது நிலையில் உள்ளது. 2021 ஆம் ஆண்டில் முதியவர்களுக்கான மக்கள் தொகை 1.04 கோடியாகவும், 2031-ல் 1.42 கோடியாகவும் உயரும் என ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தின் "இந்தியாவில் முதியோர்கள்-2021" என்ற அறிக்கையில் கணிக்கப்பட்டுள்ளது. சமூக நல இயக்குநரகத்தின்கீழ் முதியோர்களுக்கான திட்டங்களை, தொண்டு நிறுவனங்கள் வாயிலாக முதியோர் இல்லங்கள் மற்றும் ஒருங்கிணைந்த வளாகங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள்மூலம் ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றை அளித்து வருகிறது. இத்துறையின்மூலம், ஆவின் பால் இலவசமாக முதியோர்களுக்கு வழங்கும் திட்டம் பரிசீலனையில் ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

53—

தனியார் முதியோர் இல்லங்கள்

வினா எண் 59114—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தனியார் முதியோர் இல்லங்களை ஆய்வு செய்து நல்ல முறையில் பராமரிக்கப்படுவதை உறுதிபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மாநில அரசின், சமூக நல இயக்குநரகத்தின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் மாநில அரசின்

[2023 ஏப்ரல் 17

மானியம் பெறும் முதியோர் இல்லங்கள், முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மற்றும் ஒன்றிய அரசின் மானியம் பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டங்களை (IPSrC) செயல்படுத்தி வருகிறது. அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் இலவச அல்லது கட்டண முதியோர் இல்லங்களில் பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச இன்றியமையாத தகுதிகளுக்கென அரசாணை (நிலை) எண் 83, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்ட (சந6(1))-த் துறை, நாள் 23-11-2016-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி, அரசாணையின்படி அனைத்து முதியோர் இல்லங்களும் மாவட்ட சமூக நல அலுவலரிடம் அரசின் பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் அரசாணையில் குறிப்பிட்ட அனைத்து தகுதிகளும் நிபந்தனைகளும், சான்றிதழ்கள், ஆவணங்கள் சரியாக இருத்தல் வேண்டும். அரசு மற்றும் தனியாரால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு மையங்களை நிர்வகிப்பதற்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை உருவாக்கி செயல்படுத்துவதை அரசு உறுதி செய்யும். தனியார் முதியோர் இல்லங்களில், அரசு முதியோர் இல்லங்களில் அளிப்பது போலவே உணவு, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் பாதுகாப்பு அடிப்படை தேவைகள் அளிக்கப்படுகின்றன. இதனை, அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பார்வையிட்டு, கண்காணித்து ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாநில அளவிலும் உள்ள அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர், மாவட்ட அளவிலான மூத்த குடிமக்கள் குழுவினர் முதியோர் இல்லங்களை ஆய்வு செய்கின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் இருப்பின் உடனடி நடவடிக்கை எடுத்து, அதன் விரிவான ஆய்வு அறிக்கையினை சமூக நல இயக்குநரகத்திற்கு தெரிவிக்கின்றனர்.

54—

சத்துணவு

வினா எண் 66411—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவில் மாலை வேளையில் கொண்டைக் கடலை, நிலக்கடலை, தட்டைப்பயறு ஆகியவற்றை சுண்டலாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் அரசு/அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 46,70,458 பயனாளிகள், 43,190 சத்துணவு மையங்களின் வாயிலாக பயனடைந்து வருகின்றனர். மைய அரசு நெறிமுறைகளின்படி மதிய உணவுத் திட்டத்தின்கீழ் தொடக்கப் பள்ளிகளில் (1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை) பயிலும் மாணவ/மாணவியருக்கு வழங்கப்படும் உணவின் மூலமாக நாளொன்றுக்கு 450 கிலோ கலோரி சத்து மற்றும் 12 கிராம் புரதச்சத்து கிடைக்கப்பெற வேண்டும். உயர் தொடக்கப் பள்ளிகளில் (6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை) பயிலும் மாணவ/மாணவியருக்கு 700 கிலோ கலோரி சத்து மற்றும் 20 கிராம் புரதச்சத்து கிடைக்கப்பெற வேண்டும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் மாணவ, மாணவியருக்கு கலவை சாத உணவுடன் மசாலா முட்டை மற்றும் கூடுதல் ஊட்டச் சத்தாக வாரந்தோறும் செவ்வாய்கிழமைகளில் 20 கிராம் கொண்டைக் கடலை மற்றும் வியாழக்கிழமைகளில் 20 கிராம் பச்சைப்பயறு சுண்டல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வாரத்திற்கொருமுறை 20 கிராம் உருளைக்கிழங்கும், முட்டை உண்ண விருப்பம் இல்லாத குழந்தைகளுக்கு வாழைப்பழமும் வழங்கப்படுகிறது. இவற்றின்மூலம் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு நாளொன்றுக்கு 557 கிலோ கலோரி சத்து மற்றும் 18.92 கிராம் புரதச் சத்தும் வழங்கப்படுகிறது. உயர் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு நாளொன்றுக்கு 735 கிலோ கலோரி சத்தும் 22.77 கிராம் புரதச் சத்தும் வழங்கப்படுகிறது. ஆகவே, மைய அரசு நிர்ணயம் செய்துள்ள ஊட்டச் சத்துக்களின் அளவைக் காட்டிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் கூடுதல் ஊட்டச் சத்துக்கள் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 17

சத்துணவுத் திட்டத்தின்கீழ் மாணவ, மாணவியருக்கு கருப்பு கொண்டைக் கடலை/பச்சைப் பயறு ஏற்கெனவே வழங்கப்பட்டு வருவதால், நிலக்கடலை மற்றும் தட்டைப்பயறு ஆகியவற்றை வழங்க வேண்டிய தேவை எழவில்லை.

55—

புதிய உறுப்பினர்கள்

வினா எண் 3170—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட மீனவர் கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களை சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டம், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 315 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்கள் தேசிய கடல் மீனவர், மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் பயனடைய ஏதுவாக அவர்கள் வறுமைக் கோட்டின்கீழ் உள்ளவர்கள் என்பதற்கான சான்று வழங்கிடக்கோரி சென்னை மாநகராட்சி ஆணையருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து இனிவரும் ஆண்டுகளில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர விண்ணப்பிக்கும் பயனாளிகளை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

சுற்றுச்சூழல்

வினா எண் 18628—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) கடலோரப் பகுதிகளில் இறால் பண்ணையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக கடலோர நிலப்பரப்பில் இறால் வளர்ப்பு முக்கியத் தொழிலாக மேற்கொள்ளப்படுவதுடன், தற்போது 1958 இறால் பண்ணைகள் 3867.95 ஹெக்டேர் பரப்பில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு பெற்று இயங்கி வருகின்றன. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்டம் 2005-ன்படி, ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின்மூலம் சட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம்மூலம் (CAA) இறால் பண்ணைகளுக்கு பதிவு உரிமம் வழங்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், பதிவு உரிமம் பெறப்படாத இறால் பண்ணை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு, இறால் வளர்ப்பு பணிகள் நடைபெறாமல் இருக்கும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறால் பண்ணைகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக தகவல் பெறப்படும்பட்சத்தில் ஆய்வு மேற்கொண்டு, CAA சட்டம் மற்றும் விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

57—

ஐஸ் பெட்டிகள்

வினா எண் 21804—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் மீன் வியாபாரம் செய்யும் மகளிருக்கு ஐஸ் பெட்டிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நாட்டுப்படகு மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு ஐஸ் பெட்டிகள் மானிய விலையில் வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

(ஆ) பாரம்பரிய மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள், பிடிக்கப்படும் இடத்திலிருந்து விற்பனை செய்யப்படும் இடம் வரை சுகாதாரமான முறையில் கையாளும்பொருட்டும், மீன்களின் தரத்தினை பாதுகாத்திடவும், இதன்மூலம் பிடிக்கப்பட்ட மீன்களுக்கு நல்ல விலையினைப் பெற்றிடும் பொருட்டு மீனவர்களுக்கு குளிர்காப்பு பெட்டிகள் (ஐஸ் பெட்டிகள்) மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

2018-2019 ஆம் ஆண்டில் ரூ.31.44 இலட்சம் மானியத்தில் 1,144 குளிர்காப்பு பெட்டிகளும், 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.24.46 இலட்சம் மானியத்தில் 1,002 குளிர்காப்பு பெட்டிகள் நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

*மேலும், பாரத பிரதமர் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (*Pradhan Manthri Matsya Sampada Yojana-PMMSY*) மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு, பிடிக்கப்படும் மீன்களை விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்ல குளிரூட்டப்பட்ட வாகனங்கள் (*Refrigerated/Insulated vehicles*), குளிர்காப்பு பெட்டிகளுடன்கூடிய மூன்று சக்கர வண்டிகள் (*Three wheeler with ice box including e-rickshaws for fish vending*) மீன் வியாபாரம் செய்திடும்பொருட்டு குளிர்காப்பு பெட்டிகள் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் (*Motor cycle with ice boxes*) வழங்கிடும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.*

இத்திட்டத்தில் மேற்படி பொருட்கள் வாங்கிட அதன் அலகு விலையில் பொதுப் பிரிவில் உள்ள மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியமும், பின்தங்கிய வகுப்பினர் மற்றும் மீனவ மகளிருக்கு 60 விழுக்காடு மானியமும் அரசால் வழங்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 17]

58—

மீன்வள தொழில்நுட்பப் பயிற்சி

வினா எண் 28666—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காட்டில் இளைஞர்களுக்கு குறுகிய கால மீன்வளத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு பகுதியில் உள்ள மீனவ மகளிருக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் மதிப்பூட்டிய மீன் உணவு தயாரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பொன்னேரி டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மீன்வள தொழில்நுட்ப அறிவியல் தொடர்பான பட்டயப் படிப்புகள், மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பப் படிப்பு மற்றும் குறுகியகால பட்டயப் படிப்பு பயிற்சிகளுக்கான பல்வேறு துறைகள் இயங்கி வருவதால், ஆர்வமுள்ள மீனவ இளைஞர்கள் இத்துறையில் சேர்ந்து படிக்கலாம்.

59—

மீன் ஆராய்ச்சி மையம்

வினா எண் 28670—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீன் ஆராய்ச்சி மையத்தை (Fish Research Centre) சீரமைத்து, நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில், பறக்கையில், வளங்குன்றா மீன் வளர்ப்பு மையத்தில் அயிரை மீன் மற்றும் வண்ண மீன்கள் நன்னீரில் இனப்பெருக்கம் செய்து, வளர்க்கப்பட்டு வருகின்றன. தற்போது, விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மயிலாடி என்ற இடத்தில் அயிரை மீன் குஞ்சு பொரிப்பகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் அயிரை மீன் ஆராய்ச்சி மேலும் விரிவாக்கப்படும்.

60—

மீன் அங்காடி

வினா எண் 29348—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், சூரமங்கலம் மீன் மார்க்கெட்டில் மேட்டூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மீன் அங்காடியை திறக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன், சேலம் மாநகராட்சிக்குட்பட்ட சூரமங்கலம், தர்மா நகரில் நவீன மீன் விற்பனை அங்காடி அமைக்கப்பட்டு, சேலம் மாநகராட்சி பராமரிப்பின்கீழ் தற்பொழுது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

2023 ஏப்ரல் 17]

61—

குடோன்

வினா எண் 15163—திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, பீளமேடு, முருகன் நகர், ஹட்கோ காலனி, காந்தி நகர் ஆகிய உணவுக் கழக குடோனில் உள்ள செல்லு பூச்சிகளை அழித்து குடோனை தூய்மைப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, பீளமேடு, முருகன் நகர், ஹட்கோ காலனி, காந்தி நகர் பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கிடங்கு ஏதும் செயல்படவில்லை. பீளமேடு பகுதியில் இந்திய உணவுக் கழகத்திற்கு சொந்தமான தானிய சேமிப்பு கிடங்கு செயல்பட்டு வருகிறது. செல்லு பூச்சி கட்டுப்படுத்துவது தொடர்பாக மேலாளர், இந்திய உணவுக் கழகம், கோயம்புத்தூர் அவர்களின் அறிக்கையின் அடிப்படையில், கிடங்கு உணவு தானிய அட்டிகள்மீது தகுந்த காலமுறை இடைவேளையில் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தும், மிகை நிலையில் பூச்சித்தாக்கம் காணப்பட்ட உணவு தானிய அட்டிகளுக்கு புகைமூட்டம் செய்தும், பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும், கிடங்கின் சுவர் மற்றும் தரையினில் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து பூச்சித் தாக்கமின்றி கிடங்கு தரப் பணியாளர்கள்மூலம் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

62—

நெசவு துணிகள் கொள்முதல்

வினா எண் 4085—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

(அ) சங்கரன்கோவில் தொகுதியில் நெசவாளர்களிடம் இருந்து நெசவு துணிகளை நேரடியாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம்மூலம் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதி நெசவாளர்கள், அரசின் விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி-சேலைகள் வழங்கும் திட்டங்களுக்கு தேவையான துணி இரகங்களின் நெசவினையே பெரும்பான்மையாக மேற்கொண்டு வருகின்றனர். மேலும், மேற்காணும் அரசு திட்ட துணி இரகங்களுக்கான உற்பத்தித் திட்டமானது, கைத்தறி துறை உதவி இயக்குநர் அலுவலகம் வாயிலாக சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு, உற்பத்திப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு திட்டங்களான விலையில்லா சீருடை துணிகள் வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி-சேலைகள் வழங்கும் திட்டங்களின்கீழ் சீருடைகள் மற்றும் சேலைகள் மட்டுமே உற்பத்தி செய்யும் பணியை நெசவாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த இரகங்களை உற்பத்தி செய்வதன் மூலமாக ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு கிடைப்பதாக நெசவாளர்கள் கருதுவதால், கோ-ஆப்டெக்ஸிற்கு சில்லறை விற்பனைக்கான இரகங்களை உற்பத்தி செய்ய முன்வருவதில்லை.

மேலும், கடந்த பல ஆண்டுகளாகவே, கோ-ஆப்டெக்ஸ் சில்லறை விற்பனைக்கான இரகங்களை சங்கரன்கோவில் தொகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்ய முன்வராததால், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் உற்பத்தித் திட்டம் வழங்கப்படவில்லை. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனைக்குத் தேவையான ஈரிழை துண்டுகள், 2/60sX40s சேலைகள், 2/40sX20s வேட்டிகள் மற்றும் லுங்கி இரகங்களை உற்பத்தி செய்து வழங்க சங்கரன்கோவில் தொகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

2023 ஏப்ரல் 17]

முன்வரும்பட்சத்தில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் உற்பத்தித் திட்டம் வழங்கி, சங்கரன்கோவில் தொகுதி நெசவாளர்களிடமிருந்து நெசவு துணிகளை நேரடியாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம்மூலம் கொள்முதல் செய்யப்படும்.

63—

கூலி உயர்வு

வினா எண் 58809—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிக் குழந்தைகளின் சீருடை நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு கூலியை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்படும் அறிவிப்புகளில் ஒன்றாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு அகவிலைப்படி மற்றும் அடிப்படை கூலி உயர்வு 1995 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி மேற்கொள்ளப்படும் சீருடைத் துணிகளுக்கான கூலி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 1-8-2019 முதல் தமிழ்நாடு அரசினால், சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் பெடல்தறி கேஸ்மெண்ட் இரகத்திற்கு நெசவுக் கூலியாக ஒரு மீட்டருக்கு ரூ.11.32-லிருந்து ரூ.12.16-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கான 2021-2022 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை எண் 17-ல் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால், கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலியில் 10 சதவிகிதம் அடிப்படை கூலியிலும் மற்றும் 10 சதவிகிதம் அகவிலைப்படியிலும் உயர்த்தி (145%-லிருந்து 155%) வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டதையடுத்து 1-1-2022 முதல் நெசவுக் கூலி உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 17

மேலும், அம்மானியக் கோரிக்கையில், சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் மற்றும் டிரில் துணி இரகங்களுக்கு வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி 9-11-2021 முதல் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது:

வ. எண்	இரகங்கள்	ஏற்கெனவே வழங்கப்பட்ட நெசவுக்கு முந்தைய கூலி (ரூ.) (மீட்டர் ஒன்றுக்கு)	9-11-2021 முதல் உயர்த்தி வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய கூலி (ரூ.) (மீட்டர் ஒன்றுக்கு)
1	கைத்தறி கேஸ்மெண்ட்	4.32	4.89
2	பெடல்தறி கேஸ்மெண்ட்	4.32	4.89
3	கைத்தறி டிரில்	3.81	4.69

மேலும், மாறிவரும் விலைவாசி உயர்வுக்கேற்ப கைத்தறி நெசவாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அல்லது அடிப்படைக் கூலி உயர்வு ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

64—

காவலர் நியமனம்

வினா எண் 628—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு வட்ட மருத்துவமனையில் இரவு காவலர் பணியிடத்தை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருவையாறு அரசு மருத்துவமனை 44 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள இரவு காவலர் பணியிடங்கள், மருத்துவமனை பணியாளர் பணியிடத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. திருவையாறு மருத்துவமனைக்கு மருத்துவமனை பணியாளர்-1, துப்புரவு பணியாளர்-1 என பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, 2 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. இவர்களில் ஒருவர் கூடுதலாக இரவுக் காவலர் பணியையும் மேற்கொள்கிறார்.

65—

கட்டடம்

வினா எண் 2972—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், வெள்ளாள விடுதி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட சுந்தம்பட்டி, வேலாடிப்பட்டி மற்றும் வெள்ளாளவிடுதி ஆகிய துணை சுகாதார நிலையங்களின் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதா என்பதை தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சுகாதார மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளவிடுதி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ்

சுந்தம்பட்டி, வேலாடிப்பட்டி மற்றும் வெள்ளாளவிடுதி ஆகிய துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சுந்தம்பட்டி, வேலாடிப்பட்டி மற்றும் வெள்ளாளவிடுதி ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்கு மாநில சமச்சீர் நிதி உதவியின்கீழ் தலா ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 22-8-2021 அன்று திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

66—

மருந்தாளுநர் நியமனம்

வினா எண் 12400—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனை மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருந்தாளுநர் (Pharmacist) *பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகம் முழுவதும் உள்ள அரசு மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் காலியாக உள்ள 889 மருந்தாளுநர் பணியிடங்களை மருத்துவப் பணியாளர் வாரியம்மூலம் நிரப்புவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

67—

கூடுதல் கட்டடம்

வினா எண் 22979—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அரசு மருத்துவமனை 224 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1,112 வெளிநோயாளிகளும், 215 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். தற்சமயம் இம்மருத்துவமனை பல்வேறு பிரிவுகளை சேர்ந்த 10 கட்டடங்களுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள் பிரிவு, சீமாங், NBSU, விஷமுறிவு சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம் ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனையில் இசிஜி, எக்ஸ்ரே, ஸ்கேன், சிடி-ஸ்கேன், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி, சுற்றுச்சுவர், நவீன சமையல் அறை ஆகிய வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு அறுவை அரங்கம், 22 படுக்கை வசதிகளுடன்கூடிய கண் சிகிச்சை பிரிவு ரூ.99.00 இலட்சத்தில் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதால், தற்சமயம் இம்மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அவசியம் எழவில்லை.

68—

கூடுதல் கட்டடம்

வினா எண் 23404—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் ஊராட்சியில் அமைந்துள்ள துணை சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 17*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம், மயிலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் மயிலம் ஊராட்சியில் தென்குளப்பாக்கம் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இத்துணை சுகாதார நிலையக் கட்டடத்தின் சில பகுதிகள் பழுதடைந்துள்ளதால், நல்ல நிலையில் உள்ள பகுதியில் இயங்கி வருகிறது. இக்கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்ட பின்பு, முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தென்குளப்பாக்கம் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

69—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25760—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகளுடன்கூடிய 24 மணி நேரமும் செயல்படும் வகையில் மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப

2023 ஏப்ரல் 17]

சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 338, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 11-12-2012-ன்படி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சரக்கப்பிள்ளையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. அரசாணை (நிலை) எண் 33, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24-2-2006-ன்படி, 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை, பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டு, 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

70—

அடிப்படை வசதிகள்

வினா எண் 25761—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு அரசு மருத்துவமனை 42 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் அரசு வட்டம் சாரா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு

[2023 ஏப்ரல் 17

*சராசரியாக 389 வெளிநோயாளிகள் மற்றும் 37 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு மகப்பேறு பிரிவு, அறுவை சிகிச்சைக்கு முன் மற்றும் பின் அறுவை சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, நுண்கதிர் பிரிவு, சித்தா பிரிவு, அறுவை அரங்கம் மற்றும் ஆய்வக வசதியுடன் எக்ஸ்ரே, இ.சி.ஜி வெண்டிலேட்டர், பிணவறை மற்றும் குளிர்விப்பான் பெட்டி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி (*R.O. Water*) ஆகிய வசதிகளுடன் உள்நோயாளிகள் கழிப்பிட வசதி மற்றும் பொது கழிப்பிட வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன், அப்பகுதி மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவைகள் காலதாமதமின்றி குறித்த காலத்தில் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதல் அடிப்படை வசதிகள் மேம்படுத்திட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

71—

மருத்துவமனை

வினா எண் 25791—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சி, அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தி, எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் மையம் அமைத்து ஜெனரேட்டர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனை 32 படுக்கை வசதிகளுடன் வட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 418 வெளிநோயாளிகளும், 29 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 2 பிரசவங்கள், 186 சிறிய

2023 ஏப்ரல் 17]

வகை அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 3,874 ஆய்வக பரிசோதனைகள், 40 எக்ஸ்ரே மற்றும் 218 இசிஜி ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. பழவேற்காடு அரசு மருத்துவமனையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் 150 படுக்கை வசதிகளுடன் பொன்னேரி அரசு மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பழவேற்காடு அரசு மருத்துவமனையில் டிஜிட்டல் எக்ஸ்ரே, USG ஸ்கேன் மற்றும் 15 KVA மின்னாக்கி ஆகிய வசதிகள் உள்ளன. மின்சாரத் தடை ஏற்படும்போது, இதனைப் பயன்படுத்தி எவ்வித இடையூறும் இல்லாமல் 24 X 7 மணி நேரமும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தேவைப்படின், நோயாளிகள் பழவேற்காடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

72—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25792—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், காட்டாவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. காட்டாவூர் ஊராட்சி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. காட்டாவூர் ஊராட்சியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் மெதூர்

[2023 ஏப்ரல் 17

ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் பொன்னேரி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காட்டாவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25816—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அந்தேவனப்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. அந்தேவனப்பள்ளி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. அந்தேவனப்பள்ளி கிராமம் தளி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,99,073 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே அஞ்சட்டி, பாலதொட்டனப்பள்ளி, கக்கதாசம், தளி, கும்மளாபுரம், மதகொண்டப்பள்ளி மற்றும் உரிகம் ஆகியன செயல்பட்டு வருவதால், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அந்தேவனப்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 17]

74—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25833—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) களம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 129, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12-4-2012-ன்படி திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் களம்பூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

75—

சுற்றுச்சுவர்

வினா எண் 25849—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உதகமண்டலம் தொகுதி, பாலாகொலா ஊராட்சி, தங்காடு தலைமை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம், பாலாகொலா-1 ஊராட்சியில் டி.ஒரநள்ளி பிரதான/

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

டி.ஒரநள்ளி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் இல்லை. பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் டி.ஒரநள்ளி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

76—

மாவட்ட மருத்துவமனை

வினா எண் 25884—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி மருத்துவமனை 127 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,100 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 87 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 96 பெரிய மற்றும் 1,184 சிறிய அறுவை சிகிச்சைகள், 69 பிரசவங்கள், 41 பிரசவ அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 33,418 ஆய்வக பரிசோதனைகள், 276 எக்ஸ்ரே, 756 USG மற்றும் 728 ECG ஆகியவை எடுக்கப்பட்டு வருகிறது. ஆரணி மருத்துவமனையில் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு, காசநோய் பிரிவு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையம்

2023 ஏப்ரல் 17]

(NBSU) போன்ற சிறப்பு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மட்டுமே ஏற்படுத்தப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஏற்கெனவே செய்யாறு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 226 படுக்கை வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, ஆரணி அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

77—

மருத்துவமனை

வினா எண் 25885—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில் இயங்கிவரும் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனை 128 படுக்கை வசதி கொண்ட வட்ட மருத்துவமனையாக தற்சமயம் செயல்படுகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 343 வெளிநோயாளிகள் மற்றும் 13 உள்நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். 29-4-2022 அன்று நடைபெற்ற மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பில் (அறிவிப்பு எண் 1) நீலகிரி மாவட்டத்திற்கான மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையினை ஏற்படுத்திட கூடலூர் அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 17

78—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25894—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, விக்கரபாண்டியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. விக்கிரபாண்டியம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. விக்கிரபாண்டியம் கிராமம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. விக்கிரபாண்டியம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் விக்கிரபாண்டியம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

79—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 26069—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. முத்துப்பேட்டையிலிருந்து 24 கி.மீ-ல் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையும், 36 கி.மீ.-ல் மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையும் மற்றும் 8 முதல் 15 கி.மீ.-க்குள் சங்கந்தி, எடையூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களும், இடும்பாவனம் மற்றும் சித்தமல்லி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமும் ஏழையெளிய மக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே முத்துப்பேட்டை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருவதால், மேலும் முத்துப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

80—

மருத்துவ உதவியாளர், மருந்தாளுநர் நியமனம்

வினா எண் 37714—டாக்டர் A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சாத்தூர் தொகுதி, கல்லமநாயக்கன்பட்டி அரசு மருத்துவமனையில் பல்நோக்கு மருத்துவ உதவியாளர் (CB) 4 பணியிடங்கள், மருந்தாளுநர் மற்றும் சிறப்பு மருந்தாளுநர் பணியிடம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதி, கல்லமநாயக்கன்பட்டி அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 276 வெளிநோயாளிகள் மற்றும் 13 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

*இம்மருத்துவமனையில் 6 பல்நோக்கு மருத்துவ உதவியாளர் (*CB*), 1 தலைமை மருந்தாளுநர், 1 மருந்தாளுநர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இவற்றில், 2 பல்நோக்கு மருத்துவ உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். காலியாக உள்ள பல்நோக்கு மருத்துவ உதவியாளர் பணியிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*மேலும், மருந்தாளுநர்களின் பணி நியமனம் தொடர்பாக நீதிமன்றத்தில், தொடரப்பட்ட வழக்கில், தற்சமயம், நீதிமன்ற ஆணை பெறப்பட்டு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் மருந்தாளுநர்களை நியமிக்க அறிவிப்பு (*Notification*) வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.*

81—

திருமண மண்டபம்

வினா எண் 6728—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான கரிம்பேடு சிவன் கோயிலுக்கு புதிய திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனித்து வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1429-க்கு ரூ.33,20,53,947/- ஆகும்.

மேற்படி, கோயிலின் உபகோயிலான, பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு நாதாதீஸ்வர சுவாமி திருக்கோயிலில், சுமார் 40'X25' என்ற நீள அகலத்தில் திருமண மண்டபம் ஒன்று உள்ளது. மேற்படி திருமண மண்டபத்திற்கு நாளொன்றுக்கு ரூ.4,000/- வாடகைக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. மேற்படி, மண்டபம் சிறிது பழுதடைந்துள்ளதால், அதனை தற்காலத்திற்கேற்ப கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. புதியதாக திருமண மண்டபம் கட்ட திருக்கோயிலுக்கு சொந்தமாக உகந்த இடம் இல்லை என்பதால், மேற்படி திருக்கோயிலில் புதிய திருமண மண்டபம் கட்ட இயலாத நிலை உள்ளது.

82—

ரோப் கார்

வினா எண் 6729—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இரண்டாவது மலைப்பாதை அமைக்கவும், ரோப் கார் வசதி செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனித்து வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1429-க்கு ரூ.33,20,53,947/- ஆகும்.

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலைக்கோயிலின் படாசெட்டிக் குளத்தினை ஒட்டியுள்ள மலைப் பாதையிலிருந்து நகரின் மேற்குபுறத்திலுள்ள மேல் திருத்தணியிலிருந்து சித்தூர் சாலையை இணைக்கும்வகையில் மாற்று மலைப் பாதை அமைக்க ஆக்கப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி மாற்று மலைப் பாதை மொத்தம் 1950 மீட்டர் நீளமும், 10 மீட்டர் அகலமும் கொண்டு அமையப்பெறவுள்ளது. இம்மலைப்பாதை, அமிர்தாபுரம் சர்வே எண் 147/1 மற்றும் நல்லாணிகுண்டா கிராமம் சர்வே எண் 356 ஆகியவற்றில் உள்ள காடு மற்றும் மலைப் பகுதியில் சுமார் 4.83 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. மாற்று மலைப்பாதை அமைக்கப்படவுள்ள இடம் காடு-புறம்போக்கு மற்றும் மலை-புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த இடத்தினை இந்து சமய அறநிலையத் துறை என நில பெயர் மாற்றம் செய்து வழங்க வேண்டி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சியரால் நில நிர்வாகத் துறை ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்படி நில வகைப்பாடு பெயர் மாற்றம் செய்யப்பட்டதும், மாற்று மலைப் பாதை அமைப்பதற்கான பணி துவங்கப்படும்.

83—

மண்டபம்

வினா எண் 6731—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், பட்டாபிராமபுரத்தில் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி நகர் உலா வரும்போது தங்குவதற்கு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனித்து வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1429-க்கு ரூ.33,20,53,947/- ஆகும்.

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உற்சவர் வள்ளி தெய்வானை சமேதராக திருத்தணி வட்டம், பட்டாபிராமபுரம் கிராமத்திற்கு வருடத்தில் ஒரு நாள் (தை மாதத்தில்) வீதி உலா நடைபெற்று வருகிறது. அச்சமயத்தில் மேற்படி கிராமத்தில் உள்ள சர்வே எண் 114/1-ல் உள்ள இடத்தில் கட்டப்பட்ட மண்டபத்தில் சுவாமிக்கு அபிஷேக அலங்காரம் செய்து மண்டகப்படி செய்யப்பட்டு வருகிறது.

எனவே, மேற்படி மண்டபமே தற்போதைய மண்டகப்படி செய்வதற்கு போதுமானது. புதியதாக மண்டகப்படி மண்டபம் அமைக்க அவசியம் ஏற்படவில்லை.

84—

திருமண மண்டபம்

வினா எண் 6732—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நவீன வசதிகளுடன் புதிய திருமண மண்டபம் அமைக்கவும் மற்றும் யானை வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனித்து வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1429-க்கு ரூ.33,20,53,947/- ஆகும்.

மேற்படி திருக்கோயிலின் தணிகை இல்ல வளாகத்தில் சர்வே எண் 337/5ஏ-ல் 1.16.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் 500 நபர்கள் அமரும்வகையில் ரூ.10.15 கோடி மதிப்பீட்டில் நவீன திருமண மண்டபம் ஒன்று புதியதாகக் கட்டவும், ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் 100 நபர்கள் அமரும் வகையிலான 4 திருமண மண்டபங்கள் புதியதாக கட்டவும், ஆக கூடுதல் ரூ.25.75 கோடி மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 88, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 5-4-2022-ன்படி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலுக்கு யானை வழங்குவது தொடர்பாக அரசளவில் கொள்கை முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. இருப்பினும், இத்திருக்கோயிலுக்கு யானை ஒன்றினை யாரேனும் வழங்க முன்வந்தால் அவரிடமிருந்து பெறுவது தொடர்பாக வனத் துறை சட்ட விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

85—

தோரண வாயில்கள்

வினா எண் 6734—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி நகராட்சியில் நான்கு எல்லைப்புற நுழைவாயில்களில் இந்து சமய அறநிலையத் துறை சார்பாக தோரண வாயில்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனித்து வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1429-க்கு ரூ.33,20,53,947/- ஆகும்.

திருத்தணி நகரின் நான்கு எல்லைப்புறங்களில் நுழைவு வாயில் அமைப்பதற்கு திருத்தணிகை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான திருக்கோயில் நிலங்கள் ஏதும் இல்லை. மேலும், திருத்தணி நகராட்சியில் நான்கு புற எல்லைகளிலும் அலங்கார வேலைப்பாடுகளுடன் நுழைவு வாயில்களை திருக்கோயில் நிதிமூலம் அமைக்க இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளில் வழிவகை இல்லை.

86—

வாடகை நிர்ணயம்

வினா எண் 7553—திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா அல்லது வாடகையை ஒழுங்குபடுத்த அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 17*

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 353, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 4-6-1999, அரசாணை (நிலை) எண். 456, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அநி4-2) துறை, நாள் 9-11-2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 298, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அநி4-2) துறை, நாள் 20-7-2010 ஆகிய அரசாணைகளின்படி, தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில் நிலங்கள், காலிமனைகள், கட்டடங்கள் மற்றும் கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வதற்கு வழிமுறைகள் வகுத்து ஆணையிடப்பட்டுள்ளது, அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட அரசாணைகளின்படி வாடகையை ஒழுங்குபடுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

87—

குடமுழுக்கு

வினா எண் 8020—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாவரம் ஊராட்சியில் உள்ள பண்டைகால பெருமாள் கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஒன்றியம், சீமாவரம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் சீரிய ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால்,

2023 ஏப்ரல் 17]

இத்திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு செய்ய இயலாத நிலை உள்ளது. இருப்பினும் இத்திருக்கோயிலை துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவர அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் எழவில்லை என்றால் இக்கோரிக்கை தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

88—

தூர்வாருதல்

வினா எண் 8021—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், அருமந்தை ஊராட்சியில் அருமந்தைதலை கிராமம், பெருமாள் கோயில் குளத்தை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் சட்டப் பிரிவு 46(i)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் திருநின்றவூர், அருள்மிகு பக்தவச்சலப் பெருமாள் திருக்கோயிலின் (நிலை-2) செயல் அலுவலரால் தக்கார் நிலையில் கவனித்து வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலின் பசலி 1429-க்கு உதவித்தொகை நிர்ணய வருவாய் ரூ.62,340/- ஆகும்.

மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருக்குளம் ஏதும் இல்லை. மேலும், இத்திருக்கோயிலிலிருந்து 300 மீட்டர் தூரத்திலுள்ள ஒரு குட்டை, காலங்காலமாக கால்நடைகள் நீர் அருந்துவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி குட்டையானது திருக்கோயில் குளம் என்ற வகைப்பாட்டில் இல்லை என்பதால் திருக்கோயில்மூலம் தூர்வார சாத்தியக்கூறுகள் இல்லை.

[2023 ஏப்ரல் 17

89—

கோயில் திருப்பணிகள்

வினா எண் 9755—திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி அருள்மிகு செண்பகவல்லி அம்மன் திருக்கோயிலின் 2 கொடி மரங்களை தங்க கொடி மரங்களாக மாற்றியமைக்கவும், அத்தைகொண்டாவில் உள்ள கோயில் இடத்தில் திருமண மண்டபம் கட்டவும், அருள்மிகு சொர்ணமலை கதிரேசன் திருக்கோயில் மலைப் பகுதியில் ஆசியாவிலேயே உயரமான 135 அடி உயர முருகன் சிலை அமைத்திடவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கோவில்பட்டி அருள்மிகு பூவனநாத சுவாமி திருக்கோயிலில் உள்ள சுவாமி மற்றும் அம்பாள் கொடி மரங்கள் நல்ல நிலையில் உள்ளன. இந்த இரண்டு கொடி மரங்களையும் தங்க ரேக் பதிக்க போதிய நிதி வசதி இல்லை என்றும், தங்க ரேக் திருப்பணி செய்வதற்கு உபயதாரர்கள் முன்வராத்தாலும், திருக்கோயில் கொடி மரங்களுக்கு தங்க ரேக் பதிக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், அத்தைகொண்டான் கிராமத்தில் திருக்கோயிலுக்கு சொந்தமான காலியிடத்தில் புதியதாக திருமண மண்டபம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு சொர்ணமலைக்கதிரேசன் திருக்கோயில் சுமார் 100 அடி உயரத்தில் அமைந்திருப்பதால், ஆகம விதிப்படி அமைப்பது குறித்தும், விமான நிலைய அலுவலகத்தில் தடையின்மை சான்றும், சென்னை ஐஐடி நிறுவனத்தின்மூலம் தல ஆய்வு செய்தல், காற்றின் போக்கு குறித்தும் ஆய்வு செய்தல், வடிவமைப்பு கணக்கீடுகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளை தெரிவித்து அங்கீகாரம் வரப்பெறாமல் நிலுவையில் உள்ளது.

2023 ஏப்ரல் 17]

மேலும், திருக்கோயில் அருகில் குடியிருப்புகள் அமைந்திருப்பதாலும், திருக்கோயில் மலைமீது 135 அடி உயரத்தில் சுதை வடிவிலான சிலை அமைப்பது பாதுகாப்பற்றது என்பதால் திருப்பணியினை செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

90—

சிலைகள் மீட்பு

வினா எண் 9835—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடத்தப்பட்ட தமிழக கோயில்களின் சிலைகளை மீட்கும் நடவடிக்கையை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக திருக்கோயில்களிலிருந்து கடத்தப்பட்ட சிலைகள் தமிழக காவல் துறை மற்றும் சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுமூலம் கண்டறியப்பட்டு, நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டு, நீதிமன்ற உத்தரவுகளின்மூலம், உரிய திருக்கோயில்களில் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழக காவல் துறைமூலம், காவல் சோதனைகளின் அடிப்படையிலும், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய நீதிமன்ற உத்தரவுகளின்மூலம், உரிய திருக்கோயில் செயல் அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், பல்வேறு திருக்கோயில்களிலிருந்து திருடப்பட்டு, வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்ட சிலைகள், அவ்வப்போது இனம் காணப்பட்டு, மீண்டும் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு, அடையாளம் காணப்பட்டு தமிழக திருக்கோயில்களில் உள்ள சிலைகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு, சரியான சிலைகள்தானா என அடையாளம் காணப்பட்டு, அந்தந்த திருக்கோயில்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு வரும் நிகழ்வுகள் தொடர் நடவடிக்கையில் உள்ளன.

[*2023 ஏப்ரல் 17*

91—

திருத்தேர் வெள்ளோட்டம்

வினா எண் 10092—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் உள்ள அருள்மிகு புராதனவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருத்தேர் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும், தேர் வெள்ளோட்டம் விடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தில் உள்ள அருள்மிகு புராதனவனேஸ்வரர் திருக்கோயில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏனாதி-பாளமுத்தி அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயிலின் குழுக்கோயில் ஆகும்.

இத்திருக்கோயிலில் திருத்தேர் திருப்பணி, இந்து சமய அறநிலையத் துறை நிதி ரூ.9,00,000/- உபயதாரர் நிதி ரூ.3,50,000/- என கூடுதல் ரூ.12,50,000/-ற்கு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு பணிகள் முடிவுற்று, கொரோனா பெருந்தொற்று காரணமாக வெள்ளோட்டம் நடத்த இயலவில்லை. தற்போது தேரோடும் வீதிகள் மேடுபள்ளமாக உள்ளதால் அதனை சரிசெய்து தர உள்ளாட்சி நிர்வாகத்திற்கு திருக்கோயில் நிர்வாகத்தால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உடன் உள்ளாட்சி நிர்வாகம்மூலம் சாலைகள் சீர்செய்து விரைவில் திருத்தேர் வெள்ளோட்டம் நடத்தப்படும்.

92—

பூங்கா

வினா எண் 12060—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

குளித்தலை தொகுதி, குளித்தலை நகரில் ஸ்ரீ கடம்பனேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

குளித்தலை தொகுதி, குளித்தலை நகரில் ஸ்ரீகடம்பனேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பூங்கா அமைப்பது குறித்து திருக்கோயில் நிலங்கள் பொது நன்மை என்ற பெயரில் இலவசமாக வழங்க வழிவகை இல்லை. மேலும், இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டம் 1959, சட்டப் பிறிவு 34-ன்கீழ் அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளுக்கு மட்டும் பொது நன்மைக்காக அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகிறது. இந்த விற்பனைகூட, நீதிமன்ற தடை ஆணையால் தற்போது மேற்கொள்ளப்படுவதில்லை. மேலும், திருக்கோயிலின் நிலத்தின் ஒரு பகுதியை தற்சமயம் பூங்கா அமைக்க ஒதுக்கும்பட்சத்தில் வருங்காலத்தில் திருக்கோயில் தொடர்பான வேறு ஏதும் பணிகளை மேற்கொள்வதற்கு தடையாக அமையும் என்பதாலும், மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் ஸ்ரீகடம்பனேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பூங்கா அமைப்பதற்கு அனுமதிக்க இயலாத நிலை உள்ளது.

93—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 22029—திரு. ஆ. அருன்மொழிதேவன்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பில் கூடுதல் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பில் உள்ள தொகுப்பு பால் குளிர்விப்பு மையத்தின் பால் கையாளும் திறன் 8,000

[*2023 ஏப்ரல் 17*

லிட்டராக உள்ளது. ஆனால், சங்கங்களின்மூலம் கொள்முதல் செய்யப்படும் பால் 7,000 லிட்டராக மட்டுமே உள்ளதால், சேத்தியாத்தோப்பில் கூடுதல் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

94—

கட்டடம்

வினா எண் 28743—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காலிமனை உள்ள சங்கங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறைமூலம் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 100% மானியத்தில் சொந்தக் கட்டடம் கட்டித்தர தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தருமபுரி சரக கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சங்கத்தின் பெயரில் காலிமனை உள்ள சங்கங்களுக்கு, ஊரக வளர்ச்சித் துறைமூலம் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 100% மானியத்தில் சொந்த கட்டடம் கீழ்க்காணும் சங்கங்களில் கட்டப்பட்டு வருகிறது:-

2019-2020:

i. *தபிடி 415 பண்டஅள்ளி,*

ii. *தபிடி 335 எம்.கே.கே. கொட்டாய்.*

2020-2021:

i. *தபிடி 1164 வி. வெளாம்பட்டி,*

ii. *தபிடி 23 புதுப்பட்டி,*

2023 ஏப்ரல் 17]

iii. *தபிடி 510 தாசம்பட்டி,*

iv. *தபிடி 198 தம்மணம்பட்டி*

95—

தொடக்கப் பள்ளி

வினா எண் 28102—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, வண்டல் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, வண்டல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு அருகாமையில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் அரசு மேல்நிலைப் பள்ளி, தலைஞாயிறு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளி, அவரிக்காடு செயல்படுகின்றன. தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, இக்குடியிருப்பு பகுதியானது உயர் தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தற்போது தரமுயர்த்த சூழல் எழவில்லை.

96—

தொடக்கப் பள்ளி

வினா எண் 28105—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மெட்டரை ஊராட்சி, கொட்டமெட்டரை கிராமத்தில்

உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மெட்டரை ஊராட்சி, கொட்டமெட்டரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு அருகாமையில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் அரசு மேல்நிலைப் பள்ளி, அளேசீபம் மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளி, லிங்கேகவுண்டனஅள்ளி செயல்படுகின்றன. தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, இக்குடியிருப்பு பகுதியானது உயர் தொடக்கக் கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தும் சூழல் தற்போது எழவில்லை.

97—

தொடக்கப் பள்ளி

வினா எண் 28142—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் தேவைப்படுகிற இடத்தில் புதியதாக தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி வருவாய் மாவட்டத்தில் அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இரு ஒன்றியங்கள் மட்டும்

2023 ஏப்ரல் 17]

மலைப் பகுதிகளாக உள்ளன. மேற்காண் மலைப் பகுதிகளில் அரூர் ஒன்றியத்தில் 32 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்தில் 13 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருவதால், தருமபுரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் புதியதாக தொடக்கப் பள்ளி துவங்குவதற்கான சூழல் தற்போது எழவில்லை.

98—

தொடக்கப் பள்ளி

வினா எண் 38220—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாநகராட்சி, 18-வது வார்டு, தோட்டத்துபாளையம் பகுதியில் தொடக்கப் பள்ளி புதியதாக துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி, 18-வது வார்டு, தோட்டத்துபாளையம் குடியிருப்பிற்கு 1 கி.மீ. சுற்றளவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, இராக்கியாகவுண்டன்புதூர் செயல்பட்டு வருவதால், அக்குடியிருப்பு பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்கும் சூழல் தற்போது எழவில்லை.

99—

கழிவுநீர்

வினா எண் 50903—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஆங்காடு ஊராட்சியில் ஹட்சன் ஃபுட்ஸ் அக்ரோ புராடெக்ட்ஸ்

பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர், சோழவரம் ஏரி உபரிநீர் கால்வாயில் விடப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சியில் அமைந்துள்ள தி/ள். ஹட்சன் அக்ரோ புராடெக்ட் லிமிடெட் நிறுவனத்தின் கழிவுநீர், சோழவரம் ஏரி கால்வாயில் விடப்படவில்லை.

மேற்படி, தி/ள். ஹட்சன் அக்ரோ புராடெக்ட் லிமிடெட் நிறுவனமானது ஐஸ் கிரீம் உற்பத்தி செய்யவும், நாளொன்றிற்கு 48 கிலோ லிட்டர் கழிவுநீரை மேற்படி நிறுவனத்தின் நிலத்தில் வெளியேற்றி மரங்கள் வளர்க்கவும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று இயங்கி வருகிறது. தொழிற்சாலை கழிவுநீரை ஒரு முழுமையான சுத்திகரிப்பு நிலையம்மூலம் (ETP- Effluent Treatment Plant) சுத்திகரித்து அருகில் உள்ள மேற்படி நிறுவனத்தின் சுமார் 3.5 ஏக்கர் நிலத்தில் மரம் வளர்க்கப் பயன்படுத்தி வருகிறது.

சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது மேற்கண்ட நிலத்திற்கு குழாய்மூலம் எடுத்து செல்லப்படுகிறது.

நிறுவனத்திலிருந்து கழிவு நீர் வாய்க்காலில் விடப்படுவதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், தொழிற்சாலையிலிருந்து மழைநீர் வடியும் வடிகால் துவாரங்களும் அடைக்கப்பட்டுள்ளன.

மேலும், மேற்படி வாய்க்கால், தொழிற்சாலையின் நிதியுதவியுடன் ஊராட்சியால் சுமார் 2.83 இலட்சம் செலவில் ஊராட்சி வாயிலாக தூர்வாரப்படுகிறது.

இத்தொழிற்சாலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவீடுகளுக்குள்ளேயே காணப்படுகிறது.

2023 ஏப்ரல் 17]

100—

வேலைவாய்ப்பு

வினா எண் 36755—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண். 70-ல் எலிகான் தெரு, அருந்ததி நகர் மேட்டுப்பாளையம் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களைப் பொறுத்தவரை அரசுத் துறையில் அறிவிக்கப்பெறும் காலியிடங்களுக்கு பதிவு மூப்பு, வயது வரம்பு, இனசுழற்சி மற்றும் விதிகளுக்குட்பட்டு பரிந்துரை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அரசாணை (நிலை) எண் 44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ட்டி2) துறை, நாள் 11-3-2015-ன் அடிப்படையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் பெறப்படும் பணிக் காலியிடங்களுக்கு, வேலையளிப்போரால் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. அதன்மூலம் இம்மையத்தில் பதிவு செய்யாத மனுதாரர்களும் குறிப்பிட்ட பணிக் காலியிடத்திற்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். மேலும், இம்மையங்கள்மூலம் பரிந்துரைக்கப்படும் பட்டியல்கள் மற்றும் விளம்பரம்மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்காணல் நடத்தப்பட்டு, மனுதாரர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு உயர் கல்வி, போட்டித் தேர்வுகள், சுய வேலைவாய்ப்பு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு, திறன் பயிற்சி போன்றவை குறித்து வழிகாட்டுதல்கள் வழங்கப்படுவதுடன் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்படுகின்றன.

மேலும், மத்திய/மாநில/பொதுத் துறை நிறுவனங்களின் பணிக் காலியிடங்கள் அனைத்தும் போட்டித் தேர்வுகள் மூலமாக மட்டுமே நிரப்பப்படுவதால், இத்தகைய போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்துகொள்ள தேர்வர்களுக்கு உதவும்வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் தன்னார்வ பயிலும் வட்டம் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் வாயிலாக இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதோடு, போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், தினசரிகள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாள்கள் ஆகியவை பதிவுதாரர்களின் பயன்பாட்டிற்காக இலவசமாக அளிக்கப்படுகின்றன. https://tamilnaducareerservices.tn.gov,in என்ற இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அனைத்து போட்டித் தேர்வுகளுக்கான மென்பாடக் குறிப்புகளை பதிவிறக்கம் செய்து தேர்வர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் தற்போது 6 மாதங்களுக்கு ஒரு முறை பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும், ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் வெள்ளிக்கிழமைகளில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடத்தப்படும் முகாம்களில் பல்வேறு துறைகளைச் சார்ந்த வேலையளிக்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேலைநாடுநர்களுக்கு வேலையளித்து வருகின்றனர்.

மேற்படி, முகாம்களில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் உரிய திறன் குறைவினால் வேலைவாய்ப்பு பெற இயலாத நேர்வுகளில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் தேவையான திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஜூன் 2021 முதல் தற்போது வரை 974 பெரிய மற்றும் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 1,07,124 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

2023 ஏப்ரல் 17]

குறிப்பாக, சென்னை மாவட்டத்தில் உள்ள இராயப்பேட்டையில் 15-10-2022 அன்று தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் புதுக் கல்லூரியில் நடைபெற்றது என்றும், இவ்வேலைவாய்ப்பு முகாமில் 2,742 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். இம்முகாமில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சமாவது பணி நியமன ஆணை உள்ளிட்ட பணி நியமன ஆணைகளை இளைஞர்களுக்கு வழங்கினார்.

சென்னை மாவட்டத்தில் வருடத்திற்கு 2 பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும், சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் வாரத்தின் 2 மற்றும் 4-வது வெள்ளிக்கிழமைகளில் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலமாக நடத்தப்படும்.

இம்முகாம்கள் சென்னை மாவட்டத்தில் உள்ள திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண். 70-ல் எலிகான் மேட்டுப்பாளையம் உள்ளிட்ட அனைத்து பகுதிவாழ் வேலைநாடுநர்களுக்கு உதவிடும்வகையில் அமையும்.

பட்டியல்-9

1—

சமுதாயக் கூடம்

வினா எண் 7657—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, அரகாசன அள்ளி ஊராட்சிக்குட்பட்ட நாகாவதி அணைக்கு சுற்றுலா வரும் பயணிகள் மற்றும் ஈமச்சடங்கு செய்ய வரும் பயணிகள் நலன் கருதி சிறு பூங்காவுடன் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் அரகாசன அள்ளி அருகே நாகாவதி அணையின்

வலதுபுறம் இலங்கை அகதிகள் குடியிருப்பு அமைந்துள்ளது. இடதுபுறம் வனப்பகுதியாக உள்ளது. எனவே, இவ்வணையில் பூங்கா அமைக்க போதிய இடவசதி இல்லை. மேலும், சமுதாயக் கூடம் அமைத்து ஈமச்சடங்கு செய்ய பொதுமக்களுக்கு அனுமதி அளித்தால், CWC-ன் (Central Water Commission) வரையறுக்கப்பட்ட விதிகளின்படி அணை பகுதி மாசுபடும் என்பதால் சமுதாயக் கூடம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

2—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 10254—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட SRP TOOLS முதல் உத்தண்டி வரை பக்கிங்ஹாம் கால்வாயை தூர்வாரி இருபுறம் கான்கிரீட் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின்மூலம் எண்ணூர் முதல் முட்டுக்காடு வரை சுமார் 48 கி.மீ. நீளம் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயை சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைமூலம் ரூ.406.86 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள்மூலம் பக்கிங்ஹாம் கால்வாயின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் நீர்வளத் துறைமூலம் அகற்றப்படும் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயை தூர்வாரி, கால்வாயின் எல்லையில் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைக்கப்படும்.

3—

தடுப்பணைகள்

வினா எண் 12420—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 17]

காவிரியாற்றின் கிளை நதிகளான அரசலாறு, திருமலை ராஜன் ஆறு, குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு ஆகியவற்றில் தடுப்பணைகளை கட்டி நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

வீணாக கடலில் கலக்கும் மழைநீரை, பாசனதாரர்கள் பாதிக்காத வகையில் தேக்கி, நிலத்தடி நீரினை செறிவூட்டுதலே தடுப்பணைகள் அமைப்பதன் பிரதான நோக்கம் ஆகும். காவிரி வடிநில பகுதிகளில் அமைந்துள்ள ஆறுகள் ஏற்கெனவே பாசன மற்றும் வடிகால் வசதிகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளன. எனவே, காவிரியாற்றின் கிளை நதிகளான அரசலாறு, திருமலை ராஜன் ஆறு, குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு ஆகிய ஆறுகளில் நிலத்தடி நீரை சேமிப்பதற்கான புதிய தடுப்பணைகள் அமைக்க தொழில்நுட்பரீதியாக அவசியம் எழவில்லை.

4—

கிளை வாய்க்கால்

வினா எண் 15435—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம் J.N. பாளையம் ஊராட்சியில் தீபாலபட்டி முதல் ஆண்டியூர் வரை PAP கிளை வாய்க்கால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், J.N. பாளையம் (ஜிலோபிநாயக்கன்பாளையம்) ஊராட்சியில் தீபாலபட்டி முதல் ஆண்டியூர் வரை, பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயில் பிரியும் அர்த்தநாரிபாளையம் கிளைக் கால்வாய்மூலம் ஏற்கெனவே பாசனம் பெற்று வருகின்றது.

[*2023 ஏப்ரல் 17*

5—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 18753—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கமுகக்குடி ஊராட்சி, சட்ரஸ் பெரிய வாய்க்காலிலிருந்து புளியமரம் வடிகால் வரை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கமுகக்குடி ஊராட்சி, சட்ரஸ் பெரிய வாய்க்காலிலிருந்து புளியமரம் வரை, 2022-2023 ஆம் நிதியாண்டின் பராமரிப்பு நிதியின்கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது.

6—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 18756—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், இளவங்கார்குடி ஊராட்சி, இராஜன் வாய்க்காலை காட்டூரிலிருந்து தொழுவனங்குடி வரை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், இளவங்கார்குடி ஊராட்சி, இராஜன் வாய்க்கால்,

2023 ஏப்ரல் 17]

2019-2020 ஆம் ஆண்டுத் திட்டப் பணிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ், 5.00 கிமீ. நீளத்திற்கு ரூ.5.33 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது.

7—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 18762—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, பின்னவாசல் ஊராட்சி, பாசன வாய்க்காலான பி6 பின்னவாசல் வாய்க்கால், பி6 மாவூர் வாய்க்கால், பி6 ஆறுகுடி வாய்க்கால் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, பின்னவாசல் ஊராட்சி, பின்னவாசல் வாய்க்கால், 2019-2020 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் 3.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.2.93 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது. மாவூர், ஆறுகுடி வாய்க்கால்கள், 2020-2021 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியின்கீழ் 2.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.2.47 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது.

8—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 18796—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கமுகக்குடி ஊராட்சி, அஸ்கானோடை தலைப்பு வாய்க்கால் முதல் அஸ்கானோடை வரை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கமுகக்குடி ஊராட்சி, அஸ்கானோடை தலைப்பு வாய்க்கால், 2022-2023 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி முடிக்கப்பட்டது.

9—

ஏரிகள்

வினா எண் 21212—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை வட்டம், பாலவாக்கம், ஜெ.ஜெ. நகர், புல எண் 282/1, 2, 3, 7-ல் புதிய நீர்ப்பாசன ஏரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, பாலவாக்கம், ஜெ.ஜெ. நகர், புல எண் 282/1, 2, 3, 7-ல் புதிய நீர்ப்பாசன ஏரி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

பாசனம்

வினா எண் 21448—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பரம்பிக்குளம்-ஆழியார் திட்டத்தில் விடுபட்டுள்ள சேர்வைக்காரன்பாளையம், வடசித்தூர் பகுதியில் உள்ள பாசனப் பகுதிகளை இத்திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம்-ஆழியார் திட்டத்தில் புதிய ஆயக்கட்டுகளை சேர்ப்பது இல்லை என்று அரசு முடிவெடுத்துள்ளதால், சேர்வைக்காரன்பாளையம், வடசித்தூர் பகுதியில் உள்ள பாசனப் பகுதிகளை இத்திட்டத்தில் சேர்க்க வழிவகை இல்லை.

11—

நிர்வாக சீரமைப்பு

வினா எண் 21720—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கனிம நிறுவனம் 2015-2016 ஆம் நிதியாண்டு வரை இலாபம் ஈட்டும் நிறுவனமாக இருந்தது.

சுற்றுச்சூழல் சட்டங்களுக்கு உட்படுதல்:

சுரங்கத் துறையில் சுற்றுச்சூழல் சட்டங்கள் கடுமையாக அமல்படுத்தப்பட்டதன் காரணமாக, மார்ச் 2017 முதல் பிப்ரவரி 2020 வரை சுற்றுச்சூழல் அனுமதிகள் நிலுவையில் இருந்தன. இதன் விளைவாக, செயல்பாட்டிலுள்ள குவாரிகளின் எண்ணிக்கை குறைந்து, நிறுவனத்திற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது.

கடன்:

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சம்பளத் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் தமிழக அரசு ரூ.62 கோடி வழிவகை கடன் வழங்கி, நிறுவனம் தனது நிர்வாகச் செலவுகளை சமாளிக்க உதவியது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின்

வழிகாட்டுதலின்படி, உரிய முறையில் சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டி, ரூ.58 கோடி அரசிடமிருந்து வட்டியில்லாக் கடன் பெற்று தமிழக அரசின் புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்கு அபராதத் தொகை செலுத்தியுள்ளது.

குவாரி/சுரங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துதல்:

டாமின் நிர்வாகம் தமது குவாரிகள்/சுரங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தும் விதமாக சுற்றுச்சூழல் அனுமதி பெற்றவுடன், அவற்றின் இயக்கத்தில் கவனம் செலுத்தி மொத்த விற்பனைத் திறனை அதிகப்படுத்தியதன்மூலம், தமது தொழிலாளர்களின் சம்பளத்தை முழுமையாக வழங்கும் தகுதியை அடைந்து, ஏப்ரல் 2021 முதல் டாமின் தொழிலாளர்களின் சம்பளம் தாமதம் இன்றி வழங்கப்படுகின்றது.

உற்பத்தி:

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் உற்பத்தி கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைத் தகவல்களின்படி, 2019-2020 ஆம் நிதியாண்டில் இருந்து முன்னேற்றத்தைக் காட்டுகின்றது:

ஆண்டு	கிரானைட் க.மீ.	உற்பத்தி அதிகரிப்பு %	கிராபைட் மெ.டன்	உற்பத்தி அதிகரிப்பு %	சுண்ணாம்புக்கல் மெ.டன்
2019-2020	2310	-	-0-	-	-0-
2020-2021	2617	13	11493	-	22
2021-2022	4886	86	42071	266	108727

தமிழ்நாடு கனிம நிறுவனம் 2022-2023 ஆம் நிதியாண்டில் 16,504 கன மீட்டர் (கிரானைட்) மற்றும் 1,19,844 மெ.டன்கள் (கிராபைட் (50,000 மெ.டன்கள்) மற்றும் சுண்ணாம்புக்கல் (69,844 மெ.டன்கள்)) உற்பத்தியை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

பின்வரும் முன்னெடுப்புகளின்மூலம் தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது இலக்குகளை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது:

- மனிதவளத்தினை சரியாக பகிர்ந்து பயன்படுத்துவதன் வாயிலாக பயனுள்ள பயன்பாட்டினை மேம்படுத்துதல்.

2023 ஏப்ரல் 17]

- பதவி உயர்வு வழிகள்மூலம் ஊழியர்களின் உத்வேகத்தை மேம்படுத்துதல்.
- ஒவ்வொரு பிரிவின் மேலாளர்களுக்கும் நிதி அதிகாரங்களை அளிப்பதன்மூலம் பூஜ்ஜியம் தாமதம் மற்றும் வேலையில்லா நேரத்தைக் கணிசமாகக் குறைத்து சாதனை படைத்தல்.
- ஆக்கவளம் கொண்ட நேரத்தை அதிகரித்தல், இயங்கும் குவாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், ஒவ்வொரு குவாரியிலும் இயக்கத்தில் உள்ள பகுதிகளை விரிவாக்கம் செய்தல் மற்றும் சுரங்கங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.

விற்பனை மற்றும் மொத்த வருமானம்:

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் விற்பனை கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைத் தகவல்களின்படி, 2019-2020 ஆம் நிதியாண்டிலிருந்து முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

ஆண்டு	ரூபாய் (கோடி)
2019-20	20.96
2020-21	32.15
2021-22	75.08
2022-23 (மதிப்பீடு)	126.00

பின்வரும் முன்னெடுப்புகளின்மூலம் தமிழ்நாடு கனிம நிறுவனம் தீர்மானித்த இலக்குகளை மிஞ்சும் விதமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது:

- வெளிப்படையான ஆன்லைன் டெண்டர் முறையுடன்கூடிய ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் வாயிலாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு, வாடிக்கையாளர்களின் நம்பிக்கை பெறுதல்.
- சரியான நேரத்தில் பொருட்களை விநியோகிப்பதன்மூலம், தொடர்ச்சியான நம்பிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

- வணிகத்தில் எளிமையான செயல்முறைகள் பின்பற்றப்படுகின்றன.

- தமிழ்நாடு கனிம நிறுவனம் 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.126 கோடி வருவாய் மற்றும் ரூ.8 கோடி இலாபம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்:

- நிர்வாக முறையினை மேம்படுத்தும் விதமாக வெவ்வேறு பிரிவுகள் மற்றும் தொழிற்சாலைகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

 (i) மேலூர் பிரிவு சிவகங்கை பிரிவுடன் இணைக்கப்பட்டது.

 (ii) விழுப்புரம் பிரிவு ராணிப்பேட்டை பிரிவுடன் இணைக்கப்பட்டது.

 (iii) மாதேப்பள்ளி தொழிற்சாலை கிருஷ்ணகிரி பிரிவுடன் இணைக்கப்பட்டது.

- மனிதவளத்தினை திறம்பட பயன்படுத்துவதன் வாயிலாக 1-1-2022 அன்று 107 ஆக இருந்த ஒப்பந்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 27-6-2022 அன்று 35 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

- நிதிரீதியாக இயங்குவதற்கு சாத்தியமற்ற பிரிவுகள் மூடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கனிம நிறுவனம், கிராபைட் வணிகத்தினை விரிவுபடுத்தும்நோக்கில், தற்சமயம் உற்பத்தி செய்யும் கிராபைட் செதில்களின் உற்பத்தித் திறனை 6,000 மெ.டன் அளவிலிருந்து 25,000 மெ.டன் அளவிற்கு அதிகரிக்க ரூ.120 கோடி முதலீடு செய்ய முயற்சி மேற்கொண்டுள்ளது. மேலும், இந்திய அருமணல் நிறுவனத்துடன் (IREL) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திடுவதன்மூலம் கடற்கரை மணல் சுரங்க வணிகத்தில் ஈடுபட முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு திட்டங்களும் ஆண்டுக்கு முறையே ரூ.20 கோடி மற்றும் ரூ.100 கோடி இலாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 ஏப்ரல் 17]

12—

பாசனம்

வினா எண் 37756—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதியில் இயங்கும் J.S.W. காவிரி ஆற்றிலிருந்து எவ்வளவு தண்ணீர் எடுக்க அரசு அனுமதியளித்துள்ளது என்பதை தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருவாளர்கள் J.S.W. ஸ்டீல் லிமிடெட் நிறுவனம் தமது தொழிற்சாலை பயன்பாட்டிற்காக காவிரி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 5 எம்.ஜி.டி. (MGD) அல்லது ஆண்டொன்றுக்கு 82,96,450 கன மீட்டர் வீதம் தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 10 ஆம் தேதிக்குள் நீர்வளத் துறைக்கு தண்ணீர் கட்டணத்தை முன்பணமாக செலுத்தி தண்ணீரை பயன்படுத்தி வருகின்றது.

13—

கிளை வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 37876—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், வாழைக்குறிச்சி முதல் தென்கச்சி பெருமாள்நத்தம் வரை கிளை வாய்க்கால் எண்-1-ஐ தூர்வாரிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம்,

வாழைக்குறிச்சி கிராமம் முதல் தென்கச்சி பெருமாள்நத்தம் வரையுள்ள எண்-1 கிளை வாய்க்காலை தூர்வாரிட, 2022-2023 ஆம் ஆண்டு சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, 16-5-2022 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

14—

ஓடையைத் தூர்வாருதல்

வினா எண் 37878—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், இடங்கண்ணி கிராமம், தாதன் ஓடை 0 முதல் 1.40 கி.மீ. தூரம் தூர்வாரி ஆழப்படுத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், இடங்கண்ணி கிராமம், தாதன் ஓடையை முதல் 1.00 கி.மீ. தூரம் வரை, 2022-2023 ஆம் ஆண்டு சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, 23-5-2022 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

15—

ஓடையைத் தூர்வாருதல்

வினா எண் 37881—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், அணைக்குடம் கிராமம் முதல் சோழமாதேவி கிராமம் வரை

2023 ஏப்ரல் 17]

இடிவாரை ஓடை 0 முதல் 3 கி.மீ. தூரம் தூர்வாரி ஆழப்படுத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், அணைக்குடம் கிராமம் முதல் சோழமாதேவி கிராமம் வரை இடிவாரை ஓடையில், 0 முதல் 3.00 கி.மீ. தூரம் வரை, 2022-2023 ஆம் ஆண்டு சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, 23-5-2022 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

16—

கிளை வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 37882—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், இடங்கண்ணி கிராமத்தில் எண் 2 கிளை வாய்க்கால் 0 முதல் 3.27 கி.மீ. மற்றும் எண் 3 கிளை வாய்க்கால் 0 முதல் 0.87 கி.மீ. வரை தூர்வாரி ஆழப்படுத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், இடங்கண்ணி கிராமத்தில் எண் 2 கிளை வாய்க்கால் 0 முதல் 3.27 கி.மீ. மற்றும் எண் 3 கிளை வாய்க்கால் 0 முதல் 0.87 கி.மீ. வரை 2022-2023 ஆம் ஆண்டு சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல்

வழங்கப்பட்டு, தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, 23-5-2022 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

17—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 38513—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு பிரிவு, அடஞ்சூர் பாசன வாய்க்கால் பகுதி ஆக்கிரமிப்பை அகற்றி, வாய்க்காலைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், அடஞ்சூர் கிராமத்தில் உள்ள அடஞ்சூர் பாசன வாய்க்காலின் இருகரைகளின் மேல் உள்ள ஆக்கிரமிப்புகளை, 2022-2023 ஆம் ஆண்டு தூர்வாரும் பணிகள் திட்டத்தின்கீழ் அகற்றி, 0 கி.மீ. முதல் 7.00 கி.மீ. வரை தூர்வாரப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

18—

கிரானைட் தொழில்

வினா எண் 46544—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிரானைட் தொழிலை மேம்படுத்த வழிகாட்டுதல்கள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் கருப்பு மற்றும் பல வண்ண கிரானைட் குவாரிகள் அரசு புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களில்

2023 ஏப்ரல் 17]

*இயங்கி வருகின்றன. 2022 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, தற்போது மொத்தம் 873 கிரானைட் குவாரி குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் 101 குவாரிகள் மட்டும் இயக்கத்தில் உள்ளன. மீதமுள்ள குவாரிகள் சுற்றுப்புறச் சூழல் தடையின்மை சான்று வேண்டியும், இதர காரணங்களினாலும் நிலுவையில் உள்ளன. பட்டா நிலத்தில் குவாரி உரிமம் பெற தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959, விதி 19-*A*-ன்கீழ் விண்ணப்பித்து கிரானைட் குத்தகை உரிமம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு புறம்போக்கு நிலத்தில் டெண்டர்/ஏல முறையில் குவாரி உரிமம் வழங்க தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959, விதி 8-*A*-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கிரானைட் கற்துண்டங்களை அறுத்து கற்பலகைகளாக மாற்ற பல மெருகூட்டும் தொழிற்சாலைகளுக்கு, "தமிழ்நாடு சட்டத்திற்குப் புறம்பான சுரங்கத் தொழில், கனிமங்கள் போக்குவரத்து மற்றும் சேமிப்பு தடுப்பு மற்றும் கனிம விற்பனையாளர்கள் விதிகள், 2011 (*The Tamil Nadu prevention of illegal Mining Transportation and storage of Minerals and Minerals Dealers Rules, *2011)" மூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. கிரானைட் தொழிலை மேம்படுத்த இனிவரும் காலங்களில் கிரானைட் கற்கள் உள்ள பகுதிகளை ஆய்வு செய்து ஏலம் விட அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. மேலும், கிரானைட் குவாரிகளிலிருந்து கற்துண்டங்கள் வெட்டி எடுக்கப்பட்டு, உள்நாட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிரானைட் குவாரியில் உள்ள கழிவுகளைப் பயன்படுத்தவும், அதன்மூலம் *M-Sand* தயாரிக்கும் பொருட்டும், அரசாணை (டி) எண் 92, தொழில் (எம்.எம்.பி.1) துறை, நாள் 6-9-2021-ல் வெளியிடப்பட்டுள்ளது. கிரானைட் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் பயன்பெற காப்பீடு/நலத்திட்ட உதவிகளை அரசு வழங்கி வருகின்றது.*

19—

தானியக் களம்

வினா எண் 21128—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெண்ணாகரம் தொகுதி, செங்கனூர் ஊராட்சிக்குட்பட்ட ராஜாவூர் கிராமத்தில் புதிய தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

பெண்ணாகரம் தொகுதி, செங்கனூர் ஊராட்சிக்குட்பட்ட ராஜாவூர் கிராமத்தில் புதிய தானியக் களம் அமைக்கும் திட்டம் அரசின் பரசீலனையில் இல்லை.

20—

புலங்கள் மீட்டுருவாக்கம்

வினா எண் 28783—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்மூலம் துணைவேந்தர் வா.ஐ. சுப்பிரமணியம் அவர்களால் 23 புலங்கள் உருவாக்கப்பட்டு, தற்போது 5 புலங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. செயல்பாட்டில் இல்லாத 18 புலங்களை மீட்டுருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் வா.ஐ. சுப்பிரமணியம் அவர்களால் 23 புலங்கள் உருவாக்கப்படவில்லை. கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம் மற்றும் அறிவியல் புலம் ஆகிய 5 புலங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டன. மேற்படி ஐந்து புலங்களின்கீழ் 25 துறைகள் உருவாக்கம் செய்யப்பட்டன. தற்போது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 5 புலங்களின்கீழ் 26 துறைகள் செயல்பாட்டில் உள்ளன.

21—

நகலகம் மையம்

வினா எண் 4603—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) படித்த பெண்கள் மகளிர் சுய உதவிக் குழுவில் இருந்தால் அவர்களுக்கு ஜெராக்ஸ் மெஷின் (Xerox Machine) வாங்கி நகலகம் வைக்க கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு துவங்கி ஆறு மாதம் முடிவுற்ற குழுக்களுக்கு வங்கியின்மூலம் கடன் வழங்கப்படுகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின்மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்ட நிதியிலிருந்து சமுதாய முதலீட்டு நிதிக்கடன் வழங்கப்படுகிறது. தனிநபருக்கு தொழில் துவங்க வங்கிகள்மூலம் முத்ரா கடன் வழங்கப்பட்டு வருகிறது.

நகர்ப்புற பகுதிகளில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM)கீழ் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் வட்டி மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் தொழில் தொடங்குவதற்கு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட கடன் உதவிகளைப் பெற்று ஜெராக்ஸ் மிஷின் வாங்கி நகலகம் வைத்துப் பயன்பெறலாம். மேற்கண்ட கடனுதவித் திட்டங்கள் நாளது தேதியில் நடைமுறையில் உள்ளன.

22—

சிப்பிக் காளான்

வினா எண் 11217—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதியில் உள்ள மகளிர் குழுக்களுக்கு பையூர் வேளாண் மையம்மூலம் சிப்பிக் காளான் வளர்ப்புப் பயிற்சியளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பையூர் வேளாண் மையம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. தருமபுரி மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனம் (RESETI), தருமபுரிமூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிப்பிக் காளான் வளர்ப்புப் பயிற்சி 1-4-2022 முதல் 10 நாட்கள் மற்றும் 13.09.2022 முதல் 10 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது.

23—

பயனாளிகள் பட்டியல்

வினா எண் 13837—திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதியில் வறுமைக் கோட்டிற்குகீழ் (BPL) வாழும் மக்கள் பட்டியலில் உண்மையான பயனாளிகளைப் புதியதாகச் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மக்கள் நிலை ஆய்வுப் பட்டியலில் விடுபட்ட இலக்கு மக்கள் குடும்பங்களைச் சேர்த்தல்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே (BPL) உள்ளோர் பட்டியல் சமூகப் பொருளாதாரம் மற்றும் சாதிவாரியாக கணக்கெடுப்பு 2011-2012 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் செய்து முடிக்கப்பட்டு அப்பட்டியல் அரசின் பல்வேறு துறைகளின் நலத் திட்ட உதவிகள் பெற பயன்படுத்தப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

தமிழ்நாடு அரசால் புதுவாழ்வு/வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கத்தில் மக்கள் பங்கேற்புடன்கூடிய மக்கள் நிலை ஆய்வுமூலம் தயார் செய்யப்பட்ட பட்டியல் (PIP) திட்டப் பயன்பாட்டிற்காக நடைமுறையில் உள்ளது.

தற்போது, அந்தப் பட்டியலில் தகுதியற்றவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களை நீக்குவதற்கும், பட்டியலில் விடுபட்ட மிக ஏழைகள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர்கள் ஆகிய தகுதியான குடும்பங்களைச் சேர்த்தலுக்காகவும் பட்டியல் தயார் செய்யப்பட்டு வருகிறது.

24—

விற்பனை வசதி

வினா எண் 26698—திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி, தேவூர், அரசிராமணி, காவேரிபட்டி, மகுடஞ்சாவடி, சங்கரி மேற்கு ஆகிய பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, கத்தேரி, தேவூர், அரசிராமணி, காவேரிபட்டி, மகுடஞ்சாவடி, சங்கரி மேற்கு ஆகிய பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய ஊராட்சியில் செயல்படும் கிராம இ-சேவை மையங்களில் மதி அங்காடி விற்பனை மையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் வழியாக மகளிர் சுய உதவிக் குழு தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில் பூமாலை வணிக வளாகம் உள்ளது. இங்கு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய கடைகள் அமைக்கப்பட்டு, குழுக்களுக்கு மிகக்குறைந்த வாடகையில் கடைகள் வழங்கப்பட்டு, அதன்வழியாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

25—

கட்டடங்கள்

வினா எண் 27100—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சி, புலிக்கரை கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சி, புலிக்கரை கிராமத்தில் ஏற்கெனவே சுய உதவிக் குழு கட்டடம் உள்ளது. எனவே புலிக்கரை கிராமத்தில் புதியதாக மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

26—

திட்டங்கள்

வினா எண் 27279—திரு. இரா. அருள்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்தொற்று காலத்திற்குப் பின்பு கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தி ஏழை பெண்களின் வாங்கும்

2023 ஏப்ரல் 17]

சக்தியை உயர்த்த சிறப்பாக திட்டங்கள் தீட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து, அவர்களுக்கு நிறுவன கட்டமைப்பு பயிற்சி வழங்கி, சுழல் நிதி வழங்கப்படுகின்றது. அதன்மூலம் குழு உறுப்பினர்கள் உள்கடன் பெற இயலும். மேலும், வங்கிகளில் நேரடிக் கடன் மற்றும் பொருளாதாரக் கடன் இணைப்பு பெற்றுத் தரப்படுகிறது. மேலும், அவர்கள் விரும்பும் தொழில்கள் செய்யும் வகையில், தொழில், பயிற்சி கொடுக்கப்பட்டு, உற்பத்தியாளர் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலம் பொருள்கள் உற்பத்தி செய்தல், மதிப்பு கூட்டுதல்மூலம் தொழில் செய்து வருகின்றனர். இதன்மூலம் மகளிரிடம் பொருளாதார நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டு வாங்கும் திறனை உயர்த்தவும், வாழ்வாதாரம் மேம்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

27—

ஆண்கள் சுய உதவிக் குழு

வினா எண் 30376—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் ஆண்கள் சுய உதவிக் குழுக்களை அமைத்து ஊக்குவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது மகளிருக்கான சமுதாய பொருளாதார மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. மக்கள் நிலை ஆய்வின்மூலம் கண்டறியப்பட்ட

[2023 ஏப்ரல் 17

18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட ஏழைகள்/மிகவும் ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் சுய உதவிக் குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 60 வயதுக்கு மேற்பட்ட ஏழை முதியோர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதியோர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்குழுவில் ஆண்கள், பெண்கள், உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர். மாற்றுத் திறனாளிகளையும் கண்டறிந்து சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பதால் ஆண்களுக்கென்று தனியாக சுய உதவிக் குழுக்கள் அமைத்து செயல்படுத்துவதற்கான அவசியம் ஏதும் தற்பொழுது எழவில்லை.

28—

கட்டடங்கள்

வினா எண் 35752—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, புதுப்பட்டி கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு புதிய கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த புதுப்பட்டி கிராமத்திற்கு மிக அருகாமையில் உள்ள நரசிபுரம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கட்டடம் உள்ளது. புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் நரசிபுரம் கிராமத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தினைப் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, புதுப்பட்டி

2023 ஏப்ரல் 17]

கிராமத்தில் புதிதாக மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

29—

குடியிருப்புகள்

வினா எண் 17834—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துப்பட்டு மற்றும் போளூரில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேத்துப்பட்டு மற்றும் போளூர் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், பொதுமக்களிடம் போதிய கேட்பு இருக்கும்பட்சத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய தகுந்த ஆய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 21586—திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், படிக்காசுவைத்தான்பட்டி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் பழுதடைந்துள்ள நிலத்தடி நீர்த்தேக்கத்தொட்டிக்கு (சம்ப்) மாற்றாக புதிய தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், படிக்காசுவைத்தான்பட்டி கிராமத்தில் 1995-1996 ஆம் ஆண்டில் 455 வீடுகள் கட்டும் திட்டம் சிறிய மற்றும் நடுத்தர நகரத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான அடிப்படை வசதிகளான சாலைகள், நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி, தண்ணீர் பகிர்வு பெருங்குழாய் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை 10-6-1999 அன்று படிக்காசுவைத்தான்பட்டி பஞ்சாயத்திடம் எதிர்கால பராமரிப்பிற்காக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

31—

குடியிருப்புகள்

வினா எண் 28044—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகர் பகுதியில் உள்ள அரசு குடியிருப்பு வளாகக் கட்டடங்களை பராமரித்து, புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டியில் 1972-1973 மற்றும் 1984-1986 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் 102 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் (தரைதளம்+2 தளங்கள்) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டது. காலப்போக்கில் குடியிருப்புகள் சிதிலமைடைந்துவிட்டதால், தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவினரால் 15-2-2022 அன்று ஆய்வு செய்யப்பட்டு, இடிப்பதற்கு பரிந்துரை செய்து அறிக்கை

2023 ஏப்ரல் 17]

பெறப்பட்டு, அரசாணை நிலை எண் 84, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள், 18-5-2022 மூலம் மேற்படி சிதிலமைடைந்த குடியிருப்புகளை இடிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, மேற்படி குடியிருப்புகளை இடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

32—

குடியிருப்புகள்

வினா எண் 28052—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனஹள்ளி தொகுதியில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், போதிய கேட்பு பெறப்பட்டு, அரசு நிலங்கள் வழங்கும்பட்சத்தில், வேப்பனஹள்ளி தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

குடியிருப்புகள்

வினா எண் 28053—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. ஆகவே, மேற்கண்ட பகுதிகளில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் தற்போது கட்ட இயலாத நிலை உள்ளது. பொதுமக்களிடம் போதிய கேட்பு பெறப்பட்டு, அரசு நிலங்கள் வழங்கும்பட்சத்தில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் பகுதிகளில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

34—

வாடகை வீடுகள்

வினா எண் 28056—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக குறைந்த வாடகைக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி

2023 ஏப்ரல் 17]

வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், பொதுமக்களிடம் வாடகைக் குடியிருப்புகளுக்காக போதிய கேட்பு மற்றும் ஏற்ற நிலங்கள் இருக்கும்பட்சத்தில், கந்தர்வகோட்டை தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

அடிப்படை வசதிகள்

வினா எண் 28058—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி, ஒட்டப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு கழிவு நீர் கால்வாய், குடிநீர் மற்றும் சாலை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி, ஒட்டப்பட்டி வீட்டு வசதி குடியிருப்பு பகுதிகளில் அமையப்பெற்றுள்ள அனைத்து அடிப்படை வசதி பணிகளும் எதிர்கால பராமரிப்பிற்காக நல்லம்பள்ளி ஊராட்சிவசம் கடந்த 9-1-2004 அன்று ஒப்படைக்கப்பட்டு, தற்போது உள்ளாட்சியினரால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

36—

வணிக வளாகம்

வினா எண் 28059—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர், எல்.பி. சாலை (கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை)-யில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வணிக வளாகத்தை புனரமைத்து புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியில் கடந்த 1972 ஆம் ஆண்டில் 84.69 ஏக்கர் நிலப்பரப்பில் திருவான்மியூர் புறநகர் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. அத்திட்டப் பகுதியில் உள்ள பொது மக்கள் பயனடையும் வகையில், வணிக மனைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியில், 1,159.49 சதுர மீட்டர் (12,480.34 சதுர அடி) நிலப்பரப்பில், தரை தளத்தில் 14 கடைகள் மற்றும் முதல் தளத்தில் 10 தனிநபர் குடியிருப்புகள் 8,872 சதுர அடி தளப்பரப்புடன்கூடிய வணிக வளாகம் 1979-1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டது.

சிதிலமடைந்த நிலையில் இருந்த வாரியக் கட்டடங்களை இடித்துவிட்டு அதிகபட்ச தரைதளக் குறியீட்டின்படி, புதிய வணிக வளாகம் கட்டப்படும் என்ற 2020-2021 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை அறிவிப்பின் அடிப்படையில், திருவான்மியூர் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையில் இருந்த வணிக வளாகம் இடிக்கப்பட்டுவிட்டது.

திருவான்மியூரில் மேற்குறிப்பிட்ட 1,159.49 சதுர மீட்டர் நிலப்பரப்பில், புதியதாக பன்னடுக்கு அலுவலகம் மற்றும் வணிக வளாகம் ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் கட்ட வாரியத் தீர்மான எண் 417, நாள் 29-5-2020-ல் ஒப்புதல் பெறப்பட்டு, (தூண்தளம் + 5 தளங்கள்) 1.42 தரைதளக் குறியீட்டின்படி, 1,330.44 சதுர மீட்டர் கட்டடப் பரப்பில் (14,321 சதுர அடி) ஜனவரி 2021-ல் பணிகள் துவங்கப்பட்டு, வணிக வளாகத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 17]

37—

குடியிருப்புகள்

வினா எண் 28061—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறைமூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி நகரப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. எனவே, பொள்ளாச்சி நகரப் பகுதியில் தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்புகள் கட்டும் நிலையில் இல்லை.

38—

குடிநீர் இயந்திரம்

வினா எண் 38712—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கட்டிகானப்பள்ளி ஊராட்சியில் உள்ள புதிய வீட்டு வசதி வாரியம் பகுதி 2-ல் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கட்டிகானப்பள்ளி ஊராட்சியில் பகுதி 2-ல் உள்ள தமிழ்நாடு

வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகளின் அனைத்து அடிப்படை வசதிகள் எதிர்கால பராமரிப்பிற்காக கட்டிகானப்பள்ளி ஊராட்சியிடம் 1997 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டு, தற்போது உள்ளாட்சியினரால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பணியை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வாயிலாக மேற்கொள்ளலாம்.

39—

உரங்கள்

வினா எண் 52714—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் மாநிலம் முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் வாயிலாக இருப்பு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இந்த உரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற குறுகிய கால பயிர்க் கடனில் பொருட்பகுதியாக வழங்கப்படுவதுடன், உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாத விவசாயிகளுக்கு ரொக்க முறையிலும் வழங்கப்படுகிறது.

(ஆ) தற்போது நடைமுறையில் உள்ளது.

40—

குடியிருப்புகள்

வினா எண் 46542—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை புதுப்பித்து பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணாநகர் குடியிருப்பு திட்டப் பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்படவில்லை. இத்திட்டப் பகுதியில் 400 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 12 கடைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1973-1974 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதி தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பராமரிப்பில்தான் உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

41—

தொழிற்சாலை

வினா எண் 46549—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தேனி மாவட்டத்தில் உலர் திராட்சை தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தேனி மாவட்டத்தில் கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம் ஆகிய வட்டாரங்களில் சுருளிப்பட்டி, காமயக்கவுண்டன்பட்டி, ஓடைப்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 1,705 ஹெக்டேர் பரப்பளவில் (4,210 ஏக்கர்) திராட்சை பயிரிடப்படுகிறது. இப்பயிரில் விதையுள்ள கருப்பு பன்னீர் மற்றும் விதையில்லா திராட்சை இரகங்களான தாம்சன் சீட்லெஸ், சோனா சீட்லெஸ், சரத் சீட்லெஸ் ஆகிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

உலர் திராட்சை தயாரிக்க உகந்த இரகங்களை கண்டறியும்பொருட்டு, உத்தமபாளையம் வட்டாரம், ஆனைமலையான்பட்டியில் அமைந்துள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் தேனி மாவட்ட சீதோஷண நிலவரப்படி, இப்பகுதியில் கிஸ்மிஸ் பெய்லி, வெர்மின் சீட்லெஸ், மாஞ்சரி கிஸ்மிஸ், தாமஸ் சீட்லெஸ் போன்ற விதையில்லா பச்சை திராட்சை இரகங்களும், மாஞ்சரி மெடிகா, பிளாக் மொனுக்கா, பூசா நவரன் போன்ற கருப்பு விதையுடைய திராட்சை இரகங்களும், உலர் திராட்சைக்கு உரிய இரகங்களாக ஆய்வு செய்து கண்டறியப்பட்டு, தற்போது புதிய இரகங்கள் விவசாயிகளிடம் வழங்கப்பட்டு, உலர் திராட்சைக்குரிய திராட்சை உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது பயிரிடப்படும் மேற்கண்ட இரக திராட்சைகள் நேரடி உணவுப் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முழுவதும் சந்தைப்படுத்தப்படுகின்றன. எனவே, தற்போது தேனி மாவட்டத்தில் உலர் திராட்சை தயாரிக்கும் தொழிற்சாலை அரசு சார்பில் அமைக்கும் கருத்துருக்கள் எதுவும் பரிசீலனையில் இல்லை.

42—

பட்டு முட்டை உற்பத்தி

வினா எண் 59199—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரத்திலுள்ள பட்டு முட்டை வித்தகத்தின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தில் செயல்பட்டு வரும் அரசு கலப்பின வெண்பட்டு வித்தகத்தில், 2017-2018 ஆம் ஆண்டு 91,000 இரட்டை கலப்பின வெண்பட்டு முட்டைத் தொகுதிகள்

2023 ஏப்ரல் 17]

உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு, 2021-2022 ஆம் ஆண்டு 1,61,000 நோயில்லா இரட்டைக் கலப்பின வெண்பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனவே, பெண்ணாகரத்தில் ஒவ்வோராண்டும் பட்டு முட்டைத் தொகுதிகள் தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

43—

பயிற்சி

வினா எண் 61757—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரில் 1 கிராம் கோல்டு கவரிங் நகை தயாரிக்க இளைஞர்களுக்கு பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாநகரில் 1 கிராம் கோல்டு கவரிங் நகை தயாரிக்க இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டம் தற்போது ஏதும் நடைமுறையில் இல்லை. இருப்பினும், ஆர்வமுள்ள இளைஞர்கள், தொழில்முனைவோர்கள் 1 கிராம் கோல்டு கவரிங் நகை தொழில்புரிய முன்வரும்பட்சத்தில், மானியத்துடன்கூடிய கடன் உதவி பெறும்வகையில், வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகிய திட்டங்களின்கீழ், அவர்களது விண்ணப்பங்கள் தகுதியின் அடிப்படையில் நடைமுறையிலுள்ள விதிகளின்படி பரிசீலிக்கப்பட்டு, வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

44—

இயந்திரங்கள்

வினா எண் 58903—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

சென்னை அரசு மைய அச்சகத்திலுள்ள நிப்பிங், யு.வி. கோட்டிங், ரிம்மிங் நிரலாக்க சேடல் தைக்கும் இயந்திரம் ஆகிய இயந்திரங்களின் பணிகள் குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

நிப்பிங் இயந்திரம்

இவ்வியந்திரம் புத்தகம் கட்டும் பிரிவில் பயன்பாட்டில் உள்ளது. மேலும், இயந்திர பிரிவிலிருந்து அச்சடித்து பெறப்படும் பாரங்கள் (Forms) gathering எடுத்த பின்னர் முதுகின் அளவு அதிகமாக இருக்கும் நிலையில் (Spine) அதனை நிப்பிங் இயந்திரம் கொண்டு புத்தகத்தின் வடிவமைப்பிற்கு ஏற்ப அழுத்தம் மேற்கொள்ளும்போது கட்டுமானம் செய்து பெறப்படும் புத்தகங்கள் தரமாகவும், அழகாகவும், நேர்த்தியாகவும் இருக்க நிப்பிங் இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது.

யு.வி.கோட்டிங்

அச்சிட்ட காகிதம் மற்றும் அட்டையில் அச்சு சேதமடையாமல் பாதுகாக்கவும், ஈர்க்கின்ற வகையில் அச்சுத்தோற்றத்தை மேம்படுத்தவும், அச்சிட்டபின் யு.வி.கோட்டிங் செய்யும் பணிக்கு இவ்வியந்திரம் பயன்படுத்தப்படுகிறது. இவ்வச்சகத்தில் செயலாக்கம் செய்யப்படும் அரசு துறைகளுக்கான புத்தகம் மேலட்டைகளில் யு.வி.கோட்டிங் செய்ய இவ்வியந்திரம் பயன்படுத்தப்படுகிறது.

ரிம்மிங் இயந்திரம்

அச்சிட்ட நாட்காட்டியிலிருந்த பணிகளின் தாட்களை மேல் விளிம்பு பகுதியில் தகரத் தகடுகளால் இணைக்கும் பணிக்கு இவ்வியந்திரம் பயன்படுத்தப்படுகிறது. இவ்வலகில் செயலாக்கம் செய்யப்படும் அரசு நாட்காட்டிகளின் தாட்களை அச்சிட்டபின் அதனை இணைக்கும் பணிக்கு பயன்படுத்தப்படுகிறது.

நிரலாக்க சேடல் தைக்கும் இயந்திரம்

இவ்வச்சகத்தில் செயலாக்கம் செய்யப்படும் பல்கலைக்கழக விடைத்தாள்கள், அரசுத் துறைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு போன்ற குறைந்த பக்க எண்ணிக்கை கொண்ட

2023 ஏப்ரல் 17]

புத்தகங்களின் உட்தாட்கள் மற்றும் மேலட்டைகளை ஒன்றாகச் சேர்த்து புத்தக நடுவில் கம்பியினால் பிணைத்து தைத்து புத்தகமாக்கும் பணிக்கு இவ்வியந்திரம் பயன்படுத்தப்படுகிறது.

45—

உபகரணங்கள்

வினா எண் 28692—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உபகரணங்கள் இலவசமாகவும் காலதாமதமின்றியும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

மூன்று சக்கர சைக்கிள், மடக்கு சக்கர நாற்காலி, மூளை முடக்குவாத சக்கர நாற்காலி, எழுத்துக்களை பெரிதாகக் காட்டும் உருப்பெருக்கி, பிரெய்லி கைக் கடிகாரங்கள், கருப்புக் கண்ணாடிகள், செயற்கை அவயங்கள், நவீன செயற்கை அவயங்கள், காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள், ஒளிரும் மடக்குக் குச்சிகள், நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள், ஊன்றுகோல்கள், கால் தாங்கிகள், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி, நடைபயிற்சி உபகரணம், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு சிறப்பு

[*2023 ஏப்ரல் 17*

நாற்காலிகள், திறன் பேசிகள், ஏஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர், எலக்ட்ரானிக் பிரெய்லி ரீடர், Augmentative and Alternative Communication System Device (AAC) with AVAZ Software.

எனவே, ஒவ்வோராண்டும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, ஒவ்வொரு மாவட்டங்களிலும் உதவி உபகரணங்கள் தேவைப்படும் பயனாளிகள் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, அதன் அடிப்படையிலேயே மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு எவ்வித காலதாமதமும் இல்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.

46—

முகாம்

வினா எண் 28706—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் மாதம் ஒருமுறை மாற்றுத் திறனாளிகளுக்கான முகாம் நடத்தவும், தேவையான சிறப்பு உபகரணங்கள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிரதி மாதம் மூன்றாவது புதன்கிழமை அரசு பொது மருத்துவமனை, பொன்னேரியில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை முகாம் 18 வயதிற்கும் குறைவான மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்குவதற்கான வயது தளர்வு முகாம் நடத்தப்படுவதுடன், இதர உபகரணங்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கிடவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 17]

47—

மூன்று சக்கர வாகனம்

வினா எண் 28707—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி, மேலூர் மற்றும் நிலக்கோட்டை தொகுதிகளிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் மற்றும் மின்சார வாகனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி, மேலூர் மற்றும் நிலக்கோட்டை ஆகிய தொகுதிகள் அடங்கிய தருமபுரி, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்மூலம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் சிறப்பு முகாம்கள்மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் காத்திருப்போர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையிலான மண்டல போக்குவரத்து அலுவலர், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், எலும்பு முறிவு பிரிவு மருத்துவர் ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழு மூலமாக நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, தகுதியான மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் மற்றும் மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் நிதியாண்டின் ஒதுக்கீட்டிலிருந்து தருமபுரி தொகுதிக்குட்பட்ட பகுதியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 13 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 32 நபர்களுக்கு மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டுள்ளன. 2021-2023 ஆம் நிதியாண்டிற்கு காத்திருப்போர் பட்டியலிலுள்ள நிலக்கோட்டை தொகுதிக்குட்பட்ட இரண்டு நபர்களுக்கு

[2023 ஏப்ரல் 17

இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரும் மற்றும் இரண்டு நபர்களுக்கு மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலியும் வழங்கப்படும்.

48—

நலத் திட்ட உதவிகள்

வினா எண் 28720—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நீலகிரி மாவட்டத்தில் கிராமங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் இடங்களுக்கே சென்று அனைத்து சலுகைகள் மற்றும் பயன்களை வழங்கவும், நடக்க முடியாத மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி (*Wheel Chair*) வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனத்தில் மாற்றுத் திறனாளிகள் வசிக்கும் இடத்திற்குச் சென்று விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தகுதியான மாற்றுத் திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் நடைபெறும் சிறப்பு முகாம்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திலும் கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன:

உதவி உபகரணங்கள்	வழங்கப்பட்ட எண்ணிக்கை
சக்கர நாற்காலி	2
மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி	5

2023 ஏப்ரல் 17]

உதவி உபகரணங்கள்	வழங்கப்பட்ட எண்ணிக்கை
மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள்	54
திறன்பேசிகள்	40
காதொலிக் கருவிகள்	45
எல்போ ஊன்றுகோல்கள்	10
ஆக்சிலரி ஊன்றுகோல்கள்	5
இனணப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்	2

அவர்களின் இடங்களுக்குச் சென்று வழங்குவது குறித்து அரசு கனிவுடன் பரிசீலனை செய்ய உள்ளது.

49—

தொழிற்பயிற்சி

வினா எண் 28725—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காது கேளாதோர் மற்றும் வாய் பேசாத மாற்றுத் திறனாளிகளுக்காக இரண்டாண்டு பொருத்துநர் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புப் பிரிவு கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது அப்பிரிவில் 20 மாற்றுத் திறனாளிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

[*2023 ஏப்ரல் 17*

ஒவ்வோராண்டும் பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச தங்கும் விடுதி வசதியுடன் பூவிருந்தவல்லியில் உள்ள பார்வை குறைபாடுடையர் அரசு சிறப்புப் பள்ளியில் புத்தக கட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழக வட்டார அலுவலகத்தின்மூலம் கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில் அவர்களுக்கு ஒரு மாத பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

50—

மூன்று சக்கர வாகனம்

வினா எண் 49925—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கறம்பக்குடி, தீத்தான்விடுதி கா.சத்திரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், 2011-2012 ஆம் நிதியாண்டு முதல் 2021-2022 ஆம் நிதியாண்டு வரை 16,555 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கந்தர்வகோட்டை தொகுதியின் கறம்பக்குடி, தீத்தான்விடுதி, கா.சத்திரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மேற்சொன்ன நிதியாண்டுகளில் இதுவரை மொத்தம் 380 பயனாளிகளுக்கு இணைப்புச்

2023 ஏப்ரல் 17]

சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதுகுறித்து விண்ணப்பிக்கும் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் இவ்வாகனம் வழங்கப்பட்டு வருகிறது.

51—

காது கேட்கும் கருவிகள்

வினா எண் 59102—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் செவித்திறன் இழந்தோர்க்கு காது கேட்கும் கருவிகள் விரைவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய மூன்று நிதியாண்டுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைமூலம் செவித்திறன் குறையுடையோருக்கு அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் மொத்தம் 304 எண்ணிக்கையில் வழங்கப்பட்டுள்ளதுடன் உதவி உபகரணம் கோரி விண்ணப்பிக்கும் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

52—

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

வினா எண் 59182—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி அவரவர் திறனுக்கேற்ப தொழில் மற்றும் விற்பனை வாய்ப்புகளை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் (NHFDC) *மூலம் மாற்றுத் திறனாளிகள் அதிக எண்ணிக்கையில் பொருளாதார வளர்ச்சி எய்தும் வகையில் சுயதொழில் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க மாநில அரசு முனைப்புடன் செயல்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் அருகிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று, பொருளாதார ரீதியாக தங்களை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக, மாநில அரசு, கூட்டுறவு வங்கிகளின்மூலம் தவணை செலுத்தும் நபர்களுக்கு வட்டியில்லாக் கடனை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வட்டித் தொகை முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் கூடுதலாக வீடு கட்டுவதற்கு வட்டியில்லாக் கடன் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் சுயதொழில் புரிவதற்கும் வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது.*

53—

நிதி உதவி

வினா எண் 62308—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதியில் உள்ள ஆதரவற்றோர் முதியோர் இல்லத்திற்கு நிதி ஒதுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மேற்படி சட்டமன்ற உறுப்பினர் எழுப்பியுள்ள உடுக்குறியிடாத வினாவிற்கான பதிலறிக்கை சமூக நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது:-

2023 ஏப்ரல் 17]

தமிழ்நாட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சமூக நல இயக்குநரகத்தின்கீழ் மாநில அரசின் மானியம் பெறும் முதியார் இல்லங்கள், முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் மற்றும் ஒன்றிய அரசின் மானியம்பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (IPSrC) போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. சேலம் மாவட்டத்தில் அரசால் பதிவு செய்யப்பட்டு மானியம் பெற்று வரும் அன்பகம் முதியோர் இல்லம், 4-106-1 திருச்சி மெயின் ரோடு, மாங்சினி, ஆத்தூர், சேலம் மற்றும் ஊன்றுகோல் முதியோர் இல்லம், 7-84 இளங்கரட்டு தெரு, நிலவரப்பட்டி, சேலம் என்ற முகவரியில் இயங்கிவரும் தொண்டு நிறுவனங்கள்மூலம் ஒன்றிய அரசின் மானியம்பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (IPSrC) செயல்பட்டு வருகிறது.

2. லிட்டில் பேர்ஸ் அறக்கட்டளை, 530/178, அன்னபுரம் 5-வது தெரு சேலம் என்ற முகவரியில் அரசால் பதிவு செய்யப்பட்ட தனியார் கட்டணம் பெறும் முதியோர் இல்லம் இயங்கிவருகிறது.

3. லைப்டிரஸ்ட் முதியோர் இல்லம், 1/203-1, 2 மாளங்காடு, உத்தமசோழபுரம், சேலம் என்ற முகவரியில் அரசால் பதிவு செய்யப்பட்ட தனியார் கட்டணம் இல்லாத முதியோர் இல்லம் இயங்கிவருகிறது.

4. மேட்டூர் தொகுதியில் அன்னை தெரெசா கருணை இல்லம் மற்றும் சுடரொளி சோஷியல் சர்வீஸஸ் டிரஸ்ட் ஆகிய முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளதென்றும், அதில் அன்னை தெரெசா கருணை இல்லம் பதிவு செய்ய சமர்ப்பித்துள்ள கருத்துருவில் கட்டட உறுதிச் சான்று மற்றும் முந்தைய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை போன்ற சான்றுகள் இல்லாததால் அதனை சமர்ப்பிக்க கோரியுள்ளதாகவும், சுடரொளி சோஷியல் சர்வீஸஸ் டிரஸ்ட் முதியோர் இல்லம் பதிவு இல்லாமல் செயல்பட்டு வருவதால் அதனை பதிவு செய்ய அனைத்து ஆவணங்களுடன் கருத்துரு சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது.

மேலும், மேட்டூர் தொகுதியில் ஆதரவற்றோர் முதியோர் இல்லம் அல்லது முதியோர் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய

ஒருங்கிணைந்த வளாகம் அமைக்க பதிவு பெற்றபின் இத்தன்னார்வ நிறுவனங்களோ அல்லது வேறு ஏதேனும் தொண்டு நிறுவனங்களோ முன்வருமாயின் அவர்களிடமிருந்து முழுமையான கருத்துரு பெறப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் மானியம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

54—

கால்நடை மருத்துவமனை சீரமைப்பு

வினா எண் 9778—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் பழுதடைந்துள்ள கால்நடை மருத்துவமனையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், சோழிங்கநல்லூர் கால்நடை மருந்தக கட்டுப்பாட்டில் சித்தாலப்பாக்கம் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. பழுதடைந்த கட்டடத்தில் செயல்பட்டு வந்த இந்த கால்நடை கிளை நிலையமானது, தற்போது ஊராட்சியால் ஒதுக்கப்பட்ட வேறு கட்டடத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

55—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 15245—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) பெரம்பலூர் தொகுதி, எசனை கிராமத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த, ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வரும் பட்சத்திலும், சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 40-க்குமேல் வரும் பட்சத்திலும், அதனை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த இயலும். பெரம்பலூர் தொகுதி, எசனை கிராமத்தில் நாளொன்றுக்கு சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் அதிகமாக உள்ளதால் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் உள்ளன.

56—

மீன் வளர்ப்பு

வினா எண் 21801—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகள் இடையே மீன் வளர்ப்பை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிரதான் மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம், மாநில நிதி மற்றும்

[2023 ஏப்ரல் 17

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் ஆகிய திட்டங்களின்மூலம் புதிய மீன்வளர்ப்பு குளம் அமைத்தல், மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்தல், மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல், உயிர்கூழ்ம முறையில் மீன்வளர்ப்பு செய்தல், நீரினை மறுசுழற்சி செய்து மீன்வளர்ப்பு செய்தல், பண்ணை குட்டைகள் அமைத்து மீன்வளர்த்தல் மற்றும் மீன்வளர்ப்பிற்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட மீன்வளர்ப்பு விவசாயிகளுக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

57—

மீன் தொழிற்சாலை

வினா எண் 28262—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பழவேற்காட்டில் மீன்மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவு தொழிற்சாலையும், மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காட்டில் இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பழவேற்காட்டில் மீன்மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவு தொழிற்சாலைகள் ஏற்கெனவே கன்னிகைப்பேர், கும்மிடிப்பூண்டி தொழிற்பேட்டை ஆகிய இரு இடங்களில் அமைந்துள்ளதால் மீண்டும் அதற்கான அவசியம் எழவில்லை. மேலும், பழவேற்காடு மீன் இறங்குதளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்து தினசரி பிடிக்கப்படும் மீன்கள்,இறால்கள் மற்றும் நண்டுகள் தரமான முறையில் உள்ளூரில் விற்பனை செய்யப்படுவதுடன், பொன்னேரி,

2023 ஏப்ரல் 17]

திருவள்ளூர், ஊத்துக்கோட்டை, மீஞ்சூர் ஆகிய இடங்களில் சில்லறை வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன, மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்து சென்னை மாநகராட்சியில் விற்பனை செய்யப்படுவதால், பழவேற்காட்டு பகுதியில் தேக்க நிலை எழாத நிலையில், அங்கு இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையும் அமைக்க அவசியம் எழவில்லை.

58—

மீன் பிடிக்க உரிமம்

வினா எண் 28638—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் மற்றும் நாகமரை பகுதியில் ஆற்றில் மீன்பிடிக்கும் அனைவருக்கும் உரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் மற்றும் நாகமரை பகுதியில் மேட்டூர் அணையின் கரையோரத்தில் அமைந்துள்ளது. மேட்டூர் அணையிலுள்ள மீன்களை பிடிப்பதற்கு சேலம் மற்றும் தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த மீனவர்களுக்கு அரசாணை எண் 132, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை (மீன் 3), நாள் 9-8-2005-ன்படி மேட்டூர் அணை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர்மூலம் மீன்பிடி உரிமம் வழங்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் மீன்பிடி உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மீன்பிடி உரிமங்கள் அறிவியல், தொழில்நுட்ப ரீதியாக மேட்டூர் அணை மற்றும் காவிரியாற்றின் மொத்த நீர்பிடிப்பு பரப்பளவை கணக்கில் கொண்டு மீன்பிடி உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் மேற்படி ஒகேனக்கல் மற்றும்

நாகமரை பகுதியை சேர்ந்த மீன்பிடி தொழில் செய்பவர்களுக்கும் மீன்பிடி உரிமங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

59—

மீன் பிடிக்க உரிமம்

வினா எண் 28641—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, குருக்கலையனூர், கூத்தப்பாடி ஊராட்சி, ஊட்டமலை ஆகிய பகுதிகளில் மீன்பிடிப்பவர்களுக்கும் மீன்பிடி உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரை ஊராட்சி, குருக்கலையனூர், வத்தப்பாடி ஊராட்சி, ஊட்டமலை மேட்டூர் அணையின் கரையோரத்தில் அமைந்துள்ளது. மேட்டூர் அணையிலுள்ள மீன்களை பிடிப்பதற்கு சேலம் மற்றும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு அரசாணை எண் 132, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை (மீன் 3), நாள் 9-8-2005-ன்படி மேட்டூர் அணை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர்மூலம் மீன்பிடி உரிமம் வழங்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் மீன்பிடி உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மீன்பிடி உரிமங்கள் அறிவியல், தொழில்நுட்ப ரீதியாக மேட்டூர் அணை மற்றும் காவிரியாற்றின் மொத்த நீர்பிடிப்பு பரப்பளவை கணக்கில் கொண்டு வழங்கப்பட்டு வருகிறது. இதில் மேற்படி நாகமரை ஊராட்சி, குருக்கலையனூர், கூத்தப்பாடி ஊராட்சி, ஊட்டமலை பகுதியை சேர்ந்த மீன்பிடி தொழில் செய்பவர்களுக்கும் மீன்பிடி உரிமங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 17]

60—

மீன்கள் வளர்க்க ஆலோசனை

வினா எண் 28649—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மீன்கள் வளர்க்க மானியமும் ஆலோசனையும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதியில் உள்ள மீன்வளர்ப்பு விவசாயிகளிடையே மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட ஏதுவாக பிரதான் மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன்கீழ் உயிர்கூழ்ம முறையில் மீன்வளர்ப்பு செய்திட மானியம், அலங்கார மீன்வளர்ப்பு அமைத்திட மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 2022-2023 ஆம் ஆண்டில் மாநில நிதியின்கீழ் பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு செய்திட உள்ளீட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. பிரதான் மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மீன்வளர்ப்பு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் மீன்வளர்ப்பு தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

61—

மீன் உற்பத்தி

வினா எண் 28661—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உதகமண்டலம் தொகுதி, இத்தலார் ஊராட்சி அவலாஞ்சி அணையில் ட்ரவுட் வகை மீன்களை அதிக அளவில்

பெருக்கம் செய்யவும், நீலகிரி மாவட்ட அணைகளில் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அவலாஞ்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறைக்கு சொந்தமான அரசு ட்ரவுட், மீன்பண்ணை செயல்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் அவலாஞ்சி அரசு ட்ரவுட் மீன்பண்ணையில் மீன்குஞ்சு, உற்பத்தி செய்யப்பட்டு ட்ரவுட் விரலிகளாக வளர்த்தெடுக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் நீலகிரி மாவட்ட உயர்மட்ட நீரோடைகளில் இருப்பு செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு பெரு மழை மற்றும் வெள்ளம் காரணமாக அவலாஞ்சி ட்ரவுட் மீன்பண்ணை சேதமடைந்ததைத் தொடர்ந்து தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் 2020-2021-ன்கீழ் அவலாஞ்சி மீன்பண்ணை புனரமைப்பு பணிகள் முடிவுற்று ட்ரவுட் இனப்பெருக்க காலமான நவம்பர் முதல் பிப்ரவரி மாதங்களில் மீன்குஞ்சு உற்பத்தி செய்து நீலகிரி மாவட்டத்திலுள்ள உயர்மட்ட நீரோடைகளில் இருப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

62—

பன்றிகள்

வினா எண் 38286—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, வார்டு 27-ல் மாதவரம் பால்பண்ணை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக கட்டடத்தில் வளர்க்கப்படும் பன்றிகளை வேறுயிடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

இந்திய கால்நடை மருத்துவ கவுன்சிலின் வழிகாட்டுதலின்படி கால்நடை மருத்துவ மாணவர்கள் பயில்வதற்கும் மற்றும் பயிற்சி பெறுவதற்கும் பன்றிகளை வளர்க்க வேண்டிய தேவை உள்ளது. பிரதான சாலை மணலி-மாத்தூர் சாலையின் அருகே உள்ள பன்றி கொட்டகையை பண்ணையின் உள்ளே மாற்ற உத்தேசிக்கப்பட்டு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கால்நடைப் பண்ணையின் மேற்பார்வையில் செயல்பட்டு வரும் உரிமைதாரர் பிரிவுகளில் உள்ள மாட்டுக் கொட்டகைகளை மெட்ரோ ரயில் நிர்வாகம், மெட்ரோ பணிகளுக்காக கையகப்படுத்திக் கொண்டது. அக்கட்டடங்களுக்கு ஈடு செய்யும் வகையில் புதிதாக கொட்டகைகள் கட்டுவதற்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதாக மெட்ரோ நிர்வாகம் தெரிவித்திருக்கிறது. மேலும், மெட்ரோ நிர்வாகத்திடம் இருந்து இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டு பன்றிகளுக்குத் தேவையான புதிய கொட்டகையை பண்ணையின் உட்புறமாக அமைத்து பன்றிகள் இடமாற்றம் செய்து வளர்க்கப்படும்.

63—

மருத்துவ வசதிகள்

வினா எண் 62339—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மீனவர்களுக்கு, மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் காப்பீடு, மருத்துவ வசதிகள் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கென்று அரசு ஆணை எண் 58, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்

[2023 ஏப்ரல் 17

நலத் துறை (மீன் 3) நாள் 27-6-2022-ல் பிரதம மந்திரி மத்சய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின்கீழ் பயனடையும் வகையில் விபத்து காப்புறுதி திட்டத்தினை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மூலமாக 2022-2023 ஆம் ஆண்டு செயல்படுத்திட ரூ.1,54,72,718/-ற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் மூலமாக உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், விபத்தின் காரணமாக அல்லாமல் மீன்பிடிக்கையில் அல்லது அதற்குப்பின் உடனடியாக இறத்தல், மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் இயற்கை மரணம் உள்ளிட்ட பல்வேறு இனங்களுக்கு நிவாரணங்கள் ஏற்கெனவே அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழக அரசு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மருத்துவ காப்பீடு மீனவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மீனவ கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மருத்துவ காப்பீட்டு வசதிகள் அளிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

64—

தேனீ வளர்ப்பு

வினா எண் 46627—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் தேனீ வளர்ப்பில் புதிய முறைகளை வழங்கவும், தேன் உற்பத்திக்கும், தேன் பயன்பாட்டிற்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கவும், பழச்சாறு கொடுத்து தேனீக்களை வளர்க்கவும், தேனை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக்கவும் வீடுகளில் தேன்பெட்டிகள்மூலம் தேனீ வளர்ப்பதை ஊக்கப்படுத்தவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேனில் பெரும் பகுதியை கதர் வாரியம் மார்த்தாண்டம் தேன் வளர்ப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம்மூலம் கொள்முதல் செய்து பதப்படுத்தி விற்பனை செய்து வருகிறது.

2023 ஏப்ரல் 17]

மேலும், கதர் வாரியம் மதிப்பு கூட்டப்பட்ட நெல்லித்தேன், பேரிச்சைத்தேன், வால்நட்தேன், அத்திதேன், உலர்பழத்தேன் போன்ற தேன் வகைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் 23-3-2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு கதர் அங்காடிகள்மூலம் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறையின்மூலம் தொடர் பயிற்சி, தேனீ சம்பந்தமாக ஆராய்ச்சி, தேனீக்கள் குறித்த கையேடுகள் வெளியிடுவது போன்ற செயல்பாடுகளால், தேனீ வளர்ப்பது ஊக்கப்படுத்தப்பட்டு வருவதால் கதர் வாரியம்மூலம் தேனீ வளர்ப்பில் புதிய முறைகளை வழங்குவதற்கான அவசியம் எழவில்லை.

65—

படகு இல்லம்

வினா எண் 7873—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை படகு இல்லத்தை சீரமைத்து, சுற்றுலா பயன்பாட்டுக்கு கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள ஆனைமலை மலைத்தொடரில், கடல் மட்டத்திலிருந்து 3,500 அடி உயரத்தில் வால்பாறை மலைத்தொடர் அமைந்துள்ளது. பொள்ளாச்சிக்கு 65 கி.மீ. தூரத்திலும், கோயம்புத்தூரிலிருந்து 102 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. இம்மலைத்தொடர் தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த சுற்றுச் சூழலுடன் பசுமை போர்த்திய மலைகள் மற்றும் அழகிய காடுகளுடன் மிகுந்த செழிப்பாக உள்ளது. தென்னிந்தியாவின் சிரபுஞ்சி எனப்படும் சிற்றூரான சின்னகல்லார் இங்கு உள்ளது. இது சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவரும் சுற்றுலாத் தலமாக உள்ளது.

[2023 ஏப்ரல் 17

தற்போது உள்ள படகு இல்லத்தினை சீரமைத்து தண்ணீர் இருப்பினை சரி செய்வதற்கு திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பணிகள் முடிந்தவுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்குவதாக வால்பாறை நகராட்சி ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*இருப்பினும், வால்பாறை படகு இல்லத்திற்கு அதிகப்படியான சுற்றுலாப் பயணிகள் வரும் பட்சத்தில் சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம் (*Tourism Destination Development Scheme*) என்ற அறிவிப்பின் வாயிலாக வால்பாறை படகு இல்லத்தை சீரமைத்து சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர கருத்துரு மற்றும் மதிப்பீடு மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்பட்டு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி சுற்றலாத் துறையின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

66—

நூற்பாலைகள்

வினா எண் 46582—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

*சேலம் கூட்டுறவு நூற்பாலையானது 49,960 கதிர்களுடன் 30-6-1964 அன்று 31.68 ஏக்கர் பரப்பளவில் சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டையில் துவங்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டதால் நூற்பாலையானது 31-3-2004 அன்று செயலிழந்ததைத் தொடர்ந்து, ஆலையானது 7-11-2012 அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 பிரிவு 137(2)(*b*)-ன்கீழ் தற்போது கலைக்கப்பட்டுவிட்டது.*

2023 ஏப்ரல் 17]

இந்நூற்பாலையில் பணியாற்றிய 62 பணியாளர்கள் மற்றும் 877 தொழிலாளர்கள் தன்விருப்ப ஓய்வில் சென்றுள்ளனர்.

மேலும் ஆலையின் சொத்து மதிப்பு ரூ.9.62 கோடியாகவும், கடன் பொறுப்புகள் ரூ.132.81 கோடியாகவும் உள்ள நிலையில் ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், கலைக்கப்பட்ட சேலம் கூட்டுறவு நூற்பாலைக்கு அருகில் உள்ள ஊத்தங்கரையில், கிருஷ்ணகிரி மாவட்ட நூற்பாலை இயங்கி வருகிறது. இவ்வாலை இப்பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சிட்டா நூல் தேவையினை நியாயமான விலையில் தடையின்றி தொடர்ந்து பூர்த்தி செய்து வருவதால் கலைக்கப்பட்ட சேலம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை புனரமைக்கவோ அல்லது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளவோ செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

விலை நிர்ணயம்

வினா எண் 46625—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விசைத்தறியால் உற்பத்தி செய்யப்படும் காடா துணிகளுக்கு விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசின் சீரிய திட்டமான சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களால் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் காடா துணி இரகங்களான கேஸ்மெண்ட் இரகங்களுக்கு அரசால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

விசைத்தறிகளில் நெய்யப்படும் காடா துணிகளுக்கு 20S, 30S, 40S காட்டன் நூல் இரகங்களும், பாலி காட்டன் காடா துணிகளுக்கு

[2023 ஏப்ரல் 17

ஊடையாக 80/34D Polyester இரகமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட நூல் இரகங்களின்மூலம் உற்பத்தி செய்யப்படும் துணிகளின் விலையும் குறைந்துள்ளது. மேலும், காடா துணிகள் தேவையினைப் பொறுத்து நூல் விலையானது ஏற்ற இறக்கத்துடன் நிலையற்ற நிலையில் அவ்வப்போது சந்தை நிலவரத்தைப் பொறுத்து மாறுபடுகிறது. நூல் விலையானது ஒவ்வொரு நூற்பாலையின் தரத்திற்கு ஏற்ப விலையில் வித்தியாசம் இருக்கும். மேலும், பருத்தி விளைச்சலின் அடிப்படையிலும், அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையின் அடிப்படையிலும் நூல் விலையானது சந்தையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

தனியார் விசைத்தறியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் காடா இரகங்களுக்கு அரசால் விலை நிர்ணயம் செய்யும் நடைமுறை இல்லை.

68—

கோன் சாயமிடும் பிரிவு

வினா எண் 58896—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் கோன் சாயமிடும் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக நிதியுதவியுடன் கோன் சாயமிடும் பிரிவினை அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அரசு திட்டங்களுக்கான சாயமிடாத கோன்களை துணிநூல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்து

2023 ஏப்ரல் 17]

மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து சொற்ப அளவிலான ஆர்டர்களை தவிர்த்து வேறு எந்த ஆர்டர்களும் ஆலைக்கு இல்லாத காரணத்தால் மேற்படி கோன் சாயமிடும் பிரிவினை இவ்வாலையில் நிறுவும்பட்சத்தில் இதனை வருடம் முழுவதும் முழு உற்பத்தி திறனுடன் இயக்க இயலாது. ஆனால் இயந்திர முதலீடு, பராமரிப்பு செலவினம் இவ்வியந்திரங்களை இயக்குவதற்கான பிரத்யேக செலவினங்களை ஆலை மேற்கொள்ளவேண்டி இருக்கும். இதன்காரணமாக தற்போது இலாபத்தில் இயங்கிவரும் இந்த ஆலையானது நட்டத்தினை சந்திக்க வாய்ப்பு உள்ளது. எனவே, ஆலையின் நலன் கருதி இத்திட்டத்தினை கைவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

69—

நூல் கொள்முதல்

வினா எண் 58902—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் வழங்கவும், அவர்களுக்கு தடையின்றி நூல் வழங்க ஏதுவாக, துணிநூல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக தனியார் நூற்பாலைகளிலிருந்தும் ஒன்றிய அரசின் மூலப்பொருட்கள் விநியோக திட்டத்தின்கீழ் 15% மூலப்பொருள் மானியம், 2% அல்லது ரூ.15,000/- இதில் எது குறைவோ அத்தொகைக்கு கிட்டங்கி மானியம் மற்றும் 2.5% போக்குவரத்து மானியம் தேசிய

[*2023 ஏப்ரல் 17*

கைத்தறி வளர்ச்சி கழகத்தின் மூலமாக வழங்கப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் நூல் கொள்முதல் செய்யப்படுகிறது.

கைத்தறி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திக்குத் தேவையான பட்டு நூல்கள் பட்டு வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையத்திலிருந்து தேசிய கைத்தறி வளர்ச்சி கழகம் வழியாக, 15% மூலப்பொருள் மானியம் 2% அல்லது ரூபாய் 15,000/- இதில் எது குறைவோ அத்தொகைக்கு கிட்டங்கி மானியம் மற்றும் 1% போக்குவரத்து மானியத்துடன் கொள்முதல் செய்யப்படுகிறது.

மேலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கச்சா பட்டு, ரூபியான், HF ஜரிகை, சணல் நூல் போன்ற மூலப்பொருட்களைத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்வதற்கு ஏதுவாக சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் மதுரை சரக துணை/உதவி இயக்குநர்களின் தலைமையில் நான்கு மண்டல அளவிலான மூலப்பொருட்கள் விலை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டு மாதந்தோறும் கூட்டம் நடத்தப்பட்டு சங்கங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்யும் மூலப்பொருட்களின் விலையினை நெறிமுறைப்படுத்தும் நோக்குடன் ஆணையரக செயல்முறைகள்மூலம் மூலப்பொருட்கள் விலை நெறிமுறைக் குழு அமைக்கப்பட்டு, மாதந்திர கூட்டம் நடத்தப்பட்டு, சங்கங்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி நடவடிக்கைகளின்மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

70—

கொரோனா வழிகாட்டு நெறிமுறை

வினா எண் 1843—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

கொரோனா நோய் தொற்றால் இறப்போருக்கு மாற்று நோய் இறப்புச் சான்று வழங்குவதால் உடல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்வதால் நோய் பரவல் ஏற்படுகிறது. இதனைத் தடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கொரோனா நோய் தொற்றால் இறப்போருக்கு மாற்று நோய் இறப்புச் சான்று வழங்கப்படுவதில்லை. மேலும், கொரேனா நோய்த்தொற்றால் இறப்போருக்கு அரசு தகுந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி இறந்தவர்களின் உடல்களை கிருமி நாசினிகள் கொண்டு உரிய முறையில் கட்டப்பட்டு சம்பந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மேற்பார்வையில் தகுந்த முறையில் அடக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் நோய் தொற்று பரவும் அபாயம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

71—

கொரோனா தடுப்பூசி மருந்து

வினா எண் 1845—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குன்னூர் பாஸ்டியர் நிறுவனத்தில் கொரோனா தடுப்பூசி மருந்து உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

குன்னூர் பாஸ்டியர் நிறுவனம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தன்னாட்சி நிறுவனமாகும். எனவே, இதுகுறித்து ஒன்றிய அரசு முடிவு செய்யும்.

[2023 ஏப்ரல் 17

72—

கொரோனா சான்றிதழ்

வினா எண் 3861—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்த அனைவருக்கும் கொரோனா சான்றிதழ் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கொரோனாவில் பாதிக்கப்பட்டு இறந்த அனைவருக்கும் உரிய இறப்பு அறிக்கை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இறப்பு அறிக்கையில் இறப்புக்கான காரணத்தில் ஏதேனும் புகார்கள் இருந்தால் அதனை தீர்க்க மாவட்ட அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டு (District Death Reconciliation Committee) அதன்மூலம் இறப்பு அறிக்கை சரிபார்க்கப்பட்டு வழங்கப்படுகிறது.

(ஆ) கொரோனாவில் பாதிக்கப்பட்டு இறந்த அனைவருக்கும் உரிய இறப்பு அறிக்கை வழங்கப்பட்டு வருகிறது.

73—

தீ நுண்கிருமி பரிசோதனைக் கூடம்

வினா எண் 7275—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டெல்டா வைரஸ் போன்ற தீ நுண்கிருமிகளை கண்டறிய தமிழகத்தின் முக்கிய நகரங்களில் பரிசோதனைக் கூடங்களை உருவாக்கும் செயல்திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோவிட் நோய் தொற்றினை உருவாக்கும் கொரோனா வைரஸ் பல்வேறு மரபணு உருமாற்றங்களை அடைந்து ஆல்பா,

2023 ஏப்ரல் 17]

டெல்டா மற்றும் ஒமிக்ரான் போன்ற உருமாறிய வைரஸ்களாக நோய்த் தொற்றினை உருவாக்குகிறது.

*வைரஸ்களின் மரபணு உருமாற்றங்களைக் கண்டறிய மத்திய அரசின்கீழ் பெங்களூரு, ஹைதாபாத் மற்றும் புனேவில் இயங்கும் ஆய்வக நிறுவனங்களுக்கு கொரோனா மாதிரிகள் அனுப்பி மரபணு பகுப்பாய்வு செய்து வந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பொது சுகாதாரத் துறையில் இயங்கும் மாநில பொது சுகாதார ஆய்வகத்தில் மரபணு பகுப்பாய்வகம் (*Whole Genomic Sequencing Lab*) உருவாக்கப்பட்டு, மத்திய அரசின்* INSACOG *அமைப்பில் அங்கீகாரமும் பெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 ஆம் வருடம் செப்டம்பர் 14 ஆம் தேதி அன்று துவக்கப்பட்டு, கொரோனா வைரஸ்களின் மரபணு உருமாற்றங்கள் தொடர்ச்சியாக தமிழகத்தில் வருகின்றது.*

தமிழ்நாட்டில் சுமார் 78 அரசு RT-PCR *ஆய்வகங்கள் மத்திய அரசின்* ICMR *நிறுவனத்தில் அங்கீகாரம் பெற்று கொரோனா பரிசோதனைகள் அனைத்து மாவட்டங்களிலும் கண்டறிய பரிசோதனை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ்களின் மரபணு உருமாற்றங்களைக் கண்டறிய மாநில அளவில் பொது சுகாதார ஆய்வகத்தில் அதற்குரிய வசதிகளை ஏற்படுத்தப்பட்டு, தொடர்ச்சியாக மரபணு உருமாற்றம் கண்டறியப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து மாவட்டங்களிலும் இருந்து கொரோனா மாதிரிகள் உடனுக்குடன் பெறப்பட்டு மரபணு உருமாற்றம் கண்டறியப்பட்டு வருகின்றது.*

ஆகவே, தற்பொழுதுள்ள சூழ்நிலையில் தமிழ்நாட்டில் இயங்கும் மரபணு பகுப்பாய்வு ஆய்வகம், நோய் பரவல் மற்றும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ளது.

எனவே, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பரிசோதனைக் கூடங்களை உருவாக்கும் செயல்திட்டம் எதுவும் தற்போது இல்லை.

74—

நல்வாழ்வு மையம்

வினா எண் 7906—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கொரோனாவிற்கு பிந்தைய நல்வாழ்வு மையத்தை (*Post Covid Care Clinic*) மாவட்டம் தோறும் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்வி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர், செவிலியர் மற்றும் இதர பணியாளர்களின்மூலம் கொரோனா நோயாளிகளுக்கு அனைத்து காலகட்டத்திலும் சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அரசு மருத்துவமனைகளிலேயே கொரோனா தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதால், இதற்கென பிரத்யேகமாக பிந்தைய நல்வாழ்வு மையத்தை (*Post Covid Care Clinic*) மாவட்டம்தோறும் அமைக்க அவசியம் எழவில்லை.*

75—

VHN **சுகாதார கட்டடம்**

வினா எண் 18122—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன ஊராட்சிக்குட்பட்ட நாகனம்பட்டி கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்ட VHN *சுகாதார கட்டடம், பணியாளர் நியமித்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் சட்டமன்ற தொகுதியில் வட்டுவன ஊராட்சியில் நாகனம்பட்டி கிராமம் உள்ளது. நாகனம்பட்டி கிராமம் தாசம்பட்டி துணை சுகாதார

2023 ஏப்ரல் 17]

நிலையத்தையும், நாகதாசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தையும் சார்ந்தது. நாகனம்பட்டி கிராமத்தில் உள்ள கட்டடம் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மக்களுக்கு சுகாதார சேவை வழங்குவதற்காக கட்டடப்பட்ட கட்டடமாகும். இந்தக் கட்டடம் பொது சுகாதாரத் துறை வசம் இல்லை. ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கிராம சுகாதார செவிலியர்மூலம் தாசம்பட்டி துணை சுகாதார நிலையத்தில் தாய்சேய் நல சேவைகள், சிறு நோய் சிகிச்சை உட்பட பிற சேவைகள் நல்ல நிலையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த கிராம சுகாதார செவிலியர் வாரம் ஒருநாள் பயண நாட்குறிப்பின்படி நாகனம்பட்டி கிராமத்திற்குச் சென்று, நாகம்பட்டி கிராம மக்களுக்கு மருத்துவ சேவைகள் மற்றும் தடுப்பூசி சேவைகளை வழங்கி வருகிறார்.

76—

சுற்றுச் சுவர்

வினா எண் 23391—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி, தொட்டப்பநாயக்கனூர் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் செல்லம்பட்டி/பிரதான/ மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

செல்லம்பட்டி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் வடக்குப் பகுதியில் மொத்தம் 518 மீட்டர் நீளத்தில் 125.8 மீட்டர் அளவு சுற்றுச்சுவர் உள்ளது மற்றும் மீதமுள்ள வடக்குப் பகுதி, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு பக்கங்களில் சுற்றுச்சுவர்

இல்லை. இனிவருங்காலத்தில் பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் செல்லம்பட்டி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், தொட்டப்பநாயக்கனூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

தொட்டப்பநாயக்கனூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் வடக்குப் பகுதியில் 150 மீட்டர் மற்றும் தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்களில் சுற்றுச்சுவர் இல்லை. இனிவருங்காலங்களில் பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீட்டு பட்டியல் பெறப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில், தொட்டப்பநாயக்கனூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

77—

கூடுதல் கட்டடம்

வினா எண் 23403 திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துப்பட்டு ஒன்றியம், கொம்மனந்தல் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் கொம்மனந்தல் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கொம்மனந்தல் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை (நிலை) எண் 153, மக்கள் நல்வாழ்வு மற்றும்

2023 ஏப்ரல் 17]

குடும்ப நலத் துறை, நாள் 25-4-2018-ன்படி 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டது. தேசிய ஊரக குழும நிதி உதவியின்கீழ் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

கொம்மனந்தல் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட அவசியம் தற்போது எழவில்லை.

78—

புதிய கட்டடம்

வினா எண் 23405—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தொகுதியில் கீழ்க்காணும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. காளி பிரதான சுகாதார நிலையம்.

2. மணல்மேடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்.

3. வில்லியநல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்.

4. இளந்தோப்பு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்.

5. முருகமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்.

6. மயிலாடுதுறை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்.

காளி பிரதான சுகாதார நிலையம், மணல்மேடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், வில்லியநல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், இளந்தோப்பு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், முருகமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

மயிலாடுதுறை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் முற்றிலும் பழுதடைந்து பொதுப் பணித் துறையின்மூலம் தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்டு, தேசிய நலக் குழுமத்தின்மூலம் ரூ.80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

79—

PCR கொரோனா பரிசோதனை

வினா எண் 23508—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஒவ்வொரு பள்ளியிலும் PCR கொரோனா தொற்று பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு கொரோனா நோய்த் தொற்று ஏற்படாவண்ணம் உரிய கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முகக்கவசம் அணிய அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள்மூலம் பள்ளிக்கு வரும் காய்ச்சல்கண்ட சூழந்தைகளை தொடர் கண்காணிக்கவும், RT-PCR பரிசோதனை செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா நோய் தொற்று குறைவாக உள்ள சூழ்நிலையில் ஒவ்வொரு பள்ளியிலும் PCR கொரோனா தொற்று பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

80—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25752—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, ரெட்டணை ஊராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரெட்டணை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 210, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24-10-2002-ன்படி, மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில், மயிலம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ரெட்டணை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

81—

அரசு மருத்துவமனை

வினா எண் 25780—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

(அ) நிலக்கோட்டை அரசு மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அரசு மருத்துவமனை 66 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் அரசு வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 792 வெளிநோயாளிகள் மற்றும் 47 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 8,389 ஆய்வக பரிசோதனை, 202 இசிஜி, 145 USG, *176 எக்ஸ்ரே ஆகியவை எடுக்கப்படுகின்றன. மேலும் மாதமொன்றுக்கு சராசரியாக 19 பிரசவங்கள், 5 அறுவை சிகிச்சை பிரசவங்கள், 395 சிறிய மற்றும் 15 பெரிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள் மகப்பேறு, சித்தா பிரிவு,* CEmONC *முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு பிரிவு, பிரசவ அறுவை சிகிச்சை பின் கவனிப்பு பகுதி ஆகியவை உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், மின்னாக்கி வசதி, சமையல் அறை போன்றவை உள்ளன. மேலும், எக்ஸ்ரே, இசிஜி, ஸ்கேன் போன்ற உபகரணங்கள், குடிநீர் வசதி உள்ளன. மருத்துவர் மற்றும் பணியாளர் குடியிருப்பு வசதிகளும் உள்ளன. பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் ரூ.23.00 இலட்சத்தில் புதிய அறுவை அரங்கம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்மூலம் ரூ.93.60 இலட்சத்தில் வெளிநோயாளிகள் பகுதி, மகப்பேறு பிரிவு மற்றும் ஆழ்துளை கிணறுடன்கூடிய மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி போன்றவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான உள்நோயாளிகளும், குறைவான எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகளும் சிகிச்சைக்கு வருகிறார்கள். தற்போதுள்ள மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் மற்றும் பிற வசதிகளைக் கொண்டு இப்பகுதி*

மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நிலக்கோட்டை அரசு மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

82—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25808—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. கிள்ளியூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் 131 படுக்கை வசதிகள் கொண்ட குழித்துறை அரசு வட்ட மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. குழித்துறை அரசு மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 575 வெளிநோயாளிகளும், 115 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதுமட்டுமின்றி கிள்ளியூரிலிருந்து 17 கி.மீ. தொலைவில் 21 படுக்கை வசதிகள் கொண்ட அருமனை வட்டம் சாரா அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. இவைகளைத் தவிர, 28 கி.மீ. தொலைவில் அனைத்து உயர் சிகிச்சைகளையும் கொண்ட கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. கிள்ளியூர் ஒன்றியத்தில் கீழ்குளம், நட்டாளம் மற்றும் உண்ணாமலைக்கடை டிபி போன்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், நோயாளிகளை உடனுக்குடன் மேல் சிகிச்சைக்காக கொண்டு செல்ல 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதிகள் உள்ளன. எனவே, கிள்ளியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு

வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

83—

அடிப்படை வசதிகள்

வினா எண் 25875—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி செய்யும் மருத்துவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் தலைஞாயிறு பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவர் குடியிருப்பு முற்றிலும் பழுதடைந்து பயன்பாட்டிற்கு அற்றது என பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்டு, கட்டடம் இடிக்கப்பட்டது. தற்போது மருத்துவர் குடியிருப்பு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, மருத்துவர் குடியிருப்பு கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

84—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25878—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், வடக்கு நல்லூர் ஊராட்சி, பணப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேவம்பட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் பணப்பாக்கம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

பணப்பாக்கம் துணை சுகாதார நிலைய கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பணப்பாக்கம் துணை சுகாதார நிலைய கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து, பணப்பாக்கம் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

85—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25883—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தாலுகா, அக்ராபாளையம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 17*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சுகாதார மாவட்டம், ஆரணி (கிழக்கு) ஊராட்சி ஒன்றியத்தில் அக்ராபாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 293, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12-10-2001-ன்படி, ஆரணி (கிழக்கு) ஊராட்சி ஒன்றியத்தில் ச.வி.நகரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் அக்ராபாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

86—

டெங்கு காய்ச்சல்

வினா எண் 47087—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கொரோனா போல டெங்கு காய்ச்சலிலிருந்து தமிழக மக்களைக் காக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, பருவ நிலை மாற்றம் காரணமாக மக்களிடையே காய்ச்சல் பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும், இச்சூழ்நிலை மழைக் காலங்களில்

2023 ஏப்ரல் 17]

சற்று அதிகரிக்கக்கூடும் என்பதால் தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. டெங்கு மற்றும் கோவிட்-19 பரவாவண்ணம் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்:-

1. தினசரி காய்ச்சல் நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகளை அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிடமிருந்து பெற்று உடனுக்குடன் காய்ச்சல் பாதித்த பகுதிகளிலும் மேலும் பாதிப்புகள் ஏற்படாதவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றது.

2. மழைக் காலங்களில் கொசுப் புழுக்கள், நீர்த்தேக்கங்களில் உற்பத்தியாகி டெங்கு, மலேரியா நோய்கள் பரவாமல் இருக்க கொசுப் புழு உற்பத்தியாகும் இடங்களை அடியோடு அகற்றிடவும், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

3. நகராட்சிகள் பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சி அமைப்புகள்மூலம் 21,218 தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்து கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கொசு ஒழிப்புக்குத் தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் கிருமி நாசினிகள் போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

4. மழைக்காலங்களில் கொசுப்புழு உற்பத்தியாகக்கூடிய தேவையற்ற டயர்களை அப்புறப்படுத்தும்படி நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5. குடிநீர் மாசுபடாமல் தடுக்கவும், பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும் ஏதுவாக போதிய அளவு குளோரின் கலந்த குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. உடைந்த குடிநீர் குழாய்களை உடனடியாகக் கண்டறிந்து சரி செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

6. மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் தற்காலிக மருத்துவ முகாம்களில் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தேவையான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

7. முகாம்களில் சுகாதாரமாக உணவு, குளோரின் கலந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுற்றுப்புறச்சூழலை பாதுகாக்கத்

தேவையான கிருமி நாசினிகள் தெளிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

8. அரசு மருத்துவமனைகளில் டெங்கு சிகிச்சைக்குத் தேவையான அனைத்து உயிர் காக்கும் தடுப்பு மருந்துகள் மற்றும் இரத்த அணுக்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பரிசோதனை வசதிகள் போதிய அளவில் இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

9. தமிழகத்தில் 476 நடமாடும் மருத்துவக் குழுக்கள்மூலம் காய்ச்சல் பாதித்த இடங்களுக்குச் சென்று சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

10. 785 RBSK மருத்துவக் குழுக்கள் மூலமாக ஆங்காங்கே பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று மருத்துவ முகாமிட்டு காய்ச்சல் பரிசோதனை செய்யவும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

11. மருத்துவமனைகளில் மின்வெட்டு ஏற்பட்டால் தேவையான ஜெனரேட்டர் மற்றும் அதற்குரிய எரிபொருள் தயார் நிலையில் வைக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

12. மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் கொரோனா மற்றும் இன்புளுயன்சா நோய் பரவாமல் இருக்க நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றவும், அவ்வப்பொழுது கை கழுவவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

13. மேலும், இருமல் மற்றும் காய்ச்சல் உள்ளவர்கள் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம்/மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டு தங்களை வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

87—

இலவச மருத்துவ முகாம்

வினா எண் 48411—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், நெம்மேலி, வடபாதி, பைங்காடு, இடையர்நத்தம், சுந்தரக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, மகாதேவபட்டணம், ராதாநரசிம்மபுரம், பாளையங்கோட்டை, தென்பரை, குறிச்சி, சேரி, வல்லூர், எளவனூர்

2023 ஏப்ரல் 17]

மற்றும் மேலநத்தம் ஆகிய ஊராட்சிகளில் பொதுமக்களின் பல்வேறு நோய்கள் மற்றும் உடல் குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் 6 மாதத்திற்கு ஒருமுறை இலவச பொது மருத்துவ முகாம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தின்கீழ் ஒரு வட்டாரத்தில் ஒரு நடமாடும் மருத்துவக் குழு என்ற அடிப்படையில் 385 வட்டாரங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தாய் சேய் நல சேவைகள், தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் திட்டமிடப்பட்ட பயண அட்டவணைப்படி நெடுந்தொலைவிலுள்ள மற்றும் அணுக முடியாத கிராமங்களிலும், சிற்றூர்களிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் இந்த நடமாடும் மருத்துவமனை வாகனம் சென்று சேவை செய்து வருகிறது. திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியத்திலும் ஒரு நடமாடும் மருத்துவக் குழு செயல்பட்டு வருகிறது. மருத்துவ முகாம் நடத்த கோரியுள்ள கிராமங்களில் கீழ்கண்ட கிராமங்களுக்கு நடமாடும் மருத்துவக் குழுமூலம் மாதந்தோறும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

முகாம் நாள்	*முப/பிப*	*முகாம் நடத்தப்படும் கிராமம்*
முதலாம் திங்கட்கிழமை	*முற்பகல்*	*மேல நெம்மேலி*
முதலாம் திங்கட்கிழமை	*பிற்பகல்*	*கீழ் நெம்மேலி*
முதலாம் செவ்வாய்கிழமை	*முற்பகல்*	*வடபாதி*
முதலாம் புதன்கிழமை	*பிற்பகல்*	*இடையார்நத்தம்*
இரண்டாம் வெள்ளிக்கிழமை	*பிற்பகல்*	*சுந்தரக்கோட்டை*
நான்காம் செவ்வாய்கிழமை	*முற்பகல்*	*நத்தம்*

மேலும், பைங்காடு, சுந்தரக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, மகாதேவபட்டணம், பாளையங்கோட்டை, தென்பரை, குறிச்சி,

வல்லூர் ஆகிய ஊராட்சிகளில் துணை சுகாதார நிலையமே செயல்பட்டு வருகிறது

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மீண்டும் புதுப்பொலிவுடன் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகிறது. திருவாரூரில் ஒரு வட்டாரத்திற்கு மூன்று முகாம்கள் என்ற வீதத்தில் 10 வட்டாரத்திற்கு 30 முகாம்கள் ஆண்டொன்றிற்கு நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாக தொலைதூரத்தில் வசிக்கும் கிராமப்புற மக்களுக்கு தாய் சேய் நலம், தொற்றா நோய்களான புற்றுநோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்கள், வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு இத்திட்டத்தின்கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறுவதற்கும் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

எனவே, மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியத்தில் அளிக்கப்பட்டுவரும் மருத்துவ சேவைகள் மற்றும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகாம்களையும் அப்பகுதி மக்கள் பயன்படுத்தி, பயனடைந்து வருகின்றனர்.

88—

இல்வச மருத்துவ முகாம்

வினா எண் 48463—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அதங்குடி, எடகீழையூர், எடமேலையூர் நடுத்தெரு, கருவாக்குறிச்சி, புள்ளவராயன், குடிக்காடு, முன்னாவல்கோட்டை, செருமங்கலம், அய்யம்பேட்டை, மேலைத்திருப்பாலக்குடி நெடுவாகிக்கோட்டை, மூவாநல்லூர், இடையர் எம்பேத்தி, கீழத்திருப்பாலக்குடி, பருத்திக்கோட்டை மற்றும் காரிக்கோட்டை ஆகிய ஊராட்சிகளில் பொதுமக்களின் பல்வேறு நோய்கள் மற்றும் உடல் குறைபாடுகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தின்கீழ் ஒரு வட்டாரத்தில் ஒரு நடமாடும் மருத்துவக் குழு என்ற அடிப்படையில் 385 வட்டாரங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தாய் சேய் நல சேவைகள், தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் திட்டமிடப்பட்ட பயண அட்டவணைப்படி நெடுந்தொலைவிலுள்ள மற்றும் அணுக முடியாத கிராமங்களிலும், சிற்றூர்களிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் இந்த நடமாடும் மருத்துவமனை வாகனம் சென்று சேவை செய்து வருகிறது. திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியத்திலும் ஒரு நடமாடும் மருத்துவக் குழு செயல்பட்டு வருகிறது. மருத்துவ முகாம் நடத்த கோரியுள்ள கிராமங்களில் கீழ்கண்ட கிராமங்களுக்கு நடமாடும் மருத்துவக் குழுமூலம் மாதந்தோறும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

முகாம் நாள்	*முப/பிப*	*முகாம் நடத்தப்படும் கிராமம்*
முதலாம் வெள்ளிக்கிழமை	*முற்பகல்*	*கருவாக்குறிச்சி*
முதலாம் வியாழக்கிழமை	*பிற்பகல்*	*எம்பேத்தி*
இரண்டாம் புதன்கிழமை	*முற்பகல்*	*நெடுவாக்கோட்டை*
மூன்றாம் புதன்கிழமை	*பிற்பகல்*	*எடமேலையூர்*
நான்காம் வியாழக்கிழமை	*பிற்பகல்*	*அய்யம்பேட்டை*

மேலும், அதங்குடி, எடகீழையூர், எடமேலையூர், கருவாக்குறிச்சி, நெடுவாகிக்கோட்டை, பருத்திக்கோட்டை ஆகிய ஊராட்சிகளில் துணை சுகாதார நிலையமே செயல்பட்டு வருகிறது

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மீண்டும் புதுப்பொலிவுடன் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகிறது. திருவாரூரில் ஒரு வட்டாரத்திற்கு மூன்று முகாம்கள் என்ற வீதத்தில் 10 வட்டாரத்திற்கு 30 முகாம்கள் ஆண்டொன்றிற்கு

நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாக தொலைதூரத்தில் வசிக்கும் கிராமப்புற மக்களுக்கு தாய் சேய் நலம், தொற்றா நோய்களான புற்றுநோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய்கள், வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு இத்திட்டத்தின்கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறுவதற்கும் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

எனவே, மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியத்தில் அளிக்கப்பட்டுவரும் மருத்துவ சேவைகள் மற்றும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகாம்களையும் அப்பகுதி மக்கள் பயன்படுத்தி, பயனடைந்து வருகின்றனர்.

89—

கொரோனா தடுப்பூசி

வினா எண் 48882—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், சேர்வராயன் மலைப் பகுதிகளில் வாழும் விழிப்புணர்வற்ற ஆதிவாசிகள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி போடப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒன்றிய அரசின் அறிவுரையின்படியும், வழிகாட்டுதலின்படியும் கொரோனா தடுப்பூசி திட்டம் 16-1-2021 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் முதற்கட்டமாக 16-1-2021 முதல் மருத்துவப் பணியாளர்கள்/முன்களப் பணியாளர்களுக்கும், 1-3-2021 முதல் 45-59 வயதிற்குட்பட்ட இணைநோய் உள்ளவர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 1-4-2021 முதல் 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 1-5-2021 முதல் 18-44 வயதுடையவர்களுக்கும்

2023 ஏப்ரல் 17]

தடுப்பூசி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவசமாக தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

*மேலும், 3-1-2022 முதல் 15-18 வயதுடைய பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மற்றும் 16-3-2022 முதல் 12-14 வயதுடையவர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இலவசமாக தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் தடுப்பூசி செலுத்தாமல் விடுபட்ட நபர்களுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டி தமிழகம் முழுவதும் கோவிட்-19 மெகா தடுப்பூசி முகாம்கள் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, வீடுவீடாகச் சென்று விடுபட்ட பயனாளிகளை கண்டறிந்து கோவிட்-19 தடுப்பூசி செலுத்தும் திட்டம் (*Har Ghar Dastak *1.0 & 2.0) செயல்படுத்தப்படுகிறது.*

30-11-2022 வரை தமிழகத்தில் 11,93,00,720 கோடி தடுப்பூசி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு 12,76,91,899 நபர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், சேர்வராயன் மலைப் பகுதிகளில் (வாழவந்தி வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட பகுதி) வாழும் பழங்குடியினர் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:-

வட்டாரம்	மொத்த மக்கள் தொகை	நிர்ணயிக்கப்பட்ட குறியீடு (தகுதி-யுள்ளவர்கள்)	நிர்ணயிக்கப்பட்ட குறியீடு (பழங்-குடியினர்கள்)	பழங்குடியினர் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட விவரம்		
ஏற்காடு	43623	33773	25329	முதல் தவணை	2 ஆம் தவணை	முன்னெச்சரிக்கை தவணை
				24636 (97%)	18433 (72%)	2417 (9.5%)

[2023 ஏப்ரல் 17

மேற்காணும் அட்டவணைப்படி, ஏற்காடு வட்டாரத்தில் வாழும் பழங்குடியினர்களில் 97 சதவீத மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 72 சதவீத மக்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசியும், 9.5 சதவீதம் மக்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

90—

மருத்துவ பரிசோதகர்கள் நியமனம்

வினா எண் 50151—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கொரோனா 3-வது அலை மிகத் தீவிரமாக உள்ளதால் PCR ஆய்வகப் பணிக்கு கூடுதல் பரிசோதகர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் 3 அரசு RT-PCR பரிசோதனை மையங்கள் உள்ளன. அதில், 2 Research Assistant, 4 Lab Technician, 2 Data entry Operator, 1 Lab Attender என பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள்மூலம் நாள் ஒன்றுக்கு 2000 முதல் 2500 வரையிலான பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அந்தந்த மாவட்டங்களில் உள்ள Lab Technician, Lab Attender பணியில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் RT-PCR பரிசோதனை செய்ய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் கொரோனா நோய்த் தொற்று அதிகமாகும்பட்சத்தில் தேவையிருப்பின் மேற்கண்ட பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு RT-PCR ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். எனவே, கூடுதல் பரிசோதகர்களை நியமிக்க தற்போது அவசியம் ஏதும் எழவில்லை.

91—

வான் வழி போக்குவரத்து சேவை

வினா எண் 55215—திரு. இரா. அருள்: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 17]

ஒசூர் பகுதியில் AIR TAXI *சேவையை தொடங்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வான்வழி போக்குவரத்து சேவை, போக்குவரத்துத் துறையின்கீழ் செயல்படுத்த வழிவகை இல்லை.

92—

பள்ளியை சீரமைத்தல்

வினா எண் 44914—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், எடமேலையூர் நடுத் தெரு, ஊராட்சி தொடக்கப் பள்ளிக்குப் போதுமான ஆசிரியரை நியமிக்கவும், வகுப்பறைகள் கட்டவும், எடமேலையூர் நடுத் தெரு ஊராட்சி, தெற்கு நத்தம் தொடக்கப் பள்ளியை சீரமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், எடமேலையூர் நடுத் தெரு, ஊராட்சி தொடக்கப் பள்ளியில் 27 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 2 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு போதுமான 2 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு போதுமான 2 வகுப்பறை கொண்ட பள்ளிக் கட்டடம் உள்ளது. மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், எடமேலையூர் நடுத் தெரு, ஊராட்சி தொடக்கப் பள்ளியில் புதிய வகுப்பறைகள் கட்டித்தர கோரியும், பள்ளியை சீரமைத்து தருமாறும் சார்ந்த வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

93—

வாசிப்புத் திறன்

வினா எண் 46474—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாணவர்களுக்கு வாசிக்கும் திறனை வளர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 108, பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை நாள் 22-6-2022-ல் பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும், அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஊஞ்சல் இதழ் மற்றும் உயர் வகுப்பு மாணவர்களுக்கு தேன்சிட்டு இதழ் மாதமிருமுறை வெளியிடும் திட்டத்தினை செயல்படுத்திட செலவினத் தொகை ரூ.7,15,32,634/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அரசுப் பள்ளி மாணவர்கள் சிறார் பருவ இதழ், செய்தித் தாள் மற்றும் பள்ளி நூலகத்திலுள்ள நூல்கள் போன்றவற்றை வாசிக்க தினசரி மதிய உணவு இடைவேளை முடிந்த பின்பு 20 நிமிடம் ஐந்தாம் பாட வேளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாரத்திற்கு ஒரு நாள் நூலக செயல்பாடுக்கென நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. EMIS (கல்வித் தகவல் மேலாண்மை முறை) மூலம் பள்ளி நூலகம் குறித்த செயலி உருவாக்கப்பட்டு, மாணவர்கள் விரும்பும் புத்தகங்களை வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

94—

ஆங்கில வழிக்கல்வி

வினா எண் 54996—திரு. கோ. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகரப் பகுதியில் புதியதாக ஆரம்பக் கல்வி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகரப் பகுதியில் ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்புகளைக் கொண்டு ஏற்கெனவே செயல்பட்டு வரும் தொடக்க, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையின் அடிப்படையில் முதன்மைக் கல்வி அலுவலரால் ஆங்கில வழிக் கல்வி வகுப்புகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போதுள்ள நடைமுறைகளின்படி, ஆரம்பக் கல்வி முதல் பன்னிரெண்டாம் வகுப்புகள் வரை ஆங்கில வழிக் கல்வி கற்பிக்கும் பள்ளிகள் நேரடியாகத் தொடங்க வழிவகை இல்லை.

95—

வேலுநாச்சியார் வரலாறு

வினா எண் 76203—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலுநாச்சியார் அவர்களின் வரலாற்றை வருங்கால தலைமுறைக்கு கற்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பாடநூல்களில் மாணவர்களின் வயது மற்றும் வகுப்பிற்கேற்ப பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு வேலுநாச்சியார் அவர்களைப் பற்றிய பாடப் பகுதிகள் இடம்பெற்றுள்ளன:-

[2023 ஏப்ரல் 17

வ. எண்	வகுப்பு	பாடம்	பாடத் தலைப்பு	பக்க எண்கள்
1.	6	தமிழ்(பருவம்-3)	வேலுநாச்சியார்	9-12
2.	8	சமூக அறிவியல்	விடுதலை இயக்கத்தில் பெண்கள்	94
3.	10	சமூக அறிவியல்	ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்க கால கிளர்ச்சிகள்	70-71
4.	11	வரலாறு	ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்க கால எதிர்ப்புகள்	310

96—

மை பேனா தடை

வினா எண் 46979—திரு. இரா. அருள்: மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கார்பன் சார்பு தன்மையை 40% ஆக குறைக்கவும், ஒருமுறை மட்டும் பயன்படும் மை பேனாக்களை தடை செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தமிழக அரசு தடை விதித்து 1-1-2019 முதல் அமலில் உள்ளது. மேலும், மத்திய அரசின் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை அறிவிக்கப்பட்டு 1-7-2022 முதல் அமலில் உள்ளது.

மேற்கூறிய தடை அறிவிப்பில் ஒருமுறை மட்டும் பயன்படும் மை பேனாக்களை தடை செய்வது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

2023 ஏப்ரல் 17]

மேலும், ஒருமுறை பயன்படும் மை பேனாக்களின்மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பின் அளவு குறித்து ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனினும், இத்தகைய பிளாஸ்டிக் பொருட்கள் தூக்கி எறியப்படும்பட்சத்தில், அவைகளை பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்கீழ் சேகரித்து அப்புறப்படுத்துவது உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும்.

97—

வருங்கால வைப்பு நிதி

வினா எண் 30722—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிர்வாகம் PF *தொகையை தவறாமல் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த வங்கிச் சேவை வாயிலாக வருங்கால வைப்பு நிதி பங்களிப்பை இணைய வழியில் வசூலிப்பதற்கு மின் செலுத்துச் சீட்டு மற்றும் கணக்கு தாக்கல் செய்யும் நடைமுறையை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. பங்களிப்பைச் செலுத்துவதற்கான ஒருங்கிணைந்த வலை விவரப் பக்கத்தினை அறிமுகப்படுத்தியதன் பின்னர் நிறுமங்கள் அவற்றின் பங்களிப்புத் தொகை செலுத்தியதன் நிகழ் நேர நிலையை அறிவது சாத்தியமாகியுள்ளது. நிறுவனங்களில் தற்போதுள்ள நடப்பு தவணை தவறுதலைக் குறைப்பதற்காக, நிகழ் நேர தவணை தவறுதலைக் கண்காணிப்பதற்கான மேலாண்மை அமைப்பு ஒன்று தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் நடைமுறையில் உள்ளது. பதிவு செய்யப்பட்ட கைபேசி

[2023 ஏப்ரல் 17

எண்ணிற்கு குறுஞ்செய்தி வாயிலாக நினைவூட்டல் அனுப்பப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து அவர்களின் பங்களிப்பை பிடித்தம் செய்து, அத்துடன் பங்களிப்பிற்கான தங்களுடைய பங்குத் தொகையை சேர்த்து, திங்கள் தோறும் பதினைந்தாம் நாள் முடியும் முன்னர் நிதியத்தில் செலுத்துவது வேலை அளிப்பவரின் கடமையாகும்.

வருங்கால வைப்பு நிதி பங்களிப்புத் தொகையை வேலை அளிப்பவர் செலுத்தத் தவறும் நேர்வில் தவணையை வசூலிக்க கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வேறு வழிவகைகள் சட்டத்தின் பிரிவு 7A-ன்கீழ் வேலை அளிப்பவர் செலுத்த வேண்டிய நிலுவை கணக்கிடப்படும்.

ii. நிலுவைத் தொகையை வசூலிக்க 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வேறு வழிவகைகள் சட்டத்தின் 8B மற்றும் 8G வரையிலான பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

iii. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வேறு வழிவகைகள் சட்டத்தின் பிரிவு 14-ன்கீழ் வைப்பு நிதி பங்களிப்பைச் செலுத்தத் தவறிய வேலை அளிப்பவர்மீது உரிய நீதிமன்றங்களில் குற்ற வழக்குப் பதிவு செய்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

iv. தொழிலாளர் பங்களிப்பாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையை வேலை அளிப்பவர் செலுத்தத் தவறினால், இந்திய தண்டனை விதிக் கோவையின் பிரிவு 105-ன்கீழ், குற்றவியல் நோக்குடன் நம்பிக்கைத் துரோகம் செய்த குற்றம் புரிந்ததாகக் கொள்ளப்படும். மேலும், அது இந்திய தண்டனை விதிக் கோவையின் பிரிவு 406 மற்றும் 409-ன்கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

2023 ஏப்ரல் 17]

98—

புதிய தொலைதொடர்பு டவர்

வினா எண் 26176—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட எமனூர் பகுதியில் புதிய தொலைதொடர்பு டவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) தொலைதொடர்பு கோபுரம் (டவர்) எதையும் அமைப்பதில்லை.

*தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு தொலைத் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) மாநிலத்தில் அந்நிறுவனங்களுக்குத் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பை ஏற்படுத்திடத் தேவைப்படும் வழித்தட உரிமை (*Right of Way (RoW) Permission*) வழங்குவதற்கான வழித்தட உரிமை வலைதளம் (*Right of Way (RoW) Portal*) ஒன்றை உருவாக்கிப் பராமரித்து வருகிறது. தமிழ்நாடு தொலைத் தொடர்பு உட்கட்டமைப்புக் கொள்கை, 2022-ன்படி புதிய தொலைத் தொடர்பு உட்கட்டமைப்பை நிறுவ தேவைப்படும் வழித்தட உரிமை கோரும் விண்ணப்பங்கள் மாவட்டப் பற்றாளரால் (*District Nodal Officer*) இந்த வலைதளம்மூலம் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.*

99—

பறவைகள் சரணாலயம்

வினா எண் 46822—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் பறவைகள் குறித்த விளக்க பதாகைகளை தமிழில் வைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், கழிப்பிட வசதி செய்யவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்:

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் 1858 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, உலகளவில் மிகவும் புகழ்வாய்ந்த பழமையான பறவைகள் சரணாலயமாகும். ஆண்டுதோறும் நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்தில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாயலயத்திற்கு மிக அதிகளவில் பறவைகள் வருகை புரிகின்றன. பருவ காலங்களில் ஆண்டுக்கு சுமார் 30000 முதல் 40000 வரையிலான பறவைகள் இச்சரணாலயத்தினை தேடி வருகை புரிகின்றன.

இதனால் மேற்குறிப்பிட்ட காலங்களில் ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் மட்டுமின்றி வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் இங்கு வந்து பறவைகளை கண்டுகளிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் மற்றும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் என்பதால் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் ஒரே விளக்கப் பதாகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், பறவைகள் குறித்த விளக்கங்கள் வைக்கப்பட்டுள்ளன. வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு வருகை புரிபவர்களுக்கு பறவைகள் குறித்த விளக்கங்களை தெரிந்துகொள்வதற்காக சில இடங்களில் ஆங்கிலத்திலும் விளக்கப் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த விளக்கப் பதாகைகள் தமிழில்தான் வைத்து முறையாக பாராமரிக்கப்பட்டு வருகிறது.

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் ஏற்கனவே சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது புதியதாக ஆழ்துளை கிணறு (Bore Well) *அமைக்கப்பட்டு அதன்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சரணாலயத்திற்கு வருகை தரும் பொதுமக்களின் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது.*

2023 ஏப்ரல் 17]

மேலும், கழிப்பிட வசதிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியாகவும் மற்றும் வெளிநாட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியாகவும் முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனையடுத்து, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் மேற்படி வசதிகளை மேலும் நவீனப்படுத்துவதற்காக தேவையான பணிகளை அரசு மேற்கொள்ளும்.

100—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 28840—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் புதிய ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி வட்டத்தில் மாதவரம் சட்டமன்றத் தொகுதியில் வடகரை, அரசினர் ஆதி திராவிடர் நல தொழிற்பயிற்சி நிலையம் (ITI) 9-2-2015 அன்று முதல் இயங்கி வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையத்தின் விவரம் பின்வருமாறு:

1. *அலுவலக பணியாளர்கள்-13*
2. *உதவி பயிற்சி அலுவலர்கள்-18*
3. *பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை*

(2017-2018)=125

(2018-2019)=126

(2019-2020)=104

(2020-2021)=101

மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் Electrician, Fitter, MMV, Wireman, Welder போன்ற தொழிற்பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. மேலும், ஆதி திராவிடர் நலத் துறைமூலம் புதிய கட்டடம் மற்றும் விடுதிகள் அமையப்பெற்றுள்ளன. மேலும், பொன்னேரி தொகுதியிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் பொன்னேரி தொகுதியின் அருகாமையில் வடகரை தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ளதால் இப்பயிற்சி நிலையமே போதுமானது என்பதால், பொன்னேரி தொகுதியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுமில்லை.

பட்டியல்-10

1—

தும்பலஹள்ளி அணை

வினா எண் 11303—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழைக் காலத்திலும் நீர் நிரம்பாத தும்பலஹள்ளி அணைக்கு எண்ணேக்கோல் புதூரிலிருந்து கால்வாய் அமைத்து தென்பெண்ணையாற்று நீரைக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள எண்ணேக்கோல் அணைக்கட்டிலிருந்து புதிய கால்வாய் வெட்டி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏரிகளுக்கு நீர் நிரப்பும் திட்டத்திற்காக ரூ.233.347 கோடி மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, தும்பலஹள்ளி அணைக்கு நீர் நிரப்ப வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடையும் நிலையில் தென்பெண்ணையாற்றின் உபரி நீரை தும்பலஹள்ளி அணைக்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 17]

2—

சாத்தனூர் ஏரி

வினா எண் 11820—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், மரூர் ஊராட்சியில் உள்ள பெரிய ஏரிக்கு சாத்தனூர் கால்வாயிலிருந்து நீர்வரத்திற்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் ஒன்றியம், சாத்தனூர் அணையிலிருந்து வலதுபுறக் கால்வாய்கள்மூலம் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் பாசன வசதி பெற்றுவருகின்றன. மேற்படி பாசன ஆயக்கட்டு என்பது வரையறுக்கப்பட்டதாகும்.

மேலும், அணை முழுக்கொள்ளளவை எட்டும்போது இந்த பாசனப் பகுதிகளுக்கு சுமார் 120 நாட்களுக்கு தண்ணீர் வழங்கப்பட வேண்டும். தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக சாத்தனூர் அணையின்மூலம் வரையறுக்கப்பட்ட நாட்களைவிட குறைவாக தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கே தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால், புதிய ஆயக்கட்டுப் பகுதிகளை உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆதலால், மரூர் ஊராட்சியில் உள்ள பெரிய ஏரிக்கு சாத்தனூர் வலதுபுறக் கால்வாயிலிருந்து நீர்வரத்திற்கு வழிவகை செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

3—

சாத்தனூர் ஏரி

வினா எண் 11822—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், சீர்ப்பனந்தல் ஊராட்சி, சாத்தனூர் வலதுபுற கால்வாயிலிருந்து சீர்ப்பனந்தல் பெரிய ஏரிக்கு நீர்வரத்திற்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா?

[*2023 ஏப்ரல் 17*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் ஒன்றியம், தென்பெண்ணையாற்றின் குறுக்கே உள்ள சாத்தனூர் அணையின் வலதுபுறக் கால்வாயின் பிரிவுக் கால்வாய் எண் 1-ன்மூலம் தென்பெண்ணை ஆற்று நீர் சீர்ப்பனந்தல் ஏரிக்குச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சாத்தனூர் வலதுபுறக் கால்வாயிலிருந்து சீர்ப்பனந்தல் பெரிய ஏரிக்கு வரும் வரத்து வாய்க்காலை தூர்வாரி மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இதனால், சீர்ப்பனந்தல் ஏரி முழுக் கொள்ளளவை எட்டியுள்ளது. சாத்தனூர் அணையிலிருந்து 4-4-2022 முதல் 19-5-2022 வரை 35 நாட்களுக்கு தண்ணீர் திறப்பின்மூலம் சீர்ப்பனந்தல் ஏரியில் 75% நீர் நிரப்பப்பட்டு, பாசனத்திற்கு நீர் வழங்கப்படுகிறது.

4—

தடுப்பணைகள்

வினா எண் 12497—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரிய ஆறுகளில் தடுப்பணைகள் கட்டி அவற்றை ஏரிகளில் இணைத்து மழைக்கால உபரி நீர் கடலில் கலப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு முழுவதும் நதி, ஆறு, ஓடை ஆகியவற்றில் தகுதியான இடங்களில் நிலத்தடி நீரை செறிவூட்டவும், ஆறுகளிலிருந்து ஏரிகளுக்கு தண்ணீரைக் கொண்டு செல்லவும், புதிய தடுப்பணைகள், நிலத்தடி கீழ் தடுப்புச் சுவர்கள் மற்றும் அணைக்கட்டுகள் அமைப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மழைக்கால வெள்ள உபரி நீர் கடலில் வீணாகக் கலப்பதைத் தடுத்து, சேமிக்கும் பொருட்டு காவிரி மற்றும் கொள்ளிடம் போன்ற பெரிய ஆறுகளின் குறுக்கே கதவணைகள் கட்டப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 17]

5—

மதகு சீரமைப்பு

வினா எண் 12592—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி ஊராட்சி, இரவிமங்கலம் கண்மாயில் உள்ள செங்கமதகை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி ஊராட்சி, இரவிமங்கலம் கண்மாயில் உள்ள செங்கமதகை 2022-2023 ஆம் நிதியாண்டின் அணைகளின் பராமரிப்புப் பணிகளில் சேர்க்கப்பட்டு, வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

நீர்வழித்தட தாவரங்கள்

வினா எண் 15376—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, வாணியாறு டேமிற்கு வரும் நீர் வழித்தடத்தில் உள்ள தாவரங்களை அகற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணையின் நீர்பிடிப்புப் பகுதி முழுவதும் மற்றும்

[2023 ஏப்ரல் 17

நீர் வழித்தடங்களில் உள்ள தாவரங்கள் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும், இத்தாவரங்களால் வாணியாறு அணைக்கு வரும் நீர்வரத்து எவ்விதத்திலும் தடுக்கப்படுவதில்லை. எனவே, இவ்வழித்தடத்திலுள்ள தாவரங்களை அகற்ற வேண்டிய தேவை இல்லை.

7—

தூர்வாருதல்

வினா எண் 15458—திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், வயலூர் ஊராட்சியில் உள்ள சிலுவைபுரத்திற்கு உள்ளே போகும் வழியில் உள்ள பாசன வாய்க்காலைத் தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், வயலூர் ஊராட்சி, சிலுவைபுரத்திற்கு உள்ளே போகும் வழியிலுள்ள 3.00 கி.மீ. நீளமுடைய பாசன வாய்க்கால் 2019-2020 ஆம் ஆண்டு முறைசாரா திட்டப் பணி நிதியில் (AHM&R Fund) ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு, வாய்க்கால் கரைகளும் பலப்படுத்தப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

8—

அணையைத் தூர்வாருதல்

வினா எண் 17751—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் பகுதியில் உள்ள மத்தாளப்பள்ளம் அணையைத் தூர்வாரி கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் அருகே இரண்டு மலைப் பகுதிகளுக்கு இடையே மத்தளப்பள்ளம் அணை அமைந்துள்ளது. இவ்விடத்தில் அவ்வப்போது பெய்துவரும் மழையாலும், சிறு, சிறு காட்டோடைகளாலும் அணையில் எப்போதும் சுமார் 60 சதவீதத்திற்குமேல் தண்ணீர் இருந்துகொண்டே உள்ளது. மேலும், வரையறுக்கப்பட்ட கொள்ளளவு இருப்பதனாலும் தற்போது இவ்வணையைத் தூர்வார சாத்தியக்கூறு இல்லை.

9—

கடலரிப்பு

வினா எண் 18273—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தனுஷ்கோடி அரிச்சல்முனைப் பகுதியை கடலரிப்பிலிருந்து பாதுகாக்க உரிய செயல் திட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், முகுந்தராயர் சத்திரம் முதல் அரிச்சல் முனைப் பகுதி வரை தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சாலையின் இருபுறமும் கடலரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10—

வண்டல் மண்

வினா எண் 18400—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கண்மாய்கள் மற்றும் அணைகளில் உள்ள வண்டல் மண்ணை வேளாண் மக்களுக்கும், மண்பாண்டம் செய்வோருக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர்வளத் துறை பராமரிப்பிலுள்ள கண்மாய்கள் மற்றும் அணைகளில் உள்ள வண்டல் மண்ணை வேளாண் மக்களுக்கும், மண்பாண்டம் செய்வோருக்கும் வருவாய்த் துறையின் அனுமதியுடன் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

11—

தூர்வாருதல்

வினா எண் 18735—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், செல்லூர் ஊராட்சி, கரையாப்பாலையூர் வடிகால் வாய்க்கால்-நெய்க்குப்பை வரை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், செல்லூர் ஊராட்சி, கரையாப்பாலையூர் வடிகால் வாய்க்கால் 2021-2022 ஆம் ஆண்டு தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.8.20 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், சுழற்சி முறையில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தூர் வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023 ஏப்ரல் 17]

12—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 18785—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம், மணக்கால் ஊராட்சி, மணக்கால் வடிகால், புலவநல்லூர் வடிகால் மற்றும் பெரும்புகளூர்-வண்டாம்பாளை பாசன வாய்க்கால் மற்றும் வடிகால் மற்றும் பெரிய மதகு பரமனார்கோவில் வாய்க்கால் ஆகியவற்றைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம், மணக்கால் ஊராட்சி, பெரும்புகளூர் வாய்க்கால் 2021-2022 ஆம் ஆண்டு சிறப்புத் தூர்வாரும் திட்டத்தின்கீழ் 4.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.4.32 இலட்சம் மதிப்பீட்டிலும், 3.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டிலும் தூர்வாரப்பட்டுள்ளது. வண்டாம்பாளை வாய்க்கால் குடிமராமத்துத் திட்டத்தின் (2021-2022) கீழ், 2.50 கி.மீ. நீளத்திற்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், மணக்கால் வடிகால் புலவநல்லூர் வடிகால் மற்றும் பெரியமதகு பரமனார்கோவில் வாய்க்கால் வரும் நிதியாண்டில் (2023-2024) திட்டப் பணிகள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

வடிகால் தூர்வாருதல்

வினா எண் 18792—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம், கமுகக்குடி ஊராட்சி, அஸ்கானோடை அரசமங்கலம் வடிகால் வாய்க்கால், அஸ்கானோடை சட்ரஸ் முதல் வடிகால் வரை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், கமுகக்குடி ஊராட்சி, அஸ்கானோடை அரசமங்கலம் வடிகால், அஸ்கானோடை சட்ரஸ் முதல் வடிகால் வரை 2022-2023 ஆம் நிதியாண்டில் பராமரிப்பு நிதியின்கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

14—

தடுப்பணை

வினா எண் 21093—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் மாவட்டம், பு.எ.வெ. பாளையம் அருகே கொசஸ்தலை ஆற்றில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், புது எருமை வெட்டிப்பாளையம் அருகே கொசஸ்தலை ஆற்றில் தடுப்பணை அமைக்க கோரப்பட்டுள்ள தளமானது, நிலநீர் நுகர்வு மண்டலத்தின்படி (*Ground Water Extraction Category*), வலது கரையில் உள்ள புது எருமை வெட்டிப்பாளையம் கிராமம் "பாதுகாப்பு மண்டலத்திலும்"* (Safe Zone), *இடது கரையில் உள்ள மேட்டுப்பாளையம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

கிராமம் “பகுதி மிகை மண்டலத்திலும்” (Semi-Critical Zone) அமைந்துள்ளன. எனவே, புது எருமை வெட்டிப்பாளையம் கிராமத்தின் அருகே தடுப்பணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

15—

தடுப்பணை

வினா எண் 26101—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், மாளிகைமேடு கிராமம் அருகில் மயூரா ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், மாளிகைமேடு கிராமப் பகுதியில் மயூரா நதியைச் சுற்றியுள்ள பகுதிகள் யாவும் வேப்பூர் குறுவட்டத்தில் வருகிறது. நிலத்தடி நீர் நுகர்வு மண்டலம் (Ground Water Extraction Category) வகைப்பாட்டின்படி வேப்பூர் குறுவட்டமானது பாதுகாப்பான பகுதியிலும் (Safe Zone) மற்றும் செறிவூட்டு மண்டலம் வகைப்பாட்டின்படி அதிக செறிவூட்டு மண்டலத்தின் (High Favourable Recharge Zone) கீழும் வருகிறது. இத்திட்டம் பாதுகாப்பான (Safe Zone) பகுதியில் அமைவதால், தற்போதைய சூழ்நிலையில் தடுப்பணை அமைக்க முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ள இயலாது.

16—

ஆறுகளை தூர்வாருதல்

வினா எண் 26125—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, காவிரி பிரிவு ஆறுகளை தூர் வாரி அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதியில் காவிரி மற்றும் பிரிவு ஆறுகள், ஆண்டு பராமரிப்பு மற்றும் சிறப்புத் தூர்வாரும் திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டு, சிறப்புடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், காவிரி பிரிவு ஆறுகளை அகலப்படுத்தும் திட்டம் தற்பொழுது ஏதுமில்லை.

17—

தடுப்பணை

வினா எண் 26135—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூர் அருகே தொப்பையாற்றின் குறுக்கே பெரிய தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பூர் கிராமம், தொப்பையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கக் கோரும் திட்டத்தளத்தின் அருகில் நீரின் அளவீட்டை கணக்கீடு செய்ய மத்திய நீர்வள ஆணையத்தின் (CWC) நீர் அளவீட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நீர் அளவீட்டு மையம் அமைந்துள்ள பகுதியின் மேல் மற்றும் கீழ்ப்புறத்தில் 4 கி.மீ. தொலைவிற்குள் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டால் நீர் அளவீடு பாதிக்கும் என்பதால் புதிதாக

2023 ஏப்ரல் 17]

தடுப்பணை கட்டுமானங்கள் கட்டக் கூடாது என்பது CWC-ன் கோட்பாடாகும். ஆகையால், தொப்பூர் ஊராட்சிப் பகுதியில் தொப்பையாற்றில் புதிய தடுப்பணை அமைக்க சாத்தியமில்லை.

18—

புதிய அணை

வினா எண் 26138—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேல் அமராவதி என்ற புதிய அணையை (அமராவதி அணைக்குமேல்) கட்ட நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், அமராவதி அணையின் உயர்மட்ட மேல்பகுதியில் அடர்ந்த வனப் பகுதியில் மின் உற்பத்திக்கு ஏதுவாக அப்பர் அமராவதி அணை அமைக்கும் பணிக்குத் தேவைப்படும் 242 ஹெக்டேர் நிலத்தை ஒதுக்க வனத் துறை எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, இத்திட்டம் கைவிடப்பட்டதாக தமிழ்நாடு மின்சாரத் துறையின்மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19—

ஏரிகளின் நீர்வரத்து

வினா எண் 26153—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செண்பகத்தோப்பு அணையை தூர் வாரி, அதன்மூலம் போளூர் தொகுதியில் உள்ள ஏரிகளுக்கு நீர்வரத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்திலுள்ள கமண்டல நாகநதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள செண்பகத்தோப்பு அணையிலிருந்து பாசனத்திற்கு ஆற்று மதகு (River Sluice) வாயிலாக மட்டுமே தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளில் வண்டல் மண் படிந்ததற்கான மாற்றங்கள் இல்லை. எனவே, தற்போது தூர்வாரத் தேவையில்லை. செண்பகத்தோப்பு அணையின்கீழ் 48 முறை சார்ந்த ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளுக்கு கால்வாய்கள்மூலம் தண்ணீர் வரத்து அளிக்கப்பட்டுள்ளது.

20—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 37874—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தா.பழூர் கிராமத்தில் பாலசுந்தரபுரம் வாய்க்காலை 3.83 கி.மீ. தூரம் தூர் வாரி ஆழப்படுத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தா.பழூர் கிராமத்திலுள்ள 3.83 கி.மீ. தூரமுள்ள பாலசுந்தரபுரம் கிளை வாய்க்காலைத் தூர்வாரிட 2022-2023 ஆம் ஆண்டு சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, 9-5-2022 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

21—

ஓடை

வினா எண் 37879—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், வேம்புகுடி கிராமம், செங்கால் ஓடை D/S *முதல் 0/1.20 கி.மீ. தூரம் தூர்வாரி ஆழப்படுத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், வேம்புகுடி கிராமம், செங்கால் ஓடையின் கீழ்புறம் 0 முதல் 1.20 கி.மீ. தூரம் வரை 2022-2023 ஆம் ஆண்டு சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, 8-6-2022 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

22—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 38518—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, காசநாடு புதூர் வடிகால் வாய்க்காலைத் தூர்வாரிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரத்தநாடு தொகுதி, காசாநாடு புதூர் வடிகால் வாய்க்காலானது 2022-2023 ஆம் ஆண்டு தூர்வாரும் திட்டப்

[*2023 ஏப்ரல் 17*

பணிகளின்கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

23—

கால்வாய்

வினா எண் 38524—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வீரமரசன்பேட்டை, மாதுரான் ஏரி, கல்லணைக் கால்வாய் பாசன ஆயக்கட்டாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வீரமரசன்பேட்டை, மாதுரான் ஏரி, கல்லணைக் கால்வாய் தரைமட்ட அளவைவிட மேட்டுப் பகுதியில் உள்ளது. ஆகையால், மாதுரான் ஏரி கல்லணைக் கால்வாயை பாசன ஆயக்கட்டாக மாற்ற அடிப்படை சாத்தியக்கூறுகள் இல்லை.

24—

ஏரி ஆக்கிரமிப்புகள்

வினா எண் 48404—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், காரக்கோட்டை ஊராட்சி, பொன்னாங்கண்ணி ஏரியின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், காரக்கோட்டை ஊராட்சி, பொன்னாங்கண்ணி ஏரியில் கனிம

2023 ஏப்ரல் 17]

வளத் துறைமூலம் மண் எடுக்கப்பட்டு ஏரி ஆழப்படுத்தப்படுகிறது. மேலும், ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25—

ஆகாயத்தாமரை

வினா எண் 49359—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானி தொகுதி, பவானி ஆறு மற்றும் கூடுதுறை சங்கமேஸ்வரர் ஆலயம் அருகே ஆற்றில் உள்ள ஆகாயத்தாமரையை அகற்றிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

பவானி சட்டமன்றத் தொகுதி, பவானி ஆறு, பவானி கூடுதுறை சங்கமேஸ்வரர் ஆலயம் அருகே இருந்த ஆகாயத்தாமரைகள் அனைத்தும் 10-8-2022 அன்று நீர்வளத் துறையின்மூலம் முழுமையாக அகற்றப்பட்டுவிட்டது.

26—

உபரி நீர் நீரேற்றம்

வினா எண் 50651—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் அணையிலிருந்து சங்ககிரி வட்டத்திலுள்ள ஒலக்கசின்னாகவுண்டனூர் வரை கொண்டு வருகின்ற உபரி நீர் இன்னும் 7 KM நீரேற்றம் செய்யப்பட்டு அக்கம்மாபேட்டை ஏரிக்குக் கொண்டு செல்ல அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், ஐவேலி கிராமத்திலுள்ள அக்கம்மாபேட்டை ஏரியானது தனியருக்குச்

சொந்தமான குட்டையாகும். இவ்வேரிக்கு கலிங்கோ, கரைகளோ இல்லை. இவ்வேரியின் ஒரு பகுதி வரையறுக்கப்பட்ட மனை நிலங்களாகப் பிரிக்கப்பட்டு, சில மனைகளில் வீடுகள் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

மேலும், இவ்வேரியானது, பட்டா நிலங்களாகவும், அரசு புறம்போக்கு நிலங்களாகவும், மாநில நெடுஞ்சாலைக்கும் மற்றும் நீர் செல்லும் பாதைக்கும் பிரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்கூறிய காரணங்களால் சங்ககிரி வட்டத்தில் ஐவேலி கிராமத்திலுள்ள அக்கம்மாபேட்டை ஏரிக்கு மேட்டூர் உபரி நீர் நீரேற்றுத் திட்டத்தினை நீட்டிக்க இயலாது.

27—

சீமைக் கருவேல முட்கள்

வினா எண் 51742—திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, 100-க்கும் மேற்பட்ட கண்மாய்களில் சீமைக் கருவேல முட்களை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட கண்மாய்களில் உள்ள சீமைக் கருவேல முட்கள் அந்தந்தப் பஞ்சாயத்து மூலமாகவும், நீரினை பயன்படுத்துவோர் சங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றன.

28—

தேர்தல் விழிப்புணர்வு

வினா எண் 61660—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) தேர்தலில் வாக்காளர் பங்கேற்பை அதிக சதவீதத்திற்கு உயர்த்த மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தேர்தல் ஆணையத்தை வலியுறுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) "இந்திய தேர்தல் ஆணையமானது, 'வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்' (SVEEP-Systematic Voters Education and Electoral Participation) *என்னும் திட்டத்தை வாக்காளர்களுக்கு தேர்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தேர்தல் பற்றிய செயல்முறைகளைக் கற்பிப்பதற்கும், தேர்தலில் வாக்காளர் பங்கேற்பு சதவீதத்தை உயர்த்துவதற்கும் பல்வேறு ஊடகங்கள்/ தொடர்பு தளங்கள் மூலமாக 2011 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது, மாநிலத்தின் சமூக-பொருளாதாரம், கலாச்சாரம், மக்கள்தொகை விவரம் மற்றும் முந்தைய சுற்று தேர்தல்களில் வாக்காளர்களின் தேர்தல் பங்கேற்பினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது."*

29—

தபால் வாக்கு வசதி

வினா எண் 61661—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மற்ற அரசுத் துறை ஊழியர்களுக்கு தபால் வாக்களிக்கும் முறை உள்ளதைப் போன்று தமிழக அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் தபால் வாக்கு அளிக்கும் வசதி செய்ய இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இதுசம்பந்தமாக, இந்திய தேர்தல் ஆணையமானது, தேர்தல் நடத்தும் அலுவலருக்கான கையேடு

புத்தகத்தில் தபால் வாக்கானது பின்வரும் நபர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது:-

1) பணித் தொகுதி வாக்காளர்கள் (Service Voters)

2) சிறப்பு வாக்காளர்கள் (Special Voters)

3) தடுப்புக் காவல் சட்டப் பிரிவின்கீழ் கைது செய்யப்பட்ட வாக்காளர்கள் (Electors subjected to Preventive detention)

4) தேர்தல் பணியிலுள்ள வாக்காளர்கள் (Voters on Election duty)

5) அறிவிக்கையிடப்பட்ட வாக்காளர்கள் ஏதேனும் இருப்பின் (Notified voters if any)

மேற்காணும் பிரிவில் தேர்தல் பணியிலுள்ள வாக்காளர்கள் என்பது தேர்தல் நேரத்தில் தேர்தல் சம்பந்தமான பணிகளில் ஈடுபடும் அரசு அலுவலர்களாகும். அதாவது, மண்டல அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மாவட்ட தேர்தல் அதிகாரி, மாவட்ட துணை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி/தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள், கட்டுப்பாட்டு அறை மற்றும் தேர்தல் சம்பந்தமான அலுவலகம், நுண் பார்வையாளர்கள், காவல் துறை பணியாளர்கள், ஊர்க்காவல் படை மற்றும் தேர்தல் சம்பந்தமாக பணிகளில் ஈடுபடும் வாகன ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் வாகனம் சுத்தம் செய்பவர்கள் ஆகியோர் மட்டுமே தேர்தல் நேரத்தில் தபால் வாக்குகள் வழங்கப்படும் பிரிவினைச் சார்ந்தவர்கள்.

சட்ட அமைச்சகமானது, தேர்தல் நாளன்று வாக்குச்சாவடியில் வாக்களிக்க நேரில் வர இயலாத வாக்காளர்களுக்கு, அதாவது, அத்தியாவசியப் பணியிலுள்ள வாக்காளர்கள் (elector on essential services), 80 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்கள் (senior citizens 80 plus years) மற்றும் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத் திறனாளி வாக்காளர்களுக்கு (person with disability (PwD) already flagged in the rolls) தபால் வாக்கு வழங்குவதற்காக 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தும் விதிகள் பகுதி III-ல் திருத்தம் செய்து

2023 ஏப்ரல் 17]

அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

30—

வேலைவாய்ப்பு

வினா எண் 21572—திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கொடுத்த அனைவருக்கும் பாரதியார் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கொடுத்தோர் வகையில் தற்போது பாரதியார் பல்கலைக்கழகத்தில் தினக்கூலி/தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு பாரதியார் பல்கலைக்கழக சட்ட முறைமை மற்றும் விதிகளின்படியும், அரசின் ஆணைகளின்படியும் தக்க ஆவணங்கள் மற்றும் கல்வித் தகுதிகளைக் கருத்தில் கொண்டு பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக பாரதியார் பல்கலைக்கழகத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

31—

பாசன வசதி

வினா எண் 23312—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாப்பாரப்பட்டி பகுதியில் உள்ள மாநில விதைப் பண்ணைக்கு பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாப்பாரப்பட்டி பகுதியில் உள்ள மாநில விதைப் பண்ணையில் இரண்டு திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. இவற்றில், ஒரு திறந்தவெளிக் கிணற்றில் மட்டும் நீராதாரம் உள்ளது. எனவே, நடப்பு 2022-2023 ஆம் ஆண்டில் மாநில விதைப் பண்ணைக்குத் தேவையான தண்ணீர் வசதி செய்து தரவும், பண்ணையை மேம்படுத்தவும் ரூ.3.83 இலட்சம் செலவில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்டு, நிதி விடுவிப்பு எதிர்நோக்கப்படுகிறது. எனவே, நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் பண்ணையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

32—

தோட்டக்கலைப் பல்கலைக்கழகம்

வினா எண் 23324—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தனியார் கல்லூரியான அதியமான் வேளாண்மைக் கல்லூரி மற்றும்

2023 ஏப்ரல் 17]

ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் பையூரில் மண்டல ஆராய்ச்சி நிலையமும், பாப்பாரப்பட்டியில் வேளாண்மை அறிவியல் நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், அத்தியேந்தலில் சிறுதானிய மகத்துவ மையமும் மற்றும் கலசப்பாக்கத்தில் தனியார் கல்லூரியான அரவிந்தர் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்பேரில் 2021-2022 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூரில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க உத்தரவு பெறப்பட்டு, புதிய கல்லூரி தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை முடிவுற்று, வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

புதிதாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்க ரூ.1,000/– கோடிக்குமேல் நிதி தேவைப்படும். இதனால், தமிழகத்தின் நிதிச்சுமை அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம். மேலும், புதிதாக பல்கலைக்கழகம் நிறுவ போதிய இடம், நிதி வசதி கணிசமான அளவு தேவைப்படும். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மண் வகையீடு

வினா எண் 23371—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் விரிவான மண் வகையீடு செய்து, வேளாண்மைக்குப் பயன்படும் நிலங்களின் மண் வளத்தினைப் பாதுகாக்க அதன் பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகளின் அளவை அறிய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1965 ஆம் ஆண்டு கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு வேளாண்மைத் துறையில் மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாட்டு அமைப்பு நிறுவப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1970-ல் தஞ்சாவூரில் இரண்டாவது அமைப்பு தொடங்கப்பட்டது. மூன்றாவது மற்றும் நான்காவது அமைப்பு 1977 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் வேலூர் மற்றும் திருநெல்வேலியில் தொடங்கப்பட்டது. மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாட்டு நிறுவனமானது விரிவான மண் வகையீடு செய்து, மண் வள வரைபடம் தயாரித்து, விவசாயிகளுக்கு பயிர் பரிந்துரை மற்றும் மண்வளம் பற்றிய தகவல் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கும். ஆனால், ஒரு கிராமத்தினை விரிவான மண் வகையீடு செய்து, மண் வள வரைபடம் தயாரிக்க குறைந்தது 6 மாதங்களாகும்.

2008-2009 மற்றும் 2011-2012 ஆம் ஆண்டுகளில் 4 மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாட்டு நிறுவனங்கள் மூலமாக கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 14 வட்டாரங்களில் ஒன்றிய அரசின் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விரிவான மண் வகையீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் படிப்படியாக மண் வகையீடு செய்திடவும், தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் புல எண் வாரியாக மண்ணின் வளம் மற்றும் பயிர் பரிந்துரை செய்திடும்பொருட்டு, "தமிழ் மண்வளம்" எனும் இணையதளம் உருவாக்கிடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

34—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 10606—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், நெ.145, சீமாபுரம் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் கட்டடம், புல எண் 19/2, விஸ்தீரணம் 0.01.0 ஏர்ஸ் கோயில் அரசு புறம்போக்கு வகைப்பாடு நிலத்தில் அமைந்துள்ளது. மேற்படி கட்டடத்தைச் சீரமைக்க உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

35—

தீ விபத்து நிவாரணம்

வினா எண் 31075—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதியில் உள்ள செலக்கரிச்சல் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்துகளுக்கு நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், செலக்கரிச்சல் கிராமம், பல்லடம்-செட்டிப்பாளையம்

[2023 ஏப்ரல் 17

சாலை, கதவு எண் 6/303A என்ற முகவரியில் வசித்துவரும் திரு. பழனிச்சாமி, த/பெ. மயில்சாமி என்பவரது வீட்டில் கடந்த 15-4-2021 அன்று மின்கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தினால் வீட்டின் முன்பகுதியில் உள்ள மளிகைக் கடையில் இருந்த பொருட்கள் எரிந்து சாம்பலானது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் இயற்கையினால் ஏற்படும் பேரிடர்களுக்கு அரசாணை (நிலை) எண் 380, வருவாய்த் துறை, நாள் 27-10-2015-ன்படி நிவாரணம் வழங்கப்படுகிறது. மின் கசிவினால் ஏற்படும் தீ விபத்திற்கு நிவாரணம் வழங்க மேற்கண்ட அரசு விதிகளில் வழிவகை இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

36—

பூங்கா

வினா எண் 29390—திரு. இரா. அருள்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் சிலப்பதிகாரப் பூங்காவும், மகாபலிபுரத்தில் தொல்காப்பியருக்கு தமிழ்ப் பூங்காவும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் சிலப்பதிகாரப் பூங்காவும், மகாபலிபுரத்தில் தொல்காப்பியருக்கு தமிழ்ப் பூங்காவும் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

37—

மகளிர் குழுக் கட்டடம்

வினா எண் 9144—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 17]

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பாலைவனம் ஊராட்சி, ஆலையம்மன் நகர் கிராமத்தில் மகளிர் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பாலைவனம் ஊராட்சியில் மொத்தம் 22 சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஏற்கெனவே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பாலைவனம் கிராமத்தில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆலையம்மன் நகர் பகுதியில் 3 சுய உதவிக் குழுக்களும், திருப்பாலைவனத்தில் 12 சுய உதவிக் குழுக்களும், காஞ்சிவாயலில் 4 சுய உதவிக் குழுக்களும், செஞ்சியம்மன் நகரில் 2 சுய உதவிக் குழுக்களும், காஞ்சிவாயல் இருளர் காலனியில் 1 சுய உதவிக் குழுவும் உள்ளன. எனவே, ஆலையம்மன் நகரில் தனியாக சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

38—

சுய உதவிக் குழுக் கட்டடம்

வினா எண் 10612—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சியில் 3 குக்கிராமங்கள் உள்ளன. ஊராட்சியில் கட்டப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் 2005-2006 ஆம் ஆண்டில் JGSY *திட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் தற்போது பழுதடைந்துள்ளது. பழுதுகளைச் சீரமைக்க 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானியத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிதி இல்லாமையால் தற்போது 2022-2023 ஆம் ஆண்டு 16-வது நிதிக் குழு மானியம் அல்லது ஏதாவது ஒரு திட்டத்தில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சீமாபுரம் ஊராட்சியில் கிராம ஊராட்சி சேவை மையம் கட்டப்பட்டு, மேற்படி கட்டடத்தினை சுய உதவிக் குழுக்கள் சிறப்பான முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.*

39—

வீடுகள் வழங்குதல்

வினா எண் 30194—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, வார்டு எண் 70, எலிகான் தெரு, அருந்ததி நகர், மேட்டுப்பாளையத்தில் வசிக்கும் வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 70, எலிகான் தெரு, அருந்ததி நகர், மேட்டுப்பாளையம்

2023 ஏப்ரல் 17]

பகுதியில் திட்டம் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசம் நிலங்கள் ஏதும் இல்லை.

40—

சமுதாயக் கூடம்

வினா எண் 44983—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் சார்பில் சமுதாயக் கூடம் (நிகழ்ச்சி அரங்கம்) கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டப் பகுதியில் 5 வணிக மனைகள் விற்கப்படாமல் உள்ளன. இம்மனைகளில் சமுதாயக் கூடம் கட்டுவதற்குத் தேவையான நிலப்பரப்பு இல்லை.

41—

விற்பனைப் பத்திரங்கள்

வினா எண் 64726—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றில் குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள விற்பனைப் பத்திரங்களை (sale deed) விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கீடு பெற்றவர்கள் ஒதுக்கீட்டிற்கான முழுத் தொகையையும் செலுத்தியபின் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் அனைத்து ஒதுக்கீடுதாரர்களுக்கும் கிரயப் பத்திரம் உடனடியாக வழங்கப்படுகிறது. மேலும், ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறும் வகையில் விற்பனைப் பத்திரம் வழங்குவதற்கான சிறப்பு முகாம்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், மாதந்தோறும் மூன்று நாட்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது.

42—

கூடுதல் கட்டடம்

வினா எண் 76069—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை சார்பில் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 53.77 ஏக்கர் நிலப்பரப்பில் 933 மனை மேம்பாடு செய்யப்பட்டு, மனைகளாகவும் மற்றும் வீடுகளாகவும் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டது. மேலும், சாலை, திறவிடம், குடிநீர் வசதிகள் அனைத்தும் உள்ளாட்சிவசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுவிட்டது. தற்போது,

2023 ஏப்ரல் 17]

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை.

இருப்பினும், பொது மக்களிடம் போதிய கேட்பு மற்றும் தகுந்த நிலம் கிடைக்கும்பட்சத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய தகுந்த ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் கூடுதல் கட்டடம் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

43—

குடியிருப்புகள்

வினா எண் 76071—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி மற்றும் மேட்டுப்பாளையம் நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி மற்றும் மேட்டுப்பாளையம் நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. எனவே, மேட்டூர் தொகுதி மற்றும் மேட்டுப்பாளையம் நகரப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

44—

குடியிருப்புகள்

வினா எண் 76075—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

(அ) அரக்கோணம் தொகுதி, அரிகலபாடி வாட்டர் ஹவுஸ் மற்றும் அரக்கோணம் நகரத்தில் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரிகலபாடி வாட்டர் ஹவுஸ் மற்றும் அரக்கோணம் நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இருப்பினும், பொது மக்களிடம் போதிய கேட்பு மற்றும் தகுந்த நிலம் கிடைக்கும்பட்சத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய தகுந்த ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் அரக்கோணம் தொகுதி, அரிகலபாடி வாட்டர் ஹவுஸ் மற்றும் அரக்கோணம் நகரத்தில் குடியிருப்புகள் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

குடியிருப்புகள்

வினா எண் 76079—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாலக்கோடு தொகுதி, கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர், மயிலாடுதுறை நகராட்சி, திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டம், கிழக்கு கடற்கரை சாலை, தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சி, வாணியம்பாடி தொகுதி, உதேயந்திரம் பேரூராட்சி, களம்பூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாலக்கோடு தொகுதியில் 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 413 மனைகள் மேம்பாடு செய்யப்பட்டு, 167 தனி வீடுகள் கட்டப்பட்டு, பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. தற்போது, பாலக்கோடு தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை.

கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை.

மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை நகரில் அமைந்திருந்த 58 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் 1974 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, அதில் 48 குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால், அரசாணை நிலை எண் 82, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, நாள் 18-5-2022 உத்தரவின்படி இடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டம், கிழக்கு கடற்கரைச் சாலைப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை.

தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை.

வாணியம்பாடி தொகுதி, உதேயந்திரம் பேரூராட்சி மற்றும் களம்பூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை.

இருப்பினும், பொது மக்களிடம் போதிய கேட்பு மற்றும் தகுந்த நிலம் கிடைக்கும்பட்சத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிய தகுந்த ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் மேற்கண்ட தொகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[*2023 ஏப்ரல் 17*

46—

அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கீடு

வினா எண் 31045—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சூலூரில் கட்டி முடிக்கப்பட்ட 500-க்கும் மேற்பட்ட அடுக்குமாடி வீடுகளை வீடு இல்லாதவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பேரூராட்சியில் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 528 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்ற பட்டியலில் பயனாளிகளின் பங்களிப்புத் தொகை செலுத்திய 496 குடும்பங்களுக்கு குலுக்கல் முறைமூலம் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 32 குடியிருப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்புதல் வழங்கப்பட்ட பட்டியலில் உள்ள பயனாளிகளுள் பங்களிப்புத் தொகை செலுத்த முன்வரும் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கு விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

47—

குடிநீர் இணைப்பு

வினா எண் 46531—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு, பெரமனூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை மீண்டும் வழங்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு, பெரமனூர் பகுதியில் உள்ள நாலுக்கால் மண்டபம் திட்டப் பகுதியில் 66 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டன. இக்குடியிருப்புகள் தற்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. இக்குடியிருப்புகளுக்கு சேலம் மாநகராட்சியால் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால், இரண்டு குடிநீர் குழாய்கள் மட்டும் துண்டிக்கப்பட்டுள்ளன. திட்டப் பகுதிக்குள் பணிகள் முடிவடைந்தவுடன், துண்டிக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் மீண்டும் இணைக்கப்பட்டு, விரைவில் சேலம் மாநகராட்சியால் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

48—

குடியிருப்புகள் ஒப்படைப்பு

வினா எண் 52488—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதி, கருவாட்டுப்பேட்டை, ஜெயில்பேட்டை, செங்குளம் ஆதி திராவிடர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பை மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள துரைசாமிபுரம் (கருவாட்டுப்பேட்டை) திட்டப் பகுதியில் 160 அடுக்குமாடிக் குடியிருப்புகள்,

ஜெயில்பேட்டை திட்டப் பகுதியில் 288 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பீச்சாங்குளம் (செங்குளம் ஆதி திராவிடர் குடியிருப்பு) திட்டப் பகுதியில் 685 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு, தகுதிவாய்ந்த பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாநகர், ஜெயில்பேட்டை, துரைசாமிபுரம் (கருவாட்டுப்பேட்டை) மற்றும் பீச்சாங்குளம் (செங்குளம் ஆதி திராவிடர் குடியிருப்பு) திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள், மின் விளக்குகள் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிடம் பராமரிப்புப் பணிகளுக்காக ஒப்படைக்க உரிய ஆவணங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலர்களுடன் கூட்டுபுல தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. மேலும், வாரிய திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிடம் ஒப்படைக்கும் பணிகள் தொடர் நடவடிக்கையில் உள்ளன. அவ்வசதிகள் விரைவில் முடிக்கப்பட்டு, திருச்சி மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும்.

49—

பட்டு விவசாய உபகரணங்கள்

வினா எண் 64647—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதியில் முன்னுரிமை அடிப்படையில் பட்டு விவசாயிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் வழங்கி, ஊக்கப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் பட்டுத் தொழிலை மேம்படுத்திடும்பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் பட்டு வளர்ச்சித் துறை சார்பாக முன்னுரிமை அடிப்படையில் பட்டு விவசாயிகளுக்குத் தேவையான நவீன பண்ணை உபகரணங்கள் மற்றும் தளவாடப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், நடப்பாண்டிலும் பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெண்ணாகரம், ஏரியூர் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய மூன்று இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்களின் பணி வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 34 பட்டு விவசாயிகளுக்கு நவீன பண்ணை உபகரணங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கப்படவுள்ளன.

50—

வீடுகள் ஒதுக்கீடு

வினா எண் 75546—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, மண்டலம்-3, வார்டு 24-ல் பாரதிதாசன் நகர் மற்றும் இந்திரா நகர், சர்வே எண் 191/1-ல் சுமார் 30 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக வீடுகள் ஒதுக்கீடு செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை, மாதவரம் தொகுதி, மண்டலம்-3, வார்டு 24, சர்வே எண் 191/1-ல் உள்ள பாரதிதாசன் நகர் மற்றும் இந்திரா நகர் (சூரப்பட்டு) திட்டப் பகுதிகளுக்கு கீழே கூறப்பட்டுள்ள அரசாணைகளில் வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணைகள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

[*2023 ஏப்ரல் 17*

வ. எண்	அரசாணை எண்
1	*110, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை நி.மு.5(2) துறை, நாள் 21-2-2005*
2	*115, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை நி.மு.5(2) துறை, நாள் 22-2-2005*

சென்னை, மாதவரம் தொகுதி, மண்டலம்-3, வார்டு-24, சர்வே எண் 191/1-ல் உள்ள பாரதிதாசன் நகர் திட்டப் பகுதியில் மொத்தம் 692 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதில், 500 மனைகளுக்கு ஒதுக்கீட்டாணைகள் வழங்கப்பட்டு, 237 குடும்பங்களுக்கு மட்டும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கிரையப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 263 ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளுக்கு கிரையப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திரா நகர் (சூரப்பட்டு) திட்டப் பகுதியில் 319 மனைகள் மேம்படுத்தப்பட்டு, 179 மனைகளுக்கு ஒதுக்கீட்டாணைகள் வழங்கப்பட்டதுடன், 117 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கிரையப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 62 மனைகளுக்கு கிரையப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒதுக்கீடுதாரர்கள் தங்கள் மனைக்கான முழு கிரையத் தொகை மற்றும் பரிசீலனைக் கட்டணம் ஆகியவற்றை நிலுவையின்றி வாரியத்திற்குச் செலுத்தியபின், கிரையப் பத்திரங்கள் வழங்க தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

51—

வீடுகள் ஒதுக்கீடு

வினா எண் 75547—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, வடசென்னை பகுதியில் வசிக்கும் நாதஸ்வரம், தவில் இசைக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக வீடுகள் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர ஏழைகள் வாழும் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு மட்டும் வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. மாதவரம் தொகுதி, வடசென்னை பகுதியில் வசிக்கும் நாதஸ்வரம், தவில் மங்கள இசைக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் இலவசமாக வீடுகள் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக தற்போது கட்டப்பட்டுவரும் குடியிருப்புகள் அனைத்தும் "அனைவருக்கும் வீட்டு வசதி" திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தகுதியுள்ள பயனாளிகள், தங்களது பங்களிப்புத் தொகையினை செலுத்தினால் குடியிருப்புகள் ஒதுக்கீடு பெற இயலும்.

எனவே, சட்டமன்றப் பேரவை வினாவில் கூறப்பட்டுள்ள மாதவரம் தொகுதி, வடசென்னையில் நகர ஏழை மக்கள் வசிக்கும் பகுதியில் வாழும் நாதஸ்வரம், தவில் மங்கள இசைக் கலைஞர்களுக்கு தகுதி அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும் குடியிருப்புக்கான பயனாளியின் பங்களிப்புத் தொகையினை செலுத்தும்பட்சத்தில் அவர்களுக்கும் வீடுகள் வழங்க, அரசு தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

52—

விற்பனை பத்திரம்

வினா எண் 75595—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை, தியாகராய நகர் தொகுதி, 130-வது வார்டு, ராஜாங்க மத்திய வீதி, வடபழனி பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு விற்பனை பத்திரம் வழங்க அரசு முன்வருமா?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், 130-வது வார்டு, ராஜாங்க மத்திய வீதி, வடபழனி பகுதியில் உள்ள சாலிக்கிராமம் திட்டப் பகுதியில் மொத்தம் 297 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 224 மனைகளுக்கு ஒதுக்கீட்டாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இம்மனைகளுள் 100 மனைகளுக்கு மட்டும் வாரியத்தின் பெயரில் நில மாற்றம் கீழ்க்காணும் அரசாணைகளில் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	அரசாணை எண்	நிலமாற்றம் செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை
1	596, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை நி.மு. 5(2) பிரிவு துறை, நாள் 23-9-2021	31
2	777, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை நி.மு. 5(2) பிரிவு துறை, நாள் 22-11-2021	10
3	777, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை நி.மு. 5(2) பிரிவு துறை, நாள் 22-11-2021	8
4	724, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை நி.மு. 5(1) பிரிவு துறை, நாள் 12-11-2021	51
மொத்தம்		100

ஒதுக்கீடுதாரர்கள் தங்கள் மனைக்கான முழு கிரயத் தொகை மற்றும் பரிசீலனைக் கட்டணம் ஆகியவற்றை நிலுவையின்றி வாரியத்திற்கு செலுத்தியபின், நில மாற்றம் செய்யப்பட்ட மனைகளுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்படும்.

இத்திட்டப் பகுதியில் வாரியத்தின் பெயரில் நில மாற்றம் செய்யப்பட்ட 100 மனைகளில் 10 ஒதுக்கீடுதாரர்களுக்கு வரைவு கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 90 மனைகளுக்கு வரைவு கிரயப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரைவு கிரயப்

2023 ஏப்ரல் 17]

பத்திரங்கள் பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் வாரியத்தினை உரிய ஆவணங்களுடன் அணுகி கிரயப் பத்திரம் பெற்றுக் கொள்வார்கள்.

மீதமுள்ள 124 மனைகளுக்கு வாரியத்தின் பெயரில் நில மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நில மாற்றம் பெறப்பட்டபின் கிரயப் பத்திரங்கள் வழங்க அரசு தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

53—

விற்பனை பத்திரம்

வினா எண் 75596—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை, தியாகராய நகர் தொகுதி, 135-வது வார்டு, சோமசுந்தர பாரதி நகர், வடபழனி பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு விற்பனை பத்திரம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், 135-வது வார்டு, வடபழனி பகுதியில் உள்ள சோமசுந்தர பாரதி நகர் திட்டப் பகுதியில் மொத்தம் 148 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 147 மனைகளுக்கு ஒதுக்கீட்டாணைகள் வழங்கப்பட்டுள்ளன, இம்மனைகளுள் வாரியத்தின் பெயரில் 110 மனைகளுக்கு மட்டும் நில மாற்றம் கீழ்க்காணும் அரசாணையில் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	அரசாணை எண்	நில மாற்றம் செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை
1	778, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை நி.மு. 5(2) பிரிவு துறை, நாள் 22-11-2021	110

[2023 ஏப்ரல் 17

ஒதுக்கீடுதாரர்கள் தங்கள் மனைக்கான முழு கிரயத் தொகை மற்றும் பரிசீலனைக் கட்டணம் ஆகியவற்றை நிலுவையின்றி வாரியத்திற்கு செலுத்தியபின், நில மாற்றம் செய்யப்பட்ட மனைகளுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்படும்.

இத்திட்டப் பகுதியில் வாரியத்தின் பெயரில் நில மாற்றம் செய்யப்பட்ட 110 மனைகளில் 15 ஒதுக்கீடுதாரர்களுக்கு வரைவு கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 95 மனைகளுக்கு வரைவு கிரயப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வரைவு கிரயப் பத்திரம் பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் வாரியத்தினை உரிய ஆவணங்களுடன் அணுகி கிரயப் பத்திரம் பெற்றுக்கொள்வார்கள். மீதமுள்ள 37 மனைகளுக்கு வாரியத்தின் பெயரில் நிலமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நில மாற்றம் பெறப்பட்டபின் கிரயப் பத்திரம் வழங்க அரசு தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

54—

காந்தி மண்டபம்

வினா எண் 4199 திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபத்தில் ஏற்பட்டிருக்கும் பழுதுகளை சரி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபத்தில் ஏற்பட்டிருக்கும் பழுதுகளை சரிசெய்வதற்காக பொதுப் பணித் துறையிடமிருந்து ரூ.1,27,742/-க்கு திட்ட மதிப்பீடு பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

2023 ஏப்ரல் 17]

55—

நினைவு மண்டபம்

வினா எண் 14278—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் உள்ள சுதந்திர போராட்ட வீரர் பி. சீனிவாசராவ் அவர்களின் நினைவு மண்டபத்தில் பழுது நீக்கவும், நூலகம் அமைக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டியில் உள்ள சுதந்திர போராட்ட வீரர் பி. சீனிவாசராவ் அவர்களின் நினைவு மண்டபத்தில் ஏற்பட்டிருக்கும் பழுதுகளை சரிசெய்வதற்காக பொதுப் பணித் துறையிடமிருந்து ரூ.15,80,000/-க்கு திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. செய்தி—மக்கள் தொடர்புத் துறையின்கீழ் உள்ள மணிமண்டபங்களில் முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

மணிமண்டபங்கள்

வினா எண் 28794—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் உள்ள மணிமண்டபங்களை மறுசீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் மணிமண்டபங்களில், பழுது ஏற்படின், பொதுப் பணித் துறையின்மூலம் திட்ட மதிப்பீடு பெற்று, முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக மணிமண்டபங்கள் மறுசீரமைக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

57—

அதியமான் கோட்டம்

வினா எண் 28802—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அதியமான் கோட்டத்தை காலமுறைப்படி பராமரிக்கவும், ஔவையார் அதியமான் குறித்த ஓவியம் (அ) சிற்ப அருங்காட்சியகம் மற்றும் ஒலி-ஒளிக் காட்சி அமைக்கவும், அங்குள்ள நூல்களை நவீனமயமாக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2022-2023 ஆம் ஆண்டிற்கான செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் "தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள அதியமான் கோட்டம் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்" என்று அறிவிப்பு செய்யப்பட்டு, அந்த அறிவிப்பினை செயல்படுத்திட அரசாணை (நிலை) எண் 135, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (நினைவகங்கள்) துறை, நாள் 19-9-2022-ல் ரூ.98,75,153/-க்கு நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

58—

வரலாற்று நூல்கள்

வினா எண் 28832—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக மணிமண்டபங்களில் உள்ள நூலகங்களில் வரலாற்று சம்பந்தமான நூல்களை அதிகரித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2022-2023 ஆம் ஆண்டிற்கான செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் "செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்மூலம் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில் அவர்களின் வாழ்க்கை வரலாறு, புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படும் மற்றும் இதர பணிகள் ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்" என்ற அறிவிப்பு அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக, தொடர் நடவடிக்கையில் உள்ளது.

59—

சிலை அமைத்தல்

வினா எண் 46902—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னையில் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு சிலை அமைக்கவும் அவரது பிறந்த தினத்தை அரசு விழாவாக கொண்டாடவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மெட்ராஸ் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட ஆணை வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அன்னாரது பிறந்த தினத்தை அரசு விழாவாக கொண்டாடக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2023 ஏப்ரல் 17

60—

சிலை அமைத்தல்

வினா எண் 46908—திரு. இரா. அருள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அடையாறு அவ்வை இல்லத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிக்கு முழு உருவச் சிலை, கிருஷ்ணகிரியில் ஓவியர் வேணுகோபால் சர்மா அவர்களுக்கும், கும்பகோணம் உடையானூரில் மாமன்னர் ராஜராஜனுக்கும் நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாருக்கு புதுக்கோட்டையில் திருவுருவச் சிலை அமைத்திட ரூ.9,84,650/-க்கு அரசாணை (நிலை) எண் 85, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நி), துறை, நாள் 11-07-2022-ல் ஆணை வெளியிடப்பட்டு, பொதுப் பணித் துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. எனவே, அடையாறு அவ்வை இல்லத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாருக்கு திருவுருவச் சிலை, கிருஷ்ணகிரியில் ஓவியர் வேணுகோபால் சர்மா அவர்களுக்கும், கும்பகோணம் உடையானூரில் மாமன்னர் ராஜராஜனுக்கும் நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

61—

நினைவகங்கள்

வினா எண் 46684—திரு. இரா. அருள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம், சட்டமன்றம் எதிரில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கு

2023 ஏப்ரல் 17]

சிலை அமைக்கவும், சிறந்த எழுத்தாளர்களுக்கு லா.ச. ராமாமிர்தம் அவர்களின் பெயரில் விருது வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், தில்லையாடியில், தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவகம் உள்ளதாலும், விழுப்புரம் மாவட்டத்தில், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கு மணிமண்டபம் உள்ளதாலும், தமிழ்நாட்டில் தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம், சட்டமன்றம் எதிரில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கு சிலை அமைக்கவும், சிறந்த எழுத்தாளர்களுக்கு லா.ச. ராமாமிர்தம் அவர்களின் பெயரில் விருது வழங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

62—

சிலை அமைத்தல்

வினா எண் 49911—திரு. இரா. அருள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கையில் R.K. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு மணிமண்டபமும், சிலை அமைக்கவும், சென்னை பல்கலைக்கழகத்தில் S.R. ரங்கநாதன் அவர்களின் படத்தை திறக்கவும், மேட்டூர்-கொளத்தூர் பிரிவு சாலையில் பொறியாளர் எல்லீஸ் சிலை அமைக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சிவகங்கையில் R.K. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு மணிமண்டபமும், சிலை அமைக்கவும், சென்னை பல்கலைக்கழகத்தில் S.R. ரங்கநாதன் அவர்களின் படத்தை திறக்கவும், மேட்டூர்-கொளத்தூர் பிரிவு சாலையில் பொறியாளர் எல்லீஸ் சிலை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[*2023 ஏப்ரல் 17*

63—

நினைவுச் சின்னம்

வினா எண் 53101—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணியை மீட்டு தமிழக எல்லையுடன் சேர்க்க போராடிய வடவெல்லை போராட்ட வீரர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதியில் திருத்தணியை தமிழக எல்லையுடன் சேர்க்க போராடிய வடவெல்லை போராட்ட வீரர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

உதவித்தொகை

வினா எண் 18690—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்துள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித்தொகை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், மாநில

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் இலங்கை அகதிகளுக்கான மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ், வருவாய்த் துறையின்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின்கீழ் பயன்பெறுவதற்கு அரசு பின்வரும் தகுதிகளை நிர்ணயித்துள்ளது:

இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்

- *வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்*
- *வயது-18 மற்றும் அதற்கு மேல், ஊனம் நிலை-80 சதவிகிதம் மற்றும் அதற்குமேல் இருத்தல் வேண்டும்.*

மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்

- *வேலையற்றவராக இருத்தல் வேண்டும்.*
- *தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.*
- *வயது – 18 மற்றும் அதற்கு மேல்.*
- *ஊனம் நிலை–40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்.*

மேற்கண்ட தகுதி நிலைகளை பூர்த்தி செய்யும் மாற்றுத் திறனாளிகளில் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் உரிய கள விசாரணைக்கு பின்னர் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இன்றைய (2-1-2023) நிலவரப்படி,

1. இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தில் 62,921 பயனாளிகளும்,

2. மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டத்தில் 3,90,329 பயனாளிகளும்,

3. இலங்கை அகதிகளுக்கான மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தில் 224 பயனாளிகளும் பயன்பெற்று வருகின்றனர் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

65—

மூன்று சக்கர வாகனம்

வினா எண் 59185—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் நிதியாண்டு முதல் 2021-2022 ஆம் நிதியாண்டு வரை 16,555 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 724 பயனாளிகளும் அடங்குவர். மேலும், இணைப்புச் சக்கரங்கள் கோரி விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளிகளின் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில், தகுதியான அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் மேற்படி உபகரணம் வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து எதிர்காலத்திலும் வழங்கப்படும் வாய்ப்பு உள்ளது.

66—

மூன்று சக்கர வாகனம்

வினா எண் 76463—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்கள், மூன்று சக்கர வாகனம் மற்றும் காது கேட்கும் கருவிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியை உள்ளடக்கிய திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 2011-2012 ஆம் நிதியாண்டு முதல் 2021-2022 ஆம் நிதியாண்டு வரை மொத்தம் 544 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 2019-2020 ஆம் நிதியாண்டு முதல் 2021-2022 ஆம் நிதியாண்டு வரை மொத்தம் 450 காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் செயற்கை கால்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதன்கீழ் உதவி உபகரணங்கள் கோரி விண்ணப்பிக்கும் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

67—

பயிற்சிகள்

வினா எண் 61754—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மீன்பிடி தடைகாலத்தில் மீனவர்களுக்கு மீனவ பெண்களுக்கு மாற்றுத் தொழில் செய்ய பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழக மீனவர்களுக்கும் மற்றும் மீனவ மகளிருக்கும் மீன்பிடி தடை காலங்களில் தேவை ஏற்படின் மாற்றுத் தொழில் செய்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் தேவையான பயிற்சிகள் வழங்கிட அரசு ஆவன செய்யும். மேலும், தேவையின் அடிப்படையில் கடல்பாசி வளர்க்கும் பயிற்சி, சுகாதாரமான

[2023 ஏப்ரல் 17

முறையில் கருவாடு தயாரிக்கும் பயிற்சி, மதிப்பூட்டிய உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிகள் (மீன்/இறால் ஊறுகாய், மீன் வடகம், மீன் பிஸ்கட் தயாரித்தல்), மீன் தூள், மீன் எண்ணெய் தயாரிக்கும் பயிற்சிகள், அலங்கார மீன்வளர்ப்பு பயிற்சி போன்ற பயிற்சிகள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் வழங்கப்படும்.

68—

மீன்பிடி உரிமம்

வினா எண் 69271—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து கண்மாய்களிலும் மீன்கள் வளர்க்க தண்ணீர் நிரப்புவதற்காக போர்வெல் அமைக்கவும், கன்னியாகுமரி, தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டம் எல்லைக்குட்பட்ட குளங்களில் மீன் பாசி குத்தகை உரிமத்தையும், கிருஷ்ணகிரி தொகுதியில் மீன்பிடிக்கும் குத்தகை உரிமத்தையும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்து கண்மாய்களிலும் வடகிழக்கு பருவமழை மற்றும் ஆற்று நீர் பாசனம் வழியாக போதுமான நீர் கிடைத்திடும்பட்சத்தில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ளலாம். கன்னியாகுமரி, தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள பொதுப் பணித் துறைக்கு சொந்தமான குளங்களின் மீன்பாசி குத்தகை பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதியில் பொதுப் பணித் துறைக்கு சொந்தமான குளங்களில் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் மீன்பாசி குத்தகையில் உள்நாட்டு மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

2023 ஏப்ரல் 17]

69—

பால் கொள்முதல் நிலையங்கள்

வினா எண் 69468—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி மற்றும் நோய் தடுப்பு முகாம்களை அனைத்து பால் கொள்முதல் நிலையங்களில் வாரம் ஒருமுறை நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கோமாரி மற்றும் இதர நோய்கள் குறித்த ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு செய்திகள் விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர அனைத்து கிராமங்களிலும் சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டு கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடத்தில் எடுத்துரைக்கப்படுகிறது. தேசிய கால்நடை நோய் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் 2-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி பணிகள் செப்டம்பர் 2021-ல் தொடங்கி ஜூன் 2022-ல் முடிவுற்றது. அச்சுற்றில் மொத்தம் 86.33 இலட்சம் தகுதியுடைய மாட்டினங்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்கள்மூலம் அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கோமாரி மற்றும் இதர நோய்கள் குறித்த நோய் தடுப்பு முகாம்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

கோமாரி நோய் குறித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடை பராமரிப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து கோமாரி நோய் மற்றும் தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்தும், தடுப்பூசிப் பணியின்போது ஒத்துழைப்பும் அளித்து வருகின்றனர். எனவே, தமிழ்நாட்டில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி மற்றும் இதர நோய் தடுப்பு

முகாம்களை அனைத்து பால் கொள்முதல் நிலையங்களிலும் வாரம் ஒரு முறை நடத்துவதற்கான தேவை எழாது. இருப்பினும், கால்நடைகளுக்கான நோய்கள் மற்றும் நோய் தடுப்பு விவரங்கள் குறித்து அறிய வேண்டியிருப்பின் விவசாயிகள் தங்களுக்கு அருகாமையில் உள்ள கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளை அணுகி விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

70—

தேன் கொள்முதல்

வினா எண் 28540—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நீலகிரி மாவட்டத்தில் வனங்களிலிருந்து எடுக்கப்படும் தேனை காதிமூலம் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே பச்சை தேன் கொள்முதல் செய்து பதப்படுத்தப்பட்டு வாரிய கதர் அங்காடிகள் மூலமாக தேன் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்போர் மற்றும் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் ஏதும் இல்லை. இருப்பினும் இம்மாவட்டத்தில் உள்ள தேன் விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேன் கொள்முதல் செய்து அதனை திருப்பூர் கதர் வளாகத்தில் பதப்படுத்திட வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலனை செய்யப்படும்.

2023 ஏப்ரல் 17]

71—

மின் உற்பத்தி

வினா எண் 28394—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள குந்தா பவர் ஹவுஸ் கெத்தை, பரளி மின் உற்பத்தி நிலையத்தில் அதிக அளவில் மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொதுவாக நீர் மின் நிலையங்கள் உச்ச மின் தேவையை பூர்த்தி செய்வதற்கும் மரபுசாரா மின் உற்பத்தியை மின் கட்டமைப்புடன் இலகுவாக ஒருங்கிணைப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள குந்தா பவர் ஹவுஸ் கெத்தை, பரளி மின் உற்பத்தி நிலையங்களில் அதன் முழு உற்பத்தித் திறனுடன் மின் கட்டமைப்பின் தேவைக்கேற்ப மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு (2021) ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத மின் உற்பத்தியை ஒப்பிடுகையில் நடப்பாண்டு (2022) ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அதிக அளவு மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

(மின் உற்பத்தி மில்லியன் யூனிட்)

மாதம்	கெத்தை		பரளி	
	2021	2022	2021	2022
ஆகஸ்ட்	60.16	85.85	36.46	53.82
செப்டம்பர்	55.57	79.55	33.37	48.98

[*2023 ஏப்ரல் 17*

72—

மின் உற்பத்தி

வினா எண் 28406—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆற்று நீரில் இருந்து மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து உற்பத்தியாகும் கோதையாறு, பரளியாறு மற்றும் சிற்றாறு ஆகியவை ஒன்றாக இணைந்த பிறகு குழித்துறை ஆறு என்று அழைக்கப்படுகிறது. குழித்துறை ஆறு சுமார் 22 கி.மீ. தொலைவில் வழிந்தோடி அரபிக்கடலில் கலக்கிறது. குழித்துறை ஆற்றுக்கும் கடல் மட்டத்திற்கும் இடையேயான வேறுபாடு மிகவும் குறைவாக உள்ளது. ஆகையால், குழித்துறை ஆற்று நீரில் இருந்து புனல் மின் திட்டம்மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகள், நிலவியல் மற்றும் நீரியல் ஆய்வுகளின் அடிப்படையில் இல்லை.

73—

நீர் மின் நிலையங்கள்

வினா எண் 28417—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழுதடைந்துள்ள நீர் மின் நிலையங்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர் மின் நிலையங்களின் பராமரிப்புப் பணிகள் முறையான காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறிய அளவில் ஏற்படும் பழுதுகள் வாரிய பணியாளர்கள் மற்றும் கையிருப்பு உதிரி பாகங்களைக் கொண்டு நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

பெரிய அளவில் பழுதடைந்துள்ள நீர் மின் நிலையங்களை சீரமைக்க வாரிய விதிமுறைகளின்படி, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, முறையான ஒப்புதல் பெற்று பணி ஒப்பந்த ஆணைகள் வழங்கப்பட்டு சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

74—

மின் உபகரணங்கள்

வினா எண் 51027—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு தேவையான உபகரணங்கள், உற்பத்திக்கான மூலப்பொருட்களை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்திக்கு தேவையான உபகரணங்கள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், மின் உற்பத்திக்கு தேவையான மூலப்பொருளான நிலக்கரி தலைமையகத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு தேவையான அளவு இருப்பில் உள்ளது.

75—

மும்முனை மின்சாரம்

வினா எண் 63014—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 17*

(அ) விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் குறிப்பிட்ட நேரத்திற்குத் தடையின்றி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலிருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் ஒரு நாளின் பகற்பொழுதில் 6 மணி நேரமும் இரவுப் பொழுதில் 6 மணி நேரமும் ஆக மொத்தம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் தங்குதடையின்றி மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

76—

கைத்தறி பூங்கா

வினா எண் 28585—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, பாலூர் கண்ணவிளை பகுதியில் கைத்தறி தொழில்நுட்ப பூங்கா மற்றும் ஆரணியில் பட்டு கைத்தறி பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 195, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை, நாள் 30-12-2015 மற்றும் அரசாணை (நிலை) எண் 131, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை, நாள் 06-09-2019-ன்படி சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா

2023 ஏப்ரல் 17]

அமைக்க முன்வரும் தொழில்முனைவோர்களுக்கு திட்டத் தொகையில் மாநில அரசால் 50 சதவிகித மானியம் (ரூ.2.50 கோடிக்கு மிகாமல்) வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை–2019-ன்படி ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க ஒன்றிய அரசால் 40 சதவிகித திட்டத்தொகையும் (ரூ.40 கோடிக்கு மிகாமல்), தமிழ்நாடு அரசால் 9 சதவிகித திட்டத்தொகையும் (ரூ.9 கோடிக்கு மிகாமல்) நிதியுதவி வழங்கப்படுகிறது. எஞ்சிய 51 சதவிகிதம் மட்டுமே தொழில்முனைவோர்களின் பங்களிப்பாகும்.

மேற்படி வழிகாட்டுதலின்படி தற்போது கைத்தறி துறையின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், கீழ்கதிர்பூர் கிராமத்தில் பேரறிஞர் அண்ணா பட்டு கைத்தறி பூங்கா ஒன்று செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 18,000 கைத்தறி தொழில் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

எனவே, மேற்படி திட்டங்களின்கீழ் நெசவாளர் பூங்கா அமைப்பதற்கு உரிய செயல்திட்டத்துடன் தொழில்முனைவோர்கள் தொழில் துவங்க முன்வரும்பட்சத்தில் அதனை பரிசீலித்து கிள்ளியூர் தொகுதி, பாலூர் கண்ணவிளை பகுதியில் கைத்தறி தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், ஆரணியை மையமாகக் கொண்டு "ஆரணி கைத்தறி பட்டு பூங்கா" அமைப்பது தொடர்பாக 2015 ஆம் ஆண்டு தமிழக அரசு மற்றும் M/s. *ஆரணி கைத்தறி பட்டு பூங்கா லிட். என்கிற தனியார் நிறுவனத்திற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, ஆரணி கைத்தறி பட்டு பூங்கா அமைக்க வேண்டி 20 ஏக்கர் நிலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆரணி கைத்தறி பட்டு பூங்கா அமைப்பது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து சமர்ப்பித்திடுமாறு ஆரணி கைத்தறி பட்டு பூங்கா குழும உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.*

ஆரணி கைத்தறி பட்டு பூங்கா குழும உறுப்பினர்களிடமிருந்து உரிய செயல்திட்டத்துடன் கோரிக்கைகள் பெறப்படும்பட்சத்தில் அதனை பரிசீலித்து

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 17

ஆரணியில் பட்டு கைத்தறி பூங்கா அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

77—

நூல் விலை நிர்ணயம்

வினா எண் 48989—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, விசைத்தறி உரிமையாளர்களுக்கு நூலின் விலையை தமிழக அரசே நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெசவாளர்கள், அரசின் சீரிய திட்டமான இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம், கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தி திட்டம் மற்றும் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

அரசுத் திட்டங்களுக்காக பயன்படுத்தும் நூல் இரகங்களுக்கு அரசால் நூல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, கூட்டுறவு சங்கங்களின்மூலம் விசைத்தறி நெசவாளர்களுக்கு நூல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நூல் விலையானது ஒவ்வொரு இரகத்திற்கு ஏற்ப விலை வித்தியாசம் இருக்கும். மேலும், பருத்தி விளைச்சலின் அடிப்படையிலும், அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையின் அடிப்படையிலும் நூல் விலையானது சந்தையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

சங்கரன்கோவில் பகுதியில் உள்ள விசைத்தறியாளர்கள் தனியார் நூற்பாலைகளில் தனியார் நிர்ணயம் செய்யும் விலையில் கொள்முதல் செய்து வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், நூற்பாலைகள் நூல் விலையை நிர்ணயம் செய்து வருவதால்

2023 ஏப்ரல் 17]

அரசால் நூல் விலை நிர்ணயம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

78—

பட்டு விலை உயர்வு

வினா எண் 62467—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோரைபட்டு விலை உயர்வினை கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கைத்தறி துறையின் கட்டுப்பாட்டில் 83 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களினால் பட்டு சேலை, பட்டு வேட்டி, பட்டு பாவாடை, அங்கவஸ்திரம் ஆகிய பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடந்த ஆறுமாத காலத்தில் பட்டு நூல் விலை பட்டியல் விவரம் கீழ்க்கண்டவாறு:

மதிப்பு : ரூபாயில்

வ. எண்	மாதம்	பட்டு பாவு (கிலோ ஒன்றுக்கு)	பட்டு ஊடை (கிலோ ஒன்றுக்கு)
1	செப்டம்பர்-2022	6000	5400
2	அக்டோபர்-2022	6050	5540
3	நவம்பர்-2022	6100	5640
4	டிசம்பர்-2022	6200	5790
5	ஜனவரி-2023	6125	5715
6	பிப்ரவரி-2023	6045	5675

[*2023 ஏப்ரல் 17*

மேற்படி பட்டு நூல் விலை பட்டியலின் அடிப்படையில் விலை உயர்வினை ஒப்பிடுகையில் பட்டு விலையானது கடந்த இரண்டு மாதங்களில் கணிசமான அளவு குறைந்துள்ளது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களின் உற்பத்தி மூலப்பொருளான பட்டு நூலின் விலையின் காரணமாக உற்பத்தி செய்யப்படும் இரகங்களின் மதிப்பு கணக்கீட்டின்போது சராசரியாக 50 விழுக்காடு மூலப்பொருள் மதிப்பு கணக்கிடப்படுவதால் பட்டு இரகத்தின் விற்பனை விலை அதிகரிக்கப்படுகிறது.

பட்டுக் கூடுகளின் சராசரி விலையை கொண்டு கச்சாப்பட்டு நூலுக்கான விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கச்சாப்பட்டு நூலின் சராசரி விலையுடன் பட்டுக்கழிவு, கச்சாப்பட்டு விற்பனை சேவைக்கட்டணம், முறுக்கேற்றும் கூலி, முறுக்கேற்றிய பட்டுக்கு கிட்டங்கி கட்டணம் மற்றும் முறுக்காளர் இலாபம் ஆகியவை சேர்த்து முறுக்கேற்றிய பட்டு நூலுக்கான விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

மேலும், முறுக்கேற்றிய பட்டின் விலையையும் உடனடியாக குறைக்க, பட்டுநூல் இணையம் தொடர்ந்து கண்காணித்து விலையினை குறைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

எனவே, பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு தங்கு தடையின்றி தொழில் வழங்க ஏதுவாக உற்பத்திக்கு தேவையான பட்டு மூலப்பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கவும் மற்றும் பட்டு விலை உயர்வினை கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் பட்டு வளர்ச்சி துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

79—

ஜவுளிப் பூங்கா

வினா எண் 70339—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, அரக்கோணம் தொகுதி, குருவராஜப்பேட்டை, பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சி

2023 ஏப்ரல் 17]

மற்றும் உசிலம்பட்டி தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 195, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை, நாள் 30-12-2015-ன்படி சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்கள் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா அமைக்க முன்வரும் தொழில்முனைவோர்களுக்கு தகுதிவாய்ந்த திட்டத்தொகையில் மாநில அரசால் 50 சதவிகித மானியம் (ரூ.2.50 கோடிக்கு மிகாமல்) வழங்கப்படுகிறது. மேலும், அரசாணை (நிலை) எண் 131, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை, நாள் 06-09-2019-ன்படி சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா குறைந்தபட்சம் 3 தொழிற்கூடங்களுடன் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட வேண்டும் என தகுதி வரம்புகள் திருத்தியமைக்கப்பட்டன. ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான திட்ட மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் ஆய்வுக்கூடம் வடிவமைப்பு மையம், பயிற்சி மையம், காப்பகம், உணவகம், பணியாளர்கள் விடுதி உள்ளிட்ட பிற கூறுகளுக்கு மானியம் வழங்குவதோடு கூடுதலாக தொழிற்கூடங்களுக்கும் மானியம் வழங்க அரசாணை (நிலை) எண் 97, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (சி2) துறை, நாள் 24-06-2022-ன்படி திருத்திய அரசாணை வெளியிடப்பட்டது. எனவே, மேற்படி திட்டத்தின்கீழ் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு தேவையான இடத்தை தெரிவு செய்து, தொழில்முனைவோர்கள் முன்வரும்பட்சத்தில் மடத்துக்குளம் தொகுதி அரக்கோணம் தொகுதி, குருவராஜப்பேட்டை, பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சி மற்றும் உசிலம்பட்டி தொகுதியில் புதிய ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு தமிழக அரசால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2023 ஏப்ரல் 17

80—

தொற்றுநோய் விழிப்புணர்வு

வினா எண் 18906—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக பெண்களுக்கு கோலிசிஸ், டிடிஸ், சிறுநீரக பாதை தொற்று ஆகிய நோய்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், பொது சுகாதார துறையின்கீழ், எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சுகாதார வசதிகளை வழங்கும்பொருட்டு நடமாடும் மருத்துவமனைத் திட்டம் துவங்கப்பட்டு, இக்குழுவில் 1 மருத்துவர், 1 செவிலியர், 1 ஓட்டுநர் மற்றும் 1 துப்புரவு உதவியாளர் ஆகியோர் பணிபுரிகின்றனர். இதனுடன், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலமும் தொற்றா நோய் சிகிச்சைக்கான சேவை வழங்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட மருத்துவமனைகளின்மூலம் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மேற்கொள்ளப்பட்டு நோய்கள் கண்டறியப்பட்டு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அரசு மருத்துவமனைகளில் ஆரோக்கிய திட்டத்தின்மூலம் 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் உட்பட அனைவரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் முகாம்களில் இலவசமாக 25 விதமான உடல் பரிசோதனைகள் செய்துகொள்ள வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், முழு உடல் பரிசோதனை மற்றும் மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத்

2023 ஏப்ரல் 17]

திட்டத்தின்மூலம் அரசு பொது மருத்துவமனைகளில் தங்கம், வைரம், பிளாட்டினம் மற்றும் பிளாட்டினம் பிளஸ் தொகுப்புகளின்மூலம் மிகக் குறைந்த செலவிலேயே இரத்த பரிசோதனை, இசிஆர், சிறுநீரகப் பரிசோதனை, சிறுநீரக செயல்பாடு அறியும் பரிசோதனை, இரத்த கொழுப்பு பரிசோதனை உள்ளிட்ட பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதன்மூலம், ஆரம்ப நிலையிலேயே நோயை கண்டறிந்து சிகிச்சை மேற்கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

81—

பெண்களுக்கு விழிப்புணர்வு

வினா எண் 18907—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும்-மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெண்களுக்கு இன்சிஷனல் கெர்ணியா, உடல் பருமன் ஆகியவை குறித்து விழிப்புணர்வை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும்—மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சுகாதார வசதிகளை வழங்கும்பொருட்டு பொது சுகாதார துறையின்கீழ், நடமாடும் மருத்துவமனைத் திட்டம் துவங்கப்பட்டு, இக்குழுவில் 1 மருத்துவர், 1 செவிலியர், 1 ஓட்டுநர் மற்றும் 1 துப்புரவு உதவியாளர் ஆகியோர் பணிபுரிகின்றனர். இதனுடன், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலமும் தொற்றா நோய் சிகிச்சைக்கான சேவை வழங்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட மருத்துவமனைகளின்மூலம் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு

[*2023 ஏப்ரல் 17*

நோய்கள் கண்டறியப்பட்டு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசு மருத்துவமனைகளில் அம்மா ஆரோக்கிய திட்டத்தின்மூலம் 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் உட்பட அனைவரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் முகாம்களில் இலவசமாக 25 விதமான உடல் பரிசோதனைகள் செய்துகொள்ள வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பரிசோதனைகள் வாயிலாக நோய் பாதிப்புகள் கண்டறியப்பட்டால் அரசு மருத்துவமனைகளின்மூலம் அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றன.

82—

கூடுதல் கட்டடங்கள்

வினா எண் 23402—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தாலுகா அரசு மருத்துவமனை 78 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 620 வெளிநோயாளிகள் மற்றும் 41 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவு, பிரசவ பிரிவு, பிரசவ பின் கவனிப்பு பிரிவு, சீமாங் பிரிவு, பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையம் (NBSU), ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, தொற்று நோய் பிரிவு, சித்தா பிரிவு, தொழுநோயாளிகள் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், முழுமையான ஆய்வக வசதி, இசிஜி, எக்ஸ்ரே, USG ஸ்கேன், வெண்டிலேட்டர் போன்ற வசதிகளும், போதிய அளவில் மருத்துவ உபகரணங்களும் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய 2 அறுவை அரங்குகள், இரத்த சேமிப்பு நிலையம், அவசர ஊர்தி போன்ற வசதிகள் உள்ளன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் போதுமான

2023 ஏப்ரல் 17]

கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. எனவே, போளூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

83—

மருத்துவமனை

வினா எண் 25776—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சியில் அமைந்திருக்கும் மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சியில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. இங்கிருந்து 15 கி.மீ. தொலைவில் திண்டிவனம் அரசு வட்ட மருத்துவமனை 197 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, பிரசவப் பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு, குழந்தைகள் நலப்பிரிவு, சீமாங், NICU, *தலைக்காய சிகிச்சை பிரிவு, கண் சிகிச்சை பிரிவு, இரத்த வங்கி, குளிரூட்டப்பட்ட 3 அறுவை அரங்கங்கள் போன்ற பிரிவுகளுடனும், போதுமான உபகரணங்கள், அவசர ஊர்தி மற்றும் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மயிலத்தைச் சுற்றி மானம்பூண்டி, முப்புலி, நெடிமொழியனூர், பெரியதச்சூர், ரெட்டணை, செந்தூர் ஆகிய இடங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மயிலத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் விழுப்புரம் வட்ட அரசு மருத்துவமனையும், 21 கி.மீ. தொலைவில் விழுப்புரம் அரசு*

[*2023 ஏப்ரல் 17*

மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் திண்டிவனம். அரசு வட்ட மருத்துவமனையும், 21 கி.மீ. தொலைவில் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அனைத்து வசதிகளுடனும் சிறப்பாக செயல்பட்டு வருவதால் மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

84—

செவிலியர் குடியிருப்பு

வினா எண் 25787—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தொகுதியில் ஊத்துக்குளி மருத்துவமனையில் செவிலியர் குடியிருப்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி பகுதியில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின்கீழ் 60 படுக்கை வசதிகள் கொண்ட ஊத்துக்குளி அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 132 வெளிநோயாளிகளும், 4 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். செவிலியர்கள், மேற்கூறிய அரசு மருத்துவமனையின் அருகிலேயே வசித்து வருவதாலும், அம்மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணிபுரியும் செவிலியர்கள் தங்கிக்கொள்ள தனிக் கட்டட வசதிகள் இருப்பதாலும், ஊத்துக்குளி அரசு மருத்துவமனையில் செவிலியர் குடியிருப்பு கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 17]

85—

புற்றுநோய் சிகிச்சை பிரிவு

வினா எண் 25846—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சை பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்தின்கீழ் செயல்படும் அனைத்து வட்டம், வட்டம் சாரா மருத்துவமனை மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தொற்றா நோய் சிகிச்சை பிரிவு (NCD) செயல்பட்டு வருகிறது. இதில் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் பெண்களுக்கான மார்பக, கர்ப்பப்பை வாய்புற்று நோய் ஆகியவற்றை கண்டறிவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது பொதுவாக புற்றுநோயை தவிர்க்க, புகையிலை, புகைப்பிடித்தல், பாக்கு மற்றும் மது ஆகியவற்றை தவிர்க்க அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புற்றுநோய் பற்றிய விவரங்களை அறியவும், அந்நோயினை கண்டறிய அரசு மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் குறித்தும் ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது. எனவே, பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு உடனடியாக நோய் கண்டறியப்பட்டு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்நோயின் சிகிச்சை முறை கீமோதெரபி மற்றும் கதிர்வீச்சுமூலம் அளிக்கப்படுவதால், அதற்காக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிரத்தியேகமாக கட்டப்பட்ட அறைகளில் வைத்து மற்றவர்களுக்கு கதிர்வீச்சின் பாதிப்பு ஏற்படாத வகையில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இருப்பினும், தேசிய நலத்திட்ட குழுமம்மூலம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்கான Day Care Chemotherapy Unit ஒப்பளிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டால் இந்நோயாளிகளுக்கு மேற்படி மருத்துவமனைகளில் ஆரம்ப நிலை சிகிச்சை மற்றும் தொடர் சிகிச்சை வழங்கப்படுகிறது. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். புற்றுநோய் மையம் அமைப்பதற்கு உயர் சிறப்பு மருத்துவர்கள் (Super Specility Doctors) அவசியம். தற்சமயம் இம்மருத்துவர்கள் மருத்துவக் கல்லூரியிலேயே பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, மருத்துவக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டின்கீழ் மட்டுமே புற்றுநோய் மையத்தை அமைப்பது சாத்தியமாகும்.

86—

குழந்தைகள்

வினா எண் 48880—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உயிரிழப்பில்லாத குழந்தைகள் பிறப்பதையும் வளர்ப்பினையும் உறுதியாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள மக்கள் தொகையில் 28% 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் உள்ளனர். 2025 ஆம் ஆண்டுக்குள் குழந்தைகள் இறப்பு விகிதத்தை 1000 உயிருள்ள பிறப்புகளுக்கு 13 ஆக குறைக்கவும், குழந்தைகளுக்கு சுகாதார சேவைகள் அளிக்க தேவையான பயனுள்ள திட்டங்கள் மாநிலத்தில் நடைமுறையில் உள்ளன. 2010 ஆம் ஆண்டில் 1000 உயிருள்ள பிறப்புகளுக்கு 24 என்ற

2023 ஏப்ரல் 17]

குழந்தை இறப்பு விகிதம் (IMR) கணிசமாக குறைந்தது, 2019 மாதிரி பதிவு அமைப்பு தரவுப்படி, நமது மாநிலத்தில் 15 ஆக உள்ளது (தேசிய குழந்தை இறப்பு விகிதம் 30). குழந்தை இறப்பு விகிதம் குறைவாக உள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு 2-வது இடத்தைப் பெற்றுள்ளது.

மேலும், குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைக்கும் வகையில் பல்வேறு பிரிவுகள் மற்றும் திட்டத்தின்மூலம் தமிழகத்தில் உயிரிழப்பில்லாத குழந்தைகள் பிறப்பதையும் அந்த குழந்தைகள் வளர்ப்பினையும் உறுதியாக்குகின்றன.

87—

புதிய ஓட்டுநர்கள்

வினா எண் 20967—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓட்டுநர் பற்றாக்குறையை தவிர்க்க தரமான கனரக புதிய ஓட்டுநர்களை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து நிறுவனம் (IRT-Institute of Road Transport) *மற்றும் பிற கனரக ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலமாக பயிற்சி அளித்து தரமான கனரக ஓட்டுநர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றனர். மேலும், ஏற்கெனவே உரிமம் பெற்ற ஓட்டுநர்களுக்கு ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலின்போது ஒருநாள் புத்தாக்க பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.*

88—

வாடகை நிர்ணயம்

வினா எண் 46796—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

சேலம், 1-வது கோட்ட ஜாகிர் காமநாயக்கன்பட்டி அருள்மிகு திம்மராயப்பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம் வழக்கறுத்தீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சொந்தமான பகுதியில் வசிப்பவர்களுக்கு வாடகை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஜாகீர் காமநாயக்கன்பட்டி, அருள்மிகு திம்மராயப்பெருமாள் திருக்கோயிலானது சட்டப்பிரிவு 49(i)-ன்கீழ் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேராத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிர்வாகமானது சேலம் வட்டம், சன்னியாசிகுண்டு அருள்மிகு குமரகிரிதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிலை-3 செயல் அலுவலரால் தக்கார் நிலையில் கவனிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயில் நிலத்தில் வசிப்பவர்களுக்கு ஏற்கனவே நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், வட்டம் மற்றும் நகர், காந்தி சாலையில் அமைந்துள்ள அருள்மிகு வழக்கறுத்தீஸ்வரர் மற்றும் பராசரேஸ்வரர் திருக்கோயில் சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகைச் செய்யப்பட்ட காஞ்சிபுரம் இணை ஆணையர் ஆளுமைக்குட்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமானதும் காஞ்சிபுரம் நகர், வார்டு எண் 2, பிளாக் எண் 41 மற்றும் பிளாக் எண் 23, எண்ணெய்காரத் தெரு நகர புல எண் 1666 முதல் 1689 வரை 1.52 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடம் 1912-ம் வருடத்திய ரிவிஷன் சர்வே ரீ செட்டில்மெண்ட் பதிவேட்டின்படியும், செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் நகர் டிவிஷன் 2 மைனர் இனாம் ஒழிப்பு சட்டம் 30/1969-ன் படியும் நாளது தேதி வரை வட்டாட்சியர் அலுவலக வருவாய் துறைமூலம் வழங்கப்படும் பட்டா சிட்டாவிலும் மேற்கண்ட விவரப்படி உள்ள சொத்துக்கள் அனைத்தும் காஞ்சிபுரம் அருள்மிகு வழக்கறுத்தீஸ்வரர் திருக்கோயில் பெயரில் பதிவாகியுள்ளது. எனவே சட்டப்பிரிவு 78-ன்கீழ் மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்கள் மீது இணை ஆணையர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி வழக்கில் ஆக்கிரமிப்புதாரர்களால் மேற்கண்ட சொத்துக்கள் அனைத்தும் தங்களுக்கு சொந்தமானது என வழக்கில் எதிருரை தாக்கல்

2023 ஏப்ரல் 17]

செய்யப்பட்டுள்ளது. எனவே, 36 ஆக்கிரமிப்புதாரர்கள் தாமாக முன்வந்து வாடகை செலுத்த வரும்பட்சத்தில் சட்டவிதிகளின்படி நியாய வாடகை நிர்ணயம் செய்து வாடகைதாரர்களாக அங்கீகரித்து வரன்முறை செய்யப்படும்.

89—

முதலுதவி மருத்துவ மையம்

வினா எண் 62433—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயில் முதலுதவி மருத்துவ மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மதுரை, அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேலசித்திரை வீதியில் அமைந்துள்ள பிர்லா தங்கும் விடுதியில் 2-12-2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், காணொலி காட்சிமூலம் முதலுதவி மருத்துவ மையம் திறக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்காக சிறப்பாக இயங்கி வருகிறது.

90—

ஆங்கில வழிக் கல்வி

வினா எண் 44913—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், வடுவூர் தென்பாதி நடுநிலைப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வி துவங்க அரசு ஆவன செய்யுமா?

[*2023 ஏப்ரல் 17*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், வடுவூர் தென்பாதி நடுநிலைப் பள்ளியில் 2019-2020 ஆம் கல்வியாண்டு முதல், LKG *மற்றும்* UKG, *1 மற்றும் 2 ஆம் வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வி தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 2022-2023 ஆம் கல்வியாண்டில்* LKG *வகுப்பில் 20 மாணவர்களும்,* UKG *வகுப்பில் 8 மாணவர்களும், மேலும், 1 முதல் 2 ஆம் வகுப்பு வரை 35 மாணவர்களும் ஆங்கில வழியில் கல்வி பயின்று வருகின்றனர். மேலும், வரும் கல்வியாண்டுகளில் அடுத்தடுத்த வகுப்புகளுக்கும் ஆங்கில வழிக் கல்வி தொடர்ந்து நடைபெறும்.*

91—

கல்வியை மேம்படுத்துதல்

வினா எண் 46462—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிக் கல்விக் கட்டமைப்பில் மாற்றத்தை உருவாக்கி அதிநவீன தொழில்நுட்பங்களை புகுத்தி கல்வியை மேம்படுத்தவும், தூய்மை கல்வித் திட்டத்தை உருவாக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு பள்ளி மாணவர்களின் கல்வி கற்றல் திறனை மேம்படுத்திட தற்போது 3,090 உயர்நிலை பள்ளிகளில் 10 கணினியுடனும், 2,939 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 20 கணினியுடனும் அதிவேக இணையதள வசதியுடன்கூடிய உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு மாணவர்கள் சிறப்பான முறையில் பயன்படுத்தி வருகிறார்கள். மேலும் தொடக்கக் கல்வியில் 500 ஊராட்சி ஒன்றிய/நடுநிலைப் பள்ளிகளில் அதிவேக இணையதள வசதியுடன்கூடிய

2023 ஏப்ரல் 17]

உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்க பணி நடைபெற்று வருகிறது.

92—

புதிய மென்பொருள்

வினா எண் 69083—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பள்ளி மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பவியல் துறைமூலம் புதிய மென்பொருளை உருவாக்கும் செயல்திறனை கற்றுக் கொடுக்கவும், மேல்நிலைப் பாடங்களில் சேர்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பள்ளிக் கல்விக்கான பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் மாற்றியமைக்கப்படும்போது பள்ளி மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த புதிய மென்பொருளை உருவாக்கும் செயல்திறனை கற்றுக் கொடுப்பதற்கான பாடக் கருத்துருக்கள் பாடநூலில் சேர்ப்பது சார்ந்து பாடநூல் உருவாக்க குழுவினரின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

93—

வாழ்க்கை வரலாறு

வினா எண் 76213—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தில்லையாடி வள்ளியம்மையின் வரலாற்றை தமிழ் பாடப்புத்தகத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பள்ளிக் கல்விக்கான பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் மாற்றியமைக்கப்படும்போது தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் தொடர்பான பாடக்கருத்துருக்கள் பாடநூலில் சேர்ப்பது சார்ந்தது பாடநூல் உருவாக்க குழுவினரின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

94—

கழிவுநீர்

வினா எண் 28422—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஒன்றியம், குன்னவாக்கம் ஊராட்சியில் உள்ள Sehwing Stetter *நிறுவனத்திலிருந்து கழிவுநீர் வெளியேற்றி ஏரியில் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் மற்றும் வெம்பாக்கம் வட்டம், செய்யார் சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் மார்ச் 2021 முதல் தி/ள்.ஸ்விங் ஸ்டெட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது வாரியத்தின் இசைவாணை பெற்று இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு உருவாகும் 32,000 லிட்டர் அன்றாட கழிவுநீர் மற்றும் 13,000 லிட்டர் தொழிற்சாலை கழிவுநீரை சுத்திகரிக்கத் தேவையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தனித்தனியே

2023 ஏப்ரல் 17]

நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையை 17-9-2022 அன்று ஆய்வு செய்தபோது சுத்திகரிக்கப்பட்ட அன்றாட கழிவுநீர் 21,000 லிட்டர் மறு உபயோகத்திற்கும், மீதமுள்ள 11,000 லிட்டர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தொழிற்கழிவுநீர் 13,000 லிட்டர் ஆகியவை தொழிற்சாலை வளாகத்தினுள் மரம் வளர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருவது அறியப்பட்டது. எனவே, எந்தவொரு கழிவுநீரும் தொழிற்சாலை வளாகத்திலோ ஏரியிலோ வெளியிடப்படவில்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

95—

கழிவுநீர் பாலாற்றில் கலப்பு

வினா எண் 29205—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராணிப்பேட்டையில் நீர் சுத்திகரிப்பு செய்யாமல் திறந்துவிடும் தோல் தொழிற்சாலைகளை கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், அத்தொழிற்சாலைகளின் கழிவுநீர் பாலாற்றில் கலப்பதை தடுக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:

இராணிப்பேட்டை மற்றும் மேல்விஷாராம் பகுதிகளில் 213 தோல் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 206 தோல் தொழிற்சாலைகள் 4 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனங்களின் உறுப்பினர் தொழிற்சாலைகளாகவும், 7 தோல் தொழிற்சாலைகள் தனியாக பூஜ்யதிரவ அமைப்புடன்கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தும் இயக்கி வருகின்றன.

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரானது இயற்பியல், வேதியியல், உயிரியல் முறையில் சுத்திகரிக்கப்படுகின்றன. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU — TRUTH ALONE TRIUMPHS

கழிவுநீரானது, 2011 முதல் எதிர்மறை சவ்வூடு முறைமூலம் சுத்திகரிக்கப்பட்ட நீராக மாற்றப்பட்டு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கே மறு உபயோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பல அடுக்கு ஆவியாக்கிமூலம் கழிவு நீரில் கலந்துள்ள திடப் பொருட்களை உப்பாக மாற்றி உப்புகள் தனி அறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. 2011 முதல் இன்று வரை 53,805 டன் உப்பானது பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களால் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

பொது தோல் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அளவுகளானது, தோல் தொழிற்சாலைகள் தொடங்கி பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒவ்வொரு நிலையிலும் கண்காணிக்கப்படுகிறது. கண்காணிப்பு அமைப்பு நேரடியாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு அறையுடன் இணைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

தற்போது, தோல் தொழிற்சாலைகளிலிருந்து பாலாற்றில் கழிவுநீர் எதுவும் கலக்கப்படவில்லை. வாரியமானது தோல் தொழிற்சாலைகளால் நீர், நிலம் மாசுபடா வண்ணம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

96—

வேலைவாய்ப்பு

வினா எண் 37149—திரு. ப. சிவகுமார் *(என்கிற)* **தாயகம் கவி:** *மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க.நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, 4 எலிகான் தெரு, அருந்ததி நகர் மேட்டுப்பாளையத்தில் படித்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு அறிவிப்பு செய்யப்படும் பணிக்காலியிடங்களுக்கு பட்டியல் பெறுவதோடு, அரசாணை (நிலை) எண் 44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11-03-2015-ன் அடிப்படையில் அரசுத் துறை வேலையளிப்போரால் பணிக்காலியிடங்கள் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களும், பரிசீலிக்கப்பட்டு அரசுத் துறை பணிக்காலியிடங்கள் நிரப்பப்படுகின்றன. இதனால் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாத நபர்களும் தங்களது கல்வித் தகுதிக்கேற்ற அரசுப் பணிக்காலியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை பெறுகின்றனர்.

*இத்துறையால், சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி, வழிகாட்டும் மையத்தில் மாதத்தின் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலும், வருடத்திற்கு ஒரு முறை சென்னையில் உள்ள ஏதேனும் ஒரு கல்லூரியில் பெரிய அளவிலும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, தனியார் துறை நிறுவனங்களில் வேலைநாடுநர்களுக்கு பணிநியமனம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது. இதைத்தவிர தமிழ்நாடு தனியார் வேலை இணையத்தில் (*www.tnprivatejobs.tn.gov.in*), வேலைநாடுநர்களும் வேலையளிப்போரும் பதிவு செய்துகொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார் துறையில் பணிவாய்ப்பு பெறலாம்.*

மேலும், போட்டித் தேர்வுகள்மூலம் அரசு வேலை விரும்பும் இளைஞர்கள் பயன்பெறும்வகையில் அனைத்து விதமான தேர்வுகளுக்கும் இலவச பயிற்சி வகுப்புகள் சென்னை-32, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் சென்னை-5 மாநில கல்லூரியில் நடத்தப்பட்டு வருகின்றன. மெய்நிகர் கற்றல்

[*2023 ஏப்ரல் 17*

இணையம் (www.tamilnaducareerservices.tn.gov.in) *வாயிலாக போட்டித் தேர்வு எழுதும் இளைஞர்கள், தனது இருப்பிடத்தில் இருந்தபடியே போட்டி தேர்வுக்கு தயாராகும் வகையில் போட்டி தேர்வுகளுக்கான பாடக் குறிப்புகள், காணொளிக்காட்சி பதிவுகள் வழங்கப்படுவதுடன், கல்வித் தொலைக்காட்சி வாயிலாக இப்போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7.00 முதல் 9.00 மணி வரையிலும் மற்றும் மாலை 7.00 முதல் 9.00 மணி வரை மறு ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.*

ஆகையால், இத்துறையால் வழங்கப்பட்டுவரும் மேற்கண்ட வழிகாட்டுதல்களை பயன்படுத்தி திரு. வி.க.நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, 4 எலிகான் தெரு, அருந்ததி நகர், மேட்டுப்பாளையத்தில் படித்த ஆண்கள் மற்றும் பெண்களும் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பினை பெறலாம்.

97—

இணையதள இணைப்பு

வினா எண் 12740—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி முழுவதும் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் BSNL *வழி* Broadband *இணையதள இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒன்றிய அரசின் திட்டமான பாரத்நெட் திட்டத்தை சிறப்புநோக்கு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம்மூலம் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை கம்பி வடம்மூலம் இணைத்து 1 Gbps *அளவிலான*

2023 ஏப்ரல் 17]

அதிவேக அலைக்கற்றையினை வழங்க திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாரத்நெட் திட்டத்தின்கீழ் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில் தமிழ்நாட்டில் இதுவரை 1,384 கிராமப் பஞ்சாயத்துகள் கண்ணாடி இழை கம்பி வடம்மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மீதம் உள்ள கிராம பஞ்சாயத்துகளை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பாரத்நெட் திட்டத்தின் ஒரு பகுதியாக 36 கிராம பஞ்சாயத்துக்களில் கண்ணாடி இழை கம்பி வடம்மூலம் இணைய வசதி வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கண்ணாடி இழை கம்பி வடம் இணைப்பு பணிகள் முடிவுற்றதும் BSNL *போன்று இணைய சேவை வழங்குநர் (*Internet Services Providers*) பாரபட்சமற்ற வகையில் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் இணைய சேவை-வழங்க இந்த வசதியை பயன்படுத்தலாம்.*

98—

கணினியில் தமிழ் மொழி

வினா எண் 26179—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தகவல் தொழில்நுட்பவியல் துறையின்மூலம் கணினியில் தமிழ் மொழியைப் புகுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ் மொழி கணினியில் ஏற்கெனவே புகுத்தப்பட்டுள்ளது, இதற்காக தமிழ் மொழியை கணினியில் உள்ளீடு செய்ய ஏதுவாக கீழடி விசைப்பலகையை தமிழ் இணையக் கல்விக் கழகம் வெளியிட்டுள்ளது. அவ்வாறு

விசைப்பலகைமூலம் தமிழினைத் தட்டச்சு செய்ய உகந்த வகையில் 50 வகையான "தமிழ் ஒருங்குறி" எழுத்துருக்களையும் தமிழ் இணையக் கல்விக் கழகம் வெளியிட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே வேறு குறியாக்கத்தில் (encoding) தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களைத் தமிழ் ஒருங்குறிக்கு மாற்றும் வகையில் "ஒருங்குறி மாற்றி" ஒன்றை தமிழ் இணையக்கழகம் வெளியிட்டுள்ளது. மேலும், தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்ட சின்னம், பின்னம் போன்ற அளவைகளுக்கான குறியீடுகளைக் கணினியில் தமிழ் இணையக் கல்விக் கழகம் இடம் பெறச் செய்துள்ளது.

அடுத்தபடியாக, இரு வகையான தமிழ் வட்டெழுத்துகளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ளது. அரசாணை (நிலை) எண் 29, தகவல் தொழில்நுட்பவியல் (B-1) துறை, நாள் 23-06-2010-இல் தமிழ் ஒருங்குறிதான் எழுத்துரு தரம் என அறிவிக்கப்பட்டு அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் ஒருங்குறியில் கணினியில் தட்டச்சு செய்யப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. சில தனியார் நிறுவனங்களும் தமிழ் எழுத்துக்களைத் தட்டச்சு விசைப்பலகையில் ஆங்கில எழுத்துக்களின் அருகில் வடிவமைத்து வெளியிட்டு வருகின்றனர்.

99—

இணைய வசதி

வினா எண் 26245—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கேபிள் சேவை வாயிலாக இணைய வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்மூலம் இணைய வழிச் சேவை வழங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு

2023 ஏப்ரல் 17]

இணைய மற்றும் இணைப்புச் சேவை என்ற துணை நிறுவனம் 05-11-2020 அன்று தொடங்கப்பட்டது. தற்பொழுது, தமிழகம் முழுவதுமுள்ள கிராமப் பஞ்சாயத்துகளை, இணையவழிமூலம் இணைக்க ஃபைபர் கேபிள் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு ஃபைபர் நெட் நிறுவனம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்பணிகள் முடிந்த பின்னர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின்கீழ் செயல்படும் துணை நிறுவனம் (தமிழ்நாடு அரசு இணைய மற்றும் இணைப்புச் சேவை நிறுவனம்) மூலமாக இணையவழிச் சேவைகள் வழங்கப்படும்.

100—

இ-சேவை மையம்

வினா எண் 50068—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், தீவனூர் கிராமத்திலுள்ள இ-சேவை மையத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் ஒன்றியத்தில் மூன்று (3) இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், தீவனூர் கிராமத்தில் இ-சேவை மையம் வேண்டி மகளிர் திட்டம் வாயிலாக கோரிக்கை வரப்பெற்றது. இதன் அடிப்படையில் மகளிர் திட்டம் சார்பில் இ-சேவை மையம் அமைக்க இ-சேவை பயனாளர் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இ-சேவை மையம் மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், தீவனூர் கிராமத்தில் 29-08-2022 முதல் "தீவனூர் VPRC" என்ற பெயரில் ஊராட்சி கிராம பொது சேவை கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், இச்சேவை மையம் வாயிலாக 29-08-2022 முதல் 11-10-2022 வரை 2

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பட்டியல்-11

1—

CCTV கேமரா

வினா எண் 26582—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி நகராட்சி பகுதிகளில் இரவு நேரங்களில் வீடுகளில் திருடர்கள் நுழைவதால் அதனைத் தடுக்க தருமபுரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் CCTV கேமரா பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகராட்சிப் பகுதிகளில் இதுவரை 1,385 CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. காவல் துறையின் சார்பில் தருமபுரி நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்கள் சங்கங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடன் கூட்டங்கள் நடத்தி, தருமபுரி நகராட்சியில் உள்ள முக்கிய சந்திப்புகளில் பஸ் நிலையத்தில் 42 கேமராக்களும், குமாரசாமிபேட்டை பகுதியை சுற்றிலும் 50 கேமராக்களும், செந்தில் நகர் பகுதிகளில் 23 கேமராக்களும், அப்பாவு நகர் பகுதிகளில் 18 கேமராக்களும், MGR நகர்ப் பகுதிகளில் 8 கேமராக்களும், நந்தி நகர்ப் பகுதிகளில் 32 கேமராக்களும், SV ரோடு பகுதிகளில் 32 கேமராக்களும், நான்கு ரோடு முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையுள்ள ஜங்சனில் 32 கேமராக்களும், தருமபுரி 81 காவலர் குடியிருப்பில் 13 கேமராக்களும், ராயல் நகரில் 24 கேமராக்களும் மற்றும் நெசவாளர் காலனியில் 32 கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், குடியிருப்பு உரிமையாளர்கள் மற்றும் தனியார் கடை உரிமையாளர்கள் பலர் தங்களின் வளாகத்தில் CCTV கேமராக்கள் பொருத்தியுள்ளனர்.

2023 ஏப்ரல் 17]

2—

உதவித்தொகை

வினா எண் 48816—திரு. இரா. அருள்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சந்தன வீரப்பன் தேடுதல் வேட்டையில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நீதிபதி சதாசிவம் கமிஷனால் பரிந்துரை செய்யப்பட்ட உதவித் தொகையை விரைந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

சந்தன வீரப்பனை பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழக மற்றும் கர்நாடக அதிரடிப்படையினருக்கு எதிராக கூறப்பட்ட பல்வேறு புகார்களின் அடிப்படையில், தேசிய மனித உரிமைகள் ஆணையம், கர்நாடக உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. A.J. சதாசிவம் தலைமையில் முன்னாள் சி.பி.ஐ. இயக்குநர் திரு. சி.வி. நரசிம்மன் அவர்களை உறுப்பினராகக் கொண்ட, இரு மாநில அதிரடிப்படையின் அத்துமீறல்களை விசாரிக்க ஒரு கமிஷன் அமைத்து 20-6-1999-ல் ஆணையிடப்பட்டது. இந்தக் கமிஷன் 1999 முதல் 2003 வரை நான்கு ஆண்டுகள் விசாரணை செய்து நிவாரணம் பெற தகுதியானவர்கள் என 89 பேரை அடையாளம் கண்டு, அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக தனது பரிந்துரைகளை தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடம் சமர்ப்பித்தது. இதற்கிடையில், ஆணையம் தனது முடிவினை அறிவிப்பதற்கு முன்னரே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தைச் சார்ந்த 5 பெண்கள் உட்பட 12 நபர்களுக்கு கருணை அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 1008, உள் (காவல் 8) துறை, நாள் 19-10-2006-ல், இடைக்கால நிவாரணமாக ரூபாய் 20 இலட்சம் வழங்கி ஆணையிட்டார்கள்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் 15-1-2007 ஆம் நாளிட்ட தனது ஆணையில் நீதியரசர் சதாசிவம் கமிஷன் பரிந்துரை செய்த 89 பயனாளிகளுக்கு, அவர்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களின் அளவிற்கேற்றவாறு ரூபாய் 1 இலட்சம் முதல் ரூபாய் 5 இலட்சம் வரை இடைக்கால நிவாரணமாக வழங்குமாறு தமிழகம் மற்றும்

கர்நாடக அரசுகளுக்கு ஆணையிட்டது. அந்தந்த மாநிலங்களில் வசிக்கும் பயனாளிகளுக்கு அந்தந்த மாநிலங்கள் நிவாரணத் தொகை வழங்கி ஆணையிட வேண்டும் எனவும் ஆணையம் உத்தரவிட்டது.

மேலும், மொத்த நிவாரணத் தொகையில் 19-10-2006-ல் வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணம் ரூ.20 இலட்சம் போக, மீதித் தொகையை 38 பயனாளிகளுக்கு தமிழக அரசு வழங்கவும் ஆணையம் உத்தரவிட்டது. இதன்படி தமிழகத்தில் வசித்து வந்த மொத்தம் 38 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 20 இலட்சத்து 50 ஆயிரம் நிவாரணத் தொகை வழங்க வேண்டியிருந்தது. ஏற்கெனவே வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபாய் போக மீதித் தொகையான ரூபாய் 1 கோடியே 50 ஆயிரத்தை 12-2-2007 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 222-ல் அரசு ஒப்பளித்து ஆணையிட்டது. மேற்படி 38 பயனாளிகளுக்கு ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக நிவாரணத் தொகை காசோலையாக வழங்கப்பட்டது.

3—

வாக்குச் சீட்டு முறை

வினா எண் 61662—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்னணு வாக்குச் சீட்டு இயந்திரம் (EVM) குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவுவதால் மீண்டும் வாக்குச் சீட்டு முறையைக் கொண்டுவர மத்திய அரசை வலியுறுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்தியத் தேர்தல் ஆணையமானது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 61A-ன்படி, பாராளுமன்ற மக்களவைத் தேர்தல்கள் மற்றும் மாநில சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

2023 ஏப்ரல் 17]

*மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (*Electronic Voting Machines*) பயன்படுத்தப்படும் மென்பொருளானது, ஒருமுறை மட்டுமே நிரல் (*Programming*) செய்யக்கூடியது, நிரல் செய்யப்பட்டபின் மூடி முத்திரையிடப்படும். எனவே, எந்த வகையிலும் மென்பொருளை மீண்டும் நிரல் செய்யவோ அல்லது மாற்றம் செய்யவோ இயலாது. மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (*Electronic Voting Machines*) தனித்து இயங்கக்கூடிய கருவிகள் ஆகும். அவை எந்தவொரு வெளிப்புற சாதனங்களுடனோ அல்லது இணையத்துடனோ இணைக்கப்படாததால் தொலைவில் இருந்து அணுக அல்லது கட்டுப்படுத்த இயலாது.*

மேலும், ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர தயாரிப்பு நிறுவன பொறியாளர்களைக் கொண்டு அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களானது முதல்நிலை பரிசோதனை செய்யப்படும். பரிசோதனை முடிவில் மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படும்.

முதல்நிலை பரிசோதனைக்குப் பிறகு, மென்பொருள் வழியாக First Randamization *மூலமாக இக்கருவிகள் மக்களவைத் தொகுதி மற்றும் சட்டமன்றத் தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்ட பின்பு, மென்பொருள் வழியாக* Second Randamization *மூலமாக தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதனால், எந்தவொரு வகையிலும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ மென்பொருளில் நிரல் செய்ய இயலாது.*

*வாக்குப்பதிவு முறையில் மேலும் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும், வெளிப்படைத்தன்மையை உணர்த்தவும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் வாக்காளர் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியினை (*Voter Verifiable Paper Audit Trial System*) பயன்படுத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்தது.*

*அதன்படி, 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு, 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் நாள் அறிவிக்கையிடப்பட்டதைத் தொடர்ந்து, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் (*Electronic Voting Machines*) வாக்காளர் அளித்த*

வாக்கினை உறுதி செய்யும் கருவியினை (Voter Verifiable Paper Audit Trial System) பயன்படுத்த இந்தியத் தேர்தல் ஆணையம் அனுமதித்தது.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைக்கான பொதுத் தேர்தலில் இருந்து அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் (Electronic Voting Machines) வாக்காளர் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியானது (Voter Verifiable Paper Audit Trial System) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2000 ஆம் ஆண்டு முதல் பல்வேறு மாநில சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற 132 தேர்தல்கள் மற்றும் மக்களவைக்கு நடைபெற்ற 4 பொதுத் தேர்தல்களில் (2004, 2009, 2014 மற்றும் 2019) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் (Electronic Voting Machines) மூலமாக வாக்குப்பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

2001 ஆம் ஆண்டு முதல் பல்வேறு மாண்புமிகு உயர் நீதிமன்றங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (Electronic Voting Machines) முறைகேடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து வழக்கு தொடுக்கப்பட்டது. தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் நிர்வாக ரீதியிலான பாதுகாப்பு அம்சங்கள் என விரிவான ஆய்வுக்குப்பின் அனைத்து வழக்குகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (Electronic Voting Machines) மீதான நம்பகத்தன்மையை பல்வேறு உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் உறுதி செய்தன. உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (Electronic Voting Machines) மீதான நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தியது. எனவே, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (Electronic Voting Machines) இயந்திரங்கள் முறைகேடு செய்வதற்கான வாய்ப்பு அறவே இல்லை.

4—

எம்-சாண்ட்

வினா எண் 49438—திரு. இரா. அருள்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 17]

அரசுக் கட்டடங்களில் பயன்படுத்தப்படும் M-SAND *உண்மைத்தன்மையை ஆய்வு செய்து கட்டடங்கள் உறுதியாகவும், நீடித்த தன்மையுடன் இருப்பதை உறுதிப்படுத்த அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் M-SAND *எனப்படும் நொறுக்கப்பட்ட கல் மணல்* (Crushed Stone Sand) *தயாரிக்கும் நிறுவனங்கள், தாங்கள் தயாரிக்கும் நொறுக்கப்பட்ட கல் மணலிற்கான தரச் சான்றிதழ் பெற விரும்பி பொதுப் பணித் துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பித்தால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நொறுக்கப்பட்ட கல் மணலின் தரத்திற்கு பல்வேறு நிபுணர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவினரின் ஒப்புதலுக்குப் பின்னர் பொதுப் பணித் துறையால் தரச் சான்றிதழ்* (Product Quality Approval Certificate) *வழங்கப்பட்டு வருகிறது.*

அரசுக் கட்டட கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் எம்-சாண்ட்டிற்கு பொதுப் பணித் துறையின் தரச் சான்றிதழ் பெறப்பட்டு உள்ளதா என பொதுப் பணித் துறை களப் பொறியாளர்களால் முதலில் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பொதுப் பணித் துறை தரக் கட்டுப்பாட்டு கோட்டத்தைச் சார்ந்த பொறியாளர்களாலும் M-SAND *தரம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, அரசுக் கட்டடங்களின் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே,* M-SAND *பயன்படுத்தி கட்டப்படும் அரசுக் கட்டடங்கள் உறுதியாகவும், நீடித்த தன்மையுடன் கட்டப்படுவது உறுதி செய்யப்படுகிறது.*

5—

வேளாண்மை விரிவாக்க மையங்கள்

வினா எண் 21443—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் விதை நெல் சேமிப்பதற்கு கூடுதல் கிடங்கு வசதி மற்றும் டன்னேஜ் ஐட்டங்கள், எலெக்ட்ரானிக் தராசு வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் மொத்தமாக 383 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் 193 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் 101 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் விதை சேமிப்பு கிடங்கு வசதியுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், 32 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் 155 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் விதை சேமிப்பு கிடங்குக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் பயிர் சாகுபடி பருவத்திற்கு ஏற்ப இருப்பு வைத்து விநியோகம் செய்யப்படுவதால், டன்னேஜ் கட்டைகள், எலெக்ட்ரானிக் தராசு வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ளன.

6—

விவசாயக் கருவிகள்

வினா எண் 49109—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் குறு, சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும் விவசாயக் கருவிகள், உபகரணங்கள் உண்மையான பயனாளிகளைச் சென்றடைய உரிய செயல் திட்டம் வகுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ஒன்றிய அரசின் பங்களிப்புத் திட்டமான வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் பல்வேறு வேளாண் கருவிகள் வாங்குவதற்கு ஆதி திராவிடர்,

2023 ஏப்ரல் 17]

பழங்குடியினர், குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மொத்த விலையில் 50 சதவிகிதம் அல்லது ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மொத்த விலையில் 40 சதவிகிதம் அல்லது ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் அனைத்து மாவட்டங்களிலும் தனிப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தில் ஆதி திராவிட, பழங்குடியின வகுப்பைச் சார்ந்த குறு, சிறு விவசாயிகளுக்கு அவர்கள் பங்குத் தொகையினை குறைத்து உதவிடும் வகையில் நடைமுறையில் உள்ள மானியத்துடன், 20 சதவிகித கூடுதல் மானியம் மாநில அரசு நிதியிலிருந்து 2022-2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் (2022-2023) இத்திட்டம் ஒன்றிய அரசு பங்களிப்புடன் சேர்த்து செயல்படுத்திட வேண்டி அரசாணை எண் 228, வேளாண்மை-உழவர் நலத் (வேபொ1) துறை, நாள் 22-9-2022-ன்படி ரூ.3,505.67 இலட்சம் முதல் தவணையாக நிதி ஒதுக்கீடும், அரசாணை எண் 29, வேளாண்மை-உழவர் நலத் (வேபொ1) துறை, நாள் 21-2-2023-ன்படி ரூ.8,333.33 இலட்சம் இரண்டாம் தவணையாக நிதி ஒதுக்கீடும் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, நடப்பாண்டில் (2022-2023) வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, குறு, சிறு விவசாயிகள் உட்பட அனைத்து வகை தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள்/கருவிகள் மானிய விலையில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் (சென்னை நீங்கலாக) சேலம் மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மானிய விலையில் வேளாண் இயந்திரம்/ கருவி பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பத்துடன் தமது நிலம் தொடர்பான விவரங்கள், புகைப்படம், ஆதார்

[2023 ஏப்ரல் 17

அட்டை, குறு, சிறு/ஆதி திராவிடர்/பழங்குடியினர் விவசாயிகள் எனில், அதற்குரிய சான்றிதழ், வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றை அளித்திட வேண்டும். மேலே தெரிவிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களால் சரிபார்க்கப்பட்ட பின்பே பயனாளிகளுக்கு உரிய மானியம் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. உண்மையான பயனாளிகளுக்கு மானியம் சென்றடைய சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பெறப்பட்டு, சரிபார்க்கப்படுகிறது. நடப்பாண்டில் (2022-2023-ல்) 96 குறு/ சிறு விவசாயிகள், சேலம் மாவட்டத்தில், இத்திட்டத்தின்படி பயனடைந்துள்ளனர்.

7—

விவசாயிகளுக்குப் பயிற்சி

வினா எண் 50002—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மேற்கு தொகுதியில் விவசாயப் பண்ணைக் கருவிகள், இயந்திரங்கள் பழுதுபார்த்தல் பயிற்சிகளை இளம் விவசாயிகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தவும், வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் தங்கள் விளைநிலங்களிலேயே பழுது நீக்கி பராமரித்திடவும், வேளாண்மைப் பொறியியல் துறையும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள கோயம்புத்தூர், வேலூர், திருவாரூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி இயந்திரப் பணிமனைகளில் வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பயிற்சியினை அளித்து வருகிறது.

2023 ஏப்ரல் 17]

இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் கிராமப்புற இளைஞர்கள் கோயம்புத்தூர், வேலூர், திருவாரூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலியிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிமனைகளிலோ அல்லது அருகிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளர் (வேபொ) அலுவலகங்களிலோ தங்கள் விண்ணப்பத்தினை அளித்து பயன்பெறலாம்.

8—

சிப்பிக்காளான் தயாரிக்க பயிற்சி

வினா எண் 11216—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்க சிப்பிக்காளான் விதைப் புட்டிகள் தயாரிக்கும் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்க காளான் வளர்ப்பு பயிற்சி தருமபுரி மாவட்ட ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம்மூலம் வழங்கப்படுகிறது. இதில் சிப்பிக்காளான் விதைப் புட்டிகள் தயாரிக்கும் பாடங்களும் கற்பிக்கப்படுகிறது.

9—

கடன் உதவி

வினா எண் 55863—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

(அ) புதுக்கோட்டை தொகுதி, சுயமாகத் தொழில் முன்னேற்றத்திற்கு கைவினைப் பொருட்கள், கல் குவாரி, கூடை முடைதல், நர்சரி, பேக்கரி வங்கிமூலம் கடன் உதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு துவங்கி ஆறு மாதம் முடிவுற்ற குழுக்களுக்கு முதல் வங்கிக் கடன் இணைப்பில் குறைந்தபட்சம் ரூ.1.50 இலட்சமும், இரண்டாவது வங்கிக் கடன் இணைப்பில் குறைந்தபட்சம் ரூ.3.00 இலட்சமும், மூன்றாம் வங்கிக் கடன் இணைப்பில் ரூ.6.00 இலட்சத்திற்கு மேலும் கடன் வழங்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகள்மூலம் பெருங்கடன் பெற்று அக்கூட்டமைப்பின்கீழ் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தொழில் துவங்கவும், ஏற்கெனவே உள்ள தொழிலை விரிவுபடுத்தவும் கடன் வழங்குகின்றன. தனிநபர்கள் பண்ணைசாரா தொழில் துவங்க முத்ரா கடன் திட்டத்தின்கீழ் வங்கிகள்மூலம் ரூ.10.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. நகர்ப்புர பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்கீழ் (TNULM) சுய உதவி வேலைவாய்ப்பு திட்டத்தின்மூலம் வட்டி மானியத்துடன்கூடிய வங்கிக் கடன், தனிநபர் மற்றும் குழுக்களுக்கு தொழில் துவங்குவதற்கு வழங்கப்படுகிறது. மேற்காண் கடனுதவிகளைப் பெற்று கைவினைப் பொருட்கள், கல்குவாரி, கூடை முடைதல், நர்சரி, பேக்கரி போன்ற தொழில்களை மேற்கொண்டு பயன்பெறலாம்.

10—

உட்கட்டமைப்பு மேம்படுத்துதல்

வினா எண் 28066—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) தமிழகத்தில் பழமையான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பினை சீரமைக்கவும் அவ்வாரியத்தால் பராமரிக்கப்படுகின்ற வீடுகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகளின் உறுதித்தன்மையை நிர்ணயம் செய்யும்பொருட்டு அரசாணை எண் 08, வீட்டு வசதி (ம) நகர்ப்புர வளர்ச்சித் (வீவ3-2) துறை, நாள் 25-1-2022-ன்படி தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவில் பிரபல தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களாக அண்ணா பல்கலைகழகம்/மண்டல அரசு பொறியியல் கல்லூரிகள், ஐ.ஐ.டி.-ல் உள்ள வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர்.

தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் ஆய்வு அறிக்கையின்படி கட்டடங்கள் உள்ளபடியே குடியிருக்கத் தகுதியானவையா எனவும் அல்லது இடிக்க அல்லது சிறப்பு பழுது பார்க்க உரித்தானதா எனவும் முடிவு எடுக்கப்படும்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11—

மாற்றுத் திறனாளிகளுக்கு வீடுகள்

வினா எண் 28882—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள் ஒதுக்கீடு செய்யும்போது மாற்றுத் திறனாளிகளுக்கு கீழ்தள வீடுகளை ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பொன்விழா ஆண்டான 2011 ஆம் ஆண்டை கருத்தில்கொண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனைத்து பிரிவுகளிலும் 3% இட ஒதுக்கீடு வழங்கப்படும் எனவும், மனைகள், வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் எண்ணிக்கையின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை ஒன்றுக்கும் குறைவாக இருந்தால் அதை ஒன்றாக வைத்துக்கொள்ளலாம் எனவும் அரசாணை நிலை எண் 2, வி.வமந.வ (வீ.வ.4(2)) துறை, நாள் 2-1-2013 ஆணையிடப்பட்டுள்ளது.

*தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு குலுக்கல்மூலம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பின்பு அக்குடியிருப்புகளுக்கு பதிலாக, கீழ்தளத்தில் மாற்றுக் குடியிருப்பு கோரும்பட்சத்தில், வாரிய ஒதுக்கீடு விதிமுறைகளைப் பின்பற்றி காலி விவர அடிப்படையில் (*subject to availability*) கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, மாற்றுக் குடியிருப்புக்குண்டான தொகையைப் பெற்ற பின்னர் மாற்று ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. எனவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் குலுக்கல் முறையில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்வதில் மாற்றுத் திறனாளிகளுக்கு கீழ்தளத்தில் ஒதுக்கீடு செய்வதற்கான வழிவகை ஏதும் தற்போது வாரியத்தில் இல்லை.*

12—

பயிர்க் கடன்

வினா எண் 2186—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூட்டுறவுச் சங்கம்மூலம் பயிர்க் கடன் வாங்கும்போது இயற்கை விவசாயத்திற்கு உரம் கொடுப்பதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

*விவசாயிகளுக்கு குறுகிய கால முறையில் வேளாண் கடன் தேவைகள் சரியான நேரத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான உழவர் கடன் அட்டை திட்டம் (*Kissan Credit Card-KCC*) அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் வேளாண் பணிகளுக்கு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்களைப் பெற உதவுவதோடு வேளாண் சார்ந்த இதர செலவுகளுக்கும் கடன் வழங்கப்பட்டு வருகின்றது.*

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட பயிர்க் கடன் மாதிரி ஒழுங்குமுறை விதிகளின்படி விவசாயிகள் விரும்பினால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பயிர்க் கடன் பெறும்போது இயற்கை உரம் பெற்றுக்கொள்ளலாம் அல்லது சுய சான்றின் அடிப்படையில் உரத்திற்கான கடன் பகுதியில் 50 சதவிகிதத் தொகையை ரொக்கமாகப் பெற்றுக்கொள்ளலாம். முழுவதும் இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு அரசுத் துறையினர் (வேளாண்மை/தோட்டக்கலை/காப்பி வாரியம்/தேயிலை வாரியம்/நறுமணப் பொருட்கள் வாரியம்/ தென்னை வாரியம் போன்றவை) அளிக்கும் சான்றின் அடிப்படையில், உரப் பகுதிக்கான மொத்த தொகையும் ரொக்கமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

13—

காலிப் பணியிடங்கள்

வினா எண் 13002—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூட்டுறவுச் சங்கங்களில் ஊழியர்களின் காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசு முன்வருமா?

[*2023 ஏப்ரல் 17*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள காலிப் பணியிடங்கள், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 74-ன்படி அமைக்கப்பட்ட மாநில ஆள்சேர்ப்பு நிலையம் மற்றும் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள்மூலம் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளுள், விதிகள் 150, 151-ல் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி நிரப்பப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள நியாய விலைக் கடைகளில் 31-8-2022 அன்று காலியாகவுள்ள 5,578 விற்பனையாளர் மற்றும் 925 கட்டுநர் பணியிடங்களை நிரப்புவதற்கான தெரிவு நடவடிக்கைகள் அனைத்து மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி தெரிவு நடவடிக்கைகள் விரைவில் நிறைவு செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்க சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்களால் ஒதுக்கீடு செய்து, ஆணை வழங்கப்படும்.

14—

நியாய விலைக் கடை

வினா எண் 25913—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, இருதுகோட்டை ஊராட்சி, தோட்டிகுப்பம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) தளி சட்டமன்றத் தொகுதி, இருதுகோட்டை ஊராட்சி, எஸ்.527, கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் இருதுகோட்டா (30*EP*003*PY*) முழுநேர நியாய விலைக் கடையானது வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இருதுகோட்டா முழுநேர நியாய விலைக் கடையில் 537 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் முதல் பகுதிநேர நியாய விலைக் கடையான சம்மந்தகோட்டை 245 குடும்ப அட்டைகளுடனும், இரண்டாவது பகுதிநேர நியாய விலைக் கடையான பேளாலம் 409 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன.*

எஸ்.527, கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின்கீழ் இருதுகோட்டா (30EP003PY) *முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதால், புதியதாக மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடை துவங்கவும், ஏற்கெனவே செயல்படும் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றவும் வழிவகையில்லை.*

எனினும், குடும்ப அட்டைதாரர்கள் நலன் கருதி, தோட்டிகுப்பம் கிராமத்தில் உள்ள 178 குடும்ப அட்டைதாரர்களுக்கு நகரும் நியாய விலைக் கடையின்மூலம் பிரதி மாதம் மூன்றாவது வாரம் சனிக்கிழமைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதால், தோட்டிகுப்பம் கிராமத்திற்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

15—

நியாய விலைக் கடை

வினா எண் 25958—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஆண்டரசன்பேட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியத்தில் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின்கீழ் 139 முழுநேர நியாய விலைக் கடைகளும், 8 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் செயல்படுகின்றன. இதில் அரக்கோணம் தொகுதியில் மட்டும் 15 முழுநேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் செயல்படுகின்றன. ஏற்கெனவே அம்மனூர் பகுதியில் 04CB012PN *கற்பகம் கடை எண் 12 என்ற முழுநேர நியாய விலைக் கடை 1,047 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. ஆண்டரசன்பேட்டை பகுதியில் 450 குடும்ப அட்டைகள் உள்ளன. தாய்க் கடைக்கும், உத்தேச பகுதிநேரக் கடைக்கும் இடையே 0.50 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. பகுதிநேரக் கடை செயல்படுத்துவதற்கு அரசுக் கட்டடம் ஏதும் இல்லை.*

இந்நேர்வில் அம்மனூர் ஆண்டரசன்பேட்டை பகுதிக்கும், தாய்க் கடையான 04CB012PN *கற்பகம் கடை எண் 12 நியாய விலைக் கடைக்கும் இடையே 0.5 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளதாலும், அப்பகுதியில் அரசு/ஊராட்சிக்கு சொந்தமான கட்டடம் ஏதும் இல்லாததாலும் அம்மனூர் ஆண்டரசன்பேட்டை பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

16—

நகர கூட்டுறவு வங்கி

வினா எண் 25969—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலத்தில் நகர கூட்டுறவு வங்கி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதி, நன்னிலம் பேரூராட்சியில் 28-6-1999 ஆம் தேதி முதல் ஸ்ரீகமலாம்பிகா கூட்டுறவு நகர வங்கியின் கிளை துவங்கப்பட்டு, தற்போது முழு அளவில் கணினிமயமாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, நன்னிலத்தில் புதியதாக கூட்டுறவு நகர வங்கி ஏற்படுத்த வேண்டிய தேவை எழவில்லை.

17—

தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகள்

வினா எண் 26415—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வட்டங்களின் அடிப்படையில் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டத்தில் எட்டு வருவாய் வட்டங்கள் உள்ளன. இந்த எட்டு வருவாய் வட்டங்களில் ஆறு தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆறு வங்கிகளும் திருவாரூர் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கும் மத்திய காலக் கடன்களை சிறப்பாக வழங்கி வருகிறது.

[2023 ஏப்ரல் 17

இவற்றில் திருவாரூர் மற்றும் குடவாசல் தவிர இதர நான்கு தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் குவிப்பு நட்டத்தில் செயல்பட்டு வருகிறது. புதிதாக தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி துவங்கினால் ஏற்கெனவே செயல்பட்டுவரும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் வாழ்திறன் பாதிக்கப்படும் என்பதால் புதிதாக தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி துவங்க வழிவகை இல்லை.

18—

மறுகட்டுமானம் செய்தல்

வினா எண் 51698—டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, அப்பாசாமி தெரு, கருமாங்குளம், கங்கைகரைபுரம், பத்ரிக்கரை, திரு.வி.க. குடியிருப்பு, சிவசண்முகபுரம் ஆகிய திட்டப் பகுதிகளை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக மறுகட்டுமானம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்கு தொகுதியில் அப்பாசாமி தெரு, கருமங்குளம், கங்கைகரைபுரம், பத்ரிக்கரை, திரு.வி.க. குடியிருப்பு, சிவசண்முகபுரம் ஆகிய 6 அடுக்குமாடி குடியிருப்பு திட்டப் பகுதிகளில் மறுகட்டுமானம் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:-

1. அப்பாசாமி தெரு:

சென்னை, ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி, அப்பாசாமி திட்டப் பகுதியில் 1976 ஆம் ஆண்டு

2023 ஏப்ரல் 17]

கட்டப்பட்ட 64 அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்ய தொழில்நுட்ப குழுவின் பரிந்துரைக்கேற்ப 70 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.10.95 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, திட்டத்திற்கான வரைபடம் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:-

நிதி ஆதாரங்கள்	(ரூ.கோடி)
ஒன்றிய அரசின் மானியம்	1.05
மாநில அரசின் மானியம்	5.36
பயனாளிகளின் பங்களிப்பு	1.34
கூடுதல் மானியம்	3.20
மொத்தம்	10.95

இத்திட்டப் பணிகளுக்கான கட்டட வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் நடைபெறுகின்றன. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. ஒப்பந்தம் இறுதி செய்த பின் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. கருமாங்குளம்:

கருமாங்குளம் திட்டப் பகுதியில் 24 அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட ஒரு கட்டட தொகுப்பு 1980-ம் ஆண்டு கட்டப்பட்டு, இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து அவற்றை மறுகட்டுமானம் செய்ய பரிந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, அக்குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. அரசின் ஒப்புதல் பெற்று பணிகள் தொடங்க விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள் திட்டத்திற்கான ஒப்புதல் பெற்றபின் அனுப்பப்படும்.

3.கங்கைகரைபுரம்:

கங்கைகரைபுரம் திட்டப் பகுதியில் 176 அடுக்குமாடி குடியிருப்புகள் மூன்று கட்டட தொகுப்புகளாக 1983-ம் ஆண்டு

[2023 ஏப்ரல் 17

கட்டப்பட்டன. இக்குடியிருப்புகளை, வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, அவற்றை இடித்துகட்ட பரிந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, அக்குடியிருப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில் 204 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.31.92 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்ய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:-

நிதி ஆதாரங்கள்	(ரூ.கோடி)
ஒன்றிய அரசின் மானியம்	3.06
மாநில அரசின் மானியம்	15.62
பயனாளிகளின் பங்களிப்பு	3.06
கூடுதல் மானியம்	10.18
மொத்தம்	31.92

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் திட்ட வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. ஒப்பந்தம் இறுதி செய்த பின்பு புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4. பத்ரிகரை:

பத்ரிகரை திட்டப் பகுதியில் 144 அடுக்குமாடி குடியிருப்புகள் மூன்று கட்டட தொகுப்புகளாக 1981-ம் ஆண்டு கட்டப்பட்டன. இக்குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, அவற்றை இடித்துக்கட்ட பரிந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, அக்குடியிருப்புகளை இடித்துவிட்டு 180 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.28.17 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானம் மேற்கொள்ள அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரம் பின்வருமாறு:-

நிதி ஆதாரங்கள்	(ரூ.கோடி)
ஒன்றிய அரசின் மானியம்	2.70
மாநில அரசின் மானியம்	13.79
பயனாளிகளின் பங்களிப்பு	2.70
கூடுதல் மானியம்	8.98
மொத்தம்	28.17

2023 ஏப்ரல் 17]

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்புதல் பெறப்படவுள்ள வரைபடத்தின்படி, விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. ஒப்பந்தம் இறுதி செய்த பின்பு புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. திரு.வி.க. குடியிருப்பு:

சென்னை, திரு.வி.க. குடியிருப்பு திட்டப் பகுதியில் 636 அடுக்குமாடி குடியிருப்புகள் 23 கட்டட தொகுப்புகளாக 1974 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பகுதி குடியிருப்புகளை வாரிய தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, அவற்றை இடித்துக்கட்ட பரிந்துரைத்துள்ளது. பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு 810 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.118.42 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:-

நிதி ஆதாரங்கள்	*(ரூ.கோடி)*
ஒன்றிய அரசின் மானியம்	*12.15*
மாநில அரசின் மானியம்	*56.70*
பயனாளிகளின் பங்களிப்பு	*19.95*
கூடுதல் மானியம்	*29.62*
மொத்தம்	*118.42*

இத்திட்டப் பகுதியில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளுக்கான வரைபடத்திற்கு ஒப்புதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. ஒப்பந்தம் இறுதி செய்த பின் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

6. சிவசண்முகபுரம்:

சிவசண்முகபுரம் நக்கீரன் நகர், எம்.கே.இராதா நகர் மற்றும் எம்.கே.இராதா நகர் தீப்பிடிக்காத கூரை வீடுகள் ஆகிய பகுதிகளில் உள்ள 700 வீடுகளை இடித்துவிட்டு, மறுகட்டுமான திட்டத்தில் 820 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.123.00 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானம் கட்ட

திட்டமிடப்பட்டுள்ளது. புதிய கட்டுமானத் தொழில்நுட்பத்துடன் கட்டட வடிவமைப்பில் மாற்றம் செய்து, புதிய வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பணிகள் துவங்க விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டப் பணிகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:-

நிதி ஆதாரங்கள்	(ரூ.கோடி)
ஒன்றிய அரசின் மானியம்	12.30
மாநில அரசின் மானியம்	57.40
பயனாளிகளின் பங்களிப்பு	53.30
கூடுதல் மானியம்	-
மொத்தம்	123.00

மேற்கூறப்பட்டுள்ள அனைத்து திட்டப் பகுதிகளிலும் விரைவில் பணிகளைத் தொடங்குவதற்கான உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

19—

பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி

வினா எண் 28800—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகையாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை தலைமையிடத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுககு மட்டும் சென்னை கலைவாணர் அரங்கத்தில் ஒருநாள் பயிற்சி அளிக்க ஏதுவாக நிதியொதுக்கம் பெறப்பட்டு, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும்

2023 ஏப்ரல் 17]

வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது தொடர்பான கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

20—

கட்டடங்கள்

வினா எண் 68215—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, மாதவரம், திருவொற்றியூர் தொகுதியில் உள்ள பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் வெயில் மற்றும் மழைக் காலங்களில் செய்தி சேகரித்து ஒருசேர அமர்ந்து கலந்தாலோசிப்பதற்கு கட்டட வசதி அல்லது இட வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, மாதவரம், திருவொற்றியூர் தொகுதியில் உள்ள பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் வெயில் மற்றும் மழைக் காலங்களில் செய்தி சேகரித்து ஒருசேர அமர்ந்து கலந்தாலோசிப்பதற்கு கட்டட வசதி அல்லது இட வசதி ஏற்படுத்தித் தருவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

21—

சிலை, மணிமண்டபம்

வினா எண் 69442—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விழுப்புரம் மாவட்டத்தில் திருக்குறள் வீ.முனுசாமி அவர்களுக்கு சிலையும், மணிமண்டபமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் திருக்குறள் வீ. முனுசாமி அவர்களுக்கு சிலையும், மணிமண்டபமும் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

22—

மணிமண்டபம்

வினா எண் 69443—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை தொகுதி, கத்தப்பட்டு கிராமத்தில் சுதந்திரப் போராட்ட தியாகி வேலி அம்பலம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, கத்தப்பட்டு கிராமத்தில் சுதந்திரப் போராட்ட தியாகி வேலி அம்பலம் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

23—

நினைவுச் சின்னம்

வினா எண் 76200—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சுதந்திரப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மைக்கு தமிழ்நாட்டில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், தில்லையாடியில் தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் உள்ளதால், சுதந்திரப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மைக்கு தமிழ்நாட்டில் நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

24—

வரலாற்று ஆய்வாளர் குழு

வினா எண் 79451—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாமன்னன் ராஜராஜன் நினைவிடம் குறித்து உரிய ஆய்வுகள் செய்ய வரலாற்று ஆய்வாளர் குழு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மாமன்னன் ராஜராஜ சோழனின் நினைவிடம் உடையாளூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ளதா என்பது குறித்து தொல்லியல் துறையால் அகழாய்வு மேற்கொண்டு அதனடிப்படையில் ராஜராஜ சோழன் நினைவிடம் குறித்து விரிவான அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், தொல்லியல் துறை, சென்னை-8 அவர்களுக்கு கடிதம் வைக்கப்பட்டுள்ளது.

25—

நினைவு மண்டபம்

வினா எண் 82040—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாஞ்சில் நாட்டில் ஜெய் ஹிந்த் செண்பகராமனுக்கு நினைவு மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

நாஞ்சில் நாட்டில் ஜெய் ஹிந்த் செண்பகராமனுக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

மணிமண்டபம்

வினா எண் 82041—திரு. இரா. அருள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரத்தில் வரதராஜூலு நாயுடு அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

ராசிபுரத்தில் வரதராஜூலு நாயுடு அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

நினைவுச் சின்னம்

வினா எண் 82042—திரு. இரா. அருள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில் கணித மேதை ராமானுஜம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டத்தில் கணித மேதை ராமானுஜம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2023 ஏப்ரல் 17]

28—

அரசு விழா

வினா எண் 82043—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டின் முதல் பெண் முதல்வரான திருமதி வி.என். ஜானகி எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாகக் கொண்டாட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டின் முதல் பெண் முதல்வரான திருமதி வி.என். ஜானகி எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாகக் கொண்டாடக் கோரும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

சிலை அமைத்தல்

வினா எண் 82048—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி-ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் தொரப்பள்ளி பிரிவு சாலையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு சிலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளியில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பிறந்த இல்லம் மற்றும் சென்னை, சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டியில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் நினைவாலயம் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருவதால், கிருஷ்ணகிரி-ஓசூர் தேசிய

நெடுஞ்சாலையில் தொரப்பள்ளி பிரிவு சாலையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு சிலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

மாற்றுத் திறனாளிகள் விடுதி

வினா எண் 28695—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மேற்கு தொகுதியிலும், போளூர் தொகுதியில் உள்ள போளூர், களம்பூர், சேத்துப்பட்டு ஆகிய பேரூராட்சிகளிலும் மாற்றுத் திறனாளிகள் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப் பள்ளி (விடுதி வசதியுடன்), ஆதர்ஸ் தாய் அறிவுசார் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளி மற்றும் எம்மீஸ் அறிவுசார் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளி அரசு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும், சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் அரசு செவித்திறன் குறையுடையோருக்கான உயர்நிலைப் பள்ளி சுமார் ரூ.670 கோடி மதிப்பீட்டில் புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடம் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன. மேலும், சேலம் மாவட்டத்தில் லிட்டில் ஹார்ட்ஸ் மற்றும் எக்காம்வெல் மனநல காப்பகம், தாய்மை அன்பு கரங்கள் மற்றும் சிஎஸ்ஐ பால ஞான இல்லம் என்கின்ற மனவளர்ச்சிக் குன்றியோருக்கான இல்லங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மனவளர்ச்சிக் குன்றியோருக்கான 14 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும்

2023 ஏப்ரல் 17]

பெண்களுக்கான இல்லங்கள், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இரண்டு இல்லங்கள், செவித்திறன் குறைபாடுடையோருக்கான விடுதியுடன்கூடிய இரண்டு சிறப்புப் பள்ளி, பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான விடுதியுடன்கூடிய ஒரு சிறப்புப் பள்ளி மற்றும் மனவளர்ச்சிக் குன்றியோருக்கான விடுதியுடன்கூடிய இரண்டு சிறப்புப் பள்ளி ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் போளூர், களம்பூர், சேத்துபட்டு ஆகிய பேரூராட்சிகளுக்கு அருகில் சினேக ஜோதி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரால் ஜமுனாமரத்தூரில் மனவளர்ச்சிக் குன்றியோருக்கான விடுதியுடன்கூடிய சிறப்புப் பள்ளி செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரீட்ஸ் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் சேத்துப்பட்டில் மனவளர்ச்சிக் குன்றியோருக்கான விடுதியுடன்கூடிய சிறப்புப் பள்ளி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அமலாராக்கினி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் விடுதியுடன்கூடிய பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளி அரசு நிதியுதவி பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

31—

மாற்றுத் திறனாளிகள்

வினா எண் 28698—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாற்றுத் திறனாளிகளின் குறைகளை ஆரம்பத்திலே கண்டறிந்து பராமரிப்பு மற்றும் கல்விச் சேவைகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாற்றுத் திறனாளிகளின் குறைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சென்னை மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 21 மையங்களில் பச்சிளம் குழந்தைகளுக்கான காது கேளாமையை கண்டறியும் திட்டம் 2018 முதல்

செயல்பட்டு வருகிறது. கல்விச் சேவைகள் SSA (சமக்ரா சிக்ஷா அபியான்) எனும் பள்ளி கல்வித் துறையின் திட்டத்தின்மூலம் செயல்பட்டு வருகிறது.

32—

மாற்றுத் திறனாளிகள் அலுவலகம்

வினா எண் 28712—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் அலுவலகத்தை பிரித்து ஆரணியில் புதிய அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வருவாய்த் துறையின்மூலம் திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து ஆரணி மாவட்டம் பிரிக்காத காரணத்தினால் ஆரணியில் புதிய மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் அமைக்க வழிவகை இல்லை.

33—

மாற்றுத் திறனாளிகளுக்கு கல்லூரி

வினா எண் 28714—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, கூட்டேரிபட்டியில் காது கேளாதோர் மற்றும் வாய் பேச முடியாதவர்களுக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாற்றுத் திறனாளிகள் நல உரிமைச் சட்டம், 2016, பிரிவு 32-ன்படி அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் கல்வி நிறுவனங்களில் மாணவ/மாணவியர்கள் சேர்க்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கு 5% இட ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், சென்னை மாநிலக் கல்லூரியில் செவித்திறன் குறைபாடுடைய மாணவ/மாணவியர்களுக்கான பி.காம். மற்றும் பி.சி.ஏ. பட்டப்படிப்பு வகுப்புகள் நடைபெற்று வருகின்றது. இதேபோல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தென்மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி அரசு கலைக் கல்லூரியில் செவித்திறன் குறைபாடுடைய மாணவ/ மாணவியர்களுக்கான பி.காம். மற்றும் பி.சி.ஏ. பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்திட புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதற்குரிய அரசாணை பெறப்பட்டு நடப்பாண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்திடும் வகையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது இதற்கான நடவடிக்கை அவசியம் இல்லை.

34—

மறுவாழ்வு மையம்

வினா எண் 28718—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையம் தொடர்ந்து செயல்படவும் இம்மையத்தை அனைத்து தொகுதிகளிலும் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 12-3-1986 ஆம் ஆண்டு முதன்முதலில் செங்கல்பட்டில் மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையம்

தொடங்கப்பட்டு அதனடிப்படையில் 28 மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாவட்டந்தோறும் செயல்பட்டு வந்தன. 1997 ஆம் ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு தற்போது தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகக் கட்டுப்பாட்டின்கீழ் 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் அரசின் நிதியுதவியுடனும், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் 53 மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள், 65 மனவளர்ச்சி குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் 5 இடைநிலை பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், 0-6 வயதுடைய மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு 92 ஆரம்ப நிலைப் பயிற்சி மையங்களும் செயல்பட்டு வருகின்றன எனவும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான 22 அரசு பள்ளிகளும், 50 அரசு உதவிபெறும் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. தவிர, இவ்வாணையரகத்தின்கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம், 282 மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகள், 36 செவித்திறன் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் மற்றும் 6 பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளுக்கும் ஊதிய மானியம் வழங்கப்படுகிறது.

மேலும், RIGHTS திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு அளிக்கவும் வழிவகை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

35—

சிறப்பு முகாம்

வினா எண் 44574—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தளிக்கோட்டை, செருமங்கலம், மேளாலவந்தாசேரி, பெரம்பூர், ஒளிமதி, கோவில்வெண்ணி, அரிச்சபுரம், வெள்ளக்குடி ஆகிய

2023 ஏப்ரல் 17]

ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மேற்காணும் ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID) *303 மாற்றுத் திறனாளிகளுக்கும், உதவி உபகரணங்கள் 8 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர முறையில்* (Single window approach) *ஒருங்கிணைந்த முகாம் மற்றும் மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ்* (ADIP Scheme) *மருத்துவ மதிப்பீட்டு முகாம் வட்டார வாரியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

36—

சிறப்பு முகாம்

வினா எண் 44582—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வடுவூர் அக்ரஹாரம், சோனாப்பேட்டை, மூவர்க்கோட்டை, புதுதேவங்குடி, ராயபுரம், பொதக்குடி காளஞ்சிமேடு, வடக்கரவயல் ஆகிய ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மேற்காணும் ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID) *195 மாற்றுத் திறனாளிகளுக்கும், உதவி உபகரணங்கள் 3 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர முறையில்* (Single window approach) *ஒருங்கிணைந்த முகாம் மற்றும் மத்திய அரசின் மாற்றுத்*

திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் (ADIP Scheme) மருத்துவ மதிப்பீட்டு முகாம் வட்டார வாரியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

37—

சிறப்பு முகாம்

வினா எண் 44599—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், கண்டிதம் பேட்டை, பருத்திக்கோட்டை, உள்ளிக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, மகாதேவப்பட்டணம், மேலதிருப்பாலக்குடி, மூவாநல்லூர், இடையர் எப்பேத்தி ஆகிய ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மேற்காணும் ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID) 281 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 57 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். 3 மாற்றுத் திறனாளிகள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். உதவி உபகரணங்கள் 4 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர முறையில் (Single window approach) ஒருங்கிணைந்த முகாம் மற்றும் மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் (ADIP Scheme) மருத்துவ மதிப்பீட்டு முகாம் வட்டார வாரியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 17]

38—

சிறப்பு முகாம்

வினா எண் 44623—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், சேரன்குளம், மறவாக்காடு, தென்பாதி, பைங்காநாடு, இடையர்நத்தம், சுந்தரக்கோட்டை, ஏத்தக்குடி ஆகிய ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

*மேற்காணும் ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (*UDID*) 124 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 52 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். 2 மாற்றுத் திறனாளிகள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். 2 பயனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர முறையில்* (Single window approach) *ஒருங்கிணைந்த முகாம் மற்றும் மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ்* (ADIP Scheme) *மருத்துவ மதிப்பீட்டு முகாம்கள் வட்டாரவாரியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

39—

சிறப்பு முகாம்

வினா எண் 44630—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், காரக்கோட்டை, அனுமந்தபுரம், ஆதனூர், சித்தமல்லி, ஆய்குடி, சித்தாம்பூர், அதங்குடி, வடுவூர் தென்பாதி ஆகிய ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மேற்காணும் ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID) *235 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 130 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். 1 மாற்றுத் திறனாளி காத்திருப்போர் பட்டியலில் உள்ளார். உதவி உபகரணங்கள் 3 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர முறையில்* (Single window approach) *ஒருங்கிணைந்த முகாம் மற்றும் மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் (*ADIP Scheme*) மருத்துவ மதிப்பீட்டு முகாம் வட்டார வாரியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

40—

சிறப்பு முகாம்

வினா எண் 44638—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அய்யம்பேட்டை, வடுவூர், வடபாதி, எடமேலையூர் கண்டியர் தெரு, எடமேலையூர் மேற்கு, நல்லிக்கோட்டை, முக்குளம் சாத்தனூர், பேரையூர், பரப்பனாமேடு, கானூர் ஆகிய ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மேற்காணும் ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID) *200 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 43 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். 3 மாற்றுத் திறனாளிகள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். உதவி உபகரணங்கள் 5 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர முறையில்* (Single window approach) *ஒருங்கிணைந்த முகாம் மற்றும் மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ்* (ADIP Scheme) *மருத்துவ மதிப்பீட்டு முகாம் வட்டாரவாரியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

41—

சிறப்பு முகாம்

வினா எண் 44647—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், வல்லூர், பாளையங்கோட்டை, எளவனூர், குறிச்சி, திருமக்கோட்டை, ராதாநரசிம்மபுரம், சேரி, தென்வரை, மேலநத்தம் ஆகிய ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் ஆண்டுதோறும் சிறப்பு முகாம் நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

மேற்காணும் ஊராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID) *184 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 95 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 1 மாற்றுத் திறனாளி காத்திருப்போர் பட்டியலில் உள்ளார்.*

உதவி உபகரணங்கள் 3 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாவட்ட அளவில் ஒற்றைச்சாளர முறையில் (Single window approach) ஒருங்கிணைந்த முகாம் மற்றும் மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் (ADIP Scheme) மருத்துவ மதிப்பீட்டு முகாம் வட்டாரவாரியாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

42—

முதியோர் நல வாரியம்

வினா எண் 51072—திரு. இரா. அருள்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் நல மேம்பாட்டு வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சமூக நல இயக்குநரகத்தின்கீழ் மாநில அரசின் மானியம் பெறும் முதியோர் இல்லங்கள், முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மற்றும் ஒன்றிய அரசின்கீழ் மானியம் பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (Integrated Programme for Senior Citizens) போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தினை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறப்பாகவும், இணைந்தும் செயல்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குவதற்காகவும், கண்காணிப்பதற்காகவும், மாநில அளவில் தலைமைச் செயலரைத் தலைவராகவும், 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டு உயர்நிலை ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 2 மூத்த குடிமக்கள்

2023 ஏப்ரல் 17]

உட்பட 4 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களின் குறைகளை களைய இலவச முதியோர் உதவி எண் "14567"-ஐ செயல்படுத்தி வருகிறது.

மேலும், மூத்த குடிமக்களின் குறைகளைத் தீர்க்க ஒவ்வொரு மாவட்டத்திலும் வருவாய்க் கோட்டாட்சியர்களை தலைவராகக் கொண்ட பராமரிப்பு தீர்ப்பாயங்களாகவும், மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மேல் முறையீட்டு தீர்ப்பாயமாகவும் நியமித்து பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தின்கீழ் பெறப்படும் விண்ணப்பங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, அரசு பல கண்காணிப்பு அமைப்புகளை மூத்த குடிமக்களின் பிரச்சினைகளைக் களைய ஏற்படுத்தி இருப்பதால், தனியாக முதியோர் நல மேம்பாட்டு வாரியம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

43—

மாற்றுத் திறனாளிகள்

வினா எண் 51534—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதியில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதியில், தற்போது சுமார் 1,715 மாற்றுத் திறனாளிகளுக்கு கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது:

ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்-பொது (DDAP-Gen)	1,077

ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்-எஸ்.சி. (DDAP-SC)	362
இந்திரா காந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்-பொது (IGNDAPS-GNE)	208
இந்திரா காந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்-எஸ்.சி. (IGNDAPS-SC)	68
மொத்தம்	1,715

மேலும், இனிவரும் காலங்களில் மாற்றுத் திறனாளி உதவித் தொகை கோரி வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதி, நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

44—

சமையல் அறைக் கட்டடம்

வினா எண் 64829—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வல்லம் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியில் சமையல் அறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.2.35 இலட்சம் மதிப்பீட்டில் சமையலறைக் கட்டடம் கட்டுவதற்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு 25-10-2013 அன்று கட்டடப் பணிகள் நிறைவுற்றுள்ளன. இக்கட்டடம் தற்போது நல்ல முறையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

2023 ஏப்ரல் 17]

45—

சமூகப் பாதுகாப்பு

வினா எண் 78287—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

முதியோர்கள் மீதான வன்கொடுமையைத் தடுக்கவும், பணப் பாதுகாப்பும், சமூக பாதுகாப்பு வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தின்மூலம் மூத்த குடிமக்களுக்கான சட்டப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசு இச்சட்டத்திற்கான விதிகளை 31-12-2009 அன்று வெளியிட்டுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரிப்பது 18 வயதிற்கு மேற்பட்ட அவர்களது குழந்தைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுகளின் கடமையாகும். ஒரு மூத்த குடிமகன் அல்லது பெற்றோர், தனது சொந்த சம்பாத்தியத்திலிருந்தோ அல்லது அவருக்குச் சொந்தமான சொத்திலிருந்தோ தன்னைப் பராமரிக்க முடியாத நிலையில், மூத்த குடிமக்களின் உடல் ஆரோக்கியம், மனநலம் மற்றும் சொத்துகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு பராமரிப்பு தீர்ப்பாயங்கள்மூலம் தீர்வு பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் வருவாய் கோட்டாட்சியரை தலைவராகவும், மாவட்ட சமூக நல அலுவலர்கள் பராமரிப்பு மற்றும் சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் மூத்த குடிமக்கள் மற்றும் ஈன்றெடுத்த, தத்தெடுத்த, மாற்றான் தந்தை அல்லது மாற்றான் தாய் ஆகிய பெற்றோர் இருவரையும் உள்ளடக்கியுள்ளது.

- தங்கள் குழந்தைகள்/சட்டபூர்வ வாரிசுகளால் பராமரிக்கப்படாவிட்டால் பாதிக்கப்பட்ட எந்த மூத்தக் குடிமகனும் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள பராமரிப்பு தீர்ப்பாயங்களுக்கு மனு அளித்து அதிகபட்சம் ரூ.10,000/- வரை ஜீவனாம்சமாக பெற்றுக்கொள்ளலாம்.
- இச்சட்டத்தின்கீழ் ஜீவனாம்சம் கோரி பெறப்பட்ட விண்ணப்பம் 90 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும்.
- மூத்த குடிமக்களுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கக்கூடிய கடமை உள்ளவர் அவர்களை கைவிட்டால், அவர்களுக்கு தண்டனையாக 3 மாதங்கள் சிறைதண்டனை அல்லது ரூ.5,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் அளிக்கப்படும்.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 31-12-2009 முதல் ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தங்களை பராமரிப்பார்கள் என்ற நிபந்தனையுடன் சொத்துகளை தன் பிள்ளைகள் அல்லது வாரிசுதாரர்களுக்கு தான செட்டில்மெண்ட் செய்தபின், அவர்கள் அதன்படி நடக்காவிட்டால் பராமரிப்பு தீர்ப்பாயங்களில், அந்த தான செட்டில்மெண்டை ரத்து செய்யக் கோரி விண்ணப்பிக்கலாம். இதன்மூலம் 2020 ஆம் ஆண்டிலிருந்து டிசம்பர் 2022 ஆம் ஆண்டு வரை பராமரிப்பு தீர்ப்பாயங்களால் 6,125 வழக்குகளும், மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களால் 605 வழக்குகளும் தீர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சமூக இயக்குநரகத்தின்கீழ் ஆதரவற்ற முதியோர் பாதுகாப்பிற்கென மாநில அரசின் மானியம் பெறும் 21 முதியோர் இல்லங்கள், முதியோர் மற்றும் குழந்தைகளை உள்ளடங்கிய 45 ஒருங்கிணைந்த வளாகம் மற்றும் ஒன்றிய அரசின் மானியம் பெறும் 72 மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (Integrated Programme for Senior Citizens) போன்ற திட்டங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து முதியோர் இல்லத்தில் வசிக்கும் மூத்த குடிமக்களின் பாதுகாப்பிற்கு அனைத்து முதியோர் இல்லங்களும் பதிவு செய்யப்பட மாவட்ட சமூக நல அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தனியார் நடத்தும் 281 முதியோர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டு அனைத்து முதியோர் இல்லங்களும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 17]

மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்கீழ் சமூக பாதுகாப்புத் திட்டங்கள்மூலம் முதியோர் நலத்திற்கென இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்மூலம் 60 வயதிற்கு மேற்பட்ட எவ்வித ஆதரவும் இல்லாத முதியோர்களுக்கு ரூ.1,000/- ஓய்வூதியமாக 14,63,750 நபருக்கு வழங்கப்படுகிறது. மருத்துவத் துறையின்மூலம், 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின்மூலம் முதியோருக்கு விழிப்புணர்வு, வீடு தேடி மருத்துவம், நடமாடும் மருத்துவக் குழு போன்ற சேவைகள் அளிக்கப்படுகின்றன. மேலும், முதியோர்கள்மீதான வன்கொடுமையைத் தடுக்கவும், பணப்பாதுகாப்பும், சமூக பாதுகாப்பும் வழங்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

46—

முதியோர் இல்லங்கள்

வினா எண் 78289—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து முதியோர் இல்லங்களையும் சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் சமூக நல இயக்குநரகத்தின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் மாநில அரசின் மானியம் பெறும் 21 முதியோர் இல்லங்கள், 45 முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடங்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மற்றும் 66 ஒன்றிய அரசின் மானியம் பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் (Integrated Programme for Senior Citizens) *முதியோர் இல்லங்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், 196 தனியார் இலவச முதியோர் இல்லங்கள் மற்றும் 85 தனியார் முதியோர் கட்டண இல்லங்கள் இயங்கி வருகின்றன.*

சேலம் மாவட்டத்தில் தற்பொழுது தமிழ்நாடு அரசின் பதிவு பெற்ற ஒன்றிய அரசின் மானியம் பெறும் 2 மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம், 9 தனியார் இலவச முதியோர் இல்லங்கள், 9 தனியார் கட்டண முதியோர் இல்லங்கள் இயங்கி வருகின்றன.

சேலம் மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படும் அனைத்து முதியோர் இல்லங்களும் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களால் தொடர்ச்சியாக குறிப்பிட்ட கால இடைவெளியில் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு கண்காணிக்கப்படுகிறது.

அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் இலவச அல்லது கட்டண முதியோர் இல்லங்களில் பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச இன்றியமையாத தகுதிகளுக்கென அரசாணை (நிலை) எண் 83, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 23-11-2016 வெளியிட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி, அனைத்து முதியோர் இல்லங்களும் மாவட்ட சமூக நல அலுவலரிடம் அரசின் பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் அரசாணையில் குறிப்பிட்ட அனைத்து தகுதிகளும், நிபந்தனைகளும், சுகாதாரச் சான்று, பாதுகாப்பு (கட்டடம்) மற்றும் தீயணைப்பு சான்று மற்றும் இதர ஆவணங்கள் சரியாக இருப்பது ஆய்வில் உறுதி செய்யப்படுகிறது.

மாவட்ட சமூக நல அலுவலரின் திடீர் மற்றும் தெரிவிக்கப்பட்ட ஆய்வின்போது குறைகள் கண்டறியப்படின் முதியோர் இல்லங்களுக்கு சரி செய்ய அறிவுறுத்தப்பட்டு முதியோர் இல்லங்கள் சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் பராமரிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

முதியோர் இல்லங்களில் மாவட்ட சமூக நல அலுவலரின் திடீர் ஆய்வின்போது சுகாதார சான்று, தடையின்மைச் சான்று, கட்டட உரிமச் சான்று, கட்டட உறுதிச் சான்றுகளை சமர்ப்பிக்கும் முதியோர் இல்லங்களுக்கு மட்டுமே பதிவு மற்றும் பதிவு புதுப்பித்தல் செய்து பதிவு சான்றுகள் வழங்கப்படுகின்றன.

இதுதவிர கொரோனா தொற்று மற்றும் பருவ மழை காலங்களுக்கு ஏற்ப முன் எச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த சுற்றறிக்கைமூலம் சமூக நல இயக்குநரகத்தின்

2023 ஏப்ரல் 17]

வழியாக அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா காலகட்டங்களில் முதியோர் இல்லங்களில் உள்ள உள்ளுறைவோர்களுக்கு (பயனாளிகளுக்கு) நேரடியாக தடுப்பூசிகள் செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கிருமி நாசினி மருந்துகள், முகமூடி மற்றும் மருத்துவ ஆலோசனைகள் போன்ற சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநில அளவிலும் உள்ள அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் மாவட்ட அளவிலான மூத்த குடிமக்கள் குழுவினரும் முதியோர் இல்லங்களை ஆய்வு செய்கின்றனர். ஏதேனும் குறை மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பின் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

47—

தொழிற்கல்வி

வினா எண் 78297—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூர்நோக்கு இல்லங்களில் உள்ள சிறார்களுக்கு தொழிற்கல்வி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

அரசாணை (ப) எண் 206, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந8(1)) துறை, நாள் 8-11-2022-ல், சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான அரசு இல்லங்களில் உள்ளுறைவோர்களுக்கு தொழிற்கல்வி வழங்குவதற்கு 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ரூ.14,25,500/- நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆணையில், மற்ற பிற இல்லங்களை தவிர்த்து, 9 அரசு கூர்நோக்கு இல்லச் சிறார்களுக்கு தொழிற்கல்வி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 17*

வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.7,73,000/-ல், தற்போது 660 சிறார்களுக்கு தொழிற்கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

48—

மீன் விற்பனை அங்காடி

வினா எண் 36050—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, நாட்டார்மங்கலம் ஊராட்சியில் மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியத்திலுள்ள நாட்டார்மங்கலம் கிராமத்தில் குறைவான மக்கள் தொகையே (975) உள்ள நிலையில் இக்கிராமத்திலுள்ள ஏரிகளில் பிடிக்கப்படும் மீன்களை பொது மக்கள் ஏரிகளுக்கே நேரடியாக சென்று உயிருடன் வாங்கிச் செல்வதையே விரும்புகின்றனர். எனவே, இப்பகுதியில் மீன் விற்பனை நிலையம் அமைக்கும் நிலை எழவில்லை.

49—

ஆடு ஆராய்ச்சி மையம்

வினா எண் 47024—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி மையத்தின் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்தவும், இரட்டைகுட்டி ஈனும் செம்மறி ஆடுகளை உருவாக்கவும், ஆடு வளர்ப்பவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கவும், அதிக இறைச்சி பெறவும், ஆடுகளை நோயிலிருந்து பாதுகாக்கவும் அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தேவைக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

செம்மறி ஆடுகள் பெரும்பாலும் ஒரு ஈற்றில் ஒரு குட்டி ஈனும் தன்மையுள்ளது. நன்றாக ஊட்டச்சத்துடன் உள்ள ஆடுகள் 5 சதவிகிதம் வரை இரட்டைக் குட்டிகள் ஈனும் வாய்ப்புள்ளது. மேச்சேரி இன செம்மறி ஆட்டில் இரட்டைக் குட்டி அதிகம் ஈனுமாறு செய்ய 2012 ஆம் ஆண்டில் இரட்டைக் குட்டி ஈனும் மரபணுக்களை மேம்படுத்த இரட்டை குட்டி ஈனும் இனத்துடன் கலப்பினம் செய்யப்பட்டது. ஆய்வின் முடிவில், மேச்சேரி செம்மறி ஆட்டில் இரட்டைக் குட்டி ஈனும் திறன் மிகக் குறைவாகவே இருந்தது. மேலும், இரட்டைக் குட்டி ஈனும்பொழுது குட்டிகளுக்கான பாலும், செம்மறி ஆட்டிடமிருந்து போதுமானதாக இல்லை. எனவே, அத்திட்டம் கைவிடப்பட்டது. இருப்பினும், நன்றாக ஊட்டச்சத்து அளித்து, இரட்டைக் குட்டிகளாக பிறக்கும் ஆடுகளை தேர்வு செய்து அப்பண்பினை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தில், கால்நடை விவசாயிகளுக்கு அறிவியல் ரீதியிலான ஆடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், நபார்டு திட்டம், ஆத்மா திட்டம் போன்ற அரசு சார்பு நிறுவனங்கள்மூலம் வரும் விவசாயிகளுக்கும் உரிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சியில் செம்மறி ஆடு தேர்வுகள், இனப்பெருக்க முறைகள், நோய் பராமரிப்பு, தீவன உற்பத்தி மற்றும் தீவனங்களை சேமிக்கும் முறைகள், குடற்புழு நீக்கமுறை, நோய்த் தடுப்பு, ஆடுகளை கழிக்கும் முறைகள் மற்றும் ஆடுகளை விற்கும் முறைகள் போன்றவை பற்றி தெளிவாக விளக்கம் அளிக்கப்படுகிறது. மேலும், சேலத்தில் உள்ள பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மூலமும் வெவ்வேறு கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிகள் முறையாக அளிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 17

அதிக இறைச்சியை பெற, தகுந்த கிடாக் குட்டிகளை தேர்வு செய்து, அதற்கு தேவையான தீவனம் அளித்து அதிகளவு உடல் எடையை அடைவதன்மூலம் அதிக இறைச்சியை பெறலாம். இவ்வாறாக இறைச்சிக்கான கிடாக் குட்டிகள், மேச்சேரி ஆட்டு பண்ணையில் அருகிலுள்ள பகுதிகளில் கால்நடை விவசாயிகளால் அதிகளவு வளர்க்கப்படுகின்றன. இதற்கான பயிற்சி மாதிரிப் பண்ணை இந்நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மையத்தை அணுகும் கால்நடை விவசாயிகளுக்கு இவை பற்றிய விளக்கமும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதனை பிரபலமாக்கும் விதத்தில் ஒரு ஆராய்ச்சி திட்ட முன்முனைவும் தமிழக முதல்வரின் ஆராய்ச்சி திட்ட நிதி உதவிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலையத்தில் தேர்வு முறை இனவிருத்தி (Selective breeding) *மூலம் இவ்வினத்தின் உடல் எடை அதிகரிப்பு மற்றும் பிற பண்புகளின் மேம்பாட்டிற்காக தொடர் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

நோய்த்தடுப்பைப் பொறுத்தமட்டில், இந்நிலையத்திற்கு தொழில்நுட்ப ஆலோசனை வேண்டியும், பயிற்சிக்காகவும் வரும் ஆடு வளர்ப்போருக்கு நோய்த் தடுப்பு மேலாண்மை மற்றும் தடுப்பூசிகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்படுகிறது. ஆடுகளுக்கான நோய்த் தடுப்பு ஊசிகள் மற்றும் சிகிச்சை தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் வழங்கப்படுகிறது.

50—

கால்நடை மருத்துவர் நியமனம்

வினா எண் 66413—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், கண்டிரமாணிக்கம் கால்நடை மருந்தகத்திற்கு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மண்டலம், திருவாரூர் கோட்டம், கண்டிரமாணிக்கம் கால்நடை மருந்தகத்தில் மரு. சி. மேகலா, கால்நடை உதவி மருத்துவர் 27-04-2022 மு.ப. முதல் பணியாற்றி வருகிறார்.

51—

மீனவர் நலன்

வினா எண் 69258—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் அணை பகுதியில் மீன் சமையல் மேளா என்ற விழாவை நடத்தி மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், ஒகேனக்கல்லில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்பு மையத்தை மீண்டும் புதுப்பிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு சங்கத்தில் 2016 நபர்கள் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். இவ்வுறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும்வகையில் கே.கே. 98 மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு சங்கத்தின் வாயிலாக மேட்டூர் அணைப் பகுதியிலுள்ள மக்களுக்கு மீன் சமையல் மேளா வாயிலாக மீன் உணவு நுகர்வு மீன்களிலுள்ள சத்துக்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு நடத்தி, அதன் வாயிலாக மீன் உற்பத்தி/விற்பனையை அதிகரித்து

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல் அரசு மீன் பண்ணையில் 2021-2022 ஆம் ஆண்டில் 23.02 இலட்சம் மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.25.00 இலட்சம் மீன்விரலிகள் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மீன்விரலிகள் வளர்த்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி, பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மீன்விரலிகள் தருமபுரி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்திலுள்ள மீன்வளர்ப்போர்/மீனவ விவசாயிகளுக்கு அரசு நிர்ணயம் செய்த விலைக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும், ஒகேனக்கல் அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையத்தை ரூ.2.50 கோடி மதிப்பில் புனரமைத்திட திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF)-ன்கீழ் நிதி ஒதுக்கீடு பெற அனுப்பப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடு பெற்றவுடன், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மீன்குஞ்சு உற்பத்தி அதிகரித்திட வழிவகை செய்யப்படும்.

(ஆ) மேட்டூர் அணைப் பகுதியில் மீன் சமையல் மேளா விழாவை நடத்திட விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52—

மீன் விற்பனை மையங்கள்

வினா எண் 69267—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு பேரூராட்சி, நகராட்சி, மாநகரப் பகுதிகளில் மீன் அங்காடிகள், தருமபுரி மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி ஒன்றிய பகுதிகளில் மீன் விற்பனை மையங்கள் துவக்கவும், பொள்ளாச்சி தொகுதி, தேவம்பாடிவலசு கிராமத்தின் குளத்தில் மீன் குஞ்சுகளை வளர்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி ஒன்றிய பகுதிகளில் ஏற்கெனவே மூன்று மீன் விற்பனை அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. (பாலக்கோடு, தருமபுரி மற்றும் அரூர்) மேலும், மாவட்டத்தின் இதர பகுதிகளில் மீன் அங்காடி அமைத்திட தகுதியான இடம் தேர்வு செய்து பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மீன் அங்காடி அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) மீன் அங்காடி அமைத்திட தகுதியான இடம் தேர்வு செய்தபின், மீன் அங்காடி அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

53—

மீனவர் நலன்

வினா எண் 69274—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பதப்படுத்தப்பட்டு சந்தைக்கு வரும் மீன் வகைகளில் தரம் கண்காணிக்கப்படவும் சூறாவளி, புயல் போன்ற காலங்களில் மீனவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள அதிநவீன படகுகளை தயாரிக்கவும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) உணவுக் கட்டுப்பாட்டுத் துறை அலுவலர்களுடன் இணைந்து பதப்படுத்தப்பட்டு சந்தைக்கு வரும் மீன் வகைகளின் தரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சூறாவளி, புயல் போன்ற

காலங்களில் மீனவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அதிநவீன படகுகள் தயாரிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

மேலும், சூறாவளி, புயல் போன்ற காலங்களில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும்பொருட்டு தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கி, தொலைதொடர்பு வசதிகள் ஏற்படுத்தும்பொருட்டு, தொலைதொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடலில் உள்ள மீனவர்கள் தங்கள் மீன்பிடி கலன்களிலிருந்து கரைப்பகுதியில் தொடர்புகொள்ள ஏதுவாக கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு 100 விழுக்காடு மானியத்தில் 5 வாட் வி.எச்.எப். கருவிகள் 17,795 எண்ணம் மற்றும் விசைப்படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 3,135 எண்ணம் 25 வாட் வி.எச்.எப். கருவிகளும், ஆக மொத்தம் 20,930 வி.எச்.எப். தொலைதொடர்பு கருவிகள் மற்றும் 660 செயற்கைகோள் தொலைபேசிகள் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும்பொருட்டு மீனவ பயனாளிகளுக்கு துறையால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 49,500 உயிர்காப்பு கவசம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 4,997 விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்களை பொருத்திடும்பொருட்டு ஒன்றிய அரசு ரூ.18.01 கோடி நிதி விடுவித்துள்ளது. டிரான்ஸ்பாண்டர்களை கொள்முதல் செய்து படகுகளில் பொருத்திடும் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) எழாது.

54—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 69260—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, அக்கரைப்பேட்டை கிராமத்தில் உள்ள மீன் சந்தைப் பகுதியை விரிவுபடுத்தி பராமரிக்கவும், கடலூர்

2023 ஏப்ரல் 17]

புவனகிரி பேரூராட்சியில் மீன் விற்பனைக் கூடம், உசிலம்பட்டி நகராட்சிப் பகுதியில் நவீன குளிர்பதன கடல் மீன் விற்பனை நிலையம், திருப்பூர் வடக்கு தொகுதியில் கடல் மீன் விற்பனை நிலையம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, அக்கரைப்பேட்டை கிராமத்தில் உள்ள மீன் சந்தையை விரிவுபடுத்தும்விதமாக ரூ.82.00 இலட்சத்தில் மீன் ஏலக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கஜா புயல் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு திட்டத்தில் ரூ.40.69 இலட்சம் மதிப்பீட்டில் மீன் உலர்களம் மற்றும் பொருட்கள் சேமிப்பு அறை ஆகியன ஏற்கெனவே அமைக்கப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டில் தற்பொழுது இருந்து வருகிறது.

உசிலம்பட்டி நகராட்சி பகுதியில் குறைவான மக்கள் தொகையே (சுமார் 40,000) உள்ள நிலையில், நகராட்சிக்குட்பட்ட சந்தையில் சுமார் 60 முதல் 70 விற்பனையாளர்கள் வரை மீன் விற்பனை செய்து வருகின்றனர். மேலும், மதுரை மாநகராட்சியில் மொத்த மீன் விற்பனை சந்தைகள் இருப்பதாலும், உசிலம்பட்டி நகராட்சி பகுதியில் குறைந்த அளவில் மீன் விற்பனை நடைபெற்று வருவதாலும் நவீன குளிர்பதன கடல் மீன் விற்பனை நிலையம் அமைத்திடும் அவசியமில்லை.

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில், பேரூராட்சியின் வாயிலாக மீன் விற்பனைக் கூடம் கட்டப்பட்டு மீன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக மீன் விற்பனை அங்காடி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தென்னம்பாளையம் மீன் சந்தையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் மீன் விற்பனை செய்யப்பட்டு வருவதாலும், வீரபாண்டி பிரிவில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்

வாயிலாக மீன் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருவதாலும், திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதியில் தனியாக மீன் விற்பனை அங்காடி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

55—

சில்லறை விற்பனை நிலையம்

வினா எண் 75985—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் மற்றும் சுல்தான்பேட்டை பகுதிகளில் மீன்வளத் துறையின்மூலம் சில்லறை விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக சூலூர் பகுதியில் ஏற்கெனவே நவீன மீன் விற்பனை அங்காடி ரூ.10,43,600/- செலவில் அமைக்கப்பட்டு முகவர்கள் வாயிலாக செயல்பட்டு வருகிறது. மேலும், சுல்தான்பேட்டை பகுதியில் விருப்பமுள்ளவர்களைக் கண்டறிந்து மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை வாயிலாக பிரதம மந்திரி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மீன் அங்காடி அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) சுல்தான்பேட்டை பகுதியில் மீன் அங்காடி அமைக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

மீன் விற்பனை மையம்

வினா எண் 76056—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்*

2023 ஏப்ரல் 17]

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேளூர் பெரிய ஏரியில் மீன் வளர்ப்பு தொழிலை மேம்படுத்தவும் மீன் விற்பனை மையம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேளூர் பெரிய ஏரியானது பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. மேலும், பொதுப் பணித் துறையின் வாயிலாக ஏரி குத்தகை விடப்பட்டு, மீன்பிடித் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஏரியில் பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் மீனவர்கள் வாயிலாக நேரடியாக அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருவதால், மீன் விற்பனை மையம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

57—

மீன்பிடி உரிமம்

வினா எண் 780344—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன்பிடிக்க புதிய உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன்பிடிக்க சேலம் மற்றும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த கே.கே. 98, மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களான 2,000 மீனவர்களுக்கு

அரசாணை (நிலை) எண் 132, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை (மீன்-3), நாள் 9-8-2005-ன்படி மீன்பிடி உரிமங்கள் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 2,000 மீன்பிடி உரிமங்கள் வழங்கிட ஆணை பெறப்பட்டுள்ள நிலையிலும், கடந்த 10 ஆண்டுகளில் சராசரியாக 1,500 மீன்பிடி உரிமங்கள் ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 500 மீன்பிடி உரிமங்கள் உரிமம் பெற்ற மீனவர்களால் புதுப்பிக்கப்படுவதில்லை. 2022-2023 ஆம் ஆண்டில் 1,745 மீனவர்கள் தங்களது மீன்பிடி உரிமங்களை புதுப்பித்துள்ளனர். இப்பொருள் குறித்து விசாரணை மேற்கொண்ட வகையில் மீதமுள்ள மீனவர்கள் வயது முதிர்வின் காரணமாக மீன்பிடிப்பில் ஈடுபடாததால், அவர்களது மீன்பிடி உரிமங்களை புதுப்பிக்காமல் உள்ளனர். எனவே, அனுமதிக்கப்பட்டுள்ள 2,000 எண்ணம் மீன்பிடி உரிமங்களில், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மீன்பிடி உரிமங்கள் வழங்கப்பட்டு புதுப்பிக்கப்படாமல் உள்ள மீன்பிடி மீனவர்களின் உரிமங்களை வயது முதிர்வின் காரணமாக மீன்பிடிப்பில் ஈடுபடாத வாரிசுதாரர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

58—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 63753—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதியில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு தனியாக இலவச வீட்டுமனைப் பட்டா (தொகுப்பாக) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் பொருளாதாரத்தில் நலிவடைந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு தனியாக இலவச வீட்டுமனைப் பட்டா (தொகுப்பாக) வழங்கக் கோரி

2023 ஏப்ரல் 17]

பயனாளிகள் மனுக்கள் அளிக்கும்பட்சத்தில், தகுதியான மனுதாரருக்கு நேரடி பேச்சுவார்த்தைமூலம் நில எடுப்பு செய்யப்பட்டு, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும்,

1) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் 22.89.50 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

2) ஏற்கெனவே, 951 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

3) இதில் 249 பட்டாதாரர்களுக்கு இ-பட்டா வழங்கப்பட்டுள்ளது.

4) நில எடுப்பு புலத்தில் 120 வீட்டுமனைகள் காலியாக இருப்பது தெரிய வருகிறது. காலியாக உள்ள இடங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைப் பட்டா பெற்ற பயனாளிகளைக் கண்டறிய இயலாத நிலையில், உரிய அறிவிப்பு கொடுத்து பட்டாவினை இரத்து செய்த பின், புதிய பயனாளிகளை தேர்வு செய்து, பட்டா வழங்க பெண்ணாகரம் வட்டாட்சியர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5) பெண்ணாகரம் வட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நத்தம் நிலங்களில் 2022-2023 ஆம் ஆண்டில் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி வரப்பெற்ற மனுக்கள் 31 ஆகும்.

6) 2022-2023 ஆம் ஆண்டில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தனி நபர் பேச்சுவார்த்தைமூலம் நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை.

7) 2022-2023 ஆம் ஆண்டிற்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்த நிதி ஒதுக்கீடு ஏதும் கோரப்படவில்லை.

59—

விவசாயிகளுக்கு இழப்பீடு

வினா எண் 49068—திரு. இரா. அருள்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 17

நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த நெல், மழையால் முளைப்பெடுத்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழு இழப்பீடு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளின் நலன் கருதி நேரடி நெல் கொள்முதல் நிலையம்மூலம் நேரிடையாக நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கிறது. தற்போது நெல் கொள்முதல் என்பது நவீனமயமாக்கப்பட்டு, இணையதள பதிவு மூப்பின் அடிப்படையில் செய்யப்படுகிறது. விவசாயிகள் அறுவடை செய்த நெல்லினை, கொள்முதல் நிலையங்களுக்கு நேரிடையாக கொண்டு செல்லாமல், இணையதள பதிவு மூப்பின் அடிப்படையிலும், அலைபேசிக்கு வரப்பெற்ற குறுஞ்செய்தியில் குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் கொண்டுசென்று விற்று பயன்பெறுகிறார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அறிவுறுத்தலைப் பொருட்படுத்தாமல், மழையில் நெல்லை நனையவிட்டால் முழு இழப்பீடு வழங்க இயலாது.

60—

நூற்பாலை

வினா எண் 28823—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, துரையரசபுரத்தில் இயங்கிவரும் நூற்பாலைக்கு 2 சேவியோ ஆட்டோ கோனர் இயந்திரங்கள் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் 28-4-2022 அன்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளில் தலா 2 இயந்திரங்கள் வீதம் 10 ஆட்டோ கோனர் (*Auto Coners*) இயந்திரங்கள் நிறுவுவதற்கு ரூ.2,650.03 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண் 176, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்* (C1) *துறை, நாள் 23-11-2022-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

61—

விசைத்தறி

வினா எண் 46623—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரேயான் நூல் விலையைக் கட்டுப்படுத்தி, விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கைத்தறி துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான நூலினை தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்ய சரக துணை/உதவி இயக்குநர்மூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம்மூலம் கொள்முதல் செய்யப்படும் பட்டு நூல்களுக்கு 15% மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், சந்தையில் அவ்வப்போது ஏற்படும் நூல் விலையேற்றம் நெசவாளர்களை பாதிக்காவண்ணம், சங்கங்களின் நலன் மற்றும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 17*

சங்கங்களின் உறுப்பினர்கள் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தங்கு தடையில்லா மூலப்பொருள் விநியோகம் செய்து, உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரேயான் துணி உற்பத்திக்கு 30s, 34s, 40s Viscose வகையிலான நூல் இரகங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட நூல் இரகங்களின்மூலம் உற்பத்தி செய்யப்படும் துணிகளின் விலையும் குறைந்துள்ளது. மேலும், ரேயான் துணிகள் தேவையினைப் பொறுத்து, நூல் விலையானது ஏற்ற, இறக்கத்துடன் நிலையற்ற நிலையில் அவ்வப்போது சந்தை நிலவரத்தைப் பொறுத்து மாறுபடுகிறது. நூல் விலையானது, ஒவ்வொரு நூற்பாலைக்கும், தரத்திற்கு ஏற்ப விலை வித்தியாசம் மாறுபடும்.

எனவே, மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில், நூல் விலை நிர்ணயம் என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும்.

மேலும், சேலம் மாவட்டத்தில் தனியார் விசைத்தறி நெசவாளர்களிடமிருந்து ரேயான் (Rayon) நூல் விலை நிர்ணயம் செய்யக் கோரி எவ்வித முன்மொழிவுகளும் நாளது தேதி வரை பெறப்படவில்லை. எனினும், சேலம் சரக கட்டுப்பாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ரேயான் (Rayon) நூல் பயன்படுத்தி எவ்வித இரகங்களும் உற்பத்தி செய்யப்படவில்லை.

62—

பருத்திக் கழகம்

வினா எண் 48988—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் இந்திய பருத்தி கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பருத்தியினை சகாய விலையில் கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் ஒன்றிய அரசின் செயல் முகமை நிறுவனமாக இந்திய பருத்தி கழகம் செயல்பட்டு வருகிறது. விவசாயிகளிடமிருந்து தேவையான பருத்தியினை முழுவதுமாக கொள்முதல் செய்யும் இந்திய பருத்திக் கழகத்தின் தலைமையிடம் ஏற்கெனவே மும்பையில் செயல்பட்டு வருகிறது. பொதுவாக ஒரு மாநிலத்தில் இந்திய பருத்திக் கழகத்தின் ஒரு கிளை மட்டுமே செயல்படும். அவ்வாறே தமிழகத்தில் இந்திய பருத்தி கழகத்தின் கிளையானது, கோவையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு 2,000 சிறு, குறு பெரிய ஜவுளி ஆலைகளைக் கொண்டுள்ளது. மேலும் நாட்டின் 2/3 பங்கு பருத்தியினை பயன்படுத்தி வருகிறது. விவசாயிகள் பொதுவாக குறைந்த ஆதரவு விலையைவிட அதிகமான விலையில் ஜவுளி ஆலைகளுக்கு நேரடியாக பருத்தியினை விற்பனை செய்து வருகின்றனர். எனவே, பொதுவாக இந்திய பருத்தி கழகத்தின் கைத்தறி ஆதரவு விலை திட்டத்தின் கீழான ஆதரவு விவசாயிகளுக்கு தேவைப்படுவதில்லை. எனினும் இந்திய பருத்திக் கழகம் 8 மாவட்டங்களில் 17 கொள்முதல் நிலையங்களை அமைத்துள்ளது. இவை தமிழ்நாட்டின் பருத்தி விளைச்சலை கொள்முதல் செய்ய போதுமானதாக உள்ளது. கடந்த 3 ஆண்டுகளின் பருத்தி விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, சங்கரன்கோவில் பகுதியில் இந்திய பருத்தி கழகத்திற்கு பருத்தி வரத்து ஏதுமில்லை. இருப்பினும், 5500/- முதல் 6800 மெட்ரிக் டன்கள் நேரடியாக ஜவுளி ஆலைகளுக்கு விவசாயிகளால் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய பருத்திக் கழகம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் பருத்தியானது, குறைந்த ஆதரவு விலையைவிட 41 விழுக்காடு அதிக விலையில் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது, பருத்தி ஒரு குவிண்டாலுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.6,380/- நிர்ணயம் செய்துள்ள நிலையில், வெளிச் சந்தையில் ரூ.9,000/- விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, சங்கரன்கோவில் பகுதியில் தொடர்ந்து பருத்தி வரத்து வரும்பட்சத்தில் இந்திய

[2023 ஏப்ரல் 17

பருத்திக் கழகம் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதியில் இந்திய பருத்திக் கழகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

63—

நூற்பாலை

வினா எண் 49619—திரு. இரா. அருள்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அம்மாபேட்டை கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

சேலம் கூட்டுறவு நூற்பாலையானது, 49,960 கதிர்களுடன் 30-6-1964 அன்று 31.68 ஏக்கர் பரப்பளவில் சேலம் மாவட்டம்-அம்மாபேட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டதால், நூற்பாலையானது 31-3-2004 அன்று செயலிழந்ததைத் தொடர்ந்து, ஆலையானது 7-11-2012 அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 137 (2) (b)-ன்கீழ் தற்போது கலைக்கப்பட்டுவிட்டது. இந்நூற்பாலையில் பணியாற்றிய 62 பணியாளர்கள் மற்றும் 877 தொழிலாளர்கள் தன்விருப்ப ஓய்வில் சென்றுள்ளனர்.

மேலும், ஆலையின் சொத்து மதிப்பு ரூ.123.01 கோடியாகவும், கடன் பொறுப்புகள் ரூ.162.86 கோடியாகவும் உள்ள நிலையில் ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், கலைக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அருகில் உள்ள ஊத்தங்கரையில் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை இயங்கி வருகிறது. இவ்வாலை இப்பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிட்டா நூல் தேவையினை நியாயமான விலையில் தடையின்றி தொடர்ந்து

2023 ஏப்ரல் 17]

பூர்த்தி செய்து வருவதால் கலைக்கப்பட்ட சேலம் கூட்டுறவு நூற்பாலையை புனரமைக்கவோ அல்லது பயன்பாட்டிற்கோ எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

துணிக் கடைகள்

வினா எண் 62511—திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராமங்களிலும், பேரூராட்சிகளிலும், முக்கிய ஊர்களிலும் கைத்தறித் துணிக் கடையைத் திறக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழ்நாட்டின் முக்கிய பகுதிகளில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 105 விற்பனை நிலையங்களுடன் செயல்பட்டு வருகின்றது. தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின்போது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனைக் குழுவின்மூலம் தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகள் உட்பட அனைத்து ஊர்களிலும் உள்ள பள்ளிகள், அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில், வளாக விற்பனை மேற்கொண்டு வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது. எனவே, அனைத்து கிராமங்கள் மற்றும் பேரூராட்சிகளில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் தொடங்குவதற்கான அவசியம் எழவில்லை. மேலும், விற்பனைக்கு அதிகம் வாய்ப்புள்ள தமிழ்நாடு மற்றும் வெளி மாநில முக்கிய ஊர்களிலும் கோ-ஆப்டெக்ஸின் புதிய விற்பனை நிலையம் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 17

65—

காலிப் பணியிடங்கள்

வினா எண் 3656—திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனைக்கு சிறப்பு மருத்துவர் (மயக்கவியல்) மற்றும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனை 128 படுக்கை வசதி கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்படுகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 405 வெளிநோயாளிகள் மற்றும் 47 உள்நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள்.

இம்மருத்துவமனைக்கு மகப்பேறு மருத்துவர், மயக்கவியல் மருத்துவர், பொது அறுவை சிகிச்சை மருத்துவர், குழந்தை நல மருத்துவர், எலும்பு சிகிச்சை மருத்துவர் போன்ற சிறப்பு மருத்துவர் பணியிடங்கள் உட்பட 14 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

மேலும், காலிப் பணியிடங்களில் பதவி உயர்வு, பணியிட மாறுதல், பணி மூப்பு அடிப்படையில் ஓய்வு பெறுதல், விருப்பத்தின்பேரில் ஓய்வு பெறுவதால் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் எதிர்வரும் கலந்தாய்வு நிகழ்வுகள்மூலம் உடனுக்குடன் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு, காலதாமதமின்றி குறித்த காலத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள், நடப்பாண்டில் முதுநிலை பட்டம் முடித்த, பணிசார்ந்த பட்டதாரி மருத்துவர்கள் (Service Post Graduate) மற்றும் பணிசாரா பட்டதாரி மருத்துவர்கள் (Non Service Post Graduate) மூலமும் நிரப்பப்படும்.

2023 ஏப்ரல் 17]

66—

பணியாளர்கள் நிரப்புதல்

வினா எண் 4152—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையில் இரவுநேர மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், மயக்க மருத்துவர்கள், ஆய்வக நிபுணர்கள், போதுமான செவிலியர்கள் ஆகிய பணியாளர்களை பணியில் அமர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனை 50 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது.

மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், அறுவை சிகிச்சை பின் கவனிப்பு, மகப்பேறு விஷ முறிவு சிகிச்சை பிரிவு, சித்தா, பல் சிகிச்சை மற்றும் NBSU *உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகள் உள்ளன. மின்னாக்கி, குளிரூட்டப்பட்ட அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை உள்ளன. 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதி உள்ளது. இம்மருத்துவமனையில் ஸ்கேன், எக்ஸ்ரே, இசிஜி போன்ற தேவையான மருத்துவக் கருவிகள் உள்ளன.*

இம்மருத்துவமனையின் செயல்பாட்டினை கருத்தில் கொண்டு குழந்தை நல மருத்துவர், பொது மருத்துவர் உட்பட 4 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது பணியில் உள்ள மருத்துவர்களைக் கொண்டு சுழற்சி முறையில் நோயாளிகளுக்கு 24X7 மணி நேரமும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

[*2023 ஏப்ரல் 17*

மேலும், 5 நிரந்தர செவிலியர்கள், 5 ஒப்பந்த செவிலியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டு பணியில் உள்ளனர். 1 ஆய்வக நுட்புனர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டு, ஆய்வு நுட்புனர் ஒருவர் மாற்றுப் பணியில் பணிபுரிந்து வருகின்றார். மேலும், காசநோய் (ICTC) திட்டத்தின்கீழ் பணிபுரியும் 1 ஆய்வக நுட்புனர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டு, 1 பணியாளர் பணியில் உள்ளார். இவரைக் கொண்டு ஆய்வக பணிகள் தொய்வின்றி நடைபெற்று வருகிறது.

67—

மருத்துவமனை

வினா எண் 4180—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கவும் மற்றும் மருத்துவர்கள் நியமனம் செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனை 18 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 228 வெளிநோயாளிகள் மற்றும் 5 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 4,244 ஆய்வக பரிசோதனை, 68 எக்ஸ்ரே, 64 இசிஜி ஆகியவை எடுக்கப்படுகின்றன.

மேலும், மாதம் ஒன்றுக்கு 32 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, சித்தா பிரிவு, தொற்றா நோய் போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், மின்னாக்கி வசதி, சமையல் அறை, அவசர ஊர்தி நிறுத்தும் இடம் போன்ற வசதிகளும்

2023 ஏப்ரல் 17]

உள்ளன. மேலும், ஆய்வக வசதி, எக்ஸ்ரே, இசிஜி, ஸ்கேன் போன்ற உபகரணங்கள், குடிநீர் வசதிகளும் உள்ளன. இம்மருத்துவமனைக்கு 4 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து மருத்துவர்களும் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது உள்ள மருத்துவர்களைக் கொண்டு நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், இம்மருத்துவமனையை மேலும் தரமுயர்த்த அவசியம் எழவில்லை.

மேலும், கருங்கல் அரசு மருத்துவமனையிலிருந்து 6 கி.மீ. தொலைவில் 50 படுக்கை வசதிகள் கொண்ட குளச்சல் அரசு மருத்துவமனை மற்றும் 12 கி.மீ. தொலைவில் 174 படுக்கை வசதிகள் கொண்ட பத்மநாபபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஆகியவை பல்வேறு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

68—

மருத்துவர்கள் நியமித்தல்

வினா எண் 4375—திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் இயங்கிவரும் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் அரசு மருத்துவமனை 296 படுக்கை வசதிகள் கொண்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகும். மாதமொன்றுக்கு சராசரியாக 155 உள்நோயாளிகள் மற்றும் 1,070 வெளிநோயாளிகள் சிகிச்சை

பெற்று வருகின்றனர். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 135 பிரசவங்களும், 60 அறுவை சிகிச்சை பிரசவங்களும் இம்மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மருத்துவமனைக்கு 41 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில், மயக்கவியல் மருத்துவர், பொது மருத்துவர், மகப்பேறு மருத்துவர், எலும்பு சிகிச்சை மருத்துவர், குழந்தை சிகிச்சை மருத்துவர் உட்பட 36 மருத்துவர்கள் தற்சமயம் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள், நடப்பாண்டில் முதுநிலை பட்டம் முடித்த, 620 பணிசார்ந்த பட்டதாரி மருத்துவர்கள் (Service PG) மற்றும் 785 பணிசாரா பட்டதாரி மருத்துவர்கள் (Non Service Post Graduate) மூலமும் நிரப்பப்படும்.

மேலும், காலிப் பணியிடங்களில், பதவி உயர்வு, பணியிட மாறுதல், பணிமூப்பு அடிப்படையில் ஓய்வு பெறுதல், விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதால் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் எதிர்வரும் கலந்தாய்வு நிகழ்வுகள்மூலம் உடனுக்குடன் நிரப்பப்பட்டு, பொதுமக்களுக்கு காலதாமதம் இன்றி குறித்த காலத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

69—

குடிநீர்

வினா எண் 7341—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருவிகுளம் ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 17]

1. கலிங்கப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்
2. குருவிகுளம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்
3. சாயாமலை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்
4. திருவேங்கடம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

குருவிகுளம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் பஞ்சாயத்துமூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆழ்துளைக் கிணறுமூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. கலிங்கப்பட்டி, சாயாமலை மற்றும் திருவேங்கடம் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆழ்துளைக் கிணறுமூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கலிங்கப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி உள்ளது.

70—

மருத்துவமனை

வினா எண் 7615—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் போர்வெல்லை புதுப்பித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனை, 150 படுக்கை வசதிகளுடன் வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு, நாளொன்றுக்கு சராசரியாக 418 வெளிநோயாளிகளும்,

[2023 ஏப்ரல் 17

29 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் பழுதடைந்துள்ள போர்வெல் தற்சமயம் புதுப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

71—

சுகாதார மாவட்டம்

வினா எண் 7790—திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யாறை தலைமையிடமாகக் கொண்டு ஆரணியையும் உள்ளடக்கி செய்யாறு சுகாதார மாவட்டம் இயங்கி வருகிறது. அனகாவூர், ஆரணி கிழக்கு, ஆரணி மேற்கு, செய்யாறு, பெரணமல்லூர், தெள்ளாறு, வந்தவாசி, வெம்பாக்கம் ஆகிய 8 வட்டங்களைக் கொண்டு செய்யாறு சுகாதார மாவட்டம் சிறப்பாக இயங்கி வருவதால், மீண்டும் ஆரணியில் புதிதாக சுகாதார மாவட்டம் அமைத்திட சாத்தியமில்லை.

72—

மருத்துவமனை

வினா எண் 21040—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு நோயாளிகளின் நலன் கருதி MRI ஸ்கேன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசு மருத்துவமனை 300 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1,162 வெளிநோயாளிகளும், 165 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆய்வகம், எக்ஸ்ரே, இசிஜி, USG *ஸ்கேன் மற்றும் சிடி-ஸ்கேன் போன்ற வசதிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு நோயாளிகளுக்குத் தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டு, உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 330* USG *ஸ்கேன் மற்றும் 496 சிடி-ஸ்கேன் எடுக்கப்படுகின்றன.* MRI *ஸ்கேன் தற்பொழுது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.* MRI *ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் அருகிலுள்ள சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே, சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்குத் தனியாக* MRI *ஸ்கேன் வசதி ஏற்படுத்த தற்சமயம் அவசியம் எழவில்லை.*

73—

மருத்துவமனைக் கட்டடங்கள்

வினா எண் 22978—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், நல்லூர் ஊராட்சியில் இருக்கும் அரசு வட்டார மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வேப்பூர் அரசு மருத்துவமனை 30 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 520 வெளிநோயாளிகளும், 22 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 5 பிரசவங்கள் மற்றும் 103 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 11,726 ஆய்வக பரிசோதனைகள், 117 இசிஜி ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் போன்ற பிரிவுகள் கொண்ட கட்டடம் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையிலிருந்து 25 கி.மீ.-ல் 204 படுக்கைகள் மற்றும் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட விருத்தாசலம் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், இம்மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

74—

மருத்துவமனைக் கட்டடம்

வினா எண் 23398—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, பையங்குளம் ஊராட்சி, தேங்காய்ப்பட்டணம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சுகாதார மாவட்டம், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் தேங்காய்ப்பட்டணம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. தேங்காய்ப்பட்டணம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தின் மேற்கூரை கசிவை சரிபார்க்க 2021-2022 ஆம் நிதியாண்டில் பழுதுபார்ப்புப் பணிகளுக்கான நிதி உதவியின்கீழ் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் தேங்காய்ப்பட்டணம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தின் மேற்கூரை கசிவு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல நிலையில் உள்ளது. எனவே, தேங்காய்ப்பட்டணம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

75—

மருத்துவமனை

வினா எண் 25817—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கருங்கல் அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மருத்துவமனை 18 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

[2023 ஏப்ரல் 17

இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, சித்தா பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், மின்னாக்கி வசதி, சமையல் அறை போன்றவையும் உள்ளன. மேலும், எக்ஸ்ரே, இசிஜி, ஸ்கேன் போன்ற உபகரணங்கள், குடிநீர் வசதிகளும் மற்றும் மருத்துவர்/பணியாளர் குடியிருப்பு வசதிகளும் உள்ளன. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 201 வெளிநோயாளிகள் மற்றும் 6 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 3,460 ஆய்வக பரிசோதனை, 82 எக்ஸ்ரே, 50 இசிஜி ஆகியவை எடுக்கப்படுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு 31 சிறிய வகை அறுவை சிகிச்சையும் நடைபெற்று வருகிறது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், இம்மருத்துவமனையை மேலும் தரமுயர்த்த அவசியம் எழவில்லை. மேலும், கருங்கல் அரசு மருத்துவமனையிலிருந்து 6 கி.மீ.-ல் 50 படுக்கை வசதிகள் கொண்ட குளச்சல் அரசு மருத்துவமனை மற்றும் 12 கி.மீ.-ல் 174 படுக்கை வசதிகள் கொண்ட பத்மநாபபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஆகியவை பல்வேறு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. எனவே, கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கருங்கல் அரசு மருத்துவமனையினை தரமுயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

76—

பல்நோக்கு மருத்துவமனை

வினா எண் 25818—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையில், அப்பகுதி மக்கள் சமநிலைப் பகுதிக்கு சிகிச்சைக்கு வருவதைத் தவிர்க்க, பல்நோக்கு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில், வட்ட மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை/மருந்தகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், பொது சுகாதாரத் துறையின்கீழ், எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சுகாதார வசதிகளை வழங்கும்பொருட்டு, நடமாடும் மருத்துவமனைத் திட்டம் துவங்கப்பட்டு, இக்குழுவில் ஒரு மருத்துவர், செவிலியர், ஆய்வக தொழில் நுட்புனர், வாகன ஓட்டுநர் மற்றும் ஒரு உதவியாளர் ஆகியோர் பணிபுரிகின்றனர். இதனுடன், 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் மூலமும் தொற்றா நோய் சிகிச்சைக்கான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 108 ஆம்புலன்ஸ் வசதி, Mobile Medical Unit *போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்துறையின்கீழ் செயல்படும் மருத்துவமனைகளின்மூலம் ஜவ்வாது மலையில் உள்ள மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாலும், ஜவ்வாது மலையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும், இப்பகுதியில் புதியதாக பல்நோக்கு மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.*

77—

அவசர சிகிச்சை

வினா எண் 25839—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாவட்ட நெடுஞ்சாலைகளில் 50 கி.மீ-க்கு ஒன்று வீதம் அவசர சிகிச்சை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்ட மருத்துவமனை மற்றும் வட்டம் சாரா மருத்துவமனை ஆகியவை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மேலும், 108 ஆம்புலன்ஸ் வசதி, Mobile Medical Unit *போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 44* Tamil Nadu Accident and Emergency Care Initiative (TAEI) *மையங்களும், 37 விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களும், 6 படுக்கை வசதிகள் கொண்ட* ECC *மையங்களும் பிரத்தியேகமாக விபத்து ஏற்படும் பகுதிகளில் சிறப்பாக செயல்பட்டு வருவதாலும், மாநிலம் முழுவதும் கட்டணமில்லா 108 ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாலும், இன்னுயிர் காப்போம் திட்டம்-48 செயல்பட்டு வருவதாலும், மாவட்ட நெடுஞ்சாலைகளில் 50 கிலோ மீட்டருக்கு ஒன்று வீதம் அவசர சிகிச்சை மருத்துவமனை தனியாக அமைக்க அவசியம் எழவில்லை.*

78—

பல்நோக்கு மருத்துவமனை

வினா எண் 25842—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஏலகிரி மலையில், அப்பகுதி மக்கள் சமநிலை பகுதிக்கு சிகிச்சைக்கு வருவதைத் தவிர்க்க பல்நோக்கு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டத்தில், மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்ட மருத்துவமனை, வட்டம்

2023 ஏப்ரல் 17]

சாரா மருத்துவமனை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை/மருந்தகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், பொது சுகாதாரத் துறையின்கீழ், எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சுகாதார வசதிகளை வழங்கும்பொருட்டு நடமாடும் மருத்துவமனைத் திட்டம் துவங்கப்பட்டு, இக்குழுவில் 1 மருத்துவர், 1 செவிலியர், 1 ஓட்டுநர் மற்றும் 1 துப்புரவு உதவியாளர் ஆகியோர் பணிபுரிகின்றனர். இதனுடன், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலமும் தொற்றா நோய் சிகிச்சைக்கான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 108 ஆம்புலன்ஸ் வசதி, Mobile Medical Unit *போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட மருத்துவமனைகளின்மூலம், ஏலகிரியில் உள்ள மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதால், இப்பகுதியில் புதியதாக பல்நோக்கு மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.*

79—

பல்நோக்கு மருத்துவமனை

வினா எண் 25843—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கொடைக்கானலில், அப்பகுதி மக்கள் சமநிலைப் பகுதிக்கு சிகிச்சைக்கு வருவதைத் தவிர்க்க, பல்நோக்கு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டத்தில், மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, வட்ட மருத்துவமனை, பழனி

மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை/மருந்தகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், பொது சுகாதாரத் துறையின்கீழ், எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சுகாதார வசதிகளை வழங்கும்பொருட்டு நடமாடும் மருத்துவமனைத் திட்டம் துவங்கப்பட்டு, இக்குழுவில் 1 மருத்துவர், 1 செவிலியர், 1 ஓட்டுநர் மற்றும் 1 துப்புரவு உதவியாளர் ஆகியோர் பணிபுரிகின்றனர். இதனுடன், 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் மூலமும் தொற்றா நோய் சிகிச்சைக்கான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 108 ஆம்புலன்ஸ் வசதி, Mobile Medical Unit போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு மருத்துவமனைகளின் மூலமும், மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மூலமும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாலும், கொடைக்கானல் வட்ட அரசு மருத்துவமனை 62 படுக்கை வசதிகளுடன் CT Scan போன்ற நவீன கருவிகளுடன் செயல்பட்டு வருவதாலும், கொடைக்கானலில் புதியதாக பல்நோக்கு மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

80—

சுகாதார மாவட்டம்

வினா எண் 25874—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, இலுப்பூரை மையமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கியை தலைமையிடமாகக்

2023 ஏப்ரல் 17]

கொண்டு பொது சுகாதார மாவட்டங்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. புதுக்கோட்டை சுகாதார மாவட்டத்தில், விராலிமலை வட்டாரத்தில் இலுப்பூரையும் உள்ளடக்கி 7 வட்டாரங்களுடன் புதுக்கோட்டை சுகாதார மாவட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதால், இலுப்பூரில் தனியாக மேலும் ஒரு சுகாதார மாவட்டம் அமைத்திட சாத்தியமில்லை.

81—

அரசு மருத்துவமனை

வினா எண் 25889—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி அரசு மருத்துவமனையை வட்ட தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளியில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், நல்லம்பள்ளி ஒன்றியத்திலேயே லாலிகம், இந்தூர் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், பந்தஹள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், நல்லம்பள்ளியிலிருந்து 9 கி.மீ.-ல் அனைத்து உயர்தர வசதிகளைக் கொண்ட தருமபுரி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இயங்கி வருகின்றன. எனவே, நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தலைமை வட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

[*2023 ஏப்ரல் 17*

82—

செவிலியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 26542—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசு தலைமை மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்லூரியில் மட்டுமே செவிலியர் கல்லூரி தொடங்கப்பட வேண்டும். ஏனெனில், செவிலியர் பட்டப் படிப்பு பாடப்பிரிவுகள், மருத்துவப் படிப்பு பாடப்பிரிவுகளுடன் ஒத்து இருப்பதாலும், தற்போது ஆத்தூரிலிருந்து 77 கி.மீ. தொலைவிலுள்ள சேலம் மாவட்டத்தில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இயங்கி வருவதாலும், சேலம் மாவட்டம், ஆத்தூர் அரசு தலைமை மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

83—

உபகரணங்கள்

வினா எண் 38534—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு X-Ray *பிரிவு தொடங்கவும்,* USG *அல்ட்ராசவுண்ட் கருவி மற்றும் பல் சிகிச்சை பிரிவு உபகரணங்கள் வழங்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனை 26 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் வட்டம் சாரா அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 445 வெளிநோயாளிகள், 20 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 9,108 ஆய்வக பரிசோதனை, 66 இசிஜி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாதம் ஒன்றுக்கு சராசரியாக 70 சிறிய வகை அறுவை சிகிச்சைகளுடன் செயல்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு போன்ற பிரிவுகள் உள்ளன. ECG, Baby Warmer, Suction apparatus, Pulse Oximeter *போன்ற தேவையான மருத்துவக் கருவிகளும் உள்ளன. மின்னாக்கி வசதி,* RO Plant *ஆகிய வசதிகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.*

இம்மருத்துவமனைக்கு பிரசவத்திற்கு வரும் தாய்மார்களின் எண்ணிக்கை மற்றும் USG Scan *தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே உள்ளது.*

மேலும், தற்சமயம் X-ray *மற்றும்* USG Scan *தேவைப்படும் நோயாளிகள் அருகில் 7 கி.மீ.-ல் உள்ள 60 படுக்கை வசதிகள் கொண்ட பூதலூர் அரசு வட்ட மருத்துவமனைக்கும், 12 கி.மீ.-ல் நடுகாவேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மற்றும் 13.5 கி.மீ.-ல் ராஜா மிராசுதாரர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.*

இம்மருத்துவமனையில் Dental Chair *மற்றும் பல் சிகிச்சை உபகரணங்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி மாதம் ஒன்றுக்கு சராசரியாக 510 நோயாளிகளுக்கு பல் சிகிச்சை அளிக்கப்படுகிறது.*

எனவே, திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு X-Ray *பிரிவு தொடங்கவும்,* USG *அல்ட்ராசவுண்ட் கருவி மற்றும் பல் சிகிச்சைப் பிரிவு உபகரணங்கள் வழங்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.*

84—

டயாலிசிஸ் இயந்திரங்கள்

வினா எண் 48296—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கூடுதலாக 5 டயாலிசிஸ் இயந்திரங்கள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை 354 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 244 உள்நோயாளிகளும், 1,214 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 8 டயாலிசிஸ் கருவிகள் ஒப்பளிக்கப்பட்டிருந்தன. மேலும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இம்மருத்துவமனைக்குக் கூடுதலாக 2 டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்பட்டு, தற்போது இம்மருத்துவமனையில் 10 டயாலிசிஸ் கருவிகள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் மாதமொன்றுக்கு சராசரியாக 65 நோயாளிகளுக்கு 581 இரத்தம் சுத்திகரிப்பு சுழற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, கூடுதலாக 5 டயாலிசிஸ் இயந்திரங்கள் வழங்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

85—

பட்டா மாற்றம்

வினா எண் 46776—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 17]

தமிழக திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு திருக்கோயில் பெயருக்குப் பட்டா மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தமிழக திருக்கோயில்களுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்டு, திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

86—

வக்ஃபு வாரிய சொத்துகள்

வினா எண் 37913—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி பகுதியான மேலக்காவேரி பகுதியில் வக்ஃபு வாரிய சொத்துகள் பலவற்றை முறையான முறையில் மீட்டு வக்ஃபு வாரியத்தில் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், மேலக்காவேரி, முகையதீன் ஆண்டவர் பள்ளிவாசல் வக்ஃபுவிற்கு சொந்தமான புல எண் 247/4, விஸ்தீர்ணம் 0.10.5 ஏர்ஸில் 2,168 சதுர அடி கொண்ட காலிமனை முறைகேடாக தனி நபருக்கு பத்திர ஆவண எண் 2395/1992-ன்படி விற்பனை செய்துள்ளதை இரத்து செய்ய தஞ்சை மாவட்ட பதிவாளர் மற்றும் கும்பகோணம் சார்-பதிவாளர் ஆகியோருக்கு

ஆட்சேபணை கடிதங்கள் அனுப்பப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

87—

ஹஜ் பயணத் தொகை

வினா எண் 63754—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் ஹஜ் பயணம் மேற்கொள்ளும் சிறுபான்மையின மக்களுக்கு வழங்கப்படும் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் ஹஜ் பயணிகளுக்கு வழங்கி வந்த மானியத்தை ஒன்றிய அரசு நிறுத்தியது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின்மூலம் முதன்முறையாக ஹஜ் பயணம் மேற்கொண்ட ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியமாக ரூ.6.00 கோடி தமிழக அரசு ஒப்பளிப்பு செய்தது. இத்திட்டத்தின்கீழ் ஹஜ் 2018-ல் ஒவ்வொரு பயணிக்கும் தலா ரூ.15,913/- வீதம் 3,769 தகுதியான ஹஜ் பயணிகளுக்கும், ஹஜ் 2019-ல் ஒவ்வொரு பயணிக்கும் தலா ரூ.13,639/- வீதம் 4,397 தகுதியான ஹஜ் பயணிகளுக்கு மாநில அரசின் ஹஜ் மானியத் தொகை அவர்களது சேமிப்பு வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. கொரோனா (Covid-19) பெருந்தொற்று காரணமாக, ஹஜ் 2020 மற்றும் ஹஜ் 2021 ஆம் ஆண்டுகளுக்கான ஹஜ் பயணத்தை சவூதி அரேபிய அரசு இரத்து செய்தது. 2022 ஆம் ஆண்டு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 1,672 பயணிகளில், ஒரு நபருக்கு ரூ.27,628/- வீதம் 1,649 தகுதியான ஹஜ் பயணிகளுக்கு தமிழ்நாடு அரசின் ஹஜ் மானியத்

2023 ஏப்ரல் 17]

தொகை, அவர்களது சேமிப்பு வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறை, நாள் 16-2-2021-ல், தமிழ்நாடு அரசு ஹஜ் மானியத் தொகையை ரூ.6.00 கோடியிலிருந்து ரூ.10.00 கோடியாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

88—

பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 12091—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சி, கீழக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆய்வக உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சி, கீழக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளர் பணியிடம் 1-10-2022-ல் நிரப்பப்பட்டுள்ளது. ஆய்வக உதவியாளர் பணியிடம் விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

கல்வி மாவட்டம்

வினா எண் 12314—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, குன்னன்டார்கோவில், ஆதனக்கோட்டை ஆகிய பகுதிகளை இணைத்து, கந்தர்வகோட்டை கல்வி மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 17

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கெனவே 3 கல்வி மாவட்டங்கள் மட்டும் இயங்கி வந்தன. தற்போது, நிர்வாக சீரமைப்பின் காரணமாக 1-10-2022 முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில்

I. *மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), புதுக்கோட்டை*

II. *மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), அறந்தாங்கி*

III. *மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), புதுக்கோட்டை*

IV. *மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), அறந்தாங்கி*

V. *மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்), புதுக்கோட்டை*

ஆகிய 5 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, கந்தர்வகோட்டைக் கல்வி மாவட்டம் புதியதாக உருவாக்கும் நிலை எழவில்லை.

90—

பள்ளிகள்

வினா எண் 38144—திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை நகராட்சி, காரமடை நகராட்சி நடுநிலைப் பள்ளியை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை நகராட்சி, காரமடை நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு அருகாமையில் 3 கி.மீ. சுற்றளவில் காரமடை அரசு மேல்நிலைப் பள்ளியும், கெம்பநஞ்சம்மாள் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருவதாலும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்யாததாலும், மேற்காண் பள்ளியை தற்போது தரமுயர்த்தும் சூழல் எழவில்லை.

91—

கழிப்பறை

வினா எண் 57910—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், மோழியனூர் கிராமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், மோழியனூர் கிராமம், நெடிமோழியனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 195 மாணவர்கள் மற்றும் 174 மாணவிகள் பயின்று வருகின்றனர். மாணவிகளுக்கு 6 கழிவறைகளும், மாணவர்களுக்கு 6 கழிவறைகளும் மட்டுமே உள்ளன. ஆனால், மாணவ, மாணவியர் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் கழிவறைகள் ஏற்படுத்திட பள்ளியில் இட வசதி உள்ளதால், உரிய நிதி ஒதுக்கீடு பெறும் நிகழ்வில் முன்னுரிமை அடிப்படையில் கட்டப்படும்.

[*2023 ஏப்ரல் 17*

92—

உழவுத் தொழில்

வினா எண் 58854—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண் பட்டதாரி ஆசிரியர்களை பணியமர்த்தி, உழவுத் தொழிலை மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 129, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18-5-1999, அரசாணை (நிலை) எண் 63, பள்ளிக் கல்வித் (வி.இ) துறை, நாள் 13-3-2007, அரசாணை (நிலை) எண் 143, பள்ளிக் கல்வித் (வி.இ) துறை, நாள் 2-7-2008 ஆகியவைகளின்படி, 300 வேளாண்மை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளாண்மைப் பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

93—

தொடக்கக் கல்வி அலுவலகம்

வினா எண் 77981—திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி மற்றும் எல்லாபுரம் ஒன்றியங்களுக்குண்டான மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் ஆவடியிலிருந்து பொன்னேரிக்கு மாற்றப்பட்டுள்ளதை பரிசீலித்து, ஆவடி பகுதியில் தொடக்கக் கல்வி அலுவலகம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 5 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் இயங்கி வந்தன. அரசாணை (நிலை) எண் 151, பள்ளிக் கல்வி (ப.க.1 (1))த் துறை, நாள் 9-9-2022-ன்படி நிருவாக மறுசீரமைப்பின் காரணமாக,

I. *மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), திருவள்ளூர்*

II. *மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), பொன்னேரி*

III. *மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), பொன்னேரி*

IV. *மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), திருவள்ளூர்*

V. *மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்), திருவள்ளூர்*

என திருவள்ளூர் மாவட்டத்திலேயே தற்போது 5 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, ஆவடி பகுதியில் தொடக்கக் கல்வி அலுவலகம் செயல்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

94—

கல்வி அலுவலகங்கள்

வினா எண் 78010—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டாக குறைக்கப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களை (DEO) மீண்டும் நான்காக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கெனவே செயல்பாட்டில் இருந்த 4 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் தற்போது

(i) மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

(ii) மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை), மார்த்தாண்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

(iii) மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

(iv) மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்), நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்திலேயே 4 மாவட்டக் கல்வி அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மாவட்டக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையினை மீளவும் உயர்த்தும் நிலை எழவில்லை.

95—

பாடங்கள் துவக்குதல்

வினா எண் 78240—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளி பாடப் புத்தகங்களில் விளையாட்டு குறித்த பாடங்கள் துவக்கவும், அனைத்து அரசு பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கவும், பள்ளிகளில் சதுரங்க விளையாட்டிற்கு பயிற்சி அளித்து ஊக்கப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 17]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அனைத்து அரசு/அரசு உதவிபெறும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளிலும் உடற்கல்வி ஆசிரியர்கள்/ உடற்கல்வி இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு, மாணவர்களுக்கு வாரத்திற்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டு உடற்கல்வி பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின்மூலம் தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை அனைத்துப் பள்ளிகளுக்கும் 2022-2023 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன மேலும் பாரதியார் தின/குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டிகளில் ஓர் அங்கமாக சதுரங்க போட்டிக்கான பயிற்சி அளிக்கப்பட்டு, அப்போட்டிகள் பள்ளி/குறு வட்டம்/மாவட்டம் மற்றும் மாநிலம் என 4 நிலைகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

96—

போதை ஒழிப்பு தினம்

வினா எண் 78268—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போதை ஒழிப்பு தினம் தனியார் பள்ளிகளிலும் கடைபிடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அனைத்து வகை அரசு/அரசு நிதியுதவி/தனியார் பள்ளிகளிலும் போதை ஒழிப்பு தினம் கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

97—

பணியாளர்களுக்கு இருக்கைகள்

வினா எண் 55495—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 17

(அ) தமிழகத்தில் உள்ள வணிக வளாகம் (Shopping Complex) மற்றும் ஜவுளிக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் 12 மணி நேரத்திற்கு மேல் நின்று பணியாற்றுகிறார்கள். அவர்கள் அமர்வதற்கு இருக்கைகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களில் நின்றுகொண்டே பணிபுரியும் பணியாளர்கள் பணியிடையே அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி அமர்வதற்கு ஏதுவாக நிறுவன வளாகத்தில் இருக்கை வசதிகள் ஏற்படுத்தித் தர 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் 22-A என்ற புதிய பிரிவினை சேர்த்திட தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) சட்டம் 2021-ல் தகுந்த திருத்தங்கள் அரசால் மேற்கொள்ளப்பட்டு, இச்சட்டப் பிரிவு 4-10-2021 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ளது எனவும், மேலும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருக்கை வசதி அமைத்துத் தருவது குறித்து அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும், இதுவரை 9,219 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 665 நிறுவனங்கள்மீது முரண்பாடுகள் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இணைப்பு-II

(120 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக தனியே ஒரு துறையை ஏற்படுத்தி முன்னோடியாக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சமுதாயத்தை அமைக்க இவ்வரசு முனைந்திருக்கும் வேளையில், "ஒரு மாற்றுத்திறனாளிகூட மனவருத்தம் அடையக் கூடாது; ஒரே ஒருவருக்கு நன்மை பயக்கும் என்றாலும் கூட, அந்தச் செயலை நாம் உடனடியாக செய்தாக வேண்டும்" என்ற உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. கடந்த 2010-2011 ஆம் ஆண்டு முதலே தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் திறன்களை அங்கீகரித்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக 'ஊனமுற்றோர்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'மாற்றுத் திறனாளிகள்' என்ற வார்த்தையை உருவாக்கி பயன்படுத்தி வருகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் உலக மாற்றுத் திறனாளிகள் தினமானது தமிழ்நாடு அரசால் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. அந்நாளில் ஐக்கிய நாடுகள் சபையின் தாரக மந்திரமாகிய "Transformative solution for Inclusive Development; the role of innovation in fuelling an accessible and equitable world" *அதாவது, "அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய வளர்ச்சிக்காக, உருமாற்றம் அடையும் தீர்வுகாணல்; மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் மற்றும் அவர்களுக்கு சமவாய்ப்பினை நல்கும் சமநிலை உலகினை புது முயற்சிகள்மூலம் ஊக்கப்படுத்தி உருவாக்குதல்" என்கின்ற மையக் கருத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் இவ்வரசு தொடர்ந்து புத்துணர்வோடு செயல்பட்டு வருகிறது.*

[2023 ஏப்ரல் 17

ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பில் நமது நாடு மேற்கொண்ட ஒப்பந்தம் மற்றும் உறுதிமொழியினை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு பெரும் பங்காற்றி வருகிறது. குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-னை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக, தடையற்றச் சூழலை அமைக்கும் பொருட்டு பொதுக் கட்டடங்களில் சாய்வுதளப் பாதை, மின்தூக்கி, மாற்றுத்திறனாளிகளின் உபயோகத்திற்கேற்ற கழிவறைகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து, உரிய தணிக்கைகள், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணியினை தாமாகவே மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வரசு, அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சமுதாயத்தினை உருவாக்கும் முயற்சியாக, மாற்றுத் திறனாளிகள் பிறரைச் சார்ந்திருக்காமல் தன்னிச்சையாகவும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட தேவையான உதவி உபகரணங்களை அறிமுகம் செய்தும், அதனை கொள்முதல் செய்ய புதிய உற்பத்தியாளர்களை (Startup Companies) ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சிகளை நடத்தியும், அவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கியும் வருகிறது. நவீன உதவி உபகரணங்களை கொள்முதல் செய்யும் நடவடிக்கையின் மற்றுமொரு சிறப்பம்சமாக, மாற்றுத் திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறையினை (Choice Based System) இவ்வரசு அறிமுகப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது.

மாநில அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு முழுமையான திட்டங்களை பல்வேறு அரசு துறைகளுடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்புடன் அவர்களுக்கு அணுகத் தகுந்த அமைப்புகளை உருவாக்கி, வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்குடன் “உரிமைகள் திட்டம்” செயல்படுத்தப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான சமூகப் பதிவினை உருவாக்க ஏதுவாக, முதற்கட்டமாக பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஒன்றிணைத்து 9,08,000 தரவுகள் கொண்ட தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் விவரங்களை மின்னணுமயமாக்கி, இத்தளத்தில் 14 இலட்சம் பதிவுகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது சிறப்பு நேர்வாக மேற்கண்ட தரவுகளின் நம்பகத் தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது தேவையின் அடிப்படையில் உதவிகளை செய்வதற்கும், உரிய மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும், அவர்களின் சரியான இருப்பிடம் மற்றும் அவர்களது மாற்றுத்திறன் வகையினை அறியும் பொருட்டு கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகள் அரசின் பல்வேறு துறைகள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, குழந்தைப் பருவத்தில் அவர்களது குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அவர்களுக்கு மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகளை அளிக்க அரசின் பன்னிரெண்டு துறைகளின் சேவைகளை ஒருங்கிணைத்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure) அரசாணை (நிலை) எண் 30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை, நாள் 04.11.2022-ல் வெளியிடப்பட்டு, அதனை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023-2024 ஆம் நிதியாண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.1106.49 கோடி தொகையானது இதுவரை இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளிலேயே மிகவும் அதிகமானது என்பதன் வாயிலாக மாற்றுத்திறனாளிகளின் நலனில் இவ்வரசு கொண்டுள்ள பற்றினை உறுதி செய்கிறது.

2. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குதல் (NIDC Card)

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்ட விதிகள், 2018-ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட அளவிலான மருத்துவமனைகளில் பணிபுரியும் சான்றளிக்கும் அதிகாரமுடைய மருத்துவர்களால் 21 வகையான மாற்றுத்திறனுடையோருக்கு மாற்றுத்திறனாளி சான்று வழங்கப்பட்டு வருகிறது.

அ. மருத்துவச்சான்றின் அடிப்படையில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் உதவி புத்தகங்கள் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆ. இதுநாள்வரை, தமிழ்நாட்டில் 14,27,979 மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத் திறனாளிக்கான சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

3. உரிமைகள் திட்டம் ('RIGHTS' Project)

சமூகப் பாதுகாப்பு திட்ட அமைப்புகளின் திறனை மேம்படுத்தி கடைக்கோடியில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகள், தங்களுக்குத் தேவையான சுகாதார, சமூக பராமரிப்பு சேவைகள், நலத் திட்டங்கள் ஆகியவற்றினைப் பெறுவதை 'உரிமைகள் திட்டம்' உறுதி செய்கிறது. குறித்த நேரத்தில் தகுந்த திட்டமிடல்மூலம் மாநிலத் திறனைக் கட்டமைத்து, பல்வேறு நிலைகளில் உள்ள நிர்வாக நடைமுறைகளில் காணப்படும் இடைவெளிகளைக் களைந்து, ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் சமூகத் தரவு தளத்தை உருவாக்கி, அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும். சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு சேவைகள், எளிதில் பயன்படுத்தக் கூடிய சுகாதாரக் காப்பீட்டு சேவை, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்புத் திட்டங்களை மாற்றுத் திறனாளிகள் பெறுவது இத்திட்டத்தின்மூலம் உறுதிபடுத்தப்படும்.

இத்திட்டம், உலக வங்கியின் உதவியுடன் ரூ.1,773.87 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் சென்னை (மூன்று மண்டலம்), திருச்சிராப்பள்ளி, தருமபுரி, கடலூர், தென்காசி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 2023-2024 ஆம் நிதியாண்டில் மேலும் 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

இதற்காக மாநில, மாவட்ட அளவில் ஒப்பந்த அடிப்படையிலான ஆலோசகர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், வட்டார மற்றும் கிராம அளவில் அனைத்து அரசு துறைகளின் குறிப்பாக,

2023 ஏப்ரல் 17]

ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, பள்ளிக் கல்வித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சுகாதாரத் துறை ஆகிய துறைகளின் களப்பணியாளர்களுடன் இணைந்து இத்திட்டத்தினை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த சேவை மையத்தினை உருவாக்குதல், ஊதியம், பயிற்சி, கணக்கெடுப்பு, நடமாடும் சேவை மையம் அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு அரசு ரூ.1,700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் செயலாக்க கையேடு, செயலாக்கத் திட்டம், பல்துறை கட்டமைப்பின் ஒரு பகுதியாக 18 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நெறிமுறைகளின்மூலம் பயனாளிகளைக் கண்டறியவும், அனைத்து கட்டங்களிலும் அவர்களுக்கு சேவைகளை வழங்கவும் மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், பள்ளிக் கல்வித் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய துறைகளில் உள்ள பணி செயல்பாட்டு முறைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை, நாள் 04-11-2022-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவுற்றதன் தொடர்ச்சியாக 13-12-2022 அன்று முதல் "உரிமைகள் திட்டம்" நடைமுறைக்கு வந்துள்ளதாக உலகவங்கி ஏற்றுக்கொண்டது.

மாநில, மாவட்ட அளவில் "உரிமைகள் திட்டத்தை" செயல்படுத்த ஏதுவாக பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பை உறுதிபடுத்துவதற்காகவும், திட்ட அணுகுமுறைக்கான வழிகாட்டுதலுக்காகவும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான திட்ட வழிகாட்டுதல் குழுவும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் செயலாளர் தலைமையிலான திட்ட செயலாக்கக் குழுவும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டச் செயலாக்கக் குழுவும் அரசாணை (நிலை) எண் 27, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 21-12-2022-ன்கீழ் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டு, இதன் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 17

உரிமைகள் திட்டத்தில் பங்கேற்கும் மாநில அளவிலான பங்குதாரர்களின் கூட்டம், முதற்கட்டமாக சென்னையில் 13-2-2023 அன்று நடத்தப்பட்டது. அதில் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நல அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரிமைகள் திட்டம் குறித்த தங்களது ஆலோசனைகளை வழங்கினர். இதனைத் தொடர்ந்து, இதுபோன்ற மாவட்ட அளவிலான கூட்டங்கள் முதற்கட்டமாக நடத்தப்பட்டு வருகின்றன. இணை துறைகள் மற்றும் செயலாக்க அலகுகளுக்கிடையே இத்திட்டம் குறித்த விளக்கக்கூட்டம் நடைபெற்றுள்ளது. மேலும், அடிப்படை கணக்கெடுப்பு குறித்த பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில், பல்வேறு துறைகளின் திறன் விவரணையாக்கப் பணி விளக்கக் கூட்டம் நடத்தி முடித்து, மாவட்ட செயல்திட்டத்தை உருவாக்குமாறு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட செயலாக்கக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உட்கோட்ட அளவிலான மாற்றுத் திறனாளிகள் நல மையங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்கள்மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

4. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

கடந்த 2016 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் இயற்றப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டமானது, 19-4-2017 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தினை மாநில அளவில் செயல்படுத்திட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டு, மாற்றுத் திறனாளிகள் அணுகத்தக்க சூழ்நிலை கொண்ட, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தில் சம உரிமை பெற்று, சுயமரியாதையுடன் வாழ தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஏற்படுத்தப்பட்டு, முறையாக முதல் கூட்டம் நடத்தப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 17]

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கிடவும், அவர்கள் எளிதில் அணுகுவதற்கு உகந்த தடையற்றச் சூழல்களை ஏற்படுத்தவும், சமவாய்ப்புக் கொள்கைகளை வெளியிடவும் வலியுறுத்தி அரசாணை வெளியிடப்பட்டு, அவை கள அளவில் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இத்தகைய நடவடிக்கைகளை கண்காணிக்கவும், மாநில அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி, இப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தவும், உயர்மட்டக் குழுக்கள் அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் தனியார் நிறுவனங்களுக்காகவும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசு செயலாளர் தலைமையில் அரசு நிறுவனங்களுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு, இச்சட்டத்தில் வலியுறுத்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட அளவில் செயல்படுத்துவதை கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும்போது, அதனை இச்சட்டத்தின் பிரிவு 82-ன்கீழ் விசாரித்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள "மாநில ஆணையர் நீதிமன்றம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 169 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 102 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு, 67 வழக்குகள் விசாரணையில் உள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரான வன்கொடுமைகளை விசாரிக்க மாவட்ட அளவில் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தை சிறப்பு நீதிமன்றமாக அரசு அறிவித்துள்ளது. தற்போதுள்ள மனித உரிமைகளுக்கான சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் அனைவரையும் இந்த சட்டத்தின்கீழ், வழக்குகளை கையாள்வதற்காக சிறப்பு அரசு வழக்கறிஞர்களாக நியமித்து, அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மாநில அரசின் முழு பங்களிப்புடன் பொதுக் கட்டடங்களில் தடையற்றச் சூழலை மேற்கொள்ள ஏதுவாக சென்னை மாவட்டத்தில் 72 கட்டடங்களுக்கு ரூ.12.45 இலட்சம் செலவினத்திலும், மாநிலம் முழுவதும் உள்ள 10 நகரங்களில் 176 கட்டடங்களுக்கு ரூ.44.84 இலட்சம் செலவினத்திலும் தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் அனைத்து பொது இடங்களிலும் மாற்றுத் திறனாளிகள் உபயோகத்திற்கு உகந்த தடையற்றச் சூழல்களை அமைக்கும் விதமாக மின்தூக்கி அமைத்தல், சாய்வுதளம் அமைத்தல், கழிவறை அமைத்தல், பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான தரைப்பரப்பு, பிரெய்லி எழுத்து தகவல் பலகைகள் பொருத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் கூட்டங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளின்போது செவித்திறன் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், அந்தந்த மாவட்ட நிர்வாகம்மூலம் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் மாற்றுப் பணிகள்மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்காக மாவட்டத்திற்கு ரூ.15,600/- வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ன் பிரிவு 32-ல் வலியுறுத்தியுள்ளபடி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையின்போது, மாற்றுத்திறன் மாணவ/மாணவியர்களுக்கு ஐந்து சதவிகித இடங்களும், உச்ச வயது வரம்பில் ஐந்தாண்டுகள் தளர்வும் அளிக்கப்படுகிறது.

5. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அங்கீகாரம் அளித்தல்

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ன் சட்டப் பிரிவு 50-ல் வலியுறுத்தியுள்ளவாறு, மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை பதிவு செய்யும் அதிகாரம் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ், இதுநாள் வரை 660 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டம், 1973 மற்றும் விதிகள் 1974-ன்கீழ் அங்கீகாரம் பெற்ற 393 சிறப்புப் பள்ளிகளும் அடங்கும்.

2023 ஏப்ரல் 17]

6. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

பிறந்தது முதல் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்ப நிலையிலேயே அவர்களது உடல் குறைபாட்டினை கண்டறிந்து அதனை உரிய பயிற்சிகள்மூலம் குணப்படுத்தும்/ கட்டுப்படுத்தும் மையங்கள் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களாகும். ஒவ்வொரு மாற்றுத்திறனுக்கும் தனித்தனியாக செயல்படும் வகையில் மொத்தம் 92 மையங்கள் மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

மாநிலம் முழுவதும் செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு 33 மையங்களும், அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு 31 மையங்களும், பார்வை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு 6 மையங்களும், புற உலக சிந்தனை மாற்றுத் திறனுடையோருக்கு 19 மையங்களும், மூளை முடக்குவாத மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு சென்னை மற்றும் திருச்சி மாவட்டங்களில் 2 மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள், 2,588 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 304 சிறப்பு ஆசிரியர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்களில் குழந்தைகளுக்கு பேச்சுப் பயிற்சி, தசைப்பயிற்சி, தொழில்முறைப் பயிற்சி உள்ளிட்ட மறுவாழ்வு பயிற்சிகளும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு பராமரிப்பு மேற்கொள்வதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இம்மையங்களில் பயன்பெறும் குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் வருடமொரு முறை இன்பச் சுற்றுலா அழைத்து செல்லப்படுகிறார்கள். பகல் நேரம் மட்டும் பராமரிக்கப்படும் இம்மையங்களில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்மூலம் இணை உணவு, மதிய உணவு வழங்கப்படுகிறது. இம்மையத்திற்கு வருகை தரும் குழந்தைகள் அவர்களது பெற்றோருடன் வந்து செல்லும் வகையில் கட்டணமில்லா பேருந்து சலுகையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 17

அட்டவணை எண்: 1

ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள்

ஆரம்ப நிலைப் பயிற்சி மையங்கள்	மையத்தின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	சிறப்பு ஆசிரியர்களின் எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு 2023-2024 (ரூபாய் இலட்சத்தில்)
செவி மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம்	33	683	63	151.84
அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம்	31	1321	140	328.44
பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம்	6	113	12	24.60
மூளை முடக்குவாத மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம்	2	58	7	13.38
புற உலக சிந்தனை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம்	19	395	80	142.38
பல்வகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையம், மண்டல வள மற்றும் பயிற்சி மையம், திருச்சிராப்பள்ளி	1	18	2	3.84

2023 ஏப்ரல் 17]

ஆரம்ப நிலைப் பயிற்சி மையங்கள்	மையத்தின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	சிறப்பு ஆசிரியர்களின் எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு 2023-2024 (ரூபாய் இலட்சத்தில்)
ஆரம்பநிலைப் பயிற்சி மையங்களில் உள்ள குழந்தைகள் ஒரு நாள் சுற்றுலா செல்வதற்கான திட்டம்	-	-	-	7.46
அறிவுசார் மாற்றுதிறன் குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு புத்தாக்கப்பயிற்சி	-	-	-	4.73
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்குவதற்கான போக்குவரத்துச் செலவினம்	-	-	-	3.45
மொத்தம்	92	2588	304	680.12

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்காக ரூ.721.40 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 680.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்புச் சேவைகளை கிராம அளவில் கொண்டு சேர்க்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் இயக்கப்படுகின்றன. அனைத்து சிகிச்சை உபகரணங்களை உள்ளடக்கிய நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே சென்று

சேவைகளை வழங்கி வருகின்றன. இதன்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மேலும், குழந்தைகளுக்கு தசைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, சிறப்பு கல்வி உள்ளிட்ட மறுவாழ்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சேவையின்மூலம் திட்டம் தொடங்கியது முதல் இதுநாள்வரை 16,961 முகாம்கள் நடத்தப்பட்டு 1,37,277 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.187.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.243.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. ஆதரவற்ற மனநலம் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மீட்புத் திட்டம்

இத்திட்டத்தில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சாலையோரங்கள் மற்றும் பொது இடங்களில் சுற்றித் திரியும் மனநலம் சார் மாற்றுத் திறனாளிகள் அவர்களின் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையில் இருந்தால், அவர்களை மீட்டு, அவர்களுக்கு முதலில் மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பின்னர் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இச்சேவையை செயல்படுத்தும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு இத்திட்டத்தில் நபர் ஒன்றுக்கு ரூ.1,500/- வீதம் வழங்கப்படுகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.7.50 இலட்சம் செலவில் 514 நபர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. மறுவாழ்வு இல்லங்கள்

9.1. அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

பதினான்கு வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் மாநிலம் முழுவதும் 70 மறுவாழ்வு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில்

2023 ஏப்ரல் 17]

உள்ளுறையாளர்களுக்கு தங்குமிடம், உணவு, மருத்துவ வசதிகள் வழங்குவதுடன் தோட்டக்கலை, மெழுகுவர்த்தி தயாரித்தல் மற்றும் அடுமனை போன்ற தொழில்கள் செய்வதற்கான தொழிற்பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.791.51 இலட்சம் செலவில் 2800 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.794.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.2. மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

மாநிலம் முழுவதும் மனநலம் சார் மாற்றுத் திறனாளிகளுக்காக 76 இல்லங்கள் 4,983 பயனாளிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் தங்கி பயன்பெறும் உள்ளுறையாளர்களுக்கு மருத்துவச் சிகிச்சை, இலவச தங்குமிடம் ஆகியவற்றுடன் சேர்த்து உணவூட்டு மானியமாக நபர் ஒன்றுக்கு மாதந்தோறும் ரூ.1,200/- வழங்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 76 இல்லங்களில், 56 இல்லங்கள் அரசின் நிதியுதவியினை பெறுகின்றன. மீதமுள்ள 20 இல்லங்கள் சுய நிதி இல்லங்களாக செயல்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட மனநல மருத்துவர் மாதமொருமுறை இவ்வில்லங்களுக்கு சென்று இல்லவாசிகளை மனநல பரிசோதனை செய்து மருத்துவச் சிகிச்சை மேற்கொண்டு உரிய சான்றிதழ்களை வழங்குகிறார்.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.714.07 இலட்சம் செலவில் 2,800 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.715.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.3. இடைநிலை பராமரிப்பு மையங்கள்

மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்துடன் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு இடைநிலை பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மதுரை, இராமநாதபுரம், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் 700 பயனாளிகள் தங்கி

பயன்பெறும் வகையில் இம்மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில், மனநலம் பாதிக்கப்பட்டு, குணமடைந்து, குடும்பத்தினரால் கைவிடப்பட்டவர்களுக்கு மருத்துவச் சிகிச்சைகளும், தொழிற்பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 136 பயனாளிகள் ரூ.116.66 இலட்சம் செலவில் இவ்வில்லங்களில் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.125.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.4. தொழுநோய் சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோய் சார்ந்த மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. சமூகப் புறக்கணிப்பை எதிர்கொள்ளும் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள தொழுநோய் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் தாங்களாக முன்வந்து, அனுமதிகோரும் பட்சத்தில், அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மாநிலம் முழுவதும் பத்து மாவட்டங்களில் அரசு மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் 616 உள்ளுறையாளர்கள் தங்கி பயன்பெற்று வருகின்றனர். உள்ளுறையாளர்களுக்கு இலவச உறைவிடம், ஆண்டிற்கு இரண்டு இணை ஆடைகள், மருத்துவ வசதிகள், தேவைப்படுவோருக்கு செயற்கை அவயங்கள், போர்வைகள், கண் கண்ணாடிகள், MCR காலணிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. உள்ளுறையாளர்கள் இறக்கும்பட்சத்தில், ஈமச்சடங்கிற்காக ரூ.2,000/- அரசால் வழங்கப்படுகிறது. பொது இடங்களில் இரவல் கேட்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நிலையில் அவர்களின் மறுவாழ்விற்காக கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் செயல்பட்டு வரும் அரசு மறுவாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். தொழுநோய் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

2023 ஏப்ரல் 17]

அட்டவணை எண்: 2

தொழுநோய் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்ல இருப்பிடங்கள்

வ. எண்	இடம்	மாவட்டம்
1.	பரனூர்	செங்கல்பட்டு
2.	உளுந்தூர்பேட்டை	கள்ளக்குறிச்சி
3.	பர்கூர்	கிருஷ்ணகிரி
4.	புதுக்கோட்டை	புதுக்கோட்டை
5.	மனையேறிப்பட்டி	தஞ்சாவூர்
6.	யா. புதுப்பட்டி	மதுரை
7.	மல்லவாடி	திருவண்ணாமலை
8.	செல்லியம்பட்டி	தர்மபுரி
9.	தேவியாகுறிச்சி	சேலம்
10.	விண்ணபள்ளி	ஈரோடு

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 616 பயனாளிகள் ரூ.1,553.03 இலட்சம் செலவில் இவ்வில்லங்களில் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1,559.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.5. அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்

அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில், தேனி மாவட்டத்தில், 90 குழந்தைகளுக்காக மூன்று பகல்நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இம்மையங்களில் பணிபுரிபவர்களில் இரண்டு சிறப்பாசிரியர்கள்/சிகிச்சையாளர்கள், பராமரிப்பு உதவியாளர், துப்புரவுப் பணியாளர் ஆகியோர் அரசின் நிதியுதவியுடன் பணிபுரிந்து வருகின்றனர். இங்கு பணிபுரியும்

[2023 ஏப்ரல் 17

சிறப்பாசிரியர்களுக்கு மாதந்தோறும் ரூ.14,000/- மதிப்பூதியம் வழங்கப்பட்டு வந்த நிலையில் அதனை அரசு உயர்த்தி தற்போது மாதந்தோறும் ரூ.18,000/- மதிப்பூதியம் வழங்கி வருகிறது. இதற்கான அரசாணை (நிலை) எண் 7, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந1)த் துறை, நாள் 18-5-2022 அன்று வெளியிடப்பட்டது.

இதற்காக கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.16.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.14.52 நிதி இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.6. தசைச்சிதைவு நோய் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, வேலூர், மதுரை, திருவண்ணாமலை, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், விழுப்புரம், திண்டுக்கல், விருதுநகர், தர்மபுரி, தஞ்சாவூர் ஆகிய 14 மாவட்டங்களில் தசைச்சிதைவு நோய் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்களில் தசைப்பயிற்சியாளர்களை கொண்டு தசைப்பயிற்சி மற்றும் அடிப்படை மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மையங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.220.33 இலட்சம் செலவில் 335 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.196.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.7. முதுகு தண்டுவடம் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

முதுகு தண்டுவடம் சார் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக, முதற்கட்டமாக திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ரூ.100.00

2023 ஏப்ரல் 17]

இலட்சம் செலவில் 75 நபர்கள் பயன்பெறும் வகையில் மூன்று சிறப்பு இல்லங்கள் அமைக்க நிர்வாக ஒப்புதலுக்கான அரசாணை (நிலை) எண் 16, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1)த் துறை, நாள் 28-6-2022-ல் வெளியிடப்பட்டு, இல்லங்கள் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10. மாநில வள மற்றும் பயிற்சி மையங்கள்

மாற்றுத் திறனாளிகள் ஒரே இடத்தில் பல்வேறு சேவைகளைப் பெறும் விதமாக மாநில வள மற்றும் பயிற்சி மையங்கள் சென்னை மற்றும் திருச்சியில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் மாற்றுத்திறனாளிகளின் சேவைகள் குறித்த பல்வேறு தகவல்கள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ், தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID card) வழங்குதல், பேருந்து பயணச்சலுகை அட்டை, வருமான வரிச்சலுகை சான்றிதழ், தேர்வு எழுத உதவியாளர் நியமனம், தேர்வின்போது கூடுதல் நேரத்திற்கான சலுகை சான்றிதழ் ஆகியவை இம்மையத்தின்மூலம் வழங்கப்படுகின்றன. இம்மையத்தில் ஒன்றிய, மாநில அரசால் வழங்கப்பட்டு வரும் திட்டங்கள் பற்றிய அனைத்து தகவல்களும் அளிக்கப்படுகின்றன. இம்மையங்களில், குழந்தைகளுக்கான ஆரம்பநிலை குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றை கட்டுப்படுத்துவதற்கான பயிற்சிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கு பகல்நேர பராமரிப்பு மையத்தின்மூலம் திறன் சார் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இம்மையங்களில் ஆண்டுதோறும் சுமார் 7,584-க்கும் அதிகமான பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.47.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.35.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. சிறப்புக் கல்வி

11.1. சிறப்புப் பள்ளிகள்

மனிதவள மேம்பாட்டிற்கு அடிப்படையான கல்வியினை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்குவதற்காக 22 அரசு சிறப்புப்

பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இத்துடன் அரசின் நிதியுதவியுடன் 49 அரசு சாரா நிறுவனங்கள் மூலமும் சிறப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 5,697 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதில் 1,086 மாணவர்கள் அரசு சிறப்புப் பள்ளிகளிலும், 4,611 மாணவர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் பயன்பெற்று வருகின்றனர்.

11.2. அரசு சிறப்புப் பள்ளிகள்

22 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம், கல்வி உபகரணங்கள், நான்கு இணைச்சீருடைகள் ஆகியவை ஆண்டுதோறும் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சிறப்புப் பள்ளிகளில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய வகுப்பறைகள் (Smart Class) அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்காக தொடுதிரையுடன்கூடிய கணினியுடன் இணைந்த எழுத்துப் பலகை பொருத்தப்பட்டு, மாணவர்களுக்கு எளிய முறையில் படக்காட்சியுடன் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இதைப் போலவே, பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் மின்னணு சாதனங்கள் மூலமாக பிரெய்லி எழுத்துக்கள் கற்பிக்கப்படுகின்றன. இத்தகைய வசதிகள் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான 10 சிறப்புப் பள்ளிகளிலும், கல்வித் துறைமூலம் செயல்படும் இரண்டு பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ரூ.100.08 இலட்சம் செலவில் 2021-2022 ஆம் நிதியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. மாற்றுத்திறன் குழந்தைகளின் உடல் நலத்தினை மேம்படுத்துவதற்காக உணவூட்டு மானியத்தை அதிகரித்தும், கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், சிறப்பு குழந்தைகள் தங்கள் மாவட்டத்திலேயே உயர் கல்வி பெறுவதற்காகவும் உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாக, புதுக்கோட்டையில் செயல்படும் அரசு செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகவும், ஈரோடு மற்றும் விருதுநகரில் செயல்படும் செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி ரூ.36.43 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 17]

மேலும், இச்சிறப்புப் பள்ளிகளில் கட்டடங்களை பராமரிக்கவும், சீரமைப்பதற்காகவும் ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11.3. அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளுக்கான நிதியுதவி

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கான ஊதிய மானியம், மாணவ/மாணவியர்களுக்கான உணவூட்டு மானியம், பள்ளி கட்டட விரிவாக்கம், வாடகை மானியம் போன்றவற்றிற்காக அரசு ஒவ்வொரு வருடமும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் 996 சிறப்பாசிரியர்களின் சேவையினை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கி வந்த மாதாந்திர மதிப்பூதியத்தை ரூ.14,000/–லிருந்து ரூ.18,000/-ஆக உயர்த்தி, 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.2086.49 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.2610.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புக் கல்வி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உணவூட்டு மானியத்தை ரூ.900/-லிருந்து ரூ.1,200/-ஆக உயர்த்தி 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.741.43 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.946.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.4. கல்வி உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளின் சிறப்புக் கல்வியினை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அவர்கள் பயிலும் வகுப்புகளுக்கு ஏற்றவாறு ஆண்டுதோறும் ரூ.1,000/- முதல் ரூ.7,000/- வரை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

[2023 ஏப்ரல் 17

அட்டவணை எண்: 3

கல்வி உதவித்தொகை

வ. எண்	மாணவர் நிலை	வருடாந்திர உதவித்தொகை (ரூபாயில்)
1.	1 முதல் 5 வகுப்பு வரை	1,000/-
2.	6 முதல் 8 வகுப்பு வரை	3,000/-
3.	9 முதல் 12 வகுப்பு வரை	4,000/-
4.	இளங்கலை பட்டப்படிப்பு	6,000/-
5.	தொழிற்படிப்பு மற்றும் முதுகலை	7,000/-

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 22,368 மாணவ/ மாணவியர்களுக்கு ரூ.755.38 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.690.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.5. வாசிப்பாளர் உதவித்தொகை

ஒன்பதாம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை கல்வி பயிலும் பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு அவர்களது பாடங்களை வாசிப்பதற்கு உதவக் கூடியவர்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை வாசிப்பாளர் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

அட்டவணை எண்: 4

வாசிப்பாளர் உதவித்தொகை

வ. எண்	மாணவர் நிலை	வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்)
1.	9 முதல் 12 வகுப்பு வரை	3,000/-
2.	இளங்கலை பட்டப்படிப்பு	5,000/-
3.	தொழிற்படிப்பு மற்றும் முதுகலை	6,000/-

2023 ஏப்ரல் 17]

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 1,639 மாணவ/மாணவியர்களுக்கு ரூ.69.83 இலட்சம் செலவில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.6. தேர்வெழுத உதவுவோருக்கான உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு மற்றும் அதற்குமேல் பயிலும் மாணவர்களுக்கு தேர்வு எழுத வசதியாக ஒவ்வொரு தேர்விற்கும் ஓர் உதவி எழுத்தாளருக்கு, தாள் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.27.72 இலட்சம் செலவில் 558 மாணவ/மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.44.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.7. இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை

மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்கள் பள்ளிக் கல்வியை இடைநிற்காமல் தொடர ஊக்குவிக்கும் வகையில், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.1,500/- முதல் ரூ.2,000/- வரையிலான ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகின்றன. இத்தொகையானது, தமிழ்நாடு மின் நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் வரவு வைக்கப்பட்டு, 12 ஆம் வகுப்பு முடித்த பிறகு வட்டியுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

அட்டவணை எண்:5

இடைநிற்றலை தவிர்ப்பதற்கான ஊக்கத்தொகை

வ. எண்	வகுப்பு	வருடாந்திர ஊக்கத்தொகை (ரூபாயில்)
1.	10 ஆம் வகுப்பு	1,500/-
2.	11 ஆம் வகுப்பு	1,500/-
3.	12 ஆம் வகுப்பு	2,000/-

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 1,448 மாணவ/மாணவியர்களுக்கு ரூ.24.38 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.24.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.8. சட்டம் பயின்ற பட்டதாரி மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்களுக்கான உதவித்தொகை

சட்டப்படிப்பு பயின்று, வழக்குரைஞர் மன்றத்தில் பதிவு செய்துள்ள மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்கவும், இதர செலவினங்களுக்காகவும் ரூ.50,000/- உதவித்தொகையானது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 60 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.9. செவி மற்றும் பேச்சு மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு

செவி மாற்றுத்திறன் மாணவ/மாணவியர்களுக்கு மேல்நிலை கல்வியை முடித்த பிறகு அவர்கள் உயர் கல்வி பயில்வதற்கு ஏதுவாக, சென்னை மாநிலக் கல்லூரியில் பி.காம்., பி.சி.ஏ., வகுப்புகளில் சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு வருடந்தோறும் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் அதிகபட்சமாக 30 மாணவ/மாணவியர்களைக் கொண்டு பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

செவி மாற்றுத்திறன் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி கற்பிக்கும் மூன்று கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு கணினி ஆய்வக தொழில்நுட்பாளருக்கு மாதந்தோறும் முறையே ரூ.20,000/- மற்றும் ரூ.6,000/- தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தென் மாவட்டங்களில் உள்ள செவி மாற்றுத்திறன் மாணவர்களின் உயர் கல்விக்காக இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் செயல்பட்டு வரும் அரசு கலைக் கல்லூரியில் பி.காம்., பி.சி.ஏ., வகுப்புகள் தொடங்குவதற்காக அரசாணை (நிலை) எண் 18, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 4-7-2022-ல் ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 17]

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.17.41 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.19.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.10. இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (RKMVERI), கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா– கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின்மூலம் Disability Management and Special Education (DMSE) *மற்றும்* General and Adopted physical Education and Yoga (GAPEY) *ஆகிய பாடப்பிரிவுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு கற்பிக்கும் சிறப்பு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் கடந்த 2021-2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.*

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் இப்பயிற்சியினை அளிக்க ஏதுவாக 21 விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதோர் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்கான ஊதியம் மற்றும் இதர நிர்வாகச் செலவினங்களுக்கு ரூ.178.00 இலட்சம் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.455.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. உதவி உபகரணங்கள்

12.1. பல்வேறு வகையான உதவி உபகரணங்கள்

மாற்றுத் திறனாளிகள் சுயமாக நடமாடவும், அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை அமைக்க ஏதுவாகவும், அவர்களின் தேவைக்கேற்ப 23 வகையான உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்றபின், சிறப்பு நிதி ஒதுக்கீட்டின்மூலம் ரூ.7,076.00 இலட்சம் செலவில், உதவி உபகரணங்கள் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் உள்ள தகுதி வாய்ந்த 37,660 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2022–2023 ஆம் நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தி 37,762 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.5,475.68 இலட்சம் செலவில் உதவி

உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

அட்டவணை எண்: 6

உதவி உபகரணங்கள்

வ. எண்	உதவி உபகரணங்கள்	மொத்த எண்ணிக்கை	மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	துணை ஊன்றுகோல் (Auxiliary Crutches)	2,107	16.01
2.	முழங்கை ஊன்றுகோல் (Elbow Crutches)	1,513	9.08
3.	உருப்பெருக்கி (Magnifier)	111	11.31
4.	பிரெய்ல் கைக்கடிகாரம் (Braille Watches)	1,637	30.04
5.	கருப்பு கண்ணாடிகள் (Goggles)	3,735	5.60
6.	ஒளிரும் மடக்குக்குச்சிகள் (Reflective Folding Sticks)	3,805	14.46
7.	நடைப்பயிற்சி உபகரணம் (Walking device)	434	9.31
8.	மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி (Wheel Chair for Cerebral Palsy affected persons)	748	77.79

வ. எண்	உதவி உபகரணங்கள்	மொத்த எண்ணிக்கை	மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்)
9.	நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள அறிவுசார் குறைபாடுடைய, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் தொடர்பு கொள்ள ஏதுவாக உருவாக்கப்பட்ட மென்பொருளுடன் கூடிய உபகரணம் (Alternative and Augmentative Communication device with AVAZ software)	101	26.93
10.	இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் (Retrofitted Petrol Scooter for Differently Abled Persons)	2,850	2379.75
11.	தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் (Specially designed Retrofitted Petrol Scooter for spinal cord affected persons)	450	474.75

வ. எண்	உதவி உபகரணங்கள்	மொத்த எண்ணிக்கை	மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்)
12.	பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான திறன்பேசிகள் (Smart phone for Hearing and Visually impaired persons)	7,379	999.78
13.	பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்கள் பாடங்களை பதிவு செய்து படிப்பதற்கான உபகரணம் (Angel pro daisy player)	102	10.15
14.	மூளை முடக்கு வாத குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலி (Corner Seat for children with cerebral palsy)	252	18.33
15.	நெகிழி முடநீக்கு சாதனம் (Plastic Caliper)	493	40.92
16.	உலோக முடநீக்கு சாதனம் (Metal Caliper)	130	11.31
17.	மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி (Battery Operated Wheel Chair)	525	599.17
18.	மூன்று சக்கர வண்டி (Tricycle)	1,419	128.42
19.	மடக்கு சக்கர நாற்காலி (Foldable Wheel Chair)	1,436	113.44
20.	மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் (Motorised Sewing Machine)	3,764	257.86

2023 ஏப்ரல் 17]

வ. எண்	உதவி உபகரணங்கள்	மொத்த எண்ணிக்கை	மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்)
21.	காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் (Behind the Ear Hearing Aid)	4,370	170.00
22.	மின்னணுவடிவில் உள்ள புத்தகங்களை பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் வாசிக்கும் கருவி (Electronic Braille Reader)	175	62.06
23.	நவீன ஒளிரும் மடக்குக்குச்சி Modular Reflective Folding	226	9.21
	மொத்தம்	37,762	5,475.68

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.5578.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12.2. மாற்றுத் திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை

கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்வு செய்து பயன்பெறும் வகையில் ஐந்து வகையான உதவி உபகரணங்கள் (மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, மின்கலன் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி, காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம்) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் அறுதியிட்ட வகை (Assured Model) மானியத்தொகை போக, தாங்கள் விரும்பும் உபகரணத்திற்கான கூடுதல் தொகையினை மட்டும் மாற்றுத் திறனாளிகள் செலுத்தி பெறுகின்றனர்.

இத்திட்டத்தில், கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 118 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

13. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கு சம உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதுடன் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பும் வழங்குவதை உயர்ந்த நோக்கமாகக் கொண்டு இவ்வரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 60 சதவிகிதத்திற்கும் மேலான நிதியானது சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதி ஒதுக்கீட்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் ரூ.2,000/- பராமரிப்பு உதவித்தொகை, தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளும் உள்ளடங்கும்.

13.1. பராமரிப்பு உதவித்தொகை

ஐந்து வகையான மாற்றுத் திறனாளிகள் பயனடையும் வகையில் மாதம் ரூ.1,500/- பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்த நிலையில் அதனை ரூ.2,000/- ஆக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 4, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந-1) துறை, நாள் 15-3-2022-ல் ஆணை வெளியிடப்பட்டு, தற்போது அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக 2,11,391 நபர்களுக்கும் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் இருந்த 25,065 பயனாளிகளுக்கும் சேர்த்து மொத்தம் 2,36,456 பயனாளிகளுக்கு ரூ.52,757.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

அட்டவணை எண்: 7

பராமரிப்பு உதவித்தொகை பயனாளிகள்

வ. எண்	மாற்றுத்திறனாளியின் வகை	வகைப்பாடு (மாற்றுத்திறன் சதவிகிதம்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	அறிவுசார் மாற்றுத்திறன்	40% மற்றும் அதற்கு மேல்	1,76,369

2023 ஏப்ரல் 17]

வ. எண்	மாற்றுத்திறனாளியின் வகை	வகைப்பாடு (மாற்றுத்திறன் சதவிகிதம்)	பயனாளிகளின் எண்ணிக்கை
2.	கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன்	75% மற்றும் அதற்கு மேல்	41,124
3.	முதுகு தண்டுவடம் / தண்டுவடம் மறப்பு நோய் மற்றும் பார்கின்சன் நோயால் மாற்றுத்திறன்	40% மற்றும் அதற்கு மேல்	2,928
4.	தசைச்சிதைவு நோய் மாற்றுத்திறன்	40% மற்றும் அதற்கு மேல்	4,451
5.	தொழுநோய் மாற்றுத்திறன்	40% மற்றும் அதற்கு மேல்	11,584
மொத்தம்			2,36,456

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.56,749.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13.2. அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை

இத்திட்டத்தில், அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகள் தங்களுடன் உதவியாளரை வைத்துக்கொள்ள ஏதுவாக ரூ.1,000/- கூடுதலாக மாதாந்திர உதவித்தொகையுடன் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் பிறரைச் சார்ந்து வாழும் நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 2413 நபர்களுக்கு ரூ.253.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.425.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13.3. படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணத் தொகை

வேலைவாய்ப்புத் துறையில் வேலைவாய்ப்பு வேண்டி, படித்து முடித்து பதிவு செய்து, ஓராண்டுக்கு மேல் காத்திருக்கும்

மாற்றுத்திறனாளிகளுக்கு, அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப ரூ.600/- முதல் ரூ.1,000/- வரை மாத உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித்தொகையானது அதிகபட்சம் 10 ஆண்டுகளுக்கு அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முந்தைய நிகழ்வோ அதுவரை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

அட்டவணை எண்: 8

படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணத்தொகை

வ. எண்	கல்வித் தகுதி	உதவித்தொகை ரூபாயில் (மாதந்தோறும்)
1.	10 ஆம் வகுப்பு முடித்தவர்கள்	600/-
2.	12 ஆம் வகுப்பு முடித்தவர்கள்	750/-
3.	பட்டப்படிப்பு முடித்தவர்கள்	1,000/-

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.1,325.95 இலட்சம் செலவில் 13,697 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.2,000.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13.4. திருமண உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தினை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் முக்கியமாக, மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், உடல் இயக்க மாற்றுத் திறனாளிகள், பார்வை மாற்றுத் திறனாளிகள், செவி மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட 21 வகையான மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்யும்போது இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு திருமாங்கல்யம் செய்ய 8 கிராம் தங்க நாணயம் மற்றும் ரூ.25,000/- ரொக்கத் தொகையும், பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு

2023 ஏப்ரல் 17]

முடித்த மாற்றுத்திறனாளிகளுக்கு 8 கிராம் தங்க நாணயத்துடன் ரூ.50,000/- ரொக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பாதித்தொகை ரொக்கமாகவும், மீதத்தொகையானது தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்பட்டு வந்த நிலையினை மாற்றி, தற்போது 2022-2023 ஆம் ஆண்டு முதல் முழுத்தொகையும் பயனாளிகளுக்கு ரொக்கமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு நான்கு கட்டங்களாக 680 பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூ.267.75 இலட்சம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.562.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13.5. கட்டணமில்லா மற்றும் சலுகைக் கட்டணத்துடன் பேருந்து பயணத் திட்டம்

13.5.1. நூறு சதவிகித கட்டணமில்லா பயணம்

மாற்றுத் திறனாளிகள் தங்கள் இருப்பிடத்தில் இருந்து, வேலை நிமித்தமாகவோ, கல்வி பெறுவதற்காகவோ, தொழிற்பயிற்சி மேற்கொள்ளவோ அல்லது மருத்துவ மற்றும் மறுவாழ்வு சிகிச்சை மேற்கொள்ளவோ அரசுப் பேருந்துகளில் பயணம் செய்வதற்காக அரசால் பேருந்து பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் வெள்ளை நிற பெயர்பலகை கொண்ட பேருந்துகளிலும், மாநிலம் முழுவதும் இயங்கும் அனைத்து நகரப் பேருந்துகளிலும் மாற்றுத் திறனாளிகள் தனியாகவும், தனியாக பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளர் ஒருவருடனும் எவ்வித கட்டணமுமின்றி பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலும், நகரப் பேருந்துகள் அல்லாத இதரப் பேருந்துகளில் பார்வை மாற்றுத் திறனாளிகள் 100 கிலோ மீட்டர் தூர எல்லைக்குள் எவ்வித நிபந்தனையுமின்றி கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தில், 2022-2023 ஆம் ஆண்டில் 35,294 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

13.5.2. பேருந்து கட்டணங்களில் 75 சதவிகித பயணச்சலுகை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும், பயண எண்ணிக்கை உச்ச வரம்பு ஏதுமின்றி

[2023 ஏப்ரல் 17

அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளும் தனியாகவும், தனியாக பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளர் ஒருவருடனும், 75 சதவிகித பயண கட்டணச் சலுகை அடிப்படையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 100 சதவிகிதம் மற்றும் 75 சதவிகிதம் பயணச் சலுகை வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.6,956.43 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 13.80 இலட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.6000.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. மாற்றுத்திறனாளிகளுக்கு சமூகப் பொருளாதார அதிகாரமளிக்கும் திட்டங்கள்

14.1. வேலைவாய்ப்பில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ன் சட்டப் பிரிவு 34 வலியுறுத்துகிறது. அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்புகளில் நான்கு சதவிகித இடஒதுக்கீட்டினை செயல்படுத்த ஏதுவாக, தொகுதி 'A', 'B', 'C' மற்றும் 'D' பிரிவுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பணிபுரிய உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகளை கண்காணிக்க மாற்றுத் திறனாளிகள் நலத் துறைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக் குழு அரசாணை (நிலை) எண் 13, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.2)த் துறை, நாள் 7-6-2022-ல் அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், அரசுப் பணியிலுள்ள மாற்றுத்திறனாளி பணியாளர்களுக்கு, பதவி உயர்வில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு அளித்தல் குறித்த அறிக்கைகளை அளிக்க ஏதுவாக, துணைக்குழு மற்றும் உயர்மட்டக் குழுக்கள் அரசாணை (நிலை) எண் 29, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 03.11.2022 மற்றும் அரசாணை (நிலை) எண் 33, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 15-12-2022-ல் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 17]

மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்புகள் வழங்குவதை உறுதிசெய்ய அரசாணை (நிலை) எண்.25, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 19-9-2022-ல் தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு, கூட்டம் நடத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

14.2. ஒன்றியப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி-I முதன்மைத் தேர்வெழுத ஊக்கத்தொகை

மாற்றுத் திறனாளிகள் போட்டித் தேர்வு எழுதுவதை ஊக்குவிக்க ஒன்றியப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி-I முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ/மாணவியருக்கு முதன்மைத் தேர்வெழுத ஊக்கத் தொகையாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 35 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ. 17.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14.3. சமவாய்ப்புக் கொள்கை

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ன் பிரிவு 21-ல் வலியுறுத்தியுள்ளதற்கு இணங்க, பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகள் பணிபுரிய ஏதுவாக தடையற்றச் சூழல்களை அமைப்பதற்கும், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும் வகையிலும், அந்நிறுவனங்களால் சமவாய்ப்புக் கொள்கை வெளியிடப்படுவதை கண்காணிக்கவும் தொடர் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

14.4. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதி மேம்பாட்டுக் கழகம் (NHFDC)

இந்நிறுவனத்தின்மூலம் கடன் பெறும் மாற்றுத் திறனாளிகள் உரிய காலத்தில் கடனைத் திருப்பி செலுத்தும் போது, அந்த

[2023 ஏப்ரல் 17

கடனுக்கான வட்டித் தொகையினை மாநில அரசே செலுத்துகிறது. தமிழ்நாடு மாநில மத்திய கூட்டுறவு வங்கியானது கடன் வழங்கும் நிறுவனமாக (Channelising Agency) நியமிக்கப்பட்டு, 2022-2023–ஆம் நிதியாண்டில் 12,399 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5181.00 இலட்சம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

14.5. குறுதொழில் மற்றும் பெட்டிக் கடை துவங்க நிதியுதவி

மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் புரிய ஊக்குவிக்கும் வகையில் குறு தொழில் மற்றும் பெட்டிக்கடை தொடங்க விரும்பும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25,000/- அல்லது கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவான தொகையோ, அத்தொகை மானியமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய கடனுதவியை பொதுவாக மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமல்லாமல், அரசாணை (நிலை) எண் 14, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 17-6-2022–ன்படி, அறிவுசார், புறஉலகசிந்தனை அற்ற மற்றும் தசைச்சிதைவு மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களும் பயனடையும் வகையில் இவ்வரசால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 2022-2023 ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண்.23, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 11.08.2022–இன்படி, நகர்ப்புறங்களின் சாலையோரங்களில் தள்ளுவண்டி, நடைபாதை கடை, நகரும் வண்டிகளில் வியாபாரம் செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் கடைகளை நடத்த அந்தந்த நகராட்சிகள்மூலம் நகர விற்பனைக் குழு விதிமுறைகளின்படி அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 2,250 பயனாளிகளுக்கு ரூ.547.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14.6. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது, மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பினை உருவாக்குதை

2023 ஏப்ரல் 17]

ஒரு அம்சமாக கொண்டுள்ளது. இத்திட்டத்தில், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையான ஐந்து சதவிகித பயனாளியின் பங்குத் தொகையினை தமிழ்நாடு அரசே முழுமையாக செலுத்துகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 56 பயனாளிகளுக்கு ரூ.12.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14.7. வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில், வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின உருவாக்க பயனாளியின் ஐந்து சதவிகித பங்கு தொகையினை தமிழ்நாடு அரசால் முழுவதும் மானியமாக வழங்கப்படுகிறது.

இவ்வுதவியினைப் பெற மாவட்டத் தொழில் மைய இணையதளம்மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியுள்ள பயனாளிகள் தெரிவுக் குழுவினரால் தெரிவு செய்யப்படுவர்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் வாயிலாக கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 96 பயனாளிகளுக்கு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான கடன்தொகை மானியம் ரூ.68.00 இலட்சம் இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. அத்துறையானது மாற்றுத்திறனாளிகளுக்கான இலக்கினைக் காட்டிலும் 2022-2023 ஆம் நிதியாண்டில் அதிகமாக மானியம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் வாயிலாக, கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 77 பயனாளிகளுக்கு ரூ.12.44 இலட்சம் கடன் தொகை மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 17

14.8. ஆவின் விற்பனை மையம் அமைப்பதற்கான நிதியுதவி

மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் தொடங்குவதனை ஊக்குவிக்கும் முக்கிய திட்டங்களில் ஒன்றான ஆவின் பாலக விற்பனை மையம் அமைக்கும் திட்டம் அரசால் செயல்படுத்தபட்டு வருகிறது. ஓர் ஆண்டிற்கு 100 பயனாளிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்ட இத்திட்டம், தற்போது ஆண்டிற்கு 200 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒரு பயனாளிக்கு ரூ.50,000/-வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டு முதல், அரசாணை (நிலை) எண் 20, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 14-7-.2022-ன்படி, மாற்றுத் திறனாளிகள் தங்களது வருவாயினை மேலும் அதிகரிக்கும் வகையில், பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அரசு வளாகங்களில் ஆவின் பாலக விற்பனை மையம் அமைக்கும் இடத்திற்கான வாடகை மற்றும் முன்பணம் செலுத்துவதிலிருந்து அவர்களுக்கு இவ்வரசால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.79.00 இலட்சம் செலவில் 156 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14.9. புத்தகக் கட்டுநர் பயிற்சி

பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்றுள்ள பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு பத்து மாத புத்தகக் கட்டுநர் பயிற்சியானது, பூவிருந்தவல்லி அரசுப் பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியில் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில், மாதந்தோறும் ரூ.300/- உதவித்தொகை மற்றும் இலவச தங்கும் வசதியும் அளிக்கப்படுகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 22 நபர்களுக்கு இப்பயிற்சிக்காக ரூ.0.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.0.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 17]

14.10. பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி

உடல் இயக்க மாற்றுத் திறனாளிகள் மற்றும் செவி மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படம் தயாரிக்கும் பயிற்சியானது சென்னையில் உள்ள தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் ஒரு மாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் Final Cut Pro–Digital Non Linear Editing (FCP-DNLW), AVID-Digital Non Linear Editing, *நிலைப் புகைப்பட பயிற்சி, ஆடியோ இன்ஜினியரிங், அனிமேஷன் ஆகிய பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில், ஒவ்வொரு வருடமும் சுமார் 250 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.*

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.37.38 இலட்சம் செலவில் 250 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.37.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14.11. பொருத்துநர் பயிற்சி

சென்னை கிண்டியில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் செவி மாற்றுத்திறனாளிகளுக்கு இரண்டு ஆண்டு கால பொருத்துநர் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், ஆண்டுதோறும் 20 பயனாளிகள் பயன்பெறும் வகையில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 20 பயனாளிகளுக்கு ரூ.0.72 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. ஒன்றிய அரசின் திட்டங்கள்

15.1. தனித்துவம் வாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை (UDID Card)

மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவச் சான்றிதழ்கள் வழங்க அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள்மூலம் சுகாதாரத் துறை, வருவாய்த் துறை, பள்ளிக் கல்வித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை

ஒருங்கிணைத்து சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்கு தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்குவதுடன், இதர மறுவாழ்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் கலந்துகொள்ளும் மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி என்பதற்கான மருத்துவச் சான்றிதழினை இணையதளம் மூலமாக பதிவேற்றம் செய்வதன் அடிப்படையில் ஒன்றிய அரசால் வழங்கப்படும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID Card) வழங்கப்படுகின்றன.

இதுநாள் வரை, தமிழ்நாட்டில் 6,43,231 மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID Card) வழங்கப்பட்டுள்ளன.

15.2. மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கான உதவித் திட்டம் (ADIP Scheme)

மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட அளவில் முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் அவர்களுக்கு தேவையான உதவி உபகரணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒன்றிய அரசின் நிறுவனங்களால் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தினை செயல்படுத்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாவட்ட நிர்வாகம், பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையுடன் கருத்துரு சமர்ப்பித்து, ஒன்றிய அரசால் ஏற்கப்படும் நேர்வில் மாவட்ட நிர்வாகம் மூலமாக முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இத்திட்டத்தில், கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 11 மாவட்டங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு, 6,665 பயனாளிகளுக்கு ரூ.727.75 இலட்சம் செலவில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

15.3. தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் (DDRS)

ஒன்றிய அரசின் இத்திட்டத்தில், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்பருவக்கல்வி உள்ளிட்ட சிறப்புக் கல்வி, பராமரிப்பு இல்லங்கள், சமுதாயம் சார்ந்த மற்றும் நிறுவனம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகள், செவித்திறன், பார்வைத்திறன், அறிவுசார், மனநலம் சார்ந்த

2023 ஏப்ரல் 17]

மாற்றுத் திறனாளிகள் மற்றும் தொழுநோய் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட பல்வேறு வகையான மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு சேவைகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியுதவி, ஒன்றிய அரசினால் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.

கடந்த 2022–2023 ஆம் நிதியாண்டில் 17 நிறுவனங்களுக்கு ரூ.391.25 இலட்சம் நிதியுதவி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

15.4. தடையற்றச் சூழலை ஏற்படுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரம் (சுகம்ய பாரத் அபியான்)

*ஒன்றிய அரசின் "சுகம்ய பாரத் அபியான்" (*Accessible India Campaign*) எனும் விழிப்புணர்வு இயக்கமானது, மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்றச் சூழல்களை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 49 கட்டடங்கள் தெரிவு செய்யப்பட்டு, 30 கட்டடங்களுக்கு ரூ.4608.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தணிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

15.5. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை

மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்வியினை ஊக்குவிக்க ஒன்றிய அரசால் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை திட்டத்தின்மூலம் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உதவித்தொகையினைப் பெற 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.5 இலட்சம் எனவும், பட்டயம், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.6.00 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வி உதவித்தொகையினைப் பெற கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் 5,271 மாணவ/மாணவியர்களின் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

[*2023 ஏப்ரல் 17*

அட்டவணை எண்: 9

தேசிய கல்வி உதவித்தொகை

வ. எண்	திட்டத்தின் வகை	உதவித்தொகை விவரம் (ரூபாயில்)
1.	மேல்நிலை கல்விக்கு முன் (Pre-Matric) 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை	9,000/- முதல் 14,600/- வரை
2.	மேல்நிலை கல்விக்கு பின் (Post-Matric) பட்டம் மற்றும் இளங்கலை	10,100/- முதல் 1,74,700/-
3.	உயர் கல்வி (Top Class) உயர் கல்வி மற்றும் முதுகலை	47,000/- முதல் 3,40,000/-

16. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs)

உலக அளவில் அனைத்து நிலைகளிலும், அனைத்து உயிரினங்களும், வாழ்வியல் ஆரோக்கியமும், வளமையும் பெற்று சிறந்து விளங்க, ஐக்கிய நாடுகள் சபை 2015 ஆம் ஆண்டில் தீர்மானத்தினை வெளியிட்டு 2030 ஆம் ஆண்டிற்குள் எய்தப்பட வேண்டிய இலக்குகளாக 17 இலக்குகளை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வறுமையின்மை, பசியின்மை, சிறந்த கல்வி, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய அமைப்பினை உருவாக்குவதன்மூலம் சீரான சமுதாயத்தினை உருவாக்குதல் உள்ளிட்ட இலக்குகளை எய்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென வருடந்தோறும் பல்வேறு முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் வாயிலாக, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. இந்நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கென ஆண்டுதோறும் அதிக அளவிலான நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 17]

கீழ்க்கண்ட நடவடிக்கைகள்மூலம் இவ்விலக்கினை அடைய அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது:-

1. *அரசாணை (நிலை) எண் 4, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1)த் துறை, நாள் 15-3-2022-ல் மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.1,500/-லிருந்து, ரூ.2,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.*

2. *அரசாணை (நிலை) எண் 15, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1.2)த் துறை, நாள் 28-6-2022-ல் அறிவுசார், மனநலம், மற்றும் கடுமையாக உடல் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளின் பராமரிப்பிற்காக செயல்படும் பராமரிப்பு இல்லங்களில் பயன்பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உணவூட்டு மானியம் ரூ.900/-லிருந்து ரூ.1,200/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.*

3. *சிறுதொழில் கடனுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மானியத் தொகை ரூ.25,000/-யினை மாற்றுத்திறனாளிகளின் பெற்றோருக்கும் நீட்டித்து வழங்கப்பட்டது.*

4. *மாற்றுத்திறனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்திற்கான வயது வரம்பினை 45-லிருந்து 60 ஆக நீட்டிக்கப்பட்டது.*

5. *நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்காக ஒருங்கிணைந்த பல்துறை அணுகுமுறையினை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஊக்குவிக்கின்றது.*

17. மாநில விருதுகள்

மாற்றுத்திறனாளிகளுக்கு அளிக்கப்படும் சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் மாநில அரசு பல்வேறு விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது. இவ்விருதுகள் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 ஆம் நாள் சுதந்திர தினத்தன்றும், டிசம்பர் 3 ஆம் நாள்

உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளின் விவரங்கள் பின்வருமாறு:-

அட்டவணை எண்: 10

ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள்

வ. எண்	விருதின் பெயர்	விருதின் விவரம்
1.	சிறந்த நிறுவனம் (மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய தனியார் நிறுவனம்)	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
2.	சிறந்த நிறுவனம் விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம்)	10 கிராம் தங்கப் பதக்கம், ரொக்கப் பரிசு ரூ.50,000/- மற்றும் சான்றிதழ்
3.	சிறந்த சமூகப் பணியாளர் விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு அரும்பணியாற்றிமைக்காக)	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
4.	சிறந்த மருத்துவர் விருது	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.
5.	சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது	10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.25,000/-
6.	சிறந்த வங்கிக்கான விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கி)	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 17]

அட்டவணை எண்:11

ஆண்டுதோறும் உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள்

வ. எண்	விருதின் பெயர்	விருதுகள் எண்ணிக்கை	விருதின் விவரம்
1.	சிறந்த நிறுவனம்	1 விருது	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ
2.	சிறந்த சமூகப் பணியாளர்	1 விருது	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
3.	சிறந்த ஆசிரியர்	3 விருதுகள்	தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
4.	சிறந்த பணியாளர் - பணிபுரிபவர் / சுயதொழில் புரிபவர்	10 விருதுகள்	தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
5.	மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம்	1 விருது	10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
6.	ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்	2 விருதுகள்	தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 17

வ. எண்	விருதின் பெயர்	விருதுகள் எண்ணிக்கை	விருதின் விவரம்
7.	மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர்	2 விருதுகள்	தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
8.	மா ற்றுத் திறனாளிகளுக்கு தடையற்ற சூழல் அமைத்த சிறந்த அரசு மற்றும் தனியார் கட்டடம்	2 விருதுகள்	தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்
மொத்த விருதுகள்		22 விருதுகள்	

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.44.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்றச் சூழலை அமைக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் விதமாக, புதிதாக இரண்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதினை வழங்குவதன்மூலம் அரசு, பொதுத் துறை கட்டடங்கள், தனியார் துறை கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்றச் சூழல் அமைப்பினை உருவாக்கும் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

18. உலக மாற்றுத் திறனாளிகள் தினம்

ஒவ்வொரு வருடமும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வழிகாட்டுதலின்படி, டிசம்பர் 3 ஆம் நாளில் உலக மாற்றுத் திறனாளிகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவ்விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் உள்ளிட்ட நலத் திட்டங்கள் வழங்கப்படுவதுடன், அவர்கள் உற்பத்தி

2023 ஏப்ரல் 17]

செய்யக்கூடிய கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. கடந்த 2022 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற உலக மாற்றுத் திறனாளிகள் தின விழாவில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் "நான் முதல்வன்" திட்டத்தில், மாற்றுத் திறனாளிகள் அவர்களது வீட்டிலிருந்தபடியே பொருளீட்டும் வகையில் பணிபுரிய உதவும் மென்பொருளுடன்கூடிய மடிக்கணினி அரசால் வழங்கப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விழாவில், கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை ஆகிய புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகன சேவைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

19. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம்

மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, 2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது, அரசாணை (ப) எண் 30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 12-9-2022-ன்படி, இவ்வாரியமானது, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் தலைமையில் புதிய உறுப்பினர்களைக்கொண்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில், பத்து வயதிற்கு மேற்பட்ட 10,11,323 மாற்றுத் திறனாளிகள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கு, இவ்வாரியத்தின்மூலம் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மூக்கு கண்ணாடி வாங்க உதவித்தொகை, மகப்பேறு மற்றும் கருச்சிதைவுக்கான உதவித்தொகை, விபத்தினால் ஏற்படும் பாதிப்பு மற்றும் மரணத்திற்கான நிவாரணத்தொகை, இயற்கை மரணத்திற்கான ஈமச்சடங்கு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தின்மூலம் வழங்கப்படும் உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

[2023 ஏப்ரல் 17

அட்டவணை எண்: 12

நல வாரிய உதவிகள்

1.	தனி நபர் விபத்து நிவாரணம்		
	(அ)	விபத்தினால் இறப்பு	ரூ.1,00,000/-
	(ஆ)	கை அல்லது கால் இழப்பு இரு கண் பார்வை இழப்பு மற்றும் முழுமையான செயலிழப்பு	ரூ. 1,00,000/-
	(இ)	ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு	ரூ. 50,000/-
	(ஈ)	நிரந்தர ஊனம் (ஆ மற்றும் இ தவிர்த்து)	ரூ. 25,000/-
2.	மாற்றுத்திறனாளி நபரின் இறுதிச் சடங்கு		ரூ. 2,000/-
3.	மாற்றுத்திறனாளி நபரின் இயற்கை மரணம்		ரூ. 15,000/-
4.	மாற்றுத்திறனாளியின் மகன் மற்றும் மகள் கல்வி பயில வருடாந்திர உதவித்தொகை		
(அ)	i.	10 ஆம் வகுப்பு பயிலும் மகள்	ரூ. 1,000/-
	ii.	10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகள்	ரூ. 1,000/-
(ஆ)		11 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகள்	ரூ. 1,000/-
(இ)	i.	12 ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகள்	ரூ. 1,500/-
	ii.	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகள்	ரூ. 1,500/-
(ஈ)	i.	இளங்கலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள்	ரூ. 1,500/-

2023 ஏப்ரல் 17]

	ii.	இளங்கலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ. 1,750/-
	iii.	முதுகலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள்	ரூ. 2,000/-
	iv.	முதுகலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ. 3,000/-
(உ)	i.	சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொழிற்கல்விப் படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ.2,000/-
	ii.	விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ. 4,000/-
	iii.	தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ. 4,000/-
	iv.	தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ. 6,000/-
(ஊ)	i.	தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ. 1,000/-
	ii.	விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள்	ரூ. 1,200/-
5.	திருமண உதவித் தொகை (கணவன் அல்லது மனைவி ஒருவருக்கு மட்டும்)		ரூ.2,000/-
6.	பெண் உறுப்பினர்களுக்கு மகப்பேறு நிதியுதவி		
	(அ)	மகப்பேறு	ரூ. 6,000/-
	(ஆ)	கருச்சிதைவு / கருக்கலைப்பு	ரூ. 3,000/-
	(இ)	அறுவை சிகிச்சை	ரூ. 9,000/-
7.		மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு நிதியுதவி	ரூ. 500/-

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.229.28 இலட்சம் செலவில் 1,539 பயனாளிகளுக்கு இவ்வாரியத்தின்மூலம் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 2023-2024 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.329.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் வருமான உச்சவரம்பு ஏதுமின்றி, மருத்துவ சிகிச்சைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின்மூலம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆண்டொன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வரை மருத்துவச் சிகிச்சை பெற்று பயன்பெறலாம். மேலும், இத்திட்டத்தின்மூலம் புற உலக சிந்தனையற்ற, தசைச்சிதைவு, அறிவுசார், செவித்திறன், மூளை முடக்குவாதம், கற்றலில் குறைபாடு, பல்வகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு பராமரிப்பு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கை அவயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

21. புற உலக சிந்தனையற்ற, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம், 1999

இச்சட்டத்தில், புற உலக சிந்தனையற்ற, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பாதுகாவலர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான உள்ளூர் குழுவின்மூலம் (Local Level Committee) பாதுகாவலர் சான்று வழங்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் இக்குழுவின் தலைவராகவும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக செயல்படும் பதிவு பெற்ற நிறுவனத்தின் பிரதிநிதி மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக செயல்படுவார்கள். இச்சட்டத்தின்மூலம், இதுநாள் வரை, 3,697 பாதுகாவலர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 17]

22. புதிய முன்னெடுப்புகள்

22.1.வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை

வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள தகுதியான மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்மூலம் வீட்டு மனைப் பட்டா வழங்க அரசாணை (நிலை) எண் 541, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 11-11-2022-ல் ஆணை வெளியிடப்பட்டு, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுநாள் வரை 598 மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

22.2. வீடு ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவிகித இடஒதுக்கீடு

வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு, தகுதியின் அடிப்படையில் வீடு ஒதுக்கீட்டில் ஐந்து சதவிகிதம் வழங்க அரசாணை (நிலை) எண் 24, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை, நாள் 12-8-2022-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், நகர்ப்புறங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் 555 மாற்றுத்திறனாளிகளுக்கும், கிராமப்புறங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் 576 மாற்றுத்திறனாளிகளுக்கும் வீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு ஒதுக்கப்படும் வீடுகள் அவர்கள் பயன்படுத்த ஏதுவாக தரைத்தளத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

22.3. மாற்றுத்திறனாளி உலமாக்களின் ஓய்வூதியம் பெறும் வயதினைக் குறைத்தல்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்மூலம் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு உலமாக்கள் மற்றும் பிற பணியாளர் நல வாரியத்தில் பயன்பெறும் மாற்றுத்திறனாளிகளின் ஓய்வூதியம் பெறும் வயது அரசாணை (நிலை) எண் 46, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 15-6-2022-ன்படி, 50-லிருந்து 40 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 17

22.4. போக்குவரத்து

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகள் பயணம் செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகளைக் களைய, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலாளர் தலைமையில் போக்குவரத்துத் துறை அலுவலர்களை உள்ளடக்கிய குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, அவ்வப்போது கூடி, அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாற்றுத் திறனாளிகள் வசதியாக பயணம் செய்வதற்கு ஏதுவாக வழிகாட்டுதல்களை வழங்குகிறது. இதனடிப்படையில், போக்குவரத்துத் துறைமூலம் நடத்துநர் மற்றும் ஓட்டுநர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

23. முடிவுரை

மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஒரு சிறு சிரமம் கூட ஏற்பட்டு விடக்கூடாது என்று நினைக்கக்கூடிய அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக கருணை உள்ளத்தோடு, எப்பொழுதும் இவ்வரசு தொடர்ந்து அவர்களுக்கு துணை நிற்கும்.

மாற்றுத்திறனாளிகளின் நலன் மற்றும் அவர்களது உரிமைகளைக் காக்கவும், ஒருங்கிணைந்த சமுதாயத்தினை அமைத்திடவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படும்.

அட்டவணை எண்: 13

2023-2024 ஆம் நிதியாண்டிற்கான திட்ட வாரியான நிதி ஒதுக்கீடு

வ. எண்	சேவைகள்/பயிற்சி	ரூபாய் (இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு சதவிகிதம்
1.	தடுப்பு மற்றும் ஆரம்ப நிலை பயிற்சி	1,056.82	0.96
2.	சிறப்புக் கல்வி திட்டங்கள்	9,173.02	8.29

2023 ஏப்ரல் 17]

வ. எண்	சேவைகள்/பயிற்சி	ரூபாய் (இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு சதவிகிதம்
3.	வேலை வாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி	2953.91	2.67
4.	சமூக பாதுகாப்பு திட்டங்கள் (பராமரிப்பு உதவித்தொகை மற்றும் கட்டணமில்லா பயணச்சலுகை, கல்வி நிறுவனங்களுக்கான உதவிகள் உள்ளிட்டவை)	69,020.93	62.38
5.	உதவி உபகரணங்கள்	5,787.67	5.23
6.	தடையற்ற சூழல் அமைத்தல் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகள்	352.00	0.32
7.	உரிமைகள் திட்டம்	14,300.00	12.92
8.	இதர இனங்கள் (சம்பளம் மற்றும் இதர நிர்வாக செலவுகள்)	8,004.61	7.23
	மொத்தம்	1,10,648.96	100.00


அட்டவணை எண்: 14


2020-2021 ஆம் ஆண்டு முதல் 2023-2024 ஆம் ஆண்டு வரையிலான நிதி ஒதுக்கீடு

வ. எண்	நிதியாண்டு	ரூபாய் (இலட்சத்தில்)
1	2020-2021	66,708.02
2	2021-2022	81,362.56
3	2022-2023	91,712.53
4	2023-2024	1,10,648.96

[2023 ஏப்ரல் 17

2020-2021 ஆம் ஆண்டு முதல் 2023-2024 ஆம் ஆண்டு வரையிலான நிதி ஒதுக்கீடு




2023–2024 ஆம் ஆண்டிற்கான திட்ட வாரியான நிதி ஒதுக்கீடு (சதவிகிதத்தில்)
0.96
8.29
2.67
62.38
0.32
5.23
12.92
7.23
தடுப்பு மற்றும் ஆரம்ப நிலை திட்டங்கள் –0.96
சிறப்புக்கல்வி திட்டங்கள் – 8.29
வேலை வாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி திட்டங்கள் – 2.67
சமூக பாதுகாப்பு திட்டங்கள் – 62.38
உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டம்–5.23
தடையற்ற சூழல் அமைத்தல் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகள் –0.32
உரிமைகள் திட்டம்–12.92
இதர இனங்கள்– 7.23

[2023 ஏப்ரல் 17

இணைப்பு-III

(120 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

அத்தியாயம்-1

முன்னுரை

மனிதனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வு இல்லை
ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானம்.

- தந்தை பெரியார்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் முக்கிய பணியே நலிவடைந்த, வாய்ப்புகள் கிடைக்காத மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களை உயர்த்துவதாகும். சமூகநீதி, சமவாய்ப்பு மற்றும் அனைத்து நலன்களும் அனைவரையும் சென்றடையக்கூடிய சூழலை அடிப்படையாகக்கொண்டு, சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு முன்னேற்றம் அளிக்க செயல்படும் துறையாகும். மேலும், முதியோரின் தேவைகளான உடல் நலம் பேணுதல், ஊட்டச்சத்து, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வினை வழங்குகிறது. மேலும், திருநங்கையர் சமுதாயத்தில் வேறுபாடின்றி ஒருங்கிணைந்து வாழ்வதற்கான உரிமைகள், பொருளாதார உதவி மற்றும் திட்டங்களை அளிப்பதையும் குறிக்கோளாக கொண்டுள்ளது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சமூக நல இயக்குநரகம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரகம் மற்றும் சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம் என மூன்று இயக்குநரகங்கள் செயல்படுகின்றன.

சமூக நல இயக்குநரகம், மகளிர் மேம்பாடு மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், குழந்தைகள், திருநங்கைகள்,

2023 ஏப்ரல் 17]

மூத்த குடிமக்கள் மற்றும் சத்துணவு தொடர்பான பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தியும், கண்காணித்தும் வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரகம், குழந்தையின் பிறப்பு, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தினை வழங்கி வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 0-6 வயதுள்ள குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஒரு நலத் திட்டமாக 1975-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, மேலும், குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டினை நிவர்த்தி செய்தல் இத்திட்டத்தின் நோக்கமாயிருக்கிறது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சுகாதார பாதுகாப்பு பணிகளையும் இவ்வியக்குநரகம் வழங்குகிறது.

சமூகப்பாதுகாப்புஇயக்குநரகம்குழந்தைகளுக்கு அனுகூலமான நலன் மற்றும் வளர்ச்சியை வழங்குகிறது. சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்குத் தேவையான கவனிப்பு, பாதுகாப்பு, சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை நிறுவனம் மற்றும் நிறுவனம் சாரா பணிகள்மூலம் வழங்குகிறது. மேலும், இத்துறை இல்லங்களை விட்டு வீடேகியவர்களுக்கு தன்னிறைவு பெறுவதற்கு பல உதவிகளை வழங்குகிறது.

சமூக நல இயக்குநரகம்

தமிழ்நாட்டில் மகளிரின் கல்வி, சுகாதாரம், குடும்ப வாழ்க்கை, பொருளாதாரம், அரசியல் மற்றும் சம உரிமைகளை உறுதிப்படுத்த சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயல்பட்டு வருகிறது.

மகளிர் அதிகாரம் என்பது பெண்கள் அடக்கு முறை இல்லாமலும், சுரண்டப்படாமலும், அச்சமில்லாமலும், பாகுபாடில்லாமலும், எந்த துன்புறுத்தலுக்கும் ஆட்படாமலும் வாழும் சூழலை உருவாக்குவதாகும். பெண்கள் தமக்கான உரிமைகளை பெறவும், பொறுப்புகளை உணரவும், தன்மீதும், மற்றவர்களிடமும் அவற்றை சிறப்பான முறையில் பயன்படுத்தவும் அறிய வைப்பதே மகளிர் அதிகாரமாகும். பெண்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கி அவர்களை தற்சார்புடையவர்களாக திறம்பட செயலாற்றிடவும், அவர்களுக்கான மேலாண்மை திறனை வளர்த்து ஆளுமை பெறவும் வழிகாட்டுவதாகும். மகளிருக்கு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி, பல திறன் பயிற்சிகளை வழங்கி, தனியாகவும், குழுவாகவும், சமுதாயமாகவும், பொருளாதாரம், மனோதிடம்,

[2023 ஏப்ரல் 17

அரசியல், மற்றும் குடும்ப வாழ்க்கையில் பாலின பாகுபாடின்றி வாழவைப்பதே முழுமையான அதிகாரப்படுத்துதல் ஆகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி மகளிருக்கான உரிமைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெண்களுக்கான சம வாய்ப்புகளையும் உரிமைகளையும் வழங்கியுள்ளது. பெண்களுக்கு சம உரிமை வழங்கும் முக்கியமான சட்டப் பிரிவுகள் கீழ்க்கண்டவாறு:

- ❖ சட்டத்தின் முன் அனைவரும் சமம் (உறுப்பு– 14).
- ❖ மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் காரணமாக பாகுபாடு காட்டுதலுக்கு தடை செய்யப்பட்டுள்ளது (உறுப்பு -15(i)).
- ❖ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவாக மாநில வாரியாக சிறப்பு ஏற்பாடு (உறுப்பு – 15 (iii)).
- ❖ வேலைவாய்ப்பில் சம வாய்ப்பு (உறுப்பு – 16).
- ❖ ஆண்களுக்கும் பெண்களுக்கும் போதுமான வாழ்வாதாரத்தை சமமாக பெறுதல் (உறுப்பு – 39(a)).
- ❖ சம வேலைக்கு சம ஊதியம் (உறுப்பு – 39(d)).
- ❖ சமவாய்ப்பு அடிப்படையில் நீதியை மேம்படுத்துதல் மற்றும் இலவச சட்ட உதவி வழங்குதல் (உறுப்பு – 39(A)).
- ❖ பெண்களை இழிவுபடுத்தும் நடைமுறைகளை கைவிடுதல் (உறுப்பு–51(A)(e)).
- ❖ பஞ்சாயத்துகளில் பெண்களுக்கு 1/3 இட ஒதுக்கீடு (உறுப்பு–243 (D) மற்றும் நகராட்சிகளில் (உறுப்பு-243 (T)).
- ❖ பெண்களுக்கு சொத்துரிமை (உறுப்பு 300 (A)).

தமிழ்நாடு அரசு பெண்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு பல உன்னதமான திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண்" என்ற புதிய திட்டத்தின்மூலம் 2.09 இலட்சம் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக

2023 ஏப்ரல் 17]

செலுத்தப்படுவதால், பல பெண்கள் இளங்கலை, தொழிற்பயிற்சி மற்றும் பட்டய கல்வியினை பெற்று வருகின்றனர். மேலும், உயர் கல்வி பெறும் மகளிர் தங்கள் திருமண வயதை தள்ளிப்போடுதல், சரியான வாழ்க்கைத் துணையை தேர்வு செய்தல் ஆகிய நல்ல முடிவுகளையும், குழந்தைத் திருமணம், இளவயது கர்ப்பம், தொடர் கருக்கலைப்பு மற்றும் நெருங்கிய உறவுமுறை திருமணம் ஆகிய தவறான சூழ்நிலைகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும் திறமைகளையும் பெறுவர் என்பது உறுதியாகும். இதன்மூலம் உயர் கல்வி பெறும் மகளிர், தொழில்முனைதல் மற்றும் வேலைவாய்ப்புகள் அதிக அளவில் பெற்று பொருளாதார முன்னேற்றம் அடைவர் என்பது உறுதியாகும். பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு அரசு பேருந்துகளில் இலவசப் பயணம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டதால் அவர்கள் அடுத்தவர்களை சார்ந்திராமல் தன்னிச்சையாகவும், சுயசார்பாகவும் பயணம் மேற்கொண்டு பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி மையங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களுக்குச் செல்ல வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனம் உருவாக்கப்பட்டு, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பணிபுரியும் பெண்களுக்காக, புதிய பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டவும், பழைய விடுதிகளை புதுப்பிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பணிபுரியும் மகளிர் தங்கள் வேலைவாய்ப்புகளை தொடர்ந்து பெற்று பொருளாதார முன்னேற்றம் அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. கைம்பெண்கள், குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் நலிவடைந்த பிரிவை சேர்ந்த பெண்கள் தாம் விடுபட்ட கல்வியை தொடரவும், திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான பயிற்சிகளை பெறவும் தற்போது, தமிழ்நாட்டில் ஏழு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், பொது இடங்களில் மற்றும் சமுதாயத்தால் பாதிப்படைந்த பெண்களை அரவணைத்து பாதுகாக்க பெண்கள் உதவி எண், ஒருங்கிணைந்த சேவை மையம் மற்றும் குறுகிய கால இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வாறான இல்லங்கள்மூலம் பெண்களுக்கு தங்குமிடம் மனநல ஆலோசனை, உடலியல், சமூக, சட்ட மற்றும் பொருளாதார உதவிகள் வழங்கப்படுகின்றன.

பள்ளி குழந்தைகளுக்கு இலவச சீருடை தைத்து வழங்கும் தொழில்மூலம் 85,493 பெண்கள் தங்களுடைய வருட வருமானத்தை ஈட்டுகின்றனர். இவர்களுக்காக 100 (99 பெண்கள்+1 திருநங்கையர்) தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

பெண்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக, பல்வேறு நலச் சட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அவையாவன, வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் 2005, பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல்கள் (தடுத்தல், தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013, தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்களை முறைப்படுத்துதல் சட்டம் 2014, அதன் விதிகள், 2015 ஆகியன சமூக நலத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குழந்தைகளின் நலனை பாதுகாக்கவும், பிறந்தவுடன் குழந்தைகள் கொல்லப்படுவதை தடுக்கவும், உன்னதமான திட்டங்களான தொட்டில் குழந்தை திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் மற்றும் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006 ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.

மேலும், திருநங்கையரின் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு, திருநங்கையர் நல வாரியம் அமைத்ததில் முன்னோடியாக திகழ்ந்து பல நலத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. திருநங்கையரின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக அடையாள அட்டை வழங்குதல், ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ள நிதியுதவி வழங்குதல் ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.

இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் திட்டமிடப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 2021-ம் ஆண்டில் 13.6 சதவீதமாக இருந்த முதியோர் எண்ணிக்கை, 2031-ம் ஆண்டில் 18.2 சதவீதமாக உயரும் எனவும், இந்தியாவிலேயே கேரளாவிற்கு அடுத்து அதிகமான முதியோர் மக்கள் தொகை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே, முதியோர் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2023 ஏப்ரல் 17]

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தீர்வு காணும் விதமாக 2008 ஆம் ஆண்டு சட்டரீதியாக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே தமிழ்நாடு மகளிர் ஆணையம் ஆகும். கைம்பெண்கள், கைவிடப்பட்டவர்கள் மற்றும் திருமணமாகாத பெண்கள் நலனுக்காக 2022 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரகம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்-குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து குறைபாடு எப்போதுமே தேசிய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொருளாக இருந்து வருகிறது. அரசினால் அவ்வப்போது பல்வேறு உயர்மட்ட சுகாதார திட்டங்கள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1974 ஆம் ஆண்டில், குழந்தைகளுக்கான நன்கு வரையறுக்கப்பட்ட தேசியக் கொள்கையை இந்தியா ஏற்றுக்கொண்டது. இந்தக் கொள்கையின்படி, ஒரு முழுமையான மையப்படுத்தப்பட்ட பல்நோக்கு திட்டத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) *திட்டத்தை உருவாக்க வழி வகுத்தது. ஒன்றிய அரசின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் முதன்மையான தேசிய ஊட்டச்சத்து திட்டங்களில் ஒன்றான இந்தத் திட்டம் 2 அக்டோபர் 1975 இல் 33 வட்டாரங்களில் (4 கிராமப்புறம், 18, நகர்ப்புறம், 11 பழங்குடியினர்) தொடங்கப்பட்டது. மேலும், ஒவ்வோராண்டும் தொடர்ச்சியாக, இது படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.*

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் 32.51 இலட்சம் நேரடிப் பயனாளிகளை உள்ளடக்கியதாகும். இவர்களுக்கு உரிய சேவைகளை அளித்திட 54,439 (குழந்தைகள் மையங்கள் 49,499 மற்றும் 4,940 குழந்தைகள் குறு மையங்கள்) மூலம் சுகாதார சேவைகள், எடை கண்காணிப்பு, ஆலோசனை போன்றவற்றைப் பெற்று வருகிறார்கள். மேலும், தமிழ்நாட்டில் 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள்மூலம் இத்திட்டம் செயல்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் நன்மைகள் மற்றும் தாக்கம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மாநிலம் முழுவதும் ஊட்டச்சத்து குறைபாட்டினை போக்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

❖ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் துவங்கும் முன்னர், கிராமங்களில் ஒரு சில குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றனர். ஆனால், தற்போது இத்திட்ட உதவியுடன், ஒவ்வொரு குழந்தையும் இலவச ஆரம்பக் கல்விக்கான அணுகலைப் பெற்று வருகின்றனர், இது குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது.

தமிழ்நாடு அரசின் மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அணுகுமுறையால் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான உடல், உளவியல், அறிவாற்றல் மற்றும் உணர்ச்சி வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது. மேலும், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தாய்வழி பராமரிப்பு உட்பட சிறந்த ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு, மேம்பாடு மற்றும் கற்றல் ஆகியவற்றை உறுதி செய்கிறது".

சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம்

இடர்பாடான சூழல்களில் உள்ள குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுக்கான முன்முயற்சிகளை எடுப்பதில் தமிழ்நாடு அரசு வியக்கத்தக்க வரலாற்றை கொண்டுள்ளது. நமது மாநிலம் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை நிறைவேற்றக்கூடிய வலிமையான கட்டமைப்பு, செயல்படுத்தும் திறன் மற்றும் கண்காணிப்பு அமைப்பினை உருவாக்கியுள்ளது.

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில், ஒவ்வொரு குழந்தையும் சிறந்த சூழலில் வளர்ந்து தங்களை மேம்படுத்திக்கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளபோதும், குழந்தைகளை அவர்களது குடும்பத்தினருடனேயே வளர்வதற்கு அனைத்து முயற்சிகளும் முதன்மையாக மேற்கொள்ளப்படுகிறது. குழந்தைகளை பராமரிக்க எவரும் இல்லாத சூழலில் இறுதி வாய்ப்பாக குழந்தைகள், நிறுவனத்தில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர். அதன்படி, குழந்தை தத்தெடுப்பு, வளர்ப்பு, பராமரிப்பு மற்றும் நிதி ஆதரவு திட்டங்களுக்கு அரசு முக்கியத்துவம் அளிப்பதன் வாயிலாக, அன்பும், குடும்ப அரவணைப்புங்கூடிய சூழலில் குழந்தைகள் குடும்பத்தில் வளர ஏதுவாகிறது. பெற்றோரால் வளர்ப்பதற்கு திறனற்ற மற்றும் தகுதியற்ற குடும்ப சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை

2023 ஏப்ரல் 17]

அடையாளம் கண்டு அவர்களை வளர்ப்பு பராமரிப்பு திட்டத்தின்கீழ் தகுதியுள்ள குடும்பங்களில் வளர்வதற்கான செயல்திட்டங்கள் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பிற்கான அரசின் உறுதிப்பாட்டை நிறைவேற்றியது மட்டுமின்றி, எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் ஒவ்வொரு குழந்தையும் பாதுகாக்கப்படும் வகையில், அடிப்படை கூறுகள் மற்றும் சமூகத்தில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப குழந்தைப் பாதுகாப்பிற்கான பொருத்தமான அணுகுமுறையை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் உள்ளது.

அத்தியாயம்-2

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை

2.1 குழந்தைகள், மகளிர், முதியோர் மற்றும் திருநங்கையருக்கான சமூக நலச் சட்டங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அடிப்படையாக கொண்டு இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் அதன் விதிகள் மக்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு வழங்கும் ஆதார மையமாக உள்ளது.

பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் திருநங்கையருக்கான பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதி செய்யும் பொருட்டு, சமூக நலத் துறை கீழ்க்காணும் சமூக நலச் சட்டங்களை செயல்படுத்தி வருகிறது:

1. *வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961*
2. *குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005*
3. *பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.*
4. *தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2014 மற்றும் விதிகள் 2015*

5. குழந்தை திருமண தடைச் சட்டம், 2006

6. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 மற்றும் விதிகள் 2009

7. திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 மற்றும் விதிகள் 2022

மகளிருக்கான சமூக சட்டங்கள்

2.1.1 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

❖ அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான வரதட்சணை தடுப்பு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ இச்சட்டமானது 1989-ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வரதட்சணை தடுப்பு விதிகள், 2004 விதி 8 (B)-ன்படி மாவட்ட சமூக நல அலுவலர்கள் வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு செயலாற்றி வருகின்றனர். சட்டத்தை திறம்பட செயல்படுத்த மாவட்ட சமூக நல அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சி அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது.

❖ காவல் துறை/நீதிமன்றம் மாவட்ட சமூக நல அலுவலர்களிடமிருந்து வரதட்சணை புகார் குறித்த உண்மைத்தன்மை அறிக்கையை பெற்ற பிறகு வழக்கை பதிவு செய்கின்றனர்.

வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் (1961)-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

வ. எண்	விவரம்	ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021	ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022
1	மாவட்ட சமூக நல அலுவலர்களால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்	1486	1454

2023 ஏப்ரல் 17]

வ. எண்	விவரம்	ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021	ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022
2	ஆற்றுப்படுத்துதல்மூலம் சுமூகமாக தீர்க்கப்பட்ட வழக்குகள்	719	769
3	மாவட்ட சமூக நல அலுவலரால் காவல் துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள்	305	327
4	மாவட்ட சமூக நல அலுவலர்களால் விசாரிக்கப்பட்ட வழக்குகள்.	462	358

2.1.2. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பெண்களை பாதுகாப்பாக வன்முறை இல்லாத குடும்பத்தில் வசிக்க வழிவகை செய்கிறது. இச்சட்டம் பெண்கள் மரியாதையோடு புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையையும், மேலும் அவர்களின் குழந்தைகளுக்கான பாதுகாப்பையும் மற்றும் பராமரிப்பையும் தருகிறது. இந்த சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் சட்ட வழிமுறைகளை கொண்டிருந்தாலும், பாதிக்கப்பட்ட பெண்கள் 60 நாட்களுக்குள் உடனடியாக உரிமையியல் தீர்வுகளைப் பெற முடியும்.

இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- *பாதிக்கப்பட்ட நபர்களிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005-ன்கீழ் வழக்குகளைப் பதிவு செய்யலாம்.*
- *ஒரே வழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டத்தில் வழிவகை உள்ளது.*

❖ வார்த்தைகள் மற்றும் மனரீதியான துன்புறுத்தல்களுக்கும் நிவாரணம் அளிக்கிறது.

❖ குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து 30 நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல்முறையீடு செய்யலாம்.

பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சேவை நிறுவனங்கள்

ஒவ்வொரு மாவட்ட சமூக நல அலுவலகத்திலும், ஒரு பாதுகாப்பு அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார். இப்பாதுகாப்பு அலுவலர் பெண்களுக்கு ஏற்படும் குடும்ப வன்முறை குறித்து அறிக்கை தாக்கல் செய்து சட்டபூர்வமான தீர்வுகளை பெற உதவுவார்.

குடும்ப வன்முறைச் சட்டம், 2005-ன்கீழ் அறிவிக்கப்பட்ட சேவை வழங்குநர்களாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்த சேவை நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குடும்ப வன்முறை அறிக்கையை (DIR) தாக்கல் செய்ய உதவுகிறார்கள், குழந்தைகளுடன் குறுகியகால தங்குமிடங்களில் தங்குவதற்கும், அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகிறார்கள். பெண்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. சேவை வழங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் தேவையின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் நிலையான வருமானத்தைப் பெற உதவும் வகையில் தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது .

குடும்ப வன்முறை தடுப்பு சட்டம், 2005-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

வ. எண்	விவரம்	ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021	ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022
1	பெறப்பட்ட வழக்குகள்	5,824	6,214
2	பாதுகாப்பு அலுவலர்களால் முடிக்கப்பட்ட வழக்குகள்	2,952	2,846

2023 ஏப்ரல் 17]

வ. எண்	விவரம்	ஜனவரி 2021 முதல் டிசம்பர் 2021	ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022
3	நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்	2,038	2,639
4	பாதுகாப்பு அலுவலர்களிடம் விசாரணையில் உள்ள வழக்குகள்	834	729

2.1.3. பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.

பாலியல் துன்புறுத்தல், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 14 மற்றும் 15-ன்கீழ் பெண் சமத்துவத்திற்கான அடிப்படை உரிமைகளையும், 21-வது உறுப்பின்கீழ் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையையும் மீறுகிறது. பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் மற்றும் கண்ணியத்துடன் பணிபுரியும் உரிமை ஆகியவை உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளாகும்.

பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013, டிசம்பர் 9, 2013 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் 5-வது பிரிவின்கீழ் மாவட்ட ஆட்சியர்களை, இச்சட்டத்திற்கான மாவட்ட அலுவலர்களாக அரசு அறிவித்துள்ளது.

சட்டத்தின் 4-வது பிரிவின்படி, 10-க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட அனைத்து பணியிடங்களிலும் உள்ளக புகார்க் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்டங்களில் இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதைக் கண்காணிக்கும் மாவட்ட அலுவலராக உள்ளார். மாவட்டங்களில், அனைத்து அலுவலகங்களிலும் (அரசு மற்றும் தனியார்) உள்ளகக் குழுவை அமைக்குமாறு மாவட்ட ஆட்சியர்மூலம் செய்தித்தாள்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. உள்ளகக் குழுவை அமைக்கத் தவறும் எந்தவொரு பணியிட உரிமையாளரும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை அபராதத்துடன் தண்டிக்கப்படுவர். உள்ளக புகார்க் குழு

[2023 ஏப்ரல் 17

அமைக்காதபட்சத்தில் அவர்களது உரிமம் அல்லது பதிவை இரத்து செய்ய அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புக்கு அதிகாரம் உண்டு.

சட்டத்தின் 6-வது பிரிவின்படி, 10-க்கும் குறைவான பணியாளர்களைக் கொண்ட பணியிடங்கள் மற்றும் அமைப்பு சாரா துறைகளில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பிற்காகவும், உரிமையாளர்/நிறுவனத் தலைவருக்கு எதிராக புகார் இருந்தால் அவர்களின் பாதுகாப்புக்காக மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட அளவில் உள்ளூர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 38 மாவட்டங்களிலும், உள்ளூர் புகார் குழுக்கள் (LCC) உருவாக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதை ஊக்குவிக்க புகார் பெட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளக புகார் குழு உறுப்பினர்களால், இப்புகார்களின்மீது தேவையான விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1.4 தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2014

தங்கள் வீடுகளை விட்டு வேறு இடங்களில் தங்கும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களைத் தடுப்பதற்கும், பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், அவர்கள் தங்கும் விடுதிகள் மற்றும் இல்லங்களை பதிவு செய்து ஒழுங்குபடுத்துவதற்கும், தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2014 மற்றும் விதிகள், 2015 ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறது. 1-7-2022 முதல் அனைத்து விடுதிகள் மற்றும் இல்லங்கள் பதிவு செய்திட https://tnswp.com என்ற இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

குழந்தைகள் நலனுக்கான சமூக சட்டங்கள்

2.1.5 குழந்தை திருமண தடைச் சட்டம், 2006

குழந்தை திருமண தடைச் சட்டமானது, 2006 ஆம் ஆண்டு இந்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் குழந்தை திருமணத்தை தடைசெய்யவும், திருமணத்தால்

2023 ஏப்ரல் 17]

பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும், மறுவாழ்வு அளித்திடவும், குழந்தை திருமணத்தை தூண்டுபவர்கள், ஊக்குவிப்பவர்கள் மற்றும் நடத்துபவர்களுக்கு கடுமையான தண்டனைகளை உறுதி செய்யவும் உகந்த வழிவகைகளை கொண்டிருக்கிறது. மாநிலத்தில் குழந்தை திருமணங்களை அறவே ஒழித்திட, தமிழ்நாடு குழந்தை திருமண தடுப்பு விதிகள், 2009, மாநில அரசால் உருவாக்கப்பட்டு, அதற்கான அறிவிப்பு 30-12-2009-ல் வெளியிடப்பட்டது.

குழந்தை திருமண தடுப்பு அலுவலர்

குழந்தை திருமண தடைச் சட்டத்தை திறம்பட செயல்படுத்திட மாவட்ட சமூக நல அலுவலர்களை இச்சட்டப் பிரிவு 17-ன்படி, குழந்தை திருமண தடுப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. குழந்தை திருமணம் குறித்து தகவல் எவ்வகையில் கிடைக்கப்பெற்றாலும், குழந்தை திருமண தடுப்பு அலுவலர்கள் அதன்மீது உடன் நடவடிக்கை மேற்கொண்டு குழந்தை திருமணத்தை தடுக்க அதிகாரம் கொண்டிருக்கின்றனர். மேலும் அவர்கள் குழந்தை திருமணத்தை இரத்து செய்யுமாறு வழக்குகள் பதிவு செய்யவும், குழந்தை திருமணத்தால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கும், குழந்தை திருமணத்தின்மூலம் பிறந்த குழந்தைகளுக்கும் பராமரிப்பு மற்றும் தங்குமிடம் வழங்கிட நீதிமன்றங்கள்மூலம் உத்தரவுகளைப் பெற்றுத் தரலாம்.

சட்டத்தின்கீழ் தண்டனை விவரம்

சட்டத்தின்படி, 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கோ, 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கோ திருமணம் செய்து வைப்பது குற்றமாகும். குழந்தை திருமணம் என்பது, தானாக நடவடிக்கை எடுக்கதக்க மற்றும் பிணையில் விடுவிக்க இயலாத குற்றமாகும். இது சட்டப்படி செல்லதக்கதல்ல என்பதுடன், இரத்து செய்யப்படக்கூடியதுமாகும்.

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் குழந்தை திருமணத்திற்கான ஒப்பந்தத்தில் ஈடுபட்டால் அவருக்கு 2 ஆண்டுகள் வரை கடுமையான சிறைத் தண்டனை அல்லது ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். குழந்தை திருமணத்தை ஊக்குவிப்பவர், அனுமதிப்பவர், நடத்துபவர், வழிநடத்துபவர், தடுக்க தவறியவர்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மற்றும் உறுதுணையாக இருப்பவர்களுக்கும், 2 ஆண்டுகள் வரை கடுமையான சிறைத் தண்டனை அல்லது ரூ.1,00,000/-(ஒரு இலட்சம்) அபராதம் தண்டனையாக விதிக்கப்படும். இருப்பினும், பெண்களுக்கு இச்சட்டத்தின்கீழ் சிறைத் தண்டனை வழங்கிட இயலாது.

குழந்தை திருமணங்களை தடுப்பதற்காகவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

❖ குழந்தை திருமணங்களால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் இலவச உதவி எண்கள் ஆகியவற்றை உணர்த்திடும் வகையில் சுவரொட்டிகள் வடிவமைத்து, அச்சடித்து அனைத்து களப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு, பொது கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் காட்சிப்படுத்தி, குழந்தை திருமணங்களை ஒழித்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ மாநில ஆதார மையத்தின்மூலம் "இளந்தென்றல் பெட்டகம்" என்ற 23 வகையான பயிற்சி கையேடுகளை தமிழிலும், குழந்தை திருமணங்கள் குறித்து பல்வேறு தகவல்கள் அடங்கிய 4 குறும்படங்களை துறையின்மூலம் தயாரித்து குழந்தை திருமணம் தடுப்பு சார்ந்த அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பாலினம் சார்ந்த வன்முறை, குழந்தை திருமணங்கள் தடுப்பு ஆகியவை குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

❖ குழந்தை திருமணத்தின் பாதிப்புகள், குழந்தை திருமண தடைச் சட்டம், 2006, உதவி எண்கள் ஆகியன குறித்து, குழந்தை திருமணங்கள் அதிகமாக நடைபெறும் வட்டாரங்களில் களப்பணியாளர்கள்மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

❖ ஒருங்கிணைந்த சேவை மையங்கள் வாயிலாகவும், குழந்தை திருமணத் தகவல் கிடைக்கப் பெற்றவுடன் நேரடியாக களத்திற்குச் சென்று குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்படுகிறது.

❖ பல்வேறு கள அலுவலர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு

குழு ஏற்படுத்தப்பட்டு, கூட்டங்கள் நடத்தப்பட்டு, குழந்தைகளுக்கு இழைக்கப்படும் குற்றங்களை களைய, தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகிறது.

❖ *பெண் குழந்தைகளின் உயர் கல்வியை ஊக்கப்படுத்திடும் வகையிலும், குழந்தை திருமணத்தை அறவே தடுத்திடும் நோக்கிலும், பல்வேறு நலத் திட்டங்கள், பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும்போது பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

❖ *குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில், தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.*

❖ *சமூக வலைதளத்தில் ஒரு பிரிவாக இத்துறையின்மூலம் "தமிழ் மகளிர் குரல்-சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை" என்னும் தனிவலையொளி உருவாக்கப்பட்டு, விழிப்புணர்வு குறும்படங்கள், பொதுமக்கள் பார்வைக்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.*

2022 ஆம் ஆண்டில் 2,532 குழந்தை திருமணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

2.1.6 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் மற்றும் விதிகளின்மூலம் மூத்த குடிமக்களுக்கான சட்டப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரிப்பது 18 வயதிற்கு மேற்பட்ட அவர்களது குழந்தைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுகளின் கடமையாகும். ஒரு மூத்த குடிமகன் அல்லது பெற்றோர், தனது சொந்த சம்பாத்தியத்தில் இருந்தோ அல்லது அவருக்குச் சொந்தமான சொத்தில் இருந்தோ தன்னைப் பராமரிக்க முடியாத நிலையில், மூத்த குடிமக்களின் உடல் ஆரோக்கியம், மனநலம் மற்றும் சொத்துகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு பராமரிப்பு தீர்ப்பாயங்கள்மூலம் தீர்வு பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது.

[2023 ஏப்ரல் 17

சட்டத்தின் சிறப்பம்சங்கள்

❖ இச்சட்டம் மூத்த குடிமக்கள் மற்றும் ஈன்றெடுத்த, தத்தெடுத்த, மாற்றான் தந்தை அல்லது மாற்றாந்தாய் ஆகிய பெற்றோர் இருவரையும் உள்ளடக்கியுள்ளது.

❖ தங்கள் குழந்தைகள்/சட்டபூர்வ வாரிசுகளால் பராமரிக்கப்படாவிட்டால் பாதிக்கப்பட்ட எந்த மூத்தக் குடிமகனும் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள பராமரிப்பு தீர்ப்பாயங்களுக்கு மனு அளித்து அதிகபட்சம் ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- வரை பராமரிப்புத் தொகையாக பெற்றுக்கொள்ளலாம்.

❖ இச்சட்டத்தின்கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்பட்ட விண்ணப்பம் 90 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும்.

❖ மூத்த குடிமக்களுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கக்கூடிய கடமை உள்ளவர் அவர்களை கைவிட்டால், அவர்களுக்கு தண்டனையாக 3 மாதங்கள் சிறை தண்டனை அல்லது ரூ.5,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

❖ இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 31-12-2009 முதல் ஒரு பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தங்களை பராமரிப்பார்கள் என்ற நிபந்தனையுடன் சொத்துகளை தன் பிள்ளைகள் அல்லது வாரிசுதாரர்களுக்கு தான செட்டில்மெண்ட் செய்தபின், அவர்கள் அதன்படி நடக்காவிட்டால், பராமரிப்பு தீர்ப்பாயங்களில், அந்த தான செட்டில்மெண்டை இரத்து செய்யக் கோரி விண்ணப்பிக்கலாம்.

சட்டத்தின்கீழ் குறைதீர்க்கும் வழிமுறை பராமரிப்பு தீர்ப்பாயங்கள்

இச்சட்டத்தின் பிரிவு 5-ன்கீழ் வழக்கை தீர்ப்பதற்காகவும், முடிவு செய்வதற்காகவும் மற்றும் பராமரிப்பு ஆணை வழங்குவதற்காகவும், தமிழ்நாடு அரசானது இச்சட்டத்தின் பிரிவு 7-ன்கீழ் வருவாய்க் கோட்ட அலுவலர்களை பராமரிப்பு தீர்ப்பாயங்களாக நியமித்துள்ளது. இதுபோன்று 94 தீர்ப்பாயங்கள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. இத்தீர்ப்பாயத்திற்கு

2023 ஏப்ரல் 17]

உரிமையியல் நீதிமன்றங்களுக்கு இணையான அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சமரசம் மற்றும் பராமரிப்பு அலுவலர்

இச்சட்டத்தின்கீழ் மாவட்ட சமூக நல அலுவலர்களை சமரச மற்றும் பராமரிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர், எனினும் பாதிக்கப்பட்ட முதியவர் மற்றும் எதிர்தரப்பினர் இருவரும் சமரசம் செய்துகொள்ள விருப்பப்பட்டால், தீர்ப்பாயம் அவ்வழக்கை சமரச அலுவலருக்கோ அல்லது இருதரப்பினரும் ஏற்றுக்கொண்ட நபரையோ சமரச அலுவலராக நியமித்து, ஒரு மாத காலத்திற்குள் வழக்கிற்கு தீர்வு காண அவ்வழக்கிற்கு தொடர்பான ஆவணங்களை அனுப்பலாம்.

இச்சட்டத்தின் பிரிவு-18(1)-ன்கீழ் அரசு, மாவட்ட சமூக நல அலுவலரை பராமரிப்பு அலுவலராக நியமித்துள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர், பராமரிப்பு தீர்ப்பாயங்களிலோ அல்லது மேல்முறையீடு தீர்ப்பாயத்திலோ சம்மந்தப்பட்ட மூத்த குடிமக்கள் விரும்பினால், அவர்கள் சார்பில் தோன்றி அவர்கள் தரப்பு வாதத்தை உரைக்கலாம்.

மேல்முறையீடு தீர்ப்பாயம்

பராமரிப்பு தீர்ப்பாயத்தின் ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய மாநில அரசு, மாவட்ட ஆட்சியர்களை மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களாக நியமித்துள்ளது.

தீர்ப்பாயத்தின் ஆணைகளுக்கு எதிராக 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்றும் மேல்முறையீட்டாளர் தகுந்த காரணத்தினால், வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீடு செய்ய இயலவில்லை என்று கருதினால், மேல்முறையீட்டு தீர்ப்பாயம் 60 நாட்களுக்கு மேலான மேல்முறையீட்டு விண்ணப்பத்தினையும் ஏற்றுக்கொள்ளலாம்.

மாநில மற்றும் மாவட்ட அளவிலான மூத்த குடிமக்கள் நலக் குழு

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007-னை சிறப்பாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான உயர்மட்ட ஆலோசனைக் குழுவும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 17

திருநங்கைகளுக்கான சமூகச் சட்டம்

2.1.7 திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019

திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டமானது 2019 ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறைவேற்றப்பட்டது மற்றும் தமிழ்நாடு திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) விதிகள் டிசம்பர் 2022-ல் ஏற்படுத்தப்பட்டது.

சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- ❖ திருநங்கைகளின் அடையாளத்தை அங்கீகரிக்கவும், கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார பராமரிப்பு, சொத்து வைத்திருத்தல் மற்றும் விற்றல், பொது அல்லது தனியார் அலுவலகம் நடத்துதல், பொதுச் சேவைகள் மற்றும் சலுகைகளை அணுகி பெறுதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றில் பாகுபாடு காட்டுவதைத் தடை செய்ய இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.
- ❖ "மாற்று பாலினம் கொண்ட நபர்" மற்றும் 'திருநங்கைகள்' என்ற வரையறைகள் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளை உள்ளடக்கியதாக உள்ளன. (அப்படிப்பட்ட நபர் பாலின மாற்று அறுவை சிகிச்சை, ஹார்மோன் அல்லது பிற சிகிச்சையை மேற்கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் பொருந்தும்).
- ❖ இந்த சட்டமானது, சுயமாக உணரப்பட்ட பாலின அடையாளத்திற்கான உரிமையை வழங்குவதுடன், எந்த மருத்துவ அல்லது உடல் பரிசோதனையின் தேவையும் இல்லாமல், ஒரு திருநங்கை என 'அடையாளச் சான்றிதழை' மாவட்ட ஆட்சியர் வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.

2.2. திட்டங்கள்

2.2.1 மகளிர் நலன்

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 49.91% பெண்கள் உள்ளனர். பெண்கள் நலன் மற்றும் அதிகாரமளித்தல், மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளிக்கும்

2023 ஏப்ரல் 17]

செயல்முறைத் திட்டத்தில் எப்போதும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. சமுதாயத்தில் பெண்களுக்குத் தேவையான அங்கீகாரம், உரிமைகள், அதிகாரம், மற்றும் பாதுகாப்பு அளித்து அவர்களை மேம்படுத்தும் வகையில், பல்வேறு சமூகச் சட்டங்கள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம், நான்கு வகையான திருமண உதவித் திட்டங்கள், பணிபுரியும் மகளிர் விடுதிகள், மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், சேவை இல்லங்கள் ஆகியவை இத்துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூக நீதியை உறுதி செய்வதற்கும், பெண்களை வாழ்வில் அனைத்துத் துறைகளிலும் உள்ளடங்கிய தன்மையை மேம்படுத்துவதற்கும் இத்துறை பாடுபடுகிறது. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதை உறுதி செய்வதற்காக பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

2.2.1.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்

இம்முதன்மைத் திட்டம் 5-9-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண் குழந்தைகளுக்கு நிதியுதவி அவர்களின் உயர் கல்விக்கு வழங்குவதன்மூலம் இளம் வயது திருமணங்கள் குறைத்தல், உயர் கல்வி சேர்க்கை விகிதத்தை அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வி தொடர்ந்து பயில்வதை ஊக்குவித்தல் போன்றவையாகும். இத்திட்டமானது பெண்களுக்கு குறிப்பாக 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து தேர்ச்சி பெற்ற பெண்களுக்கு அதிகாரமளிக்க வழிவகை செய்கிறது.

திட்டத்தின் நோக்கங்கள்

i. *பெண்களுக்கு உயர் கல்வி பயிலுவதற்கு ஊக்கப்படுத்துவதன்மூலம் பாலின சமத்துவத்தை ஏற்படுத்தி, மாணவிகளுக்கு சமூக பொருளாதார ரீதியாக நல்ல அடித்தளம் அமைத்தல்.*

ii. *பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்து, அதில் பங்கேற்க செய்தல்.*

iii. *பெண் குழந்தைகள் கூடுதல் செலவினம் இல்லாமல், உயர் கல்வியைத் தொடர மாதாந்திர ஊக்கத் தொகையாக*

ரூ.1000/- அவர்களது வங்கி கணக்கில் நேரிடையாக வரவு வைக்கப்படுகிறது.

iv. பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தை தடுத்து, உயர் கல்வியினைத் தொடர ஊக்குவித்தல்.

v. பெண் குழந்தைகள் பொது நிகழ்வுகளில் பங்குபெறவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவுதல்.

vi. பெண்களின் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக அதிகாரமளித்தலை உறுதி செய்தல். இத்திட்டத்தின்கீழ் 2,09,365 மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.349.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.2.2 திருமண உதவித் திட்டங்கள்

திருமணம் என்பது பெண்களின் வாழ்வில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும் சமூக கட்டமைப்பாகும். எனினும் நடைமுறை வழக்கத்தில் உள்ள குழந்தை திருமணம் சமூகத்திற்கு சாட்டையடி போன்றதாகும். இளவயது கர்ப்பம் அதனால் ஏற்படும் உடல்நல சீர்கேடுகளை களைவதற்காகவும், பொருளாதார ரீதியாக உதவுவதற்கும் மகளிருக்கு நிதியுதவி வழங்கிட, நான்கு வகையான திருமண உதவி திட்டங்கள் செயல்படுத்தப்படுவதுடன் கலப்புத் திருமணங்கள் மற்றும் கைம்பெண்கள் மறுமணங்கள்மூலம் சமூக மாற்றங்களுக்கும், சமூக நீதிக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கலப்புத் திருமணம் செய்த தம்பதிகள், மறுமணம் செய்த கைம்பெண்கள், ஏழை விதவைகளின் மகள்கள், ஆதரவற்ற பெண்கள் ஆகியோர் இந்த நான்கு வகையான திருமண உதவித் திட்டங்களின்கீழ் பயனடைகிறார்கள்.

2.2.2.1 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்

சாதி அடிப்படையிலான பாகுபாடுகளை ஒழிக்கவும், சமூகங்களுக்கு இடையே சமத்துவத்தை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு 1968 ஆம் ஆண்டு முதல் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

2023 ஏப்ரல் 17]

இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்

1. ஆண்டு வருமான உச்ச வரம்பு இல்லை.
2. திருமணத்தின்போது மணமகள் 18 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.
3. பிரிவு-I: கலப்புத் திருமணம் செய்து கொண்ட புதுமணத் தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர்/பழங்குடியினராகவும் மற்றொருவர் வேறு சாதியினராக இருத்தல் வேண்டும்.
4. பிரிவு-II: கலப்புத் திருமணம் செய்து கொண்ட புதுமணத் தம்பதியரில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும் மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

விண்ணப்பதாரர் திருமணமாகி இரண்டாண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை	செலவிடப்பட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்)
2018-2019	2,322	1,651.12
2019-2020	1,886	1,890.35
2020-2021	1,637	1,654.65
2021-2022	2,461	1,922.75
2022-2023	2095	1922.85

2.2.2.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்

ஏழை இளம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் 1975 ஆம் ஆண்டு, விதவை மறுமணத்தின்மூலம் சமூகத்தில் அவர்களுக்கு கண்ணியம், மரியாதை மற்றும் அங்கீகாரத்தை உறுதி செய்வதற்கு தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்

1. மறுமணத்தின்போது மணமகளின் குறைந்தபட்ச வயது 20 ஆக இருக்க வேண்டும். மணமகனின் வயது 40-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

2. வருமான உச்சவரம்பு இல்லை.

3. விதவைச் சான்று, மறுமணம் செய்வதற்கான திருமண அழைப்பிதழ் மற்றும் வயதுச் சான்று ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

விண்ணப்பதாரர் மறுமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை	செலவிடப்பட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்)
2018-2019	32	19.12
2019-2020	39	20.64
2020-2021	34	22.83
2021-2022	32	19.15
2022-2023	27	24.07

2.2.2.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம்

ஏழை விதவை தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளின் திருமணத்தை நடத்திட நிதியுதவி வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் 1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்

1. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 17]

2. சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் விதவை உதவித் தொகை பெறுபவர்களுக்கு விதவைச் சான்று, வருமானச் சான்று தேவையில்லை.

3. மணப்பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கு உச்ச வயது வரம்பு ஏதும் இல்லை.

விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

விண்ணப்பங்கள் திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்கப்பட வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை	செலவிடப்பட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்)
2018-2019	5,622	3,455.02
2019-2020	4,555	3,549.93
2020-2021	2,387	2,935.45
2021-2022	4,892	3,841.31
2022-2023	4,319	3942.60

2.2.2.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்

ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்துகொள்ள உதவும் வகையில் 1985 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்

1. ஆதரவற்ற பெண்ணாக இருத்தல் வேண்டும்.

2. ஆண்டு வருமான உச்சவரம்பு இல்லை.

3. திருமணத்தின்போது மணப்பெண் 18 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.

விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

ஆண்டு	பயனடைந்தோர் எண்ணிக்கை	செலவிடப்பட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்)
2018-2019	634	404.20
2019-2020	635	416.96
2020-2021	538	424.21
2021-2022	647	489.89
2022-2023	571	504.44

மேற்காணும் நான்கு வகையான திருமண நிதியுதவித் திட்டங்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.219.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.2.3 மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணம்

கட்டணமில்லா பாதுகாப்பான பேருந்து பயணம் பெண்களை சுயசார்புடையவர்களாக ஆக்குவதற்கு அதிகாரமளிக்கிறது. இத்திட்டம் பெண்கள் தங்கள் உயர் கல்வியை தொடரவும், பணியிடத்திற்கு தாங்களாகவே பயணம் செய்யவும் உதவுகிறது. இதனால், தினசரி போக்குவரத்து செலவு கட்டணங்கள் சேமிக்கப்பட்டு, உணவு, உடை, கல்வி போன்ற பிற அத்தியாவசிய தேவைகளுக்கு செலவிடப்படுகிறது.

பெண்களுக்கான இந்தத் திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள பெண் பயணிகளுக்குப் பல வழிகளில் பெரிதும் பயனளித்து வருகிறது. நவம்பர் 2022 இல் மாநிலத் திட்டக் குழுவால் ஓர் ஆய்வு நடத்தப்பட்டு, பின்வரும் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 17]

1. போக்குவரத்திற்காக ஆகும் செலவினங்களை சேமிக்க உதவியுள்ளது.

2. பணிபுரியும் பெண்களின் சதவீதம் உயர்ந்துள்ளது.

3. பெண்கள் தங்கள் பயணம் மேற்கொள்ள குடும்ப உறுப்பினர்களை சார்ந்திருக்கும் நிகழ்வுகள் குறைந்து காணப்படுகிறது.

4. கற்றல் மற்றும் சமூக தொடரமைப்பில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

பணிபுரியும் மகளிர் மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவியர் ஆகியோர் 12-07-2021 முதல் 31-3-2023 வரை சுமார் 260.59 கோடி பாதுகாப்பான பயணங்களை மேற்கொண்டுள்ளனர். இத்திட்டத்தின்மூலம் திருநங்கைகள் 14.91 இலட்சம் பயணங்கள் மேற்கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

2.2.4 சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

சமூகத்தில் குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், கைம்பெண்கள் ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திக்கொள்ளும் வகையில், அவர்கள் சுயமாக தொழில் புரிவதற்கு இலவச மோட்டார் இணைக்கப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்துகொள்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2023–2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ1.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.2.5 மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் 18 வயது முதல் 40 வயது நிரம்பிய பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ் 125 மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 99 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

[2023 ஏப்ரல் 17

மற்றும் 1 திருநங்கையர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் சமூக நல இயக்குநர் நேரடிக் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன.

மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் தாங்கள் வசிக்கும் இடத்தில் இருந்துகொண்டே, தங்கள் இல்ல பணிகளின் ஊடே, பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைகள் தைக்கும் பணியினை தங்கள் முக்கிய பொருளாதார நடவடிக்கையாக மேற்கொள்கின்றனர்.

இக்கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் தைக்கப்பட்ட நான்கு இணை சீருடைகள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில், 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும், மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. இதைத் தவிர ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைகளின்கீழ் இயங்கும் பள்ளி, மாணவ/மாணவியர்களுக்கும் நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணி வருடந்தோறும் மேற்கொள்ளப்படுகிறது. இதனால், தையற் தொழிற் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம்

வ. எண்	கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை
1	மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	99	85,425
2	இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	25	1,086
3	திருநங்கையர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம்	1	68
மொத்தம்		125	86,579

2023 ஏப்ரல் 17]

2022–2023 ஆம் கல்வியாண்டில், 42.16 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்பட்டுள்ளன. இதற்கான தையல் கூலி ரூ.98.00 கோடி பள்ளிக் கல்வித் துறை வாயிலாக சமூக நலத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.2.6 மகளிர் சக்தி இயக்கம்

மகளிர் சக்தி இயக்கம் என்ற ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலை உறுதி செய்திடும் வகையில் பெண்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிப்பதை வலுப்படுத்துவதற்கு, செயல் இலக்கு முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியை மேற்கொள்வதற்காக 2025-2026 ஆம் ஆண்டு வரையிலான 15-வது சுழற்சி நிதிக் குழுவின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

மகளிர் சக்தி இயக்கம்-திட்டத்தின் உட்பிரிவுகள் (Sub Schemes of Mission Sakthi)

மகளிர் சக்தி இயக்கம் என்பது, பெண்களின் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் என்னும் இரு உட்பிரிவுகளை கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த சேவை மையம், மகளிர் உதவி எண் 181, பெண் குழந்தைகளை காப்போம்; பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் மற்றும் மகளிர் நீதிமன்றங்கள் ஆகியவை பெண்களின் பாதுகாப்பு தொடர்பான திட்டங்கள் ஆகும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தங்கும் இல்லங்கள், குறுகிய கால இல்லங்கள், பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள், பாலின வரவு-செலவுத் திட்டம் கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்படும் பிரதம மந்திரியின் நிதி உதவி திட்டம், தேசிய குழந்தைகள் காப்பகம் ஆகியவை பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் உட்பிரிவில் செயல்படுத்தப்படும் திட்டங்களாகும்.

மகளிர் சக்தி இயக்கம் திட்டத்தின் நோக்கங்கள் (Objectives Of Mission Sakthi)

1. *வன்முறையால் பாதிக்கப்பட்ட மற்றும் துயரத்திலுள்ள பெண்களுக்கு உடனடி உதவி, ஆதரவு, பராமரிப்பு மற்றும் உதவிகளை தொடர்ந்து வழங்குதல்*

2. தீங்குகள் மற்றும் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மற்றும் உதவிகள் தேவைப்படும் பெண்களுக்கு நேர்த்தியான செயல்முறைகளால் மீட்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு அளித்தல்

3. சமுதாயத்தில் நிலவும் சமூக தீமைகளை ஒழித்திட, மக்களிடையே அரசு நலத் திட்டங்கள் மற்றும் சட்ட விதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

4. பல்வேறு திட்டங்கள் மற்றும் சட்டங்கள் பற்றி செயல்பாட்டாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் திறன் மேம்படுத்துதல்

5. பாலினம் சார்ந்த இனத் தேர்வின்மூலம் கருக்கொலை தடுத்தல் மற்றும் அதன்மூலம் பெண் குழந்தைகளின் பிறப்பு, பாதுகாப்பு, கல்வி மற்றும் வளர்ச்சியினை உறுதி செய்தல்.

பெண்களுக்கு அதிகாரம் அளித்தலுக்கான மாநில மற்றும் மாவட்ட மையங்கள் (HEW)

ஒன்றிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் துறைகளிடையே பெண்களுக்கான திட்டங்களை ஒருங்கிணைப்பதே பெண்களுக்கு அதிகாரம் அளித்தலுக்கான சிறப்பு மையத்தின் நோக்கமாகும். பெண்களுக்கு அதிகாரம் அளித்தலுக்கான திட்டம் என்பது பல்வேறு நிறுவனங்களுடனும், திட்டங்களுடனும் பெண்களை இணைக்கவும், வழிகாட்டிடவும் உதவுவதாகும்.

மகளிர் சக்தி இயக்கம் திட்டத்தின் கீழுள்ள அனைத்து செயல்பாடுகளின் திட்ட மேலாண்மை அலகாக இம்மையம் செயல்படும். மாநில மற்றும் மாவட்ட அளவிலான பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான மையங்களில் நிர்வாக பணிகள் மேற்கொள்ள பணியாளர்களுடன், பாலினம், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு, நிதி சார்ந்த கல்வியறிவு மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவற்றிற்கு வல்லுநர்களும் பணியமர்த்தப்படுவர்.

கிராம ஊராட்சிகள் வரை பெண்களுக்கு அதிகாரம் அளித்தலுக்கான நடவடிக்கைகள், மாவட்ட மையங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும். ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பெண்கள் நலன் சார்ந்த திட்டங்கள் மற்றும் தொடர்புடைய

2023 ஏப்ரல் 17]

துறைகள் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களை ஒன்றிணைக்கும் இணையமாக மாவட்ட மையங்கள் செயல்படும்.

2.2.7 அனைத்து துறைகளிலும் பாலின வரவு-செலவுத் திட்ட பிரிவு உருவாக்கம்

பாலின வரவு-செலவுத் திட்டம் என்பது, பாலின ஏற்றத்தாழ்வுகளை சீர்ப்படுத்தி பாலின சமத்துவம் பெறுவதற்கான நிதி ஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான முக்கியமான உத்தியாகும். இது பாலின சமத்துவத்தை உறுதிபடுத்தவும், அதனை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதும், செயல்படுத்துவதும் மற்றும் கண்காணிப்பதும் ஆகும்.

அனைத்துத் துறைகளிலும் தனியே பாலின வரவு-செலவுத் திட்ட பிரிவு உருவாக்குவதற்கு 2022–2023-ல் அறிவிக்கப்பட்டுள்ளவாறு ஆணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டு, தனியே பாலின வரவு-செலவுத் திட்ட பிரிவு அமைத்திடுமாறு அனைத்துத் துறைகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.2.8 நிர்பயா நிதி

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம்மூலம் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கிடும் நோக்கில் நிர்பயா நிதி 2016 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. நிர்பயா நிதியின்கீழ் பாதுகாப்பான நகர திட்டம், சென்னை உட்பட 8 நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. பெருநகர சென்னை காவல் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர போக்குவரத்துத் துறை மற்றும் சமூக நலத் துறை ஆகிய நான்கு துறைகள்மூலம் 12 திட்டங்கள் செயல்படுத்திட, சென்னை பெருநகர மாநகராட்சிக்கு ரூ.425.06 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒன்றிய, மாநில அரசுகளிடையே 60:40 பங்களிப்புடன், 2018-2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் உதவி மைய சேவைகளை வலுப்படுத்திட சமூக நலத் துறைக்கு ரூ.12.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு வரை ரூ.9.72 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் பெறப்பட்டுள்ளது. உதவி மைய சேவைகளை 24 மணி

நேரமும் வழங்கிடும் வகையில், பணிமாற்று முறையில் கூடுதல் பணியாளர்களை அமர்த்தியும், சமூக வலைதளங்கள் மற்றும் வெளிப்புற செயல்பாடுகள்மூலம் மகளிர் உதவி எண் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட மின்னிலக்க குழுவை கொண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

துயரத்தில் இருக்கும் அனைத்துத் தரப்பு பெண்களின் தேவையை நிறைவேற்றிடும் வகையில், தொலைபேசி சேவையுடன், முகநூல், டிவிட்டர், இன்ஸ்டாகிராம், மின்னஞ்சல், குறுஞ்செய்தி போன்றவை வாயிலாகவும் அழைப்பு பெறப்பட்டு உதவிகள் வழங்கப்படுகின்றன. இச்சேவைகளுடன், பல்வேறு துறைகள்மூலம் பெண்களுக்கு தகவல்கள் பகிர்வு, சட்ட உதவி, ஆலோசனை, காவல் உதவி, மருத்துவ உதவி, தங்குமிடம் ஆகியவை அளிக்கப்படுகின்றன.

2.3. குழந்தை நலம்

2.3.1 தொட்டில் குழந்தை திட்டம்

பெண் சிசுக் கொலையை தடுப்பதற்காக தொட்டில் குழந்தை திட்டம் 1992 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டு நிராதரவாக விடப்பட்ட குழந்தைகள் மற்றும் பெற்றோரால் தாமாக ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள், சட்டப்பூர்வமாக தத்தெடுக்கப்படவும், சட்ட விரோத விற்பனையைத் தடுக்கவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

தொட்டில் குழந்தை திட்டம் தொடங்கியதில் இருந்து, மார்ச்-2023 வரை 5928 குழந்தைகள் பெறப்பட்டுள்ளனர் (ஆண்-1346, பெண்-4582)

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.79 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3.2 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்னும் புதுமையான திட்டம் பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழிப்பது, குழந்தை

2023 ஏப்ரல் 17]

திருமணங்களை தடுப்பது மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் பெண் குழந்தைகளுக்கு அதிக பணப் பலன்களை வழங்குவதற்காக இந்தத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டது.

திட்டத்தின் நோக்கங்கள்

- பெண் சிசுக்கொலையை தடுத்தல்
- குழந்தை திருமணங்களை தடுத்தல்
- பெண் கல்வியை மேம்படுத்துதல்
- ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்கை மட்டுப்படுத்துதல்
- சிறு குடும்ப முறையை ஊக்குவித்தல்
- குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல்

திட்டத்தின் வகைகள்	திட்டத்தில் பயன் பெற தேவையான தகுதிகள்
திட்டம்-I ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருப்பின் அக்குழந்தையின் பெயரில் ரூ.50,000/ வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்படுகிறது.	• குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்குள் இருக்க வேண்டும் • பெற்றோரில் ஒருவர் 40 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும்.
குழந்தையின் வயது 3 நிறைவடைவதற்குள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.	• குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை/இரு பெண் குழந்தைகள் மட்டும் இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்கக் கூடாது, எதிர் காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுக்கவும் கூடாது.

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 17

திட்டத்தின் வகைகள்	திட்டத்தில் பயன் பெற தேவையான தகுதிகள்
திட்டம் - II ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா ரூ.25,000/- வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்படுகிறது. இரண்டாவது குழந்தையின் வயது 3 நிறைவடைவதற்குள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க வேண்டும்	• விண்ணப்பிக்கும்போது குழந்தைகளின் பெற்றோர்/ பெற்றோரின் பெற்றோர் தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும் • இலங்கை தமிழ் அகதிகள் முகாம்களிலுள்ள பெண் குழந்தைகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. • வைப்பீடு செய்யப்பட்ட 5 ஆண்டுகளுக்குப்பின் புதுப்பிக்கப்படும்போது ஆண்டுதோறும் ரூ.1,800/- அந்தக் குழந்தையின்படிப்பு செலவிற்காக ஊக்க தொகையாக வழங்கப்படும். • பெண் குழந்தையின் 18 வயது நிறைவடைந்ததும், திரண்ட வட்டி விகிதத்துடன்கூடிய வைப்பு தொகை முதிர்வு தொகையாக பயனாளிக்கு உயர் கல்வி பயில வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 17]

திட்டத்தின் பயனாளிகள்

பயனாளிகள்	2022-2023		மொத்தம்	
	பெண் குழந்தைகள் (மார்ச் 2023 வரை)	தொகை (ரூ. கோடியில்)	பெண் குழந்தைகள்	தொகை (ரூ. கோடியில்)
வைப்பீடு தொகை	35,674	89.18	10,82,279	1794.77
முதிர்வுத் தொகை	66,383	146.40	1,23,058	313.02

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.92.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3.3 பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் (BBBP) திட்டம்

பெண்களுக்கு அதிகாரமளித்தலை குறிக்கும் முக்கிய குறியீடான குழந்தை பாலின விகிதம் குறைந்து வருவதை தடுத்திட, உடனடி தேவையாக 22 ஜனவரி 2015 அன்று "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்தை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது. குறைந்து வரும் பாலின விகிதம் என்பது பெண் குழந்தைகளை பிறக்கும் முன் பாலினம் அறிந்து அழிக்கப்படுவதையும், பிறந்த உடன் பெண் குழந்தைகளுக்கு வேற்றுமை காட்டுவதையும் குறிப்பதாகும்.

திட்டத்தின் நோக்கங்கள்

1. *பாலின பாகுபாடு அடிப்படையில் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதை தடுத்தல்.*
2. *பெண் குழந்தை உயிர் வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.*
3. *பெண் குழந்தையின் கல்வியினை உறுதி செய்தல் மற்றும் அவர்களது பங்கேற்பினை மேம்படுத்துதல்.*

[2023 ஏப்ரல் 17

திட்டத்தைச் செயல்படுத்துதல்

தமிழ்நாட்டில் பிறப்பு பாலின விகிதம் குறைவாக உள்ள கடலூர் மாவட்டத்தில் (896) 2015 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டில் மேலும் இத்திட்டம் அரியலூர், தருமபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டில், மகளிர் சக்தி இயக்கம் திட்டத்தின்கீழ், பெண் குழந்தைகளுக்கான திறன் மேம்பாடு, சிறந்த எதிர்காலத்திற்கான தொழில் ஆலோசனை, சிறுமிகளிடையே விளையாட்டு திறமைகளை அடையாளம் காண்பது போன்ற புதிதாக சேர்க்கப்பட்ட நோக்கங்களுடன் இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு உள்ளது.

பல்வேறு துறை அலுவலர்களால் களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், பாராட்டு கடிதம் வழங்குதல்மூலம் பெண் குழந்தை பிறப்பை கொண்டாடுதல், தாய்மார்களுக்கு சுகாதார பெட்டகம் வழங்குதல், மரக்கன்றுகள் வழங்குதல், பெண் மற்றும் ஆண் குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கையை தெரிவிக்கும் தகவல் பலகை பராமரித்தல், கையெழுத்து இயக்கம், மனித சங்கிலி, பேரணி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியரிடையே ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல், சுவரொட்டிகள், பதாகைகள் ஆகியவற்றை அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுவுதல் ஆகிய செயல்பாடுகள் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டங்களுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு

பிறப்பு பாலின விகித அடிப்படையில், ஏற்கெனவே செயல்பாட்டிலிருந்த 11 மாவட்டங்களுடன், மேலும் 27 மாவட்டங்களுக்கு இத்திட்டம் 2022-2023 ஆம் ஆண்டில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கென ரூ.1065.00 இலட்சம் சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைத்து

2023 ஏப்ரல் 17]

திட்டச் செயல்பாடுகளை மேற்கொள்ள ஒன்றிய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

மாநில மற்றும் மாவட்ட அளவிலான செயற்குழு

தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட மாநில செயற்குழு கூட்டம் வருடத்திற்கு ஒருமுறையும், மாவட்ட ஆட்சியர்களை தலைமையாகக் கொண்ட, மாவட்ட செயற்குழு கூட்டங்கள் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒரு முறையும் கூடி, திட்டச் செயல்பாடுகளை ஆய்விட்டு கண்காணித்து, திட்டத்தின் நோக்கங்களை அடைய புதிய வழிமுறைகளை தெரிவிக்கிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.4. மூத்த குடிமக்கள் நலன்

இந்தியாவில் சட்டப்படி 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் மூத்த குடிமக்கள் என்று அழைக்கப்படுவர். மூத்த குடிமக்கள் அறிவு மற்றும் அனுபவத்தின் பெட்டகமாகவும், சமுதாயத்தில் இன்றியமையாதவர்களாகவும் உள்ளனர். இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 'இந்தியாவில் முதியோர் 2021' அறிக்கையின்படி, 2031 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை 18.20 சதவீதமாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. அரசு அதன் மூத்த குடிமக்களுக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் சாதகமான சுற்றுச்சூழலை வழங்க உறுதி பூண்டும் இவற்றை செயல்படுத்த கூடும் சூழலை உருவாக்குவதற்கான சவால்களை தொடர்ந்து எதிர்கொண்டும் வருகிறது.

மூத்த குடிமக்களின் முழுமையான நலனை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு அரசு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்மூலம் ஆதரவற்ற மூத்த குடிமக்களின், அடிப்படை தேவைகளான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்கென முதியோர் இல்லங்கள், மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த வளாகங்கள், மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டங்கள் மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகளை வழங்குகிறது. மேலும், அனைத்து

[2023 ஏப்ரல் 17

மூத்த குடிமக்களுக்கும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளையும் நிறைவேற்றுகிறது.

2.4.1 மூத்த குடிமக்களுக்கான மாநில செயல் திட்டம்

மூத்த குடிமக்களின் நலனை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அடல் வயோ அபியுதய் யோஜனா திட்டத்தின்கீழ் மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல் திட்டத்தை 2019-2025 ஆம் ஆண்டுகளுக்கு உருவாக்கியுள்ளது. இச்செயல் திட்டம், மூத்த குடிமக்களின் நலனை உறுதி செய்வதற்காக மாநில அரசு தனது திட்டங்களை உள்ளூர் நிலைக்கேற்ப நிறைவேற்ற மாநில மூத்த குடிமக்களுக்கான செயல்திட்டத்தினை வடிவமைத்துக்கொள்ளும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்களுக்கான மாநில அளவிலான கீழ்க்கண்ட செயல் திட்டங்களை செயல்படுத்திட, ரூ.1,18,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வ. எண்	திட்டங்கள்	நிதி ஒதுக்கீடு (ரூ.)
1.	மூத்த குடிமக்களின் தரவு தளத்தை உருவாக்குதல்	25,00,000
2.	மூத்த குடிமக்களுக்கான செயலி உருவாகுதல்	15,00,000
3.	மூத்த குடிமக்களுக்கான விழிப்புணர்வு உருவாக்கும் திட்டம்	33,00,000
4.	திறன் மேம்பாடு	15,00,000
5.	நடமாடும் மருத்துவக் குழு-கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம்	30,00,000
	மொத்தம்	1,18,00,000

2.5 திருநங்கையர் நலன்

திருநங்கைகளும் சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதை நோக்கமாகக் கொண்டு சமூகத்தில் அவர்களை ஒருங்கிணைக்கும் விதத்தில் தமிழ்நாடு அரசு சிரத்தையுடன் செயல்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 17]

மேலும், தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு அரசால் 15-4-2008-ல் "திருநங்கைகள் நல வாரியத்தை" உருவாக்கி பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

2.6 இல்லங்கள் மற்றும் விடுதிகள்

2.6.1 அரசு சேவை இல்லங்கள்

தமிழ்நாடு அரசு சமூக நலத் துறையின்மூலம் செங்கல்பட்டு (தாம்பரம்), கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் ஏழைப் பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பாதுகாப்பு ஆதரவும் தேவைப்படும் விதவைகளுக்காக அரசு, சேவை இல்லங்களை நடத்தி வருகிறது. இந்த சேவை இல்லங்கள் உள்ளுறைவோர்களுக்கு தங்குமிடம், உணவு, கல்வி, மருத்துவ வசதிகள், கல்விச் சுற்றுலா மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றை வழங்குகின்றன. மேலும், ஆங்கில திறன் வளர்ப்பு, கணினிப் பயிற்சி, ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதல் ஆகிய வசதிகளும் சேவை இல்லங்களில் உள்ள உள்ளுறைவோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அரசு சேவை இல்லங்களில் தங்கி 12 ஆம் வகுப்பு முடித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளை ஊக்கப்படுத்திடும் வகையில், தொழிற்கல்வி பயின்றிட ரூ.50,000/- மற்றும் பட்டம்/பட்டயப் படிப்புகளுக்கு ரூ.30,000/-ம் அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

சேவை இல்லங்களில் தங்கியுள்ள பெண் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில், இந்த இல்லங்களில் 626 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.2 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்

தொழில்மயமாதல் மற்றும் நகரமயமாக்கல் ஆகியவை நகரங்களில் இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. எனவே, அவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியிடங்களில் தங்க வேண்டிய தேவை உள்ளது. இது

பணியிடங்களுக்கு அருகில் குறைந்த கட்டணத்தில் மற்றும் பாதுகாப்பான விடுதிகளை பணிபுரியும் இடங்களுக்கு அருகே கண்டறியும் அவசியத்தை அதிகரிக்கிறது. இத்தேவையை பூர்த்தி செய்வதற்கு மாநிலத்தில் 18 மாவட்டங்களில், 21 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் நடத்தப்படுகின்றன.

2023-2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.3 தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்

தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம், சிறப்பு திட்ட சாதனமாக (Special Purpose Vehicle) கடந்த 2018-2019 ஆம் நிதியாண்டில் நிறுவனங்கள் சட்டம், 2013-ன்படி, உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனம் மகளிர் தங்கும் விடுதிகள், குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம், குழந்தைகள் பராமரிப்பு நிறுவனம் ஆகியவற்றிற்கு நவீன வசதிகள் உடைய உட்கட்டமைப்பு அமைத்தல், மேலாண்மை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை ஏற்று நடத்துகிறது. சமூக நல இயக்குநரகமே இதனை செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமை ஆகும்.

- இத்திட்டத்தின் நோக்கமானது, வீட்டை விட்டு விலகி பணிக்காக வரும் பெண்களுக்காக தங்கும் விடுதிகளை கட்டி பாதுகாப்பு மற்றும் இனிமையான சூழலுடன் கூடிய விடுதிகளை குறைந்த கட்டணத்தில் ஏற்படுத்தி தருவதாகும்.
- விடுதிகளை உருவாக்குதல், புதுப்பித்தல், வடிவமைத்தல், கட்டுதல், மேம்படுத்துதல், செப்பனிடுதல் ஆகியவற்றை இந்த நிறுவனம் செய்து வருகிறது.

முதற்கட்டமாக, தாம்பரம், கூடுவாஞ்சேரி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.31.07 கோடி செலவினத்தில் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் கட்டும்பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் தாம்பரம் 467 படுக்கைகள், கூடுவாஞ்சேரி 158 படுக்கைகள் மற்றும் திருச்சிராப்பள்ளி 104 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக 532 மகளிர் பயன்பெறும் வகையில் தோராயமாக திட்ட செலவு ரூ.43.52 கோடியில் ஓசூர், திருவண்ணாமலை மற்றும் புனித தோமையார் மலை

2023 ஏப்ரல் 17]

(செங்கல்பட்டு) மற்றும் கிருஷ்ணகிரி, ஆகிய 4 இடங்களில் புதிய தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட உள்ளன.

சேலம், தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் சென்னையிலுள்ள அடையாறு மற்றும் வடபழனி ஆகிய 8 இடங்களில் தற்போதுள்ள தங்கும் விடுதிகளில் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்விடுதிகள் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய அறைகள், இன்வெர்ட்டர், வெந்நீர், கண்காணிப்பு கேமரா, இணைய இணைப்பு (அருகலை) பொருத்தப்பட்ட அறைகள், மற்றும் 24X7 பாதுகாப்பு சேவைகள் போன்றவற்றுடன் இயங்கும்.

இந்த விடுதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசால் மேம்படுத்தப்பட்ட புதிய பெயர் மற்றும் சின்னத்துடன் மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான தரத்துடன் பராமரிக்கப்படும். விண்ணப்பங்களின் பதிவு, சேர்க்கை மற்றும் வெளியேற்றம், கண்காணிப்பு மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல் ஆகியவை தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்தின்கீழ் இணையதள சேவைகள்மூலம் நிர்வகிக்கப்படும்.

2023–2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.4 குறுகிய கால இல்லங்கள்

குறுகிய கால இல்லங்கள் ஆதரவற்ற, கடினமான சூழ்நிலையில் 5 நாட்களுக்கும் மேலாக நிறுவன ஆதரவு தேவைப்படும் பெண்களுக்கு தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் பிற அத்தியாவசிய தினசரி தேவைகளை வழங்குகிறது. இத்திட்டம் குறுகிய கால இல்லங்கள் மற்றும் ஸ்வதார் இல்லங்கள் என்ற இரண்டையும் இணைத்து 2016 ஆம் ஆண்டு முதல் ஸ்வதார் கிரஹ் என்ற ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உள்ளுறைவோர்களின் வங்கி கணக்கில் மாதம் ஒன்றிற்கு ரூ.500/- வரவு வைக்கப்பட்டு அத்தொகையானது அவ்வுள்ளுறைவோர் இல்லத்தினை விட்டு செல்லும்போது வழங்கப்படுகிறது. தொழில் பயிற்சி மற்றும் மருத்துவ வசதிகள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு நலன்களை சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

அருகேயுள்ள ஒருங்கிணைந்த சேவை மையத்தின் (One Stop Center)மூலம் உள்ளுறைவோருக்கு தேவைப்படும் உளவியல், சமூக ஆலோசனை மற்றும் சட்ட உதவி போன்ற பிற சேவைகள் அளிக்கப்படுகிறது.

குறுகிய கால இல்லங்கள் திட்ட புதிய வழிகாட்டுதலின்படி, தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகிறது. இவ்வில்லங்களில் ஒரு இல்லத்தில் 50 பெண்கள் அதிகபட்சமாக 3 வருடங்கள் தங்கலாம். 3 வருடங்களுக்கு மேலானவர்களை உள்ளுறைவோராக தங்க வைக்க மாவட்ட நீதிபதி/மாவட்ட ஆட்சியர் அவர்களால் தீர்மானிக்கப்படுகிறது. 55 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அதிகபட்சமாக 5 வருடம் தங்க வைக்கப்பட்டு அதன்பின்னர் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்படுவர். ஆண் குழந்தைகள் 12 வயது வரையிலும், திருமணமாகாத பெண் குழந்தைகள் வயது வரம்பின்றி தங்கள் தாயாருடன் இவ்வில்லங்களில் தங்கலாம்.

இத்திட்டமானது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு முறையே 60:40 என்ற பங்களிப்பு விகிதத்தில் நிதி வழங்கப்பட்டு தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 33 குறுகிய கால இல்லங்கள் (ஸ்வதார் கிரஹ்) செயல்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பங்காக ரூ.3.35 கோடி மற்றும் மாநில அரசின் பங்காக ரூ.2.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.5 ஒருங்கிணைந்த சேவை மையம்

ஒருங்கிணைந்த சேவை மையங்கள் ஒன்றிய அரசின் 100% நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பங்களில், சமுதாயத்தில் மற்றும் பணிபுரியும் இடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒரே கூரையின்கீழ் ஒருங்கிணைந்த ஆதரவு மற்றும் உதவி அளித்திடும் வகையில் இம்மையங்கள் செயல்படுகின்றன.

மாநிலத்தில் தற்போது 39 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்படுகின்றன. பாலினம் சார்ந்த துன்புறுத்தல் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, உளவியல் ஆலோசனை, இலவச

2023 ஏப்ரல் 17]

சட்ட உதவி, காவல் உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் ஆகிய சேவைகள் வழங்கிட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை/ மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தனிக்கட்டடத்தில் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. திருவள்ளூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், மதுரை, சேலம், தூத்துக்குடி மற்றும் திண்டுக்கல் போன்ற மாநகராட்சி பகுதிகளுக்கு 9 கூடுதல் ஒருங்கிணைந்த சேவை மையங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2023 வரை, ஒருங்கிணைந்த சேவை மையங்கள்மூலம் 44,569 பெண்கள் பயனடைந்துள்ளனர் மற்றும் 3,941 பாதிக்கப்பட்ட பெண்கள் தற்காலிக தங்குமிட சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

வழங்கப்பட்ட சேவைகள் விவரம்

வ. எண்	பாதிப்பு தன்மையின் வகைகள்	நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை 2021	நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை 2022	நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை மார்ச் 2023 வரை
1	குடும்ப வன்முறை	4,751	5,984	2,101
2	பொது இடங்களில் துன்புறுத்தல்	160	243	183
3	குழந்தை திருமணம்	1,708	1,735	450
4	குழந்தைகள் தொடர்பானவை	81	167	59
5	திருமண உறவில் சிக்கல்கள்	1,238	1,868	900
6	மனநல பாதிப்பு	826	794	235
7	அச்சுறுத்தல்/ இணைய வழி குற்றம்	526	832	181

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 17

வ. எண்	பாதிப்பு தன்மையின் வகைகள்	நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை 2021	நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை 2022	நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை மார்ச் 2023 வரை
8	இதர உதவிகள்	755	1167	421
9	குடிப்பழக்கம்/ வன்முறை/ துன்புறுத்தல்	894	1392	50
மொத்தம்		10,939	14,182	4,580

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.12.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.6 சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கீழ்க்கண்ட நான்கு சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளை பராமரிக்கும் இல்லங்களுக்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது.

1. ஸ்ரீஅருணோதயம் அறக்கட்டளை, சென்னை
2. கம்யூனிட்டி ஹெல்த் எஜுகேஷன் சொசைட்டி, திருவள்ளூர்
3. பிரேமவாசம், காஞ்சிபுரம்
4. குழந்தைகள் குடும்பம், கோயம்புத்தூர்

தொட்டில் குழந்தை திட்டத்தின்கீழ் பெறப்படும் குழந்தைகள் தத்தெடுக்க விரும்பும் பெற்றோரால் பல்வேறு காரணங்களுக்காக, சில நேரங்களில் குறிப்பாக உடல் நல குறைபாடுகளுடன் இருக்கும்போது, அவர்கள் தத்தெடுக்கப்படுவதில்லை. இவ்வாறு சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளை பராமரிக்க மேற்காணும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் நான்கு சிறப்பு இல்லங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

2023 ஏப்ரல் 17]

தற்போது இவ்வில்லங்களில் 135 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ரூ.120/-வீதம் சிறப்புகவனம் தேவைப்படும் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக, தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.59.13 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.7 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு மாநில அரசு நிதியின்கீழ் மானியம் பெறும் முதியோர் இல்லங்கள்

தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்களை பாதுகாக்க, தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசு பராமரிப்பு மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கான மானியங்களின் பங்கு விகிதம் முறையே மாநிலம் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு இடையே 5:1 ஆகும். இவ்வில்லங்களில் உணவு, உடை, தங்குமிடம், சுகாதாரம், பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் ஈமகிரியைக்கான செலவினங்கள் போன்றவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லங்களிலும் 40 முதியோர்கள் தங்கி பயன்பெறலாம். ஒரு முதியோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,200/- உணவு மானியமாக வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில், 21 முதியோர் இல்லங்களில் 717 முதியோர்கள் பயனடைந்துள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.8 மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் நலனுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த சிறப்பு இல்லங்கள் 2011-2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஒருங்கிணைந்த வளாகங்கள் மாநில அரசின் நிதி உதவியுடன் மாநில அரசு மற்றும் தொண்டு நிறுவனத்திற்கிடையே 75:25 என்கிற பங்கு

விகிதத்தில் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்திலும் 25 முதியவர்கள் மற்றும் 25 குழந்தைகள் தங்க வைக்கப்படுகின்றனர். ஒரு முதியவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1200/- மற்றும் ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.900/- உணவு மானியமாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 2022-2023 ஆம் நிதியாண்டில், 45 ஒருங்கிணைந்த வளாகங்களில் 901 குழந்தைகள் மற்றும் 1,032 மூத்த குடிமக்கள் பயனடைந்துள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.16.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6.9 மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (IPSrC)

ஒன்றிய அரசு மாநில அரசின் பரிந்துரையுடன் பெறப்படும் முதியோர் நலத் திட்டங்களுக்கான மானியத்தை 90:10 என்ற விகிதத்தில் (ஒன்றிய அரசு:தன்னார்வத் தொண்டு நிறுவனம்) நேரடியாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 66 முதியோர் இல்லங்கள், ஒரு தொடர்ச்சியான பராமரிப்பு இல்லம், 2 இயன்முறை சிகிச்சையகம், 3 நடமாடும் மருத்துவக் குழு மற்றும் 1 மண்டல வளப் பயிற்சி மையத் திட்டங்களை மாநில அரசு பரிந்துரைத்துள்ளது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு 72 திட்டங்கள்மூலம் 3015 முதியோர் பயன்பெறும் வகையில் மானியங்களுக்காக ரூ.17.04 கோடி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2.7. ஆணையம் மற்றும் வாரியம்

2.7.1 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் ஒரு சட்ட ரீதியான அமைப்பாக 1993 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் தலைவர் மற்றும் ஏழு உறுப்பினர்களுடன் 2022 ஆம் ஆண்டு மறுகட்டமைக்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களின்கீழ் பெண்களை பேணுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு அமைப்புகள்

(Safe guards) தொடர்பான பொருள் குறித்து விசாரணை மேற்கொள்ளுதல் மற்றும் பரிசீலனை செய்கின்ற பணியையும் மகளிர் ஆணையம் மேற்கொள்கிறது.

அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய பெண்கள் தொடர்பான சட்டங்களின் உட்கூறுகள் பெண்களின் நலனுக்கெதிராக மீறப்படும்பட்சத்தில், அதனை உரிய அதிகார அமைப்புகளின் கவனத்திற்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் கொண்டு செல்வதோடு பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்திட ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் சரிவர செயல்படுத்தப்படாமலிருந்தாலோ அல்லது பெண்கள் நலன் தொடர்பான அரசின் கொள்கை முடிவுகள் சரிவர பின்பற்றப்படாமலிருந்தாலோ அது தொடர்பாக பெறப்படும் புகார்களையோ அல்லது சுயமாக கவனத்தில்கொண்டோ (suo moto), உரிய அதிகார அமைப்பிற்கு தக்க நடவடிக்கைக்காக பரிந்துரைக்கின்றது. பெண்களின் சமத்துவத்தையும் அவர்களின் மேம்பாட்டையும் உறுதி செய்கின்றது. பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்பு சட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்கின்றது.

பெண்கள் தங்கியிருக்கும் சிறைகள், விடுதிகள் மற்றும் பிற இடங்களை ஆய்வு செய்து, கண்டறியப்படும் குறைகளை நிவர்த்தி செய்ய ஏதுவாக, உரிய அதிகார அமைப்பின் கவனத்திற்கு கொண்டு செல்கின்றது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின்மூலம் குடும்ப வன்முறை, வரதட்சணை கொடுமை, பாலியல் வன்கொடுமை, பணியிடத்தில் பாலியல் துன்புறுத்துதல், ஆள் கடத்தல் மற்றும் பாதிப்பிற்குள்ளான பெண்களின் புகார் மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதோடு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கலந்தாய்வு கூட்டங்கள், கருத்தரங்கங்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாரத்தான் ஓட்டம் போன்ற பொது நிகழ்வுகள் மூலமாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சமுதாய மாற்றங்களை கொண்டு வரவும் இவ்வாணையம் சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.91.51 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 17

2.7.2 தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம்

திருநங்கைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார ஆதரவை வழங்குவதற்காக நலத் திட்டங்களை செயல்படுத்த திருநங்கைகள் நல வாரியம் 2008 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

திருநங்கைகள் நல வாரியத்தின்மூலம் பின்வரும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

I. அடையாள அட்டை

II. உயர் கல்விக்கான நிதி உதவி

III. தனிப்பட்ட மற்றும் வர்த்தகம்/தொழில் தொடர்பான திறன்கள் இரண்டையும் உள்ளடக்கிய திறன் பயிற்சி

IV. திருநங்கைகளின் சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோராண்டும் 200 பயனாளிகளுக்கு ரூ.50,000/- வீதம் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

V. பின்வரும் நலத் திட்டங்கள் பல்வேறு துறைகளுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

அ. குடும்ப அட்டை

ஆ. வீட்டுமனைப் பட்டா

இ. குடியிருப்பு வீடுகள்

ஈ. தையல் இயந்திரம்

உ. திருநங்கைகளுக்கான சுய உதவி குழுவை உருவாக்குதல் மற்றும் வங்கிகள்மூலம் கடன் இணைப்பு வழங்குதல்

VI. திருநங்கைகளுக்கான மாதாந்திர ஓய்வூதியத் திட்டம்

40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதாந்திர ஓய்வூதிய தொகை ரூ.1,000/-லிருந்து ரூ.1,500/-ஆக உயர்த்தி மார்ச் 2023 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 1,311 ஆதரவற்ற திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.

2023 ஏப்ரல் 17]

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

VII. *கட்டணமில்லா பேருந்து பயண வசதி.*

திருநங்கைகள் 12-07-2021 முதல் 31-3-2023 வரை 14.91 இலட்சம் பாதுகாப்பான பயணங்களைப் மேற்கொண்டுள்ளனர்

2.7.3 கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்

- *தமிழ்நாடு அரசு கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் உள்ளிட்டோருக்கு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தை 2022 ஆம் ஆண்டில் அமைத்துள்ளது.*
- *மேலும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற தேவையான திட்டங்களை செயல்படுத்தும்.*

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.94.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.8. குறை தீர்வு முறைகள்

2.8.1 மகளிர் உதவி எண் (181)

நாடு முழுவதும் ஒரே சீரான குறியீடு 181 மகளிர் உதவி எண், தமிழ்நாட்டில் டிசம்பர் 2018 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒன்றிய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் செயல்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்திடவும், தேவையான அல்லது நெருக்கடியான தருணங்களின் உடனடி மற்றும் அவசர கால உதவிகளை வழங்கிடவும், மகளிர் உதவி எண் 24X7 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. மகளிர் உதவி எண் மகளிர் சக்தி இயக்கம் திட்டத்தில் பெண்கள் பாதுகாப்பு உட்பிரிவின் ஓர் அங்கம் ஆகும்.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள அரசு திட்டங்கள் பற்றிய தகவல்களையும் மகளிர் உதவி மையம் வழங்குகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் (மார்ச் 2023 வரை) பெறப்பட்ட அழைப்புகள் விவரம் பின்வருமாறு:

தகவல் கோரும் அழைப்புகள்	பிற அழைப்புகள், தொடர் அழைப்புகள், ஆய்வு அழைப்புகள், வெற்று அழைப்புகள் முதலியன	நடவடிக்கை வேண்டி பதிவு செய்யப்பட்ட அழைப்புகள்	மொத்த அழைப்புகள்
6,891	67,304	36,671	1,10,866

மகளிர் உதவி எண் வாயிலாக நிறுவனம்/துறை வாரியாக வழங்கப்பட்ட பரிந்துரை சேவைகள்

வ. எண்	பரிந்துரைக்கப்பட்ட நிறுவனம் / துறை	எண்ணிக்கை
1.	ஒருங்கிணைந்த சேவை மையம்	16,992
2.	காவல் துறை	7,013
3.	இதர உதவி எண்	6,470
4.	இதர துறை பரிந்துரை	2,638
5.	இணையவழி குற்றம்	2,139
6.	இலவச சட்ட உதவி	869
7.	மாவட்ட சமூக நல அலுவலகம்	164
8.	மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம்	196
9.	ஆற்றுப்படுத்துதல்/ ஆலோசனை	190
	மொத்தம்	36,671

2.8.2 மூத்த குடிமக்கள் உதவி எண் (14567)

இந்தியா முழுவதிலும் செயல்படக்கூடிய தனித்துவமான மூத்த குடிமக்கள் இலவச உதவி எண் "14567" தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் ஒருங்கிணைப்புடன் ஒன்றிய அரசால் 28-4-2021 முதல் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை மூத்த குடிமக்களுக்கான ஆதரவை வழங்குவதற்காக தொடங்கப்பட்டது. மூத்தகுடிமக்கள்

2023 ஏப்ரல் 17]

உதவி எண் சேவையை வழங்கும் நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு 100 சதவீதம் நிதியுதவியை நேரடியாக வழங்குகிறது.

மூத்தகுடிமக்கள் உதவி எண் 14567மூலம் கீழ்க்காணும் சேவைகள் வழங்கப்படுகிறது:

- *மீட்பு உதவி*
- *முதியோர் இல்லங்கள் பற்றிய தகவல்கள்*
- *மூத்த குடிமக்கள் நலத் திட்டங்கள் பற்றிய தகவல்கள்*
- *மனநல ஆலோசனை*
- *பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச் சட்டம், 2007-னைக் குறித்த சட்ட வழிகாட்டுதல்.*

17-5-2021 முதல் 31-3-2023 வரை பெறப்பட்ட 1,11,798 அழைப்புகளில் 17,592 அழைப்புகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 94,206 அழைப்புகள் நடவடிக்கை தேவைப்படாத அழைப்புகளாகும். (தவறிய அழைப்புகள், தேவையற்ற அழைப்புகள், இவ்வுதவி மைய சேவைகளுக்கு அப்பாற்பட்ட அழைப்புகள், முதியோர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்ட அழைப்புகள்)

2.8.3 சத்துணவுத் திட்டம் குறை தீர்வு முறை

சத்துணவுத் திட்ட செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைய வழி செயலி (மென்பொருள்) மூலமாக தொடர்பு கொண்டு பொதுமக்கள் தங்களின் கருத்து மற்றும் புகார்களை தெரிவிக்கலாம்.

இணைய தள முகவரி http://www.middaymeal.tn.gov.in

இவ்வழியாக பெறப்படும் கருத்து மற்றும் புகார்களை பதிவு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாக குறிப்பிட்ட பள்ளியினை ஆய்வு செய்து குறைகள் இருப்பின், அவற்றினை விரைந்து நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[*2023 ஏப்ரல் 17*

2.9. விருதுகள்

2.9.1 பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான மாநில விருது (ஜனவரி 24)

பெண் குழந்தைகளின் திறன்களை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையிலும் பெண் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து செயல்படும் பெண் குழந்தைகளின் முயற்சியைப் பாராட்டும் வகையில் ஒவ்வோராண்டும் 18 வயதிற்குட்பட்ட ஒரு பெண் குழந்தைக்கு தேசிய பெண் குழந்தைகள் தினமான (ஜனவரி 24 ஆம் தேதி) அன்று மாநில விருது ஒன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரொக்கப் பரிசாக ரூ.1.00 இலட்சம் காசோலை மற்றும் பாராட்டுப் பத்திரம் உள்ளடக்கியதாகும். 2022-2023 ஆம் ஆண்டிற்கான இவ்விருது சேலம் மாவட்டத்தை சேர்ந்த சிறுமி ம. இளம்பிறை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.9.2 சிறந்த மாவட்டங்களுக்கான விருது (பிப்ரவரி 24)

தமிழ்நாடு மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமான பிப்ரவரி 24 அன்று ஒவ்வோராண்டும் பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டு, திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்கு சிறந்த மாவட்டங்களுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

2.9.3 அவ்வையார் விருது (மார்ச் 8)

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மத நல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றி மிக சிறந்து விளங்கும் ஒரு பெண்மணிக்கு, சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 ஆம் தேதி அன்று அவ்வையார் விருது ஒவ்வோராண்டும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வையார் விருது பெறுபவருக்கு 8 கிராம் (22 காரட்) எடையுள்ள தங்கப் பதக்கம், ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை, பொன்னாடை மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவை வழங்கி கௌரவப்படுத்தப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கான இவ்விருது நீலகிரி மாவட்டத்தைச்

2023 ஏப்ரல் 17]

சேர்ந்த டாக்டர் தமிழ்ச்செம்மல் புலவர் ஆர். கமலம் சின்னசாமி, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.9.4 திருநங்கை விருது (ஏப்ரல் 15)

திருநங்கைகளின் நலனுக்காக சிறந்த முன்மாதிரியான பணிகளைச் செய்து, தங்களது சொந்த முயற்சியால் வாழ்க்கையில் முன்னேறிய திருநங்கைகளை ஊக்குவிக்கும் வகையில், 2020 ஆம் ஆண்டு முதல் மாநில அளவிலான விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ஒவ்வோராண்டும் ஏப்ரல் 15 ஆம் நாளன்று "திருநங்கையர் தினத்தில்" ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.

2.9.5 சிறந்த சேவை புரிந்த நிறுவன விருது மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது (ஆகஸ்ட் 15)

ஒவ்வோராண்டும், சுதந்திர தினத்தன்று, பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய நிறுவனம் மற்றும் சிறந்த சமூக சேவகர் ஆகியோரை அங்கீகரிக்கும் பொருட்டு இவ்விருது வழங்கப்படுகிறது. மேலும், சிறந்த சமூக சேவகருக்கு 10 கிராம் (22 காரட்) எடையுள்ள தங்கப் பதக்கம், பொன்னாடை மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ரூ.50,000/- காசோலை, தங்கப் பதக்கம் மற்றும் பொன்னாடை வழங்கப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சமூக சேவகர் விருது டாக்டர் ஜி. பங்கஜம், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்கும், சிறப்பாக பணியாற்றிய நிறுவனத்திற்கான விருது வானவில் டிரஸ்ட், நாகப்பட்டினம் என்ற நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் - 3

3 (அ) முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

காலைச் சிற்றுண்டி வழங்குதல் தொடர்பாக தமிழக சட்டப் பேரவையில் சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 7-5-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவ/மாணவியருக்கு அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று

அறிவிக்கப்பட்டு 15-9-2022 முதல் முன்னோடி திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்பொழுது 1,969 பள்ளிகளில் பயிலும் 1,54,108 மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறிக்கோள்கள்

- மாணவ, மாணவியர் பசியின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல்.
- மாணவ, மாணவியர் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தலை உறுதி செய்தல்.
- மாணவ, மாணவியரின் ஊட்டச்சத்து நிலையினை உயர்த்துதல் – குறிப்பாக இரத்தசோகை குறைபாட்டினை நீக்குதல்.
- பள்ளிகளில் மாணவ, மாணவியரின் வருகையை அதிகரித்தல்/கல்வித் திறனை அதிகரித்தல்.
- வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச் சுமையினை குறைத்தல்.

உணவு வகைகள்

திங்கட்கிழமை உப்புமா வகை	செவ்வாய்கிழமை கிச்சடி வகை	புதன்கிழமை- பொங்கல் வகை
ரவா உப்புமா + காய்கறி சாம்பார் (அல்லது)	ரவா காய்கறி கிச்சடி (அல்லது)	ரவா பொங்கல்+ காய்கறி சாம்பார் (அல்லது)
சேமியா உப்புமா+ காய்கறி சாம்பார் (அல்லது)	சேமியா காய்கறி கிச்சடி (அல்லது)	வெண்பொங்கல் + காய்கறி சாம்பார்
அரிசி உப்புமா+ காய்கறி சாம்பார் (அல்லது)	சோள காய்கறி கிச்சடி (அல்லது)	-
கோதுமை உப்புமா+ காய்கறி சாம்பார்	கோதுமை காய்கறி கிச்சடி	-

2023 ஏப்ரல் 17]

வியாழக்கிழமை உப்புமா வகை	வெள்ளிக்கிழமை இனிப்பு
சேமியா உப்புமா+ காய்கறி சாம்பார் (அல்லது)	ஏதாவது ஒரு கிச்சடியுடன் இனிப்பு வகை
அரிசி உப்புமா+ காய்கறி சாம்பார் (அல்லது)	ரவா கேசரி (அல்லது)
ரவா உப்புமா + காய்கறி சாம்பார் (அல்லது)	சேமியா கேசரி
கோதுமை உப்புமா + காய்கறி சாம்பார்	-

திட்டத்தை செயல்படுத்திடும் முறை

❖ இத்திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

❖ சென்னை தவிர, பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், நகராட்சி நிர்வாக துறைமூலம், ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ மேலும் கிராம-ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்மூலம் சம்மந்தப்பட்ட கிராம பஞ்சாயத்து/சுய உதவி குழுமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ நகர்ப்புறங்களில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாகவும், கிராமப்புறங்களில் சுய உதவிக் குழுக்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறப்பு முயற்சிகள்

❖ ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலரை நியமித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

❖ காலை உணவு திட்டத்தினை கண்காணிப்பதற்கு பிரத்யேகமாக ஒரு செயலி உருவாக்கப்பட்டு உடனுக்குடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 17

- ❖ கிராமப் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ நகர்ப்புறப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சமையற்கூடங்கள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் இத்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.500.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3 (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்

இந்திய திருநாட்டில் தமிழ்நாட்டில் மட்டுமே இத்திட்டம் முதன் முதலாக சென்னை பெருநகர மாநகராட்சியில் 1925 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. பின்னர் 1962 ஆம் ஆண்டில் இத்திட்டம் முன்னாள் முதல்வர் திரு. கே. காமராஜ் அவர்களால் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 1982-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் துவங்கப்பட்டது. சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கான புரதச் சத்தை அதிகப்படுத்துவதற்காக சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 1989 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில், அனைத்து அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட மையங்களிலும் சத்துணவு வழங்கப்படுகிறது. தொடக்கப்பள்ளி, உயர் தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு சூடான ஊட்டச்சத்து மிகுந்த 13 வகையான கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

திட்டத்தின் நோக்கங்கள்

1. அனைத்துப் பள்ளி செல்லும் குழந்தைகளும் முறையாக பள்ளிக்குச் செல்வதை ஊக்குவித்தல்.

2023 ஏப்ரல் 17]

2. மாணவர் சேர்க்கையினை அதிகரித்தல் மற்றும் பள்ளி இடைநிற்றலைத் தடுத்தல்.

3. அனைவருக்கும் ஆரம்ப கல்வி வழங்குதலைஉறுதிசெய்தல்.

4. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துதல் மற்றும் எழுத்தறிவு விகிதத்தினை அதிகரித்தல்.

5. சத்துணவுத் திட்டத்தில் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்குவதின்மூலம் பெண்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

i. 5-9 வயதுடைய தொடக்கப் பள்ளி குழந்தைகள் மற்றும் 10-15 வயதுடைய உயர் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி குழந்தைகளுக்கு சுவையான, சூடான சத்தான கலவை சாதம் மற்றும் மசாலா முட்டையுடன் மொத்தம் 220 வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது.

ii. வேலூர் மாவட்டத்தில் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் (NCLP)மூலம் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு வருடத்தில் 312 நாட்களுக்கு சுவையான, சூடான, சத்தான கலவை சாதம் மசாலா முட்டையுடன் வழங்கப்படுகிறது.

iii. உணவு உரிமை விதிமுறைகளின்படி (அரிசி) தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு (1 முதல் 5-ம் வகுப்பு வரை) ஒரு குழந்தைக்கு 100 கிராம் அரிசி மற்றும் உயர் தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் (6–10-ம் வகுப்பு வரை) பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராம் அளவு அரிசி என்ற கணக்கீட்டின்படி நாளொன்றுக்கு வழங்கப்படுகிறது.

பள்ளி சத்துணவு மையங்களில் பயனாளிகளின் விவரம் 2022-2023

வ. எண்	பள்ளிகளின் வகைகள்	மையங்களின் எண்ணிக்கை	மாணவ மாணவியர் எண்ணிக்கை
1.	தொடக்கப் பள்ளி	26,937	22,49,700

வ. எண்	பள்ளிகளின் வகைகள்	மையங்களின் எண்ணிக்கை	மாணவ மாணவியர் எண்ணிக்கை
2.	உயர் தொடக்கப் பள்ளி	*16,127*	*15,37,879*
3.	9 ஆம் (ம) 10 ஆம் வகுப்பு		*6,84,381*
4.	தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்	*30*	*519*
மொத்தம்		*43,094*	*44,72,479*

நிதி ஒதுக்கீடு

(ரூபாய் கோடியில்)

வ. எண்.	ஆண்டு	மொத்த நிதி ஒதுக்கீடு	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு
1.	*2021-2022*	*1974.37*	*449.68*	*1524.69*
2.	*2022-2023*	*2076.88*	*470.94*	*1605.94*
3.	*2023-2024*	*2655.26*	*479.04*	*2176.22*

அத்தியாயம் - 4

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

"குழந்தைகள் மற்றும் பெண்களின் வாழ்க்கைத் தரமே சமுதாயம் மற்றும் தேச வலிமையின் உண்மையான குறியீடுகளாகும்"

கோபி அனான்,
முன்னாள் பொதுச் செயலாளர்
ஐக்கிய நாடு அமைப்பு

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS), உலகளவில் மிகப் பெரிய சமூக முன்னேற்றத்திற்கான தனித்துவமான திட்டமாகும். பிறந்தது முதல் 6 வயது வரையிலான குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்காக குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான நலத் திட்டமான

2023 ஏப்ரல் 17]

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைபாட்டினைக் களைதல் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியினை உறுதி செய்தல், கர்ப்பிணிகள் மற்றும் தாய்மார்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

ஊட்டச்சத்து குறைபாட்டினைக் குறைப்பதற்காக, தொழிற்நுட்பம் மற்றும் ஜன் அந்தோலன் (மக்கள் இயக்கம்) மூலம் இலக்கு அணுகு முறையினை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்படும், முழுமையான ஊட்டச்சத்துக்கான பிரதம மந்திரியின் (போஷன் அபியான்) திட்டம் 2017-2018 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் போஷான் 2.0-ன்கீழ் அங்கன்வாடி சேவைகள் திட்டம் 15-வது நிதிக் குழுவின் காலத்தில் 2021-2022 முதல் 2025-2026 வரை செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது மற்றும் 2022-2023-ல் அங்கன்வாடி சேவைகள், போஷான் 2.0-ன் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது ஊட்டச்சத்து சேவை, விநியோகம் மற்றும் மக்களை சென்றடைதல் ஆகியவற்றை வலுப்படுத்தும் ஒரு திட்டம்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்

- *குழந்தையின் சரியான உளவியல், உடல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தல்*
- *ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்*
- *இறப்பு, நோயுறும் தன்மை, ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் பள்ளி இடைநிற்றல் நிகழ்வுகளைக் குறைத்தல்*
- *குழந்தை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக பல்வேறு துறைகளுக்கு இடையே ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் செயலாக்கத் திட்டத்தினை ஏற்படுத்துதல்*
- *முறையான சமூகக் கல்விமூலம் குழந்தையின் இயல்பான ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சித் தேவைகளைக் கவனிக்கும் தாயின் திறனை மேம்படுத்துதல்*

- நாட்டின் மனித வள மேம்பாட்டிற்கு பங்களித்தல்
- நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய, குறிப்பாக SDG 2 பசியைப் போக்குதல், மற்றும் SDG 4 அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கச் செய்தலில் பங்களித்தல்
- ஊட்டச்சத்துக் குறைபாட்டின் சவால்களை எதிர்கொள்ளுதல்
- நிலையான ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான ஊட்டச்சத்து விழிப்புணர்வு, நல்ல உணவுப் பழக்கம் மற்றும் சுகாதார நடைமுறைகளை ஊக்குவித்தல்
- ஊட்டச்சத்து தொடர்பான குறைபாடுகளை சிறப்பு உத்திகள்மூலம் நிவர்த்தி செய்தல்

4.1 திட்டப் பயனாளிகள்

குழந்தைகள் மற்றும் பெண்கள் இத்திட்டத்தின் பயனாளிகள் ஆவர். முதன்மைப் பயனாளிகளான ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 14 முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்கள் இத்திட்டப் பயன்களான துணை உணவு, வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் ஊக்குவிப்பு, நோய்த்தடுப்பு, சுகாதாரப் பரிசோதனை, பரிந்துரை சேவைகள், ஊட்டச்சத்து போன்ற பலன்களைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். ஒரு பகுதியின் விரிவான கணக்கெடுப்புக்குப் பிறகு, தகுதியுள்ள பயனாளிகள் எவரும் விடுபடாத வகையில் பயனாளிகள் கண்டறியப்பட்டு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

4.2 சேவைகள்

அங்கன்வாடி சேவைகள் திட்டம் பயனாளிகளுக்கு, பின்வரும் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில் வழங்குகிறது:

i. துணை ஊட்டச்சத்து

ii. முறைசாரா முன்பருவக் கல்வி

iii. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி

2023 ஏப்ரல் 17]

iv. நோய்த்தடுப்பு

v. சுகாதார பரிசோதனை

vi. பரிந்துரை சேவைகள்

ஆறு சேவைகளில் நோய்த்தடுப்பு, சுகாதார பரிசோதனை மற்றும் பரிந்துரை சேவைகள் ஆகிய மூன்றும் தேசிய சுகாதார இயக்கம் மற்றும் பொது சுகாதார உள்கட்டமைப்புமூலம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் வழங்கப்படுகின்றன.

பயனாளி வாரியாக சேவைகள் விவரம்

வ. எண்	வகை	வழங்கப்படும் சேவைகள்
1	இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள்	• துணை உணவு • நோய்த்தடுப்பு • சுகாதார பரிசோதனை • பரிந்துரை சேவைகள்
2	இரண்டு முதல் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள்	• துணை உணவு • நோய்த்தடுப்பு • சுகாதார பரிசோதனை • பரிந்துரை சேவைகள் • முறைசாரா முன்பருவக் கல்வி
3	கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்	• துணை உணவு • நோய்த்தடுப்பு • சுகாதார பரிசோதனை • பரிந்துரை சேவைகள் • ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி
4	14 முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்கள்	• ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி

[2023 ஏப்ரல் 17

4.3 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

இத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:

I. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முன்னேற விழையும் மாவட்டங்களில் உள்ள 14 முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பெண்கள் ஆகியோர் இத்திட்டப் பயனாளிகள் ஆவர்.

II. இந்தத் திட்டம் சாதி, மதம் மற்றும் வருமான அளவுகோல்களைப் பொருட்படுத்தாமல், அனைத்து இலக்குப் பயனாளிகளுக்கும் பயனளிக்கும் வகையில் உள்ளது. இத்திட்டப் பயன்களைப் பெற பயனாளிகள் ஆதார் அடையாள அட்டையுடன் அருகிலுள்ள குழந்தைகள் மையத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பதே ஒரே நிபந்தனை ஆகும். இருப்பினும், குழந்தையின் ஆதார் அட்டை கட்டாயத் தேவையல்ல. தாயின் ஆதார் அட்டையைப் பயன்படுத்தி பலன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

III. பயனாளிகளுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் துணை ஊட்டச்சத்து மற்றும் பிற சேவைகள் வழங்குவதை உறுதி செய்வது, அங்கன்வாடிப் பணியாளர், மேற்பார்வையாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட திட்ட அலுவலர் ஆகியோரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

IV. வளர்ச்சி அளவீடு அதாவது அனைத்து குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை அறிவதற்காக குழந்தையின் உயரம்/நீளம், மற்றும் எடை ஆகியவை அளக்கப்பட்டு குழந்தை, சரியான ஊட்டச்சத்து நிலை, எடைக் குறைவு, உயரக் குறைவு, கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாட்டில் உள்ளதா என்று அறியப்படுகிறது.

V. தேசிய சுகாதார இயக்கம்/பொது சுகாதார உள்கட்டமைப்பு வாயிலாக சுகாதார பரிசோதனை/ பரிந்துரை சேவைகள், கிராம சுகாதார செவிலியர் (VHN)/ துணை செவிலியர்களால் வழங்கப்படுகிறது. குறிப்பாக,

2023 ஏப்ரல் 17]

குழந்தைகள் மையங்களில் பின்வரும் சுகாதாரம் மற்றும் பரிந்துரை சேவைகள் வழங்கப்படுகின்றன.

- இரும்புச் சத்துத் திரவம்-1 மி.லி வாரத்திற்கு இரண்டு முறை.
- கர்ப்பிணிகள் மற்றும் தாய்மார்களுக்கு இரும்புச்சத்து மாத்திரைகள்.
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 6 மாதத்திற்கு ஒருமுறை குடற்புழு நீக்க மாத்திரை மற்றும் வைட்டமின் 'ஏ' சப்ளிமெண்ட்
- கர்ப்பிணிப் பெண்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை.
- வயிற்றுப்போக்கு மேலாண்மை
- கர்ப்பிணிப் பெண்களுக்கு, இரண்டு Td (டெட்டனஸ் மற்றும் டிப்தீரியா) ஊசிகள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் சுகாதார அட்டவணையின்படி வழங்கப்படுகின்றன.
- கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் (SAM) மருத்துவமனை அல்லது ஊட்டச்சத்து மறுவாழ்வு மையத்திற்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்
- நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

4.4 குழந்தைகள் மையங்கள் அமைக்க வரைமுறை

கிராம அளவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட சேவைகளை வழங்குவதில் முதல் நிலை சேவை மையமாக குழந்தைகள் மையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் அங்கன்வாடிப் பணியாளர் முக்கிய பணியாற்றுகிறார். கிராமப்புற/நகர்ப்புறங்களில், 400 முதல் 800 மக்கள் தொகைக்கு, ஒரு முதன்மை குழந்தைகள் மையமும், 150 முதல் 400 மக்கள் தொகைக்கு, ஒரு குழந்தைகள் குறு மையமும் நிறுவப்பட்டுள்ளது. பழங்குடியினர் பகுதிகளில், 300 முதல் 800 மக்கட் தொகை உள்ள இடங்களில் ஒரு முதன்மை குழந்தைகள் மையமும், 150 முதல் 300 மக்கட் தொகை கொண்ட இடங்களில் ஒரு குழந்தைகள் குறு மையமும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது, மாநிலத்தில் 49,499 முதன்மை குழந்தைகள் மையங்களும்,

4,940 குழந்தைகள் குறு மையங்களும் என மொத்தம் 54,439 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் அங்கன்வாடிப் பணியாளருக்கு உதவியாளர் உதவுகிறார். மையத்தின் செயல்பாடுகள் மேற்பார்வையாளரால் கண்காணிக்கப்பட்டு, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரிடம் அறிக்கை அளிக்கப்படுகிறது, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திட்ட அளவில் திட்டப் பணிகளை செயல்படுத்த பொறுப்பேற்கிறார்.

4.5 திட்ட செலவினம்/ நிதி ஒதுக்கீடு - 2023-2024

(ரூபாய் கோடியில்)

மொத்த திட்ட செலவினம்	ஒன்றிய அரசு பங்கு	மாநில அரசு பங்கு	மாநில அரசின் தனிப்பட்ட பங்கு	மாநில அரசின் மொத்த பங்கு (3 + 4)
(1)	(2)	(3)	(4)	(5)
2,765.90	747.65	754.42	1,263.83	2,018.25

ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்கு முறையே 27% மற்றும் 73%

4.6 திட்டப் பயனாளிகள்

பயனாளிகள் வகை	பயனாளிகளின் எண்ணிக்கை
6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள்	4,07,260
1–2 வயது குழந்தைகள்	6,74,690
2–3 வயது குழந்தைகள்	7,04,686
3–6 வயது குழந்தைகள்	7,36,737
மொத்தம்	25,23,373
கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்	6,82,073
வளரிளம் பெண்கள் (முன்னேற விழையும் மாவட்டங்களில் உள்ள 14–18 வயது பெண்கள்)	46,063
மொத்த பயனாளிகள்	32,51,509

மாதாந்திர முன்னேற்ற அறிக்கை – பிப்ரவரி 2023.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

4.7 "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதை உறுதிசெய்யவும் "ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழ்நாடு" என்ற நிலையை அடையவும் 110 விதியின்கீழ் 7-5-2022 அன்று ஊட்டச்சத்தை உறுதி செய் என்ற சீர்மிகு திட்டத்தை அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ், பிறந்தது முதல் 6 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளின் எடை மற்றும் உயரம் அளவீடு செய்து அவர்களின் ஊட்டச்சத்து நிலையினை கண்டறிந்து தேவையானவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை மற்றும் சிறப்பு ஊட்டச்சத்து அளித்து இயல்புநிலைக்கு கொண்டுவருவதே தலையாய நோக்கமாகும்.

அதனடிப்படையில் திட்டப் பயனாளிகளான 6 வயதிற்குட்பட்ட 37.27 இலட்சம் குழந்தைகளின் உயரம் மற்றும் எடை எடுக்கப்பட்டு ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகள் கண்டறியப்பட்டனர்.

பின்னர் RBSK *குழுவினரால், குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு மருத்துவர்களின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தேவையான மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் 43,299 குழந்தைகளுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.*

6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 93,200 குழந்தைகளுக்கு அரசு, UNICEF-*னால் பரிந்துரைக்கப்பட்ட உடனடியாக பயன்படுத்தக்கூடிய மருத்துவ உணவினை* (RUTF) *வழங்கி வருகிறது. மேலும், தாய்ப்பால் வழங்குவதை மேம்படுத்தும் பொருட்டு, பிறந்தது முதல் 6 மாதங்கள் வரையிலான கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 11,917 குழந்தைகளின் தாய்மார்களுக்கு தலா 2 ஊட்டச்சத்து பெட்டகங்களும், மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 16,415 குழந்தைகளின் தாய்மார்களுக்கு தலா ஒரு ஊட்டச்சத்து பெட்டகமும் வழங்கப்பட்டுள்ளது.*

இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு அரசு ரூ.27.36 கோடி நிதி வழங்கியுள்ளது.

[2023 ஏப்ரல் 17

4.8 துணை ஊட்டச்சத்து திட்டம்

இத்திட்டத்தின் பயனாளிகளான குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் சமச்சீர் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத்திற்கு கூடுதல் ஊட்டச்சத்து அவசியமாகும். எனவே, இவர்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட உணவுத் தேவை (RDA) மற்றும் சராசரியாக நாள் ஒன்றுக்கு உட்கொள்ளப்படும் உணவு (ADI) ஆகியவற்றுக்கு இடையேயான குறைபாட்டினை ஈடு செய்யும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் துணை உணவு வழங்குவது முதன்மை திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

துணை ஊட்டச்சத்து திட்டம் இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது.

1. சத்துமாவு
2. சூடான சமைத்த உணவு

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி குழந்தை வளர்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு ஆண்டொன்றுக்கு 300 நாட்களுக்கு துணை ஊட்டச்சத்து உணவு வழங்கப்பட வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட செலவினம் மற்றும் ஊட்டச்சத்து விவரம்

பயனாளிகளின் வகைகள்	நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்பட வேண்டிய ஊட்டச்சத்து அளவு		நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கான செலவினம் (ரூபாய்)
	புரதம் (கிராம்)	சக்தி (கி. கலோரி)	
6 மாதம் முதல் 6 வயது வரை குழந்தைகள்	12-15	500	8.00
6 மாதம் முதல் 6 வயது வரை கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள்	20-25	800	12.00

2023 ஏப்ரல் 17]

பயனாளிகளின் வகைகள்	நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்பட வேண்டிய ஊட்டச்சத்து அளவு		நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கான செலவினம் (ரூபாய்)
	புரதம் (கிராம்)	சக்தி (கி. கலோரி)	
கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்	18-20	600	9.50
14 – 18 வயது வரையிலான வளரிளம் பெண்கள்	18-20	600	9.50

4.8.1 சத்துமாவு

ஒரு குழந்தையின் வயது 6 மாதம் நிறைவடையும்போது, தாய்ப்பாலின்மூலம் கிடைக்கபெறும் ஊட்டச்சத்தினைவிட, அக்குழந்தைக்கான இணை ஊட்டச்சத்து தேவை அதிகரிக்கிறது. எனவே, தாய்ப்பாலுடன் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்கு துணை உணவு வழங்குதல் மிகவும் அவசியம் ஆகும். எனினும் குழந்தையின் 2 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயது வரை தாய்ப்பால் கொடுப்பதைத் தொடர வேண்டும்.

BIS 11536:2022 தரத்திலான சத்துமாவு

குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துமாவின் தரத்தினை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசினால் வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரையின்படி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த சத்துமாவு BIS 11536 : 2022 தர நிலைக்கு உயர்த்தப்பட்டு ஜனவரி 2023 முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்த வல்லுநர் குழு கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கர்ப்ப காலத்தில் ஏற்படும் நீரிழிவு நோய் மற்றும் அவர்களின் உடல் நலத்தினை கருத்திற்கொண்டு

தாய்மார்களுக்கென சத்துமாவு கலவையினை பரிந்துரைத்தது. இப்புதிய கலவையிலான சத்துமாவு ஜனவரி 2023 முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

குழந்தைகளுக்கான சத்துமாவின் கலவை விவரம்

வ. எண்	மூலப்பொருட்கள்	சதவீதம்
1	வறுத்த கோதுமை மாவு	45.50
2	முளைக்கட்டிய கேழ்வரவு மாவு	5.00
3	கொழுப்பு நீக்கப்படாத சோயா மாவு	16.50
4	வெல்லம்	24.00
5	வறுத்த நிலக்கடலை மாவு	8.00
6	வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை	1.00
	மொத்தம்	100.00

மேற்கண்ட 100 கிராம் சத்துமாவு கலவையில் குறைந்தபட்சம் 400 கிலோ கலோரி ஆற்றல் மற்றும் 15 கிராம் புரதச்சத்து உள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான சத்துமாவின் கலவை விவரம்

வ. எண்	மூலப்பொருட்கள்	சதவீதம்
1	வறுத்த கோதுமை மாவு	45.50
2	வறுத்த கடலைப்பருப்பு மாவு	10.00
3	வறுத்த உளுந்துபருப்பு	5.00
4	வறுத்த நிலக்கடலை மாவு	4.00
5	செறிவூட்டப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய்	5.00
6	முளைக் கட்டிய கேழ்வரவு மாவு	5.00

2023 ஏப்ரல் 17]

வ. எண்	மூலப்பொருட்கள்	சதவீதம்
7	கொழுப்பு நீக்கப்படாத சோயா மாவு	10.00
8	வெல்லம்	14.00
9	வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை	1.50
மொத்தம்		100.00

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான 100 கிராம் சத்துமாவு கலவையில் குறைந்தபட்சம் 400 கிலோ கலோரி ஆற்றல் மற்றும் 14 கிராம் புரதச்சத்து உள்ளது.

கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவையை நிறைவு செய்வதற்காக கூடுதல் "சத்துமாவு" வழங்கப்பட்டு வந்தது. தற்போது தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின்படி, கூடுதல் சத்துமாவுக்குப் பதிலாக, அக்குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட ஈரட்டிகள் வழங்கப்பட உள்ளன.

கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கான செறிவூட்டப்பட்ட ஈரட்டியின் கலவை விவரம்

வ. எண்	மூலப்பொருட்கள்	சதவீதம்
1	கோதுமை மாவு	30.00
2	மைதா	10. 00
3	வேர்க்கடலை துருவல்	4.00
4	கேழ்வரவு மாவு	7.00
5	சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய்	24.74
6	சர்க்கரை	23.00
7	வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை	1.00
8	சமையல் சோடா (Baking Powder)	0.26
மொத்தம்		100.00

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 17

100 கிராம் செறிவூட்டப்பட்ட ஈரட்டியில் குறைந்தபட்சம் 500 கிலோ கலோரி ஆற்றல் மற்றும் 6 கிராம் புரதச்சத்து உள்ளது.

சத்துமாவு கொள்முதல்

6 மாதம் முதல் 2 வயது வரையிலான குழந்தைகளுக்கான சத்துமாவு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி கொள்முதல் செய்யப்படுகிறது.

2 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவையான 65% சத்துமாவு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறையின்கீழ் செயல்படும் 25 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்தும், மீதமுள்ள 35% சத்துமாவு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலமும் கொள்முதல் செய்யப்படுகிறது.

தரப் பரிசோதனை

பயனாளிகளுக்கு வழங்கப்படும் சத்துமாவு ஈரடுக்கு பரிசோதனைமூலம் தர ஆய்விற்குட்படுத்தப்படுகிறது. சத்துமாவினை மையங்களுக்கு வழங்குவதற்கு முன் சத்துமாவு தயாரிப்பாளர்கள் அதனை அரசு அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களுக்கு ஆய்வுக்கு அனுப்புகின்றனர். மேலும், தோராயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள் மையங்களில் இருந்து மாவட்ட திட்ட அலுவலர்களால் சத்துமாவு மாதிரி எடுக்கப்பட்டு ஆய்விற்குட்படுத்தப்பட்டு தரம் உறுதி செய்யப்படுகிறது.

ஒகுவதி பயனாளிகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் துணை ஊட்டச்சத்து உணவுகளின் விவரம்

பயனாளிகளின் வகை	பயனாளிகளுக்கு வழங்கப்படும் உணவு
6 மாதங்கள்-1 வயது குழந்தைகளுக்கு	நாளொன்றுக்கு 125 கிராம் சத்து மாவு மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு கூடுதலாக 60 கிராம் செறிவூட்டப்பட்ட ஈரட்டிகள்,

2023 ஏப்ரல் 17]

பயனாளிகளின் வகை	பயனாளிகளுக்கு வழங்கப்படும் உணவு
1 வயது முதல் 2 வயது வரையிலான குழந்தைகள்	*நாளொன்றுக்கு 125 கிராம் சத்து மாவு மற்றும் வாரத்திற்கு மூன்று முட்டைகள். கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு கூடுதலாக நாளொன்றுக்கு 60 கிராம் செறிவூட்டப்பட்ட ஈரட்டிகள்.*
2 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகள்	*குழந்தைகள் மையத்திற்கு வருகைபுரியும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 50 கிராம் சத்துமாவிலான கொழுக்கட்டை /உருண்டை மையத்திலேயே வழங்கப்படுகிறது.* *மேலும், வாரத்தில் 6 நாட்களுக்கு சூடான சமைத்த சத்தான உணவும், வாரத்தில் 3 நாட்களுக்கு முட்டையும் (திங்கள், புதன் மற்றும் வியாழன்), செவ்வாய்க் கிழமை கருப்பு கொண்டை கடலை/பச்சைப்பயறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வேக வைத்த உருளைக்கிழங்கு வழங்கப்படுகிறது. மேலும், ஞாயிற்றுக்கிழமை அரிசி மற்றும் பருப்பு உலர் உணவுப் பொருட்களாக வழங்கப்படுகிறது.* *மேலே கூறப்பட்டவை தவிர, கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 30 கிராம் செறிவூட்டப்பட்ட ஈரட்டிகள் வழங்கப்பட உள்ளது.*
கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்	*நாளொன்றுக்கு 150 கிராம் சத்துமாவு.*

4.8.2 சூடான சமைத்த உணவு

2 முதல் 6 வயது வரை உள்ள முன்பருவக்கல்வி குழந்தைகளுக்கு, சத்துமாவு தவிர, வாரத்தில் ஆறு நாட்களுக்கு, குழந்தைகள் மையங்களில் சூடான சமைத்த உணவு வழங்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில், பயனாளிகளுக்கு

அரிசி மற்றும் பருப்பு உலர் உணவாக (வீட்டிற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தும் வகையில்) வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு, ஒரு நாளைக்கு போதுமான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வைட்டமின்களைப் பெறுவதற்கு மதிய உணவு முக்கியமானது. புரதசத்தை அதிகரிப்பதற்காக, 1989-இல் முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பச்சைப்பயறு, கருப்பு கொண்டைக்கடலை, உருளைக்கிழங்கு ஆகியவை அடுத்தடுத்த ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. குறைந்தபட்சம் 45-52 கிராம் எடையுள்ள அக்மார்க் தரத்திலான முட்டைகள் பயனாளிகளுக்கு 2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

1 முதல் 2 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்காக, வாரத்தில் ஒரு முட்டை என வழங்கப்பட்டு வந்ததை உயர்த்தி நவம்பர் 2022 முதல், வாரத்திற்கு 3 முட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறு குழந்தைகளின் செரிமான திறன் மற்றும் சிறப்புத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, 2013–2014 முதல் பின்வரும் உணவு வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நாள்	உணவு வகைகள்
திங்கட்கிழமை	தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை
செவ்வாய்க்கிழமை	கலவை சாதம் + வேக வைத்த கருப்புக் கொண்டைக் கடலை (அல்லது) வேக வைத்த பச்சைப் பயறு
புதன்கிழமை	காய்கறி புலவு + வேகவைத்த முட்டை
வியாழக்கிழமை	எலுமிச்சை சாதம் +வேக வைத்த முட்டை
வெள்ளிக்கிழமை	பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக் கிழங்கு
சனிக்கிழமை	கலவை சாதம்
ஞாயிற்றுக்கிழமை	வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் (அரிசி மற்றும் பருப்பு)

2023 ஏப்ரல் 17]

நாளொன்றுக்கு பயனாளிகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து அளவு விவரம்

வகை	சத்துமாவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்			சூடான சமைத்த உணவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்*		ஈரட்டியில் உள்ள ஊட்டச்சத்து விவரம்		மொத்த ஊட்டச்சத்து	
	நாளொன்றுக்கு வழங்கப்படும் சத்து மாவின் அளவு (கிராம்)	புரதம் (கிராம்)	சக்தி (கி.கலோரி)	சராசரி புரதம் (கிராம்)	சராசரி சக்தி (கி. கலோரி)	சராசரி புரதம் (கிராம்)	சராசரி சக்தி (கி. கலோரி)	புரதம் (கிராம்)	சக்தி (கி. கலோரி)
6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள்	125	18.75	500	-	-	-	-	18.75 (GOI-12-15)	500 (GOI-500)
6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய)	125	18.75	500	-	-	3.60 (60 கிராமில்)	300 (60 கிராமில்)	22.35 (GOI-20-25)	800 (GOI-800)
1 வயது முதல் 2 வயது குழந்தைகள்	125	18.75	500	3.00 (வாரம் 3 முட்டைகள்)	36 (வாரம் 3 முட்டைகள்)	-	-	21.75 (GOI-12-15)	536 (GOI-500)
1 வயது முதல் 2 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய)	125	18.75	500	3.00 (வாரம் 3 முட்டைகள்)	36 (வாரம் 3 முட்டைகள்)	3.60 (60 கிராமில்)	300 (60 கிராமில்)	25.35 (GOI-20-25)	836 (GOI-800)

[2023 ஏப்ரல் 17

வகை	சத்துமாவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்			சூடான சமைத்த உணவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்*		ஈரட்டியில் உள்ள ஊட்டச்சத்து விவரம்		மொத்த ஊட்டச்சத்து	
	நாளொன்றுக்கு வழங்கப்படும் சத்து மாவின் அளவு (கிராம்)	புரதம் (கிராம்)	சக்தி (கி.கலோரி)	சராசரி புரதம் (கிராம்)	சராசரி சக்தி (கி. கலோரி)	சராசரி புரதம் (கிராம்)	சராசரி சக்தி (கி. கலோரி)	புரதம் (கிராம்)	சக்தி (கி. கலோரி)
2 வயது முதல் 3 வயது குழந்தைகள்	50	7.50	200	13.27	468.79	-	-	20.77 (GOI-12-15)	668.79 (GOI-500)
2 வயது முதல் 3 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய)	50	7.50	200	13.27	468.79	1.80 (30 கிராமில்)	150 (30 கிராமில்)	22.57 (GOI-20-25)	818.79 (GOI-800)
3 வயது முதல் 6 வயது குழந்தைகள்	50	7.50	200	13.27	468.79	-	-	20.77 (GOI-12-15)	668.79 (GOI-500)
3 வயது முதல் 6 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய)	50	7.50	200	13.27	468.79	1.80 (30 கிராமில்)	150 (30 கிராமில்)	22.57 (GOI-20-25)	818.79 (GOI-800)

2023 ஏப்ரல் 17]

வகை	சத்துமாவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்			சூடான சமைத்த உணவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்*		ஈரட்டியில் உள்ள ஊட்டச்சத்து விவரம்		மொத்த ஊட்டச்சத்து	
	நாளொன்றுக்கு வழங்கப்படும் சத்து மாவின் அளவு (கிராம்)	புரதம் (கிராம்)	சக்தி (கி.கலோரி)	சராசரி புரதம் (கிராம்)	சராசரி சக்தி (கி. கலோரி)	சராசரி புரதம் (கிராம்)	சராசரி சக்தி (கி. கலோரி)	புரதம் (கிராம்)	சக்தி (கி. கலோரி)
கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்	150	21.00	600	-	-	-	-	21.00 (GOI-18-20)	600 (GOI-600)

*சூடான சமைத்த உணவு, வாரத்திற்கு 3 முட்டை, செவ்வாக்கிழமையில் கருப்பு கொண்டைக் கடலை/ பச்சைப்பயறு மற்றும் வெள்ளிக்கிழமையில் உருளைக்கிழங்கு.

பயனாளிகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் இணை உணவிற்கான (சத்துமாவு + சூடான சமைத்த மதிய உணவு + முட்டை) சராசரி செலவின விவரம்

(ரூபாயில்)

வ. எண்	பயனாளிகளின் வகை	பயனாளி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்ட செலவினம்	பயனாளி ஒருவருக்கு நாளொன்றுக்கு மேற்கொள்ளப்படும் செலவினம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	மாநில அரசு கூடுதல் பங்கு
1	6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள்	8.00	8.67	4.00	4.00	0.67

[2023 ஏப்ரல் 17

வ. எண்	பயனாளிகளின் வகை	பயனாளி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்ட செலவினம்	பயனாளி ஒருவருக்கு நாளொன்றுக்கு மேற்கொள்ளப்படும் செலவினம்	ஒன்றிய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	மாநில அரசு கூடுதல் பங்கு
2	6 மாதம் முதல் 1 வயது கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகள்	12.00	15.87	6.00	6.00	3.87
3	1 வயது முதல் 2 வயது குழந்தைகள்	8.00	11.05	4.00	4.00	3.05
4	1 வயது முதல் 2 வயது கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகள்	12.00	18.25	6.00	6.00	6.25
5	2 வயது முதல் 6 வயது குழந்தைகள்	8.00	9.14	4.00	4.00	1.14
6	2 வயது முதல் 6 வயது கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகள்	12.00	12.74	6.00	6.00	0.74
7	கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்	9.50	10.47	4.75	4.75	0.97

2023 ஏப்ரல் 17]

4.8.3 செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் பயன்பாடு

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களிடையே உள்ள நுண்ணூட்டச்சத்துக் குறைபாட்டினை களைவதற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் இணை உணவில் பின்வரும் செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன:-

1. *இரும்புச்சத்து மற்றும் அயோடினுடன் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு.*
2. *வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் டி செறிவூட்டப்பட்ட பாமாயில் எண்ணெய்.*
3. *உயிர்ச்சத்து மற்றும் தாது உப்புகளால் செறிவூட்டப்பட்ட சத்துமாவு.*
4. *வைட்டமின் பி-12, போலிக் அமிலம் மற்றும் இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட அரிசி.*

4.9 தேசிய ஊட்டச்சத்து குழுமம் (போஷன் அபியான்)

ஊட்டச்சத்து நிலையை படிப்படியாக மேம்படுத்துவதற்காக போஷன் அபியான் என்று அழைக்கப்படும் தேசிய ஊட்டச்சத்து குழுமம் 2017-2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இத்திட்டம் குழந்தைகளிடையே காணப்படும் குள்ளத்தன்மை, மெலிவுத்தன்மை, எடை குறைவு, இரத்தசோகை மற்றும் குறைந்த பிறப்பு எடையை குறைக்கும் குறிப்பிட்ட இலக்குகளை கொண்டுள்ளது.

இத்திட்டமானது அனைத்து மாவட்டங்களிலும், 60:40 (மத்திய:மாநில) நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

4.9.1 திறன்மிகு அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0

திறன்மிகு அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 என்பது ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டமாகும். இத்திட்டமானது குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே நிலவும் ஊட்டச்சத்து குறைப்பாட்டினை

களைவதற்கு ஒரு ஒருங்கிணைந்த சூழலை உருவாக்கி அவர்களது ஆரோக்கியம், நலன் மற்றும் நோய் எதிர்ப்பு தன்மையை மேம்படுத்துகின்றது.

போஷன் 2.0 திட்டம், கர்ப்பிணிகளின் ஊட்டச்சத்து, பச்சிளம் மற்றும் இளம் குழந்தைகளின் உணவூட்டும் முறை, கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிகிச்சை நெறிமுறை மற்றும் 'ஆயுஷ்' (AYUSH) வைத்திய முறைகள்மூலம் எடை குறைவு, மெலிவுத்தன்மை, குள்ளத்தன்மை மற்றும் இரத்த சோகையினை குறைத்தல் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தும் ஒரு திட்டமாகும். 'போஷன் டிராக்கர்' (POSHAN Tracker) என்கிற தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தரவு அமைப்புமூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

மாநில ஊட்டச்சத்து குறியீடுகள் பின்வரும் சாதகமான முடிவுகளை காட்டுகிறது.

குறியீடுகள்	தேகுநக (NFHS)-4		தேகுநக (NFHS)-5 (2019-21)		போஷன் டிராக்கர் (பிப்ரவரி 2023)	முன்னேற்றங்கள்
	தேசிய அளவில்	மாநில அளவில்	தேசிய அளவில்	மாநில அளவில்	மாநில அளவில்	
குள்ளத்தன்மை (%)	38.4	27.1	35.5	25	19.27%	முன்னேற்ற-மடைந்துள்ளது
மெலிவுத்தன்மை (%)	21	19.7	19.3	14.6	5.14%	முன்னேற்ற-மடைந்துள்ளது
எடை குறைவு (%)	35.8	23.8	32.1	22	9.44%	முன்னேற்ற-மடைந்துள்ளது
இரத்தசோகையுள்ள 6 – 59 மாத குழந்தைகள் (%)	58.6	50.7	67.1	57.4	NA	-

2023 ஏப்ரல் 17]

4.9.2 'போஷன் டிராக்கர் செயலி'

போஷன் டிராக்கர் என்ற திறன்பேசி செயலி 2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்செயலி 360 டிகிரி கோணத்தில் (360 Degree) *குழந்தைகள் மையங்களின் செயல்பாடுகளை, கவனிக்க உதவுகின்றது. தகவல்களை பதியவும், பயனாளிகளுக்கு இணை உணவு வழங்குதல், வளர்ச்சி கண்காணித்தல் ஆகிய பணிகளை நிகழ்நேர கண்காணிப்பாக மேற்கொள்ளவும் உதவுகின்றது. 54,439 குழந்தைகள் மையங்களும் இச்செயலியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

மேலும், மாநிலத்தின் தனித்திட்ட கூறுகள் TN-ICDS *என்ற மற்றொரு செயலியிலும் பதிவு செய்யப்படுகின்றது.*

4.9.3 மக்கள் இயக்கம் (Jan Andolan)

சமூக நடத்தை மாற்றங்கள்மூலம், மக்கள் சிறந்த ஊட்டச்சத்து பழக்கங்களை பின்பற்ற மக்கள் இயக்கம் உதவுகின்றது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து பல்வேறு உத்திகள்மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சமுதாய வளைகாப்பு, தாய்ப்பால் புகட்டுதல் குறித்த விழிப்புணர்வு, பாரம்பரிய உணவு திருவிழா, கண்காட்சிகள், வளரிளம் பெண்களுக்கான விழிப்புணர்வு, தகவல் தொடர்பு சாதனங்கள் (சுவரொட்டிகள் மற்றும் கையேடுகள்) மற்றும் சமூகம் சார்ந்த நிகழ்வுகள் ஆகியவை இதில் அடங்கும்.

ஒவ்வோராண்டும் செப்டம்பர் மாதம் தேசிய ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்படுகிறது.

செப்டம்பர் 2022-ல் நடத்தப்பட்ட 2,54,59,176 நிகழ்ச்சிகள்மூலம் பெரும்பான்மையான மக்களிடையே ஊட்டச்சத்து மற்றும் சுகாதார தகவல்கள் சென்றடைந்துள்ளன.

4.9.3.1 மின் தொடர் வண்டி விளம்பரம்மூலம் சமூக மற்றும் நடைமுறை மாற்ற தகவல்கள்

மக்களிடையே சமூக மற்றும் நடைமுறை மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக, இரத்த சோகையை தடுப்பதற்கான தகவல்கள், குழந்தையின் முதல் 1000 பொன்னான நாட்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான சத்துணவு சுகாதார விழிப்புணர்வு பற்றி

மின் தொடர் வண்டியில் ஓராண்டு காலத்திற்கு விளம்பரம் செய்யப்பட்டது. மின் தொடர் வண்டியின் 9 பெட்டிகளிலும் தெரிந்தெடுக்கப்பட்ட கருத்துக்கள் அடங்கிய வினைல் ஸ்டிக்கர் (Vinyl Sticker) ஒட்டப்பட்டுள்ளது.

4.9.3.2 இரத்தசோகையை தடுக்க கை கழுவுதல் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு இயக்கம்

இரத்த சோகையை ஒழிக்க, கைகழுவுதல் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு இயக்கம், 20 மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளது. சுவரொட்டிகள், ஆட்டோ விளம்பரம், வீட்டுக்கு வீடு விழிப்புணர்வு, தெரு நாடகங்கள், பண்பலை வானொலி மற்றும் தனியார் தொலைக்காட்சி ஊடகங்கள், ஒலி மற்றும் ஒளி குறுந்தகடுகள்மூலம் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வு இயக்கத்திற்காக ரூ.4.75 கோடி செலவிடப்பட்டுள்ளது.

4.9.3.3 வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் மற்றும் திறன் கைபேசி வழங்குதல்

கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், புதிதாக பிறந்த குழந்தைகள் மற்றும் 6 வயது வரையிலான குழந்தைகளின் எடை மற்றும் உயரத்தினை துல்லியமாக அளந்திட வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் மற்றும் திறன் பேசிகள் அனைத்து மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 23,040 எண்மமுறையில் (டிஜிட்டல்) எடை எடுக்கும் கருவிகள் (தாய்-சேய்), 21,668 உயரத்தை அளவிடும் கருவிகள் மற்றும் 6,630 திறன் பேசிகள் ஆகியன மொத்தம் ரூ.17.40 கோடி செலவில் செயலிழந்த கருவிகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டுள்ளன.

4.9.3.4 குறைந்த எடையுடன் பிறந்த குழந்தைகளின் வளர்ச்சி கண்காணித்தல்

தகவல் தொழில்நுட்ப உதவியுடன் கண்காணிப்பு கருவிகள் கைபேசி செயலியுடன், ஒருங்கிணைக்கப்பட்டு பிக்மி (PICME) செயலிமூலம் பெறப்பட்ட எடை குறைவாக பிறந்த குழந்தைகளை கண்காணிக்க பயன்படுத்தப்படுகிறது. எடை குறைவாக பிறந்த குழந்தைகளை கண்காணிக்க 1000 தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக் கண்காணிப்பு கருவிகள் ரூ.85.00 இலட்சம் செலவில் அனைத்து வட்டார அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 17]

4.10 ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

- *குழந்தைகள் மையங்களில் முக்கிய பணியாக 2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி வழங்கப்படுகிறது. குழந்தைகள் மையங்களில் நாள்தோறும் நான்கு மணி நேரம் முன்பருவக் கல்வி நடத்தப்பட்டு வருகிறது.*

- *ஆடிப்பாடி விளையாடு பாப்பா (APVP) எனும் ஓர் ஆண்டு பாடத் திட்டம், குழந்தையின் வயதுக்கேற்ற வளர்ச்சி மற்றும் தேசிய ஆரம்ப கால குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கை 2013-ஐ பின்பற்றி தயாரிக்கப்பட்டு அனைத்து குழந்தைகள் மையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பாடத்திட்டத்தில், 11 மாதங்களுக்கும் குழந்தைகளுக்கு பிடித்தமான 11 வகையான கருத்துகளை மையமாகக் கொண்டு செயல்பாடுகள் உள்ளன. 12 ஆம் மாதம் பாடத்திட்டத்தின் திருப்புதல் மேற்கொள்ளப்படுகிறது.*

- *குழந்தைகளுக்கு வயதிற்கேற்ற (2-3, 3-4 மற்றும் 4-5 வயது) செயல்பாட்டுப் புத்தகங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆண்டுதோறும் குழந்தைகள் மையத்திற்கு வழங்கப்படுகின்றன.*

- *குழந்தைகளின் ஆரம்பகால தூண்டுதல் செயல்பாடுகளை ஊக்குவிக்கும்பொருட்டு, விளையாட்டின்மூலம் கற்றல் என்ற படங்களுடன்கூடிய புத்தகம் அச்சிடப்பட்டு, ஆலோசனையுடன் மையங்களுக்கு வரும் 0-3 வயதுடைய குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பேணுவோருக்கு வீட்டில் குழந்தைகளுக்கு பயிற்றுவிக்க வழங்கப்பட்டுள்ளது.*

- *அனைத்து குழந்தைகள் மைய பணியாளர்களுக்கும் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு, தொகுதி வாரியாக பரவலாக்கப்பட்ட முறையில் மூன்று கட்டமாக ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 17

4.11 வளரிளம் பெண்களுக்கான திட்டம்

11 முதல் 14 வயது வரையுள்ள பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 14-18 வயதிற்குட்பட்ட அனைத்து வளரிளம் பெண்களும் பயனடையும் வகையில் தற்போது, ஒன்றிய அரசால் மறுவடிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து திட்டம்

ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊட்டச்சத்து விதிமுறைகளின்படி, 600 கிலோ கலோரிகள், 18-20 கிராம் புரதம் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் அடங்கிய சத்துமாவு, 14 முதல் 18 வயதுக்குட்பட்ட இளம்பெண்களுக்கு வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் (THR) ஆண்டில் 300 நாட்களுக்கு வழங்கப்படும்.

ஊட்டச்சத்து அல்லாத திட்டம்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகிய தொடர்புடைய துறைகள் ஒருங்கிணைந்து, வளரிளம் பெண்களுக்கு வாழ்க்கைத் திறன் கல்வி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

4.12 களப்பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்

- *தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட பயிற்சி முறை பின்பற்றப்படுகிறது. குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (நிலை-1 (ம) 2) ஆகியோர்களுக்கான பணிப் பயிற்சி மாநில பயிற்சி நிறுவனத்தில் தங்கிப் பயிலும் வகையில் நடத்தப்படுகின்றது. மாநில பயிற்சி நிறுவனத்தில், பயிற்றுநர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், கற்பித்தல், கற்றல் உபகரணங்கள் மற்றும் களப்பயிற்சி ஆகியவை உள்ளன. மாநில பயிற்சி நிறுவனம் தங்கும் விடுதியுடன் செயல்படுகிறது.*

- *தரமான பயிற்சியை அளிப்பதற்கென, போஷன் அபியான் நெகிழ்வு நிதியிலிருந்து மொத்தம் ரூ.35.00 இலட்சம் செலவில், மாநில பயிற்சி நிறுவனத்திலுள்ள*

இரண்டு பயிற்சி அறைகள் நவீன வசதிகளுடன்கூடிய ஸ்மார்ட் வகுப்பறைகளாக (Smart class) மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

- *அங்கன்வாடிப் பணியாளர்களுக்கான பணிப் பயிற்சி மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கான புத்தறிவு பயிற்சி, தொகுதி அளவில் ஒரு தனித்துவமான செலவு குறைந்த, சிறந்த முறையில், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் நிலை-1, சுகாதாரம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் பிரதிநிதிகளைக் கொண்ட வட்டார பயிற்சி குழுவின்மூலம் நடத்தப்படுகின்றது.*
- *களப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில், பச்சிளம் குழந்தைகள் மற்றும் இளம் குழந்தைகளுக்கு உணவளித்தல் முறைகள் குறித்தபயிற்சி (IYCF) ஒரு முக்கிய பங்கு வகிப்பதுடன், குழந்தைகளுக்கான உணவூட்டும் பழக்கவழக்கங்கள் குறித்து களப்பணியாளர்களின் அறிவை மேம்படுத்துகின்றது.*

4.13 குழந்தைகள் மையங்களுக்கு மருந்து பெட்டிகள் மற்றும் சுகாதாரப் பெட்டிகள் வழங்குதல்

குழந்தைகள் மையங்களில் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காயம், தோல் தொற்று போன்ற சிறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருந்துப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. மேலும், குழந்தைகளிடையே சுகாதாரப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், குழந்தைகள் மையங்களில் அவர்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்கவும் சுகாதாரப் பெட்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மருந்துப் பெட்டியில் பாராசிட்டமால் சிரப், பாராசிட்டமால் மாத்திரை-500 மி.கி, ORS பொட்டலம், இரும்பு மற்றும் ஃபோலிக் அமில சிரப் மற்றும் மல்டி வைட்டமின் சொட்டு மருந்துகளும் மற்றும் சுகாதாரப் பெட்டியில் தரையை சுத்தம் செய்யும் திரவம், சோப்பு மற்றும் கை துண்டு ஆகிய பொருட்களும் அடங்கியுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 17

4.14 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆதார் பதிவு மேற்கொள்ளுதல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் ஆதார் பதிவாளராகவும், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் ஆதார் சேர்க்கை முகமைகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர், இதனை தொடர்ந்து 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு மூன்று வகையான ஆதார் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய ஆதார் சேர்க்கை மற்றும் பதிவுகள் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை 96% ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பயனாளிகளுக்கு ஆதார் சேர்க்கை மேற்கொள்ளப்பட்டு உரிய பதிவுகள் போஷன் டிராக்கர் செயலியில் செய்யப்பட்டு வருகிறது.

4.15 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட செயல்பாடுகளை கண்காணித்திடவும் மதிப்பீடு செய்திடவும் பல்வேறு நிலைகளில் கண்காணிப்பு குழுக்கள் (மாநில/மாவட்ட/வட்டார மற்றும் குழந்தைகள் மைய) அரசால் வடிவமைக்கப்பட்டுள்ளன. அரசால் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளியில் இக்குழுக்கள் கூடும்.

4.16 முன்பருவக் கல்வி குழந்தைகளுக்கு இரண்டு இணை சீருடைகள் வழங்குதல்

சீருடை வழங்கும் திட்டம், குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு, குறிப்பாக சமூகப் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு கண்ணியத்தை வழங்குகிறது. மேலும், சமூக பொருளாதார தடைகள் உடைக்கப்பட்டு சமதளம் ஏற்படுத்தப்படுகிறது. சீருடை அணிவதன்மூலம் குழந்தைகள் மையங்களுக்கு வருகைபுரியும் முன்பருவக் கல்வி குழந்தைகள் வருங்காலங்களில் அவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு தயார்படுத்தப்படுகின்றனர். முன் பருவக் கல்வி பயில வருகை புரியும் குழந்தைகளுக்கு ஒவ்வோராண்டும் இரண்டு இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் மாநில அரசின் நிதியின்மூலம் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு இணை சீருடையின் விலை ரூ.131.25/-லிருந்து நடப்பாண்டில் ரூ.150/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 17]

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.28.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.17 குழந்தைகள் மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

(அ) குழந்தைகள் மையங்களுக்கு ஆண்டுப் பராமரிப்பு தொகை

குழந்தைகள் மையக் கட்டடங்களில் ஏற்படும் சிறிய வகையிலான பழுதுகளை சீரமைக்கும் பொருட்டு, அரசு கட்டடங்களில் இயங்கும் குழந்தைகள் மையங்களுக்கு மையம் ஒன்றுக்கு ரூ.3000/-வீதம் ஆண்டு பராமரிப்பு தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.12.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) திறன்மிகு குழந்தைகள் மையம்

திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளின்படி முன்னேற விழையும் இரண்டு மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்கள் திறன்மிகு குழந்தைகள் மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் காய்கறி தோட்டம் அமைத்தல், மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துதல், குடிநீர் சுத்திகரிப்பான்கள் பொருத்துதல், எல்.இ.டி டி.வி./திரைகள் பொருத்துதல் மற்றும் இதர உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.48.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.18 குழந்தைகள் மைய ஊழியர்களின் நலன்

தமிழ்நாட்டில் உள்ள 54,439 குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 7-வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, பின்வரும் சிறப்புக் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது:

[2023 ஏப்ரல் 17

வ. எண்.	பதவி	மதிப்பூதியம்	மொத்த ஊதியம்	மத்திய அரசு பங்கு	மாநில அரசு பங்கு	மாநில அரசின் கூடுதல் செலவினம்	மாநில அரசின் மொத்த செலவினம்
1.	அங்கன்வாடிப் பணியாளர்கள்	4500	12586	2700	1800	8086	9886
2.	குறு அங்கன்வாடி பணியாளர்கள்	3500	9826	2100	1400	6326	7726
3.	உதவியாளர்கள்	2250	7618	1350	900	5368	6268

- அடிப்படை ஊதியத்துடன் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி மற்றும் ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது.

- அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது, ஒட்டுமொத்த ஓய்வு தொகையாக அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ரூ.1,00,000/-மும், உதவியாளர்களுக்கு ரூ50,000/-மும் 1-10-2017 முதல் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2,000/- 1-10-2017 முதல் வழங்கப்படுகிறது.

- 2018 ஆம் ஆண்டு முதல் சுழற்சி முறையில் கோடை விடுமுறை வழங்கப்படுகிறது.

- பணியிலிருக்கும்போது காலமாகும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு குடும்ப நல நிதியாக ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

- 2015 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதி கணக்கு துவங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 17]

- *அனைத்து ஓய்வூதிய பணப்பலன்களுடன், மருத்துவ காரணங்களின் அடிப்படையில் அங்கன்வாடி ஊழியர்களுக்கு தன்விருப்ப ஓய்வு அனுமதிக்கப்படுகிறது.*

- *குழந்தைகள் மையங்களில் பணிபுரிந்து பணியிடையே மரணமடையும் அங்கன்வாடி ஊழியர்களின் பெண் வாரிசுதாரர்களுக்கு தகுதியின் அடிப்படையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு வருகிறது.*

- *5 ஆண்டுகள் பணி முடித்த குறு அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு முதன்மை அங்கன்வாடிப் பணியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.*

- *ஒவ்வோராண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சீருடையாக இரண்டு சேலைகள் மற்றும் மேலங்கிகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, குழந்தைகளுக்கான "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின்மூலம் திட்டப் பயனாளிகளுக்கு RUTF *சிறப்பு உணவு, ஊட்டச்சத்து பெட்டகங்கள்,* BIS *தரத்திலான சத்துமாவு, செறிவூட்டப்பட்ட ஈரட்டிகள், 1 முதல் 2 வயது வரை உள்ள பயனாளிகளுக்குக் கூடுதலாக முட்டைகள் வழங்கப்படுகின்றன. மண்டல அளவிலான ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலமும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் முழு உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அரசியல் அர்ப்பணிப்பு மற்றும் சமுதாய பங்கேற்புடன்கூடிய நடவடிக்கைகளால் தமிழ்நாடு, ஊட்டச்சத்துக் குறைபாடில்லா மாநிலமாக உருவாகி வருகிறது.*

அத்தியாயம் - 5

சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம், குழந்தைகள் மற்றும் இடர்பாடான சூழ்நிலையில் உள்ள இதர பிரிவினரின் நலன் மற்றும் மேம்பாட்டின்மீது கவனம் செலுத்துகிறது. 1887 ஆம் ஆண்டிலேயே சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளதன்மூலம் குழந்தைகள் பாதுகாப்புக் குறித்த செயல்பாடுகளில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மேலும், குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காகவும்,

[2023 ஏப்ரல் 17

அதற்கான நிறுவனங்களின் செயல்பாட்டிற்காகவும், 1920 ஆம் ஆண்டில், "மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்" இயற்றப்பட்டது. 1947 ஆம் ஆண்டில் இத்துறை சிறைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, "சான்றளிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணித் துறை" என பெயரிடப்பட்டு செயல்படத் துவங்கியது.

அதன் பின்னர் இத்துறையின் பெயர் கீழ்க்கண்டவாறு அவ்வப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டது:-

1958–சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணித் துறை.

1975–நல்வழிப்படுத்தும் நிர்வாகத் துறை.

1981–சீர்திருத்த பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணித் துறை.

1990–சமூகப் பாதுகாப்புத் துறை.

சமூகப் பாதுகாப்புத் துறையானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்கீழ் நிறுவனம் மற்றும் நிறுவனம் சாராத சேவைகளை வழங்குவதன்மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் ஆகிய இவ்விரண்டு வகையான குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. நிறுவன பராமரிப்பிலிருந்து வீடேகிச் செல்பவர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான சுய நிலைத்தன்மையை எளிதாக்குவதற்கான திட்டங்களை செயல்படுத்தி பிற்காப்பு சேவைகளையும் இத்துறை வழங்குகிறது. எந்தவொரு குழந்தையும் குடும்பத்தின் அரவணைப்பின்கீழ் வளர்க்கவும், வளரவும் குடும்பமே சிறந்த இடம் என்று அரசு கருதுவதால், நிறுவனங்களில் அனுமதிப்பதற்கு மாறாக மாற்றுப் பராமரிப்பு முறைகளான, தத்தெடுப்பு, வளர்ப்பு பராமரிப்பு மற்றும் நிதி ஆதரவுத் திட்டம் போன்றவற்றிற்கு சமீப காலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

சமூகப் பாதுகாப்புத் துறை குழந்தைகள் மற்றும் பெண்களின் சட்டப்பூர்வ கடமைகள், ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை நிறைவேற்ற வேண்டி பின்வரும் சட்டங்கள் மற்றும் திட்டங்கள்/சேவைகளை செயல்படுத்துகிறது:-

2023 ஏப்ரல் 17]

சட்டங்கள்

i. *இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015*

ii. *பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012*

iii. *குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005*

iv. *ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956*

திட்டங்கள்

i. *குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டம்*

ii. *முறைசார் மற்றும் முறைசாராக் கல்வி*

iii. *தொழிற்பயிற்சி மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள்*

iv. *குழந்தைகளுக்கான கல்விச் சுற்றுலா திட்டம்*

v. *குழந்தைகளுக்கான சமூக உளவியல் சார்ந்த உதவி*

vi. *சுயதொழில் மற்றும் தொழில் முனைவிற்கான நிதி உதவி*

vii. *குழந்தைகள் உதவி எண்–1098*

viii. *போதைத் தடுப்பு திட்டம்*

ix. *வாழ்வொளித் திட்டம் (Ujjawala Scheme)*

குழந்தைகளுக்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குவதற்கும், பாதுகாப்பு மற்றும் கவனமுடன் இருப்பதனை உறுதி செய்வதற்கும், தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளதால், அனைத்து நிறுவனங்களிலும் நிலையான சேவை வழங்குவதை உறுதி செய்வதற்காக உயர்மட்டக் குழுவை அமைத்து, அக்குழுவானது சட்டத்திற்கு முரண்படும் குழந்தைகள் நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டு சிறந்த சேவைகளை பெறுவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்யவும் திட்டமிட்டுள்ளது.

5.1 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015, குழந்தையின் சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு,

[2023 ஏப்ரல் 17

குழந்தை நேய சூழலுக்கு ஏற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து இடர்பாடான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளின் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்சட்டம், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளைக் கையாளுவது குறித்து சட்ட ரீதியான வழிமுறைகளை வழங்கியுள்ளது. இச்சட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகள், 2017-ஐ உருவாக்கியுள்ளது.

5.1.1 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

"பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தை" என்பது வீடு அல்லது தங்குமிடம் இல்லாமல் வாழ்வாதாரமின்றி காணப்படும் குழந்தை அல்லது குழந்தைத் தொழிலாளர் சட்டத்திற்கு முரண்பாடாக வேலை செய்யும் குழந்தைகள்/ மனநலம் பாதிக்கப்பட்ட/மாற்றுத் திறனாளி /பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழந்தைகளை பாதுகாக்க தகுதியற்றவர் அல்லது இயலாதவர் எனக் கண்டறிப்பட்டவர்களின் குழந்தைகள்/ சாலையோர குழந்தைகள்/பிச்சையெடுக்கும் குழந்தைகள்/உரிய வயதை அடையாத நிலையில் திருமணத்திற்கு உட்படுத்தப்படும் ஆபத்தில் உள்ளவர்/பெற்றோர் இல்லாதவர்/பராமரிக்க எவரும் தயாராக இல்லாதவர்கள்/தீங்கிழைக்கப்பட்ட/பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள்/காணாமல்போன குழந்தைகள் மற்றும் உரிய விசாரணைக்கு பின்னர் பெற்றோர்களை கண்டறிய இயலாத குழந்தைகள் போன்ற குழந்தைகள் ஆவர்.

5.1.1.1 குழந்தை நலக் குழுக்கள்

குழந்தை நலக் குழுக்களானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்படி வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கென குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். குழந்தை நலக் குழு ஒரு தலைவர் மற்றும் நான்கு பிற உறுப்பினர்களைக் (ஒரு மகளிர் உறுப்பினர் உட்பட) கொண்டது. குழந்தை நலக் குழுவின் அனைத்து நடைமுறைகளும் குழந்தைகளின் அதிகபட்ச நலனை உறுதிசெய்யும் வகையில்

2023 ஏப்ரல் 17]

குழந்தை நேய அணுகுமுறையை கடைப்பிடித்து வருகிறது. 1973 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை (Code of Criminal Procedure) *விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை இக்குழந்தை நலக் குழு கொண்டதாகும்.*

தமிழ்நாடு அரசு, 34 மாவட்டங்களில் 36 குழந்தை நலக் குழுக்களை அமைத்துள்ளது. சென்னை மாவட்டத்தின் அதிகப்படியான வழக்குகளை கருத்திற்கொண்டு 3 குழந்தை நலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 மாவட்டங்களான ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் குழந்தை நலக் குழுவினை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது, இம்மாவட்டங்களில் குழந்தை நலக் குழுக்கள் கூடுதல் பொறுப்பில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களின்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 18,225 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.9.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.2 குழந்தைகள் இல்லங்கள்

குழந்தைகள் இல்லங்கள் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்கீழ் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. குழந்தை நலக் குழுக்களால், உரிய விசாரணைக்குப் பிறகு "பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்" எனக் கண்டறியப்பட்டு, குழந்தைகள் இல்லங்களில் குறுகிய கால மற்றும் நீண்ட கால பராமரிப்பு, சிகிச்சை, கல்வி, பயிற்சி, முன்னேற்றம் மற்றும் மறுவாழ்விற்காக தங்க வைக்கப்படுகின்றனர். 31-3-2023 அன்றுள்ளவாறு, மாநிலத்தில் செயல்பட்டு வரும் 864 குழந்தைகள் இல்லங்கள் சமூகப் பாதுகாப்புத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இதில் 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், 147 குழந்தைகள் இல்லங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 6 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்காணும் 147 தன்னார்வத்

தொண்டு நிறுவனங்களுக்கு குழந்தை பாதுகாப்புச் சேவைகளின்கீழ் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.3,000/- வீதம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உணவு, உடை, தங்குமிடம், மருத்துவ உதவிகள், கல்வி, தொழிற்கல்வி முதலியன வழங்கப்பட்டு வருகின்றன.

வ. எண்	அரசால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள்	அரசு உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள்	தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சுயநிதியுடன் செயல்படும் குழந்தைகள் இல்லங்கள்
1	36	147	681

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.168.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.3 புறநகர் மற்றும் நகர்ப்புற குழந்தைகளுக்கான திறந்தவெளிப் புகலிடங்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் அனைத்து குழந்தைகள் குறிப்பாக பிச்சையெடுக்கும் சிறார்கள், தெருவோர சிறார்கள், குப்பைப் பொறுக்கும் சிறார்கள், சிறு வியாபாரிகள், தெருக்கூத்தாடிகள், ஆதரவற்ற, கைவிடப்பட்ட, கடத்தப்பட்ட, வீட்டை விட்டு வெளியேறிய, புலம் பெயர்ந்த குழந்தைகள் மற்றும் ஏனைய பாதிப்பிற்குள்ளாகும் சூழலில் உள்ள குழந்தைகள் தற்காலிகமாக தங்க வைக்க நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் திறந்தவெளி புகலிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டம் வீடற்ற மற்றும் தெருவோர குழந்தைகளை இலக்காகக் கொண்டு அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் 16 திறந்தவெளிப் புகலிடங்களில், 12 திறந்தவெளிப் புகலிடங்கள் அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றன. குழந்தை பாதுகாப்பு

2023 ஏப்ரல் 17]

சேவைகளின்கீழ் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,500/-வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன் வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இப்புகலிடங்களில் 345 குழந்தைகள் தங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.4 குழந்தை தத்தெடுப்பு

குழந்தை தத்தெடுப்பு என்பது, ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகள், குடும்பத்தின் அரவணைப்பில் வளர ஏதுவாக, ஒரு குடும்பத்தை கண்டறியும் செயல்முறையாகும். இதன்மூலம் தத்தெடுக்கப்பட்ட குழந்தை தனது உயிரியல் பெற்றோரிடமிருந்து நிரந்தரமாக பிரிக்கப்பட்டு உறவுகளுடன் இணைக்கப்பட்ட அனைத்து உரிமைகள், சலுகைகள் மற்றும் பொறுப்புகளை பெற்று தத்து பெற்றோரின் சட்டப்பூர்வமான குழந்தையாக மாறும்.

ஒரு குழந்தையை குடும்ப பராமரிப்பில் வைக்க முடியாத நிலை ஏற்பட்டால் மட்டுமே கடைசி முயற்சியாக நிறுவன பராமரிப்பில் வைக்கப்பட வேண்டும். தத்தெடுப்பின் இறுதியான நோக்கமே, குழந்தைகளுக்குப் பொருத்தமான குடும்பங்களைக் கண்டறிவதே தவிர, குடும்பங்களுக்கான குழந்தைகளைக் கண்டறிவது அல்ல.

குழந்தைகள் தத்தெடுப்பு, மத்திய தத்தெடுப்பு வள அமைப்பால் (CARA) நிர்வகிக்கப்படுகிறது. இது ஒன்றிய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பாகும். தத்தெடுப்பு நடைமுறைகள் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இணையவழிமூலம் செய்யப்படுகின்றன.

மாநில தத்தெடுப்பு வள முகமை (SARA) தத்தெடுக்கும் பெற்றோர், சிறப்பு தத்தெடுப்பு மையங்கள் மற்றும் மத்திய தத்தெடுப்பு வள அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே ஒரு பாலமாகச் செயல்படுவதன்மூலம் தத்தெடுப்பை எளிதாக்குகிறது. தத்தெடுத்தலை எளிதாகப் புரிந்துகொள்வதற்காக குழந்தைகள் தத்தெடுப்பு பற்றிய கையேடு ஒன்றை மாநில தத்து வள

TRUTH ALONE TRIUMPHS

முகமை வெளியிட்டுள்ளது. பொதுமக்களிடையே குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், செய்திகளை பரப்புவதற்கும் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், சிறப்பு தத்தெடுப்பு முகமைகள், சமூகக் குழுக்கள் மற்றும் பொது இடங்களில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. சட்ட பூர்வமற்ற குழந்தை தத்தெடுத்தலைத் தடுக்க மருத்துவத் துறை வல்லுநர்களுக்கும், இதர பங்குதாரர்களுக்கும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மத்திய தத்தெடுப்பு வள அமைப்புடன் (CARA) இணைந்து சிறப்பு தத்தெடுப்பு முகமைகளை அவ்வப்போது கண்காணிப்பதும் வருங்கால தத்தெடுக்கும் பெற்றோரின் குறைகளை நிவர்த்தி செய்வதும் மாநில தத்தெடுப்பு வள முகமையின் (SARA) முக்கியமான முயற்சிகளாகும்.

5.1.1.5 சிறப்பு தத்தெடுப்பு முகமைகள்

தமிழ்நாட்டில், உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 24 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேற்படி முகமைகள் முறையே சென்னையில் மூன்றும், மதுரையில் இரண்டும், சேலத்தில் இரண்டும் மற்றும் அரியலூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் என தத்தெடுப்பு முகமைகள் அமைந்துள்ளன.

1993 முதல் 31-3-2023 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	தத்தெடுப்பின் தன்மை	தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள்		மொத்தம்
		ஆண்	பெண்	
1	உள்நாட்டுத் தத்தெடுப்பு	1,830	4,637	6,467
2	வெளிநாட்டுத் தத்தெடுப்பு	139	427	566
மொத்தம்		1,969	5,064	7,033

2023 ஏப்ரல் 17]

2022-2023 ஆம் ஆண்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	தத்தெடுப்பின் தன்மை	தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள்		மொத்தம்
		ஆண்	பெண்	
1	உள்நாட்டுத் தத்தெடுப்பு	135	199	334
2	வெளிநாட்டுத் தத்தெடுப்பு	13	21	34
மொத்தம்		148	220	368

5.1.1.6 சுயதொழில் மற்றும் தொழில்முனைவிற்கான நிதி உதவி

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்படி, குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள "தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி" ரூ.25.00 இலட்சம் குழும நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசின் திட்டங்களின்கீழ் வராத ஏனைய திட்டங்கள் மற்றும் அவசர தேவைகளை செயல்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது. இந்நிதி குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம், பயிற்சி, விளையாட்டு, மூலதனப் பொருட்கள் மற்றும் வருவாய் ஈட்டுவதற்கான தொழில் துவங்குவதற்கான மூலதன தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதுவரை 59 குழந்தைகளுக்கு ரூ.12,04,329/- நிதி செலவிடப்பட்டுள்ளது.

5.1.1.7 சிறையில் இருக்கும் பெற்றோரின் குழந்தைகளுக்கு உதவி

சிறையில் இருக்கும் பெற்றோரின் குழந்தைகளுக்கும் அரசாங்கம் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அளித்து வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் உள்ள குழந்தைகள், நிதி ஆதரவு, கல்வி, வளர்ப்பு பராமரிப்பு போன்ற உதவிகளைப் பெற்று பயனடைகிறார்கள். சில நேர்வுகளில் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் அவர்களுக்கு உறைவிடம் வழங்கப்படுகிறது. இதுவரை 2021-2022 ஆம் ஆண்டில் 22 சிறார்களும், 2022-2023 ஆம் ஆண்டில் 20 சிறார்களும் நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளனர்.

மேலும், 3 சிறார்கள் வளர்ப்பு பராமரிப்புமூலம் பயனடைந்துள்ளனர். மாநிலத்தில் உள்ள பல்வேறு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் 143 சிறார்கள் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளனர்.

5.1.1.8 நிதி ஆதரவுத் திட்டம்

ஒரு குழந்தை குடும்பத்துடன் இருந்து பெற்றோரின் அன்பு மற்றும் அரவணைப்புடன் கல்வியைத் தொடர நிதி ஆதரவுத் திட்டத்தின்கீழ் மாதம் ரூ.4,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையும், 18 வயது நிறைவடையும் வரை பயன் பெறத் தகுதியுடையவர் ஆவர். மாநிலத்தில் 1,354 குழந்தைகள் தற்போது ஒன்றிய, மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நிதி ஆதரவுத் திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர்.

5.1.2 சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாக தெரிவிக்கப்படும் நாளன்று பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணான செயல்களை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள் சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் என வகைப்படுத்தப்படுவர்.

5.1.2.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

இளைஞர் நீதிக் குழுமங்களானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்படி அமைக்கப்பெற்ற சட்டப்பூர்வமான அமைப்பாகும். இக்குழுமங்கள் சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரன்முறைக்குட்பட்டு குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியாளர் உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) ஆகியோரை உள்ளடக்கியது. இளைஞர் நீதிக் குழுமத்தின் அனைத்து நடைமுறைகளும் குழந்தைகளின் அதிகபட்ச நலனை உறுதிசெய்யும் வகையில் குழந்தை நேய அணுகுமுறையில் நடைபெறுகிறது. தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் 38 மாவட்டங்களுள், 32 மாவட்டங்களில் இளைஞர் நீதிக் குழுமங்களை அமைத்துள்ளது. மீதமுள்ள செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, ராணிப்பேட்டை,

2023 ஏப்ரல் 17]

திருப்பத்தூர், மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இம்மாவட்டங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் கூடுதல் பொறுப்பில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களின்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் 7,624 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.2.2 கூர்நோக்கு இல்லங்கள்

இளைஞர் நீதி முறை அமைப்பின்படி, இளைஞர் நீதிக் குழுமத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படும் சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் சிறார்களுக்கு விசாரணை நடைபெறும் காலங்களில் நிறுவனம் சார்ந்த தற்காலிக சேவையும் பாதுகாப்பும் வழங்க கூர்நோக்கு இல்லங்கள் நிறுவப்பட வேண்டும். தமிழ்நாட்டில் தற்போது 8 கூர்நோக்கு இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் உறையும் சிறார்களுக்கு அடிப்படைத் தேவைகளான தங்குமிடம், உணவு, உடை, படுக்கைகள் மற்றும் அவர்களின் குறுகிய கால மறுவாழ்வின் ஒரு பகுதியாக முறைசாராக் கல்வி, தொழிற்கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் போன்ற இதர சேவைகளும் வழங்கப்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பிற்காக அரசு அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை அமைத்துள்ளது. அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட இளஞ்சிறார்களை நன்னடத்தை அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர். தற்போது 8 கூர்நோக்கு இல்லங்களில் 132 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.2.3 சிறப்பு இல்லங்கள்

சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் உரிய விசாரணைக்கு பின் இளைஞர் நீதிக் குழுமத்தால் குற்றம் உறுதி செய்யப்பட்டவர்கள் என தீர்மானிக்கப்படும் நேர்வில், அவர்களுக்கான நீண்டகால மறுவாழ்வினை சிறப்பு

இல்லங்கள் வழங்குகின்றன. இக்குழந்தைகள் 3 ஆண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்க வைக்கப்பட்டு நீண்டகால மறுவாழ்வு திட்டங்கள் வழங்கப்படுகின்றன. சிறப்பு இல்லங்களில், குழந்தைகளுக்கு கல்வி, தொழிற்பயிற்சி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணை பாடத்திட்ட செயல்பாடுகளுக்கான வசதிகள் போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னையில் சிறுமியருக்காகவும், செங்கல்பட்டில் சிறுவருக்காகவும் என இரண்டு அரசு சிறப்பு இல்லங்கள் உள்ளன. தற்போது இந்த 2 சிறப்பு இல்லங்களில் 30 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சாத்தியமான திறன் மற்றும் சுயதொழிலில் ஆர்வமுள்ள குழந்தைகள் சுய வாழ்வாதாரத்தை அடைவதற்காக, சுயதொழில் தொடங்குவதற்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு இளைஞர் நீதி நிதியின்கீழ் நிதியுதவி செய்யப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.2.4 பாதுகாப்பு இல்லம்

பாதுகாப்பு இல்லம் என்பது 16 வயதிலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒரு கொடுங்குற்றத்தைச் செய்ததாக கருதப்படுபவராகவோ அல்லது தண்டிக்கப்பட்ட குற்றவாளியாகவோ இருப்பவர்களை தங்க வைப்பதற்கான இல்லமாகும். 18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டு, 18 வயதை கடந்த நபர்களும் தங்க வைப்பதற்கான இல்லமாகும். இவர்கள் இளைஞர் நீதிக் குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தின் ஆணையின்படி, அதிகபட்சமாக 21 வயது நிறைவடையும் வரை பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் சிறுவர்களுக்கான அரசினர் பாதுகாப்பு இல்லமானது வேலூரில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் தங்கியுள்ள காலங்களில் இவர்களுக்கு கல்வி, ஆற்றுப்படுத்துதல், நடத்தை மாற்றம் உள்ளடக்கிய சீர்திருத்த சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போது மதுரை சிறுவர்/சிறுமியருக்கான அரசினர் கூர்நோக்கு இல்லத்தின் ஒரு பகுதியை பிரத்யேகமாக சிறுமியர்களுக்கான பாதுகாப்பு இல்லமாகவும், செங்கல்பட்டு சிறுவருக்கான சிறப்பு இல்லத்தின் ஒரு பகுதியை சிறுவருக்கான பாதுகாப்பு இல்லமாகவும் அங்கீகரித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. தற்போது, இவ்வில்லங்களில் 38 குழந்தைகள்/நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும், செங்கல்பட்டு மாவட்டத்தில்

2023 ஏப்ரல் 17]

"பாதுகாப்பு இல்லத்திற்கு" புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.15.95 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.85.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.3 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்கீழ், குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை பதிவு செய்தல்

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்கீழ் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாமல் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின்மீது சட்ட ரீதியான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இளைஞர் நீதி விதிகளின்கீழ் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தரம்/ வசதிகளுக்கான வரையறையின்படி, தங்குமிடம், கட்டடத்தின் உறுதித்தன்மை, கட்டட உரிமம், தீயணைப்பு வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற வசதிகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. 31-3-2023 அன்றுள்ளபடி, 952 குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரையில் 30,241 குழந்தைகள் பதிவு செய்யப்பட்ட இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

5.1.4 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு

மாநிலத்தில் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை திறன்பட ஆய்வு செய்யவும், நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை உறுதி செய்யவும் ஏற்கெனவே ஆய்வு செய்யும் அமைப்புகளான இளைஞர் நீதி குழுமங்கள், குழந்தை நலக் குழுக்கள் மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகளுடன் சேர்த்து மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. மாநில அளவிலான ஆய்வுக் குழு, சமூகப் பாதுகாப்பு இயக்குநர்/செயலர், மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் அவர்களை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுவானது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரை

உறுப்பினர்-செயலராகவும், குழந்தை நலக் குழு/இளைஞர் நீதிக் குழுமம், மருத்துவ அலுவலர், மனநல நிபுணர் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதி ஆகிய நான்கு பேரை உறுப்பினராகக் கொண்ட குழுவாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்பட்டுள்ளது.

5.1.5 பிற்காப்பு நிறுவனங்கள்

குடும்பம் மற்றும் பிற ஆதரவு இல்லாத நிலையில் உள்ள எந்த குழந்தையும் 18 வயது நிறைவடைந்து நிறுவனங்களிலிருந்து வெளியேறும்போது அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படும் காலம் வரை சுயமாக வாழும் நிலைக்கு தங்களை மாற்றிக் கொள்ளத் தேவையான இடைப்பட்ட காலத்தில் பிற்காப்பு சேவை வழங்க பிற்காப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஆண்களுக்காக, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில் 11 பயனாளிகளுடனும், மதுரையில் 9 பயனாளிகளுடனும் மற்றும் பெண்களுக்காக வேலூரில் 17 பயனாளிகளுடனும் அரசு பிற்காப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் பிற்காப்பு சேவைகளுக்கு ஒரு சிறாருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின்கீழ் வயது வந்த மாற்றுத் திறனாளிகளுக்கான பிற்காப்பு நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 37 பயனாளிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.6 குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டம் (Mission Vatsalya)

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்கீழ் வகுக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்ற பரந்த கட்டமைப்பை "குழந்தை பாதுகாப்பு சேவைகள்" திட்டம் ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளின் தனிநபர் பாதுகாப்பு திட்டத்தினை கருத்திற்கொண்டு ஒவ்வொரு குழந்தையின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தகுந்த இடைவெளியில் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் குழந்தைகள் பாதுகாப்பு

2023 ஏப்ரல் 17]

சேவைகளை செயல்படுத்துவதை கண்காணிக்க செயல்திறன் மற்றும் மேலாண்மை குறியீடுகளை சமூகப் பாதுகாப்பு இயக்ககம் உருவாக்கியுள்ளது.

ஒன்றிய-மாநில அரசின் பங்களிப்புடனான குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின்கீழ் மாநில மற்றும் மாவட்ட அளவிலான கட்டமைப்புகளை போதுமான அளவில் அரசு நிறுவியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கு ஏற்றதான சூழ்நிலையில் சிறந்த வாய்ப்புகளை வழங்கி அவர்களின் பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் மறுவாழ்வினை அளித்து வருகிறது. இத்திட்டத்தினை அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் சமூகப் பங்களிப்புடன் வெளிப்படைத்தன்மையாக செயல்படுத்துவதால், இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த முடிகிறது. நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்குத் தரமான சேவை வழங்குதல், இடர்பாடான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளுக்கான தலையீட்டு திட்டங்கள், குழந்தைகள் பாதுகாப்பை மேம்படுத்துதல், இல்லத்தில் நிறுத்தி வைத்தலுக்கு மாற்றாக குடும்பம் சார்ந்த பராமரிப்பு, குழந்தைகளுக்கு குடும்பங்களைக் கண்டறிதல், குழந்தை தகவல் அமைப்புக்கான இணையதளம் மற்றும் காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

5.1.6.1 குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின்கீழ் செயல்படும் கட்டமைப்புகள்

குழந்தை பாதுகாப்பு சேவைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக்கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:-

1. *மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம்.*
2. *மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள்.*
3. *மாநில தத்தெடுப்பு வள முகமை.*

குழந்தைகளின் பல்வேறு தேவைகளை நிறைவேற்ற சுகாதாரம், கல்வி, நீதித் துறை, காவல் துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் இணைந்து செயல்பாட்டாளர்களுக்கு பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

[*2023 ஏப்ரல் 17*

2023–2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.53.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.6.2 குழந்தை பாதுகாப்பு சேவைகளை கண்காணித்தல்

குழந்தை உரிமை மீறல் சம்பவங்களைத் தடுக்கவும், குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யவும் தமிழ்நாடு அரசு கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் புதிய குழந்தை பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளது.

அ. கிராமப்புறங்களில் உள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்கள்

1. *கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.*
2. *வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.*
3. *மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.*

ஆ. நகர்ப்புறங்களில் உள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்கள்

1. *நகர பஞ்சாயத்து அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.*
2. *நகராட்சி அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.*
3. *மாநகராட்சி மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.*

இக்குழுக்களானது, குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர், குழந்தை தொழிலுக்காக இடம் பெயர்தல், சுரண்டப்படுதல், சட்டத்திற்குப் புறம்பாக குழந்தைகளை தத்து வழங்குதல், குழந்தை பாதுகாப்பு மற்றும் குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களைத் தடுத்தல், பெண் கருக்கொலை/சிசுக் கொலையைக் குறைத்து பெண் குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல் போன்ற குழந்தை பாதுகாப்பு சேவை பணிகளை மேற்கொள்கின்றன.

மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம் குழந்தை உரிமை மீறல் சம்பவங்களைக் குறைப்பதற்கும், எதிர்த்துப் போராடுவதற்கும், கிராம அளவில் கூட்டங்களை சிறப்பாக நடத்துவதற்கும், கையேடு ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதில் கூட்டத்தில் கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் கூட்ட செயல்பாடுகள்/

2023 ஏப்ரல் 17]

விவாதங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதற்கான படிவங்களும் இடம் பெற்றுள்ளது.

ஊரக மற்றும் நகர பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்களுக்கு குழந்தை பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை கையாளுவதற்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தற்போது 13,646 குழந்தை பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு காலாண்டுக்கு ஒரு முறை தொடர் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டில்,

- *மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுமூலம் 10,873 குழந்தைகளுக்கு எதிரான வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.*
- *மாநில அளவில் 6 பயிற்சிகள்மூலம் 583 குழந்தை பங்காளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*
- *மாவட்ட அளவில் 105 பயிற்சிகள்மூலம் 10,330 குழந்தை பாதுகாப்பு செயற்பாட்டாளர்கள் மற்றும் பங்காளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.*
- *4,019 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்மூலம் 5,04,870 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.*

5.2 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012, குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் சுரண்டல்களை திறம்பட கையாண்டு ஒவ்வொரு நிலையிலும் குழந்தையின் நலனை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது. மேலும், பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் ஆபாசப் படங்கள் ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கிறது. இது குற்றங்களின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப கடுமையான தண்டனையை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. தண்டனையானது, எளிமையானது முதல் பல்வேறு சூழலில் கடுமையான சிறைதண்டனை வரை வழங்கப்படுகிறது. அபராதம் விதிப்பதற்கு இச்சட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

[*2023 ஏப்ரல் 17*

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 ஆனது பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையாக அவர்களுக்கு இழப்பீடு வழங்க வழிவகை செய்கிறது.

பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் எதிர்கால நலனுக்காக, தமிழ்நாடு அரசால் இச்சட்டத்தின்கீழ் இழப்பீட்டு தொகை வழங்கும் பொருட்டு "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தைக்கான இழப்பீட்டு நிதி" உருவாக்கப்பட்டு அதன்மூலம் இதுநாள் வரை 1,328 குழந்தைகளுக்கு ரூபாய் 20.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.3 குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005, சட்டப் பிரிவு 17(1)–ன்படி அமைக்கப்பட்டு, நடைமுறையிலுள்ள குழந்தைகள் தொடர்பான பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்துதலை மேற்பார்வை செய்வதற்காக அமைக்கப்பட்டது. இவ்வாணையம் 18-1-2013 முதல் ஒரு தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களையும் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது.

இந்த மாநில ஆணையத்தின் முக்கிய நோக்கமே தற்சமயம் அமலில் இருக்கும் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலன் சார்ந்த பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுதலை மேற்பார்வை செய்தல் மற்றும் அரசுக்கு பரிந்துரைகள் வழங்குவது ஆகும்.

ஆணையத்தின் செயல்பாடுகள்

- *குழந்தை தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்தல்/ மேற்பார்வை செய்தல்.*
- *குழந்தை உரிமை மீறல் தொடர்பான நிகழ்வுகளில் உரிய ஆவணங்களை காவல் துறை மற்றும் பிற துறைகளிடமிருந்து பெறுதல்.*

2023 ஏப்ரல் 17]

- *குழந்தை உரிமை மீறல் நடைபெறும் நிகழ்வுகளில் முதற்கட்ட விசாரணைகளுக்கு பின் தேவையான மற்றும் உடனடி நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிக்கு பரிந்துரை செய்தல்.*
- *குழந்தை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்துதல்.*
- *பொது மக்கள், ஊடகங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட புகார்கள் மற்றும் தாமாக முன்வந்து குழந்தை உரிமை மீறல்களுக்கு எதிராக, தேவைப்படும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.*
- *அரசு மற்றும் அரசு சாரா நிறுவன அமைப்புகளுக்கு குழந்தை உரிமை தொடர்பான பயிற்சிகள் வழங்குதல்.*

இந்த ஆணையத்தால் 18-1-2013 முதல் 31-3-2023 வரை கையாளப்பட்ட குழந்தை உரிமைகள் தொடர்பான 4,498 வழக்குகள் விவரம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:-

1	*இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015*	*1,566*
2	*குழந்தை திருமணத் தடைச் சட்டம், 2006*	*422*
3	*குழந்தைகளின் கட்டாயம் மற்றும் இலவச கல்வி உரிமைச் சட்டம், 2009*	*905*
4	*பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012*	*1,438*
5	*குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986*	*167*

2023-2024 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.4 ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956, பெண்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்சட்டம், பாதிக்கப்பட்டவர்களை நிறுவனத்தில் தங்க

வைத்து கல்வி, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை வழங்குதல்மூலம் குறுகிய மற்றும் நீண்டகால மறுவாழ்வு அளிக்க வழிவகை செய்கிறது.

5.4.1 மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள்

ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்குள்ளான/பாதிக்கப்பட்ட பெண்கள், மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956-ன்கீழ் நீதிமன்ற ஆணையின்படி இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில் தங்கியுள்ள மகளிரின் மறுவாழ்விற்கென பராமரிப்பு, மருத்துவ சிகிச்சை, உளவியல் ஆலோசனை மற்றும் தொழிற்பயிற்சிகள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. “பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதியிலிருந்து” ரூ.10,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956-ன்கீழ் மாநில அரசால் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட பெண்களின் மறுவாழ்விற்காக ஐந்து அரசு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தில் அனுமதிக்கப்படும் பாதிக்கப்பட்ட மகளிருக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.4.2 வாழ்வொளித் திட்டம் (Ujjawala)

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் தொழிலுக்காக கடத்தப்படுவது, மனித உரிமைகளுக்கு எதிரான குற்றமாகும். பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் முறையான மறுவாழ்வை உறுதி செய்வதற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் வாழ்வொளித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வணிக ரீதியான பாலியல் சுரண்டலை தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வு அளித்து சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்வதற்குமான ஒரு

2023 ஏப்ரல் 17]

விரிவான திட்டமாகும். தமிழ்நாட்டில் 3 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5.5 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் (CMPRF)கீழ் கோவிட்–19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு, பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கான நிதி உதவி மற்றும் பல்வேறு நலத் திட்டங்கள்

i. *ஒரு நாட்டின் முன்னேற்றம், குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் நலனை சார்ந்தே அமைகிறது என்பதை தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது. அசாதாரண சூழ்நிலை, இயற்கை பேரிடர் மற்றும் பெருந்தொற்று போன்ற காலங்களில் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு எப்போதும் உதவிக்கரமாக ஒரு முறையை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. அவ்வாறு கோவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர்கள் இருவரையும் இழந்து ஆதரவின்றி தவிக்கும் 379 குழந்தைகளுக்கு அவர்களின் பெயரில் தலா ரூபாய் 5.00 இலட்சம் என மொத்தம் ரூபாய் 18.95 கோடி நிலையான வைப்புத் தொகையாக வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அக்குழந்தைகள் 18 வயது நிறைவடையும் வரை குடும்ப சூழலில் வளர மாத பராமரிப்புத் தொகையாக தலா ரூ.3000/- என ரூ.161.07 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. மேலும், கொரோனா நோய் தொற்றினால் பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்து வறுமையில் வாடும் அக்குழந்தைகளை மீட்க உடனடி நிவாரணத் தொகையாக தலா ரூ.3.00 இலட்சம் என இலங்கைத் தமிழர்களின் 9 குழந்தைகள் உட்பட 13,300 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 399.00 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. இக்குழந்தைகளுக்கு அரசின் அனைத்து நலத் திட்ட உதவிகளிலும் முன்னுரிமை வழங்கியும், அவர்களின் கல்வி தடையின்றி தொடரவும் கல்வி செலவினை அரசே ஏற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

ii. *பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லங்கள் மற்றும் விடுதிகளில் சேருவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.*

iii. பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகளின் பட்டப் படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.

iv. இக்குழந்தைகளுக்கும், நோய்த் தொற்றினால் கணவன் அல்லது மனைவியை இழந்து, குழந்தையுடன் இருக்கும் பெற்றோருக்கும் அனைத்து அரசு நலத் திட்டங்களிலும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும் நிதியுதவி, கல்வி, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் அவர்களின் முன்னேற்றம் ஆகியவற்றை கண்காணிக்க மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5.6 குழந்தைகள் மற்றும் மகளிருக்காக அரசால் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

(அ) தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை

மகிழ்ச்சியான சூழலில் குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021-ஐ வெளியிட்டுள்ளது. இதில் ஒவ்வொரு காரணிக்கும் முக்கிய குறிக்காட்டிகள் சர்வதேச தரத்திற்கு இணையாக உருவாக்கப்பட்டுள்ளன.

சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம் மாநிலக் கொள்கையில் உறுதிசெய்யப்பட்டுள்ள சேவையினை திறம்பட நிறைவேற்றுவதற்கு வரைவு செயல் திட்டத்தை உருவாக்க பல மண்டல அளவிலான கலந்தாய்வு ஆலோசனை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.

(ஆ) சாலையோரங்களில் உள்ள குழந்தைகளுக்கான மறுவாழ்வுக் கொள்கை

அரசு சாலையோரங்களில் உள்ள குழந்தைகளுக்கான மறுவாழ்வுக் கொள்கை 2022-ஐ உருவாக்கியுள்ளது. சாலையோரங்களில் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது மற்றும் அவர்களின் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களுக்கு பயனுள்ள

2023 ஏப்ரல் 17]

மறுவாழ்வுக்கான தகுந்த செயல் திட்டத்தினை பரிந்துரைப்பது இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இக்கொள்கை சாலையோரங்களில் உள்ள குழந்தைகளைப் பற்றிய தகவல்களை வழங்கவும் அவர்களை கண்காணிக்கவும், பின்தொடர்வதற்கும் பிற மாநிலங்களில் உள்ள செயல்பாட்டாளர்களிடையே பயனுள்ள ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு திட்டத்தை வழங்குகிறது.

(இ) சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்

தமிழ்நாடு அரசு, யுனிசெஃப் (UNICEF) நிறுவனத்துடன் இணைந்து ஒரு பயிற்சி மையத்தை நிறுவி, குழந்தை பாதுகாப்பில் தொடர்புடைய பங்குதாரர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. மேலும், இத்திட்டத்தினை விரிவுபடுத்தி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ் செயல்படும் இயக்குநரகங்களில் உள்ள பணியாளர்களுக்கும் குழந்தை மற்றும் மகளிர் நலன், பாதுகாப்பு, உரிமை மற்றும் மேம்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் “சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்“ ரூபாய் 27.00 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஈ) வாழ்வியல் வழிகாட்டு மையம்

அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகள், பின்தங்கிய குடும்ப சூழ்நிலையைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இடர்பாடான குடும்ப பொருளாதார சூழ்நிலையிலும், பெற்றோர்கள் கல்வி அறிவில் பின்தங்கியவர்களாகவும், ஆரோக்கியமற்ற வாழ்க்கை நிலை மற்றும் வறுமை போன்ற காரணங்களால் குழந்தைகள் குடும்பத்திலிருந்து போதுமான உதவியை பெற முடியாது என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, இத்தகைய சிறார்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகளை வாழ்வியல் வழிகாட்டு மையம்மூலம் வழங்குவதற்கு முதற்கட்டமாக மாநிலத்தின் 6 மாவட்டங்களில் “வாழ்வியல் வழிகாட்டு மையம்” ரூபாய் 48.24 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(உ) மாநில அளவிலான வருடாந்திர விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் 36 அரசு குழந்தைகள் இல்லங்கள் மற்றும் அரசின் மானியம் பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறன்களைக் கண்டறிந்து, அவர்களை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசால், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் 2017 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் ரூ.25.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் விளையாட்டுப் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட, விளையாட்டு பொருட்கள் கொள்முதல் செய்ய 2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.7 பிற திட்டங்கள்

5.7.1 முறையான மற்றும் முறைசாராக் கல்வி

அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் முறையான கல்வி வழங்குவதற்காக நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிக் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் செயல்படுகின்றன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகள் இல்லாத குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகின்றன.

5.7.2 தொழிற்பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகள்

நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறன்களை மேம்படுத்த தையல், ஆடைகள் தயாரித்தல், குளிர்சாதனங்கள் பழுதுபார்த்தல், துரித உணவு தயாரித்தல், பிளம்பிங், குடிநீர்

2023 ஏப்ரல் 17]

சுத்திகரிப்பான் பழுதுபார்த்தல், அடிப்படை கணினி பயிற்சி, பேக்கரி பொருட்கள் தயாரித்தல் போன்ற குறுகியகால நவீன தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 1,250 குழந்தைகள் நவீன தொழிற்பயிற்சியின்மூலம் பயனடைந்துள்ளனர். 20 குழந்தைகள் அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், அரசு குழந்தைகள் இல்லத்தின் 63 முன்னாள் மாணவர்கள் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத் துறையால் நடத்தப்படும் துணை செவிலியர் (ANM) பயிற்சியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அரசு குழந்தைகள் இல்லத்தில் தங்கி படிக்கும் 213 குழந்தைகளுக்கு தட்டச்சு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.40.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.7.3 குழந்தைகளுக்கான கல்வி சுற்றுலா திட்டம்

தமிழ்நாடு அரசு, சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் 36 அரசு குழந்தைகள் இல்லங்களில் உள்ளுறையும் குழந்தைகள் கல்வி சார்ந்த வெளியுலக அனுபவத்தை பெறும் வாய்ப்பினை ஏற்படுத்த ஒவ்வோராண்டும் கல்வி சுற்றுலா திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.7.4 குழந்தைகளுக்கான உளவியல் சமூக ஆதரவு

குழந்தைகள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான காரணிகள் சிக்கலானவை. குழந்தை பருவ உளவியல் தாக்கம், நண்பர்களின் உந்துதல், சமூகத்தின் மீதான வெறுப்பு ஆகியவை குறிப்பிடக்கூடிய சில காரணிகளாகும். மறுபுறம், குழந்தைகள் இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகள் பெற்றோரின் கவனிப்பு இன்மை மற்றும் உதவியின்மையால் பாதிக்கப்படுகின்றனர். இக்காரணிகள் அவர்களை உணர்ச்சி மற்றும் உளவியல் சிக்கல்களுக்கு உட்படுத்துகின்றன. உளவியல் சிக்கல்களைச் சமாளிப்பதற்கும், நேர்மறையான அணுகுமுறையைப் பெறுவதற்கும், அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள சட்டத்திற்கு முரணான குழந்தைகள் மற்றும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும்

[2023 ஏப்ரல் 17

குழந்தைகளுக்கு தொழில்முறை ஆலோசகர்கள்மூலம் ஆற்றுப்படுத்துதல் சேவைகளை அரசு வழங்குகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் 4,143 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.51.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.8 குழந்தைகள் உதவி எண்-1098

"பத்து ஒன்பது எட்டு" என்பது இடர்பாடான சூழலில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய அளவிலான 24 மணிநேர இலவச தொலைபேசி சேவையாகும். நெருக்கடி நிலையில் உள்ள குழந்தைகள் அல்லது இக்குழந்தைகளை காணும் எந்தவொரு நபரும் இக்குழந்தைகளை நெருக்கடியிலிருந்து உடனடியாக மீட்டல் அல்லது வழிகாட்டுதலுக்காக 1098-ஐ அழைக்கலாம். இந்திய அரசின் நிதியுதவிமூலம் சைல்டுலைன் இந்தியா பவுண்டேசன் கட்டுப்பாட்டின்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் இச்சேவைகள் செயல்படுத்தப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் இச்சேவையின்கீழ் தமிழ்நாட்டில் 27,922 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டுள்ளன.

5.9 குழந்தை தகவல் அமைப்பு

குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த முழுமையான நம்பத் தகுந்த தரவுகளை சேகரிக்கவும், செயல்பாட்டாளர்களிடையே தரவுகளை பகிரவும், குழந்தைகளுக்கான சேவைகளை கண்காணித்து வலுப்படுத்தவும், இளைஞர் நீதி அமைப்பின்கீழ் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் உண்மை நிலவரத்தை அறிந்து செயல்படவும், குழந்தை தகவல் அமைப்பு என்ற இணைய முகப்பினை ரூ.65.00 இலட்சம் செலவில் உருவாக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. குழந்தை பாதுகாப்பு தகவல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்புக்கான இவ்விணையதளம் 10-9-2022 முதல் செயல்பாட்டில் உள்ளது (https://dsdcpimms.tn.gov.in). இம்மின்னணு முறை எளிய முறையில் உபயோகப்படுத்தி குழந்தைகளின் முன்னேற்றத்தை ஒவ்வொரு நிலையில் கண்டறிய உதவுகிறது. தரவுகளை எளிதில் பெறவும், மேலாண்மை செய்யவும் மின்னணு முறையில் தரவுகள் பராமரிக்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 17]

5.10 குழந்தை பின்தொடர் முறைமை

ஒன்றிய அரசு தேசிய தகவல் மையத்தின்மூலம் காணாமல் போன குழந்தைகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளையும் கண்காணிக்கக்கூடிய (www.trackthemissingchild.gov.in) இணைய முகப்பினை உருவாக்கியுள்ளது. குழந்தை பின்தொடர் முறைமை, காணாமல் போன குழந்தையையும், கண்டெடுக்கப்பட்ட குழந்தையையும் ஒப்பிட்டு பார்க்க வசதி செய்து தருகிறது. மேலும், இம்முறைமையின்மூலம் இக்குழந்தைகளின் தேடல் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்க உதவுகிறது. இவ்வாறு இத்திட்டத்தின்மூலம் சரியான மேற்பார்வையும், குழந்தை நலனும், இணைய முகப்புமூலம் உறுதிப்படுத்த முடிகிறது. இத்தேசிய இணைய முகப்புமூலம் அனைத்து காவல் நிலையங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், குழந்தை நலக் குழுக்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் இயங்கி வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

காணாமல் போன குழந்தைகளின் விசாரணை விவரங்களை பதிவேற்ற ஒவ்வொரு பங்குதாரருக்கும் தனித்தனி பயனாளர் மற்றும் கடவுச்சொல் வழங்கப்பட்டுள்ளது.

5.11 தனிநபர் பராமரிப்புத் திட்டம்

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்கியிருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் தனிநபர் பராமரிப்புத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இவை குழந்தைகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், நிறுவனங்களில் தலையீட்டு உத்திகளை வடிவமைப்பதற்கும், மறுவாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் குழந்தைகளை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பதற்கும், திறம்பட திட்டமிடுவதற்கும் பயன்படுகிறது. மாநிலத்தில் செயல்பட்டு வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு தரமான தனிநபர் பராமரிப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான காலமுறை பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன. தனிநபர் பராமரிப்புத் திட்ட படிவத்தை நிபுணத்துவத்துடன் தயாரிப்பதற்கு பயிற்சி வழங்க இத்துறை யுனிசெஃப் உடன் இணைந்து ஒரு அனிமேஷன் வீடியோ மற்றும் ஒரு கையேட்டை தயாரித்துள்ளது.

5.12 குழந்தைகளுக்கான போதைத் தடுப்பு மையம்

குழந்தைகளுக்கான போதைத் தடுப்பு மையம், குழந்தைகள் குறிப்பாக சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளிடையே காணப்படும் போதை மருந்து மற்றும் போதை தரும் பொருட்களுக்கு அடிமையாதல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது. குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையங்கள் செங்கல்பட்டு, மதுரை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் அரசால் ஏற்படுத்தப்பட்டு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது அரசு, சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் குழந்தைகளுக்கான பிரத்தியேக போதைத் தடுப்பு மையங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தி வருகிறது. இம்மையங்களில் பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள சிறார்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்குவதன்மூலம் மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2022–2023 ஆம் ஆண்டில் 310 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.99.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.13 நன்னடத்தை அமைப்பு

நன்னடத்தை என்பது இளைஞர் நீதி அமைப்பின்கீழ் ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகளின் பங்கேற்புடன்கூடிய விரைவான மறுவாழ்வு மற்றும் சமூக இணைப்புக்கு ஒரு பயனுள்ள அமைப்பாகும். சமூக விசாரணை அறிக்கைகளைத் தயாரித்து குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு உதவுவதற்காக நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அறிக்கைகள் குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களில் முன்னிலைப்படுத்தப்படும் குழந்தைகளின் தனிப்பட்ட மற்றும் அவர்களின் குடும்ப பின்னணியினை விரிவாக எடுத்துரைத்து சரியான ஒரு முடிவை இவ்வமைப்புகள் மேற்கொள்ள உதவுகிறது. குறிப்பிட்ட வழக்குகளில் சட்டத்திற்கு முரணான குழந்தைகள் மற்றும் குழந்தைகள் இல்லங்களில் இருந்து வீடேகும் குழந்தைகள் குறித்து பிற்காப்பு தொடர் நடவடிக்கைகளை நன்னடத்தை அலுவலர்கள் மேற்கொள்கின்றனர். சமூகப் பாதுகாப்பு இயக்ககம்

2023 ஏப்ரல் 17]

32 மாவட்டங்களில் தலா ஒரு நன்னடத்தை அலுவலரைக் கொண்டுள்ளது. சென்னையில் வழக்குகள் அதிகமாக உள்ளதால் கூடுதலாக 3 நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளுக்கு முறையான மறுவாழ்வு நடவடிக்கைகளை விரைந்து வழங்குவதை உறுதி செய்ய வேண்டி சமூகப் பாதுகாப்புத் இயக்ககத்தில் காலமுறை ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

5.14 குழந்தை பாதுகாப்பிற்கு பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

குழந்தை பாதுகாப்பு பணிகள் என்பது பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய ஒன்றாகும். சமூகப் பாதுகாப்புத் துறையானது பல்வேறு துறைகளிலுள்ள குழந்தைகளுக்கான பலதரப்பட்ட சேவைகளை ஒருங்கிணைக்கிறது. சமூக நலன், கல்வித் துறை, தொழிலாளர் நலன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், இரயில்வே காவல் துறை, வருவாய்த் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரம், காவல் துறை, நீதித் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகியவற்றுடன் சமூகப் பாதுகாப்புத் துறை திறம்பட ஒருங்கிணைந்து அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதி செய்கிறது.

குழந்தை பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை முறையாக தீர்வு செய்ய மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான, மாவட்ட குழந்தை பாதுகாப்பு குழுக் கூட்டங்கள் குறிப்பிட்ட கால அளவில் நடத்தப்படுகின்றன.

குழந்தைத் திருமணம், குழந்தை கடத்தல், குழந்தைகளை பிச்சையெடுக்க பயன்படுத்துதல், உடல் மற்றும் மனரீதியாக தீங்கிழைத்தல் மற்றும் குழந்தை தொழிலாளர் ஆகியோரை கண்டறிந்து மீட்பு மற்றும் மறு வாழ்வளிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 17

அத்தியாயம்-6

நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் என்பது ஒரே சீரான ஒருங்கிணைந்த முறையில் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் என்ற முப்பரிமாணங்களில் நிலையான வளர்ச்சியை எட்டுவதாகும். அதற்காக அளவிடக்கூடிய 17 இலக்குகளும், 169 குறியீடுகளும் தொடர் கண்காணிப்பிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மாநிலங்களுடன் இணைந்து மாநில, மாவட்ட மற்றும் ஊராட்சி அளவிலான குறியீடுகளுக்கான கட்டமைப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் தேவைகளுக்கேற்ப மாற்றியமைத்தல், ஆய்வு முறைகள் மற்றும் திறன் வளர்ப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ளுவது நிதி ஆயோக் அமைப்பின் பொறுப்பாகும்.

நிதி ஆயோக் அமைப்புடன் இணைக்கப்பட்ட வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு அலுவலகத்திற்கு உள்ளீடு மற்றும் விளைவுகள் கண்காணிப்பு கட்டமைப்புகள்மூலம் திட்டத்தின் பலன்கள் மக்களை திறம்பட சென்றடையும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை தொடர்ந்து கண்காணிக்கவும், ஆய்வு செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் எய்துவதை ஆய்வு செய்திடவும், கண்காணித்திடவும் எட்டு கருப்பொருளில் பணிக் குழுக்கள், திட்டம் மற்றும் வளர்ச்சி துறையால் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த பணிக் குழுக்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆய்வு கூட்டங்கள் நடத்துவதன்மூலம் ஊராட்சி, மாவட்டம் மற்றும் மாநிலம் முழுமையாக கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை எட்ட, செய்ய வேண்டிய தேவையான பணிகள் மற்றும் உத்தி குறித்து ஆலோசனை வழங்குகின்றன.

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை குறிக்கும் காரணிகளை கண்காணித்திட சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து உரிய கால இடைவெளியில் தகவல்கள் பெற்றிட, திட்டம் மற்றும் வளர்ச்சி துறையில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணைய வழி தகவல் பலகை உருவாக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலாளர் தலைமையிலான

2023 ஏப்ரல் 17]

உயர் அதிகாரக் குழு தமிழ்நாட்டில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுகிறது.

இலக்கு-5 பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளித்தல்

பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளித்தல் என்பது ஒரு குழந்தையின் பிறப்பு முதல் தொடங்கி அவர்களது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்திடவும், அவர்களின் வாழ்வு, பாதுகாப்பு மற்றும் அதிகாரம் பெறுவதை உறுதி செய்ய சமுதாயம் முயற்சிக்க வேண்டும். 9 குறியீடுகளையும், 14 காரணிகளையும் கொண்ட இலக்கு-5, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் முடிவுக்குக் கொண்டு வருதல், சுகாதாரம் மற்றும் கல்வியில் சமமான அணுகலை உறுதி செய்தல், வேலைவாய்ப்பில் சம வாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளங்களுக்கான சம உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பாலின சமத்துவத்திற்கான இலக்கு-5-ஐ ஒருங்கிணைக்கும் துறையாகும்.

இலக்கு 5-ன் குறியீடுகள்

5.1 பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் முடிவுக்கு கொண்டு வருதல்

குழந்தை பாலின விகிதம் மற்றும் பாலின பாகுபாடுகளை களைந்திடவும், பெண் கருக்கலைப்பு, பெண் சிசுக்கொலை ஆகியவற்றை ஒழித்திடவும், அவர்களின் பாதுகாப்பு, உரிமை உறுதி செய்திடவும், பொருளாதார உதவி அளித்திடும் நோக்கில் தொட்டில் குழந்தை திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் போன்ற திட்டங்கள் இத்துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் புது முயற்சியான “புதுமைப் பெண்” திட்டத்தின்மூலம் 2.09 இலட்சம் மாணவியர் தங்கள் உயர் கல்வி தொடர்ந்திட உதவியுள்ளது. இதன்மூலம் பெண்கள் கல்வி அறிவு சதவிகிதமும், பணிபுரியும் பெண்கள் வேலை ஆற்றல் சதவிகிதமும் உயர்கிறது.

[*2023 ஏப்ரல் 17*

5.2 பொது மற்றும் தனியார் இடங்களில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்துவிதமான வன்முறை, கடத்தல் மற்றும் பாலியல் சுரண்டல்களையும் முற்றிலுமாக களைதல்

துறையால் செயல்படுத்தப்படும் மகளிர் உதவி எண் (181) மற்றும் குழந்தைகள் உதவி எண் (1098), 38 ஒருங்கிணைந்த சேவை மையங்கள், 33 குறுகிய கால தங்கும் இல்லங்கள், உஜ்ஜவாலா இல்லங்கள், 7 சேவை இல்லங்கள்மூலம் அவசர கால உதவி மற்றும் மறு வாழ்வு சேவைகளான தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, சட்ட உதவி, பயிற்சி ஆகியவை வன்முறை மற்றும் மோசடிகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன.

5.3 குழந்தை திருமணம், இளவயது திருமணம், கட்டாய திருமணம், பெண் இன உறுப்புகளை சிதைத்தல் போன்ற கொடிய பழக்கங்களை ஒழித்தல்

பொதுமக்களிடையே குழந்தை திருமணங்களை தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தியும், குழந்தை திருமணங்களை எதிர்த்து காவல் துறைமூலம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், குழந்தை திருமண தடை சட்டம், 2006 மற்றும் மாநில விதிகள், 2009 செயல்படுத்தப்படுகிறது. குழந்தை திருமணம் அதிகம் நடைபெறும் மாவட்டங்களில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழும், UNICEF *உதவியுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

5.4 பொதுப் பணி, கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு கொள்கைகள்மூலம் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளை கொண்டு ஊதியமற்ற பராமரிப்பு மற்றும் குடும்ப பொறுப்புகளை கையாளுதலில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம பொறுப்பு அளித்திடவும் அளவிடப்படாத, அங்கீகரிக்கப்படாத பெண்களின் குடும்ப வேலைகளுக்கு மதிப்பு அளித்தல்

பெண்கள் மற்றும் குழந்தைகளின் கண்ணியம் மற்றும் மதிப்பினை உறுதி செய்திட பெண்கள் தொடர்பான சமூக சட்டங்களான வரதட்சணை தடை சட்டம் 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாத்தல் சட்டம், 2005 பணியிடத்தில் பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல் தடை

2023 ஏப்ரல் 17]

சட்டம், 2013 மற்றும் தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஒழுங்குமுறை சட்டம், 2015 ஆகியவை சமூக நலத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான வழக்குகளை கையாளுகிறது.

கைம்பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் முதிர்கன்னிகளின் வாழ்வாதார நிலையினை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்க கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் நலிவுற்ற பிரிவினரை பாதுகாக்க சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

5.5 அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் முழு பங்களிப்பு மற்றும் சம வாய்ப்புகளை உருவாக்கி எல்லா நிலைகளிலும் முடிவெடுக்கும் தலைமைத்துவத்தை உறுதி செய்தல்

பெண்களுக்கு இலவச பேருந்து பயண வசதிகள் வழங்கப்படுவதன்மூலம், அவர்கள் பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெற்றிடவும், பிறரை சாராமல் இருப்பதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. பெண்கள், குடும்ப வருமானத்திற்கு உதவி செய்யும் வகையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. துறையின்மூலம், பெண்களுக்கு பாதுகாப்பான, கண்ணியமான மற்றும் குறைந்த வாடகையில் தங்கும் வசதி அளித்திடும் வகையில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் நடத்தப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்படுகிறது. பெண்களுக்கு உள்ளாட்சியில் 50% இட ஒதுக்கீடும், வேலைவாய்ப்பில் 33% இட ஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளன.

5.6 மக்கட்தொகை மற்றும் வளர்ச்சி குறித்த பன்னாட்டு மாநாட்டின் பரிந்துரைகளின்படியும், பீஜிங் மாநாடு பரிந்துரை அடிப்படையிலும், பாலியல் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகளை அனைவருக்கும் உறுதி செய்தல் மற்றும் மறுசீராய்வு மாநாடுகள்மூலம் நடவடிக்கைகளை கண்காணித்தல்

ஆரோக்கியமான சமுதாயம் உருவாகிட ஊட்டச்சத்து பெட்டகம், கர்ப்பக்கால தொடர் பரிசோதனை, வருவாய் இழப்பை

ஈடுசெய்திட மகப்பேறு உதவித் திட்டம், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான மருத்துவ பரிசோதனை போன்ற திட்டங்கள் மருத்துவத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

5.6.a பொருளாதார வளங்களில் பெண்களுக்கு சமஉரிமைகளை வழங்குவதற்கான சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன் தேசிய சட்டங்களுக்கு இணங்க நிலம் மற்றும் பிற வகையிலான சொத்துகள், நிதி சேவைகள் மரபு வழி மற்றும் இயற்கை வளங்களின் மீதான உரிமை மற்றும் கட்டுப்பாட்டினை பெற செய்தல்

மகள்களுக்கு பெற்றோர் சொத்துகளில் சமஉரிமை வழங்கும் சட்டத்தினை 1989 ஆம் ஆண்டிலேயே இயற்றியதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. இதனை 2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக 1994 ஆம் ஆண்டிலேயே குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்கும்போது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை பயன்படுத்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

5.6.b பெண்களின் அதிகாரத்தை மேம்படுத்திட குறிப்பாக செய்தி மற்றும் தகவல் தொடர்பு போன்ற தொழில்நுட்ப பயன்பாட்டை மேம்படுத்துதல்

பெண்கள் காவல் நிலையத்தினை அணுகுவதில் பாதுகாப்பான உணர்வை ஏற்படுத்திட, 1990-களின் தொடக்கங்களிலேயே அனைத்து மகளிர் காவல் நிலையங்களை (AWPS) அமைத்த முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் பெண்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரங்களை உறுதி செய்திட, பல்வேறு இலவச உதவி எண்களும் காவலன், காவல் உதவி போன்ற கைப்பேசி செயலிகளும் செயல்படுத்தப்படுகின்றன.

5.6.c பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கு அனைத்து நிலைகளிலும் உள்ள அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான வலுவான கொள்கைகள் மற்றும் செயல்படுத்தக்கூடிய சட்டங்களை இயற்றி வலுப்படுத்துதல்

பெண்களுக்கு அனைத்து நிலைகளிலும் தலைமை பொறுப்புக்கு சமவாய்ப்பு மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதி

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

செய்திடும் வகையில் பெண்களுக்கான வரைவு மாநில கொள்கை உருவாக்கும் பணியினை அரசு மேற்கொண்டுள்ளது. பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவு உறுதி செய்திடவும், அவர்களுக்கு அதிகாரமளித்திடவும் பல்வேறு சமூக சட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

நீடித்த நிலைத்த வளர்ச்சி குறியீடுகளில் இலக்கு 1-வறுமையின்மை மற்றும் இலக்கு 2-பசியின்மை ஆகியவற்றை உறுதி செய்வதற்காகவும், குழந்தைகளின் பள்ளி வருகையை அதிகரிக்கவும், அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் உள்ள 18 இலட்சம் குழந்தைகள் பயனடைவர். 43,094 பள்ளிகளில் 5 முதல் 15 வயதுக்குட்பட்ட 44.72 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு 13 வகையான உணவுகள் மற்றும் வாரத்திற்கு 5 முட்டைகள் வழங்கும் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மாணவர்களை பள்ளிகளில் தக்கவைப்பதை உறுதி செய்வதற்கும், ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்மூலம் 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, குழந்தைகள் மையங்கள் செயல்படுகின்றன.

நிலையான வளர்ச்சிக்கான குறியீடு எண் 2 மற்றும் 4-னை கையாளும் துறைகளுள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறையும் ஒன்றாக செயல்பட்டு வருகிறது. அதாவது, குறியீடு எண் 2, பட்டினியை ஒழித்து நிலையான வளர்ச்சிக்கான உணவு பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்தினை அடைவது. அனைத்து வகையிலான ஊட்டச்சத்து குறைபாட்டினை களைந்து, 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கிடையே, ஊட்டச்சத்து குறைபாட்டின் விளைவுகளான குள்ளத்தன்மை (Stunting), *மெலிவுந்தன்மை (*Wasting*) ஆகிய குறைகளை சீர் செய்ய ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் துறை பாடுபட்டு வருகின்றது. மேலும், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும்*

14–49 வயதிலான பெண்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய செயல்பட்டு வருகிறது.

குறியீடு எண்: 4-ன்படி, குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்கிட ஏதுவாக, குழந்தைகள் மையங்களில் பயன்பெறும் குழந்தைகளுக்கு பள்ளி சென்றிட தயார் செய்திடும்பொருட்டு உடல் வளர்ச்சி, மொழிதிறன், அறிவாற்றல் மற்றும் சமூக உணர்வூட்டும் முன்பருவக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

பெண்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை உறுதி செய்திடவும், நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் மற்றும் குறியீடுகளை அடையும் நோக்கில் பெண்கள் நலத் திட்டங்களை வடிவமைப்பதிலும், செயல்படுத்துவதிலும் இத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அத்தியாயம்-7

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

7.1 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்


தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதை கடந்த ஆதரவற்ற திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோர் நலனில் அக்கறைகொண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போது சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் அனைத்து பயனாளிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தகுதியுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் 1-1-2023 முதல் ரூ.1500/- மாதாந்திர ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.4646.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31-3-2023 அன்றுள்ள பதிவுகளின்படி, 34,62,034 பயனாளிகள் கீழ்க்காணும் திட்டங்களின்மூலம் பயன்பெற்று வருகின்றனர்:

2023 ஏப்ரல் 17]

வ. எண்	திட்டங்களின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை (31-3-2023 வரை)
1	இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்	*14,36,569*
2	இந்திரா காந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்	*63,769*
3	இந்திரா காந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம்	*5,29,728*
4	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	*4,04,345*
5	ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம்	*6,16,016*
6	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	*2,63,194*
7	ஆதரவற்ற/கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	*1,18,462*
8	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	*25,655*
9	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்	*4,296*
	மொத்தம்	*34,62,034*

[*2023 ஏப்ரல் 17*

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் உள்ள பயனாளிகளின் விளக்கப்படம்



2023 ஏப்ரல் 17]

அட்டவணை-2.2

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் நிதி பங்கீடு

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒன்றிய அரசின் பங்கீடு ரூ.	மாநில அரசின் பங்கீடு ரூ.
1.	இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	200/- 500/-	800/- 500/-
2.	இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	300/-	1200/-
3.	இந்திரா காந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம்	300/-	700/-
4.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	-	1500/-
5.	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்	-	1000/-
6.	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	-	1000/-
7.	ஆதரவற்ற/கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்	-	1000/-
8.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	-	1000/-
9.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (OAP, DWP, DDWP)	-	1000/-
10.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (DAPS)	-	1500/-

[*2023 ஏப்ரல் 17*

தகுதிகள்

தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களில் ஓய்வூதியம் பெற தகுதிகள் பின்வருமாறு:-

அட்டவணை 2.3

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
1	*இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்*	*ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர் வயது-60 மற்றும் அதற்குமேல் இருத்தல் வேண்டும்.*
2	*இந்திரா காந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம்*	*ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர் வயது–40 மற்றும் அதற்குமேல் இருத்தல் வேண்டும்.*
3	*இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்*	*வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர் வயது-18 மற்றும் அதற்குமேல் மாற்றுத்திறன் நிலை–80 சதவிகிதம் மற்றும் அதற்குமேல் இருத்தல் வேண்டும்.*

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெற பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:-

2023 ஏப்ரல் 17]

அட்டவணை - 2.4

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
1.	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	வேலையற்றவராக இருத்தல் வேண்டும். தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது-18 மற்றும் அதற்குமேல் மாற்றுத்திறன் நிலை–40 சதவிகிதம் மற்றும் அதற்குமேல்.
2.	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்	ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வயது-18 மற்றும் அதற்குமேல் அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளியின் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது)
3.	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம்.	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது-60 மற்றும் அதற்குமேல் நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது)

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
4.	ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதிய திட்டம்	ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது-30 மற்றும் அதற்குமேல் சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளியின் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது)
5.	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். வயது-50 மற்றும் அதற்குமேல் அசையா சொத்து ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளியின் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது)

2023 ஏப்ரல் 17]

வ. எண்	திட்டத்தின் பெயர்	தகுதி/நிபந்தனைகள்
6.	*இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதிய திட்டம்* (OAP, DAP, DWP, DDWP)	OAP, DAP, DWP *மற்றும்* DDWP *ஆகிய திட்டங்களின் தகுதிகள் அடிப்படையில் பயன்கள் வழங்கப்படுகின்றன.*

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்மூலம் வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற இணையதளம்மூலம் விண்ணப்பித்தல்

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எந்தவொரு திட்டத்திலும் ஓய்வூதியம் பெற விரும்புவோர் இணைய வழியில் சமர்ப்பிக்க ஏதுவாக, எளிய ஒரு பக்க படிவத்தை வடிவமைத்து வருவாய்த் துறை செயல்படுத்தியுள்ளது. இவ்விண்ணப்பம் சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுக்கு கணினிமூலம் சரிபார்ப்புக்காக அனுப்பப்படும். சரிபார்ப்புக்குப் பிறகு தகுதியுள்ள மனுக்கள் தனி வட்டாட்சியர்களின் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) ஆய்வு மற்றும் ஓய்வூதிய ஆணை பெறுவதற்கு அனுப்பப்படும். தகுதியுள்ள மனுதாரருக்கு வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

விண்ணப்பங்களை முடிவு செய்தல்-கால அளவு

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பெறப்படும் விண்ணப்பங்கள்மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அரசு வகுத்துள்ள விதிகளின்படி 30 தினங்களுக்குள் விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படுகிறது.

ஓய்வூதியதாரர்களுக்கு இதர பயன்கள்

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளின்போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெறும் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சமூகப் பாதுகாப்புத் திட்ட பயனாளிகளில், குழந்தைகள் மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், குழந்தைகள் மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது.

சமூகப் பாதுகாப்புத் திட்ட அனைத்து பயனாளிகளுக்கும் உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி, 5 கிலோ உணவு தானியங்கள் வழங்கப்படுகின்றன.

அத்தியாயம்-8

சமூக சீர்திருத்தத் துறை

22-10-1998 மற்றும் 26-10-1998 ஆகிய நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், சமத்துவ சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்த அரசாங்கத்தில் தனியாக சமுதாய சீர்திருத்தத் துறையை அமைப்பது குறித்து சமூகவியல் வல்லுநர்கள் அடங்கிய ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வாய்வுக் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், மத நல்லிணக்கத்தை காக்கவும், சமுதாய ஒற்றுமையை மேம்படுத்தவும், சமத்துவ, சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் 1999 ஆம் ஆண்டு சமூக சீர்திருத்தத் துறை உருவாக்கப்பட்டது. பின்னர், 2002 ஆம் ஆண்டு இத்துறையானது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையுடன் இணைக்கப்பட்டது. மீண்டும் 2006 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவிப்பின்படி, இத்துறை புதுப்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

சமூக நீதிக் கண்காணிப்புக் குழு

சமூக நீதி அரசாணையின் நூற்றாண்டு நாளினையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு அரசால் “சமூக நீதிக் கண்காணிப்புக் குழு”

2023 ஏப்ரல் 17]

அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இக்கண்காணிப்புக் குழு கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக முழுமையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும், வழிகாட்டும், செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும். மேலும், இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யும். இக்குழுவில் அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம் பெறுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய, "சமூக நீதிக் கண்காணிப்புக் குழு"-வினை அமைத்து அரசாணை (நிலை) எண் 2, சமூக சீர்திருத்தத் துறை, நாள் 24-12-2021-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

1. *பேராசிரியர் திரு. சுப. வீரபாண்டியன்–தலைவர்*
2. *முனைவர் கே. தனவேல், இ.ஆ.ப., (ஓய்வு)–உறுப்பினர்*
3. *பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ்–உறுப்பினர்*
4. *கவிஞர் திரு. மனுஷ்யபுத்திரன்–உறுப்பினர்*
5. *திரு. ஏ. ஜெய்சன்–உறுப்பினர்*
6. *பேராசிரியர் முனைவர் ஆர். இராஜேந்திரன்–உறுப்பினர்*
7. *திரு. கோ. கருணாநிதி–உறுப்பினர்*
8. *மருத்துவர் சாந்தி ரவீந்திரநாத்–உறுப்பினர்*

குழுவின் நெறிமுறைகள் மற்றும் வரையறைகள்

I. *அரசு ஆணைகள் மற்றும் விதிகளின்படி கல்வி, வேலைவாய்ப்பு, நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றில் இட ஒதுக்கீடு முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்து, எந்தவொரு துறையிலும் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால், குழு தனது பரிந்துரைகளை அளிக்கும்.*

[2023 ஏப்ரல் 17

II. வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் பணி நியமனம் செய்யும்போது, முதல் தலைமுறை மாணவர்கள், தமிழ் வழியில் படித்தவர்கள் மற்றும் இதுபோன்ற பிற பிரிவுகளுக்கான முன்னுரிமை, இட ஒதுக்கீடு ஆகியவை நடைமுறையில் உள்ள விதிகளின்படி முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதைக் குழு சரிபார்க்கும். தற்போதுள்ள விதிமுறைகள் மற்றும் அரசு ஆணைகளின்படி முன்னுரிமைப் பிரிவினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குழு பரிந்துரைக்கும்.

III. சாதி அல்லது பாலினத்தின் அடிப்படையில் எந்தவொரு தனிநபருக்கும் வாய்ப்புகள் மறுக்கப்படவில்லை என்பதை இக்குழு உறுதி செய்யும். இந்தக் குழு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத் திட்டங்களை ஆய்வு செய்து, சமூக சமத்துவத்தை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள் தங்கள் இலக்குகளை எய்துள்ளனவா என்பதை ஆய்வு செய்து, தேவைப்பட்டால் சரியான திருத்தங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும்.

IV. மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையினை கண்டிப்பாக ஒழிப்பதில் உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முயற்சிகளைக் குழு மதிப்பீடு செய்யும்.

V. சமூக நீதியின் முக்கியத்துவம் மற்றும் சமூக சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான மாநிலத்தின் முன்னோடி முயற்சிகள் குறித்து இளைஞர்களுக்கு குறிப்பாக, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவர்களுக்கு உணர்த்துவதற்கான நடவடிக்கைகளைக் குழு பரிந்துரைக்கும்.

VI. சமூக நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் குழு பரிந்துரைக்கும். மேலும் அச்சு, காட்சி மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சமூக நீதி மற்றும் வகுப்புவாத நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வழிவகைகளையும் குழு பரிந்துரைக்கும்.

2023 ஏப்ரல் 17]

VII. *சமூக நீதியின் அடிப்படையிலான முற்போக்கான சிந்தனையை வளர்த்தெடுக்கவும், தந்தை பெரியார் கண்ட சீரிய சமூகம் அமைய வழிவகுக்கவும் குழு பாடுபடும்.*

மேலும், குழுவின் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளும் பொருட்டு, 9 பணியிடங்களை உருவாக்கியும், இப்பணியிடங்களுக்கு ஊதியம் உட்பட தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்கு ரூ.79,39,600/- நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசாணை (டி) எண் 2, சமூக சீர்திருத்தத் துறை, நாள் 24-12-2021-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இக்குழுவின் அலுவலகமானது தேவநேய பாவாணர் நூலகக் கட்டடம், 2-வது தளம், அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் இயங்கி வருகிறது.

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் கூட்டங்கள்

சமூக நீதிக் கண்காணிப்புக் குழு துவங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை 7 அமர்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளது.

குழுவின் செயல்பாடுகள்

1. பல்கலைக்கழக ஆய்வுகள்

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவானது முதற்கட்டமாக தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களான பெரியார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொண்டுள்ளது.

மேற்காண் பல்கலைக்கழகங்களுள், பெரியார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகம் ஆகியவற்றிக்கான ஆய்வறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2. மாணவர்களிடையே பயிலரங்கம் நடத்துதல்

தந்தை பெரியாரின் கொள்கைகளை கல்லூரி மாணவர்களிடையே பரப்ப ஏதுவாக, விழிப்புணர்வுப் பயிலரங்கம் குழுவால் முன்மொழியப்பட்ட 9 பல்கலைக்கழகங்களில் நடத்திட அரசுக்கு பெறப்பட்ட கருத்துருவானது, தமிழ் இணையக் கல்விக் கழகத்தின்மூலம் "மாபெரும் தமிழ் கனவு" என்ற முன்னெடுப்பின்கீழ் செயல்படுத்தப்படவுள்ளது.

3. இறையூர் வேங்கைவயல் கிராம நிகழ்வு தொடர்பான கள ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, இறையூர் வேங்கைவயல் கிராமத்தில், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள நீர்த்தேக்கத் தொட்டியில் அடையாளம் தெரியாத சில நபர்களால் மனித கழிவு கலக்கப்பட்டது தொடர்பாக சமூக நீதிக் கண்காணிப்புக் குழு மேற்கண்ட கிராமத்தில் 13-1-2023 அன்று கள ஆய்வு மேற்கொண்டது. இவ்வாய்வறிக்கையினையும், பரிந்துரைகளையும் 20-1-2023 அன்று அரசுக்கு இக்குழு சமர்ப்பித்துள்ளது.

இதுபோன்று, சமூக நீதி மற்றும் சமூக நல்லிணக்கம் சார்ந்த பல்வேறு செயல்பாடுகளை கண்காணித்து, சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவானது தனது பணியினை திறம்பட மேற்கொண்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 17]

இணைப்பு-1

முக்கிய தினங்கள்

வ. எண்	தினம்		நாள்
1.	தேசிய பெண் குழந்தைகள் தினம்	-	ஜனவரி 24
2.	மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம்	-	பிப்ரவரி 24
3.	உலக மகளிர் தினம்	-	மார்ச் 8
4.	திருநங்கையர் தினம்	-	ஏப்ரல் 15
5.	அன்னையர் தினம்	-	மே, 14 2023 (மாதத்தில் இரண்டாவது ஞாயிறு)
6.	முதியோர்க்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்	-	ஜூன் 15
7.	உலக முதியோர் தினம்	-	அக்டோபர் 1
8.	உலக பெண் குழந்தைகள் தினம்	-	அக்டோபர் 11
9.	குழந்தைகள் தினம்	-	நவம்பர் 14
10.	பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம்	-	நவம்பர் 25
11.	வரதட்சணை தடுப்பு தினம்	-	நவம்பர் 26
12.	மனித உரிமை தினம்	-	டிசம்பர் 10

[2023 ஏப்ரல் 17

இணைப்பு—2

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு-2023-2024

மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.7,745.12 கோடி

2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு		
கணக்குத் தலைப்பு		**(ரூ. இலட்சத்தில்)**
வருவாய் பகுதி		**ஒதுக்கீடு**
2059	பொதுப் பணிகள்	274.69
2225	சமூக நல இயக்ககம்	0.21
2235	சமூகப் பாதுகாப்பு இயக்ககம்	35,029.58
2235	சமூக நல இயக்ககம்	97,640.20
2235	ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம்	14,134.72
2236	தலைமைச் செயலகம்	37.75
2236	சமூக நல இயக்ககம்	3,08,284.23
2236	ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம்	3,09,981.04
2251	தலைமைச் செயலகம்	952.47
2551	சமூக நல இயக்ககம்	-
வருவாய் பகுதி மொத்தம்		7,66,334.89
மூலதனப் பகுதி		
4235	சமூக நல இயக்ககம்	-

2023 ஏப்ரல் 17]

2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு		
கணக்குத் தலைப்பு		**(ரூ. இலட்சத்தில்)**
வருவாய் பகுதி		**ஒதுக்கீடு**
4235	*சமூகப் பாதுகாப்பு இயக்ககம்*	*3,328.55*
4236	*சமூக நல இயக்ககம்*	*0.02*
4236	*ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம்*	*4,848.00*
மூலதனப் பகுதி மொத்தம்		*8,176.57*
கடன் பகுதி		
7610	*அரசு பணியாளர்களுக்கான கடன்கள்*	*0.02*
கடன் பகுதி மொத்தம்		*0.02*
முழு மொத்தம்		**7,74,511.48**

முழு மொத்தம்

(ரூ. இலட்சத்தில்)

வருவாய் பகுதி	:	*7,66.334.89*
மூலதனப் பகுதி	:	*8,176.57*
கடன் பகுதி	:	*0.02*
மொத்தம்	:	**7,74,511.48**
		அல்லது
		7,745.12 கோடி

2023-2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் ரூ.5,337.18 கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.